கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு

பதிப்பாசிரியர்கள்
முனைவர் க. நெடுஞ்செழியன்
முனைவர் பெ. இராமலிங்கம்

UG5264
R007E04

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர், தமிழ்நாடு, இந்தியா

UG5264

கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு

பதிப்பாசிரியர்கள்

முனைவர்.க.நெடுஞ்செழியன்
முனைவர்.பெ.இராமலிங்கம்
இலக்கியத்துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 5.
1998

நூற்பதிப்பு விவரம்

நூல்	:	கலைஞரின் படைப்பிலக்கியத்திறனாய்வு (A Critical Evaluation of Kalaignar's Creative Works) ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு
ஆசிரியர்கள்	:	முனைவர் க. நெடுஞ்செழியன் முனைவர் பெ. இராமலிங்கம்
பதிப்பு	:	முதற்பதிப்பு, டிசம்பர் 1998.
பக்கம்	:	386 + 14
அச்சும் அமைப்பும்	:	லிப்ரா எதிர்ப்பதிவு அச்சகம், தஞ்சாவூர். ☎ : 41767
தாள்	:	54 G.S.M.Cream Wove
நூல் அளவு	:	1/8 திம்மி.
உரிமை	:	தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 005.
விலை	:	ரூ.125/=
தொடர்பு முகவரி	:	பதிவாளர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 005.

முனைவர்.கி.கருணாகரன்
துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 5.

அணிந்துரை

காவிரியாற்றின் வற்றா வளமுடைய புனல் புரந்து பொன் கொழிக்கும் நன்செய் வளமிக்க நல்லூர்களால் தஞ்சையே சோறு மணக்கும் வீறு பெற்றது. ஆடலும், பாடலும், மாடமும், சிற்பமும், ஓவியமும், இலக்கியமும் எனக் கலைகள் பலவும் ஓங்கி வளர்ந்தன. கலை பல வளர்த்த சோணாட்டை ஆண்ட மாமன்னன் இராசராசன் பெயரால் அமைந்த விருதினைத் தலைவர் கலைஞர், பெற்றதின் பொருத்தம் நம்முள்ளத்தைத் தீண்டி இன்புறுத்தியது.

தமிழ்ப் பல்கலைக்கழகம் சிறந்த ஆராய்ச்சி நூல்களை வெளியிடுவதோடு படைப்பிலக்கியங்களையும் பாராட்டி வரவேற்கின்றது. சுத்தானந்த பாரதியாரின் பாரத சக்தி மகாகாவியம், ஜெயகாந்தனின் சுந்தரகாண்டம், கோவி.மணிசேகரனின் வேங்கைவனம் வரிசையில் கலைஞரின் தென்பாண்டிச் சிங்கம் இடம் பெறுகின்றது.

கலைஞர் தன்னிகரற்ற பேச்சாளர்; மேடைத் தமிழுக்கு அழகூட்டியவர். பல வரலாற்று, சமூகப் புதினங்களைப் படைத்திருக்கும் வன்மை மிக்க படைப்பாளர். புதையல், வெள்ளிக்கிழமை, சுருளிமலை, ரோமாபுரிப்பாண்டியன், வான்கோழி, ஒரே இரத்தம், தென்பாண்டிச் சிங்கம், பொன்னர் சங்கர், பாயும் புலி பண்டாரக வன்னியன் எனப் பலப் புதினங்களை இயற்றியவர். இவற்றின் வாயிலாகக் கலைஞர் தலைசிறந்த எழுத்தாளராகத் திகழ்கின்றார். சொல் வீச்சும் சிலேடையும் அமைந்த கவிதைக்குச் சொந்தக்காரர். புதிய புதிய கவிதைத் தோட்டத்தை உருவாக்கிக் காட்டுபவர். பொறி பறக்கும் வீரக்காட்சிக்குரிய உரையாடலையும், புனலெனக் குளிரும் உரையாடல்களையும் நொடிப் பொழுதில் அமைத்துக் காட்டும் ஆற்றலால் திரைப் படத்துறையில் திருப்பத்தை உண்டாக்கியவர். கலைஞர் ஒரு சிறந்த பத்திரிகையாளர். முரசொலி கலைஞரின் எழுத்தோவியங்களைத் தாங்கி வரும் இதழாகும். கலைஞரின் சிறுகதைகள் பகுத்தறிவுக் கருத்தேந்திச் சீர்திருத்தச் சுடர் விடும் சிந்தனைப் பெட்டகம். கலைஞர் ,தலைசிறந்த நாடகாசிரியர். பரப்பிரம்மம், காகிதப் பூ எனப் பல நாடகங்களை எழுதியதோடு அல்லாமல்

நடித்தும் காட்டியவர். ஆட்சித்திறன் மிக்க கலைஞர், ஆட்சியிலிருந்தாலும் ஆட்சியில் இல்லாவிட்டாலும் இயக்கப்பணிகளிலும் எழுத்துத் திறனிலும் பேச்சுத் திறனிலும் கொடுமுடியெனத் திகழ்பவர். சோர்வும் தளர்ச்சியுமில்லாத, ஓய்வு என்பதை அறியாத ஒரே அரசியல் தலைவர் இவரெனில் மிகப் பொருத்தமாகும்.

எழுத்தில் ஓர் இலட்சியமும் குறிக்கோளும் உடையவர் கலைஞர். சமூகத்தை நலிவுறுத்தும் சாதி மதப் பூசல்கள், ஓரின உட்பூசல் ஆகிய தீங்குகளை நீக்குவதற்குத் தனது எழுதுகோலை நெம்பு கோலாகப் பயன்படுத்தியவர் கலைஞர். தென்பாண்டிச் சிங்கம் என்ற படைப்பு மறவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்குமிடையே மூண்டு போர்க்களமாகிவிட்ட தென்பாண்டிச் சீமையை அமைதிக் காற்று தவழும் அன்பு நிலமாக மாற்றுவதற்காகப் படைக்கப்பட்டது. இதில் வரும் கருத்துக்கள் தமிழர் சமுதாயம் பல காலத்திற்கும் தம் உள்ளக் கிழியில் எழுதிப் போற்றத்தகும் எண்ண விடியல்கள்.

கலைஞர் தேன்தமிழ் நடையாளர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய சங்க இலக்கியங்களையும் திருக்குறளையும் தனது தித்திக்கும் தமிழ் நடை என்ற வார்ப்பில் பதித்துள்ளார். கலைஞர் மடல் இலக்கியத்தை வளர்த்த பெருமைக்குரியவர். அறிஞர் அண்ணா அடிக்கடி கருத்துக் கூறுவது போல "இவர் தொடாத துறை இல்லை, தொட்டுத் துலங்காத துறையுமில்லை" என எல்லாவற்றிலும் தமது பெயரையும் பொறித்தவர்.

இத்தகு சிறப்புடைய ஒருவரின் படைப்பிலக்கியத்திற்குப் பரிசளித்ததோடு அவரது படைப்புகளையும் இப்பல்கலைக்கழகம் பல்வேறு அறிஞர்களைக் கொண்டு திறனாய்கின்றது.

நெஞ்சுக்கு நீதி
கடித இலக்கியம்
திருக்குறள் புதிய உரை
சிலப்பதிகாரம் புதிய வடிவம்
சங்கத் தமிழ்
புதினம் சிறுகதை
கவிதை
மேடைப் பேச்சு
திரைப்படத்துறை

ஆகிய தலைப்புகளில் கட்டுரைகள் படைக்கின்றார்கள். இத்திறனாய்வுக் கருத்தரங்கை இப் பல்கலைக்கழகம் பொதுக் கருத்தரங்காக நடத்துகின்றது. இக் கட்டுரைகளில் கலைஞரின் படைப்பாற்றலையும் இன உணர்வையும் தமிழ் உணர்வையும் தமிழ் அறிஞர்கள் எடுத்தியம்பி உள்ளனர். தமிழ், தமிழ்நாடு என்ற பற்றும் ஈடுபாடும் அவருக்குப் பிறவிப் பண்புகள். தமிழ் உணர்ச்சிக் கனல் தமிழர் உள்ளமெல்லாம் அணையாது பார்த்துக் கொண்ட மாபெரும் பணிக்குச் சொந்தக்காரர் நம் கலைஞர் எனில் மிகையாகாது. தமிழ் மொழிக்கே தன்னை ஆட்படுத்திக் கொண்ட கலைஞர் அவர்களது படைப்பிலக்கியங்களைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் திறனாய்வு செய்ததுடன்

அமையாது அத்திறனாய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து நூலாக்கம் செய்ய முன்வந்தவரும் இக்கருத்தரங்கின் அமைப்பாளருமான இலக்கியத் துறைப் பேராசிரியர் முனைவர் க. நெடுஞ்செழியன் அவர்களும் அவருக்குத்துணை நின்றவரும், இலக்கியத்துறை ஆய்வு உதவியாளருமான முனைவர்.பெ.இராமலிங்கம் அவர்களும் மற்றும் பேராசிரியர் பெருமக்களும் என் பாராட்டுக்குரியவர்கள். பல்கலைக் கழகத்தில் இத்தகு முயற்சிகள் பெருகவும், நூல்கள் பலப்பலவாய் வெளிவரவும் என் வாழ்த்துக்கள்.

(ஒப்பம்) கி.கருணாகரன்
1.9.1998.

பதிப்புரை

பவழ விழாக்காணும் கலைஞரின் இயக்கத் தலைமை வெள்ளிவிழா கண்டது. அவரின் திரைப்படப் பணி பொன்விழா கண்டது. அவர்தம் எழுத்துப்பணியோ மணிவிழா கண்டது. ஆம், 75 வயது நிரம்பிய கலைஞரின் எழுத்துக்கள் 60 ஆண்டுகளைத் தாண்டியன. 1938இல் தொடங்கிய முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் மாணவனாக இருந்தவரைத் தலைவனாகவும் கவிஞனாகவும் அடையாளம் காட்டியது. 'இளமைப் பலி' அவரை எழுத்தாளராக அறிமுகப்படுத்தியது. அடையாளம் கண்டவர் அறிஞர் அண்ணா.

மரப்பாய்ச்சியைச் சீராட்டி மகிழும் பெண் குழந்தையிடம் அவளின் தாய்மை வெளிப்படுதலாய்க் கையெழுத்து ஏட்டிலேயே முரசொலிக்கத் தொடங்கியவர் கலைஞர். அன்று தொடங்கிய முரசு இன்றும் முழங்கிக் கொண்டுள்ளது. இம்முழக்கம் தமிழ் இயக்க உயிர்ப்பின் அடையாளம்.

சுயமரியாதை இயக்கத்தின் வீச்சு, குடிஅரசு இதழின் பயிற்சி, பெரியாரின் அன்பு, அண்ணாவின் அரவணைப்பு ஆகிய புறச்சூழல்கள் அவரின் எழுத்துக்களைக் கூர்மைப் படுத்தின. கொள்கை வழிப்பட்ட அவரின் எழுத்துக்கள் கலை இலக்கிய வடிவம் பெற்று மக்கள் நெஞ்சில் இடம் பிடித்தன. கொள்கைப் பரப்பலின் கொடுமுடியைத் தொட்டன. அந்த வகையில் கலைஞரின் நாடகங்கள் தனித்த இடத்தைப் பெற்றன. நாடகப்புலமை அவருக்குக் கலைஞர் பட்டத்தை மட்டும் வழங்கவில்லை. மாறாகத் திரையுலகில் பெரியதொரு திருப்பத்திற்கே காரணம் ஆயிற்று.

இதழாசிரியராகவும் திகழ்ந்ததால் இலக்கியப் படைப்புகளும் இயல்பாகவே பெருகின. ஆயினும் அவை அனைத்தும் இனத்தின் மாண்பை உயர்த்தவும், இன இழிவைத் துடைக்கவும், இன ஒற்றுமையை நிலைப் படுத்தவும் என உயரிய இலட்சிய வேட்கையோடு வெளிவந்தன. அந்த வகையில் இருபதாம் நூற்றாண்டு கண்ட இலக்கிய வகைகள் எத்தனையோ அத்தனையிலும் கலைஞரின் கைவண்ணத்தைக் காண முடிகிறது. ஆம்! நாடகம், திரைப்படம், திரைப்பாடல், உரைவீச்சு, கவிதை, புதுக்கவிதை, சிறுகதை, புதினம், தன் வரலாறு, புதிய உரைகள், புத்துருவாக்கம், கடித இலக்கியம் எனப் பல நிலைகளிலும் அவர் முத்திரை பதித்துள்ளது வியப்பாக உள்ளது.

'நமக்குத் தொழில் கவிதை' எனக்கூறும் முழுநேரக் கவிஞராகவோ,

அல்லது எழுத்தாளராகவோ அவர் இல்லை. அவர் ஓர் இயக்கத்தின் தலைவர். ஒரு நாட்டின் முதலமைச்சர். சுருங்கச் சொன்னால் அரசியலும் ஆட்சியியலுமே அவரின் முழுநேரப் பணிகள். இப்பணிகளுக்கிடையே அவர் எழுதிய எழுத்துக்கள் - படைத்த இலக்கியங்கள் இவற்றைப் பற்றிய மதிப்பீடுகளே நம்மை மலைக்கச் செய்கின்றன. சிறுபாணாற்றுப் படை நல்லியக்கோடன் போல பன்முக ஆற்றலின் திரண்ட வடிவமாய்த் திகழ்பவர் கலைஞர்.

ஓர் இலக்கியப் பரிசுக்குத் தகுதியான தமிழ் எழுத்தாளர்களைத் தேர்வு செய்யும் குழுவில் இடம்பெறும் வாய்ப்பு ஏற்பட்டது. தலை சிறந்த எழுத்தாளர்களின் பெயர்களையும் அவர் தம் எழுத்துக்களையும் பட்டியலிட்டுப் பார்த்தால் அதிர்ச்சி என்பதா வியப்பு என்பதா... அவ் அமைப்பின் விதிகளில் மற்ற எழுத்தாளர்களின் பெயர்களைத் தெரிவு செய்யும் வாய்ப்புகள் குறைந்தன. எஞ்சிய ஒரே பெயர் கலைஞரின் பெயர் மட்டும். கலைஞரைப் போன்ற தமிழின் தலை சிறந்த இலக்கியப் படைப்பாளர்களில் சிலர் தொடர்ந்து எழுதுவதைக் குறைத்துக் கொண்டனர். தொடர்ந்து எழுதிவரும் சிலரின் எழுத்துக்களோ, அதன் எல்லைக்குள் வரக்கூடிய "வயதினை" எட்டவில்லை. இந்த நிலையில், தொடர்ந்து எழுதிவரும் கலைஞரின் பெயர் மட்டுமே எஞ்சியதில் வியப்பில்லை.

ஞானபீட விருது கூட தமிழுக்கென இதுவரை ஒரேஒரு முறைதான் கிடைத்துள்ளது. தமிழில் தகுதியான எழுத்தளார்கள், ஏன்? உலகப் புகழ்வாய்ந்த எழுத்தாளர்கள் இருந்தும் அப்பரிசு இரண்டாவது முறையாகத் தமிழுக்கு ஏன் வழங்கப்படவில்லை என்பது புரியாத புதிர்.

இதுபற்றித் தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் முனைவர். கி.கருணாகரன் அவர்களிடம் பேசும் வாய்ப்புக் கிட்டியது. ஆர்வத்தோடு செவி மடுத்த அவர், "தகுதி வாய்ந்த எழுத்தாளர்களை வரிசைப்படுத்துங்கள். ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒவ்வொரு எழுத்தாளரின் இலக்கியப் படைப்புக்களை நல்ல வண்ணம் ஆராய்ந்து வெளி உலகம் அறியச் செய்வோம். அதன் தொடக்கமாகக் கலைஞரின் படைப்புகளைத் திறனாய்வு செய்யும் வகையில் நீங்களே அமைப்பாளராக இருந்து ஒரு கருத்தரங்கினை ஏற்பாடு செய்து அக்கட்டுரைகளை நூலாகவும் வெளியிடுங்கள். அதற்குப் பல்கலைக்கழகம் துணை நிற்கும்" என உறுதி கூறினார். அத்துடன் 'கட்டுரையாளர்களில் முப்பது விழுக்காட்டினர் நம் பல்கலைக்கழகத்தைச் சார்ந்தவர்களாகவும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்' என்றார்.

அவர் கூறிய கருத்துக்களுக்கேற்பவே கட்டுரையாளர்கள் தேர்வு செய்யப்பெற்றனர். தலைப்புகளையும் கட்டுரையாளர்களே தேர்ந்தெடுத்துக் கொண்டனர். கால அருமை, பொருட் செலவு கருதி 30 கட்டுரைகள் போதும்என வரையறை செய்து கொண்டோம். துணைவேந்தர் காட்டிய ஆர்வமும் ஈடுபாடும் நெஞ்சில் நினைவாய் மணப்பன.

இக்கருத்தரங்கம் சிறக்கவும், நூலாக்கம் செம்மை பெறவும் துணை நின்றவர்கள் பலர். பேராசிரியர்கள் கு.வெ.பா., சக்திவேல், மெய்ப்புத்

திருத்தம் செய்து உதவிய முனைவர். சா.உதயசூரியன், முனைவர். க.திலகவதி, முனைவர்.கே.ஏ.சோதிராணி, முனைவர். மா.பார்வதி அம்மாள் ஆகிய பலரும் நன்றிக்குரியவர்கள்.

இந்நூலை நல்ல வண்ணம் அச்சிட்ட லிப்ரா எதிர்ப்பதிவு அச்சகத்தாரும், அட்டையைத் தம் கற்பனை வளத்திற்கு ஏற்ப வடிவமைத்த ஓவியர் கேசவனும் பாராட்டுக்குரியவர்கள்.

இப்பணியின் தொடக்கம் முதல் நிறைவு வரை உறுதுணையாய் நின்றவரும், இந்நூலின் பதிப்பாசிரியர்களுள் ஒருவரும் ஆகிய முனைவர். பெ.இராமலிங்கம், பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர். கா.செயராமன், நிதியாளர் திரு. சுப்பிரமணியம் ஆகியோரும் என் நன்றிக்குரியராவர்.

கிராமத்துத் திருமண வீட்டில் வீட்டார் அனைவருக்கும் ஏதாவது ஒரு வேலை இருந்து கொண்டே இருக்கும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலையாய்! கருத்தரங்கமும் நூலாக்கமும் கூட அத்திருமண வீடுதான். இங்கும் ஓடியாடி உழைத்தோர் பலர். ஒவ்வொருவரும் நன்றிக்குரியவரே!

க.நெடுஞ்செழியன்
28.10.98

ஆய்வாளரும் ஆய்வுகளும்

நெஞ்சுக்கு நீதி

அருள் தந்தை அமுதன் அடிகள்
நெஞ்சுக்கு நீதியில்
கலைஞரின் இளமைப்பருவம் 3

முனைவர்.ம.வீ.பச்சையப்பன்
தனிவழி 15

முனைவர்.பா.மாசிலாமணி
கலைஞரின் தன் வரலாறு 29

முனைவர்.கு.வெ.பாலசுப்பிரமணியன்
'நெஞ்சுக்கு நீதி'தரும்
சில படிப்பினைகள் 45

கடித இலக்கியம்

முனைவர்.அ.அந்தோனிகுருசு
கலைஞரின் கடிதக்கலை நுட்பங்கள் 56

முனைவர்.சா.உதயசூரியன்
கலைஞர் கடிதங்களில்
சங்க இலக்கியம் 69

முனைவர்.மோ.தமிழ்மாறன்
கலைஞரின் கடிதங்கள் 81

முனைவர்.இரா.சக்குபாய்
கலைஞர் கடித இலக்கியத்தின்
உள்ளடக்கம் 93

முனைவர்.வே.இராமசாமி
ஒப்புநோக்கில் இருபெரும் கடிதங்கள் 108

குறளோவியம்

முனைவர்.வ.குருநாதன்
குறளோவியம் ஓர் புதுவண்ணம் 123

முனைவர்.சண்முக.செல்வ கணபதி
குறளோவியத்தில்
கலைஞரின் மொழி ஆளுமைத்திறன் 130

முனைவர்.அர.அப்துல் ஜப்பார்
குறளோவியம் ஒருபார்வை 143

சங்கத்தமிழ், சிலப்பதிகாரம்

முனைவர்.தமிழண்ணல்
ஒப்பியல் பார்வையில் சங்க இலக்கியத்தமிழும் கலைஞரின் சங்கத் தமிழும் 156

முனைவர்.க.திலகவதி
சங்கத் தமிழில் மூதின் மகளிர் 166

முனைவர்.சரளா இராசகோபாலன்
கலைஞரின் சிலப்பதிகார மீட்டுருவாக்கம் 177

திருக்குறள் உரை

பேராசிரியர்.தி.முருகரத்தனம்
திருக்குறள்-கலைஞர்உரை சில சிந்தனைகள் 190

பேராசிரியர்.க.முத்துச்சாமி
திருக்குறள்-கலைஞர் உரை 201

திருமதி.அன்புச்செல்வி
உரையாசிரியர் கலைஞர் 216

புதினம்-சிறுகதை-கவிதை-மேடைத்தமிழ்

திருமதி.மீனாட்சி முருகரத்தனம்
'பொன்னர்-சங்கர்' ஒரு வாசகியின் பார்வை 226

முனைவர்.கா.செல்லப்பன்
கலைஞரின் பொன்னர்-சங்கர் கருப்பொருளும், கலைவடிவமும் 240

முனைவர்.தே.ஞானசேகரன்
கலைஞரின் பாயும்புலி பண்டாரக வன்னியனில் சுந்தரலிங்கம் 246

முனைவர்.ஆ.நாராயணசாமி
கலைஞரின் வெள்ளிக்கிழமை
ஒரு சமுதாயப் பார்வை 258

முனைவர்.சு.ஆனந்தன்பிள்ளை
கலைஞரின் சிறுகதைகளில்
சமூகப் பங்களிப்பு 267

முனைவர்.தா.ஈசுவரப்பிள்ளை
கலைஞரின் சிறுகதைகள் காட்டும்
சமுதாய அவலங்கள் 278

திரு.ஜோசப் குமார்
கலைஞரின் கவிதைக் 'கள்' 288

முனைவர்.கே.ஏ.ஜோதிராணி
கலைஞரின் இளமைக்காலப்
படைப்புக்களில் தமிழ்ப்பற்று 300

முனைவர்.சோ.ந.கந்தசாமி
கலைஞரின் கவிதைத் திறம் 306

முனைவர்.பே.மனோகரன்
நெருக்கடிநிலையில்
கலைஞரின் சொற்பொழிவுகள் 326

திரைப்படங்கள்

முனைவர்.பெ.இராமலிங்கம்
திரையுலகில் கலைஞரின்
தனி முத்திரைகள் 341

முனைவர்.க.நெடுஞ்செழியன்
தமிழின மீட்டுருவாக்கத்தில்
கலைஞரின் திரைப்பட உத்திகள் 351

கலைஞரின் நூல்கள்

இரா.பாவேந்தன் 371
அ.புவியரசு ஆய்வு மாணவர்கள்

நெஞ்சுக்கு நீதி

1 ‘நெஞ்சுக்கு நீதி’ யில் கலைஞரின் இளமைப் பருவம்

அமுதன் அடிகள்

வாழ்க்கை வரலாறு எழுதுவது ஒரு கடினமான கலை என்பர் பலர். ‘பல பெரியவர்கள் தங்கள் வரலாற்றாசிரியர்களால் பலி கடாக்களாக ஆக்கப்பட்டுவிட்டனர்’.[1] என்பார் டேனியல் ஆரோன். எனினும் பாஸ்வெல் எழுதிய ‘ஜான்சனின் வாழ்க்கை’, கார்னல் இயற்றிய ‘ஜான் ஸ்டெர்லிங் வாழ்க்கை’, ரிச்சரட் எல்மன் வடித்த ‘ஜேம்ஸ் ஜாய்ஸ்’, ட்ரெவெல்யான் எழுதிய ‘மெக்காலே’ போன்ற நூல்கள் ஆங்கில இலக்கிய வரலாற்றில் புகழ்மிக்க நூல்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டவை. காந்தியடிகளின் ‘சத்திய சோதனை’, ஜவகர்லால் நேருவின் ‘என் வரலாறு’ போன்றவை இந்திய இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்கவை. அவ்வாறே உ.வே. சாமிநாதையரின் ‘என் சரித்திரம்’ தமிழ் வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாக அமைந்துள்ளது. அதற்கு அடுத்துப் புகழ்மிக்க தன் வரலாற்று நூல் கலைஞரின் ‘நெஞ்சுக்கு நீதி’ என்பதில் ஐயமில்லை.

வாழ்க்கை வரலாற்றாசிரியர் தன் வரலாற்றுத் தலைவனை முழுமையாகப் படம்பிடித்துக் காட்டவேண்டும். அத்தலைவனின் உள்ளார்ந்த அச்சங்கள், ஏக்கங்கள், விருப்பங்கள் ஆகிய அனைத்தையும் அந்நூலில் வடித்துக் காட்டவேண்டும் என்பார் ஜஸ்டின் கப்ளான்.[2] காலவரிசை, பொருள்வரிசை என இருவகையாக வாழ்க்கை வரலாறு வடிக்கப்படலாம் என்று கேத்தரின் ட்ரிங்க்கர் போவன் என்பவர்[3] கருத்துத் தெரிவித்துள்ளார். எத்தகைய சார்புமின்றி நடுவுநிலை கோடாமல் வாழ்க்கை வரலாற்று நூல் வடிக்கப்படவேண்டும் என்பது அந்திரே மோருவா[4] என்பாரின் கருத்து.

தம் காலத்தில் வாழும் ஒருவரின் வரலாற்றை எழுதுதல் ஒருவகையில் எளிதாகும். நூலின் நாயகரிடமிருந்தே பல செய்திகளை ஆசிரியர் பெற இயலும். அவரது நண்பர்கள், உறவினர்களிடமிருந்தும் செய்திகளைப் பெறலாம். நூலின் நாயகர் புகழ்மிக்கவராயின் அவரைப்பற்றிய செய்திகள், கட்டுரைகள் முதலியவற்றை நாளிதழ்கள், பருவ இதழ்கள், நூல்கள் முதலியவற்றிலிருந்து பெற இயலும். நூலின் நாயகர் எழுதிய மடல்களும், அவருக்கு எழுதப்பெற்ற மடல்களும்கூட வரலாற்றை எழுத உதவும். இவ்வாறு செய்திகளைப் பெறுதல் எளிதே எனினும், அவற்றைச் சீர்தூக்கி ஆராய்ந்து, காய்தல் உவத்தலின்றி உண்மையைக் கண்டறிந்து வரலாறு வடித்தல் கடினம் என்பதில் ஐயமில்லை.

நூலாசிரியரின் காலத்துக்கு முற்பட்டவரைப்பற்றி எழுத முயலும் போது செய்திகள் கிடைப்பது கடினமே. அண்மைக்காலத்து

வாழ்ந்தவராயின் அவரைப்பற்றிய செய்திகள் எளிதில் கிடைக்கலாம். ஆனால் காலத்தால் முற்பட்டவராயின் செய்திகள் கிடைத்தல் அரிது. சாதனையால் உயர்ந்தவர்களின் வரலாறுகளே பெரும்பாலும் நூல்வடிவம் பெறுகின்றன.

தம் வரலாற்றைத் தாமே எழுதுவோருக்குப் பல நோக்கங்கள் இருக்கலாம். தம் வாழ்க்கையை உள்ளது உள்ளபடியே எழுதிய புனித அகுஸ்தீன், காந்தியடிகள் போன்றோர் முழுமையாகத் தங்களைச் சமுதாயத்துக்கு வெளிப்படுத்த விழைந்தவர்கள். ஆகவே தாங்கள் செய்த தவறுகளைக்கூடக் கூச்சமின்றி நூலில் இவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். தங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியைச் சமுதாயத்துக்கு வெளிப்படுத்துவதற்காகத் தன்வரலாறு எழுதுபவர்களும் உண்டு.

தமிழகத்தில் பலரின் வரலாறு நூல்வடிவம் பெற்றிருக்கிறது. ஆயினும் தன்வரலாறு எழுதியோர் தொகை மிக மிகக் குறைவு. உ.வே. சாமிநாத ஐயரின் 'என் சரித்திரம்', பாரதியாரின் 'சுயசரிதை', வ.உ. சிதம்பரனாரின் 'சுயசரிதை', சி. சுப்ரமணியத்தின் 'என் வாழ்க்கை நினைவுகள்' ஆகியவை தன் வரலாற்று நூல்களுள் குறிப்பிடத்தக்கவை.

இன்றைய தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி இயற்றிய 'நெஞ்சுக்கு நீதி' என்னும் வரலாற்று நூல் மொத்தம் 1953 பக்கங்களைக் கொண்ட மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது. இந்நூலில், கலைஞர் பிறந்த 1924-ஆம் ஆண்டுமுதல் 1991 ஆம் ஆண்டு வரை நிகழ்ந்த செய்திகள், கலைஞரோடு தொடர்புள்ள செய்திகள் இடம்பெறுகின்றன. ஆனால் இக்கட்டுரையில் கலைஞரின் பிறப்பு (3-6-1924) முதல் அவரது முதல் திருமணம் (13-4-1944) வரையுள்ள பகுதி மட்டுமே ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிறப்பு

கலைஞர் பிறந்தது திருவாரூரிலிருந்து பதினைந்தாவது மைலில் உள்ள திருக்குவளை என்னும் சிற்றூரில். இவ்வூரின் பழைய பெயர் திருக்கோளிலி. சைவக் குரவர் நால்வருள் ஒருவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பாடப்பெற்ற சிவன்கோயில் இவ்வூரில் உள்ளது.

தமது பிறப்பைப்பற்றிச் சொல்வதற்குமுன் தாம் பிறந்த 1924-ஆம் ஆண்டில் நடந்த வரலாற்று நிகழ்ச்சிகளையெல்லாம் கலைஞர் தொகுத்துக் கூறுகின்றார். நூலின் பல பகுதிகளிலும் இத்தகைய போக்கினை நாம் காணலாம். இவ்வாறு கலைஞரின் வாழ்வுக் காலத்தின்போது நிகழ்ந்த உலக நிகழ்ச்சிகளெல்லாம் நூலில் இடம்பெறுகின்றன. காந்தியடிகளுக்கும் நேதாஜிக்குமிடையில் நடந்த பிரச்சினையும், தந்தை பெரியார் காங்கிரசை விட்டு வெறியேறுவதும், காந்தியடிகளை முகமதலி ஜின்னா சந்தித்துப் பேசுவதும், இரண்டாம் உலகப்போர் தொடங்குவதும், பிலிப்பைன் நாட்டுத் தலைவர் பெர்டினாண்டு மார்க்கோஸ் பதவியைத் துறந்து வெளிநாட்டுக்கு ஓடுவதும், பாகிஸ்தான் நாட்டு பூட்டோ தூக்கிலிடப்படுவதும்,

போப்பாண்டவர் ஆறாம் பால் இறந்து அவருக்குப் பின் முதலாம் ஜான் பாலும், அவர் ஒரு மாத காலத்தில் இறந்து விடுவதால் அவரை அடுத்து இரண்டாம் ஜான்பாலும் போப்பாண்டவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவதும் போன்ற வரலாற்று நிகழ்ச்சிகள் நூலில் இடம்பெறுகின்றன. கலைஞர் பிறந்த 1924-ஆம் ஆண்டில்தான் மேட்டூர் அணை கட்டப்பட்டு மைசூருக்கும் அன்றைய சென்னை மாநிலத்துக்கும் காவிரி நீர் ஒப்பந்தம் ஏற்பட்டது என்பதைக் கலைஞர் குறிப்பிடுகின்றார். 1974-ஆம் ஆண்டில் மறுபரிசீலனை செய்யப்படவேண்டிய அவ்வொப்பந்தம் இன்றும் சிக்கல் தீராத நிலையில் இருப்பது வேதனைக்குரியது.

பெற்றோர்

தம் தந்தை முத்துவேலரின் முன்னோர்கள் பற்றியும் அவரது உழைப்பும் புலமையும் பற்றியும் கலைஞர் சற்று விரிவாகவே வரைகின்றார். ஆனால் அவர் தெய்வமாகக் கருதிப்போற்றும் அன்னை அஞ்சுகம் அம்மையாரின் முன்னோர்கள்பற்றிய எக்குறிப்பையும் இந்நூலில் வழங்கவில்லை என்பது வியப்புக்குரியது. ஆயினும் அஞ்சுகம் அம்மையாரின் அன்பும் பாசமும் நெஞ்சுறுதியும் பற்றிய பல குறிப்புகளை இந்நூலில் காணமுடிகிறது.

கலைஞரின் பெற்றோர்கள், வைதிகமானவர்கள். குழந்தைகளுக்குச் செய்யவேண்டிய காதணி, வித்தியாரம்பம், முடியிறக்குதல் முதலிய சடங்குகளையெல்லாம் தவறாமல் கலைஞருக்குச் செய்திருக்கிறார்கள். கலைஞரின் தந்தை முத்துவேலர் ஊரில் அடிக்கடி புராணக் கதைகளைச் சொல்வார். அவர் சிறந்த மாந்திரிகர் என மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர். மருத்துவமும் செய்வார். சுருக்கமாகக் கூறினால் முத்துவேலர் ஒரு பழுத்த கடவுள் பக்தர். அதே சமயத்தில் ஊரில் நிகழ்ந்த அநீதிகளை எதிர்த்துக் குரல் கொடுத்த கவிஞர்.

கலைஞரின் பெற்றோருக்கு நெடுநாட்களாகக் குழந்தை இல்லை. பின்னர் பெரியநாயகம், சண்முகசுந்தரம் என்னும் இரு பெண்குழந்தைகளைப் பெற்றார்கள். அவர்கள் பிறந்த ஆண்டு நூலில் குறிப்பிடப்படவில்லை. பின்னர் திருத்தலங்களுக்குச் சென்று, தீர்த்தங்களாடி, கடும் விரதங்களை மேற்கொண்டபின் பிறந்தவர்தான் கலைஞர். பெற்றோர் அவருக்கு இட்டபெயர் தட்சிணாமூர்த்தி.[5] இப்பெயர் பற்றியோ, இப்பெயர் கருணாநிதியாக எப்போது, எதனால் மாறியது என்பது பற்றியோ கலைஞர் விளக்கவில்லை. அதுமட்டுமல்ல, திராவிட இயக்கத்தோழர்கள் நெடுஞ்செழியன், அன்பழகன், மதியழகன், எனத் தமிழ்ப்பெயர்களைப் புனைந்து கொண்ட நிலையிலும், கலைஞரே 'முரசொலி'யில் 'சேரன்' என்னும் புனைபெயரில் கட்டுரைகள் தீட்டிய நிலையிலும், அவர் தனித்தமிழ்ப்பெயர் ஒன்றைச் சூட்டிக் கொள்ளாதது ஏன் என்று புரியவில்லை.

திருக்குவளையில் வாழ்ந்த காலம் 'எதிர்காலம் எப்படியெல்லாம் இருக்குமோ என்ற ஏக்கமோ வாட்டமோ இல்லாமல் நிகழ்கால

விளையாட்டுகளில் கவலையற்று ஈடுபட்டிருந்த பச்சிளம் பருவம்' (பக்.30) என்று குறிப்பிட்டாலும், அப்பருவத்தில் தாம் நிகழ்த்திய குறும்புகள்பற்றிக் கலைஞர் அதிகமாகக் குறிப்பிடவில்லை. தம் இளமைப் பருவத்தில் தம் பெற்றோர்களும் சகோதரிகளும் தம்மீது பொழிந்த பாசத்தைப்பற்றியும் அவர் அதிகமாகக் குறிப்பிடவில்லை.

இளமை விளையாட்டுக்கள்

பன்னிரண்டாவது வயதில் திருவாரூர் உயர்நிலைப்பள்ளியில் சேரும்வரை கலைஞரின் கல்வி திருக்குவளையில்தான் நடைபெற்றது. திருக்குவளைக் கிராமப்பள்ளியின் தலைமையாசிரியரிடமே கலைஞர் தனியாகவும் பாடம் பயின்றார். ஆனால் அத்தலைமையாசிரியரின் பெயரைக் கூடக் கலைஞர் குறிப்பிடாது விட்டுவிட்டார். அப்பள்ளியில் வேறு ஆசிரியர் பணியாற்றினார்களா என்பது பற்றியோ, திருக்குவளையில் தமது இளம்பருவ நண்பர்கள்பற்றியோ கலைஞர் குறிப்பிடவில்லை.

ஆனால் தங்கள் மாட்டுத் தொழுவத்தை நாடக மேடையாக்கி நாடகம் நடத்தியதைக் கலைஞர் மறக்கவில்லை. அவையெல்லாமே புராண நாடகங்கள்தான் அன்றைய வழக்கத்துக்கு ஏற்ப!

திருக்குவளைக் கோயிலில் அடிக்கடி நடக்கும் உற்சவங்களை அடுத்துத் தமது முயற்சியால் மாதிரித் திருவிழாக்கள் நடத்தியதையும் கலைஞர் நினைவுகூர்கின்றார்.

பள்ளிப்பருவம்

பன்னிரண்டாம் வயதுவரையில் திருக்குவளையில் பயின்ற கலைஞர், பின் திருவாரூருக்குச் செல்கின்றார். திருவாரூரில் வாழ்ந்த காலத்து நிகழ்ச்சிகள் பல நூலில் இடம்பெறுகின்றன.

இளமையில் இசைக்கல்விக்குத் தந்தையார் ஏற்பாடுசெய்தாலும் கலைஞருக்கு அதில் நாட்டமில்லை. காரணம் அன்று இசைக்கலைஞர்கள் சமுதாயத்தால் கொடுமைப்படுத்தப்பட்டதுதான் எனச் சுருக்கமாக கூறுகிறார் கலைஞர். அதுபற்றி இன்னும் மிகுதியாக விளக்கியிருந்தால் அன்றையச் சமுதாயநிலை பற்றி நாம் பல செய்திகளை அறிய முடியும்.

தமக்கு இடம்தர மறுத்த பள்ளியின் தலைமையாசிரியர் கஸ்தூரி ஐயங்காரை நேரில் சந்தித்துக் கமலாலயம் குளத்தில் விழுந்து சாகப்போவதாக அச்சுறுத்திப் பள்ளியில் இடம்பெற்ற நிகழ்ச்சியைக் கலைஞர் நூலில் குறிப்பிடுகின்றார். ஆனால் ஐந்தாம் வகுப்புமுதல் பள்ளியிறுதி வகுப்பு வரை தமக்குக் கல்விபுகட்டிய எந்த ஆசிரியர் பெயரையும் கலைஞர் குறிப்பிடாதது வியப்புத் தருகிறது. கரும்பலகையில் எழுதப்பட்ட இந்திச்சொற்களை வாசிக்க முடியாமல் விழித்த தம்மைக் கன்னத்தில் அறைந்த இந்தி ஆசிரியரின் பெயரைக்கூட அவர்

குறிப்பிடவில்லை. எனினும் பிற்காலத்தில் 'சுபமங்களா' இதழுக்கு அவர் வழங்கிய நேர்காணல் மூலம் தண்டபாணிதேசிகர், சி.இலக்குவனார், முத்துகிருட்டிணநாட்டார், இராசகோபாலப்பிள்ளை ஆகியோர் திருவாரூர் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியர்களாக இருந்து தமக்குத் தமிழுணர்வூட்டினர்[6] என்பதைத் தெரிவிக்கின்றார்.

ஐந்தாம் வகுப்பில் துணைப்பாட நூலாக இருந்த 'பனகல் அரசர்' என்னும் ஐம்பதுபக்க நூலைத் தாம் ஆழ்ந்து கற்றதையும், அந்நூல் தமக்கு அரசியல் அரிச்சுவடியாக விளங்கியதையும்பற்றிக் கலைஞர் விரிவாகவே வரைகின்றார். அப்பகுதியில் நீதிக்கட்சியின் வரலாற்றை இரத்தினச் சுருக்கமாகவே வரைந்துவிடுகின்றார் அவர்.

அரசியல் ஈடுபாடு காரணமாகக் கலைஞர் கல்வியில் கவனம் செலுத்தாமல் பள்ளியிறுதித் தேர்வில் மூன்றுமுறை தோல்விகண்டார். மூன்றாவதுமுறை தோல்வியினைத் தழுவியபின் வேதனையைப் பொறுத்துக் கொள்ள இயலாமல் வீட்டைவிட்டு ஓடிவிட்டார். பின் தம் நண்பர் தென்னன் மூலம் வீட்டுக்குத் தெரிவித்து, அவருடன் வீட்டுக்குத் திரும்பியதைப் பற்றி விரிவாகவே கூறுகின்றார். பள்ளியிறுதித் தேர்வில் தேர்ச்சிபெறாமலே போய்விட்டது கலைஞரின் மனதில் ஆறாத வடுவாக அமைந்துவிட்டது என்பதில் ஐயமில்லை.

இந்தி எதிர்ப்புப் போர்

1937 ஆம் ஆண்டில் பொறுப்பேற்ற காங்கிரஸ் அமைச்சரவை இந்தியைப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்கியபோது தமிழகத்தில் அதை எதிர்த்துப் பெரும்போராட்டம் நடைபெற்றது. தந்தை பெரியாரின் தலைமையில் நடந்த அப்போராட்டத்தில் கி.ஆ.பெ. விசுவநாதம், பட்டுக்கோட்டை அழகிரி. அறிஞர் அண்ணா, ஏ.டி. பன்னீர்செல்வம் போன்ற அரசியல் தலைவர்களுடன் மறைமலையடிகள், சோமசுந்தர பாரதியார் போன்ற தமிழறிஞர்களும் இணைந்து ஈடுபட்டனர்.

அப்போது கலைஞருக்குப் பதினான்கு வயது. பள்ளியில் ஏழாம் வகுப்பு மாணவர், எனினும் அப்போராட்டம் தம்மை ஈர்த்து ஈடுபடச் செய்ததைப்பற்றி விரிவாகவே எழுதுகிறார் கலைஞர். 1938-ஆம் ஆண்டில் நாள்தோறும் மாலைநேரத்தில் மாணவர்கள் பலரை அணிவகுக்கச் செய்து திருவாரூர் வீதிகளில் கையில் தமிழ்க்கொடி ஏந்தி ஊர்வலமாக வந்ததையும், ஊர்வலத்தில் பாடுவதற்காகவே

'வாருங்கள் எல்லோரும் போருக்குச் சென்றிடுவோம்
வந்திருக்கும் இந்திப்பேயை விரட்டித் திருப்பிடுவோம்'

எனத் தொடங்கும் பாடலைத் தாம் எழுதியதாகவும் அவர் எழுதுகின்றார்.

அன்று தொடங்கிய இந்தித் திணிப்பு எதிர்ப்பு உணர்வு இன்றும் கலைஞரின் உள்ளத்தில் கனலாகப் பற்றி எரிந்துவருவதைப் பல்வேறு காலகட்டங்களில் அவர் கலந்துகொண்ட அல்லது தலைமையேற்று நடத்திய

இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

அறிஞர் அண்ணா, பட்டுக்கோட்டை அழகிரிசாமி ஆகியோரின் நாவன்மையும், மூவலூர் இராமாமிர்தத்தம்மையாரின் நிர்வாகத் திறனும், 'நகரத் தூதன்' வார ஏட்டின் ஆசிரியர் மணவை திருமலைச்சாமியின் எழுத்தாற்றலும் இந்திஎதிர்ப்புப் போருக்கு உரமூட்டியதைக் கலைஞர் விளக்குகின்றார். திருச்சியில் தொடங்கிச் சென்னைவரை சென்ற தமிழர்படை பற்றியும், வழியிலுள்ள சிற்றூர்களில்கூட அது இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை விதைத்ததுபற்றியும் 'நெஞ்சுக்கு நீதி' விவரமாகக் கூறுகின்றது.

எனினும் தமிழகத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போரைப்பற்றி விளக்கும் கலைஞர் திருவாரூர்ப் பகுதியில் நடைபெற்ற இந்திப் போராட்டம் பற்றியோ, அதில் கலந்துகொண்டவர்கள் பற்றியோ விவரமாக எழுதாதது ஏன் என்பது புரியவில்லை.

மாணவ ஆசிரியர்

கலைஞரின் பத்திரிகைப்பணி அவரது மாணவப் பருவத்திலேயே தொடங்கிவிட்டது. அவர் நடத்திய முதல் ஏடு 'மாணவநேசன்'. எட்டுப் பக்கங்களைக் கொண்ட இரண்டு வெளியீடுகளாக அது மாதந்தோறும் வெளிவந்தது. ஐம்பது பிரதிகளுக்குக் குறையாமல் வெளிவந்த ஏட்டைப் பிரதியெடுத்தது கலைஞரும் அவரது நண்பர்களும்தான். 'மாணவநேசன்' ஏழெட்டு மாதங்கள் வெளிவந்ததாகக் கூறும் கலைஞர் அவ்விதழை நடத்துவதில் தம்முடன் ஒத்துழைத்த நண்பர்களைப்பற்றியோ, இதழின் உள்ளடக்கம் பற்றியோ விவரங்களை வழங்கவில்லை.

அடுத்து மலர்ந்ததுதான் 'முரசொலி' - வார இதழ், மாத இதழாக அல்ல; துண்டு வெளியீடாக, இதழுக்கு ஒரே ஓர் எழுத்தாளர்தான். அவரது புனைபெயர் சேரன் - அதாவது கலைஞர்தான். இதழுக்குச் செயலாளராகக் கலைஞரின் நண்பர் தென்னன் பணியாற்றினார். எத்தனைப் பிரதிகள் அச்சிடப்பட்டன என்பது தெரியவில்லை. விலைக்கு விற்கப்படவில்லை என்பதுமட்டும் தெரிகிறது. 'நெஞ்சுக்கு நீதி'யில் 'முரசொலி' இதழின் மாதிரியொன்றைக் கலைஞர் தருகிறார். அது 5-10-1944 தேதியிட்டது, அதன் வரிசை எண் முரசு: 2, ஒலி: 7. ஆகவே 'முரசொலி' 1942-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் வெளிவரத் தொடங்கியதாக நாம் கொள்ளலாம். அதாவது முரசொலியைத் தொடங்கியபோது கலைஞருக்கு வயது 18 தான்.

இயக்கப் பணிகள்

பள்ளிப் பருவத்திலேயே கலைஞர் பல இயக்கங்களை, மன்றங்களைத் தொடங்கியிருக்கிறார். 1939-ஆம் ஆண்டில் சிறுவர் சீர்திருத்தச் சங்கத்தையும், 1941-ஆம் ஆண்டில் மாணவர் சம்மேளனத்தையும், அதைத் தொடங்கிய சிறிது காலத்துக்குள் தமிழ் மாணவர் மன்றத்தையும் தொடங்கினார்.

'மாணவ நேசன்' கையெழுத்தேட்டைக் கலைஞர் நடத்திவந்தபோது ஒரு கதர்ச்சட்டைக்காரர் அவரைச் சந்தித்து, மாணவர்களையெல்லாம் ஒன்றுபடுத்திச் சுதந்திரம், சமாதானம், சமத்துவம் ஆகிய கோட்பாடுகளை முன்னிறுத்தி அணிவகுத்துக் குரல் எழுப்புவதற்காகத் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் மாணவர் சம்மேளனத்தின் அமைப்பாளராகப் பொறுப்பேற்குமாறு கலைஞரைக் கேட்டுக் கொண்டார். கலைஞரும் ஏற்றுக் கொண்டார். சம்மேளனத்தில் காங்கிரஸ் பொதுவுடமை ஆதிக்கம் மேலிடவும், 'தமிழ் வாழ்க! இந்தி வளர்க! என்னும் கோஷத்தை வைத்துக் கொள்ளலாம் என்னும் கருத்து முன்வைக்கப்படவும் நேர்ந்த நிலையில் கலைஞர் சம்மேளனத்தைக் கலைத்துவிட்டுத் 'தமிழ் மாணவர் மன்றம்' என்னும் அமைப்பினைத் தோற்றுவித்தார். அதே சமயத்தில் சேலத்தில் வெங்கட்ராமன் என்பவர் துவக்கிய 'தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்' என்னும் மன்றத்தின் தொடர்பு காரணமாகத் திருவாரூர் மன்றமும் தமிழ்நாடு தமிழ்மாணவர் மன்றம் என்னும் பெயரினை ஏற்றது.

இதற்குமுன் தொடங்கப்பட்ட சிறுவர் சீர்திருத்தச் சங்கம் மாணவர்களிடையே ஒழுக்கத்தை நிலைநாட்டுவதைக் குறிக்கோளாகக் கொண்டது. வாரந்தோறும் நடந்த கூட்டங்களில் தெருப் பெரியவர்களுள் ஒருவர் அறிவுரை வழங்குவார்.

இதற்குப் போட்டியாக 'இளைஞர் சங்கம்' தொடங்கப்பட்டது. கலைஞரின் இணைபிரியா நண்பர் தியாகராசன்தான் இளைஞர் சங்கத்தின் தலைவர். இரு சங்கங்களுக்கிடையிலும் மோதல் வலுக்கத் தொடங்கியது. பின்னர் தியாகராசன் தெரிவித்த கருத்துப்படி இரு சங்கங்களின் உறுப்பினர்களையும் ஒன்றாகச் சேர்த்துத் தேர்தல் நடத்துவதெனவும், இரு சங்கத் தலைவர்களுள் யார் மிகுதியான வாக்குகளைப் பெறுகிறார்களோ அவரது ஆணைக்கு மற்ற இளைஞர்கள் கட்டுப்பட்டு நடப்பது எனவும் தீர்மானமாயிற்று.

அந்தத் தேர்தலும் நடக்கவில்லை. காரணம் மிகவும் சுவையானது, தேர்தலுக்கு மூன்று நாட்களுக்குமுன் நடைபெற்ற இளைஞர் சங்க நாடகத்தில் நடிக்க வேண்டிய கதாநாயகர் கோபித்துக் கொண்டு சென்றுவிட்டார். தியாகராசன் கலைஞரை அணுக, ஒரு சமாதான ஒப்பந்தம் உருவாயிற்று. கலைஞர் நாடகத்தில் கதாநாயகனாக நடிப்பதெனவும், தியாகராசன் போட்டியிலிருந்து விலகுவதெனவும் தீர்மானிக்கப்பட்டதால் தேர்தல் நடைபெறவில்லை. இளைஞர் சங்கம் சீர்திருத்தச் சங்கத்துடன் இணைந்துவிட்டது. இன்று நாடு போற்றுமளவுக்கு வளர்ந்துள்ள கலைஞரின் அரசியல் சாதுரியம் அன்றே செயல்பட்டிருப்பதை நாம் மறப்பதற்கில்லை.

1938-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்ட கலைஞர் சுயமரியாதை இயக்கத்திலும், நீதிக்கட்சியிலும் ஈடுபடத் தொடங்கினார். ஈரோடு குடியரசுப் பதிப்பக வெளியீடுகளைத் தொடர்ந்து படிக்கத் தொடங்கினார். முன்னணிப் பேச்சாளராகவும் எழுத்தாளராகவும்

மாறினார். 'முரசொலி' துண்டு வெளியீடு ஆயிரக்கணக்கில் அச்சிடப்பட்டு ஊர்தோறுமுள்ள திராவிட இயக்கக் கிளைகளுக்கு அனுப்பப்பட்டது.

எழுத்தாளர் கலைஞர்

மாணவர் நேசன், முரசொலி போன்றவை கலைஞரே பொறுப்பாளராக இருந்து நடத்தியவை. ஆகவே அவ்விதழ்களில் கலைஞரின் படைப்புகள் வெளிவந்ததில் வியப்பதற்கொன்றுமில்லை. கலைஞரே எழுதுவதுபோல 'முரசொலி'யின் நிரந்தர எழுத்தாளர் அவர்தான். ஆயினும் மனநிறைவு கொள்ளவில்லை அவர். பிற இதழ்களிலும் தம் படைப்புக்கள் வெளிவர வேண்டுமென்று விரும்பினார்.

ஆகவே 'இளமைப் பலி' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதி, காஞ்சிபுரத்திலிருந்து அறிஞர் அண்ணாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'திராவிட நாடு' இதழுக்கு அனுப்பினார். கட்டுரையும் வெளிவந்தது. அடுத்துப் 'பகுத்தறிவுப் பரமசிவம்' என்னும் தலைப்பில் மற்றொரு கட்டுரை அனுப்பினார். அது வெளிவரவில்லை.

அதற்கு அடுத்த வாரம் நபிகள் நாயகம் விழாவில் கலந்து கொள்வதற்காகத் திருவாரூர் சென்ற அறிஞர் அண்ணா, 'கருணாநிதி'யைச் சந்திக்க விரும்பி அழைத்துவரச் செய்தார். தம் இதழில் கட்டுரை எழுதியவர் பள்ளிமாணவர் என்பதை அறிந்து வியப்புற்ற அண்ணா, இனிமேல் கட்டுரை எழுதி அனுப்பக்கூடாதென்று தடைவிதித்து, நன்றாகப் படிக்குமாறு அறிவுரைகூறி அனுப்பிவைத்தார். ஆனால் அண்ணா கூறிய அவ்வறிவுரையைக் கலைஞர் கடைப்பிடிக்கவில்லை.

மாணவப்பருவத்தில் தொடங்கிய கலைஞரின் எழுத்துப் பணி கட்டுரை, கடிதம், சிறுகதை, நாவல், திரைப்பட உரையாடல், இலக்கிய விளக்கம், கவிதை எனப் பல துறைகளிலும் இன்றளவும் தொடர்ந்து வருகிறது.

நாடக ஆசிரியரும் நடிகரும்

தொடக்கப்பள்ளி மாணவராகவும் உயர்நிலைப்பள்ளி மாணவராகவும் இருந்தபோதே நாடகங்களில் நடிக்கத் தொடங்கிய கலைஞர் விரைவிலேயே நாடக ஆசிரியராக மாறினார். 'பழனியப்பன்' என்னும் நா_கத்தை எழுதி அதைத் தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்ற நிதிக்காகத் திருவாரூரில் நடத்தினார். அந்நாடகம் பின்னர் 'சாந்தா; என்றும் 'நச்சுக்கோப்பை' என்றும் பெயர்மாறியது.

திரு.வி.ஆர். கோபால் தாம் ஆரம்பிக்கவிருந்த நாகை திராவிட நடிகர் கழகத்துக்காகப் 'பழனியப்பன்' நாடகத்தை நூறு ரூபாய் கொடுத்து வாங்கிக் கொண்டார். தாம் எழுதும் நாடகத்தில் நடிப்பது எனவும் கலைஞர் இசைந்தார். 'பழனியப்பன்' நாடகம் விழுப்புரத்தில் நடத்தப்பட்டபோது தந்தை பெரியார், அறிஞர் அண்ணா போன்றோர் தலைமையேற்றுச் சிறப்பித்தார்கள்.

நாடகம் எழுதுவதையே வாழ்க்கைத் தொழிலாகக் கொள்ளக் கலைஞர் அவ்விளம்பருவத்திலேயே முடிவுசெய்தார். வீட்டாரும் உறவினரும் தடையாக நின்றாலும், நாடகப் பணியை கலைஞர் தொடர்ந்தார். அவ்வனுபவமே பின்னர் திரைப்பட உரையாடல் ஆசிரியராக அவரை மாற்றியது எனலாம். திராவிட இயக்கத்திலிருந்து திராவிட முன்னேற்றக்கழகம் மலர்ந்த பின்னர்கூட, கழக மாநாடுகளிலும், கழக நிதி நிகழ்ச்சிகளிலும் கலைஞரின் நாடகங்கள் இடம் பெற்று வந்தன. கலைஞரும் அவ்வப்போது தமது நாடகங்களில் வேடமேற்று நடித்து வந்தார்.

காதலும் திருமணமும்

நாடக ஆசிரியராகப் பணியாற்றிய கலைஞர் கன்னியொருத்தியைக் காதலித்தார். இடையில் பெற்றோர் குறுக்கிட்டனர். இருதரப்பிலும் படை திரண்டது. இறுதியில் காதல் தோற்றது.

காதல் தோற்றதற்கு முக்கிய காரணம் தாம் சுயமரியாதைக்காரராக இருந்ததுதான் என்கிறார் கலைஞர். வேறு விவரங்களைக் கலைஞர் எழுதவில்லை.

இக்காதல் தோல்வியால் மனமுடைந்து போய்விட்ட கலைஞருக்கு அவரது வீட்டார் பெண் தேடத் தொடங்கி, சிதம்பரம் ஜெயராமன் அவர்களின் தங்கை பத்மாவைக் கலைஞருக்கு மனைவியாக்க முடிவு செய்தார்கள். பெண்வீட்டார் கலைஞரின் விருப்பப்படியே சீர்திருத்தத் திருமணத்துக்கு ஒப்புக்கொண்டதால் 13-9-1944 அன்று கலைஞருக்கும் பத்மா அம்மையாருக்கும் திருவாரூரில் திருமணம் நடந்தது. அதே நாளில் கலைஞரின் மைத்துனர் ஜெயராமனுக்கு வைதீக முறையில் அதே வீட்டில் திருமணம் நிகழ்ந்தது. மைத்துனரின் திருமணத்துக்கு நல்லநேரம் தவறிவிடக் கூடாது என்பதற்காகக் கலைஞரின் திருமண நிகழ்ச்சியை ஒட்டிய சொற்பொழிவுகளும், கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் 'கிந்தனார்' கதாகாலட்சேபமும் மாலையில் நடைபெற்றன. நாகை வழக்கறிஞர் விசயராகவலு என்பவரின் தலைமையில் தமது திருமணம் நடந்ததாகவும் நாவலர் இரா. நெடுஞ்செழியன், அவரது இளவல் இரா.செழியன், கடலூர் வழக்கறிஞர் இளம்வழுதி போன்றோர் திருமணத்தில் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கிறார் கலைஞர்.

சில குறிப்புகள்

1. 'நெஞ்சுக்கு நீதி' என்னும் தலைப்பில் தன் வரலாறு எழுதுவதாகக் கலைஞர் குறிப்பிட்டாலும் இந்நூலில் கலைஞரின் வரலாற்றுக் குறிப்புக்களைவிடத் திராவிடர் கழக -திராவிட முன்னேற்றக் கழக நிகழ்ச்சிகளும் திராவிட இயக்கத்தில் கலைஞர் ஆற்றிய பணிகளுமே மிகுதியாக இடம் பெறுகின்றன. ஆகவே 'நெஞ்சுக்கு நீதி' கலைஞரின் வரலாறு என்பதைவிட, திராவிட இயக்கத்தின் வரலாறு என்பதே பொருத்தமாக இருக்கும்.

2. கலைஞரின் தமிழ்நடை படிக்கப் படிக்கத் தெவிட்டாத தெள்ளுதமிழ்நடை, மிக இயல்பான எளிதான தமிழ்நடையில் பல்வேறு

வரலாற்று நிகழ்ச்சிகளைப் படம்பிடித்துக் காட்டுகிறார் கலைஞர். எடுத்துக்காட்டாக, கலைஞரின் திருமணத்தன்று மாலையில் 'கிந்தனார்' கதாகாலட்சேபம் நடைபெற்றபோது பெருங்கூட்டம் கூடிவிட்டது. அவ்வமயம் நடந்ததைக் கலைஞர் பின்வருமாறு சொல்லோவியமாக வடித்துக் காட்டுகிறார்:

'மாப்பிள்ளைகளான நானும் என் மைத்துனரும்கூடப் பந்தலுக்குள் நுழைய முடியாமல் தவித்தோம். அந்த நேரத்தில் என் கண்கள் என்னை அறியாமல் பெண்கள் பகுதியில் பார்த்தன. ஏன் என்று சொல்லவும் வேண்டுமோ? அவள் பத்திரமாக இருக்கிறாளா என்று பார்க்கத்தான். என்னைப் போலவே அந்தக் கூட்டத்துக்குள்ளேயிருந்து என் பத்மாவின் கண்கள் ஏக்கத்துடனும் அச்சத்துடனும் நான் எங்கேயிருக்கிறேன் என்று தேடிக் கொண்டிருந்தன'.

எளிய சொற்களைக் கொண்டு கதை சொல்வது போலத் தம் வரலாற்றைக் கொண்டுசெல்கிறார் கலைஞர். அவரது திரைப்பட உரையாடல்களிலோ, 'முரசொலி', கடிதத்திலோ காண இயலாத எளிய நடை நூலெங்கும் நிறைந்திருக்கிறது; கலைஞரின் இயல்பான தமிழ்நடை இதுதானோ என நம்மை எண்ணத்தூண்டுகிறது.

3. கலைஞர் 'நெஞ்சுக்கு நீதி' நூலில் தம்மைப்பற்றிய செய்திகள் பலவற்றை எழுதாமல் விட்டதன் காரணம் புரியவில்லை. தம் இளமைப்பருவச்செய்திகள் போன்றவற்றை மிக மிகச் சுருக்கமாகக் கூறிவிட்டுத் தம்அரசியல் வாழ்வுபற்றிய செய்திகளை வரையக் கலைஞர் விரைகிறார் என்றே நினைக்க வேண்டியுள்ளது. இளமைப் பருவமே ஒருவரது பிற்கால வாழ்க்கையை வடிவமைப்பது என்பதால், கலைஞரின் பிற்கால வாழ்க்கையை - அவரது அரசியல், இலக்கிய வாழ்க்கையை வடிவமைப்பதற்கு முன்னோடியாக அவரது இளமைப் பருவத்தில் நிகழ்ந்தவற்றை நம்மால் அறிய முடியாமலே போகிறது. தென்னன் போன்ற அவரது இளமைக் கால நண்பர்கள்கூட மேம்போக்காகச் சிலவற்றை அவ்வப்போது கூறுகிறார்களே தவிர கலைஞரின் இளமைப்பருவம் பற்றி யாருமே நமக்கு விரித்துரைக்கவில்லை. தமிழக வரலாற்றில் கலைஞருக்கு உரிய இடத்தை ஏற்றுக் கொள்ளும் அனைவருமே இது வரலாற்று இழப்பு என்பதையும் ஏற்றுக் கொள்வர். கலைஞரின் அரசியல் இலக்கிய வாழ்வுபற்றிய செய்திகளை முரசொலி, திராவிடநாடு, நம்நாடு, மன்றம், தென்னகம் போன்ற இயக்க ஏடுகள் மூலமாகவும் பிற ஆவணங்கள் மூலமாகவும் நாம் அறிந்துகொள்ள இயலும். ஆனால் அவரது இளமைப்பருவம் பற்றி அவரும் அவரது நெருங்கிய நண்பர்களுமே நமக்கு எடுத்துரைக்க இயலும்.

4. நேர்காணல்களிலும் சட்டமன்ற விவாதங்களிலும் கலைஞர் நறுக்குத் தெறித்தாற்போலச் சுருக்கமாகவும் சுவையாகவும் பதிலிறுக்க வல்லவர் என்பதை நாடறியும். 'நெஞ்சுக்கு நீதி' நூலையும் கலைஞர் சுவைபடவே எழுதியுள்ளார். எனினும் ஆங்காங்குச் சில தேவையற்ற செய்திகளையும் அவர் விரிவாக எழுதுவதால் நூலின் ஓட்டம் ஆங்காங்கே

தடைப்படுகிறது என்பதையும் நாம் குறிப்பிட்டாக வேண்டும்.

தாம் தன்வரலாறு எழுதப்போவதன் நோக்கத்தை முதல் அதிகாரத்தில் சுருக்கமாகவும் சுவையாகவும் கூறும் கலைஞர், அடுத்த அதிகாரத்துக்குப் 'பிறந்த ஆண்டு' எனப் பெயரிட்டு எழுதத் தொடங்கி, தாம் பிறந்த 1924-ஆம் ஆண்டில் தமிழ் நாட்டிலும், இந்தியாவிலும், உலக அரங்கிலும் நடந்தவற்றையெல்லாம் தொகுத்துக் கூறுவது நூலின் ஓட்டத்தைத் தடைசெய்வதாக அமைந்துள்ளது. இது இரண்டரைப் பக்க அளவினதே என்றாலும் நூலின் போக்குக்குக் குறுக்கீடாக உள்ளது என்பதை மறுக்கவியலாது.

அவ்வாறே ஐந்தாம் வகுப்பில் தமக்குத் துணைப்பாட நூலாக இருந்த 'பனகல் அரசர்' என்னும் நூலைப்பற்றிக் குறிப்பிட்டுவிட்டு, அதைத் தொடர்ந்து நீதிக்கட்சியின் வரலாற்றை ஏறக்குறைய மூன்று பக்கங்களில் கூற முற்படுவது இடம் பிறழ்ந்ததாக உள்ளது.

1938-ஆம் ஆண்டில் இந்தித் திணிப்பு தொடங்கியதையும் அதை எதிர்த்துத் தந்தை பெரியாரின் தலைமையில் போராட்டம் நிகழ்ந்ததையும் விவரிக்கும் கலைஞர், அவ்வாண்டில் துருக்கியில் கமால்பாட்சா மறைந்தது, ஹிட்லர் செக்கோஸ்லோவாக்கியாவை விழுங்கி இரண்டாம் உலகப் போருக்கு வித்திட்டது, ரஷ்யாவில் ஸ்டாலின் பெரும் களையெடுப்பு நடத்தி ஆயிரக்கணக்கானவர்களைச் சைபீரியாவுக்கு அனுப்பியது, காந்தியடிகளின் அகிம்சைக் கொள்கைகளுடன் முரண்பட்டு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் கடுமையாகப் போராடியது, முகமதலி ஜின்னாவுக்கும் காங்கிரசுக்கும் இடையே உள்ள எதிர்ப்பு உணர்வுகள் போன்றவை பற்றியெல்லாம் எழுதுகின்றார்.

அவ்வாறே 1939-ஆம் ஆண்டில் ராஜாஜி அமைச்சரவை பதவி விலகியபின் உருவான இடைக்கால அமைச்சரவை கட்டாய இந்திச் சட்டத்தை நீக்கியதைக் குறிப்பிடுகிறார் கலைஞர். அத்துடன், சுபாஷ் போஸ் காங்கிரசுத் தலைவராக மீண்டும் போட்டியிட்டு காந்தியடிகளின் எதிர்ப்பையும் மீறிவெற்றிபெற்றது, புரட்சி ஜனநாயகக் கட்சியை எம்.என்.ராய் தொடங்கியது போன்றவைபற்றியெல்லாம் எழுதுகிறார்.

1924, 1938, 1939 ஆண்டில் நடைபெற்ற பிற நிகழ்ச்சிகள்பற்றிக் கலைஞர் கூறுவது தேவையற்றதாகவே அமைகிறது.

5. 'பழைய தமிழகம், புதிய தமிழகம், மக்கள் நிலை, அறிவு வளர்ச்சி, இலக்கிய இன்பம், அரசியல் அலைகள் அனைத்தையும் பற்றிய விளக்கங்களோடு ஒரு தொடர்கட்டுரை எழுத வேண்டுமென்பது என் நெடுநாளைய அவா. வெறும் கட்டுரையாக மட்டுமிருந்தால் சுவை குன்றுமோ என்ற பயத்தில் தொடர்கதைபோல் அந்தக் கட்டுரையை எழுத எண்ணுகிறேன். கதையென்றால் அதற்கு ஒரு இழையோடும் பாத்திரம் வேண்டுமே! அதற்கு என்னையே நான் தேர்ந்தெடுத்துக் கொண்டேன்.

. . . . . நான் முன்பு சில இதழ்களில் என் வாழ்க்கைக் குறிப்புகளை எழுதியிருக்கிறேன் அதுவல்ல இது. என்னுடைய இந்த ஐம்பதாவது வயது முடிவுக்குள் ஒரு பெரிய சகாப்தம் ஆரம்பமாகி அதனைத் தொடங்கிய சரித்திர நாயகன் மறைந்து போயிருக்கிறான். ஆனால் அந்தச் சரித்திரம் மறையாது. என்னை நூலாக வைத்துக் கொண்டு அந்தச் சரித்திர முத்துக்களைக் கோத்திடப் போகிறேன்.

என்னை வெறும் நாராக வைத்துக் கொண்டு அந்த வரலாற்றுவேந்தனின் புகழ் மலர்களைத் தொடுத்து மாலையாக்கப் போகிறேன். வாழ்க்கை வரலாறு என்ற பெயரால் ஒரு இயக்க வரலாற்றை அளிக்கலாம். அதிலே அங்கொன்றும் இங்கொன்றும் என்னைப்பற்றிய குறிப்புகள் வராமல், தொடர்ந்து வந்திடும் என்பதால் 'சுய புராணம்' என்று எண்ணாதீர்கள். எழுச்சிமிக்க வரலாற்றுச் சம்பவங்கள், எண்ணத்தைக் கிளறும் அறிவியக்கச் சாதனைகள், இன்பம் பெருக்கெடுக்கும் இலட்சியக் காட்சிகள், அதிர்ச்சி தரும் அரசியல் மாற்றங்கள் இவைகளை விளக்க முயற்சி மேற்கொண்டிருக்கிறேன்'

என்று நூலின் முதல் அதிகாரத்திலேயே தாம் நூல் எழுதும் நோக்கத்தைக் கலைஞர் வரையறுக்கின்றார்.

அந்த நோக்கிலிருந்து பார்க்கும்போது கலைஞரின் 'நெஞ்சுக்கு நீதி' ஒரு மாபெரும் வெற்றிச் சாதனை என்பதை நாம் எளிதாக ஒப்புக் கொள்ளலாம்.

அடிக்குறிப்புகள்

(1) Aaron Daniel, Studies in Biography, Cambridge, Mass. 1978; P.Viii.

(2) Pachter Marc (Ed), Telling lives, The Biographer's Art, Washington, 1979, P.13.

(3) Bowen, Catherine Drinker. BIOGRAPHY : The Craft and the Calling, Canada, 1968, p.11.

(4) Maurois Andre, Aspects of Biography, New York, 1929; p.70.

(5) தென்னன், ஒதுக்கப்பட்டவர்கள், குமுதம் 23-7-1998; பக். 36.

(6) கோமல் சாமிநாதன் & இளைய பாரதி, கலைஞர் முதல் கலாப்ரியா வரை: சுபமங்களா நேர்காணல்கள், சென்னை, 1997: பக்.9.

ஆய்வுக்குரிய மூலநூல்

கலைஞர் மு. கருணாநிதி, நெஞ்சுக்கு நீதி (முதல் பாகம்), சென்னை, 1994.

2 தனிவழி

முனைவர் ம.வீ. பச்சையப்பன்

ஒரு நாவலைவிட, ஒரு கவின் கலைப் படைப்பைவிட, தன் வரலாற்றில் ஒரு சிறப்பு இருக்கிறது. ஏதேனும் ஓர் ஆற்றல் பெற்றிருக்கும் தனிமனிதனை அது ஊக்குவிக்கிறது. அவனிடத்தில் ஏதேனும் வேரூன்றியிருக்கும் இயலாமை உணர்வைக் களைகிறது. தான், மேற்கொண்டிருக்கும் செயலைச் செய்து முடிக்கமுடியும் எனும் தன்னம்பிக்கையைத் துளிர்விடச்செய்கிறது. ஓர் உயிர்ப்பசுமை தன்னுள் பரவிப் படர்வதை அவனால் உணர முடிகிறது. இத் தன்வரலாறு தனி மனிதர்களை மட்டுமல்ல, அத் தனிமனிதர்களின் வழி ஒரு நாட்டை, ஒரு சமுகத்தை விழிப்படையச் செய்கிறது. பல முனைகளில் செழிக்கச் செய்கிறது.

பெர்ட்ரண்ட் ரசல் தம் வாழ்க்கை வரலாற்றினை நெடுங்காலம் கழித்துதான் வெளியிட்டார். அது கூட உண்மையானதும் வாழ்க்கை நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டுவதுமாகும். பலரோடு பின்னிப் பிணைந்திருந்த தம் வாழ்வை இதைப் போலவே வெகு அழகாக நயமாக வரைந்திருந்தார்.

'நெஞ்சுக்கு நீதி' எனும் கலைஞருடைய தன் வரலாற்றைப் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் பாராட்டும் போது "கலைஞர் அவர்கள் தன்னுடைய வரலாறு என்று எண்ணிக்கொண்டு எழுதினாலும், அது இந்த நாட்டின் வரலாறாக, மொழியின் வரலாறாக இருக்கிறது. அவருடைய வரலாறு ஒரு தனி வரலாறாக இருக்க முடியாத நிலை பெற்று ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டு காலமாகிறது." என்று கூறுகிறார்.

கலைஞர் அவர்களே தம் நெஞ்சுக்கு நீதி பற்றிக் கூறும்போது 'அது பெரும்பாலும் தன்வரலாறு என்பதை விட அதனைக் கழக வரலாறு என்றே கூற வேண்டும்' எனக்கூறுகிறார். கழகத்துடன் ஒன்றறக் கலந்தமையையே அது காட்டும். அதைப் போலவே அவருடன் அவருடைய கருத்துக்களோடு செயல் உணர்வுகளோடு ஒன்று கலந்த தொண்டர் ஒருவர்,

> "விளக்கு எரிந்தால் வெளிச்சம் தெரிகிறது. எண்ணெய் இருக்கிறவரை
> திரி எரிவதைப் போல; எண்ணெய் இல்லாத போதும் திரி இருப்பதைப்
> போல் நாங்கள் எப்போதும் உங்களுடன் இருக்கிறோம்"(ப.5 நெ.நீ.2)

எனக் கூறுவது எண்ணிப் பார்க்கத் தகுந்தது.

பள்ளி இறுதி வகுப்பைத் தாண்ட முடியவில்லை. கட்சி ஈடுபாடு,

கலைப்பற்று, நாடகம் நடத்திடும் ஆர்வம் நிறைந்தவராய், படிப்பில் கவனம் செலுத்த முடியாதவராய் இருந்தார். ஆனால் பிற்காலத்தில் இதற்காக வருந்தியதும் உண்டு.

'சரியாகவோ தவறாகவோ ஏதோ ஆற்றல் இருக்கிறது
என்கிறார்களே, அந்த ஆற்றல் கல்லூரிப் படிப்பால் இன்னும்
மெருகேறி இருக்கக் கூடும்'.

உள் மனத்தில் இருந்த இந்தத் தீரா வருத்தம்தான் அவருக்கென ஒரு தனி வழியை வகுத்துக் கொள்ளச் செய்திருக்கிறது. படிப்பை விட்டார், ஆனால் படிப்பதை அல்ல; கல்வி நிலையம் அல்லது கல்லூரி போகவில்லை. ஆனால் மேலும் மேலும் கற்கவும் எழுதவும் அவர் அஞ்சவில்லை. அவருடைய எழுத்துக்களே அவரை வளர்த்தன, மெருகூட்டின.

பழக்கப்பட்ட பாதை ஒன்று
பழக்கப்படாத பாதை ஒன்று
பழக்கப்படாத பாதையிலே
புல்லும் புதர்களும் அடர்ந்திருந்தன
இரண்டு பாதைகளும்
தொடங்கும் இடத்திலே நின்று கொண்டிருந்தேன்
எதைத் தேர்ந்தெடுத்து மேலே செல்வது?
பழக்கப்படாத பாதையையே
நான் தேர்ந்தெடுத்துக்கொண்டேன்.
அதுதான் வேறுபாடு.

இவ்வாறு பாடுகிறார் அமெரிக்கக் கவிஞர் ராபர்ட் ப்ராஸ்ட்.. கலைஞரும் அந்தத் தேயாத பாதையிலே நடந்து நடந்து தானாகவே ஒளிரும் ஓர் இயற்கைப் பொருளைப் போல, ஒரு நட்சத்திரத்தைப் போல் நின்றார்.

அவருடைய பணிகள் கட்டுரை எழுதல், நாடகம் வரைதல், நாடகம் நடத்தல், கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல் ஆகும். இவை எல்லாம் எதிர்கால வளர்ச்சிக்கும், ஏற்றத்திற்கும், அடித்தளங்களாக அமைந்தன.

கையெழுத்து ஏடு ஒன்று நடத்தி வந்தார் முதலில். ஏடு பெரும்பாலும் ஒன்றுதான் இருக்கும். ஆனால் இவரோ நண்பர்களோடு சேர்ந்து சில நகல் எடுத்து, பலர் படிக்குமாறு செய்தார். ஆனால் எவ்வளவு காலத்துக்குத்தான் கையெழுத்து ஏடு?

ஒரு முறை தான் எழுதிய கட்டுரை ஒன்றை 'திராவிட நாடு' ஏட்டிற்காகக் காஞ்சிபுரத்திற்கு அனுப்பி வைத்தார். அடுத்த வாரமே அது அச்சில் ஏறி திராவிட நாட்டில் வந்துவிட்டது. மழைச் சாரலைப் போல் வீசியது இன்பம், அவருடைய உள்ளத்தில்! அந்தப் பத்திரிகையை எடுத்துக் கொண்டு திருவாரூர் முழுவதும் சுற்றினார். எங்கேனும் நாலுபேர் நின்றிருந்தால் அந்த இடத்திலே பத்திரிகையை வைப்பார் யாரேனும் அதனை எடுத்துப் படிக்கமாட்டார்களா? தன்னைப் பாராட்டமாட்டார்களா என்று நிற்பார்'.

பாராட்டுதான் எவ்வளவு பெரிய அருமருந்து. ஓர் எழுத்தாளனுக்கு

அதுவும் தொடக்க நிலை எழுத்தாளனுக்குத் தேவைப்படுகிறது, ஒரு செடிக்கு நீர் ஊற்றுவதைப் போல!

அவர் தேர்ந்தெடுத்துக்கொண்ட பாதையிலே இன்னல்கள் பல இல்லாமல் இல்லை. அதற்கு ஒரு குறியீடுபோல ஒரு நாள் இரவு திரைக்கதை ஆய்வு; ஸ்டூடியோவில் (திரைப் படக்கலை) வேலைகளை முடித்துவிட்டு வீடு திரும்ப நேரமாகிவிட்டது. நள்ளிரவு, அந்தப்பாதையிலே திருடு, கொலை நடந்திருக்கிறது. அரசியல் கொலைகூட! ஆனால் இப்போது அவசரமாகப்போக வேண்டி இருந்தது. உடல் நலம் இல்லாத தன் மனைவி தனிமையிலே; வேகமாக நடந்தார். ஆனால் நடுவழியிலே நரிகள் சில உட்கார்ந்திருந்தன. முன்னேயும் போக முடியாது, பின்னேயும் போக முடியாது. நரிகள் பார்த்துவிட்டால் நேரும் ஆபத்தைச் சொல்லவே தேவை இல்லை. பயந்து கொண்டே நின்றேன். அந்த நேரத்தில் ஓர் இராணுவ லாரி வந்தது. அதன் வெளிச்சத்தைக் கண்ட நரிகள் புதருக்குள் போய் மறைந்து விட்டன. 'இது தான் சமயம் என்று எடுத்தேன் ஓட்டம் சிங்காநல்லூரை நோக்கி. அங்குதான் நானும் என் மனைவியும் தங்கியிருந்தது. சிங்காநல்லூரில் தான் என் ஓட்டம் நின்றது!'[4]

சந்தனக் கிண்ணமும் சங்கிலியும்
கூட்டங்கள் நடத்துதல்.

வெளியூரிலிருந்து அறிஞர்களை வரவழைத்துக் கூட்டங்கள் நடத்துவது இவருக்கு வழக்கம். 1942 ஆம் ஆண்டு.

தமிழ்நாடு மாணவர் மன்றங்கள் என்றோர் அமைப்பு. அவற்றின் ஆண்டுவிழா. அதிலே அன்பழகன், மதியழகன் ஆகியோர் திருவாரூர் வந்து எழுச்சியுரை ஆற்றினர். கூட்டம் முடிந்தது; பேச்சாளர்களைத் திருப்பி அனுப்ப வேண்டும். கையிலே பணம் இல்லை. தருவாரும் இல்லை. வீட்டிலே ஒரு தங்க வளையம் அறுந்த சங்கிலி - என்னுடையதுதான், பெட்டியில் வைத்திருந்தார் அம்மா. அவர்கள் அறியாமல் எடுத்தேன்! எவ்வளவு பயம்! படபடப்பு, நடுக்கம், நாவறட்சி. ஆனால் சங்கிலியை எடுத்துக் கொண்டேன். செட்டியார் பேங்கில் ரூ.50/-க்கு ஈடு வைத்துச் சொற்பொழிவாளர்களைத் தாராளமாக ஊருக்கு அனுப்பி வைத்தேன்."

பிறகு வீட்டிற்குச் சென்றார், தாயும் தந்தையும் சங்கிலியைத் தேடித் தேடி அலைந்தனர். அம்மா கண்ணீர்விட்டு அழுகிறார்; அப்பா கோபப்படுகிறார். ஒரு நாளா இரண்டு நாளா, அம்மா மட்டும் அந்தச் சங்கிலியைத் தேடுவதை நிறுத்தவே இல்லை. பல ஆண்டுகளுக்கு அப்புறம் அந்த விவரத்தைச் சொன்ன போது, அவர்கள் வியந்தார்கள்! கதை சொல்லும் பாணி மிக நன்று.

வேறு ஒரு முறை இதே போல ஒரு கூட்டம் நடத்துவதற்குப் பணம் தேவைப்பட்டது. மனைவி அறியாமல் அவருடைய சந்தனக் கிண்ணத்தை எடுத்துக் கொண்டு போய் அடகு வைத்துக் கூட்டத்தை முடித்து வைத்தார்[5]

உண்மையிலேயே தன்வரலாறு வேகம் கொண்டு சுழன்று ஓடுவதை காணலாம். எல்லா வகையான, ஒன்பான் சுவை என்பார்களே அச்சுவைகள்

எல்லாம் சேர்ந்து நம்மிடையே வியப்பார்வத்தை உண்டாக்குகின்றன!

வெள்ளிக்கோப்பை

இந்த முறை கூட்டமல்ல, நடத்தியது நாடகம்! "நடத்திடச் செலவு ரூ200, வரவு ரூ80. நடித்த நடிகைக்குத் தனக்குப் பரிசாகக் கிடைத்த வெள்ளிக் கோப்பையைக் கொடுத்துவிட்டார்! மிச்சத்திற்கு. . . . . ? இவரிடம் அன்பு கொண்ட திராவிடர் கழகத் தலைவர் ஒருவர், அவரிடம் போனார். நூறு ரூபாய் கேட்டார். முதலில் தயங்கினார், அவர் பிறகு கொடுத்துவிட்டார்! எப்படி ? பழனியப்பன் என்ற இவருடைய நாடகத்தை அவருக்கு விற்று விட்டார். அதன் விலை ரூ.100/- அது தான் 'சாந்தா', 'நச்சுக் கோப்பை' எனப் பல இடங்களில் நடிக்கப்பட்டது.[6]

தனக்குக் கிடைத்த வெள்ளிக் கோப்பையையும் கொடுத்தார், நாடகக் கதையையும் விற்றார். யாருக்கு வரும் இந்த மனசு!

இந்தி எதிர்ப்பு

முதன் முதலில் இந்தியைக் கொண்டு வந்தவர் இராஜாஜிதான்.

அப்போது 'சட்ட மன்றத்தில் ராஜாஜி சொன்னார்
இந்தியை எதிர்ப்பவர்கள் யார் ? இரண்டே பேர்தான்! ஒருவர்
இராமசாமி நாயக்கர் மற்றொருவர் பசுமலை பாரதியார்! எதிர்
வரிசையில் அமர்ந்திருந்த பன்னீர் செல்வம் உடன் எழுந்து
"எதிர்ப்பவர்
இருவர். ஆனால் இந்தியைக் கொண்டு வருபவர் நீங்கள்
ஒருவர்தான்.
ஆகவே பெரும்பான்மை எதிர்ப்பின் பக்கம்தான்" என்றார். அந்தப்
பதிலுரை கேட்டுத் தமிழகமே அவரைப் பாராட்டியது.

அப்போது இந்தித் திணிப்பை எதிர்த்துப் பேசிய அண்ணாவின் பேச்சைப் பாராட்டாதவர் இல்லை.

"அண்ணாதுரை என்ற ஒரு புதிய பெயர் தமிழ்நாட்டு மூலை
முடுக்கெல்லாம்
எதிரொலிக்கத் தொடங்கியது."

"எப்படிப் பேசுகிறார் மனுஷன்! சங்கீதம் கேட்பதுபோல்
இருக்கிறதே. . ."

"குள்ளமான உருவம்! கள்ளமில்லாப் பார்வை! மடை திறந்தாற்போல்
பேச்சு" பாராட்டுக்கள்!

திருச்சி இரயில்வே சந்திப்பிற்கு எதிரேயுள்ள திறந்த வெளியில் விடியற்கால வேளையில், தன் மேனி முழுவதும் பெட்ரோல் ஊற்றிக் கொண்டு தீக்குளித்து மாண்டுவிட்டார் சின்னச்சாமி எனும் ஒரு தி.மு. கழகச்செயல்வீரர். அதைப் பற்றி

"சாகையிலே தமிழ் படித்துச்
சாக வேண்டும் - என்
சாம்பலிலும் தமிழ் மணந்து
வேக வேண்டும்" [8] என்று உருக்கத்தோடு எழுதுகிறார்.

இது குறித்து ஒரு சிறு அழகு காவியமே பாடியுள்ளார். நெஞ்சை உருக்கிடும் தமிழ்!

குளித்தலை விவசாயிகள்

இவர்களுக்காகக் கலைஞர் பாடுபட்டதை நாடறியும். அவருடைய சட்டமன்றத் தொடக்கத்தின்போது நங்கவரம் பண்ணை விவசாயிகளுக்காகப் போராடினார். தொடர்ந்து 20 நாட்கள் நடந்தது. இதில் வியக்கத்தக்கது என்னவென்றால் வன்முறையே நிகழவில்லை என்பதுதான்.

1970 ஆம் ஆண்டு பிப்ரவரியில் (இவர் முதலமைச்சராய் இருந்தபோது) 15 ஏக்கர் நில உச்ச வரம்பு எனத் திடீரென அறிவித்த சட்டத்தினால் பயனடைந்த நிலமற்றோர் 38, 504 பேர்! அவர்களுக்கிடையே ஒப்படைக்கப்பட்ட நிலம் 62, 682 ஏக்கர்.[9]

பிறந்த நாள் தொண்டுகள் 1971 முதல்

கலைஞர் தம் பிறந்த நாள் கொண்டாடும்போது ஏதேனும் ஒரு புதிய திட்டம் அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும். இந்த வகையில் வந்ததுதான் தொழுநோய்ப் பிச்சைக்காரர் நல்வாழ்வுத் திட்டம். அந்த நலவாழ்வு நிலையங்களில் நோயின் பாதிப்புகளுக்குத் தக்கவாறு பணிகள் பகிர்ந்து அளிக்கப்பட்டன. உடல் நலம் எய்தி தொழிலும் கற்று, தம்மால் தனித்து வாழ முடியும் என்ற நிலை ஏற்பட்டால் அவர்கள் அந்நிலையங்களை விட்டு வெளியே சென்று வாழலாம். அப்போதிருந்த ஆளுநர் கே.கே.ஷா இத்திட்டத்தைப் பல நிகழ்ச்சிகளிலே பாராட்டியுள்ளார். இந்திராகாந்தி அவர்களும் இத்திட்டத்தைத் தமிழக அரசின் போற்றத்தகுந்த திட்டம் என்று புகழ்ந்துரைத்தார்.

கண்ணொளி வழங்கும் திட்டம்

இத்திட்டத்தினால் பயன் பெற்றோர் மிகப்பலர். பார்வைக்குறைவு தம்மைப் பாதிக்கிறது என்று தெரிந்தும் சிகிச்சை - மருத்துவம் - செய்து கொள்ளாமல் வருந்தியே காலம் தள்ளுவோர் அதிகம். ஏழைகள், இயலாதவர்கள்தாம் என்பதில்லை. நடுத்தர மக்களும் உண்டு. இத்திட்டம் அவர்களுக்கெல்லாம் ஒரு நற்கொடையாக அமைந்தது. கண்ணில் ஒளியும் பிறந்தது; இலவசமாகக் கண்ணாடியும் கிடைத்தது. இத்திட்டத்தில் அப்போது• நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த பேராசிரியர் க. அன்பழகன் 'அவர்கள் பெரும் பணி ஆற்றினார்கள்.

பேராசிரியரைப் பற்றிக் கலைஞர் கூறுவது நினைவு கூர்தற்குரியது.

"இந்தக் கழகத்திற்கு நான் தலைவர்! பேராசிரியர் பொதுச்
செயலாளர்!
நாங்கள் இருவரும் பிரியாதவர்கள்! பிரிக்கப்பட முடியாதவர்கள்!
தலைவர்
என்பதும் ஏற்றுள்ள பொறுப்புகளைச் சுட்டிக்காட்டப் பயன்படும்
சொல்லே
தவிர, எங்களுக்குள் எந்தவிதமான ஏற்றத்தாழ்வும் இருப்பதாக

என்றுமே எண்ணியதில்லை.[10]

ரிக்ஷாக்கள் ஒழிந்தன

மனிதன் மனிதனை இழுத்துக் கொண்டு போவதா என்ற கேள்வி எழுந்தது. அந்த ரிக்ஷாக்களுக்குச் சொந்தக்காரர்கள் வேறு. அவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டது. அந்த ரிக்ஷாக்காரர்களுக்கு சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கப்பட்டன.

கலப்புத் திருமணங்கள்

சாதியை ஒழிக்கும் வழிகளுள் ஒன்றுதான் கலப்புத் திருமணம். அரசு இத்திருமணங்களை ஊக்குவித்தது. பரிசும் பணமும் கூட வழங்கியது. உயர்ந்த சாதியினரிடையே நடக்கும் கலப்புத் திருமணங்கள் ஊக்குவிக்கப்பட்ட போதும், ஏற்றத் தாழ்வு மிக்கவரிடையே நடைபெற்றிடும் கலப்புத் திருமணங்களுக்குப் பரிசும் பணமும் அளிக்கப்பட்டன.[11]

சமூக வாழ்வில் மாற்றம் காண விழைந்திட்ட விழைவின் பயன்தான் இத்திட்டங்கள்.

இழப்புகள்

தலைவர்கள் ஒவ்வொருவராக இயற்கை எய்தினர். கால இடைவெளி அதிகம் இல்லை. ஒரு வெறிச்சோடிய நிலை என்று கூடச் சொல்லலாம்.

காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்கள் 1972 ஏப்ரல் 4ம் நாள் இயற்கை எய்தினார். அவர் இந்திய மண்ணை நேசித்தவர். அதற்கு அளவில்லை. தன் ஒரே மகனைக் கூடப் போருக்கு அனுப்புவதற்குத் தயாராக இருந்தார். 1965ல் இந்தியா மீது பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு நடத்தியது; அப்போது அவர் கூறினார். 'என் மகன், ஒரே மகன் மியாகானைத் தருகிறேன் என்றார்.

1972 டிசம்பரில் மூதறிஞர் ராஜாஜி அவர்களும் இயற்கை எய்தினார். அடுத்த ஆண்டிற்குள் பெரியார் அவர்கள் 1973 டிசம்பர் 24ஆம் நாள் இயற்கை எய்தினார். 'இந்தியாவின் தலைசிறந்த சீர்திருத்தக்காரர்" என வருணித்தார் கலைஞர். "சர்ச்சைக்குரியனவற்றில் ஈடுபாடு கொண்டு அதில் களிப்பெய்திய முனைப்பாற்றல் மிகுந்த மனிதர். ஏற்றுக் கொள்ளப்பட்ட பல கருத்துக்களை எதிர்த்து அறைகூவி நின்றவர்" என்றார் இந்திராகாந்தி அம்மையார்.[12]

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 21.4.1964ல் சென்னையில் இயற்கை எய்தினார். அவரைக் கடலுக்கு உவமை காட்டுகிறார்.

அந்த கடலிலே
உணர்ச்சித் துடிப்பு
புதுமை நோக்கு
புரட்சி வெடிப்பு

இவை அனைத்துமே அலைகளாகப் பொங்கி எழுந்து சீறிப்

பாய்ந்தன. சிலம்பமும் ஆடின.[13]

இந்தியப் பிரதமர் - நேரு இறந்தபோது பிரிட்டீஷ் ஏடான 'டிரிபியூன்' அவரை 'உலகின் மனச் சாட்சியாகவே விளங்கினார்' என்று வருணித்ததையும் அவரின் வையகப் புகழையும் எடுத்துக் காட்டினார் கலைஞர். (ப.515)

அவலம், பேரவலம்

கலைவாணர் இறந்தபோதும் சின்னச்சாமி தீயில் கருகி இறந்தபோதும் 21.4.64ல் பாரதிதாசனார் இயற்கை எய்திய போதும் யாவற்றிற்கும் மேலாக அண்ணா அவர்கள் உடல் நலமின்றிப் புற்று நோய்க்கு அறுவை சிகிச்சை செய்தும் பலனின்றித் தமிழகத்தையே ஓர் அழுகைக் கடலாக்கிக் கடலோரம் உறங்கிட்ட போதும் கலைஞர் பாடிய கவிதைகள் கூறிய மொழிகள் எல்லோருடைய நெஞ்சிலும் ஆழமாய்ப் பதிந்துவிட்டன.

1969 பிப்ரவரி மூன்றாம் நாள் அண்ணா இறந்தார். அப்போது பாடிய கலைஞரின் கவிதையிலே சில வரிகள்.

"என் அண்ணா . . . இதய மன்னா
படைக்கஞ்சா தம்பியுண்டென்று பகர்ந்தாயே
எமை விடுத்துப் பெரும்பயணத்தை
ஏன் தொடர்ந்தாய்?. . .
நிழல் நீதான் என்றிருந்தோம்; நீ கடல்
நிலத்துக்குள் நிழல்தேடப் போய்விட்டாய்; நியாயந்தானா?
நாத இசைக் கொட்டுகின்ற நாவை ஏன்
சுருட்டிக் கொண்டாய்?
விரல் அசைத்து எழுத்துலகில்
விந்தைகள் செய்தாயே; அந்த
விரலை ஏன் மடக்கிக் கொண்டாய்?
நீ
இருக்கும் இடந்தேடி யான் வரும்வரையில்
இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா
நான் வரும்போது கையோடு கொணர்ந்து அஃதை
உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா.[14]

அவலம் குறித்து எழுதப்பட்டுள்ள சிறந்த மனம் உருக்கும் பாடல்களிலே இதுவும் ஒன்று.

விளையாட்டும் உண்டு

ஒரு முறை கலைவாணரும் கலைஞரும் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது கலைவாணர் கலைஞரை ஒரு தாளில் நான்கு சைபர்கள் எழுதச்சொன்னார். பிறகு உன் விருப்பப்படி அங்கே ஏதேனும் ஓரிடத்தில் ஒன்று என்ற எண்ணை எழுதுங்கள் என்றார். கலைஞரும் 0000 தள்ளி 1 என்று எழுதினார். கலைவாணர் அதை வாங்கிப் பார்த்தார். ஓ, இவ்வளவு தானா? ஒன்றுதானே வருகிறது என்றார். பேப்பரைத் திருப்பிப் பாருங்கள் என்றார் கலைஞர். பார்த்தார் 10000! அடேயப்பா, நீ என்னைவிடக் கெட்டிக்காரன்தான் என்றார், வியந்தார்,

மகிழ்ந்தார்!

மருந்தாகித் தப்பா மரம்!

வாரி வழங்கும் வள்ளல் கலைவாணர் அவர்கள் வறுமையுற்றிருந்த நேரம்.

சேலம் உணவு விடுதி ஒன்றில் தங்கியிருந்த போது ஓர் ஏழை நடிகன் தன்னுடைய திருமணச் செலவிற்குப் பணம் கேட்க வந்திருந்தான். அவனைத் தான் தங்கியிருந்த அறைக்கு வெளியே நிற்கச் செய்துவிட்டுக் கை கழுவுவதற்குத் தண்ணீர் எடுத்துச் செல்வது போல் அங்கிருந்த வெள்ளிக் கூஜாவை அறைக்கு வெளியே எடுத்து வந்து, அதனை அந்த நடிகனிடம் கொடுத்து "இதை வைத்துக் கொள், இப்போது என்னால் கொடுக்க முடிந்தது இவ்வளவுதான்" என்று கண் கலங்கக்கூறி அந்த நடிகனை அனுப்பி வைத்தாராம். மதுரம் இதனை அறிந்தும் அறியாததுபோல் நடந்த கொண்டாராம்.[15] ஜாடிக்கு ஏற்ற மூடி என்று மதுரம் தன்னைக் கூறிக் கொண்டது எவ்வளவு சரியானது!

கலைவாணர் ஒரு மருந்து மரத்தைப் போல் இலை, பூ, காய், பழம், கிளை, மரம், பட்டை கடைசியில் வேர் இப்படி ஒவ்வொருவராகத் தம் தேவைக்கு ஏற்ப அந்த மரத்தையே காலி செய்து விடுவர். இதைத்தானே வள்ளுவர் 'மருந்தாகித் தப்பா மரம்' என்கிறார்.

மரணம் உண்டு ஆனால் துன்பம் இல்லை

நாம் இருக்கும்போது மரணம் இருப்பதில்லை; அது வந்த பிறகு நாம் இருப்பதில்லை. இதில் என்ன மரணத்திற்கு அச்சம் என்கிறார் எபிக்யூரஸ் எனும் அறிஞர்.

கலைவாணர் மரணத்தைப்பற்றிக் கூறுகிறார் கலைஞர். "கலைவாணர் விரைவில் தம் வாழ்வை முடித்துக்கொள்ள விரும்பினார். அவர்விருப்பம் ஈடேறியது. மெல்ல மெல்ல அவர் தம் உயிரைப் போக்கிக் கொண்டார். யார் மீதும் அவருக்கு வருத்தம் இல்லை. எந்த மனமாச்சரியமும் அவருக்கு ஏற்பட்டதில்லை. பயங்கர அதிர்ச்சிகள் அவரைத் தாக்கியதில்லை".[16]

இதனை 'முத்தி' என்பார் சிலர். விடுதலை என்பது தமிழ். எதனால் எதனால் துன்பம் வருமோ அதிலிருந்து அதிலிருந்து நீங்கிய நெஞ்சிற்கு விடுதலைதான் வரும். துன்பம் இல்லை என்கிறார் வள்ளுவர். கலைவாணர் இங்கேயே சுமைகளை அவ்வப்போதே இறக்கி வைத்துவிட்டார். பிறர் விழிகளிலேதான் இப்போது சுமை, அந்தச் சுமையும் கண்ணீராய்க் கரைந்து விடுகின்றது.

தியாக தீபங்கள்

போர்ச்சுகீசியர் பிடியிலிருந்து கோவாவை மீட்பதற்குப் போராடியவர்களில் மோகன் ரானடேயும் ஒருவர். இவர் 13 ஆண்டுகள் சிறையில் இருந்தார். இந்தியர் விடுதலைக் குழுவில் இருந்த அண்ணா அவர்கள், ரானடேவுக்கு விடுதலை கேட்டார் போப்பாண்டவரின் மூலமாக. போப்பாண்டவரும் போர்த்துகீசிய அரசுக்குப் பரிந்துரை செய்தார்;

ரானடேவும் விடுதலை ஆனார்.[17]

கலைஞரும் வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் செய்தபோது வாடிகனில் போப்பாண்டவரைச் சந்தித்தார். ரானடே விடுதலை செய்யப்பட்டதற்காக நன்றி தெரிவித்தார்.

இலங்கையில் தமிழ் விடுதலை வீரர்களின் வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட இருந்த நேரம்; திடீரெனச் சிங்களவர்கள் சிறையில் இருந்த தமிழ்க் கைதிகளைத் தாக்கினர். துன்புறுத்தினர். ஒருவரின் கண்களை தோண்டி எடுத்துத் தம் காலில் போட்டு மிதித்தனர். பிறருக்குக் 'கொடை' யாக எழுதி வைக்கப்பட இருந்த விழிகள் அவை.

அரசியலோடு கலைத்தொண்டு

சிலப்பதிகாரம் இளங்கோ அடிகளின் கவிதை நாடகப் படைப்பு. கலைஞரின் 'பூம்புகார்' தற்கால நாடகக் கூறுகளைக் கொண்டு யாவரும் வியக்கத்தக்க வகையில் உரை நடையில் எழுதப்பட்டது. இது ஒரு திரைப்படக் காவியமாக மலர்ந்தது. டாக்டர் மு. வரதராசன் அவர்கள் மிக வியந்து பாராட்டுகிறார்.

> "... கண்ணகி, கோவலன், மாதவி ஆகியோரைப் பற்றி உயர்ந்த எண்ணமும் மதிப்பும் மரியாதையும் ஏற்படும் வகையில் படம் அமைந்திருக்கிறது. படத்தில் செய்துள்ள மாறுதல்கள் பாத்திரங்களின் பண்பைக் குறைக்காமல் பாத்திரங்களின் மதிப்பை உயர்த்தியுள்ளன. சின்னஞ் சிறு மாறுதல் என்னும் அலைகளெல்லாம் கடந்து ஒரு பெரிய இலக்கியக் கடலை இத்திரைப்படத்தில் கண்டோம்."
>
> "... குற்றமற்ற படமாகத் தமிழ்த் தொண்டுக்காக எடுக்கப்பட்ட படம் இது" என்று சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் கூறினார்.[18]

திரைப்படங்களில் அழகான கவிதைகள் :

"அவன் பித்தனா ? (1966 ஏப்ரல் 29)
ஒருவர் தேவைக்கே இவ்வுலகு
உண்டென்று கூறுவோர்
உழைத்தும் கூலி கொடார்
உண்ணச் சோறிடார்
. . . . .
ஏமாற்றக் கற்றவர்
ஏமாறி இளைத்தவர்
இவர்களுக்கு மத்தியில்
கொள்கைச் சிங்கங்கள்
கொடுமை கண்டு அஞ்சாத
இலட்சியத் தங்கங்கள்
இவர்கள் அத்தனை பேரும்
பைத்தியக்காரர்கள் என்றால்
நானும் பைத்தியக் காரன்தான்!"

மறக்கமுடியுமா ? படத்தில் அவர் எழுதியிருக்கும் ஓர் இனிய பாடல்.

'காகித ஓடம் கடலலை மேலே போவது போல
மூவரும் போவோம்' என்பதாகும்

சிறைச்சாலை என்ன செய்யும் ?

கலைஞர் பல முறை அரசியல் காரணத்துக்காகச் சிறை சென்றிருக்கிறார். மத்தியச் சிறையில் இருந்ததும் உண்டு. ஒரு முறை போலீஸ் வேன் சிறைமுன் போய் நின்றது. நள்ளிரவாகிவிட்டது. "அகாலமாகிவிட்டதால், மறுநாள் காலையில்தான் எங்களை விழுங்க முடியும் என்று கூறிவிட்டது சிறை!

"சரி, ஏதோ ஓர் இடத்தில் படுங்கள்" என்று சிறைக்கு வெளியே உள்ள ஒரு மண்டபத்தைக் காட்டினர். அதில் யோகாசனங்களும் கராத்தே வித்தைகளும் கற்றவர்களும் தாம் படுக்கலாம். மழைநீர் கணுக்கால் அளவு தேங்கியிருந்தது. நீர்மேல் படுக்கும் பயிற்சி எங்களுக்குக் கிடையாது. ஆகையால் தயங்கி நின்றோம்; கால்வலி எடுக்கும் வரை நின்றோம்."[20]

சிறைச்சாலையில் ஒரு நாள் பேச்சு மன்றம் நடந்தது. நடுவிலே கலைஞர். அப்போது வெள்ளுடை அணிந்த நர்ஸ் ஒருத்தி வந்து, தான் போராட்டத்தில் கலந்துகொண்ட பலருக்கு சிகிச்சை செய்ததாகவும் கூறினாள். பிறகு கவர்ச்சி மிகுந்த அந்த நர்ஸ் என்னிடமே கேட்டாள் 'கருணாநிதி எங்கே என்று! 'நான்தான், என்று கூறினேன். தான் அழைத்துவந்த தன் தந்தைக்கும் அவள் என்னை அறிமுகப்படுத்தினாள்.

"நான் உங்களைக் காதலிக்கிறேன்" என்றாள் நர்ஸ். நான் திடுக்கிட்டேன். பேச்சு மன்றம் கொல்லென்று சிரித்தது. நாணத்தால் தன் தந்தையை அழைத்துக்கொண்டு சென்றுவிட்டாள்.

"என்ன, மூக்கிலே விரலை வைக்கிறீர்கள்? சிறைச் சாலையிலே பெண்கள் எப்படி வந்தார்கள் என்றுதானே. . .

"பேச்சு மன்றத்திலே நடந்த மாறுவேடப் போட்டியின் போது கூடப் பெண்கள் வராமலிருந்தால் சுவைக்குமா என்ன?".

அணில் மீது கருணை

பாளையங் கோட்டைச் சிறையில் இவரைத் தனிமையில் அடைத்திருந்த நேரம் (1965 பிப்ரவரி பதினாறு)

" அந்தக் கோட்டையில் 'சிறுவர்களுக்கான சிறைச்சாலை என்பதால் அங்கே விளையாட்டு அரங்கங்களும் உண்டு. கொட்டடிக் கதவுகளும் திறந்தே இருக்கும்.

"ஆனால் என்னைக் கைதியாக அடைத்துவிட்ட பின்னரோ அந்தச் சிறுவர் சிறைச்சாலையின் திறந்திருந்த கதவுகளும் கூட (அதிகாரிகளின்) உதடுகளைப் போல் இறுக்கி மூடிக்கொண்டு விட்டன; கடுமையான காவலுடன்.[22]

பாளையங் கோட்டையில் ஒரு நாள் காயமடைந்திருந்த ஓர் அணில். அதனைக் கண்டு அவர் ஆறுதல் அடைந்தார். அந்த அணிலுக்கு அவர்

ஒரு தற்காலிகப் புகலிடம் ஆனார். மனிதரைக் கண்டு மகிழ முடியாத சூழ்நிலை, அணில் மகிழ்ச்சி அளித்தது. காகமோ அல்லது வேறு பறவையோ கொத்தியதால் அதன் உடலில் காயம். அதனை ஒரு 'கப்-போர்டில்' படுக்க வைத்தார். அதன் காயங்களைக் கண்டு வருந்தினார்.

அதற்கு உடலில் தான் காயம்,
"என்னைப் போல் உள்ளத்தால் அல்ல
காரணம் அதற்கு அரசியல் தெரியாதே"

அதன் வேதனைக்கு மருந்திட்டார். தின்னப் பழம் கொடுத்தார். ஆயினும் அதற்கு விடுதலையே வேட்கை . . . . ஒரு நாள் அந்த அணிலும் விடுவிக்கப்பட்டது.[22]

கல்லக்குடிப் போராட்டம்

1953-ல் நடைபெற்றது அந்தப் போராட்டம். உயிரையும் பொருட்படுத்தாது ரயில் தண்டவாளத்தில் கலைஞரும் தொண்டரும் படுத்துக் கொண்டனர். பதினாறு ஆண்டுகளுக்குப் பிறகு 1969 இறுதியில் டால்மியாபுரம் ரயில் நிலையத்தின் பெயரை, "கல்லக்குடி - பழங்காநத்தம்" என மாற்றுவதற்கான ஒப்புதலை அளித்தது, மத்திய அரசு![24]

நெருக்கடி நிலை (எமர்ஜென்சி)

ஆட்சி என்பது என்ன? அமெரிக்க ஞானி தோரோ கூறுகிறார் பாருங்கள். "அதிகாரம் குறைந்த அளவில் செலுத்தப்பட வேண்டும்; அதுவே சிறந்த அரசு" என்று ஒரு குறிக்கோள் உண்டல்லவா? அதனை நான் மிகவும் விரும்புகிறேன், வரவேற்கிறேன். அந்தக் குறிக்கோள் இன்னும் முன்னேறி விரைந்தும் முறையோடும் செயல்படுமானால் அது எதில் முடியும் தெரியுமா? "எந்த அரசு அதிகாரம் செலுத்தாமலே ஆட்சி புரிகிறதோ அதுவே சிறந்த அரசு என்று ஆகும்". எப்போது மாந்தர் இதற்கு தகுதியானவர்களாக மாறுகிறார்களோ அப்போது அந்த அட்சி அவர்களுக்கு வாய்க்கும்.

பின்னடைவு

இத்தகைய நிலையை அடைவதற்குப் பதில் இந்தியாவில் நெருக்கடி நிலை (எமர்ஜென்சி) வந்தது. ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்கள் நடத்தி வந்த முழுமைப்புரட்சியை அன்றைய இந்திய அரசு நேரடியாகச் சந்திக்க முடியாமல் போனது. அவருடைய போராட்டங்கள் ஜனநாயக முறையில் அமைந்தவை. இருந்தும் அதற்குப் பதில் கூறும் வகையில் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டது. . . . 1976 ஜனவரி இறுதி நாளன்று தமிழகத்தில் கழக ஆட்சியும் மார்ச் 12 ஆம் நாள் குஜராத் மாநில ஆட்சியும் கலைக்கப்பட்டன. [25]

பத்திரிகை சுதந்திரம்

எமர்ஜென்சி என்றாலே சுதந்திரத்தின் இழப்பு என்றுதான் பொருள். ஒரு மனிதன் சிந்திக்கவும் பேசவும் கருத்தை வெளியிடவும் ஏன் மகிழ்ச்சியோடு கலந்துரையாடும் சமூக வாழ்வு கூட முடியாமல் போகிறது. அவை தவிர்க்கப்படுகின்றன.

தொடுகின்றன. எல்லை மீறல் என்று இப்போது வாய் திறந்து சொல்லக்கூட முடியாது.

இந்தியா முழுவதும் தலைவர்கள், தொண்டர்கள், சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களுக்குச் சொல்ல முடியாத துன்பங்கள் நேர்ந்தன. விரைவில் இந்தியா முன்னேற வேண்டும் என்பதற்கா இந்த நெருக்கடி நிலைமை? கட்டாயத்தால் என்ன செய்ய முடியும்?

யந்திரம் முன்மாதிரியாகுமா?

"மனிதன் என்ன ஒரு யந்திரமா? யந்திரத்தை முன் மாதிரியாக வைத்து ஒரு மனிதனை அதைப் போலவே உருவாக்க முடியாது. அதுதான் மனிதனின் தன்மை. மனித இயற்கை என்பது ஒரு மரத்தைப் போல, அதனுள்ளிருக்கும் ஆற்றலைக் கொண்டு தானே வளர வேண்டும். ஒரு முழுமையான வளர்ச்சி என்பதே அதுதான்" என்கிறார் ஓர் அறிஞர். இது ஒரு சமூகத்திற்கும் பொருந்தும். இதை மறந்ததால்தான் எமர்ஜென்சியின் போது பல துயரங்கள் நேர்ந்தன.

. . . . . ஜனநாயகத்தில் வாய் திறந்து "அய்யோ பசிக்குதே" என்று கூவமுடியும்! சர்வாதிகார ஆட்சியில் அதற்கு வாய் திறக்க முடியாது! காரணம் தலையிருந்தால்தானே வாய் திறப்பதற்கு?[25] என்று மனம் நொந்து கூறுகிறார் கலைஞர்.

வால்டேரை ஒரு பத்திரிகை நிருபர் கேட்டார் "நீங்கள் முடியாட்சியைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்" என்று, வால்டேர் கூறினார், "மார்க்கஸ் அரேலியஸ் (121 - 180 கி.பி. ரோமானிய அரசர், தத்துவவாதியும் கூட) போன்றவர்கள் ஆள்வதென்றால் முடியாட்சியே சிறந்தது. அப்படி இல்லை என்றால், பாவம் அந்தக் குடிமகனை ஒரு சிங்கம் விழுங்கினால் என்ன? அல்லது நூறு எலிகள் விழுங்கினால் என்ன? என்ன வேறுபாடு இருக்கப் போகிறது?" பிற்காலத்தில் குடியரசினையே சிறந்த ஆட்சிமுறை என்று கருதினார் வால்டேர்.

முரசொலியில் செய்திகள் வருமுன் அவற்றைத் தணிக்கை அதிகாரிகளுக்கு அனுப்ப வேண்டும். அங்கீகாரம் பெற வேண்டும். அறிஞர் அண்ணா என்று எழுதக் கூடாது. பெருந்தலைவர் காமராசர் என்பதும் கூடாது. அடைமொழிகள் இன்றி அண்ணா, காமராசர் என்றுதான் எழுத வேண்டும்.

கருணாநிதி என்ற பெயரில் கட்டுரை வரக்கூடாது; 'உடன் பிறப்புக்குக்' கடிதங்கள் எழுதக் கூடாது என்று தணிக்கை அதிகாரிகள் கூறினர். ஆகவே கரிகாலன் என்ற புனைபெயரில் கேள்வி பதில் தொடங்கப்பட்டது. அதற்கும் தணிக்கை உண்டு.

"கேள்வி : மக்களிடையே இன்னமும் ஒரு சாரார் பேய், பூதம் பிசாசுகள் இருப்பதாக நம்புகிறார்களே அதைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?

பதில் : பேய், பூதம், பிசாசு என்று கூறுவது கற்பனை!. ஏற்றுக் கொள்வது மூடநம்பிக்கை. பேய், பிசாசுகள் இல்லை என்பது

பற்றிப் பகுத்தறிவுச் செம்மல், மா. சிங்கார வேலர் எழுதியுள்ள நூலை வாங்கிப் படிக்கவும்.

இந்தக் கேள்வி பதிலுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. தொலைபேசியில் மறுப்புக்குக் காரணம் கேட்டதற்கு "நீங்கள் பேய், பிசாசு, பூதம் என்று எழுதும்போது அது மறைமுகமாக இந்திரா காந்தியை குறிக்கிறது என்று நாங்கள் கருதுகிறோம்" என்றனர் தணிக்கையாளர்.

இதற்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியாமல் தவித்தார் கலைஞர். மக்களுக்கு எது பிடிக்கிறதோ அதிலிருந்து அவர்களைத் திசை திருப்ப வேண்டும். எது அவர்களுக்கு விருப்பமாக உள்ளதோ அதை அவர்களுக்குக் கிடைக்காமல் செய்ய வேண்டும். எந்தத் தேவையும் எட்டாத தொலைவில் சென்று ஏக்கம் உண்டாக்க வேண்டும். அப்போது அவர்கள் மனம் அந்த இடத்திலேயே தேங்கிவிடும்.

ஒருமுறை இப்படித்தான் எகிப்து மீது படையெடுத்து வந்திருந்தான் சீசர். அவனுடைய கப்பலிலிருந்து பரவிய தீயினால் அலெக்சாண்ட்ரியா எனும் நூலகம் தீப்பற்றிக் கொண்டது. அதை எப்படியாகிலும் தீயிலிருந்து காப்பாற்றியாக வேண்டும் என்ற ஆர்வத்தோடு வருந்திக் கூக்குரலிட்டு தலைமுடியைப் பிய்த்துக் கொண்டு சீசரிடம் ஓடி வருகிறான் தியோடோட்டஸ் என்னும் வரலாற்று ஆசிரியன்.

தியோடோட்டஸ் : உங்களுடைய கப்பலிலிருந்து தீ பரவுகிறது. உலகின் ஏழு அதிசயங்களிலே முதலாவதான அலெக்ஸான்டிரியா நூலகம் அழிந்து கொண்டு இருக்கிறது; தீயினால் எரிந்து கொண்டிருக்கிறதே!

சீசர் : நானும் ஒரு வரலாற்றாசிரியன் தான். புத்தகங்களின் துணையினால் கற்பனை செய்து கொண்டிருப்பதைவிட இந்த எகிப்தியர்கள் தாமே வாழக் கற்றுக் கொள்ளட்டும்.

தியோ : (மண்டியிட்டபடி) பத்துத் தலைமுறைக்கு ஒரு முறைதான் ஒரு அழிவில்லாத புத்தகம் இந்த உலகிற்குக் கிடைக்கிறது.

சீசர் : ஒரு பக்கட் தண்ணீர் கூட ஊற்ற முடியாது. ஏதோ சில ஆட்டுத் தோல்களில் பிழைகளைப் பற்றிக் கவலை இன்றிக் கிறுக்கப்பட்ட அவற்றிற்காகவா உன் முதுமை விழிகளிலே கண்ணீர்!. . . . நிற்காதே - மனித சமுதாயத்தின் நினைவுகள் அங்கே எரிந்து கொண்டிருக்கும்போது இங்கே நின்று பேசிக் கொண்டே இருக்கப்போகிறாயா?

தியோடோட்டஸ் ஓடுகிறான். சீசரும் போருக்கு ஆயத்தமாக வெளியேறிச் செல்கிறான். அப்போது அங்கே எகிப்திய சேனை முழுவதுமே துறைமுகத்தின் மேற்கே கூட்டம் கூட்டமாக வெட்டுக்கிளிபோல மொய்த்துக் கொண்டு தண்ணீரை மொண்டு அலெக்சாண்ட்ரியா நூலகத்தின் தீயை

அணைத்துக் கொண்டிருக்கிறது. அதைப்பார்த்த சீசர் தன்னுடைய புத்திசாலித்தனத்துக்கு தானே மகிழ்ந்து கொள்கிறான்.[27]

வரலாற்றில் நிகழ்ச்சிகள் மட்டுமா, படிப்பினைகளும் இருக்கின்றன.

கலைஞரின் வரலாற்றில் அறிந்துகொள்ள வேண்டிய செய்திகள், சிந்தனைகள், புள்ளி விவரங்கள் ஏராளமாக உள்ளன. ஆய்வுக் கட்டுரை ஒன்றின்மூலம் இவற்றையெல்லாம் கொண்டு வந்து முன் நிறுத்திட முடியுமா என்ன ?

செஸ் வியைாட்டைப் போலவேதான் ஆய்வுக் கட்டுரை எழுதுவதும். ஆட்டத்தின் தொடக்கத்தில் எல்லாக் காய்களும் வரிசை குறையாமல் இடம் மாறாமல் நிற்கின்றன. ஆனால் ஆட்டத்தின் முடிவில் இங்கொன்றும் அங்கொன்றுமாக காய்களும் குறைந்து காணப்படுகின்றன. அதுவே ஆட்டத்தின் முடிவு என்று கருதப்படுகிறது. காய்கள் குறைந்திருந்தாலும் இடம் மாறினாலும் அவற்றின் தகுதியை அவை இழப்பதில்லை.

அடிக்குறிப்புகள்

01.	கலைஞர் மு. கருணாநிதி நெஞ்சுக்கு நீதி	தொகுதி-2	ப.	02
02	”		ப	05
03.	”	தொகுதி I	ப.	73
04.	”	தொகுதி II		
05.	”	”	ப.	53-55
06.	”	”	ப.	75
07.	”	”	ப.	391
08.	”	”	ப.	488
09.	”	தொகுதி II	ப.	130
10.	”	”	ப	62
11.	”	”	ப	.302-306
12.	”	”	ப.	414-420
13.	”	தொகுதி I	ப.	108
14.	”	”	ப	754-755
15.	”	”	ப.	150
16.	”	”	ப.	151
17.	”	தொகுதி II	ப.	105
18.	”	தொகுதி I	ப.	302
19.	”	”	ப.	639-640
20.	”	”	ப.	216
21.	”	”	ப.	237-238
22.	”	”	ப.	572
23.	”	”	ப.	574
24.	”	தொகுதி II	ப.	215
25.	”	தொகுதி III	ப.	53
26.	”	தொகுதி II	ப.	548
26.	” பெர்னாட்ஷா-சீசரும் கிளியோபாட்ராவும்			

3 கலைஞரின் தன் வரலாறு

முனைவர் பா. மாசிலாமணி,

"நெஞ்சுக்கு நீதி " என் வாழ்க்கை வரலாறு எனக் கூறப்பட்டாலும், எனக்கென்று ஒரு தனி வாழ்க்கை கிடையாது. ஒரு இலட்சியத்தை மையமாகக் கொண்டு சுழலும் இயக்கத்தின் வரலாற்றில் நான் ஒரு பகுதி' என்று கலைஞர் குறிப்பிடுவது சரிதான் என்றே படுகிறது.

அதனால்தான் நாவலர் அவர்களும், " இது கலைஞருடைய வரலாறு என்பதைவிட, முப்பத்தைந்து ஆண்டு காலத் தமிழக அரசியல் வரலாற்றையே அவர் தெளிவாக நமக்குத் தந்திருக்கின்றார். வரலாறு எழுதுவதற்குத் தகுதி வேண்டும். திறமை வேண்டும். மக்களுடைய இதயத்தில் குடியேறியவர்கள் யாரோ, அவர்கள் எழுதுகிற வாழ்க்கை வரலாற்றைத்தான் மக்கள் படிக்க விரும்புகிறார்கள். 'நெஞ்சுக்கு நீதி' நூலில் அவருடைய வரலாறு என்பது மிகவும் குறைவு. இயக்கத்தோடு நெருங்கிச் சேர்ந்து வளர்ந்ததாலே, இயக்கத்தின் வரலாறுதான் அவருடைய வரலாறே தவிர, அவருக்கென்று தனித்த வரலாறு இல்லை" [2] என்று குறிப்பிடுகிறார்.

பேராசிரியர் அவர்கள் குறிப்பிடும்போது, " கலைஞர் அவர்கள் தன்னுடைய வரலாறு என்று எண்ணிக்கொண்டு எழுதினாலும், அது இந்த நாட்டின் வரலாறாக, மொழியின் வரலாறாக இருக்கிறது. அவருடைய வரலாறு ஒரு தனி வரலாறாக இருக்க முடியாத நிலை பெற்று ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டு காலமாகிறது"[3] என்கிறார்.

தி.மு.க. தலைவர்களில் அறிஞர் அண்ணா தன்வரலாறு எழுதவில்லை. அவர் எழுதி வைத்திருந்த குறிப்புகளின் அடிப்படையில் அவர் மகன் டாக்டர் பரிமளம் அவர்கள் அண்மையில் ஒரு வரலாற்று நூலை வெளியிட்டிருக்கிறார். அது அண்ணாவின் தன் வரலாறு ஆகாது. திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் கழகத்தில் இருந்த போது 'நடிகன் குரல்' என்ற ஏட்டில் எனது 'வாழ்க்கைப் பாதை' என்று எழுதி வந்தார். பின்னர் அதையே ஆனந்தவிகடனில், 'நான் ஏன் பிறந்தேன் ?' என்ற தலைப்பில் தொடர்ந்து எழுதினார். அதுவும் முற்றுப்பெறவில்லை. கழகத்தில் இருந்து பிரிந்த பின்னர் கவிஞர் கண்ணதாசன் தன் வரலாற்றை 'வனவாசம்' என்ற பெயரில் வெளியிட்டார். அதில் அவர் தி.மு.க. வில் இருந்த காலத்தை வனவாசம் என்று குறிப்பிட்டிருந்தார். அடுத்து 'மனவாசம்' எழுதினார். அதுவும் முற்றுப்பெறவில்லை. தன் கடைசி காலத்தை 'அஞ்ஞாதவாசம்' என்ற தலைப்பில் எழுதப் போவதாக அறிவித்திருந்தார். அது தொடங்கப் பெறாமலேயே போய்விட்டது.

எனவே தி.மு.கழகத்தில் தன் வரலாறு எழுதிவரும் ஒரே தலைவர் கலைஞர் கருணாநிதிதான் என்பது தெளிவாகிறது.

'நெஞ்சுக்கு நீதி' பற்றிக் கலைஞர் குறிப்பிடுகிறார் :

" முதல் பாகம், நான் பிறந்த 1924 ஆம் ஆண்டு முதல், 1969 வரையிலான என் வாழ்க்கை வரலாற்றையும், என் வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்த இயக்க வரலாற்றையும், மற்றும் உலக வரலாற்றுக் குறிப்புகளையும் உங்களுக்குச் சுட்டிக் காட்டுவதாகும்."

''1969 முதல் 1976 வரை ஏழாண்டுக் கால வரலாற்றுக் குறிப்புகளையும், என் வாழ்க்கைக் குறிப்புகளையும் தொகுத்து அளிப்பதுதான் 'நெஞ்சுக்கு நீதி' இரண்டாம் பாகமாகும்."

"1976க்குப் பிறகு, 1991 வரையிலான 15 ஆண்டுக்கால, சரித்திர நிகழ்வுகளை நினைவூட்டுவதுதான் 'நெஞ்சுக்கு நீதி' யின் மூன்றாம் பாகமாகும்."[4]

தன் வரலாற்றின் கடைசிப் பகுதியான நான்காவது பாகத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது கலைஞர், ''நாலாவது பாகத்தை நானே எழுதுவேனோ அல்லது நான் எழுதாமலே நாட்டு மக்கள் இதயத்தில் இந்த வரலாற்றுக் குறிப்புகள், வரிகளாக வடிவங் கொள்ளுமோ, என்பதை நிர்ணயிக்கப் போவது இயற்கைதானே"[5] என்கிறார். நான்காவது பாகத்தை எழுதப் போவது கலைஞர்தான் என்று இயற்கையன்னை கூறுவது நம் காதுகளில் கேட்கின்றது.

"வாழ்க்கையை ஒரு போராட்டம் என்று வர்ணிப்பார் உள ர். எனக்கோ போராட்டமே வாழ்க்கையாகிவிட்டது."

"மீனைச் சுவைத்துச்சாப்பிடும்பொழுது, அதன் முள் நாவில் குத்தி விடுவதுண்டு. அதனால் சிறிது ரத்தமும் கசிவதுண்டு. அதைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து மீன் துண்டுகளைச் சுவைப்போரைப் பார்த்திருக்கிறோம்.

"சில பேருக்கு மீனின் முள், தொண்டையிலே அடைத்துக் கொண்டு, அவஸ்தைப்படுவதும் உண்டு.

"என் வாழ்வு, இதில் இரண்டாவது வகை . . . .

"ஒய்வெடுத்துக் கொள்க' என்று சில எதிர்க்கட்சி நண்பர்கள் கேலியாகக் கூறினர். 'ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வு கொண்டிருக்கிறான்' என்று என் கல்லறையின் மீதுதான் எழுதப்படும் என்று பதில் சொன்னேன்"[6] என்கிறார் கலைஞர்.

"ஒரு பெரிய சகாப்தம் ஆரம்பமாகி அதனைத் தொடங்கிய சரித்திர நாயகன் மறைந்து போயிருக்கிறான். ஆனால் அந்தச் சரித்திரம் மறையாது. என்னை நூலாக வைத்துக் கொண்டு அந்தச் சரித்திர முத்துக்களைக் கோத்திடப் போகிறேன்."

"என்னை வெறும் நாராக வைத்துக் கொண்டு அந்த வரலாற்று வேந்தனின் புகழ் மலர்களைத் தொடுத்து மாலையாக்கப் போகிறேன் . . ."

"அவனவனும் தன் நெஞ்சுக்குத் தனக்குத்தானே நீதி வழங்கிக் கொள்ள வேண்டும். அதைப்போலவே ஒரு சமுதாயம், ஒரு கட்சி, ஒரு கூட்டம், தாங்கள் செய்யும் நல்லவைகளுக்கோ அல்லது தீயவைகளுக்கோ தங்கள் நெஞ்சுக்கு நீதி வழங்கிக்கொள்ளப் பழக்கப்பட்டாக வேண்டும்"[7] என்று குறிப்பிடும் கலைஞர், தம் வரலாற்றுக்கு 'நெஞ்சுக்கு நீதி' என்று பெயரிட்டதற்கான காரணத்தையும் அழகுற விளக்கிக் கூறிவிடுகிறார்.

முதல் பாகம்

'நெஞ்சுக்கு நீதி' முதல்பாகத்தில் கலைஞர் தாம் பிறந்த 1924 ஆம் ஆண்டைப் பற்றிய அழகான செய்திகளைத் தொகுத்துக் கூறுகிறார்.

இருபதாம் நூற்றாண்டு எப்படியிருக்கும் என்பதை வரலாற்று ஆசிரியர்கள் ஓரளவு தெளிவுபெற்ற காலம். உலகப்போரில் மக்கள் செத்து மடிந்ததைக் கண்ட காலனிமக்கள், ஏகாதிபத்திய வெறியர்களை எதிர்க்கக் கிளம்பிய காலம், தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த காலம், நிலப் பிரபுத்துவமும், ஜமீன்தாரி முறையும் தனது கடைசி மூச்சை வெளியிட்டுக் கொண்டிருந்த காலம். இந்தியாவின் தெற்குப் பகுதியில் சமுதாய நீதிக்கும், சமூகப் புரட்சிக்கும் ஏறக்குறைய கால்கோள்விழா நடத்திய நேரம். இந்தியா நீண்ட உறக்கத்தைக் களைந்து சிலிர்த்துக் கொண்டு எழுந்து நின்ற நேரம் என்று அந்த 1924ஐப் பற்றிக் கலைஞர் சுருக்கிக் கூறுகிறார்.

1924-இல் உருவான திட்டம்தான் இன்று தந்தை பெரியாரை வைக்கம் வீரராக மாற்றியது. தமிழ்த்தென்றல் திரு.வி.க. ஏகாதிபத்தியத்திற்குச் சண்டமாருதமாக மாறியது இந்தக் காலத்தில்தான். தொழிலாளர் இயக்கம் தமிழகத்தில் வேரூன்றத் தலைப்பட்டதும் இந்த நாள்களில்தான் என்ற கருத்து முத்துக்களைக் கலைஞர் கோத்துக் காட்டுகிறார்.

இவற்றை எல்லாம் குறிப்பிடும் கலைஞர், "1924 ஐப் போல கேள்விக்குறியாக இருபதாம் நூற்றாண்டில் எந்த ஆண்டும் இருக்கவில்லை. அந்த ஆண்டில் பிறந்த காரணந்தான் போலும் நானும் வாழ்நாள் முழுதும் பலருக்குக் கேள்விக் குறியாக இருந்து வருகிறேன்"[8] என்கிறார்.

தாம் பிறந்த வருடத்தைக் குறிப்பிடும் போது கூட, உலக வரலாற்றையும், தமிழக வரலாற்றையும் ஏன் இந்திய வரலாற்றையும் அவர் மறக்கவில்லை என்பதையே இது காட்டுகிறது.

முதல்பாகத்தில் தம் தந்தையின் பிறப்பைப் பற்றிக் குறிப்பிடும் கலைஞர், "குளக்கரையில் அழுதுகொண்டிருந்த திருஞானசம்பந்தருக்குப் பார்வதி வந்து பால் கொடுத்துப் பசி தீர்த்தாள் என்பது கதைதானே தவிர, நடைமுறை அல்ல"[9] என்று புராணீகர்களைக் குட்டவும் மறக்கவில்லை. யாருடைய ஆதரவும் மிகுதியாக இல்லாத நிலையில்

கலைஞரின் தந்தை அனைவரையும் கண்டிக்கும் ஆற்றல் பெற்றிருந்தார்.

தாயைப் பற்றிக் குறிப்பிடும் போது, "எங்கள் அன்புத் தெய்வம் - எங்களைப் பெற்று வளர்த்த பெருமாட்டி - எறும்பு போல உழைத்து எங்களை ஆளாக்கிவிட்ட தங்கம் - 'அம்மா' என்று வாய் நிறைய அழைத்து, அந்த அழைப்பிலே இன்ப சுகம்கண்டு - அமைதி தவழும் பெரும் குடும்பத்தைக் கட்டிக் காக்கும் வலிமையை, உள்ள வளத்தை எமக்களித்த எங்கள் அருமருந்தன்ன தாய் ! "[10] என்கிறார் கலைஞர்.

பிள்ளை வயதில் பல புரட்சிகளைச் செய்தவர் கலைஞர். உயர்வு, தாழ்வு கற்பிக்கப்பட்ட இடத்தில் இசைப்பயிற்சி பெறவும் விரும்பாதவர். பள்ளிக்கூடங்களில் இந்தியை எதிர்த்துப் போராடியவர்.சாதிக் கொடுமைகளைக் கண்டு கொதித்தவர். அதனால்தான், "மேல்சாதி இனங்களிலிருந்து புறப்படும் எண்ணங்கள் புண்ணுக்குப் புனுகு பூசும் வேலையைத்தான் செய்து கொண்டிருந்தன. பிற்படுத்தப்பட்ட கும்பலிலேயிருந்து கிளம்பும் புரட்சிக் குரல்கள் ஆறாத புண்ணை அறுவைமுறையினால் சுகப்படுத்தும் சக்தி பெற்றவை . . . . ஒடுக்கப்பட்ட இனத்திலிருந்து புறப்படுகிறவன் இழிவு துடைக்க ஆவேசமாகப் புறப்படுகிறான் "[11] என்று கூறுகிறார்.

'மாணவ நேசன்' என்றொரு கையெழுத்து ஏட்டினைப் பதின்மூன்று வயதில் நடத்தியவர் கலைஞர். 'தமிழ் மாணவர் மன்றம்' அமைத்துத் தொண்டுகள் புரிந்தார். சொற்பொழிவாளர்களுக்குப் பணம் கொடுக்கத் தாயின் தங்கச் சங்கிலி திருடியதையும், மனைவிக்குப் பரிசாக வந்த சந்தனக் கிண்ணத்தைத் திருடி அடகு வைத்த கதையையும் கூட கலைஞர் மறைக்கவில்லை. பள்ளி இறுதி வகுப்பைக் கூட அவரால் முடித்திட இயலவில்லை. தேர்வில் தோற்று வீட்டை விட்டு ஒடித்திரிந்து பின்னர் 'முரசொலி' கண்ட கதையைச் சுவையாகக் கூறுகிறார். கலைஞரின் முதல் புத்தகம் 'கிழவன் கனவு', அதன் விலை அப்போது மூன்றணாதான். முரசொலி சார்பாக அவ்வப்போது துண்டு அறிக்கைகளையும் வெளியிட்டு வந்தார்.

அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமியின் வீர உரையினைக் கேட்ட பின்னர்தான், தான் கருணாநிதி ஆனதாகக் கூறுகிறார் கலைஞர்.[12]

அறிஞர் அண்ணாவின் 'திராவிடநாடு' இதழில் 'இளமைப்பலி' என்ற கட்டுரையைக் கலைஞர் எழுதினார். அடுத்து அவர் எழுதிய 'பகுத்தறிவு பரமசிவம்' கட்டுரையை அண்ணா பதிப்பிக்கவில்லை. கலைஞரை நேரில் அழைத்து நன்றாகப் படிக்கும்படி பணித்தார். 'பழநியப்பன்' என்ற நாடகமே கலைஞரால் முதலில் எழுதப்பட்டதாகும். அதுவே பின்னர் 'சாந்தா அல்லது பழனியப்பன்' என்றும், 'நச்சுக்கோப்பை' என்றும் நடத்தப்பட்டது.13

1944 இல் சுயமரியாதைத் திருமணமாக நடந்த அவரின் முதல் திருமணத்திற்கு வாழ்த்துச் சொல்ல ஆறுமைல் நடந்தே வந்த நாவலரின் பண்பையும் கலைஞர் குறிப்பிடத் தவறவில்லை.[14] மனைவியைக் காக்க நாடக நடிகனாகவும் ஆகிறார். தான் எழுதும் நாடகத்தில் மட்டும் நடிப்பது என்று உறுதி கொண்டார்.

புதுச்சேரியில் அடிபட்டக் காரணத்தால் நெஞ்சு நெகிழ்ந்த பெரியார் கலைஞரைத் தன் 'குடியரசு' ஏட்டில் துணை ஆசிரியராகச் சேர்த்துக் கொண்டார். குடியரசு ஏட்டில் கலைஞர் எழுதிய 'அண்ணாமலைக்கு அரோகரா' கட்டுரை பெரியாரின் பாராட்டைப் பெற்றது. அடுத்து 'தீட்டாயிடுத்து' என்ற துணைத்தலையங்கமும் பெரியாரைக் கவர்ந்தது. ஓராண்டுக் காலம் குடியரசு ஏட்டில் பணியாற்றிய பின்னர் கோவை ஜூபிடர் நிறுவனத்தின் 'ராஜகுமாரி' படத்திற்கு வசனம் எழுதப் பெரியாரிடம் அனுமதி பெற்றுக் கிளம்பினார்.

முத்தான மகனைப் பெற்ற பின்னர் கண்ணை மூடிய பத்மாவதியின் இறுதி மூச்சு விடைபெற்ற போது கலைஞர் அருகில் இல்லை. புதுக்கோட்டைக்குச் சென்று விட்டார், கொள்கை முழக்கமிட. திரும்புகையில் மனைவியின் மூச்சு நின்றிருந்தது. "என்னுடையவளின் நெற்றியில் முத்தமிட்டேன். அவளுக்குத் தர அந்த ஒன்றுதான் என்னிடமிருந்தது"[15] என்று அந்த நிகழ்ச்சியைக் கலைஞர் நெகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறார்.

கலைஞரின் இரண்டாவது திருமணம் 1948 செப்டம்பர் 15-இல் நடைபெற்றது. அந்தத் திருமணத்திற்கு கலைஞரே தலைமையேற்கும்படி ஆயிற்று. 1948 அக்டோபர் 23, 24 ஆகிய நாள்களில் இந்தி எதிர்ப்பு மாநாடு ஈரோட்டில் நடைபெற்றது. பெரியாரும், அண்ணாவும் கலந்து கொண்ட அந்த மாநாட்டில்தான் தந்தை பெரியார், 'பெட்டிச் சாவியை அண்ணா கையில் கொடுத்துவிட்டேன்' என்று அறிவித்தார். திரு. வி.க.வும் அந்த மாநாட்டில் கலந்து கொண்டார். அழகிரி கலந்து கொண்ட இறுதி மாநாடாக அது ஆயிற்று.

பெரியார் மணியம்மையாரை 1949 ஜூலைத் திங்கள் 9ம் நாள் திருமணம் செய்து கொண்டார். யார் தடுத்தும் கேளாமல் பெரியார் செய்து கொண்ட இந்தத் திருமண ஏற்பாட்டால் மனம் வெறுத்து அறிஞர் அண்ணாவின் தலைமையில் வெளியேறிய தலைவர்களின் இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

'ஆரியமாயை' எழுதிய அண்ணாவுக்கும், 'பொன்மொழிகள்' தீட்டியதற்காகப் பெரியாருக்கும் அரசாங்கம் சிறைத் தண்டனை அளித்தது. ஒரே சிறையில் இரு தலைவர்களும் இருக்க நேர்ந்தது.

1949-ஆம் ஆண்டு, சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத்தில் மாதம் 500 ரூபா ஊதியத்தில் கலைஞர் எழுத்தாளனாக அமரும் வாய்ப்பைப் பெறுகிறார். அங்குதான் அவருக்குக் கண்ணதாசன் நட்பு கிட்டுகிறது. கலைஞரின் நட்பால் ஈர்க்கப்பட்ட கவிஞர் கழகத்தில் ஐக்யமாகிறார். பொள்ளாச்சி கூட்டம் தான் அவர் பேசிய முதல் கழகக் கூட்டம்.

'மந்திரிகுமாரி', 'மணமகள்' முதலிய படங்கள் கலைஞரின் கைவண்ணத்தால் ஒளிபெறுகின்றன. சேலத்தில் இருந்த கலைஞரைச் சென்னைக்கு வரவழைத்ததே கலைவாணர்தான்.

"கலையுலகம் கண்டெடுத்த நல்முத்து அவர். உழைப்பால் உயர்ந்த உத்தமர். கலையுலகத்திற்குக் குளிர்தருவாக அவர் இருந்தார். ஏழை எளியவர்களின் பக்கம் அவரது கொடைக்கரம் நீண்டு கொண்டேயிருந்தது. வறுமைச் சகதியில் அமிழ்ந்து வேதனைகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் அழுது கொண்டு இருந்த மனிதனையும் அவர் சிரிக்க வைத்தார். . . . பிறரின் துன்பங்களைத் தனக்குற்ற துன்பம் போல் கருதிக் கொண்டார்."

"தன்னைத் தாக்குவது பற்றியோ, தனது புகழுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்வது பற்றியோ, பத்திரிகைகளில் எழுதுவது பற்றியோ, கலைவாணர் கவலைப்படவில்லை. அந்த எதிர்ப்புகளைச் சிரித்துச் சிரித்துச் சமாளித்துக் கொண்டார். ஈனத்தனமான எதிர்ப்புகள் வரும்போதும், மறைமுகமான தாக்குதல்கள் வரும்போதும் அண்ணா காட்டிய மௌனமும், கலைவாணர் காட்டிய சிரிப்பும் இன்றைக்கும் என்னால் மறக்க முடியாதவைகளாகும். அத்தகைய எதிர்ப்புக்கள் என்னை நோக்கி வருகிற நேரத்தில் நான் அண்ணாவையும் கலைவாணரையும்தான் எண்ணிக்கொள்கிறேன்"[16] என்று கலைஞர் அவர்கள் குறிப்பிடுகிறார்.

சேலத்தில் ஓர் ஊராட்சி மன்றத்தில் அண்ணாவின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்ததுதான் கலைவாணர் கலந்து கொண்ட கடைசிப் பொது நிகழ்ச்சி. அதுபோல அணணாவினுடைய கடைசிப் பொதுநிகழ்ச்சி கலைவாணர் சிலையைச் சென்னையில் திறந்து வைத்ததுதான். அரசியல் தலைவனுக்கும், கலையுலகத் தலைவனுக்கும் இடையே இப்படிப்பட்ட தொடர்பு இருந்திருக்கிறது.

கே.வி.கே. சாமி கொலையுண்டபோது மனம் தாங்காமல் காவியம் எழுதிக் கண்ணீர் வடித்தார் கலைஞர்.

1952-ம் ஆண்டு இந்தியாவில் முதல் பொதுத்தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் கழகம் கலந்து கொள்வதில்லை என்று தீர்மானித்தது. 1951-ம் ஆண்டு சென்னையில் தி.மு.கழகத்தின் முதல் மாநில மாநாடு நடைபெற்றது. 1952 தேர்தலில் காங்கிரசு முழு வெற்றி பெறவில்லை. ராஜாஜி, ராமசாமி படையாச்சி, மாணிக்கவேலர் போன்றவர்களை இணைத்துக் கொண்டு அரசு அமைத்து முதல்வரானார்.

ராஜாஜி ஆட்சிக் காலத்தில்தான் கல்லக்குடிப் போராட்டம், நேருவுக்குக் கறுப்புக்கொடி, குலக்கல்வித் திட்ட எதிர்ப்பு போன்ற போராட்டங்களைக் கழகம் நடத்தியது.

1956-ல் தி.மு.கழகம் திருச்சியில் தன்னுடைய மாநில மாநாட்டை நடத்தியது. கழகப் பொதுச் செயலாளர் நாவலர் அவர்கள் தலைமையேற்றார்.

அவரைப்பார்த்து அண்ணா, "தம்பி வா! தலைமையேற்க வா. உன் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறோம் வா" என்றார். கழகம் 1957 பொதுத் தேர்தலில் கலந்து கொள்ள வேண்டுமா ? வேண்டாமா ? என்று அங்கு வாக்கெடுப்பு நடைபெற்றது. இலட்சக்கணக்கானோர் கலந்து கொள்ள வேண்டும் என்று வாக்களிக்கவே தங்கள் கழகம் தேர்தலில்

பங்கேற்கும் என்று அண்ணா அறிவித்தார். கழகச் சார்பில் 112 இடங்களில் போட்டியிட்டு, 15 பேர் வெற்றி பெற்றனர். சேலத்தில் நின்ற நாவலர் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிக்கான வாய்ப்பினை இழந்தார்.

1961 ஏப்ரல்திங்கள் ஒன்பதாம் நாள் தோழர் சம்பத் கழகத்தை விட்டு விலகினார். தமிழ் தேசியக் கட்சி கண்டார். இதனை அடுத்து வந்த 1962 தேர்தலில் போட்டியிட்டுக் கழகம் 50 இடங்களைப் பிடித்தது.

கழகத்திற்கு ஏற்படும் சோதனைகள் குறித்துக் கலைஞர் "ஏறத்தாழப் பத்தாண்டுகளுக்கு ஒருமுறை கழகத்திற்கு ஒரு சோதனை ஏற்படுவதுண்டு. அறுபதாம் ஆண்டில் விளைவிக்கப்பட்ட துரோகப் பயிர் கழகம் என்னும் களிற்றின் கால்பட்டு மிதிபட்டு அழிந்து போயிற்று. . ." எனக்குறிப்பிடுவார்.

"எரிச்சல் கொண்டோர், ஏமாற்றமடைந்தோர், எகத்தாளம் செய்வோர், சிண்டு முடிவோர், சீறிப்பாய்வோர், சிறுமதியாளர், பண்புகள் அற்றோர், பதவிப்பித்தர், நன்றி மறந்தோர், நரிக்குணம் கொண்டோர், மிரள விழிப்போர், மிரட்டிப் பார்ப்போர் இத்தகையோரின் எழுத்தும், பேச்சும், கணையும், கண்டனமும் கழகத் தோழர்களின் அலட்சியச் சிரிப்புக்கு முன் காய்ந்த புல்லின்மீது தீப்பட்டது போல ஆயிற்று."[17]

1962 தேர்தலில் அறிஞர் அண்ணா அவர்கள் வெற்றிக்கான வாய்ப்பினை இழந்தார்கள், வெற்றி விழாக் கூட்டத்தில் பேசிய அண்ணா, "ஆளைத் தேள் கொட்டினால் 'ஆ' என்று அலறுகிறான். அதனால் ஆளைவிடத் தேள் பெரியது என்று யாரும் சொல்ல மாட்டார்கள். அதைப்போல நான் தோற்றதால் தோல்வி என்னை அமுத்திவிடும் என்று யாரும் கருதாதீர்கள்"[18] என்று குறிப்பிட்டார்.

அடுத்து மாநிலங்கள் அவைக்கு அண்ணா தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் தம் கன்னிப்பேச்சில், 'தெருவோரத்து மனிதர்களின் பிரதிநிதியாக நான் வந்திருக்கிறேன்' என்று குறிப்பிட்டார்

பிரிவினைவாதத் தடைச்சட்டம் வந்தபோது, அண்ணா அவர்கள் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டார். அடுத்து இந்தி எதிர்ப்புப் போரில் கழகம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. நேருவிடமிருந்து உறுதிமொழியையும் பெற்றது.

1967 தேர்தலுக்கு முன் விருகம்பாக்கத்தில் கழக மாநாடு நடைபெற்றது. அதில் கழக வேட்பாளர் பட்டியலை அண்ணா வெளியிட்டார். தேர்தல் முடிவில் கழகம் 138 இடங்களைப் பிடித்து வெற்றி கண்டது. அண்ணா முதல்வர் ஆனார். முதல்வர் ஆனதும் பெரியாரைச் சந்தித்த அண்ணாவிடம் பெரியார், "என்னைக் கூச்சப்பட வைத்து விட்டீர்கள்"[19] என்று கூறினார்.

அண்ணா பதவியேற்றதும் சென்னைக்குத் 'தமிழ்நாடு' என்று பெயரிட்டார். சுயமரியாதைத் திருமணங்களைச் செல்லுபடியாக்கினார். ரூபாவுக்குப் படியரிசித் திட்டத்தை கொண்டுவந்தார். ஏழைகளுக்கு

எரியாத வீடுகட்டித் தந்தார். இருமொழிக் கொள்கையை அமுல்படுத்தினார். குடிசை மாற்று வாரியம் அமைத்தார். சீரணிப்படை அமைத்தார். தமிழுக்கு ஏற்றம் தர உலகத்தமிழ்மாநாடு கண்டார். கூவத்தைச் சீரமைக்கத் திட்டமிட்டார். வீராணம் திட்டம் கொண்டு வரப்பட்டது.

பதவியேற்றதும் அமெரிக்க நாடு அண்ணாவை அழைத்து டாக்டர் பட்டம் கொடுத்துக் கௌரவித்தது. 'யேல்' பல்கலைக்கழகத்தில் திருக்குறள் வகுப்பு நடத்தினார் அண்ணா. இரண்டாண்டுகளில் அண்ணா நோய்வாய்ப்பட்டார். 3.2.69 அன்று அண்ணா இயற்கை எய்தினார்.

அண்ணாவின் மறைவினால் கலங்கிய கலைஞர் அவர்கள் எழுதிய கண்ணீர்க் கவிதையோடு நெஞ்சுக்கு நீதி முதல்பாகம் நிறைவை எய்துகிறது.

. . . .
உன் கண்ணொளியின் கதகதப்பில் வளர்ந்தோமே
என் கண்ணெல்லாம் குளமாக ஏன் மாற்றிவிட்டாய்?
. . . .
கடலடியில் இருக்கின்ற முத்தெல்லாம் முத்தல்ல
நான்தானடா நல்முத்து எனச் சொல்லிக் கடற்கரையில் உறங்குதியோ?
நாதஇசை கொட்டுகின்ற நாவை ஏன் சுருட்டிக் கொண்டாய்?
விரல் அசைத்து எழுத்துலகில் விந்தைகளைச் செய்தாயே, அந்த
விரலை ஏன் மடக்கிக் கொண்டாய்? 20

"நான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியின் போதும் அண்ணா அவர்களைப் பற்றிய நினைவே எனக்கு ஊன்றுகோலாய்த் துணை புரிகிறது" என்பது கலைஞர் வாக்கு.

இரண்டாம் பாகம்

"இனி நான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் என்னைப் பொறுத்தவரையில் கல்லறையை நோக்கித்தான் என்றாலும், நான் ஒவ்வொரு அங்குலம் நகரும்போதும் இந்தச் சமுதாயம் குன்றின் மேலிட்ட விளக்காக ஒளிவிடுவதற்கான உழைப்பையே வழங்குவதற்கு உறுதி பூண்டிருக்கிறேன். துளி வியர்வை சிந்திடினும், அது காய்ந்து கிடக்கும் இன எழுச்சியைத் துளிர்த்திடச் செய்வதற்காகவே பயன்பட வேண்டுமென எண்ணுகிறவன் நான் என்பதால் என் கண்ணீர், செந்நீர், உயிர்மூச்சு, என்புதோல் போர்த்த இந்த உடம்பு அனைத்துமே இந்த இயக்கத்தின் உயர்வுக்கு அர்ப்பணிக்கப்படட்டும்"[21] என்ற சூளுரையோடு கலைஞர் இரண்டாவது பாகத்தைத் தொடங்குகிறார்.

அறிஞர் அண்ணாவிற்குப் பிறகு முதல்வராகப் பொறுப்பேற்ற கலைஞர், "உறவுக்குக் கை கொடுப்போம்; உரிமைக்குக் குரல் கொடுப்போம்" என்று மைய அரசுக்குத் தெரிவித்துக் கொண்டார். முதல்வர் பதவி கிடைக்காததால் நாவலர் ஊடல் கொண்டார். தந்தை பெரியார் தன் அறிக்கையில் இதனைக் கண்டித்தார், "அண்ணா அவர்கள் மறைந்தவுடன் நடக்கக்கூடாதது நடந்துவிட்டது. எதிர்காலம்

இருட்டாயிருக்கிறது என்று கூறி மனவேதனை அடைந்தேன். கலைஞர் நான் அண்ணாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றியே நடந்து கொள்வேன் என்று உறுதி கொடுத்துப் பதவியில் அமர்ந்திருக்கிறார். இதுதான் நான் இருட்டு வெளிச்சமாகிறது என்று சொன்னதின் பொருளாகும். கலைஞர் அண்ணாவைவிட யோசனையாளர். . . இந்த நிலையில் நமக்கு ஏற்பட்ட-ஏற்படக்கூடாத கெட்ட வாய்ப்பு என்னவென்றால் நாவலர் அவர்களுடைய ஊடலேயாகும். மந்திரி பதவி, கலைஞருக்கோ, நாவலருக்கோ சொந்தமான பதவி அல்ல. அது தமிழர் சொத்தாகும். நாவலரும், கலைஞரும் டிரஸ்டிகளே. இதை இருவரும் உணரவேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன். இதில் உரிமையோ, மானமோ பார்க்கக்கூடாது என்பதுதான் என் எண்ணம். பொதுநலத்தில் உரிமையோ மானமோ பார்ப்பது தத்துவப்படி சுயநலமாகும்"[22] என்பது பெரியாரின் அறிவுரை.

அண்ணா காலத்தில் நடந்துவிட்ட கீழவெண்மணிக் கொடுமை பற்றிக் கலைஞர் குறிப்பிடும்போது "கீழவெண்மணி நிகழ்ச்சி ஒரு சமுதாயக்கேடு! ஆதிக்க வெறியர்களின் கோரப்பற்களுக்கும், கூரிய நகங்களுக்கும் கிடைத்த தீனி. நிலப்பிரபுத்துவத்திற்கும், விவசாயத் தொழிலாளி வர்க்கத்திற்கும் ஏற்பட்ட மோதுதலில் மூண்ட நெருப்பில் 1968-ம் ஆண்டு 42 உயிர்கள் கருகிச் செத்துச் சாம்பலாயின".[23] ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் கொடுமை கண்டு கொதித்தெழும் நெஞ்சம் கலைஞருடையது என்பதற்கு இது எடுத்துக்காட்டு.

பொதுச்செயலாளர் பதவிக்குக் கலைஞரும் நாவலரும் போட்டியிட்டபோது, கழகத்தின் சட்டதிட்டங்களில் மாறுதல் செய்யப்பட்டது. அதன்படி கழகத்தின் அவைத்தலைவர் பதவி தலைவர் பதவியாக உயர்த்தப்பட்டது. அதன்படித் தலைவராகக் கலைஞரும், பொதுச் செயலாளராக நாவலரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நாவலரும் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். திரு.எம்.ஜி.ஆர். அவர்கள் பொருளாளர் ஆனார். இது குறித்துத் தந்தை பெரியார் அவர்கள் விடுத்த அறிக்கையில், "இப்போதுள்ள நிலையில் தி.மு.கழக ஆட்சியைத் தமிழர்கள் ஆதரித்தே ஆகவேண்டும். இதைத்தவிரத் தமிழர்களுக்கு நன்மை செய்யும் ஆட்சி இனி ஏற்பட்டுவிடாது"[24] என்று குறிப்பிட்டிருந்தார்.

திருச்சியில், 1970 பிப்ரவரி 22-ம் நாள் நடைபெற்ற அண்ணா இல்லாத முதல் மாநாட்டில், ஐம்பெரும் முழக்கங்களைக் கலைஞர் வெளியிட்டார்.

" 1. அண்ணா வழியில் அயராது உழைப்போம்
2. ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்
3. இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்
4. வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்
5. மாநிலத்தில் சுயாட்சி - மத்தியில் கூட்டாட்சி

திருச்சியில் எழுப்பப்பட்ட இந்த ஒலி முழக்கம்தான் இன்றைக்கும் தி.மு.கழகத்தின் இதய கீதமாக இருந்து வருகிறது."[25]

குடியரசுத தலைவர் தேர்தலில் நீலம் சஞ்சீவரெட்டியும், வி.வி.கிரியும் போட்டியிட்டனர். பழமைவாதிகள், சிண்டிகேட் காங்கிரஸ்காரர்கள், காமராசர் போன்றோர் சஞ்சீவரெட்டி பக்கம் நின்றனர். பிரதமர் இந்திராவின் வேட்பாளராக விளங்கிய வி.வி கிரியைக் கழகம் ஆதரித்தது. கழக ஆதரவால் வி.வி.கிரி வென்றார். அடுத்து மன்னர் மான்யம் ஒழிப்பு மசோதா, வங்கிகள் தேச உடைமை போன்ற புரட்சித் திட்டங்களை இந்திராகாந்தி கொண்டுவந்தார். வாக்கெடுப்பின்போது நாடாளுமன்ற மேலவையின் ஒரு வாக்கால் இந்திரா பதவி இழந்தார். 1971-இல் நடைபெற்ற தேர்தலில் கழகம், இந்திரா காங்கிரசுடன் உறவு கொண்டது. தமிழகத்தில் மகத்தான வெற்றி பெற்றுக் கழகம் 184 இடங்களைப் பிடித்தது. நாடாளுமன்றத்தில் நின்ற 24 இடங்களிலும் வெற்றி பெற்றது. கலைஞர் முதல்வரானார்.

கழகத்தின் வலிமை கண்டு சினந்த சி.எஸ், மோகன் குமாரமங்கலம் இருவரும் கழகத்தைப்பிளந்திட நேரம் பார்த்தனர். “கழகத்திற்கு ஒருவகையில் பலமானவராகவும், அதேசமயம் சோதனைகளைத் தாங்க முடியாத பலகீனராகவும் ஒருவர் டெல்லிக்குத் தேவைப்பட்டார். அந்தத் தேவையை நிறைவு செய்யக்கூடியவராக எம்.ஜி.ஆர். அவர்களுக்குக் கிடைத்தார்.”[26]

அதனால் எம்.ஜி.ஆர். திருக்கழுக்குன்றம் கூட்டத்திலும், ஆயிரம் விளக்குக் கூட்டத்திலும் கழகத்தினர் சொத்துக் கணக்குக் காட்டவேண்டும் என்று பேசினார். கழகச்செயற்குழு சென்னையில் கூடி எம்.ஜி.ஆரிடம் விளக்கம் கேட்டது. பொதுக்குழு, செயற்குழுவிடம் வருத்தம் கேட்டு மடல் தந்தால் கழகத்தில் தொடர்ந்து பணிபுரிந்திடலாம் என எம்.ஜி.ஆரிடம் எடுத்துரைக்கப்பட்டது. அவர் ஏற்கவில்லை. அதனால் அவர் கழகத்திலிருந்து விலக்கப்பட்டார். அடுத்து ‘எம்.ஜி.ஆர் ‘அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்’ என்ற பெயரில் இயக்கம் கண்டார். பின்னர் அதனுடன் ‘அனைத்திந்திய’ என்ற தொடரைச் சேர்த்துக் கொண்டார். பெரியாரின் அறிவுரையையும் எம்.ஜி.ஆர். புறக்கணித்து விட்டார்.

1972 ஆம் ஆண்டு தொடங்கி 1973 ஆம் ஆண்டு இறுதிக்குள்ளாக தமிழகத்தின் மூன்று பெரும் வைரத்தூண்கள் சாய்ந்துவிட்ட சோக சரித்திர ஏடுகள் தமிழர்களின் கண்ணீர்ப் பெருக்கிடையே புரண்டுவிட்டன.

ஒருவர் இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக்கின் தலைவர் காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் ஆவார். மற்றொருவர் மூதறிஞர் ராஜாஜி. அவர் மறைந்த ஓராண்டிற்குள் தந்தை பெரியாரும் மறைந்து விடுகிறார். தந்தை மறைவைத் .தாங்காத தனயன் கலைஞர் அவர்கள், “பேறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் அரசியல் ஆசானும், சுயமரியாதை இயக்கத்தின் தந்தையும், இந்தி ஒழிப்புப் போரின் முதல் தளகர்த்தரும், பைந்தமிழ் நாட்டில் பகுத்தறிவுச் சுடர் பரப்பியவரும், கௌதம புத்தருக்குப் பின் வந்த சமுதாயச் சீர்திருத்தப் புரட்சியாளரும், தென்னகத்தில் முதன்முதலாகச் சமதர்மக் கருத்துக்களை அறிமுகம் செய்தவரும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் பாதுகாவலரும், திராவிடக் கழகத்தின் ஒப்பற்ற தலைவருமான பகுத்தறிவுச் சிங்கம், சமுதாயப் பணி நடத்திய

சரித்திர நாயகன், தன்மானமூட்டிய தங்கம், தமிழினத்தின் வழிகாட்டி தந்தை பெரியார் அவர்கள் இயற்கை எய்தினார்"[27] என்று குறிப்பிடுகிறார்.

26.6.75-இல் இந்திராகாந்தி நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்தினார். அதற்கு மறுநாளே கூடிய கழகச் செயற்குழு இதனைக் கண்டித்துத் தீர்மானம் இயற்றியது. நெருக்கடி நிலையை எதிர்த்துக் காமராசரும் முழங்கி வந்தார். இந்திராகாந்தி, அடுத்து இருபது அம்சத் திட்டமொன்றையும் அறிவித்தார். என்.வி.என். அவர்களும், கர்மவீரர் காமராசர் அவர்களும் அடுத்தடுத்து மறைந்தனர். காமராசரைப் பற்றிக் குறிப்பிடும்போது கலைஞர், "தமிழ்நாட்டு அரசியலில் அடித்தளத்திலே மிகப் பிற்படுத்தப்பட்ட ஒரு இடத்திலே இருந்து தோன்றிய இந்திய நாட்டு அரசியல் வானிலே ஒளிமிகுந்த கதிரவனாகத் திகழ்ந்து தமிழ்நாட்டின் பெருமையினை இந்திய அரங்கிலே உயர்த்திய பெருந்தகையாளர்தான் காமராசர் அவர்கள்"[28] என்கிறார்.

1976-ம் ஆண்டு சனவரித் திங்கள் 31 ஆம் நாளன்று கழக ஆட்சி கலைக்கப்பட்டது. கழக வரலாற்றில் ஒரு மாபெரும் சோதனைக் கட்டத்தையும், அடக்கு முறைகளைத் தாங்கும் உச்சக்கட்ட நிலையையும், இழித்தும் பழித்துக் கழித்து விடத் துணிந்த மத்திய அரசினரின் கொடுமைகளை உறுதியோடு சந்திக்கும் சந்தர்ப்பத்தையும் அந்த ஜனவரி 31-ம் நாள் மாலைநேரம் தான் தொடங்கி வைத்தது.

வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவினைக் கழக அரசு நிறைவேற்றுவதற்கு முன்பு அது கலைக்கப்பட்டு விட்டது. பின்னர் வள்ளுவர் கோட்டம் 1976 ஏப்ரல் 15-ம் நாள் குடியரசுத் தலைவரால் திறந்துவைக்கப்பட்டது. அதற்குக் கலைஞர்க்கு அழைப்பில்லை. அதைக்குறித்துக் கலைஞர் கூறும்போது, "உயிர்வளர் மாதம் ஒன்பதும் ஒன்றும் நிறைந்து பிறந்த குழந்தையைச் சுமந்ததையும் இன்பமாகக் கருதி, பேறுகால வேதனையையும் இனிய வேதனையாகக் கொண்டு, பாலூட்டி அனுப்பிப் பின்னழகும், முன்னழகும் பார்த்துக் களித்து, பருவமடைந்த பின்னர் வாழ்க்கைத் துணையொன்றைத் தேர்ந்தெடுத்து அந்த ஆசைப் பிள்ளைக்கு இனிய திருமணவிழா நடைபெறும்போது, தாலிகட்டும் காட்சியினைக் காண முடியாமல் மணப்பந்தலுக்கு வெளியேநிற்கின்ற தாயின் மனதில் ஒருவிதத் தவிப்பு இருந்தாலும், தன் அன்புச் செல்வத்துக்கு நடைபெறும் மணவிழாக் குறித்து மகிழ்ச்சி பொங்கிடத்தானே செய்யும்.

"என் தங்க உடன்பிறப்பே அந்தத் தாயின் மகிழ்ச்சியைத் தான் நான் பெறுகிறேன் இன்று. ஆம் - என் வாழ்நாளின் குறிக்கோள்களின் ஒன்றான வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவை அகக்கண்ணால் காணுகிறேன் ஆனந்தப் பள்ளுப் பாடுகிறேன்"[29] என்கிறார்.

1977 சனவரி 18-ம் நாள் வானொலியில் உரையாற்றிய பிரதமர் இந்திராகாந்தி நெருக்கடி நிலை தளர்த்தப்பட்டு மார்ச் மாதத்தில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் என்று அறிவித்தார். சிட்டிபாபு, சாத்தூர் பாலகிருஷ்ணன் இருவரையும் கழகம் இழந்து தவித்தது. மற்ற அடலேறுகள் அனைவரும் விடுதலை பெற்றனர்.

மூன்றாம் பாகம்

"புத்தாண்டு பிறந்துவிட்டது. 1976 ஆம் ஆண்டு எனும் வாழைமரம் எழுபத்து ஏழாம் ஆண்டு எனும் இளங்கன்றைத் தந்துவிட்டு, காலத்தின் மடியில் வீழ்ந்து விட்டது. புத்தாண்டு பசுங்குருத்தினை விரித்துக் கொண்டு உலகமக்களின் வாழ்த்துக் கீதத்திலே மெல்ல அசைந்தாடுகிற காட்சியைக் காணுகிறோம்"[30] என்று கலைஞர் புத்தாண்டுக்கு வாழ்த்துக் கூறி மூன்றாம் பாகத்தில் நுழைகிறார்.

ஜனதா கட்சி என்ற பெயரில் பழைய காங்கிரஸ், சோஷலிஸ்ட் கட்சி, பி.எஸ்.பி., ஜனசங்கம் ஆகிய நான்கு கட்சிகளும் கூட்டாகத் தேர்தலில் போட்டியிட முடிவெடுத்தன. தமிழ்நாட்டில் கூட்டணி பற்றிப் பேசிட கழகத்தின் ஐவர் குழு அமைக்கப்பட்டது. சஞ்சீவரெட்டியின் ஜனதாவோடு தி.மு.க.வுக்கு உடன்பாடு ஏற்பட்ட மறுநாளே சர்க்காரியா சமிஷனின் குற்றச்சாட்டுகள் வெளியிடப்பட்டன. 1977-இல் வழக்குகள் மூலம் கழகத்தை வீழ்த்த நினைத்த இந்திராகாந்தி, 1980-இல் அதே கழகத்துடன் உறவு கொண்டு தான் செலுத்திய விஷத்தைத்தானே திரும்ப எடுத்துக்கொண்டார்.

"அரசியல் பழிவாங்கவோ, வஞ்சம் தீர்க்கவோ அரசியல் கட்சிகளை அச்சுறுத்தவோ வேண்டுமென்று திட்டமிட்டுப் பொய்யாகப் போடும் வழக்குகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மன உளைச்சலும் இடையூறுகளும் பணியில் சில தடங்கல்களும் விளையக் கூடுமேதவிர, அந்த வழக்குகளின் முடிவுகள் அரசுக்குச் சாதகமாக அமைவதுமில்லை. ஒருவேளை அமைந்தாலும் அதனால் உறுதிமிக்க அரசியல் கட்சிகளை அறவே அழித்துவிட்டதாகச் சரித்திரமும் இல்லை"[30] என்று கலைஞர் கூறுவது எல்லாக் காலத்துக்கும் பொருந்தும் ஒன்றாகும்.

77 நாடாளுமன்றத் தேர்தலில் கழகத்துடன், ஜனதாவும், இடது கம்யூனிஸ்ட் கட்சியும் உடன்பாடு கண்டன. தேர்தல் முடிவின்போது தி.மு.க. சார்பில் ஒருவர், ஜனதா சார்பில் மூவர் மட்டுமே வெற்றி பெற்றனர். அ.தி.மு.க. 19 இடங்களில் வெற்றி பெற்றது. பிற இடங்களில் இந்திரா காங்கிரசும், வலது கம்யூனிஸ்டும் வெற்றி பெற்றன.

மொரார்ஜி தலைமையில் மத்தியில் ஜனதா கட்சி ஆட்சியை அமைத்தது. ஜனதா அரசு அமைந்ததும் அ.தி.மு.க. தனது நிபந்தனையற்ற ஆதரவை அதற்கு அளித்தது. கழகத்தின் மேல் போடப்பட்ட பொய் வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டுமென மொரார்ஜிக்கு, ஜெயப்பிரகாஷ் மடல் எழுதினார். வழக்குகள் திரும்பப் பெறப்படாததாலும், அதிமுக ஜனதா பக்கம் சாய்ந்ததாலும் கழகத்தின் முக்கிய தலைவர்கள் சிலர் நாவலர் தலைமையில் கூடிக் கலைஞருக்கு எதிராகக் கையெழுத்து வேட்டையாடினர். இந்தச் சேதி? கேள்விப்பட்ட கலைஞர் தாமே விலகுவதாகக் கடிதம் எழுதி அனுப்பினார். அவரைத் தொடர்ந்து நாவலரும் பதவி விலகினார். பின்னர் இருவருமே பதவி விலகலைத் திரும்பப் பெற்றுக் கொண்டனர்.

ஏப்ரல் 17 சென்னையில் பொதுக்கூட்டத்தில் பேசுவதென்றும், 24-ம் தேதி தஞ்சையில் பொதுக்குழுவென்றும் அறிவிக்கப்பட்டது. திடீரென்று நாவலர் தலைமையில் இராசாராம், ஆதித்தன், மாதவன் ஆகியோர் கழகத்திலிருந்து விலகிப் புதுக்கட்சி தொடங்குவதாக அறிவித்து விட்டனர். மக்கள் தி.மு.க. என்று அந்தக் கட்சி வழங்கியது.

தமிழகச் சட்டமன்றத் தேர்தல் ஜுன் 12, 14 தேதிகளில் நடைபெறும் என்றும் ஜுன் 15-ம் நாள் முடிவுகள் அறிவிக்கப்படும் என்றும் செய்திகள் வந்தன. மதுரையில் கழகத்தின் சிறப்பு மாநாடு நடைபெற்றது. அடுத்தடுத்து நடைபெற்ற செயற்குழு, பொதுக்குழு மூலம் பேராசிரியர் பொதுச்செயலாளராகவும், சாதிக் பாட்சா பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர். சட்டமன்றத் தேர்தலில் கழகம் தனித்தே போட்டியிட்டு 48 இடங்களைப் பெற்றது. கூட்டணிக் கட்சிகளுடன் சேர்ந்து 129 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. திரு.எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்தின் முதல் அமைச்சராகப் பொறுப்பேற்றார்.

சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக விளங்கிய கலைஞர் அவர்கள், "சட்டமன்ற விவாதங்களில் 'வெப்பம்' இருப்பதைக் காட்டிலும், 'ஒளி' இருப்பதே வரவேற்கத்தக்கதாகும். வெப்பம் வெறுப்புணர்வுக்கு வித்திடும். ஒளி விளக்கத்திற்கு வழிவகுக்கும்'' என்று ஒருமுறை குறிப்பிட்டார்.

18.9.77 அன்று நடைபெற்ற பெரியார் சிலை திறப்பு விழாவின்போது எம்.ஜி.ஆர். முன்னிலையில் நாவலரின் மக்கள் திமுக, அதிமுக.வுடன் இணைந்தது.

நெருக்கடி நிலையின் போது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி பலமுறை கேடுகளைச் செய்ததாக இந்திராகாந்தி மீது புகார் கூறப்பட்டு அதன் மீது விசாரணை நடந்து வந்தது. பல கிரிமினல் குற்றங்களைஅவர் செய்திருக்கிறார் என்று இரகசிய போலீசார் தந்த அறிக்கையின்படி அவர் 3.10.77 இரவு கைது செயயப்பட்டு மறுநாளே விடுதலை செய்யப்பட்டார். நெருக்கடி நிலை கொண்டு வந்ததற்காகவும், சர்க்காரியா கமிஷன் அமைத்ததற்காகவும், கழக அரசைக் கலைத்ததற்காகவும், தி.மு.க.வின் சார்பில் இந்திரா காந்திக்கு நாடெங்கும் கறுப்புக் கொடி காட்டப்பட்டது. எண்ணற்றக் கழகத்தவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது கொலை முயற்சி வழக்கு தொடுக்கப்பட்டது.

16.3.78 அன்று தந்தை பெரியார் அவர்களுக்குப் பிறகு திராவிடர் கழகத்தைத் தலைமையேற்றுச்சிறப்புடன் நடத்திச் சென்ற மணியம்மையார் மறைந்தார்.

"தி.மு.கழக வரலாற்றில் சிறப்புக்குரிய ஒரு இடத்தைப் பெற்ற நகரம் திருச்சி. தி-மு.கழகம் தேர்தலிலே ஈடுபடவேண்டுமென்ற கருத்துக்குத் தீர்மான வடிவம் கொடுத்து, பேரறிஞர் அண்ணா அவர்கள் பேருரையாற்றிய சரித்திரப் புகழ்பெற்ற மாநாடு திருச்சியிலேதான் நடைபெற்றது. பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப்பிறகு தி.மு.கழகம் தனது ஐம்பெருந்

கொள்கையை வெளியிடுவதற்குக் காரணமாக அமைந்த மாநாடு திருச்சியிலே நடைபெற்றது. கல்லக்குடி போராட்டக் காவியம் எழுதிடக் குருதியில் எழுதுகோலைத் தோய்த்துக் கொடுத்ததும் திருச்சிப் பாசறைதான். இந்திப்பகையை எதிர்த்துத் தீயிட்டுத் தன்னைப் பொசுக்கிக் கொண்டு எலும்புத் துகள்களாக மாறிய சிங்கத் தமிழன் சின்னச்சாமி மடிந்து கிடந்த மண்ணும் திருச்சிதான்”[31] அந்தத் திருச்சி மண்ணில் 1978 டிசம்பர் 23, 24 ஆகிய நாட்களில் இந்தி எதிர்ப்பு மாநில மாநாடு நடைபெற்றது.

1978 டிசம்பர் 19-ம் நாள் மீண்டும் கைது செய்யப்பட்ட இந்திராகாந்தி டிசம்பர் 26 அன்று விடுவிக்கப்பட்டார். அதற்குள் ஜனதா கட்சி மொரார்ஜிக்கும் சரண்சிங்கிற்கும் இடையே மோதல் வலுத்தது. இடையில் இரண்டு கழகங்களையும் இணைக்க கி.ஆ.பெ. எடுத்த முயற்சி தோற்றது.

15.7.79 அன்று பிரதமர் தேசாய் தனது பதவியை ராஜினாமாசெய்தார். சரண்சிங் பிரதமரானார். காங்கிரசின் ஆதரவு விலக்கப்பட்டதால் அவரும் விரைவில் பதவிவிலகி விட்டார்.

1979 ஜுலைத் திங்கள் 2-ம் நாள் எம்.ஜி.ஆர். அரசு பிற்படுத்தப்பட்ட மக்கள் அதற்கான சலுகையைப் பெறப் பெற்றோரின் வருமானம் ஒன்பதாயிரம் ரூபாய்க்குக் குறைவாக இருக்கவேண்டும் என்று உத்தரவிட்டது. இதனை எதிர்த்துத் தி.மு.கழகம் போரிட்டது. 22.8.79 -ல் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. 12.9.79 -இல் அன்று பிஜு பட்நாயக் கலைஞரைச் சந்தித்து தி.மு.க - அ.இ.அ.தி.மு.க இணைப்புப் பற்றிப்பேசினார். எம்.ஜி.ஆர். அவர்களும், கலைஞர் அவர்களும் கலந்து பேசியும் கூட இந்த முயற்சி வெற்றி பெறவில்லை.

இதற்கிடையில் இந்திரா காங்கிரசுடன் திமுகழகத்திற்கு நாடாளுமன்றத் தேர்தலில் உடன்பாடு ஏற்பட்டது. சென்னைக் கூட்டத்தில் பேசும்போது இந்திராகாந்தி பொதுமக்களிடம் மன்னிப்பும் கேட்டுக் கொண்டார். இந்தமுறை திமுக-இந்திரா காங்கிரஸ் கூட்டணி மகத்தான வெற்றியைப் பெற்றது. அ.இ.அ.தி.மு.க இரண்டு இடங்களில் வென்றது. புதுவையில் இந்திரா காங்கிரசு திமுக கூட்டணி அரசு அமைத்தது.

தேர்தல் தோல்விக்குப் பிறகு அ.இ.அ.தி.மு.க அரசு, பிற்படுத்தப்பட்டோர் சலுகைகளைப் பெற ஒன்பதாயிரம் ரூபாய்க்குக் குறைவாக ஆண்டு வருமானம் இருக்க வேண்டுமென்ற ஆணையைத் திரும்பப் பெறுவதாக 24.1.80 இல் அறிவித்தது. பிற்படுத்தப்பட்டோருக்கு இதுவரை இருந்த 31 சதவீதம் என்ற ஒதுக்கீட்டை 50 சதவீதமாக உயர்த்துவதாகவும் அறிவித்தனர்.

1980 பிப்பரவரி 17 ஆம் தேதி இரவு 9 மணி அளவில் மத்திய அரசின் அமைச்சரவை கூடி தமிழகம் உட்பட ஒன்பது மாநில அரசுகளைக் கலைப்பது என்று முடிவெடுத்தது. அடுத்து நடைபெற்ற சட்டமன்றத்

தேர்தலிலும் கழகமும், காங்கிரசும் உறவு கொண்டன. ஆளுக்கு 109 இடங்களில் நிற்பது என்றும் எஞ்சியுள்ள இடங்களில் கூட்டணிக் கட்சிகள் போட்டியிடுவது என்றும் முடிவாயிற்று. அ.தி.மு.க கூட்டணியில் அதிமுக 168 இடங்களில் போட்டியிட்டது. இறுதியில் திமுக 38 இடங்களிலும் காங்கிரசு 30 இடங்களிலும் வெற்றி பெற, அதிமுக கூட்டணியோ 165 இடங்களில் வென்று ஆட்சி அமைத்தது. தி.மு.க.வை கூட்டணிக் கட்சியே காலை வாரியதால் இந்தத்தோல்வி.

சட்டமன்றத் தேர்தல் முடிவுகளுக்குப்பிறகு வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டத்தைக் கழகம் சென்னை கடற்கரையில் நடத்தியது. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய கலைஞர், "தமிழர்களே, என்னை நீங்கள் கடலிலே தூக்கி எறிந்தால், கட்டுமரமாக மிதப்பேன். அதிலே ஏறி நீங்கள் சவாரி செய்யலாம். என்னை நீங்கள் நெருப்பிலே தூக்கி எறிந்தால், நான் விறகாக அடுப்பெரிக்கப் பயன்படுவேன். நீங்கள் சமையல் செய்து சாப்பிடலாம். என்னை நீங்கள் பாறையிலே மோதினால் வெறும் கல்லைப் போல் பொடியாகிவிடமாட்டேன். தேங்காய் சிதறுவது போல் சிதறி உங்களுக்குத் தின்பண்டமாக மாறுவேன். ஆகவே, தமிழர்களே என்னை நீங்கள் எது வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். நான் உங்களுக்கே பயன்படுவேன்"[32] என்று கூறினார்.

கவிஞர் கண்ணதாசன் அவர்கள் 17.10.81 அன்று இறந்த சேதி வந்த போது கலைஞர் கலங்கிப் பாடிய கவிதை,

"தென்றலாக வீசியவன் நீ
என் நெஞ்சில் தீயாகச் சுட்டவனும் நீ
அப்போதும் அன்றிலாக நம் நட்பு
திகழ்ந்ததே அன்றி
அணைந்த தீயாக ஆனதே இல்லை நண்பா
நிலையில்லா மனம் உனக்கு
ஆனாலும் நிலைபெற்ற புகழ் உனக்கு"[33]

1924 தொடங்கி, 1991 வரை நடைபெற்ற அரசியல் நிகழ்வுகளை கலைஞர் 'நெஞ்சுக்கு நீதி' என்ற தலைப்பில் மூன்று பாகங்களாக எழுதியுள்ளார். இது இந்திய வரலாற்றோடு கூட உலக வரலாற்றையும் துல்லியமாகத் தரும் காலப் பெட்டகமாகத் திகழ்கிறது.

"ஆட்சியில் இருந்தாலும், ஆட்சியில் இல்லாவிட்டாலும், பெரியாரின் அறிவியக்கக் கருத்துக்களை அடித்தளமாகக் கொண்ட அண்ணாவின் வழிமுறைகளால் அழுத்தமான கட்டிடமாக உருவாகியுள்ள தி.மு.கழகம் எனும் இந்த இலட்சியப் பாசறை, சோதனைகள், வேதனைகள் சூழ்ச்சிகள் ஆகியவற்றுக்கிடையே அசையாத இமயமாகவே எழுந்து நின்று, கொள்கை முரசம், ஒலித்துக் கொண்டிருக்கிறது. ஆயிரம் காலத்துப் பயிராம் இந்தக் கழகத்தைத் தொடர்ந்து காப்பாற்ற வேண்டும் என்பதே எனக்கு என்றுமே தணியாத ஆசை"[33] என்று கலைஞர் அவர்கள் 'நெஞ்சுக்கு நீதி' மூன்றாம் பாகத்தில் குறிப்பிடுகிறார்.

அது அவரின் ஆசை மட்டும் அல்ல, தமிழ்ச் சமுதாயத்தின் மொத்த ஆசையும் அதுதான் என்றால் மிகையாகாது.

அடிக்குறிப்புக்கள்

1. நெஞ்சுக்குநீதி - (இரண்டாம்பாகம்) ப.1.
2. மேலது., ப.2.
3. மேலது., ப.2.
4. நெஞ்சுக்கு நீதி (மூன்றாம்பாகம்), முன்னுரை.
5. மேலது.,
6. நெஞ்சுக்கு நீதி (முதல்பாகம்), என்னுரை.
7. மேலது., ப.12.
8. மேலது., ப.17.
9. மேலது., ப.20.
10. மேலது., ப.23, 24.
11. மேலது., ப.27.
12. மேலது., ப.71.
13. மேலது., ப.74.
14. மேலது., ப.77.
15. மேலது., ப.106.
16. மேலது., பக்.141 -42.
17. மேலது., ப.373.
18. மேலது., ப.376.
19. மேலது., ப.684.
20. மேலது., பக்.754 - 55.
21. மேலது., (இரண்டாம் பாகம்), பக்.2, 3.
22. மேலது., ப.37.
23. மேலது., ப.54.
24. மேலது., ப.150.
25. மேலது., ப.226.
26. மேலது., ப.342.
27. மேலது., ப.419.
28. மேலது., ப.487.
29. மேலது., ப.517.
30. மேலது., (மூன்றாம் பாகம்), ப.50.
31. மேலது., ப.319.
32. மேலது., பக்.407, 8.
33. மேலது பக்.612

4 'நெஞ்சுக்கு நீதி' தரும் சில படிப்பினைகள்

முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன்,

"இப்போதுதான் உங்களின் பெரிய நூலைப் படித்து முடித்தேன் நான் இந்த நூலால் உள்ளூரக் கவரப்பட்டேன். உங்கள் சாதனையை எண்ணிப் பெருமைப்படுகின்றேன். இந்நூலின் செய்திகளின் ஊடே ஒருமனிதத்தன்மையின் ஓட்டம் உண்மையின் சிக்கல்களைத் தாண்டி ஓடுவதை அறிந்தேன். இந்நூல், தன் செயல்களைவிடப் பெரியவரும் தன் சூழல்களை விட உண்மையானவரிடமும் நம்மை அழைத்துச் செல்கிறது".

- ஜவஹர்லால் நேருவின் தன்வரலாறு குறித்து இரவீந்தரநாத் தாகூர்.

மேற்குறித்த கூற்று 'நெஞ்சுக்கு நீதி' க்கும் பொருந்துவதே. மீண்டும் மீண்டும் விழுந்து, எழுந்து, இடறி, இடறப்பெற்று, தண்டிக்கப் பெற்று, பகைக்கப் பெற்று, ஒதுக்கப்பெற்று, இடர்களைத் தாண்டி, மனவலியாலும் கொள்கை உரனாலும் கடும் உழைப்பாலும் ஒரு தேசிய அரசியலின் உயர் படிநிலைக்கு உயர்ந்து வந்துவிட்ட ஏழைக்குடிமகனின் வரலாறு எப்படியிருக்கும் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டு 'நெஞ்சுக்கு நீதி'.

வருணாச்சிரமம் ஆழமாக ஊடுருவிவிட்ட இந்தியச் சமூகத்தில், பின்தங்கிய சமூகத்தைச் சார்ந்த ஒருவர் அரசியலுக்கு வருவதும், மக்களை இயக்கும் சக்தியாக உருவாவதும் ஆட்சித் தலைமை பூணுவதும் தேசிய அரசியலில் அலைக்கழிவு மிக்க நேரங்களில் நங்கூரமாக நின்று திசை காட்டியாகச் செயல்படுவதும், வரலாற்றில் வழக்கமாக நிகழ்வன அல்ல. வருணாச்சிரமம் இத்தகைய மாற்றத்திற்கு வழிதராது என்பதற்கு, அந்நெறியை ஒத்துக் கொண்டு விட்ட காங்கிரசும், அதனை அறவே ஒத்துக் கொள்ளாத திராவிடர் கழகமும் தேர்தல் கூட்டணி அமைத்த ஐம்பதுகளில் அந்த அணியினரால் பல இடங்களில் எழுதப் பெற்ற 'தவிலடிப்படிவன் தலைவனாவதா ?' என்ற வாசகத்தை எடுத்துக் காட்டலாம். சீர்திருத்தக் குறிக்கோளுடைய அன்றைய திராவிடர்கழகத்துக்குக் கூட இஃது ஒவ்வாததாக இருந்திருக்கிறது. இதுதான் 'சேர்வார் தோஷமோ'?

சமூக, பொருளாதார வலிமையும், பாரம்பரியப் பின் புலமும் மிக்கவர்களே அரசியல் தலைமை பூணமுடியும் என்ற நிலையை மாற்றுவதற்குப் பேரறிஞர் அண்ணா எவ்வளவு துன்பப்பட்டிருக்க வேண்டும் ? எத்தனைச் சோதனைகளை எதிர் கொண்டு தாங்கியிருக்க வேண்டும் ? இந்த அனுபவத்தின் விளைவுதான் 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்' என்ற கூற்றாகும்.

"வெற்றி முக்கியமான ஒன்றல்ல! இதில் பங்கேற்பதே மிக முக்கியம். விளையாட்டில் மட்டுமல்ல, வாழ்க்கையிலுங்கூட, வெற்றி கொள்வதைவிட வாழ்க்கையின் சோதனைமிக்க பிரச்சினைகளை எதிர்த்துப்போராடுவதே முக்கியமாகும்".

இத்தொடர்கள் ஒலிம்பிக் குறிக்கோளாகக் கொள்ளப்பட்டவை. பியர்ரி-டி-கோபார்ட் என்ற பிரெஞ்சுக்காரர் கூறிய இக்கருத்து நெஞ்சுக்கு நீதியின் அடித்தளம் எனில் தவறில்லை. எனவே நெஞ்சுக்கு நீதி தரும் முதல் படிப்பினை தலைவனாக உருவாவதற்குக் கொள்கை உரன், சோதனைகளைத் தாங்கும் மனவலி, கடும் உழைப்பு, இடும்பை இயல்பென்ற எண்ணம் ஆகியனவே வேண்டுமன்றி அரசப்பிறப்பு, பெருஞ்செல்வம், கூலிப்படை ஆகியன வேண்டா என்பதாகும்.

கலைஞரின் நெஞ்சுக்கு நீதி பேராசிரியர் சஞ்சீவி குறித்தது போன்று 'நம் காலத்தின் தன்மான இயக்க வரலாறு' என்று கூறத்தக்கதாகும்.[1] இவ்வளவு உணர்ச்சியும் விளக்கமும் பொருந்த வேறு யாரும் இந்நிகழ்ச்சிகளைக் கூற இயலாது. அறிஞர் எட்வர்டு கிப்பன், 'என் எண்ணங்களையும் செயல்களையும் வேறுயாரையும் விட நானே எடுத்துரைக்க வல்லவன்' என்று கூறுவதற்கேற்ப அமைந்தது நெஞ்சுக்கு நீதி".[2] எதையும் சுவையாகச் சொல்லக் கூடியவர் என்று பெயர் பெற்றவர், தன் வாழ்க்கையைச் சொன்னால் எவ்வளவு சுவையாக இருக்கும் என்பதை இந்நூலைப் படிப்பார் உணரலாம். இந்நூலின் மிகப்பெரும் பாராட்டத்தக்க பண்பு நூலாசிரியர் தன்னை எங்கும் வியந்து பாராட்டிக் கொள்ளாத எளிமையும், எவரையும் இழித்தும் பழித்தும் பேசாத பெருந்தகவுமாகும்.

"பட்டுமெத்தை தைத்த நாற்காலியில் உட்கார வைத்து விட்டு மெத்தைக் குள்ளிருந்து ஊசிகளை உடலெல்லாம் குத்தச் செய்துவிட்டு, எதிரே இருக்கும் மக்கள் கூட்டம் 'ஆகா! இவர் இந்திரனல்லவா? சந்திரனல்லவா? என்று புகழ்ந்து கொண்டிருந்தால் ஊருக்குப் பயந்து ஊசிக் குத்துக்களை வாங்கிக் கொண்டு உதிரத்தோடுஒப்புக்குச் சிரிக்கும் மனிதனைப்போல் நான் இன்று சிரிக்கிறேன்; மகிழ்கிறேன் இதுவே நான் பதவியால் பெறும்பயன்!

இந்த ஊசிமுனைக் குத்துக்களைத் தாங்க முடியாத நான் ஈட்டிமுனைக் குத்துக்களை இன்முகத்தோடு ஏற்றுக் கொண்ட காலம் ஒன்று இருந்தது. அதுதான் 1966 ஆம் ஆண்டு முடிய ஏறத்தாழ முப்பதாண்டு எதிர்க்கட்சி வாழ்வு!

ஈட்டிகள் என் நெஞ்சைக் குறிபார்த்திருக்கின்றன. கற்கள் என் தலையைப் பதம் பார்த்திருக்கின்றன. கம்புகளும் கழிகளும் தடிகளும் என் மேனியைச் சுவைத்திருக்கின்றன. சாவு என்னை நெருங்கி நெருங்கி எத்தனையோ முறை விலகியிருக்கிறது! சிலரிடத்திலே நெருங்கியதற்காக அல்ல! விலகியதற்காக!"

மலர் மஞ்சமன்று பதவி! அதைப் பெறமுயல்வதும் எளிய மக்களுக்குப் பணி செய்ய வேண்டும் என்ற துடிப்பாலன்றிப் பிறவற்றாலன்று என்பது கலைஞரின் வாழ்க்கையால் விளங்கும்.

அரசியல் ஒலிம்பிக்கில் கலைஞர் ஓடியதும் ஓடிக் கொண்டிருப்பதும் தடைகள் ஓட்டப்பந்தயமாகும். தடுக்கும் இடையூறுகளைத் தாண்டி நிதானத்தோடு இலக்கை நோக்கி ஓடிக்கொண்டேயிருக்க வேண்டும். நெருப்பாற்றின் மேலே கட்டிய மயிர்ப்பாலத்தில் நடை. இமைப்பினும் கோடித் தீங்குகள் உடனே நிகழும். உடன் ஓடிவந்தோரில் பலரைக் காணோம். தடமாறிப் போனவர்கள், தளர்ந்து தொய்வடைந்தவர்கள், வழியிலே கவர்ச்சி ஓவியங்களைக் கண்டு நின்று விட்டவர்கள், திசை திரும்பியவர்கள், ஆகிய எல்லாரும்போக அன்று கொண்ட மன உறுதியோடு இன்றும் ஓடிக் கொண்டிருக்கிறார் கலைஞர். இப்பந்தயத்தில் அவர் பெற்ற இகழும் புகழும் அப்படியே பதிவு செய்யப்பட்டுள்ளன. தன்வரலாறு எழுதுவோர் இந்த நெறியை மறத்தலாகாது. ஆப்ரகாம் காவ்லி என்ற கவிஞர் தன்வரலாறு எழுதுவதில் உள்ள இடர்ப்பாட்டைக் குறித்து நன்கு விளக்கியுள்ளார். இழிவுகளை எடுத்துரைப்பது ஒருவருக்கு உடன்பாடு இல்லாமலும், பெருமைகளைப் பேசுவது படிப்போருக்கு எரிச்சலூட்டுவதாகவும் இருக்கும் என்கிறார் அவர். நெஞ்சுக்கு நீதி வரலாற்று நெறியில் இரண்டையும் அளவாகப் பிறர் கூறியாங்கு வெளிப்படுத்தியுள்ளது.

மிகச் சிறந்த தன்வரலாறு இரண்டு பண்புகளைப் பெற்றிருக்க வேண்டுமென்பர் ஆலன் ஷெல்டன். 1. மனித ஆளுமை குறித்த நம் ஆர்வத்தை நிறைவு செய்வது. 2. உண்மையாக என்ன நிகழ்ந்தது என்பதை அறிவது.[1] இவ்விருவகையினும் நிறைவு தருவது நெஞ்சுக்கு நீதி. பள்ளிச் சிறுவனாக இருந்த நிலையிலிருந்து நாடு போற்றும் நாயகராக உயர்ந்த நிலைவரை படிப்படியாகக் கலைஞர் பெற்ற பரிணாம வளர்ச்சியை இந்த நூல் தெளிவுபடக் காட்டுகிறது. தான்பிறந்த காலத்தில் உலகச் சூழல் எப்படியிருந்தது என்பதில் தொடங்கி, இந்திய அரசியல், தமிழக அரசியல், குறிப்பாகத் தமிழகத்தில் நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என்று தொடர்ந்த இயக்க நிலைகள். தேர்தல் களங்களில் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் தி.மு.க., எதிரணியில் தி.மு.க மிசாக் கொடுமையில் நெருக்கடி நிலையில் தி.மு.க. என்று தமிழக வரலாற்றின் இன்றியமையாப் பக்கங்களை மிகவிரிவாக எடுத்துரைப்பதிலும் நெஞ்சுக்கு நீதி நிறைவு தருகிறது.

கலைஞரின் சொந்த வாழ்க்கை நிகழ்ச்சி எதனையும் தனியாகப் பிரித்துப் பார்க்க முடியாமல், தி.மு.க. தமிழக அரசியல், இந்திய அரசில் வரலாற்றின் ஒருபகுதியாகவே பார்க்க வேண்டியிருப்பதே இந்நூலின் தனித்தன்மை என்று கூறலாம். அரசியல், கலை, இலக்கியப் பணிகளிலிருந்து ஒரு நொடியும் ஒதுங்கியிராத அவருடைய சிந்தனை தன்னை எந்த நிலையிலும் இவற்றினின்று பிரித்து எண்ணும்படியாக விட்டதில்லை. எழுபத்தைந்து ஆண்டுக்கால வாழ்க்கைப் போக்கில் கலைஞரின் அரசியல், கலைத்துறைப் பணிகளில் கீழ்க்கண்ட இரு

செய்திகளை உய்த்துணர முடிகிறது.

1. தீவிரவாதம் என்ற நிலையிலிருந்து பிறரோடு இணங்கி உறவு கொண்டு தமிழகம் தனிமைப்படுத்தப்பட்டுவிடாத நிலையில், உறவுக்குக் கைகொடுத்தும், உரிமைக்குக் குரல்கொடுத்தும் செயல்படும் நிலை. இந்த நிலையில் மாநில சுயாட்சி, தமிழ் தமிழர் நலம், ஆகிய அடிப்படைக் குறிக்கோள்களில் விட்டுக் கொடுக்காது அணுகுமுறைகளில் ஓர் இளக்கமான போக்கைக் கடைப்பிடிக்கும் நிலை தோன்றியுள்ளது.

2. கலைத்துறையில் கதை, உரையாடல், கருத்துப் புலப்பாட்டு உத்திகள் தொழில் நுணுக்க உத்திகள் ஆகியவற்றில் மிகப்பல மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. இவற்றையெல்லாம் உள்வாங்கிக் கொண்டு, கால மாற்றங்களால் நிலை குலைந்துவிடாமலும் தன்னிலையையும் இழந்துவிடாமலும் மந்திரிகுமாரியிலிருந்து நியாயத்தராசு வரையில் பல்வேறு பரிணாம வளர்ச்சிகளைக் காட்டும் வகையில் கலைஞர் பணியாற்றியிருக்கிறார். வளர்ந்தும் மாறியும் வரும் கலை இலக்கிய உலகிலிருந்து தன்னை அந்நியப் படுத்திக்கொள்ளாத ஆற்றல் அவரைப் பவளவிழாவிற்கு அழைத்து வந்திருக்கிறது. அடுத்துவரும் தலைமுறைகளுக்கும் எழுதும் ஆற்றல் பெற்றவர் என்று திறனாய்வாளர் அவரைப் போற்று கின்றனர்![4]

கோட்டைத் தலைமைக்கு அவருடைய உழைப்பும், அறிவும், தமிழுணர்வும், நீண்டகாலப் பட்டறிவும் இவற்றுக்கெல்லாம் மேலாக அப்பழுக்கற்ற தியாகமுமே அவரைக் கொணர்ந்திருக்கின்றன. தனித்தமிழி யக்கத்திலிருந்து மறைமலையடிகளாரைப் பிரிக்கவொண்ணாது. தொழிற்சங்க வரலாற்றிலிருந்து திரு.வி.க.வைப்பிரிக்க இயலாது. சுயமரியாதை இயக்க வரலாற்றிலிருந்து பெரியாரை நீக்க முடியாது. இந்தி எதிர்ப்பு வரலாற்றிலிருந்து நாவலர் பாரதியை எடுக்க இயலாது. தமிழக அரசியல், கலை வரலாற்றிலிருந்து அறிஞர் அண்ணாவையும் கலைஞர் கருணாநிதியையும் அணுவும் அசைக்க எவர்க்கும் கூடாது. தியாகராயர், நடேசனார், பனகல் அரசர், பொப்பிலி அரசர், டி..எம்.நாயர், பெரியார், பட்டுக்கோட்டை அழகிரி, பேரறிஞர் அண்ணா என்ற வரிசையில் கலைஞர் பெயர் இடம்பெற்றுவிட்டது. இடம்பெற்றது மட்டுமன்று; இவர்களின் மொத்த உருவமாகவே இவர் இன்று விளங்குகிறார்.

மன்புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழ்க ளெல்லாம்
உன்புகழ் ஆக்கிக் கொண்டாய் உயர்குணத் துரவுத் தோளாய்

என்ற பண்டைக் குகன் பரதனுக்கு நல்கிய பாராட்டுக்குக் கலைஞர் முற்றிலும் உரியவராகத் திகழ்கிறார்.

போராட்ட வாழ்க்கை

கலைஞர் ஏனைத் தலைவர்கள் எல்லாரையும் விட அதிகத் துன்பங்களுக்கும் சோதனைகளுக்கும் ஆட்பட்டவர். அதற்குக் காரணம்

1. அவர் வாழும் காலம் 2. தொண்டின் அடிப்படையிலான அரசியல் என்ற நிலை மாறிய சூழலில் பிறரை எதிர்கொள்ள வேண்டிய சூழல். 3. கொள்கை கோட்பாடு, குறிக்கோள் ஆகியவற்றிலிருந்து அப்பாற்பட்டவர்களின் பதவி வேட்கையும் பொருள் வலிவும் மக்களிடம் பொய்க்காட்சிகளை உருவாக்கிக் காட்டுவதில் வெற்றிபெற்றுள்ள நிலை. இந்த அடிப்படைகளில், குறிக்கோள்மிக்க மனிதன் போராடிக் கொண்டுதான் இருக்க வேண்டும்.

"சரியானது எப்போதும் பிழையானதோடான போராட்டப் போக்கில்தான் வளர்கிறது. உண்மையானதும் நன்மையானதும் அழகானதும் எப்போதும் பொய்யானதற்கும் தீமையானதற்கும் அருவருக்கத் தக்கதற்கும் எதிராக வாழ்ந்து அவற்றோடான போராட்டத்தில் வளர்கின்றன. மனிதகுலத்தால் ஒரு குறிப்பிட்ட தவறான செயல் நிராகரிக்கப்பட்டு ஒரு குறிப்பிட்ட உண்மை ஏற்றுக் கொள்ளப்பட்டதும், புதிய உண்மைகள் புதிய தவறுகளுடன் தமது போராட்டத்தை ஆரம்பிக்கின்றன. இத்தகைய போராட்டங்கள் ஒருபோதும் முடிவுறமாட்டா. இது உண்மையின் வளர்ச்சி பற்றிய விதி"

என்று மாசேதுங் கூறியது உலக அரசியலுக்குப் பொருந்துகிறதோ இல்லையோ தமிழக அரசியலுக்குப் பொருந்தும். நெருக்கடி நிலைக்காலத்தில் இந்த இயக்கம் அழிந்துவிட்டது; இனி அதனைப் புதைக்கும் இடத்தில் புல்கூட முளைக்காது என்றவர்கள் உண்டு. கட்சிக்குள்ளேயே கூடத் தலைமையில் மாற்றம் வேண்டிய 'புலவர் பெருமான்கள்' இருந்தனர். ஆனால் காலம் நெருக்கடிநிலை எவ்வளவு தவறானது என்று நிறுவிவிட்டது.

'அடிப்படை உரிமையை விட்டு விட்டுத் தற்காலிகப் பாதுகாப்பை நாடுவோர் உரிமையைப் பற்றியும் பாதுகாப்பைப்பற்றியும் கருதத் தகுதியற்றவர்.

என்ற பெஞ்சமின் பிராங்க்ளின் கூற்று மெய்யாக்கப்பட்டுவிட்டது. பிலுமோடி கூறுவது போலத் தனி ஒருவரின் பதவி குறித்த அச்சம் குடியரசையே தள்ளாட வைத்து விட்டது. இந்திய விடுதலைப் போரின் சாதனைகளைப் பேசிக் கொண்டிருந்த நாம் நம் உரிமைகளின் சரிவையும் பேசவேண்டியவர்களாகவும், பேசமுடியாதவர்களாகவும் ஆக்கப்பட்டோம். சிட்டிபாபு, சாத்தூர் பாலகிருஷ்ணன் ஆகிய இருவர் சிறையில் பிணமாக்கப்பட்டனர். இந்த நிலையிலேயே ஜெயப்பிரகாஷ் போன்றோர் ஆழ்ந்து எண்ணி ஒரு புதிய புரட்சித் திட்டத்தை உருவாக்கினர்.

ஜெயப்பிரகாஷ்,

"அரசு தன்னுடைய செயற்பாட்டை மாற்றிக்கொள்ளாது என்று தெரிந்த சூழலில், ஓர் ஒருங்கிணைந்த சமூகத்தின் முழுப் புரட்சிக்கு அழைப்பு விடுத்தார். இம்முயற்சியைக் காந்திய மனிதாபிமான அடிப்படையில் எல்லாரும் பங்கு கொள்ளும் குடியரசு என வருணித்தார்.[5]

இந்த முழுப்புரட்சிக்குத் தமிழகத்தின் விழுமிய பங்கை நெஞ்சுக்கு நீதி எடுத்தியம்புகின்றது. காங்கிரசல்லாத மாநிலக் கட்சிகளின் வலிமை பெருகி ஒரு கூட்டாட்சி அமைவதற்கு ஜெயப்பிரகாசின் புரட்சி அடித்தளமிட்டது. இதுவே மாநில சுயாட்சிக் கோரிக்கையின் நியாயத்தைப் பலரையும் உணரவைத்தது. கூட்டணி அரசுக்கு எதிராகவும் ஆதரவாகவும் கருத்துக்கள் கூறப்பட்டன.

> "அரசியல் கட்சிகள் மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்க மறுப்பதால் கூட்டணி அரசு சிறப்புற அமையாது என்று வெங்கட்ராமன் கூறியுள்ளார். ஆனால் கிருஷ்ணஐயர் கேரளத்தையும் மேற்கு வங்கத்தையும் காட்டி அவை வெற்றிகரமாகச் செயல்பட்டுள்ளமையால் கூட்டணி அரசு மத்தியிலும் சிறப்பாகச் செயல்படுமென்றார்"[6]

இருவேறு கருத்துக்களான இவை மாம்'பலத்தின்' இரு கன்னங்கள் அல்லவா? ஆனால் கூட்டணி அரசு நிலைத்து ஐந்தாண்டுகள் இருக்கவில்லையே எனக் கேட்கலாம். ஆனால் மறுபடியும் எந்தத் தனிக்கட்சியும் ஆட்சிக்கு வரமுடியவில்லை. எனவே எதிர்காலத்தில் கூட்டணி அரசே மத்தியில் அமைய முடியும் என்பது ஒருதலை. காமராசர் போராடிக் காங்கிரசை நிலைப்படுத்தினார். ஒருமுகக் கருத்து (Consensus) உருவாகக் காரணமானார். அவரையே போலக் கலைஞரும் ஐக்கிய முன்னணியின் உருவாக்கத்திற்கும் நிலைப்பாட்டிற்கும் காரணமாக இருந்திருக்கிறார். பல்வேறு மாநிலக் கட்சிகளுக்கும் தெளிந்த தொலை நோக்கு ஏற்படும் நிலையில் இந்தியா கூட்டணி அரசின் நிலைபேற்றைக் காணும். இதனை எய்தத் தமிழகமும் கலைஞரும் தொடர்ந்து போராடியாக வேண்டும். கல்லக்குடிப் போராட்டம், நங்கவரம் போராட்டம், கருப்புக்கொடி போராட்டம், மும்முனைப் போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டம், ஈழத் தமிழர் போராட்டம், நெருக்கடி நிலையால் போராட்டம் எனப் போராட்டங் களைத் தொடர்ந்து நடத்தித் தியாகத் தழும்புகளைப் பதக்கங்களாகப் பெற்றுள்ள ஒரு தலைவனின் எழுபத்தைந்தாம் வயதிலும் பொறுப்புச் சுமைகள் மூட்டைகளாய் தலையில் சுமத்தப் பெறுகின்றன. என்செய்ய! அவர்தாம் தாங்கி நடந்தாக வேண்டும். இந்த நிலையில் 'நெஞ்சுக்கு நீதி' படைத்துக்காட்டும் படிப்பினைகள் சிலவற்றை இங்குக் கருதுதல் தகும்.

படிப்பினைகள்

அரசியல் சமூக வரலாறாகக் காட்சிதரும் 'நெஞ்சுக்கு நீதி' சில ஆழ்ந்த படிப்பினைகளைக் கற்பிக்கின்றது. இப்படிப்பினைகள் எதிர்காலத்தில் தமிழகத்தில் கோலோச்சுவார் யாராக இருப்பினும் பயன்படத்தக்கன. அவற்றை இங்குக் காணலாம்.

1. விடுதலை பெற்ற இந்தியாவில் மாநிலங்களில் பெரும்பான்மையான மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற மாநில அரசுகள் அரசியல் சட்டத்தின் 356 ஆம் பிரிவைப்பயன்படுத்திப் பலமுறை கலைக்கப்பட்டிருக்கின்றன. மத்தியில் காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்த காலத்திலேயே மாநில அரசுகள்

அதிகமாகக் கலைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் காங்கிரஸ்கட்சி 1945இல் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில்

> "இந்தியக் கூட்டாட்சி என்பது அதன் பல்வேறு பகுதிகளின் விரும்பி இணையும் ஒன்றியமாக இருக்க வேண்டும். மாநிலங் களுக்கு அதிக உரிமை அளிக்க எல்லோருக்கும் பொதுவான முக்கிய அதிகாரங்கள் கொண்ட குறைந்த அளவு அதிகாரத்தை மத்திய அரசுக்கும் மாநிலங்கள் விரும்பினால் ஏற்கும் பொதுவான அதிகாரங்கள் கொண்ட பொதுப்பட்டியலை ஏற்கும் உரிமையை மாநில அரசுக்கும் வழங்கலாம்".

என்று குறிப்பிட்டது. ஆனால் வரவர இந்த அறிவிப்பும் இதனைத் தொடர்ந்த அரசியல் நிர்ணய சபை முடிவும் பயனற்றுப் போய்விட்டன. கலைஞர் தலைமையிலான அரசு இரண்டாவது முறை கலைக்கப்படும்போது ஆளுநராக இருந்த பஞ்சாப் மாநிலத்தவர் அதில் கையொப்பமிடவில்லை என்பதையும் குடியரசுத் தலைவராக இருந்த தமிழ் நாட்டவர் அக்கலைப்பில் தீவிரமாகச் செயல்பட்டார் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். இதிலிருந்து தமிழகத்தில் இருக்கின்ற சில திராவிட எதிர்ப்புச் சக்திகள் அவ்வப்போது தங்களுக்கு வாய்ப்புக்கிடைக்கும் போது பெரியார் வழியிலான அரசமைப்புகளைக் கலைக்கத் தயங்குவதில்லை. இவர்கள் அறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோரைப் பயன்படுத்திக் கொண்டதும், திராவிட இயக்கத் தலைவர்கள் இவர்களுக்கு உதவியதும் உண்டு. செல்வாக்கும் மேலிட ஆதரவும் இல்லாத காலத்தில் நீர்மூழ்கிக் கப்பலைப் போல இருக்கும் இவர்கள் வாய்ப்புக் கிடைக்கும் போது ஏவுகணைகளாக மாறுவார்கள். அடிக்கடி இப்படித் தமிழர்கள் சாய்க்கப்பட்டும், போதிய கவனத்தைக் கொள்ளாமலிருப்பது வரலாற்று நிகழ்ச்சியாகிவிட்டது. இதனை ஒருபடிப்பினையாகக் கொள்வது அசல் தமிழர் அரசுக்கு நலம்பயக்கும்.

2 நெருக்கடி நிலை என்ற பெருந்துயரம் இந்தியாவில் தன் அலை வீச்சையும் வலைவீச்சையும் நிகழ்த்திச் சூறைப்புயலை விளைத்தது. இந்தியா உரிமை பெற்ற நாடுதானா என்ற ஐயம் பலர்க்கு அப்போது ஏற்பட்டது. பழுத்த தேசியவாதிகளான காமராசர் போன்றவர்களாலும் தாங்கிக் கொள்ளாத கொடுமையாக அஃது அமைந்தது. அதன் பின் விளைவே காங்கிரசுக் கெதிரான பலகட்சிகள் சேர்ந்து அமைத்த ஜனதா அரசு. தனிப்பட்ட சிலரின் பதவி ஆசையாலும் ஒருமித்த மனப்பாங்கு இன்மையாலும் அவ்வரசு கவிழ நேரிட்டது. அடிப்படைக் கொள்கைகளில் ஒற்றுமையில்லாத கூட்டணி என்றும் நிலைக்காது. அதன்பின் வி.பி.சிங்கின் தலைமையில் அமைந்த இலட்சியப் பிடிப்பும் செயல்திறனும் மிக்க அரசும் மதவாத சக்திகளால் கீழிறக்கப்பட்டது. எனவே ஒருபக்கத்தில் சுயாட்சி உரிமைகளை மறுக்கின்ற காங்கிரசு, மற்றொரு பக்கத்தில் மதவாத சக்திகள் ஆகிய இவற்றுக்கிடையே மூன்றாவதான கூட்டணி உருவாகும் நிலையைக் காலம் கனிய வைத்தது. இந்தக் கூட்டணி நிறுவிய ஐக்கிய முன்னணி அரசு, காங்கிரசின் ஆதரவு விலக்கிக் கொள்ளப்பட்ட நிலையில் பதவியிறங்கியது. தெளிவான ஒரு பெரும்பான்மை இல்லாத நிலையில்

ஆட்சிப் பொறுப்பேற்பதும், ஆட்சிப் பொறுப்பேற்பதற்காகவே கூட்டணி அமைப்பதும் நிலைபேற்றைத் தரமாட்டா. வலிமைமிக்க மாநில இயக்கங்கள் தெளிவான சில அடிப்படைக் கொள்கைகளின் அடிப்படையில் அமைக்கும் கூட்டணி எதிர்காலத்தில் வெற்றிபெற வாய்ப்புள்ளது. அதனைக் கட்டிக்காக்கும் பொறுப்பும் வழிநடத்தும் வாய்ப்பும் தமிழகத்திற்குக் கிடைக்குமாயின் அதனை மறுக்கக் கூடாது. காமராசர் ஒருமுறையும் கலைஞர் ஒருமுறையும் இவ்வாய்ப்பை மறுத்திருக்கின்றனர். எதிர்காலத்தில் இதனை மறுக்காமல் ஏற்பது தமிழகத்திற்கு நலம்பயக்கும்.

3. அண்மைக் காலத்தில் சாதீயக் கட்சிகளுக்குச் செல்வாக்கு மிகுந்து வருகிறது. எனினும் இவற்றோடு சாதிமத நம்பிக்கையற்ற இயக்கம் தேர்தல் உறவு கொள்வது அதன் அடிவார வலிமையையே குலைக்கும். ஒருசாதி இயக்கத்தைச் சார்தல் மற்ற சாதிகட்குப் பகையாய் முடியும். சாதீயத் தலைவர்களுக்கு நாடு, மொழி, தமிழினம் என்ற குறிக்கோள்களும் இல்லை. தொண்டு செய்து படிப்படியாக உயர்ந்தவர்களாகவும் இத்தலைவர்கள் இல்லை.

4. கலைஞர் தம் இயக்கத்தின் தலைமைப்பதவியை வலிந்து பிடிக்கவில்லை. அதனை அவர் வேண்டாத நிலையிலும் அவரிடம் பெரும்பான்மை ஒப்புவித்தது. மிகப்பெரும்பான்மை அவரிடம் பொறுப்பை விரும்பி ஒப்படைக்கும் அளவிற்கு அவர் உயர்ந்திருந்தார். அவருடைய பன்முகத்திறன் இன்று இயக்கத்தில் வெறெவரிடமும் இல்லை. அவருடைய இலக்கியப்படைப்பாற்றலும் திறனாய்வுத் திறனும் அடுத்த தலைமுறையினரிடம் இல்லை. அப்படிப்பட்ட சக்திகளை ஆட்சியிலமர்ந்த பின் இயக்கம் இனங்கண்டு பேணி வளர்க்கத் தவறிவிட்டது. அமைச்சர் நிலையிலிருப்பவர்களே போதுமான தமிழறிவு இல்லாமலிருப்பது இந்த இயக்கத்தின் பாரம்பரியத்திற்குப் பெருமை சேர்ப்பதன்று. தமிழ் வளர்க்கும் இதழ்கள் பற்பல, இயக்கத்தவரால் நடத்தப்பட்டுக் கொண்டிருந்த நிலை பழைய வரலாறாகிவிட்டது.

> "கருணாநிதி அவர்களே! தாங்கள் ஒரு உண்மையை உலகிற்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறீர்கள். கீழ்த் தளத்திலிருந்து ஒரு மனிதன் மிக உன்னத நிலைக்கு வரமுடியுமென்று காட்டியதற்காக எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும். அரசியல் வாதிகள் இடையில் மறைந்துவிடலாம் ஆனால் எழுத்தாளராக மனிதத் தன்மை உள்ளவராக இருக்கும் கருணாநிதி என்ன நேர்ந்தாலும் சரித்திரத்திலிருந்து மறையமாட்டார்."

இது அன்றைய தமிழக ஆளுநர் கே.கே.ஷா.31.7.1971 அன்று நிகழ்த்திய சொற்பொழிவின் ஒருபகுதி. இப்படி உருவாகக் கலைஞர் எப்படியெல்லாம் உழைத்திருக்க வேண்டும்? எத்தனைத் துன்பங்களை ஏற்றிருக்க வேண்டும்? நெஞ்சுக்கு நீதி இவற்றை ஆவணப்படுத்திக் காட்டுகையில், எதிர்காலத்திலும் இப்படி ஒருவர் இயக்கத்துக்கு வேண்டுமே! சிலம்பையும் குறளையும் சித்திரமாகத் தீட்டவல்ல, கதையும் கவிதையும் புதினமும் கை

நொடிப்போதில் உருவாக்கும் கலைத்திறனோடு அரசியல் வித்தகமும் வல்லவர் வேண்டுமே! என்று மனந்துடிப்பதை யாரிடம் சொல்வது? வரவர இயக்கத்தில் எழுத்தாளர்கள் புலமையாளர்கள் குறைந்துவருவதால், இயக்கத்தின் இலட்சியத்திற்கு மாறுபட்டவர்கள் இயக்கக் கூடாரத்தில் புகுந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அடுத்த தலைமுறையை வலிவுற வளர்க்க இயக்கம் கவனம் கொள்ள வேண்டும். தமிழ், தமிழ்நாடு, தமிழினம் என்ற மூன்றில் அழுத்தமான கவனம் செலுத்தப்படாத காலத்தில்தான் இயக்கத்தை உடைக்கும் முயற்சிகள் நிகழ்ந்திருக்கின்றன. எனவே இவற்றில் உணர்ச்சியும் அறிவும் மங்காத வகையில் அடுத்த தலைமுறை உருவாக்கப் பெறவேண்டும்.

இந்தக் கருத்துக்கள் நெஞ்சுக்கு நீதியைப் படித்து முடிக்கும் பலர்க்குத் தோன்றக்கூடும்; தோன்ற வேண்டும். அறியாத பாமரர்களும், அற்பக் கவர்ச்சி-நாட்டமுடையவர்களும், மொழிப் புலமையற்ற பதுமைகளும், நாடு மொழி இனக் கோட்பாடற்றவர்களுமே அரசியலில் மலிந்துவிட்டனர் என்று பொதுவாகக் கூறப்பெறும் குற்றச் சாட்டை, நீண்ட தொண்டுப் பாரம்பரியமும், தொலை நோக்குமுடைய ஓரியக்கமும் பெற்றுவிடக் கூடாது.

அடிக்குறிப்புகள்

1. ந. சஞ்சீவி. இலக்கியத் தலைவர் கலைஞர், ப.167
2. I must be conscious that none is qualified as myself to describe the service of my thoughts and actions.
   - The New Encyclopacdia. vol.2. 1010.
3. The immediate attraction of biography for the reader is two foldN it appeals to our curiosity about human personality and it appeals to our interest in factual knowledge in finding out what exactly happened.
   - Adam Sheton.
   Biography. p. 3.
4. திராவிடம் பாடி திரைப்படங்கள், அறந்தை நாராயணன் ப.க.67
5. J.P. From marxism to Total revolution - Ramchandra Gupta, P.156.
6. President R. Venkataraman, N.G.Choudry. F.68

கடித இலக்கியம்

5 கலைஞரின் கடிதக் கலை நுட்பங்கள்

முனைவர் அ. அந்தோனிகுருசு,

மறவன்மடல், நம்நாடு ஆகிய வார ஏடுகளிலும், முரசொலி நாளேட்டிலும் கலைஞர் எழுதிய கடிதங்கள் பத்துத் தொகுதிகளாக வெளிவந்துள்ளன. 1968 அக்டோபர் 22முதல் 1977 பிப்ரவரி 13 வரையிலான காலக்கட்டங்களில் அவை எழுதப்பட்டுள்ளன. மொத்தம் 370 கடிதங்கள் கடித நூல் தொகுதிகளில் இடம் பெற்றுள்ளன.

ஒரு கடிதம் யாருக்கு எழுதப்படுகிறது என்பதற்கான அடிப்படையில் மூன்று வகையாக எழுதப்படும். அந்தரங்கக் கடிதம், அலுவற்கடிதம், இதழியல்வழி அச்சிடும் நோக்குடைய வெளிப்படைக் கடிதம் என ஜே.ஏ.கடர் மூன்று வகைகளாகப் பகுத்துள்ளார்.[1] கலைஞர் இதழ்களில் எழுதியவை எல்லாமே வெளிப்படை அரசியல் கடிதங்களே!

தமிழில் வெளிவந்துள்ள கடித இலக்கியங்களை பொருள் நோக்கில் வகைப்படுத்திய முனைவர் கடிகாசலம் அ) சமூக வாழ்வியல் பற்றியவை, ஆ) அறிவியல் பற்றியவை, இ) சமயம் பற்றியவை, ஈ) காதல்பற்றியவை, உ) பொதுப்பொருள் பற்றியவை என ஐந்தாகப் பகுத்துள்ளார்.[2] தம்பிக்கு அண்ணனின் கடிதங்களை அவர் கவனத்தில் கொண்டிருக்கும் "அரசியல் பற்றியவை" என்ற கருப்பொருள் வகைப்பாட்டைக் குறிப்பிடாதது ஏன் என்று தெரியவில்லை. கலைஞர் தமது கடிதங்களை திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைத் தளபதியாக இருந்த பொறுப்புணர்வின் கடமைச் செயல்பாடாக எழுதியுள்ளார். "இந்தப் பத்துத் தொகுதிகளைத் தொடர்ந்து படிப்போர்க்குச் சுமார் ஒன்பதாண்டு கால அரசியல் வரலாற்றுக் குறிப்புகள் கூடுமானவரையில் தேதி வாரியாக கிடைக்கும்"[3] என அவர் தமது என்னுரையில் குறிப்பிடுகிறார்.

தாம் எழுதிய கடிதங்களைச் சமகால அரசியல் வரலாற்று நிகழ்வுகளின் பதிவுகளாக கலைஞர் கருதி எழுதியுள்ளார். அரசியல் பொது வாழ்வில் "பாசறை போர்க்காலம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு"[4] - ஆகியவற்றில் அவர் பல சோதனைகளைக் கடந்து வந்தவர். "குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து இரணமாக்கியுள்ளன! அந்த இரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துக்கள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன! பயன்படுகின்றன!"[5] - என்கிறார். மற்றபடைப்புகளைப் போல அறிவு மற்றும் கற்பனைத் தளங்களிலிருந்து மட்டுமல்லாமல் உணர்வுத் தளத்திலிருந்தும் அவருடைய கடிதங்கள் படைக்கப்பட்டுள்ளன என்று அறியலாம்.

சம கால அரசியல் நிகழ்வுப் பதிவுகளாக கலைஞர் கடிதத்தில் கருப்பொருளை எழுதுவதால் அவை இலக்கியத் தகுதியைப் பெற்றுவிடுவதில்லை! என்ன எழுதுகிறோம் என்பதைவிட, அதை எப்படி எழுதுகிறோம் என்ற அணுகுமுறைக்கு ஏற்ப தமக்கான தனித்தன்மையுடைய பாணியை அவர் வகுத்துக் கொண்டு எழுதியிருப்பது அவரது அரசியல் வரலாற்று மடல்களை இலக்கியத் தரமுள்ளவைகளாக உயர்த்தக் காரணமாகின்றன.

கி.மு. முதல் நூற்றில் வாழ்ந்த உரோமாபுரியின் ஒப்பற்ற பேச்சாளரும் அரசியல்தலைவருமான சிசரோ என்பவர் -சீசர், புரூட்டஸ், பாம்பே முதலிய மன்னர்களுக்கு' 864 கடிதங்களை எழுதினார்.[6] இந்த நூற்றாண்டின் இறுதியில் வாழும் தமிழக அரசியல் தலைவரான கலைஞர் இந்நாட்டு இக்கால மன்னர்களுக்கு! நண்பா! எனவும் உடன் பிறப்பே எனவும், ஆருயிர்த் தோழா! எனவும், அன்பின் ஊற்றே! எனவும் ஆற்றல்நிறை வீரா! எனவும் பலவாறாக விளித்துப் பொதுக்கடிதங்கள் விடுத்துள்ளார். இவ் ஆய்வுக் கட்டுரைக்கு முதல் தொகுதியின் 32 மடல்களே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

இந்திய விடுதலைக்கு முன்னால் மகாகவி பாரதியார் எழுதிய கடிதங்களுள் அரசியல் குறித்தவை இலக்கிய அம்சம் வாய்ந்திருந்தன. அதற்குப் பிறகு நாடு விடுதலை பெற்ற ஆண்டுக்கு முன்னும், குடியரசு ஆட்சிமுறை மலர்ந்த கால கட்டத்துக்குப் பின்னுமாக இரசிகமணி டி.கே.சிதம்பரநாதர் தம் சகோதரிக்கும் தோழரும் நீதிபதியுமான எஸ்.மகராஜனுக்கும் எழுதிய சொந்தக் கடிதங்கள், பலதுறைக் கருத்துப் பரிமாற்றமாக இருந்தாலும் கவிதை இலக்கியக் கருத்துப் பரிமாற்றம் முதன்மைபெற்ற உள்ளடக்கத்தைக் கொண்டிருந்ததால் அவை இலக்கியக் கடிதங்களாகக் கருதப்பெற்றன.

"நீங்கள் பல தமிழ் நூல்களை எழுதியிருக்கிறீர்கள். ஆனால் உங்கள் உணர்வுகளின் ஆழ அகலங்களையும் உங்கள் ஆளுமையையும் (Personality) உங்கள் கடிதங்கள் காட்டுவது போல நீங்கள் எழுதிய நூல்கள் காட்டவில்லை."[7] என நீதிபதி எஸ். மகராஜன் இரசிகமணியிடத்தில் நேரில் கூறிய கூற்று, அரசியல் கடிதக் கலை கலைஞருக்கும் பொருந்தும் எனலாம். ஏனெனில் அவரது கடிதங்கள் நேரில் நின்று உரையாடுகின்ற பாங்கின. தன் தி.மு.க. தம்பிகளையோ, கட்சியை விட்டு பதவி ஆசை கொண்டு விலகிப்போன முன்னாள் நண்பர்களையோ தம் முன்னால் கண்ணெதிரே நிறுத்திக் கொண்டு பேசும் பாணியில் எழுதப்பட்டுள்ளன.

தமிழ் இலக்கிய வரலாற்றில் கடித இலக்கியமுத்திரை பதித்த முனைவர் மு.வரதராசனார் தங்கைக்கு, தம்பிக்கு, அன்னைக்கு, நண்பர்க்கு என எழுதிய கற்பனைக் கடிதங்களில் நான்கு நூல்களை வெளியிட்டார். அவை அறுபதுகளிலும், எழுபதுகளிலும் வெளிவந்தன. கலைஞர் இதழ்களில் தம் உடன் பிறப்புகளுக்கு அரசியல் மடல்கள் எழுதி ஏற்படுத்திய செல்வாக்கே, இலக்கிய உலகில் பேராசிரியர்களாக இருந்த வேறு சிலரையும், தங்களது நெஞ்சுக்கு நெருக்கமானவர்களை நேரில் சந்திக்க

முடியாதபோது, கருத்தைப் பரிமாறிக் கொள்ளக் கடிதம் என்கிற ஊடகம் தலை சிறந்த கலைவடிவம் என்று உணரச் செய்தது. இது தொடர்பாக அறிஞர் அண்ணாவும் அவரைத் தொடர்ந்து கலைஞரும் அரசியல் கடித இலக்கியப் படைப்புலகில் பரவலான வீச்சை ஏற்படுத்தினார்கள் எனலாம். எவ்வாறென்றால் கலைஞர் கடிதங்களை எழுதி வந்த 1968 - 1977-க்கு இடைப்பட்ட காலத்திற்கு முன்னும் பின்னும் ஆகத்தான் கடித இலக்கிய வடிவில் கருத்து எடுத்துரைக்கப் பலரும் பொதுக் கடிதப் பாணியில் நூல்களைப் படைத்திருக்கிறார்கள். "மகாத்மா காந்தி சகோதரிகளுக்கு எழுதிய கடிதங்கள்'' அறுபதுகளின் நடுவில் குஜராத்தியிலிருந்து ஆங்கிலத்திற்கும் பிறகு தமிழுக்கும் மொழி பெயர்த்து வெளிவந்தன.[8] (1964) இலொயோலா கல்லூரிப் பேராசிரியர் மு.சு.அருள்சாமியின் காதலிக்கு என்ற கடித இலக்கிய நூலை அடுத்து தோழர்க்கு (1968) என்கிற கடித இலக்கிய நூல் வெளிவந்தது.[9] 'புரட்சியில் இளைஞர்கள்'"[10] என்கிற நூல் தொகுப்பில் இடம் பெற்ற சோவியத் நாட்டில் அச்சிடப்பெற்ற மொழி பெயர்ப்புக் கடிதங்கள் (1977) தொகுப்பும் வெளி வந்தது. "இரசிகமணி கடிதங்கள்" (1979) தொகுப்பும் இதனை அடுத்து வெளிவந்தது.[11] குழந்தை மருத்துவர் எஸ். ராஜாவின் ஒரு டாக்டரின் கடிதங்கள் (1984) வெளிவந்தது.[12] முரசொலியில் கலைஞர் தொடர்ந்து எழுதி வரும் அரசியல் கடிதங்கள் அந்த ஊடகத்திற்கு உயிரூட்டும் கலைஞரது எழுத்தாற்றலால் கடிதம் என்னும் வடிவம்" தொடர்பு ஊடகமாக நிலைபெறக் காரணமாகியுள்ளது.

அறுபதுகளின் இறுதிக்கால அரசியலை எழுதினாலும், இலக்கியப் படைப்பாளரான கலைஞரால் அவற்றைக் கற்பனை மெருகூட்டிச் சொல்லாமல் எழுத முடியவில்லை. எதிர்க்கட்சியான காங்கிரசு திமுக-வுடன் நிகழ்த்திய கருத்து மோதல், கட்சி மோதல், இந்தி எதிர்ப்புப் போர், அந்தப் போரில் செத்து மடிந்த செயல் மறவர்கள், நடுநிலையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாளேடுகளான நவசக்தி, சுதேசமித்திரன் போன்றவை காங்கிரசுக்குச் சார்பான நிலைப்பாடு கொண்டு கழகத்திற்கு இழுக்குச் சேருமாறு வெளியிட்ட செய்தித் திரிபுகள் முதலிய பல்வேறு செய்திகள் பற்றிய தமது எதிர்வினைகளைக் கடிதக் கருத்துப் பரிமாற்றம் செய்ய பலவகைக் கலைநுட்பங்களை-உத்திமுறைகளைக் கலைஞர் கடைப்பிடித்துள்ளார்.

கடித கலை நுட்பங்கள்

அ) ஒப்பீட்டு உத்திமுறை :

1) சில மனிதர்களது செயல்முறை பற்றி மக்கள் எதிர்வினை
2) விலங்குகளது செயல்முறை ஒப்பீடு
3) காப்பியக் கதைமாந்தர் ஒப்பீடு

ஆ) கற்பனைப் படைப்பாக்கம் :

4) உருவகக் கதையை அங்கதமாகக் கையாளல்
5) உவமைகளை அடுக்கிக் கூறி வினா எழுப்பல்
6) உவமையைக் கதைபோலச் சித்தரித்தல்.
7) மக்கள் வழக்கிலுள்ள கதையாடல்களைப் பொருத்திக் காட்டல்.

இ) இதழியல் தகவல் மூலங்களை மேற்கோள் காட்டி விமர்சனம் செய்தல்.

8) திரைக்கதை நிகழ்ச்சியை மேற்கோள் காட்டிப் பேசல்.

ஈ) மருட்கையூட்டும் வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சான்று காட்டல்

உ) கவிதை நடையில் வருணனை செய்தல் முதலியன கலைஞரது கடிதக்கலை நுட்பங்கள் எனலாம்.

ஒப்பீட்டு உத்திமுறை :

அ. உலக நிகழ்வை ஒப்பிடல்

கழகத்தில் தனக்குப் பதவி தரப்படவில்லை என்பதற்காகத் தேர்தல் நேரத்தில் கட்சியைவிட்டு விலகிச் செல்பவர் உண்டு. இவர்களது தன்னலச் செயல்பாட்டை மக்கள் அறிவார்கள். சுயேட்சை என்கிற பெயரால் தனித்து நின்று போட்டியிட்டுப் பதவியாசனத்தில் அமர முயலும் இத்தகையோரை மக்கள் ஏற்கமாட்டார்கள். இந்தக் கருத்தை நெஞ்சில் நிறுத்துகிற முறையில் எவ்வாறு எடுத்துரைக்கலாம் ? எனச் சிந்தித்து ஒப்பீட்டு முறையில் கலைஞர் கருத்துணர்த்துகிறார்.

அமெரிக்கச் குடியரசுத் தலைவர் ஜான்கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டார். பிறகு ஐந்தாண்டுகளில் அவருடைய துணைவி ஜாக்குலின் தமது 39ஆம் வயதில் பத்து வயது மகளும், எட்டு வயது மகனும் கையில் மெழுகுவர்த்தி ஏந்த 68 வயதுக் கிழவரை மணந்தார்.

"அமெரிக்க நாடு - விவாக ரத்துக்களை விதவை மணங்களை
வியப்போடு பார்க்கிற நாடல்ல! ஆனாலும் அந்தநாட்டில்
பெரும்பாலோர் இந்தத் திருமணத்தைப் பாராட்டிட முன்வரவில்லை!
காரணம், ஜான்கென்னடிக்கு ஜாக்குலின் இழைத்துவிட்ட பெரிய
கொடுமையாகவே அவர்கள் கருதுகிறார்கள்" இதனை மக்கள்
மனம் ஒப்பவில்லை!

"மாலையில் இருந்த மலர்கள் திடீரென உதிரிப்பூக்களாவதா ?
கழகத்தில் இருந்தவர்கள் கழகத்தையே எதிர்க்கச் சுயேச்சைகள்
ஆவதா ?[13]

(22.10.68)

என்று "மறவன்" கேள்விகளாக மடல்விடுக்கிறார். இதன்மூலம் கழகத்தில் வேறு எவரும் இதுபோன்று முடிவெடுத்துவிடாதவாறு தடுத்து விடுகிறது! விளைவுகளைத் தெளிவாக முன்னிறுத்துகிறது.

ஆ. விலங்குச் செயலை ஒப்பிடல்

ஆ.1) முயல் - ஆமை பஞ்சதந்திரக் கதையைக் கருத்து விளக்கத்துக்காகக் கலைஞர் பயன்படுத்துகிறார். அதனை இரண்டு வேறுபட்ட முறைகளில் ஒப்பிடுகிறார். அடிமட்டத் தொண்டர்கள்தாம் கட்சியை வளப்படுத்துவோர்; அயராமல் உழைத்து வெற்றி அறுவடை வழங்கக் காரணமாவோர் 'நீ விளைத்த கழனி! நீ உழைத்த உழைப்பு' என்பது மடல் தலைப்பு.

"தோரணங் கட்டுவதற்காகச் சுவரொன்றில் ஏறிய தோழன் ஒருவன்

கால் தவறிக் கீழே விழுந்து மாண்டான் திருப்பூரில்! இன்னொரு செயல்வீரன் சென்னையில் மின்சாரக் கம்பத்தின் உச்சியில் சிக்கிக் கருகிப்போனான். அப்படியெல்லாம் . . . பாடுபட்ட கரங்களப்பா உன்கரங்கள்" என்று கழகச் செயல்மறவனைஅருகே முன்னிறுத்திப் பேசுகிறார். சொல்லுகிற கருத்தை மனத்தில் பதியச் செய்யப் பள்ளிக் கதையை நினைவுபடுத்துகிறார்.

"முயலும் - ஆமையும் கதை - தொடக்கப் பள்ளியிலேயே கற்றுக் கொண்டது! தூங்கிவிட்ட முயலாகிவிடாதே!" (24.10.68) என[14] எச்சரிக்கை விடுக்கிறார்.

ஆ. 2) ஆனால் வேறொரு இடத்தில் முயலாகத் தம்மை ஒப்பிட்டுக் காட்டிப் புதுவிளக்கம் தருகிறார். தி.மு.க. 1968 மாநகராட்சித் தேர்தலில் 96 இடங்களில் போட்டியிட்டது, 54 இடங்களில் வென்றது; 42 இடங்களை இழந்தது. அப்போது வட்டத்தில் வெற்றி வாய்ப்பை இழந்த கழகத்து நண்பனுக்கு எழுதுகிறார்.

"நாம் முயலைப் போல் கொஞ்சம் தூங்கிவிட்டோம்; நல்ல வேளை! ஆமை நம்மைத் தாண்டிப் போவதற்குள் விழித்து விட்டோம் . . . முயலே! முன்போலச் சுறுசுறுப்பாக இரு! துடிப்போடு செயலாற்று (31.10.68)[15]

என்று ஒப்பிட்டுக் காட்டிச் செயலூக்கப்படுத்துவதை காணலாம். முயலின் துடிப்பையும், சுறுசுறுப்பையும் கழகத் தொண்டனுக்கு வேண்டிய பண்பு நலன்களாக எடுத்துரைப்பது முயல் குறித்த புதிய பார்வையாக - அதன் குறியீட்டுக் குணநலனுக்கும் புதுப் பொருள் கற்பிப்பதாக உள்ளது.

ஆ. 3) நாகர்கோவிலில் காங்கிரஸ் கட்சியினர் கொலை வன்முறைத் தாக்குதல், வண்டிகளை உடைத்தல், மக்கள் வாக்குகளைக் காசை வீசி வாங்குதல் போன்ற மக்கள்நாயக மரபுரிமைகளை அழிக்கும் செயல்கள் செய்து வெற்றிக் கொண்டாட்டம் நடத்த முடிவு செய்தனர். காமராசர் வெற்றி பெற்ற நாளை ஜனநாயக உரிமைப் பாதுகாப்பு நாளாகக் கொண்டாட முனைந்தனர். அப்போது அதனை "வேங்கைபோடும் வெள்ளாட்டு வேடம்!"[16] என்று கலைஞர் தமது கடிதத்தில் வருணித்தார். இவ்வாறு புனையா ஓவியமாக ஒரு வாக்கியத்திலேயே கதைக் காட்சியைச் சொற்சித்திரமாக்கும் நுட்பத்தை, எதிர்க்கட்சியினரது அநீதிச் செயலை அம்பலப்படுத்திச் சாடும் உத்திமுறையாகக் கையாண்டுள்ளார்.

ஆ. 4) தி.மு.க.வினர் அமைச்சர் பதவி ஏற்றபோது காங்கிரஸ் தலைவர் ஒருவர் தமது கட்சி ஏட்டில் பழிதூற்றினார். "இந்திய ஜனநாயகத்தில் வயது 21 ஆகிவிட்டால் எந்தக் கழுதையும் மந்திரியாகலாம்" என்று எழுதினார்.[17] இதற்குப் பதிலடி கொடுக்க முனைந்த கலைஞர், அரசன் பன்றியான உருவகக் கதை மூலம் சாடினார்:

"பன்றியாகுமாறு சாபம் பெறுகிறான் ஒரு மன்னன். அவன் தன் மகனை அழைத்துப் பன்றி உருப்பெற்றதும் கொன்றுவிடப் பணிக்கிறான். மகன் பன்றி உருத் தந்தையைக் கொல்ல முனைந்த போது தடுத்து, சிலகாலம் பன்றி வாழ்வு வாழ்ந்து பார்க்க நினைத்து, ஓராண்டு கழித்து

வரக் கூறுகிறான். ஓராண்டு கழித்து சகதியில் தந்தைப் பன்றி, வேறு பெண் பன்றியோடும் குட்டிகளோடும் கிடக்கக் கண்டு கொல்ல முனைகிறான். பன்றித் தந்தை தடுத்து, அந்த வாழ்க்கை தனக்குப் பழகிவிட்டது" என்னைக் கொல்லாதே! போய்விடு! என்கிறான். சுவையாக இந்தக் கதையை வருணித்து எடுத்துக் கூறிய கலைஞர் இறுதியில், "காங்கிரஸ் என்னும் சகதியிலே வாழும் பன்றி வாழ்வு எனக்குப் பழகிவிட்டது; நம்மைக் கழுதைகள் என்று கூறுகிறவர் தன்னைப் பற்றி எழுதிக் கொண்ட கதை இது!" (22.11.68)[18] என முடிக்கிறார். இதில் உருவகக் கதையால் பதிலடி கொடுக்கும் பழிகரப்பு அங்கதச் சுவை சிறக்கிறது.

இ. கற்பனைப் படைப்பு முறைமைகள்

இ. 1) உவமைகளை அடுக்கி வினா எழுப்பும் உத்தி

1968 மாநகராட்சித் தேர்தலில் காங்கிரஸ் 120க்கு 68 இடங்களில் வென்றது. அப்போது "தி.மு.க.வுக்குச் சரிவு" என விமர்சித்தனர். அப்போது அது கண்டு கலங்கும் கழகத்து நண்பனது மனக் கலக்கத்தைத் தம்முடைய கலக்கமாக உணருகிறார் கலைஞர்.

"பிறவிக் குருடன் கண் பெற்றது போலவும் - நொண்டி, கால்களைப்
பெற்றது போலவும் - பிணம் உயிர் பெற்றது போலவும் -
பேரானந்தம் கொண்டு குதியாய்க் குதிப்பதற்கு என்ன
இருக்கிறது?". . .
மலடி பெற்ற மகன் போல - புதையல் எடுத்த தனம் போல
அவர்கள் மகிழ்வதற்கு என்ன இருக்கிறது?"

(10.11.68)[19] என வினவுகிறார். காங்கிரசார் தி.மு.க.தொண்டரைப்போல கட்சிக்காகக் கடுமையாக உழைத்து வெற்றி பெறவில்லை. பல இடங்களில் கொலைகளையும், வன்முறைகளையும் நடத்திப் பெற்ற வெற்றி கொண்டாட்டத்திற்குரியதல்ல என்று வாதிடுகிறார்.

இ. 2) எழுச்சியூட்டும் உரைப்பாணியில் உவமை அடுக்கிக் கூறல்

கழகத் தொண்டன் செயலூக்கம் கொண்டு எவ்வாறு பணியாற்ற வேண்டும்? என அறிவுறுத்தி எழுச்சியூட்ட விரும்புகிற கலைஞர் எழுதுகிறார்.

"உன் பணியினைத் துவக்கு!
பம்பரமெனச்சுழன்றிடு!
எறும்பெனச் சுறுசுறுப்புக் காட்டிடு! (24.10.68)20

அமெரிக்கா சென்று அறிஞர் அண்ணா மருத்துவம் செய்து திரும்பிய போது தமது பூரிப்பைக் கலைஞர் வருணிக்கின்றார்.

"எங்கும் ஆரவாரம்! எழுச்சி!
தென்றல் - தென்பாங்கு - தேன்கீதம்!
மாமுகில் கூடக்கண்டு - மயிலினம் ஆடக்கண்டோம்
மாங்குயில் கூவக்கண்டு மானினம் தாவக் கண்டோம்.
பூம்பொழில் மலரக்கண்டு பூவையர் பாடக்கண்டோம்.
எம்முயிர் அண்ணன் கண்டு

தம்முயிர் பெற்றாற்போலத் தமிழர்கள் மகிழக் கண்டோம்"

(6.11.68)[21] இவ்வாறு உணர்ச்சி நடையில் உவமைகளை அடுக்கிக் கூறி வருணனை செய்வது கலைஞரது தனிப்பாணி.

இ. 3) உவமையைக் கதை போலச் சித்திரித்தல்

கழகத்தை விட்டுப் பிரிந்தவரைப் "பழைய நண்பா" என்று அங்கதச் சொல்லால் கலைஞர் விளித்துப் பேசுகிறார். அத்தகையோர் வசைபாடித்தம்மை காயப்படுத்த முயல்வதைக் கண்டு இரங்குகிறார்.

"சிரங்கு பிடித்தவன் அழுத்தி அழுத்தி - கையை மாற்றி மாற்றி மாற்றி

முரட்டுத்தனமாகச் சொறிந்து கொள்வதிலே ஒரு தனி இன்பம் காண்பான். சொறிந்த அந்த இடத்தில் ரணம் ஏற்பட்டு எரிச்சல் எடுக்கும் போதல்லவா தெரியும் வேதனை! என்னை நீ தூற்றும்போது உன் மனப்புண்ணைக் குரங்குப் புண்ணாக ஆக்கிக் கொள்கிறாயே என்பதற்காகப் பரிதாபப்படுகிறேன். **(5.12.68)**[22]

என்கிறவரிகள் கலைஞரது மன வலிமையையும் எதிர்வினையாளரது மனப்பாதுகாப்புக்கவசம் பூண்ட செயலை அம்பலப்படுத்தி அவர்களது பலவீனத்தை எடுத்துக்காட்டுவதையும், அதைக் கதைபோலப் புனைந்து கூறும் அழகையும் காணலாம்.

இ. 4) உருவகக் கதையால் பிழையுணர்த்தல்

அரசியலில் கொள்கை மோதல் குறைந்து தனி நபரைப் பழிக்கும் பொய்ப்பேச்சு மலிந்து விட்டது. இல்லாததை இட்டுக்கட்டி இறுதியில் விமர்சித்துப் பாராட்டுப்பெற நினைக்கும் அரசியல்வாதிகள் குறித்து அவர்கள் "கண்கள் திறக்க ஒரு கதை" என உருவகக் கதை கூறுகிறார். மாற்றுக் கட்சிக்காரர்களை "வேசிமகன்"; விபச்சாரி மைந்தன்! தகப்பன் பேர் அறியாதவன் என்று திட்டுவதையே தான் பெற்ற அரசியல் இலக்கணமாகக் கருதுகிறான் ஒருஅரசியல்வாதி! அயலாரும் அன்னையும் சொல்லியும் அவன் கேட்கவில்லை. ஒருநாள் அவன் தாய், "உன் அப்பா கப்பலுக்குப் போயிருக்கும்போது, அவர் போன இரண்டு வருடம் கழித்து என் வயிற்றில் உதித்தவன் நீ" என்று கூறுகிறாள். அவன் தலையில் ஆயிரம் சம்மட்டி அடிகள்! மௌனமாகி விட்டான்! **"(2.12.68)**[23] என்று கதையை முடிக்கிறார். இவ்வாறு உருவகக் குட்டிக் கதையால் நாவடக்கமற்றவர்களை நாணச் செய்யுமாறு தமது எழுத்தை அங்குசமாகக் கையாண்டார் கலைஞர்.

இ. 5) உருவகத் தொடராட்சி வழி அங்கதச் சுவையுணர்த்தல் :

அரசியல் உலகின் எதார்த்தங்களைக் காட்டுவதற்கோ, சாடுவதற்கோ தமக்கேவுரிய முறையில் கலைஞர் கையாளும் சொல்லாட்சிகள் பல. குக்கல் குரைப்பாளன், இழிதகைப் பேச்சில் சூடுமேவியவன் **(2.12.68)**[24] மனப்புண்ணைக் குரங்குப் புண் ஆக்கிக்கொள்வோன் **(5.12.98)**[25] இரட்டை நாக்கு படைத்தோர், நரகல் நடையழகர் - நடுங்கா நாக்கழகர், முதல்தர மோசடிக்காரர் **(7.12.68)**[26] மாஜி நண்பன், பழைய நண்பன், முதுகில் குத்திய

துரோக வடிவம் (27.10.68)[27] புலால் விடுதிகளுக்கு நிரந்தரப் போக்குவரத்தாளர் (2.11.60)[28] எதிரிகளின் ஏகடியம் (28.11.68)[29] பொய்யா மொழிக் கவிராயர் (28.11.68)[30] பசுத்தோல் போர்த்தினோரின் பசப்பு மொழி (25.11.68)[31] இவை போன்றவை தம் அரசியல் எதிரிகளுக்குக் கலைஞர் தரும் அங்கதச்சாடல் அடைமொழிகள்.

இ. 6) முரண்பாடுகளை முன்னிறுத்திப் பிறர் கருத்தை மறுத்தல்:

காங்கிரசு கட்சி "மாலை நாளேடு ஒன்றில்" ஜமீன்தாரர் ஜாகீந்தார் நம்மிடமில்லை! மிட்டாமிராசுகள்! நம்மிடமில்லை. ஆலை அரசர்கள், பண முதலைகள் நம்மிடமில்லை![32]" (31.10.68) என்று ஊறறியப் பொய்யைப் பறைசாற்றியது. சமதர்ம லட்சியம் பேசியது. அதனை மறுத்து இலக்கிய நயம் சொட்ட பின்வருமாறு எழுதினார்.

"தவளைகள் எல்லாம் ஒரு மாநாடு போட்டு, எங்களிடத்தில் மழைக்காலத்தில் கத்துவோர் யாருமில்லை என்று பேசினால் எப்படியிருக்கும்?

பெருச்சாளிகள் எல்லாம் ஒன்றுகூடி" நாங்கள் பிறர் பொருளைச் சுரண்டி வாழ்வதே கிடையாது" என்று பெருமை பேசினால் எப்படி இருக்கும்?. . .

வேங்கை வேதாந்தம் பேசிக் கேட்டிருக்கிறாயா?

கேட்டிருக்கமாட்டாய்?

கேட்டிருக்க முடியாது? ஆனால் இதோ அரசியலில் அந்த அற்புதம் நிகழ்கிறது! கனிவு என்ற தலைப்பில் கரடியார் பேசுகிறார். காட்டில் காணமுடியாத விளம்பரத்தை நாட்டில் காணுகிறோம் இப்போது" (31.10.68)[33]

"ஈ) இலக்கியக் காட்சிகளை மேற்கோள் காட்டல்

உலகப்புகழ் நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியரது "அந்தோனியும் கிளியோபாத்திராவும்" நாடகக் காட்சி ஒன்றைக் கலைஞர் பொருத்தமான அரசியல் நிகழ்வு ஒன்றனுக்குப் பொருத்திக் காட்டுகிறார். தோழனே முதுகில் குத்தும் எதார்த்தம் அரசியலில் தேர்தல் காலத்தில் நம்பிக்கை மோசடியைச் சந்திக்கும்போது ஏற்படும் அனுபவமாகிறது. கலைஞர் அதை எடுத்துக்காட்டி இழப்பைத் தாங்கிக் கொள்ள சில இலக்கிய நிகழ்ச்சிகளை நினைவூட்டுகிறார்.

"புரூட்டஸ்! நீயுமா?" என்று கட்டாரிக்குத்தை முதுகிலே தாங்கிக் கொண்டு ரத்த நீர் வீழ்ச்சிபோல் நின்ற ஜூலியஸ் சீசர் வேதனையோடு கேட்டான்.

அப்படிச் சிலரைப் பார்த்து நீ கேட்க வேண்டியிருந்தது.[34]

புறநானூற்று இலக்கியக் காட்சியில்,

"அண்ணன் தலையைக் கொய்து வருபவர்க்கு ஆயிரம் பொன் பரிசு என அறிவித்தான் குமணன் தம்பி இளங்குமணன் --அவனையே கூட நல்லவனாக்கிவிட்ட தம்பிகள் சிலர் நமது அண்ணனுக்கு இருந்திருக்கிறார்கள்."- -

(31.10.68)[35]

உ) (i)மக்கள் வழக்கிலுள்ள கிராமியச் சொல்லாடல்களைப் பொருத்திக் காட்டல்.

சமுதாயத்தில் கோயில், குளம், சாமி இவைகளை அடிப்படையாக வைத்து கூறப்படும் பொய்களை மிஞ்சுகிற அளவுக்கு, அரசியலில் புளுகுகிறவரை இலாபம்! என்று பொய் பேசிப் பிழைப்போரை அம்பலப்படுத்துவோருக்கு மக்கள் வழக்குக் கதையை எடுத்தாளுகிறார்.

''புளுகினாலும் புளுகினான் மனுஷன் நிலம் கட்டுப்படப் புளுகினான்''[36] என்று கிராமங்களிலே ஒரு வேடிக்கை மொழி பேசுவதுண்டு. சலவை செய்கின்ற தொழிலாள நண்பர்களுக்குச்சலவை உடையில் நீலம் சரியாகப் பாவாத நேரத்தில் ஊரில் ஏதாவது ஒரு பொய் சொல்லிப்பரப்பி வைத்தால், உடனே சலவைக்கான உடையில் நீலம் பிடிக்கும் என்பது தவறான நம்பிக்கை. சலவைத் தொழிலாளர்களைச் சாக்காக வைத்துக்கொண்டு சந்தர்ப்பவாதிகள் புளுகுப்பிரச்சாரத்தில் ஈடுபடுவதுண்டு. அப்படிப்பட்டவர்கள் எதிர்க் கட்சியிலுள்ள சில அரசியல் பொய்யர்கள் என்கிறார்.

(ii) பழமொழி மூலம் மாற்றார் கருத்தை மறுத்தல்

கருவாட்டுக்கடையில் மல்லிகை மணக்குமா? என்றும் வீட்டுக்குள் லட்சுமி பள்ளியில் மூதேவியா? (28.11.98)[37] என்றும் மக்கள் வழக்குப் பழமொழிகளை எடுத்தாளுகிறார். "மெட்ராஸ் ஸ்டேட்" என்கின்ற பெயரை தமிழ்நாடு" என்னும் நல்லதமிழ்ப்பெயராக மாற்றவேண்டும் என்கிறார். தமிழ் உணர்ச்சி இல்லாமல் பிறமொழிப் பெயரை வைத்துக்கொள்ள வாதாடுவோரை எதிர்த்து மக்கள் பழமொழி மூலம் நறுக்கு. தெரித்தாற்போல் கேள்வி எழுப்புகிறார்.

ஊ) வரலாற்று நிகழ்வுகளை ஒப்பிட்டு உரைத்தல் :

அண்ணா முதலமைச்சராக இருந்த தி.மு.க. ஆட்சிக்காலத்தில் உழைக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் வெண்மணி கிராமத்தில் உயர் சாதியினரது சாதி வெறிக்கு இலக்காயினர். 43பேர் உயிரோடு வீட்டுக்குள் பூட்டப்பட்டுக்கொளுத்தப்பட்டனர். காங்கிரஸ் கட்சி ஏடுகள் குறிப்பாக நவசக்தி, கொடுமை நிகழ்ந்தும் பாதிக்கப்பட்டோர் சார்பில் நின்று குரல் கொடுக்கவில்லை. அரசியலில் இலாபம் தேடவே புரளி கிளப்பினர். குற்றம் சாட்டப்பட்டவர் நாகை காங்கிரசில் கமிட்டியின் முன்னாள் தலைவரும் மண்டல காங்கிரசில் அங்கம் வகித்தவருமான மிராசு கோபாலகிருஷ்ணன் நாயுடு ஆவார். ஆனால் எதிர்க்கட்சி ஏடுகள் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்மீது பழி சுமத்தின.

கலைஞர் எதிர்க்கட்சி ஏடுகளின் பொய்ச்செய்தியை வாசித்துப்பதறித் துடித்தார். வெண்மணி கிராமத்தில் நடத்தப்பட்ட வெறித் தனத்தை, ஏகாதிபத்திய ஆட்சிக்காலத்துப்படுகொலைக்கு அடுத்த நிகழ்ச்சி!' என்று

வருணித்தார்.

"ஜாலியன் வாலாபாக்கின்" நான்கு பக்கமும் கோட்டைச் சுவர் அரண் போல அமைந்த பகுதிக்குள் மக்களைத் தள்ளி டயர் என்ற வெள்ளைக்கார வெறியன் சுட்டுப் பொசுக்கினான். அந்த நிகழ்ச்சி தான் ஒரே சமயத்தில் 1000த்திற்கும் மேற்பட்டோர் அலறித் துடித்து இறந்தனர். இதற்குப் பிறகு வெண்மணி கிராமத்தில்தான் நண்பா வெறிச் செயலுக்கு ஒரே நேரத்தில் 43 பேர் பலியாகியிருக்கின்றனர்". (28.12.68)[38] என்று கொடுமைச் சித்திரத்தை எழுதிக் காட்டினார். அரசு மேற்கொண்ட நடவடிக்கையை விரித்துரைக்கிறார். இவ்வாறெல்லாம் கடிதந்தோறும் கலைஞர் கையாண்ட கலை நுட்பங்கள் பலவகைப்பட்டவை.

கடித இலக்கியத்தை இரண்டாகப் பகுத்த பேராசிரியர் மா.இளஞ்செழியன் ''பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும் எண்ணமில்லாமல் எழுதப்படும் தனிப்பட்டோரது உண்மைக் கடிதங்களை முதல் வகையின" என்கிறார். "மற்றொருவருக்குக் கடிதம் எழுதுவது போலக் கற்பனை செய்து எழுத்தாளனது இதயத்திலிருந்து புறப்பட்டு அவனுடைய எழுதுகோல் வாயிலாகப் பவனி வருகின்ற கடிதங்களே இந்த இரண்டாவது வகையினைச் சேர்ந்தவனவாகும். இந்த வகையைக் கற்பனை கடித இலக்கியம் என்று மொழியலாம்.[39] என்கிறார்.

கலைஞரது கடிதங்கள் கற்பனைக் கடிதங்கள். கற்பனைக் கடிதங்கள் என்றாலும் உள்ளடக்கங்கள், அன்றாட நிகழ்வுகளிலே தம்மையும் தாம் சார்ந்துள்ள கழகத்தையும், தாம் வாழும் தமிழகத்தையும், தம் உடன் பிறப்புகளையும், தாம் பேசும் மொழியையும் பாதிக்கின்ற அனுபவத்திலே தோய்ந்து இலக்கிய வார்ப்புப் பெற்று வருகின்றன.

தமிழ்மொழியைக் காக்க மொழிப்போர் புரிந்து, குண்டடிபட்டுச் செத்து மடிந்தும், தீக்குளித்தும், உயிர் ஈந்த இளைய சமுதாயத்தின் எழுச்சியையும், கிளர்ச்சியையும், கண்ணீரையும், சிந்திய செந்நீரையும், செய்த தியாகத்தையும், அறச் சினத்தையும், அயராக் கண்டனங்களையும், வரலாற்று நிகழ்வுகளாய், மெய்ப்பாட்டுணர்ச்சியோடு கலைஞர் தமது கடிதங்களில் பதிவு செய்யாமல் போயிருந்தால் தாளமுத்து நடராசன் தியாகத்தினை நினைத்து பார்க்கவோ, மாணவச் சிங்கம் இராசேந்திரனின் வீர வாழ்வை அறிந்து உணரவோ சுவடுகள் இல்லாமல் போயிருக்கக் கூடும். கலைஞர் கடிதங்களில் தமிழ் காத்த மாணவ மணிகளின் வரலாற்று நிகழ்வுப்பதிவுகள் நிலைபெற்று உள்ளன.

"பூட்டிய இரும்புக்கூட்டின் கதவு திறக்கப்பட்டது
சிறுத்தையே வெளியில் வா!"

பாவேந்தரின் புரட்சிக் கவி கேட்டுச் செயல்புரியக் கிளம்பிய மாணவரணி

"கிளம்பிற்றுக் காண்
தமிழ்ச் சிங்கக் கூட்டம்"!

என்ற அவரது வீர வரிகளுக்கு இலக்கணமாய்த் திகழும் மாணவர் வரிசை-

தன் அமைப்பினைப் புதுப்பித்துக் கொள்ள ஆர்த்தெழுந்து விட்டது.
"மாணவ நண்பனே!

எலியென உன்னை இகழ்ந்தவர் நடுங்கப் புலியெனச் செயல் செயப் புறப்படுவாய் என நாமும் வாழ்த்தி வரவேற்போம்" (18.11.68)[40] போன்ற கடித முடிவுவரிகள் கலைஞர் மனத்தில் நிலைபெற்று இலக்கியக் கடிதங்களாக ஆக்கம்பெறக் காரணமாகின்றன. வாசகரான இளையோரை எழுச்சிகொள்ளச் செய்கின்றன.

வடிவச்செப்பம்

கருத்தைக் கவரும் வாசகத்தையோ - நிகழ்வையோ முன் வைத்து மடலைத் தொடங்குதல், உறவின் நெருக்கத்தை உணர்த்தும் அறிமுக வரிகளால் மடல் படிப்பவர் மனத்தைப் பிணித்தல், சுவையான கதை, உலக நிகழ்வு, நாடகக் காட்சி, இலக்கியக் காட்சி, கிராமியச் சொல்லாடல், வரலாற்றுச் சம்பவம், அதிர்ச்சி அல்லது, வியப்பூட்டும் தகவல் முதலியவற்றால் கடிதத்தை வாசிப்பவரை ஈடுபடுத்துதல், அன்றாட அரசியல் நிகழ்வுகளுடன் பொருத்திக் காட்டல், ஒப்பிடல், உரசிப்பார்த்தல், உண்மையா என ஆராய்தல், பொய்மைகளை அம்பலப்படுத்தல், கழகத்துக்கும், தொண்டர்களுக்கும், தலைவர்களுக்கும் எதிரான தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுத்தல், அதைச் சுவைமிகும் இலக்கியப் பாணியில் படைத்தல், கழகத்தையும் உடன் பிறப்புகளையும் காக்கின்ற கேடயமாகக் கடித எழுத்தைக் கையாளுதல், காங்கிரசு கட்சியின் எதிர்த்தாக்குதல்களைக் கண்ணியமாக கருத்து மோதலால் எதிர்கொள்ளுதல், அடிமட்டத்தொண்டரது அனுபவங்களுடன் தம்மை ஐக்கியப்படுத்திக் கொள்ளல், செயலூக்கப்படுகிற எழுச்சியூட்டும் சொற்களாகத் தெம்பூட்டிக் கடிதத்தை முடித்தல் என்பனதாம் கலைஞரது கடித இலக்கியப் பாணி.

வழக்குச் சொற்களைக் கொச்சை நீக்கி எழுதுதல், எளிய நல்ல தமிழ்ச் சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துதல், நேரில் அருகே நின்று கொண்டோ, நெருக்கமாக அமர்ந்து கொண்டோ, பேசுகிறபாணியில் கருத்துக்களைப் பரிமாறல், முக்கிய கருத்துக்களைச் சிறுசிறு தொடர்களாக அடுக்கி எழுதி அழுத்தம் கொடுத்தல், தருக்கநடையில் எதிர்க்கட்சியினருக்குத் தொடர்ந்து செல்லும் வினாக்களைத் தொடுத்துத் தமது வாதத்தை நிலைநிறுத்தல், முத்தாய்ப்பாகத் திருக்குறளை உள்ளத்தில் பதிய வைக்கிற முறையில் முடித்துக்காட்டல், நீண்டு செல்லும் கடிதங்களிலும், மாறி மாறிக் கருத்து அல்லது கட்சி மாறுபடுவோரது வாதங்களைத் தொடுத்து மறுக்கும் தொடர் பத்திகளை எழுதும்போதும் பொருத்தமான தலைப்புகளை அமைத்துச் செல்லல் - பொருத்தமான நிறுத்தக்குறிகளை ஏற்ற இடங்களில் கையாளல், சிறுசிறு பத்திகளாகப் பத்திரிகைப் பத்திகளுக்கேற்ப கருத்துப் போக்கை வகை தொகை செய்தல் முதலியவற்றால் கலைஞரது கடிதங்கள் கருத்துப்புலப்பாட்டுக் கலைநுட்ப

வகைமைகளில் சிறக்கின்றன. அவரது கடிதங்களில் தென்படும் சிறுகுறைகளும் உண்டு.

வாக்கியங்கள் சிலவற்றில் ஒருமை பன்மை மயக்கங்கள், மக்கள் பேச்சு வழக்கிலுள்ள ஆங்கிலச் சொல் ஒலி பெயர்ப்புகளை எடுத்தாளல், மேடையில் நின்று உரையாற்றுகிற பாணியிலேயே கடிதம் முழுவதையும் எழுதிச் செல்லல் போன்ற சிறுகுறைகள் உள்ளன; என்றாலும் அவை அவரது படைப்பிலக்கியத் தரத்திற்கும் திறனுக்கும் ஊறு ஏற்படுத்துவன அல்ல. அவரது தமிழ்ப்படைப்புத்திறனைச் சிறிதும் குறைத்து மதிப்பிடக் காரணமாவன அல்ல! கலைஞரது கடிதங்களுக்குத் தமிழ் இலக்கிய வரலாற்றில் தனித்தன்மையான இடம் உண்டு! ஏனெனில் அவருக்குப் பின் இலக்கியக்கலைநுட்பமான அரசியல் கடிதங்கள் மூலம் தமக்கென வரலாற்றில் இடம் பிடிப்போர் இனிமேல் உருவானால்தான் உண்டு!

அடிக்குறிப்புகள்

01. அந்தோனி குருசு அ. — தூயவளனார் கல்லூரி துறை வெளியீடு, கலையியல் கட்டுரைகள், கடிதம் எழுதும் கலை மேற்கோளாட்சி, 1989, ப.47.
02. கடிகாசலம் ந. — கடித இலக்கியங்கள், தமிழ் இலக்கியக் கொள்கைக் கருத்தரங்க உருட்டச்சுக்கட்டுரை. 2-3-93, ப.10.
03. கருணாநிதி மு. கலைஞர், — கலைஞர் கடிதம், என்னுரை தொ 1. அபிராமி நிலையம், சென்னை-1, 1986.
04. மேலது — என்னுரை, ப IV
05. மேலது — என்னுரை, ப IV
06. அன்புப்பழம் நீ (தொ- ஆ) — கடிதக்கலை, மா. இளஞ்செழியன் கடித இலக்கியம், பாரி நிலையம், சென்னை-108, ப-6.
07. மகராஜன் எஸ். (தொ-ஆ) — ரசிகமணி கடிதங்கள், டி.கே.சி. வட்டத்தொட்டி சென்னை-10, 09.09.79 கடிதம் ப.11
08. அருணாசலம், க (தொ-ஆ) — கடிதங்கள் சகோதரிகளுக்கு, மகாத்மா காந்தி எழுதியது தமிழ்நாடு காந்தி நினைவுநிதி, மதுரை-1964.
09. அருள்சாமி மு.சு., — தோழர்க்கு, பாரிநிலையம், சென்னை-1, 1968.
10. விளாதிமீர் ஸெவ்க் (தொ-ஆ) — சோமசுந்தரம், ப (மொ-ஆ) புரட்சியில் இளைஞர்கள் முன்னேற்றப்பதிப்பகம், மாஸ்கோ, 1977.
11. எஸ். மகராஜன், மு.நூ — 1979
12. ராஜா எஸ். மருத்துவர், — ஒரு டாக்டரின் கடிதங்கள் அன்னை நாடு பதிப்பகம் மேற்கு மாம்பலம்,

	சென்னை-33, 1984.
13. கருணாநிதி.மு.கலைஞர், மு.நூ	ஜாக்குலின்கள், ப-2.
14. மேலது நூல்	நீவிளைத்த கழனி, நீ உழைத்த உழைப்பு, ப.5.
15. மேலது நூல்	தோற்ற முயலோ! முன்போல சுறுசுறுப்பாக இரு ப.34.
16. மேலது நூல்	வேங்கைபோடும் வெள்ளாடு வேடம், ப.140.
17. மேலது நூல்	கழுதையும் பன்றியும், ப.84.
18. மேலது நூல்	கழுதையும் பன்றியும், ப.87.
19. மேலது நூல்	வீரனே! வெற்றி என்றென்றைக்கும் உன்பக்கம்தான், ப.36.
20. மேலது நூல்	நீ விளைத்த கழனி ப.7.
21. மேலது நூல்	தென்றல், தென்பாங்கு, தேன்கீதம், ப.47.
22. மேலது நூல்	பரிதாபப்படுகிறேன் ப.116.
23. மேலது நூல்	கண் திறக்க ஒருகதை, ப.114.
24. மேலது நூல்	கண் திறக்க ஒருகதை, ப.114.
25. மேலது நூல்	பரிதாபப்படுகிறேன் ப.116.
26. மேலது நூல்	அரசியல் மோசடியும் அறிவிக்கிறாா், ஆபூர்வ பிறவி, பக்.119, 121.
27. மேலது நூல்	உன்னால் முடிந்ததைச் செய்துவிட்டாயா? பக்.14, 15.
28. மேலது நூல்	பாவி கெடுத்தானே பலே சாப்பாட்டை ப.42.
29. மேலது நூல்	தமிழ்நாடு ஒரு முழு விளக்கம், ப.113.
30. மேலது நூல்	தமிழ்நாடு ஒரு முழு விளக்கம், ப.104.
31. மேலது நூல்	பசுத்தோல் வேங்கைபாராய், ப.92.
32. மேலது நூல்	தீராதி தீரர், தேசியமகிபர் பராக்! பராக்! ப.79.
33. மேலது நூல்	தீராதி தீரர், தேசியமகிபர் பராக்! பராக்! ப.80.
34. மேலது நூல்	தோற்றமுயலே ப.29.
35. மேலது நூல்	தோற்றமுயலே ப.29.
36. மேலது நூல்	தமிழ்நாடு ஒருவிளக்கம், ப.98.
37. மேலது நூல்	தமிழ்நாடு ஒருவிளக்கம், ப.102, 107.
38. மேலது நூல்	வெண்மணிச்சம்பவம், ஒருவிளக்கம் ப.130.
39. அன்புப்பழம் நீ (தொ-ஆ)	இளஞ்செழியன், மா கடித இலக்கியம், ப.2
40. கலைஞர் கடிதம், தொ-1	கிளம்பிற்றுக்காண் தமிழ்ச்சிங்கக் கூட்டம். ப-78.

6 "கலைஞர் கடிதங்களில் சங்க இலக்கியம்"

முனைவர் சா. உதயசூரியன்

பழகு தமிழில் அண்ணா எழுதிய கடிதங்களும் அழகு தமிழில் கலைஞர் எழுதிய கடிதங்களும் பெற்ற வெற்றியின் விளைச்சலே திராவிட இயக்கம். கலைஞர் கடிதங்கள் தமிழகத்தின் வரலாறு, அரசியல், பண்பாடு, இலக்கியம் போன்ற அனைத்தும் பதிவு செய்யப்பட்ட பேழைகளாய்த் திகழ்ந்து நிற்கின்றன. அவை ஒவ்வொன்றும் அரசியல் அடிப்படையில் உருவானவை எனினும் இலக்கிய மணம் கமழா கடிதம் எதுவுமில்லை எனும் அளவில் சிறந்து நிற்கின்றன. கலைஞர் கடிதங்கள் 1968 முதல் 1977 வரை மறவன்மடல், நம் நாடு, முரசொலி முதலிய இதழ்களில் 'உடன்பிறப்பே' என விளித்து எழுதியவை. அவை பத்துத் தொகுதிகளாக அபிராமி நிலையத்தாரால் வெளியிடப் பெற்றுள்ளன. மொத்தக் கடிதங்களின் எண்ணிக்கை 370. (கலைஞரின் 'என்னுரை'யின் அடிக்குறிப்பில் 369 எனக் குறிக்கப் பெற்றுள்ளது.) அக்கடிதங்கள் 370 மட்டுமே இவ்ஆய்வுக்கு எல்லையாகக் கொள்ளப்பட்டுள்ளது. கலைஞர் 1978 முதல் 1998 வரை எழுதியுள்ள-எழுதி வருகிற கடிதங்கள் மேலும் இருபது தொகுதிகளாக வெளியிட வேண்டிய அளவுக்கு எண்ணிக்கையில் மிகுந்தவை. இவை இவ்ஆய்வுக்கட்டுரையின் எல்லைக்கு அப்பாற்பட்டவை என்பதால் கருத்தில் கொள்ளப் பெறவில்லை. கலைஞர் கடிதங்களில் சங்க இலக்கியம் எந்த அளவு எந்தெந்த வகையில் இடம்பெற்றுள்ளது என்பதை மட்டும் இக்கட்டுரை ஆராய்ந்தறிய முற்படுகிறது.

கலைஞரும் சங்க இலக்கியமும்

கலைஞரின் இலக்கிய ஈடுபாடு உலகு அறிந்த ஒன்று. பழந்தமிழ் இலக்கியங்கள் மீது கலைஞர் கொண்டுள்ள காதல் அளவிட முடியாதது. சங்க இலக்கியத்தை இன்றைய தமிழில் எளிய தமிழ்க் கவிதைகளாய் மாற்றி அவர் படைத்த 'சங்கத்தமிழ்' அவர்தம் சங்க இலக்கியப் பற்றுக்குச் சரியான சான்றாகும். கலைஞர் கடிதங்களில் பற்பல இடங்களில் பொதுவான நிலையில் சங்கத்தமிழின் சிறப்புகள் பேசப்பெற்றுள்ளன. திராவிட இயக்கம் வெறும் அரசியல் இயக்கமாக மட்டுமன்றி தமிழர் பண்பாட்டு வரலாற்று மரபுகளைப் பேணிக்காக்கும் இயக்கமாகவும் இயங்கி வருகிறது. இவரது கடிதம் ஒன்றில்,

> "இந்த இயக்கத்தின் ஆட்சிக் காலத்தை தமிழக வரலாறு மறைத்துவிட முடியாது. தமிழர்களின் மரபு-இலக்கியம்-வரலாறு-கலை இவற்றை உலகம் உணரச் செய்திடும் பணிகளை நாம் படிப்படியாக நிறைவேற்றி வருகிறோம்".[1]

என்று குறிப்பிடுவது திராவிட இயக்கத்தின் நோக்கத்தைத் தெளிவுப்படுத்துவதாக அமைந்துள்ளது. எனவேதான் பிற அரசியல் இயக்கங்களைவிட திராவிட இயக்கத்தாரிடையே இயற்கையிலேயே இலக்கிய ஈடுபாடு மிகுந்து காணப்படுகிறது.

சங்க இலக்கியங்களைப் போற்றும் நிலையில் சங்க இலக்கியப் புலவர்களைப் பெருமைபடுத்தும் வகையில் கலைஞரின் ஆட்சிப்பணியும் அமைந்துள்ளது. கலைஞர் கடிதம் ஒன்றில் பின்வரும் செய்தி இடம்பெற்றள்ளது.

> "கணியன் பூங்குன்றனார் சங்காலத் தமிழ்ப் புலவர். இன்றைய இராமநாதபுரம் கோட்டத்து எல்லைக்குள் இருந்த பூங்குன்றம் என்னும் ஊரில் பிறந்தவர். அவர் எழுதிப் புறநானூற்றுப்பாடல்களில் இடம் பெற்றுள்ள "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்ற புகழ்மிக்க பாடலை, சில மாதங்களுக்கு முன்பு அவர் வாழ்ந்த ஊரில் கல்லிலே செதுக்கி என்றும் அழியாதவாறு நிலைநிறுத்திய நிகழ்ச்சியை நீ மறந்திருக்க மாட்டாய்"[2]

இக்கடித வரிகள் சங்க இலக்கியப் புலவர்களைப் போற்றிக் காக்கும் இயக்கமாய்த் திராவிட இயக்கம் செயலாற்றி வருகிறது என்பதை உணர்த்தி நிற்கின்றன.

இலக்கியம் என்பது குறித்தும் இலக்கிய ஆய்வு என்பது குறித்தும் இன்னொரு கடிதத்தில் கலைஞர் கீழ்வருமாறு எழுதியுள்ளார்.

> "இலக்கியம் என்பது பல்லாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வருகிற மக்கட் கூட்டத்தின் பண்பாட்டிலிருந்து தோன்றுவதேயாகும். ஒரு சமுதாயத்தைப் பண்பட்ட சமுதாயமா என அறிந்திட, அதன் இலக்கியங்களை ஆராய்வது வாடிக்கை"[3]

இந்த அடிப்படையிலேயே கலைஞர் தம் கடிதங்களில் சங்க இலக்கியத்தைக் கண்டு தமிழரின் தொன்மைக் காலப் பண்பாட்டின் பெருமையை வரைந்து மகிழ்கிறார். இதனைக் கீழ்க்காணும் கடிதவரிகள் புலப்படுத்தும்,

> "அகம், புறம் என இலக்கியச் செல்வங்களை வழங்கி, பழங்காலத் தமிழர் வாழ்வின் மாண்புகளை உணர்த்தினர் புலவர் பெருமக்கள், ஆண்மக்கள் வீரவாழ்வினை மட்டுமின்றி, பெண்டிரின் வீரத்தையும் மகுடம் புனைந்து காட்டுகின்ற மாணிக்கப் பரல்களாக சங்க இலக்கியங்கள் திகழுகின்றன."[4]

திராவிட இயக்கத்தின் கடைசித் தொண்டனும்கூட சங்க இலக்கியத்தின் அடிப்படையான செய்திகளை அறிந்திருக்க வேண்டும் என்பதில் கலைஞர் ஆர்வம் கொண்டிருந்தார் என்பதைக் கீழே குறித்துள்ள கடிதப்பகுதி வெளிப்படுத்துகிறது.

> "ஐங்குறுநூறு தெரியுமல்லவா உனக்கு
> நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு

ஒத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தா ரேத்துங் கலியோ டகம் புறமென்று
இத்திறத்த எட்டுத் தொகை

அதாவது நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகம், புறம் என்ற எட்டு நூல்களும் எட்டுத்தொகையில் அடங்குவனவாம். சுருங்கிய அடிகளைக் கொண்டது ஐங்குறுநூறாகும்"[5]

என ஓர் ஆசிரியர் மாணவர்க்கு சங்க இலக்கியத்தை அறிமுகப்படுத்தி வைப்பது போல் எழுதிச்செல்லும் போக்கு கலைஞரின் சங்க இலக்கியப் பரப்புப்பணியை உணர்த்துகிறது.

கலைஞர் கடிதங்களில் சங்க இலக்கியம்

கலைஞர் கடிதஙகளில் சங்க இலக்கியத்தின் கருத்துக்கள் கருத்துருவாகவும் கவிதையுருவாகவும் பல இடங்களில் இடம்பெற்றுள்ளன. எனினும் சங்க இலக்கியப் பாடலை முழுமையாகவோ பெரும்பகுதியாகவோ சுட்டிச்செல்லும் பகுதிகள் மட்டுமே இங்கு ஆய்வுக்கணக்கில் கொண்டு சில முடிவுகளைப் பெற முடிகிறது. பின்வரும் எண்ணிக்கையில் சங்க இலக்கியத்தைக் கலைஞர் கடிதங்களில் கையாண்டுள்ளார்.

"கலைஞர் கடிதங்களில் சங்க இலக்கியம்"
(அட்டவணை)

வ. எண்.	கடிதத்தலைப்பு (நாள்)	சங்கஇலக்கியம் (பாடல் எண்)	தொகுதி (பக்கம்)
1.	அண்ணனைக் காணுகிறேன்- அந்தப்பாடல் வரிகளிலே (23.2.76)	புறநானூறு (192)	5 (54)
2.	அண்ணனைக் காணுகிறேன்- அந்தப்பாடல் வரிகளிலே (23.2.76)	புறநானூறு (193)	5 (57)
3.	தாய் உள்ளம் உணர்ந்த தாய் (25.2.76)	புறநானூறு (86)	5 (63)
4.	ஒளிபடைத்த கண்ணினாய் வா வா (26.2.76)	புறநானூறு (277)	5 (66)
5.	கலித்தொகை காட்டும் வீரம் (17.3.76)	முல்லைக்கலி-103	5 (75)
6.	உண்மை-உதய ஞாயிறு போலவே (25.3.76)	பட்டினப்பாலை (அடிகள்185-191)	5 (105)
7.	நினைக்கிறேன் நெஞ்சு இனிக்கிறது (7.4.76)	நற்றிணை (85)	5 (176)
8.	செம்புலப் பெயனீர் போல (5.6.76)	குறுந்தொகை (40)	7 (57)
9.	இலக்கியத்தில் நட்பு (6.6.76)	புறநானூறு (191)	7 (61)
10.	இலக்கியத்தில் நட்பு (6.6.76)	புறநானூறு (67)	7 (62)
11.	இலக்கியத்தில் நட்பு (6.6.76)	புறநானூறு(217)	7 (63)
12.	கலித்தொகையில் ஒரு காட்சி (9.6.76)	மருதக்கலி-70	7 (69)

வ. எண்.	கடிதத்தலைப்பு (நாள்)	சங்கஇலக்கியம் (பாடல் எண்)	தொகுதி (பக்கம்)
13.	மறவாத பெயர்கள்; மங்காத பெயர்கள் (13.6.76)	புறநானூறு (322)	7 (78)
14.	கோயிலடி கூறுவதென்ன? (1.7.76)	புறநானூறு(368)	7 (140)
15.	மணி அரும்பும் பொன் மலரும் (5.7.76)	ஐங்குறுநூறு(201)	7 (151)
16.	கவிஞரின் கற்பனைத்திறன் (9.7.76)	நற்றிணை (57)	7 (170)
17.	அதுதான் தனிச்சிறப்பு (23.7.76)	புறநானூறு (17)	8 (47)
18.	வாழ்க காக்கை வாழ்கவே (25.7.76)	குறுந்தொகை(210)	8 (56)
19.	வெயிலில் கிடைக்கும் நிழல் (30.7.76)	குறுந்தொகை(157)	8 (76)
20.	மானம் - ஒரு விளக்கம் (1.8.76)	புறநானூறு (72)	8 (86)
21.	எங்களுக்கும் காதல் வரும் (7.8.76)	மருதக்கலி-94	8 (108)
22.	புதியதோர் எழுச்சி காண்போம் (14.8.76)	புறநானூறு (72)	8 (137)
23.	இந்த இளநகை (29.8.76)	புறநானூறு (284)	8 (158)
24.	மருதநிலமோ-மங்கை தரும் சுகமோ (28.9.76)	புறநானூறு (287)	9 (1)
25.	இருக்குமிடம் தேடி (13.11.76)	குறுந்தொகை(322)	9 (100)
26.	பொருத்திப் பார்க்கிறேன் (17.11.76)	பாலைக்கலி-10	9 (124)
27.	அகில் என விளங்குவோம் (13.12.76)	குறுந்தொகை(339)	9 (178)
28.	அள்ளக்குறையாத செல்வம் (15.12.76)	குறுந்தொகை (54)	9 (183)
29.	காடு மணக்கும் கவிதை (22.12.76)	அகநானூறு (121)	10 (14)
30.	குளிர்நீர் கொதிக்கிறதோ (28.12.76)	குறுந்தொகை(196)	10 (22)

புறநானூறு - 15
குறுந்தொகை - 7
கலித்தொகை - 4
நற்றிணை - 2
அகநானூறு - 1
ஐங்குறுநூறு - 1
பட்டினப்பாலை - 1

மேற்கண்ட எண்ணிக்கைவழி கலைஞர் சங்க இலக்கியத்தில் பத்துப்பாட்டை விட எட்டுத்தொகையில் ஈடுபாடு கொண்டவராகத் தெரிகிறார். கலைஞர் கடிதங்களில் அகப்பாடல்களையும் புறப்பாடல்களையும் சமநிலையில் கையாண்டுள்ளமையையும் மேற்கண்ட புள்ளிவிவரம் புலப்படுத்துகிறது. (அகம்.16, புறம்.15). மேலும் சங்க இலக்கியத்துள் கலைஞரைப் பெரிதும் கவர்ந்தவை புறநானூறும் குறுந்தொகையும் என்பது பெறப்படுகிறது. இந்த முடிவைச் 'சங்கத்தமிழ்' நூலோடு ஒப்பிட்டு நோக்கினால் மேலும் உறுதிப்படும்.

கலைஞர் கடிதங்கள்	புறநானூறு 15 குறுந்தொகை 7
சங்கத்தமிழ்	புறநானூறு 83 குறுந்தொகை 19

கலைஞர் கடிதங்களில் முதலிரண்டு இடங்களைப் பிடித்துள்ள புறநானூறும் குறுந்தொகையும் கலைஞரின் 'சங்கத்தமிழ்' நூலிலும் அதே இடங்களைப் பிடித்துள்ளமை கலைஞரின் நெஞ்சில் நிறைந்தவை இவ்விரண்டு இலக்கியங்கள் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. கலைஞர் கடிதங்களில் இடம் பெற்றுள்ள கீழ்க்காணும் சொற்றொடர்களும் மேற்கண்ட முடிவை வழிமொழிகின்றன எனலாம்.

"புறநானூற்றுப் பாடல் வரிகளை என் இதழ்கள் முத்தமிடுகின்றன"[6]
"நல்லகுறுந்தொகைப் பாடல்கள் வேர்ப்பலாவின் சுளைகளுக்கு
ஈடான வகையாகும்"[7]

கலைஞரைக் கவர்ந்த சங்கப்புலவர்கள்

அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள சங்கப் பாடல்களை விளக்கும் வகையில் கலைஞர் கடிதங்களில் குறிக்கப்பெற்றுள்ள சங்கப்புலவர்கள் பின்வருமாறு: கணியன் பூங்குன்றனார், ஒரேருழவர், காவற்பெண்டு, பூங்கணுத்திரையார், கடியலூர் உருத்திரங்கண்ணனார், நல்விளக்கனார், செம்புலப்பெயனீரார், பிசிராந்தையார், பூதநாதனார், பொத்தியார், மருதனிளநாகனார், ஆவூர் மூலங்கிழார், கழாத்தலையார், பொதும்பில்கிழார், குறுங்கோழியூர்க்கிழார், காக்கைப்பாடினியார் நச்செள்ளையார், அள்ளூர் நன்முல்லையார், மாங்குடி மருதனார், உறையூர் முதுகண்ணன் சாத்தனார், ஓரம்போகியார், சாத்தந்தையார், ஐயூர் முடவனார், மீனெறி தூண்டிலார், காவன் முல்லைப் பூதனார், மிளைக்கந்தனார், சேரமான் கணைக்கால் இரும்பொறை, பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், சோழன் நல்லுருத்திரன், பாலை பாடிய பெருங்கடுங்கோ, பேயார், கபிலர் ஆகியோராவர்.

சங்க இலக்கியப் பயன்பாட்டு வகை

கலைஞர் தம் கடிதங்களில் சங்க இலக்கியங்களை இருநிலைகளில் பயன்படுத்தியுள்ளதைக் காணமுடிகிறது. முதல்நிலை அரசியல், இரண்டாம் நிலை இலக்கியம். முதல் நிலையில் அரசியல் நோக்கில் சங்க இலக்கியத்தைக் கண்டு அதன்வழி தொண்டர்களுக்கு பற்பல செய்திகளை வழங்கியுள்ளார். இரண்டாம் நிலையில் அரசியல் பணிகளுக்கு இடையே தாமும் தம் இயக்கத் தோழர்களும் சற்று இளைப்பாறிக் கொள்ளலாம் என்ற அடிப்படையில் சங்க இலக்கியத்தை முழுமையாக இலக்கிய நோக்கில் தந்து மகிழ்ந்துள்ளார்.

அரசியல் நோக்கில் சங்க இலக்கியம்

கலைஞர் தம் கடிதங்களில் பயன்படுத்தியுள்ள சங்க இலக்கியப் பாடல்களில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்கு அரசியல் நோக்கில் பயன்படுத்தப் பெற்றுள்ளன. (அரசியல்-18, இலக்கியம்-13). அண்ணா

அவர்களும் 'தம்பிக்கு' எழுதிய கடிதங்களில் சங்க இலக்கியத்தை அரசியல் விளக்கத்திற்குப் பயன்படுத்தியுள்ளமை இங்கு நினைவுகூரத்தக்கது. கலைஞர் அளவுக்கு அண்ணா அதிக எண்ணிக்கையில் சங்கப் பாடல்களைப் பயன்படுத்தவில்லை என்றாலும் பயன்படுத்தியுள்ள மிகச் சில இடங்களில் கூட அரசியல் பார்வை தெளிவாகவே தெரிகிறது.

தித்தனும் கோப்பெருநற்கிள்ளியும் தந்தையும் மகனும் ஆவர். இவர்களிடையே நிலவிய மன வேறுபாடு குறித்துச் சாத்தந்தையார் பாடிய புறநானூற்றுப் பாடல் விளக்குகிறது.

"இன்கடுங் கள்ளின் ஆமூ ராங்கன்
மைந்துடை மல்லன் மறவலி முருக்கி"[8]

எனத் தொடங்கும் அப்பாடல் முழுவதும் பொருளுரையோடு அண்ணாவின் மடல் ஒன்றில் இடம்பெற்றுள்ளது.[9] பெரியார், அண்ணா இருவரிடையே நிலவிய உறவு தந்தை-மகன் உறவு. அண்ணா அவ்வுறவை உறுதிசெய்யும் வகையில் சாத்தந்தையார் பாடலைத் தக்கவாறு பயன்படுத்தியுள்ளார். அண்ணா வழியில் அயராது உழைத்துவரும் கலைஞர் அதே வழியைப் பின்பற்றி பல்வேறு அரசியல் செய்திகளைச் சங்க இலக்கியம்வழி உணர்த்துகின்றார்.

'தாய் உள்ளம் உணர்ந்த தாய்'[10] எனும் மடலில்,

"சிற்றில் நற்றூண் பற்றி, நின்மகன்
யாண்டுளனோஎன வினவுதி..."[11]

எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலைக் காட்டியுள்ளார். "ஒரு தாயின் உள்ளத்தை ஒரு தாய்தான் உணர்ந்து விளக்கிட முடியும். தாய் உள்ளம் பெண்களுக்கு மட்டுமே உரியதல்ல; அது வீரமுள்ள ஆண்களுக்கும் உரியதாகும் என்பது என் வாதம்" எனக் குறிப்பிட்டு மிசா கைதியாக தன் மகன் சிறையில் அடைக்கப்பட்ட செய்தியை உடன்பிறப்புகளுக்கு உணர வைக்கிறார். அரசியல் இம்மடலில் இருக்கிறது என்பதற்கு ஒரு சிறுகுறிப்பும் இல்லாமல் மிக இலாவகமாக அரசியல் சொல்லும் உத்தி கலைஞரின் இலக்கியப் புலமைக்குக் கிடைத்த வெற்றியாகவே கொள்ள வேண்டும்.

"கலித்தொகை காட்டும் வீரம்"[12] எனும் தலைப்பில் எழுதப்பெற்ற கடிதம் நெருக்கடி நிலை அமல்படுத்தப்பட்ட காலத்தில் அந்தக் கொடுமைகளை எதிர்கொள்ள இயலாமல்போன சில தோழர்களுக்கு நம் பழமையான வீரத்தை நினைவூட்டி அவர்களுக்கு நம்பிக்கையூட்டுவதாக அமைந்துள்ளது. இதிலும் நேரடியாக அரசியல் என்பதற்கான எந்த அடையாளமும் இல்லை. ஆனால் சொல்ல வேண்டிய செய்தி சேரவேண்டியவர்களுக்குச் சேர்ந்து விடுகிறது.

"நினைக்கிறேன் நெஞ்சு இனிக்கிறது"[13] எனும் பெயரில் எழுதப்பட்ட மடலில் கீழ்க்காணும் நற்றிணை அடிகளைக் குறிப்பிடுகிறார்.

"குறிவரி இரும்புலி அஞ்சிக் குறுநடைக்
கன்றுடை வேழம் நின்றுகாத்து அல்கும்"[14]

என்பதன் மூலம் புலியிடமிருந்து குட்டி யானையைக் காக்க தாய்யானை மெல்ல இருளில் செல்லும் காட்சியை விளக்குகிறார். 'நெருக்கடிநிலை' நேரத்தில் கழகத்தை எப்படியெல்லாம் சிதைந்து விடாமல் காக்க வேண்டியிருக்கிறது என்பதை ஒரு தாய்ப்பாசத்தோடு தம்மினிய உடன்பிறப்புகளுக்கு உணர்த்திவிடுகிறார். இதிலும் எவ்வித அரசியல் குறிப்பும் இல்லை. தம் இலக்கிய நுண்ணறிவால் உணர்த்த நினைத்ததையெல்லாம் உணர்த்திவிடுகிறார்.

இவ்வாறு கலைஞர் சங்கப் பாடல்களை அரசியல் நோக்கில் பயன்படுத்தியிருந்தாலும் அதை வெளிப்படையாகப் பயன்படுத்த விரும்புவதில்லை என்று தெரிகிறது. தம் கூர்மையான இலக்கியப் புலமையால் தொண்டர்களுக்கு அரசியலைக் குறிப்பால் உணர்த்திவிடும் கலையில் கலைஞர் நிகரற்றவராகவே காட்சியளிக்கிறார்.

மிகச்சில இடங்களில் மட்டுமே சங்க இலக்கியத்தைப் பொதுவான அரசியல் விளக்கங்களுக்காக நேரடியாகவே பயன்படுத்தியுள்ளமையைப் பார்க்க முடிகிறது. பிரிவினைக் கொள்கையைக் கைவிட்ட பிறகும் மாநில சுயாட்சி கோரிக்கையைப் பிரிவினைக் கொள்கையாகப் பார்க்கும் கம்யூனிஸ்டு கட்சியினருக்கு விளக்கம்தரும் வகையில் "உண்மை-உதய ஞாயிறு போலவே"[15] என்ற மடலை எழுதியுள்ளார்.

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடற் றுகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்துணவும், காழகத் தாக்கமும்....[16]

என காவிரிப்பூம்பட்டினத்துத் துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதிக்காக இருந்த பொருள்களைப் பற்றிப் பட்டினப்பாலை விவரிக்கும்போது வாணிபத் துறையிலும்கூட கங்கையும் காவிரியும் கைகோத்து நின்ற காட்சிதான் தெரிகிறது என விளக்குகிறார்.

காதல் பாடலைக்கூட கழகத்தவரிடம்தாம் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்த ஆற்றலாகப் பயன்படுத்தி வாகை சூடியுள்ளார் கலைஞர். "செம்புலப் பெயனீர் போல"[17] எனும் மடலில்,

"யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயனீர் போல

அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே"[18]

எனும் பாடலைக் குறிப்பிட்டு, பாடலுக்குரிய முழு விளக்கத்தையும் எழுதியுள்ளார். இறுதியில்,

"உடன்பிறப்பே, காதலர்க்கென எழுந்த கவிதை அதுவாயினும் அன்புடைய நெஞ்சங்கள் எப்படிக் கலந்துள்ளன என்பதற்குக் காட்டப்படும் உவமையே நம்மைப் பெரிதும் கவர்கிறது அல்லவா? அவர்களாவது முன்பின் அதிகமாக அறியாதவர்கள். அவர்களின் நெஞ்சமே அவ்வாறு ஒன்றிவிடுகிறது என்றால் நீயும் நானும் நீண்ட நாட்கள் ஒன்றாக இருக்கும் உடன்பிறப்புக்களாயிற்றே; எனவே செம்புலப் பெயனீர் போல நமது அன்புடை நெஞ்சம் கலப்பதில் வியப்பென்ன இருக்க முடியும்"

என்று அன்பைப் பொழிந்து அம்மடலைத் தீட்டியுள்ளார். இந்தக் குடும்பப் பாசவுணர்வோடு கழகத்தை அவர் வளர்க்கின்ற பாங்கினால்தான் எப்படிப்பட்ட புயலையும் எதிர்கொள்ளும் இயக்கமாக அவரது தலைமையிலான கழகம் நின்று நிலைத்து வருகிறது.

இலக்கிய நோக்கில் சங்க இலக்கியம்

கலைஞர் தம் தனித்துவமான அழகுதமிழ் நடையில் கலித்தொகை, புறநானூறு, ஐங்குறுநூறு, நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய சங்க இலக்கியப் பாடல்களுக்கு உரையோவியம் வரைந்து காட்டுகிறார்.

"கலித்தொகையில் ஒரு காட்சி"[19] என்னும் கடிதத்தில் "உடன்பிறப்பே, மலர்ப்பொய்கையொன்றினைக் காண உன்னை அழைக்கின்றேன். எப்போதும் அரசியல் சிந்தனையிலேயே இருக்கும் உனக்கு இந்த மலர்ப்பொய்கை சிறிதுநேர மனமாற்றத்தை அளிக்கும்" என்னும் முன்னுரையோடு மருதன் இளநாகனார் இயற்றிய பாடல் காட்சியை விவரிக்கின்றார்.

"மணிநிற மலர்ப்பொய்கை மகிழ்ந்தாடும் அன்னந்தன்
அணிமிகு சேவலை அகலடை மறைத்தெனக்
கதுமெனக் காணாது கலங்கியம் மடப்பெடை"[20]

எனத் தொடங்கும் பாடல் பகுதியைக் குறிப்பிட்டு அன்னச்சேவலும் அன்னப் பெடையும் பொய்கையில் மகிழ்ந்து விளையாடிய காட்சியைப் படம்பிடிக்கிறார். "மருதன் இன்ப இணைகளின் காதல் விளையாட்டையும் எத்துணை நேர்த்தியாகச் சித்திரம் வரைந்து காட்டுகிறார், பார்த்தனையா? இதுபோன்ற கருத்துக்களின் சுரங்கமாகத்தான் தமிழ் இலக்கியம் திகழ்கிறது" என்று மடலை நிறைவு செய்கிறார்.

கலைஞர் ஓர் உயர்ந்த உரையாசிரியர் என்பதை அவருடைய திருக்குறள் உரை உலகுக்கு என்றும் உணர்த்தி நிற்கும். குறளோவியமும் சங்கத்தமிழும்கூட இவர்தம் உரைப்புலமையின் அடிப்படையில் வரையப்பட்ட அழகோவியங்களாகும். இவர் உரை எழுதுவதில் ஈடுபாடு உடையவர் என்பதைக் கடிதங்களிலும் காட்டியுள்ளார்.

"அண்ணனைக் காணுகிறேன்-அந்தப் பாடல் வரிகளிலே"[21] என்ற

தலைப்போடு எழுதப்பட்ட மடலில் புறநானூற்று அருஞ்சொற்களுக்குப் பொருள்கூறி விளக்கிச் செல்கின்றார்.

“அதள்எறித் தன்ன நெடுவன் ஊரின்
ஒருவன் ஆட்டும் புல்வாய் போல
ஒடி உய்தலும் கூடும்மன்
ஒக்கல் வாழ்க்கை தட்கும்மா காலே”[22]

எனும் பாடலின் அடியில் கீழ்க்காணும் வகையில் அடைப்புக்குறிக்குள் சொற்களுக்குப் பொருள் எழுதியுள்ளார்.

(புல்வாய் = மான், ஒக்கல் வாழ்க்கை = கூடிவாழ்தல்
தட்கும் = தலைபோலத் தடுக்கும்)

கடிதத்தின் போக்கிற்கு இந்த விளக்கம் தடையாகி விடுமோ என்றெண்ணி அடைப்புக் குறிக்குள் விளக்கம் சொல்லியிருப்பது இவர்தம் கடிதக்கலையின் மாட்சியைக் காட்டுகிறது.

சேரலிரும்பொறைக்கும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழிய பாண்டியனுக்கும் நடந்த போரில் தோல்வியுற்ற இரும்பொறை சிறையிலிருந்து மீண்டு வலிமையைப் பெறுகிறான். அவன் அப்படி வலிமை பெற்றது எப்படியிருந்தது என்பதை அழகிய உவமை வாயிலாக விளக்குகிறார் குறுங்கோழியூர்க்கிழார். அதனை விளக்க ஒரு தேர்ந்த உரையாசிரியராய் மாறி உரையோவியம் தீட்டுகிறார் கலைஞர்.

“பெருமையும் வலிமையும் கொண்ட முதிர்ந்த தந்தங்களைப் படைத்த யானையாகும் அது! அது வரும் வழியிலே குழியொன்றில் விழுந்துவிடுகிறது. அது குழியில் விழுந்துவிட்டதைக் கண்ட மற்ற யானைகள் திகைத்து நிற்கின்றன. அந்தத் திகைப்பை மாற்றி, தன் இனத்தினர் மகிழ குழியில் விழுந்த யானை வெளிக்கிளம்புகிறது! எப்படி ? தன்னுடைய முதிர்ந்த வலிமை பொருந்திய தந்தங்களால் குழியின் நாற்புறத்தையும் குத்திக்குத்தி மண்ணைத் தூர்த்து குழியின் ஆழத்தைக் குறைத்து விடுகிறது.

தூர்க்கப்பட்ட குழியிலிருந்து வெளிக்கிளம்பிய யானை,
கிளைபுகல் = தன் இனம் விரும்பிய
தலைக்கூடியாங்கு = தன் இனத்தோடு சேர்ந்துவிட்டதைப் போல
சேரலிரும்பொறையும் தன்நாடு சேர்ந்து விடுகிறான்”[23]

என்று கலைஞர் எழுதுகிறார். சங்கத்தமிழரின் வீரத்தை விறுவிறுப்பாக விளக்கிச் செல்லும் வேகத்திலேயே சில பழந்தமிழ்ச் சொற்களுக்கு விளக்கமும் தந்துவிடுகிற நேர்த்தி இவர்தம் உரை புனைந்திடும் ஆற்றலுக்கு உயர்ந்ததொரு சான்றாக அமைந்துவிடுகிறது.

கலைஞர் பிற உரைகளையும் உரையாசிரியர்களின் எண்ணங்களையும் ஆழப் படித்தறிந்தவர் என்பதற்கும் கடிதங்களில் அகச்சான்றுகள் உள்ளன.

"வெய்யிலில் கிடைக்கும் நிழல்"[24] எனும் பெயரிலமைந்த மடலில் கீழ்வருமாறு எழுதுகிறார்.

"குறுந்தொகைக்கு உரையெழுதியவர்களில் ஒருவரான பெருமழைப் புலவர் பொ. வே. சோமசுந்தரனார் அவர்கள் தீட்டியுள்ள அணிந்துரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

'வடமொழி முதலிய பிறமொழிவாணர்கள் தங்கள் இலக்கியங்களை ஆக்குவதற்குப் பெரும்பாலும் அறிவோடு பொருந்தாத கற்பனைகளையே பயில வழங்குவராயினர் . . . . . .
நம் சங்க காலத்து இலக்கியங்களிலே இத்தகைய பொருந்தா புனைவுகளை யாண்டும் காண்டல் அரிது . . . . .
இக்காரணத்தானே இக் குறுந்தொகை முதலிய இலக்கியங்கள் இயற்கையை நன்கு பொருந்தத் தழுவிச் செல்வதைக் காணலாம்.

உடன்பிறப்பே, இத்தகைய ஆழமான கருத்துக்கள் எல்லாம் இலக்கியத் தமிழ்வழி பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்புவதற்குப் பயன்படுமன்றோ ?"

பகுத்தறிவுக்கு உகந்த உரைகளைப் போற்றும் கலைஞரின் பண்பை இதன்வழி உணரலாம்.

மேற்காட்டியவாறு பகுத்தறிவுப் பார்வையில் சங்க இலக்கியங்களைக் கண்ட கலைஞர் அறிவியல் பார்வையிலும் நம் பழந்தமிழ்ப் பாக்களைப் பார்த்துள்ளார் என்பதையும் கடிதங்கள் வழி அறியமுடிகிறது.

"புதியதோர் எழுச்சி காண்போம்"[25] என்னும் மடல் முழுவதும் பழந்தமிழரின் அறிவியல் சிந்தனைகளை அலசுவதாகவே அமைந்துள்ளது. விரிவஞ்சி அவற்றுள் சிற்சில பகுதிகள் கீழே தொகுத்துரைக்கப்படுகின்றன.

"நமது முன்னோர்கள் விண்வெளிக் கிரகங்கள் எனப்படும் கோள்கள் பற்றி அறிந்திருந்தது மட்டுமல்ல; அவற்றின் அசைவுகளையும் ஆராய்ந்து அதற்கேற்ப வான நூல்களையும் இயற்றியிருந்தனர்.."

"தொன்மைக் காலத்தில் நமது நாட்டில் விஞ்ஞான அறிவு முகிழ்த்திருந்த போதிலும் அதனைச் செழித்தோங்க விடாமல் இடையிலே புகுந்த கருத்துக்கள் அழித்தொழித்து விட்டன."

"நமது தமிழ் இலக்கியங்களைப் புரட்டினால்கூட பண்டைத் தமிழர்கள் எத்தகைய விண்வெளி அறிவு பெற்றிருந்தார்கள் என்பது தெளிவாகும்."

"சோழன் நலங்கிள்ளியைப் பற்றி உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்னும் புலவர் (புறநானூற்றில்) பாடியுள்ள இரண்டு பாடல்களில் அக்காலத் தமிழ்மக்களின் விண்வெளி அறிவு கொடிகட்டிப் பறக்கிறது."

"இன்னொரு பாடலில் கவிஞர் விண்வெளிக் கலமே ஒட்டிக் காட்டுகிறார் . . . .

'நலங்கிள்ளிச் சோழனே! புலவர்களால் பாடப்படும் புகழையுடையவர்கள், வலவன் ஒட்டாத வானவூர்தியில் ஏறி விண்ணில் வலம் வருவர்'. வலவன் என்பதற்கு விமானி என்றும் வானவூர்தி என்பதற்கு விமானம் அல்லது விண்கலமென்றும் உனக்கே பொருள் புரியுமல்லவா?"

என்றெல்லாம் பழந்தமிழரின் அறிவியல் ஆற்றலை விளக்கி வரைகிறார் கலைஞர்.

தொகுப்புரை

ஒரு சமுதாயத்தைப் பண்பட்ட சமுதாயம் என நிறுவ இலக்கிய ஆய்வை முதன்மையாகக் கருதுகிறார் கலைஞர்.

தமிழரின் வரலாறு, கலை, இலக்கியம் முதலியவற்றை உலகு உணரச்செய்யும் நோக்கிலேயே திராவிட இயக்கத்தின் செயல்பாடுகளைக் கலைஞர் கொண்டு செலுத்தி வருகிறார்.

சங்கப் புலவர்களைப் போற்றும் பணியைத் தம் ஆட்சிப் பணிகளுள் ஒன்றாக நிறைவேற்றிவருகிறார் கலைஞர்.

திராவிட இயக்கத்தின் கடைசித் தொண்டனும் சங்க இலக்கியத்தை அறிந்திருக்கவேண்டும் என்னும் விருப்பத்தை நிறைவேற்ற கடிதங்கள் வழி கலைஞர் முயன்றுவருகிறார்.

சங்க இலக்கியத்துள் கலைஞரைப் பெரிதும் கவர்ந்தவை புறநானூறும் குறுந்தொகையும் என்பதை அவர்தம் மடல்கள் புலப்படுத்துகின்றன.

சங்க இலக்கியங்களைக் கடிதங்களில் அரசியல், இலக்கியம் என்னும் இருபெரும் நோக்கங்களில் கலைஞர் கையாண்டுள்ளார்.

அரசியல் நோக்கில் இலக்கியங்களைப் பயன்படுத்தும்போது வெளிப்படையாகப் பயன்படுத்துவதைக் கலைஞர் தவிர்த்து வந்துள்ளார். தம்முடைய இலக்கியப் புலமையால் குறிப்பால் அரசியல் உணர்த்தும் போக்கைக் கடிதங்களில் காணமுடிகிறது.

அரசியல் சிந்தனையிலிருந்து சிறிது ஒய்வெடுக்கும் எண்ணத்திலும் சங்க இலக்கியங்களைக் கடிதங்களில் கையாண்டுள்ளார்.

இலக்கிய மடல்கள் மூலம் கலைஞர் உயர்வான உரையாசிரியர் என்பதையும் உரையாசிரியர்களை உணர்ந்த உரையாசிரியர் என்பதையும் விளங்கிக்கொள்ள முடிகிறது.

சங்க இலக்கியங்களில் காணப்படும் அறிவியல் சிந்தனைகளை அறிவதிலும் கலைஞர் ஆர்வங்கொண்டிருப்பதைக் கடிதங்கள் புலப்படுத்துகின்றன.

இவ்வாறு கடிதக்கலையின் அனைத்து நுட்பங்களையும் ஆற்றலாகப் பயன்படுத்தி மடல் இலக்கியத்தில் கலைஞர் மாபெரும் வெற்றி கண்டுள்ளார்.

அடிக்குறிப்புகள்

1. கலைஞர் மு.கருணாநிதி, கலைஞர் கடிதம் (தொ.), ப.75
2. கலைஞர் மு.கருணாநிதி, கலைஞர் கடிதம் (தொ.5), ப.54
3. கலைஞர் மு.கருணாநிதி, கலைஞர் கடிதம் (தொ.7), ப.154
4. கலைஞர் மு.கருணாநிதி, கலைஞர் கடிதம் (தொ.5), ப.63
5. கலைஞர் மு.கருணாநிதி, கலைஞர் கடிதம் (தொ.7), ப.151
6. கலைஞர் மு.கருணாநிதி, கலைஞர் கடிதம் (தொ.5), ப.58
7. கலைஞர் மு.கருணாநிதி, கலைஞர் கடிதம் (தொ.8), ப.56
8. புறநானூறு - 80
9. திராவிடநாடு, இதழ் : 49, மலர் : 14, 10-6-56
10. கலைஞர் மு.கருணாநிதி, கலைஞர் கடிதம் (தொ.5), ப.63
11. புறநானூறு - 86
12. கலைஞர் மு.கருணாநிதி, கலைஞர் கடிதம் (தொ.5), ப.75
13. கலைஞர் மு.கருணாநிதி, கலைஞர் கடிதம் (தொ.5), ப.176
14. நற்றிணை - 85
15. கலைஞர் மு.கருணாநிதி, கலைஞர் கடிதம் (தொ.5), ப.105
16. பட்டினப்பாலை, அடிகள் 185 - 191
17. கலைஞர் மு.கருணாநிதி, கலைஞர் கடிதம் (தொ.7), ப.57
18. குறுந்தொகை - 40
19. கலைஞர் மு.கருணாநிதி, கலைஞர் கடிதம் (தொ.7), ப.69
20. கலித்தொகை, மருதம் - 70
21. கலைஞர் மு.கருணாநிதி, கலைஞர் கடிதம் (தொ.5), ப.57
22. புறநானூறு - 193
23. கலைஞர் மு.கருணாநிதி, கலைஞர் கடிதம் (தொ.8), ப.58
24. கலைஞர் மு.கருணாநிதி, கலைஞர் கடிதம் (தொ.8), ப.77
25. கலைஞர் மு.கருணாநிதி, கலைஞர் கடிதம் (தொ.8), ப.137

7 கலைஞரின் கடிதங்கள்

முனைவர் மோ. தமிழ்மாறன்

தமிழிலக்கியத்தின் பரந்துபட்ட இலக்கிய வரலாற்றைப் போலவே கலைஞரின் இலக்கியப் பணிகளும் மிக விரிந்த அளவினதாகும். தமது கவிதைகளால் - கட்டுரைகளால் - புதினங்களால் - சிறுகதைகளால் - நாடகங்களால் - திரைப்படங்களால் - அரசியல், வரலாற்று நூல்களால் தமிழுக்கு அணிசேர்த்தவர் கலைஞர். கலைஞரின் இலக்கியப் பங்களிப்புகளுள் அவர்தம் கடித இலக்கியம் குறிக்கத்தக்கதாகும். இக்கட்டுரை கலைஞர் கடிதங்களில் காணலாகும் உள்ளடக்கம், உத்தி ஆகியவற்றைத் தொகுத்துச் சுட்டி, அவர்தம் கடித அமைப்பு முறை, மொழிநடை ஆகியவற்றை விளக்கி, தமிழில் காணலாகும் கடித இலக்கியங்களுள் கலைஞர் கடிதம் பெறுமிடத்தை ஆராய முற்படுகிறது.

கடிதம் என்பதின் விளக்கம்

கடிதம் என்பது மனிதனது வாழ்வியல் கூறுகளுள் இன்றியமையாததாக விளங்குகின்றது.

> ஒருவர் பிறிதொருவருடன் எழுத்து வடிவில் கொள்ளும்
> செய்தித் தொடர்பே கடிதம் என்பதாகும்[1]

என்று 'Letter' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு விளக்கம் தருகின்றது பிரித்தானிக்கா கலைக்களஞ்சியம்.

> கடிதங்கள் சுயசரிதைத் துணுக்குகள். யோசித்து எழுதப்படும்
> சுயசரிதை நூல்கள் போலின்றி, இயற்கையாக மனதில்
> எண்ணம் தோன்றும் வேகத்தில் தோன்றுபவை கடிதங்கள்.
> அந்த நிமிடத்திய சிந்தனை அப்படியே இயற்கையாகப்
> பதியப்படுகிறது கடிதங்களில். கடிதத்தைச் சத்தியத்தின்
> சாட்சி என்று சொல்லலாம்.[2]

என்கிறார் ரா.அ. பத்மநாபன்.

> பொதுவாகக் கடிதங்கள் ஒருவருடைய உள்ளத்தில் அவ்வப்பொழுது
> ஏற்படக்கூடிய உணர்ச்சிகள், எண்ணங்கள் முதலியவற்றைப்
> பிரதிபலித்துக் காட்டக்கூடிய கண்ணாடிகள், இருவருடைய
> உள்ளங்களை இணைத்து வைக்கும் பாலங்கள்; செயலில்
> இறங்கத் துணிந்து விட்டவர்களின் மனத்தில் உருவாகியிருக்கும்
> திட்டங்களை ஒருவாறு அறிவிக்கும் முன்னோடிகள்[3]

என்று சாமிநாத சர்மா குறிப்பிடுகின்றார். தேவநேயப் பாவாணர்,

> ஒருவகையில் கடிதம் என்பது எழுதப்படும் பேச்சே.

> ஒருவருக்கு முன்னிலையிலிருந்து திறமையாகவும், தெளிவாகவும், முறையாவும், இனிமையாகவும், பேசுவதாற் பெறக்கூடிய பயன்களை அங்ஙனம் எழுதுவதாலும் பெறுதல் கூடும்[4]

என்பதாகக் கருத்துரைக்கிறார்.

மேற்கண்ட அறிஞர்தம் கருத்துக்களிலிருந்து ஒருவருடைய உள்ளத்து உணர்வுகளை, அவர் உணர்த்த விரும்பும் செய்திகளை எழுத்து வாயிலாக, இன்னொருவருக்குத் தெரிவிக்க உதவும் கருவியே கடிதம் என்னும் விளக்கம் பெறப்படுகிறது.

கடிதவகைகள்

க.த. திருநாவுக்கரசு கடிதங்களைத் தனிநிலைக் கடிதம், அலுவல் கடிதம், பொதுநிலைக் கடிதம் என மூவகையாகப் பகுத்துக் கூறுகிறார்.[5] ச.வே. சுப்ரமணியன் கடிதங்களை உண்மைக் கடிதங்கள், புனைவுக் கடிதங்கள் என இருவகையாகப் பகுக்கிறார்.[6] இவ்விருவரின் கருத்துக்களையும் மனங்கொண்ட தமிழ்மாறன், தமிழில் காணலாகும் கடிதங்களை,

1. தனிநிலைக் கடிதம் அல்லது உண்மைக் கடிதம்
2. பொதுநிலைக் கடிதம் அல்லது புனைவுக் கடிதம்
3. அலுவல் கடிதம்
4. வெளிப்படைக் கடிதம்

என நான்கு வகைகளாகச் சுட்டுகிறார்.[7] இவற்றுள் கலைஞரின் கடிதம் 'புனைவுக் கடிதம்' என்னும் வகையினதாகும்.

புனைவுக்கடிதம்

கடித வடிவத்தை ஓர் உத்தியாகக் கொண்டு எழுதப்பெறும் கட்டுரைகளைப் புனைவுக்கடிதம் எனலாம். அவை செய்தித் தாள்களிலோ, இதழ்களிலோ, நூல்களிலோ வெளிப்படுத்தப்படுவனவாக இருக்கலாம். தன் சமுதாயத்திற்குக் கூற விரும்பும் கருத்துக்களைக் கடித இலக்கிய வகையில் வெளிப்படுத்தும் இம்முயற்சி தமிழில் மு.வ. அவர்களால் தொடங்கி வைக்கப் பெற்றது. அவர், அன்னைக்கு, தங்கைக்கு, தம்பிக்கு, நண்பர்க்கு என்னும் நான்கு கடித இலக்கிய நூல்களை எழுதியுள்ளார். இந்நான்கு நூல்களும் 1951 ஆம் ஆண்டுக்கு முன்னரே வெளிவந்து விட்டனவென்றும், இந்நூல்களின் தாக்கத்தால் அறிஞர் அண்ணா 1952 முதல் தம்முடைய 'திராவிட நாடு' எனும் வார இதழில் 'தம்பிக்கு' என்று தலைப்பிட்டுக் கடித வடிவில் செய்திகளை வெளிப்படுத்தத் தொடங்கினார் என்றும் க.த. திருநாவுக்கரசு தெரிவிக்கின்றார்.[8] அண்ணாவின் புனைவுக் கடிதங்களை அழியா இலக்கியம் என்று புகழாரம் சூட்டுகிறார் மா. செல்வராசன்.

> அறிஞர் அண்ணா அவர்கள் 'தம்பிக்கு' என்று 'திராவிட நாடு' 'காஞ்சி' இதழ்களில் எழுதிய கடிதங்கள் அழியா இலக்கியம். அக்கடிதங்கள் எல்லாத் துறைகளையும் தொட்டுஎல்லாவற்றிலும் அமர முத்திரையைப் பெற்றவை[9]

என்பது அவர் கூற்று. அண்ணாவைத் தொடர்ந்து எழுதத் தொடங்கிய

கலைஞர் கடித இலக்கியத்தை இன்றும் தொடர்ந்து எழுதி வருகிறார்.

கலைஞர் கடிதங்களின் உள்ளடக்கம்

தம் கடித உள்ளடக்கம் குறித்து கலைஞர் குறிப்பிடும்போது, உடன்பிறப்புகளான கழகத்தினருக்குக் கூறவேண்டியவைகளையும், அவர்களை முன்வைத்து நாட்டுக்கு, சமுதாயத்துக்குச் சொல்ல வேண்டியவைகளையும் ஒரு பாச உணர்வுடன் வெளியிட இக்கடிதம் எழுதும்முறை எனக்கு மெத்தவும் பயன்படுகிறது[10] என்கிறார்.

ஆதலால், கலைஞர், தம் இயக்கத்தினர்க்கு கூற விரும்பிய செய்திகள், எதிர்க்கட்சியினர்க்குத் தெளிவுபடுத்த விரும்பிய விளக்கங்கள், பதிலுரைகள், பொதுவான அரசியல் நிலைகள், சமுதாயச் சிந்தனைகள், மொழி இனம் தொடர்பான சிந்தனைகள், முதலியவற்றைத் தம் கடிதத்திற்குரிய உள்ளடக்கச் செய்திகளாகக் கையாண்டுள்ளார் என அறிய முடிகிறது. இவைதவிர விளையாட்டு, திருநாள்கள் ஆகியன குறித்த உள்ளடக்கங்களைத் தாங்கி நிற்கும் சில மடல்களையும் தீட்டியுள்ளார்.

சமுதாயச் சிந்தனைகள்

திராவிட இயக்கம் சமுதாய மறுமலர்ச்சியை அடிப்படை நோக்கமாகக் கொண்டு தோற்றுவிக்கப்பெற்ற இயக்கமாகும். சமுதாயத்தில் காணப்படும் சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டி, அவற்றிற்கான காரணங்களைக் கண்டறிந்து சமுதாயச் சீர்திருத்தம் காண உழைக்க வேண்டும் என்பதே திராவிட இயக்கத்தின் முதன்மையான நோக்கமாகும். இத்தகைய நோக்கத்தை நிறைவேற்ற ஈடுபாட்டோடு உழைத்துவரும் கலைஞர் தம் கடிதங்களில் சமுதாயச் சீர்கேடுகளுக்கு ஆணிவேராக விளங்கக்கூடியசாதி வேறுபாடுகள், சமயத்தின் பெயரால் கற்பிக்கப்பெறும் மூடநம்பிக்கைகள் ஆகியவற்றையும் மூடநம்பிக்கைகளைப் போக்கவல்ல பகுத்தறிவின் இன்றியமையாமையையும் உள்ளடக்கங்களாகவும், கையாண்டுள்ளார்.

சாதி வேறுபாடுகள்

சாதி வேறுபாடற்ற சமத்துவச் சமுதாயத்தை உருவாக்கப் பாடுபட்ட பல தலைவர்கள் தோன்றிய தமிழகத்தில் இன்று சாதிய மோதல்கள் தலைதூக்கி நிற்கின்றன. திராவிட இயக்கத்தின் வழிகாட்டியாகப் போற்றப்படும் பெரியாரைப் பற்றி,

"சாதிவெறி, மதக்குரோதம், மூடநம்பிக்கை, இத்யாதி கொடுமைகளை அகற்றுவதற்கு, அடிக்கும் தாயைப்போல் பெரியார் ஆத்திரம் காட்டினார்" என்று குறிப்பிடும் கலைஞர், பெரியாரின் சாதிஒழிப்புப் பணி வெற்றி பெறாத அவலத்தை, "நம்மைச் சாதி உணர்ச்சி தொடாமல் இருக்கிறதா? பின்தங்கியோர், தாழ்த்தப் பட்டோர் என்றுதானே பெரியார் உழைத்தார். ஆனால் நாம் பின்தங்கியோரில் பல சாதிகளைப் பிரித்துக் கொள்கிறோம். தாழ்த்தப்பட்டோரில் இரண்டு மூன்று சாதிகளைப் பிரித்துக் கொள்கிறோம். அந்தந்த சிறு பகுதியின் வளையத்துக்குள்ளேதான்

> நமது அறிவியல் சிந்தனை - நமது சமுதாயச் சிந்தனை - நமது பதவிச் சிந்தனை - நமது உறவுச் சிந்தனை - நமது சிபாரிசுச் சிந்தனை - நமது உத்யோகச் சிந்தனை - நமது 'கொள்வன கொடுப்பன' சிந்தனை என்று நம்மை அறியாமலே சாதிச் சகதியிலே மூழ்கி விடுகிறோம். நாம் எந்த இடத்தில் இருக்கிறோம்; எந்தெந்த அறிவுரைகளை மக்களுக்கு வழங்கினோம்; அந்த மொழிப்படி நாம் நடந்து கொள்கிறோமா. என்று நம்மையே நாம் நிலைக்கண்ணாடியில் பார்த்துக் கொண்டால், சாதி ஒழிப்பு விஷயத்தில் பெரியார் நம்மை வென்றாரா என்ற கேள்விக்கு "இல்லை! அவர் வென்றிடவில்லை" என்ற பதில்தான் நமக்கு எதிரொலியாகக் கிடைக்கும்"[12]

என்று வேதனையுடன் வெளியிடுகிறார். இன்றைய நடைமுறையில் நாம் காணும் யதார்த்தத்தை அப்படியே மேற்சுட்டியவாறுவெளியிடுகிறார்.

மூடநம்பிக்கை ஒழிப்பு

சமயங்களின் பெயரால் மக்களுக்குக் கற்பிக்கப்பெற்று, மக்களால் கைக்கொள்ளப் பெற்று வரும் மூடநம்பிக்கைகளே சமுதாய மறுமலர்ச்சிக்குப் பெருந்தடைகளாக விளங்குவன. திராவிட இயக்கங்களின் தொய்வில்லாத பணிகளுக்குப் பின்னரும் மூடநம்பிக்கைகள் தமிழ் மக்களிடையே நிலவிவரும் நிலையைக் கலைஞரின் கடிதங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

> "கடவுள் தன்மை - மதத்தின் மாண்பு இவைகளுக்கே கூட இழிவு கற்பிக்கும் வகையில் ஏற்கெனவே எழுதப்பட்டுள்ள நம்ப முடியாத கதைகள் ஏராளம் இருக்கும்போது, இன்னும் ஏன் அந்த முயற்சியில் ஈடுபட்டு, புதிய புதிய அவதார புருடர்களை அறிமுகப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள்"[13] என்று வினவும் கலைஞர் சமுதாயக் கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும், நேர்மையையும், நெறியையும், மூடநம்பிக்கைகளால் நிலைநிறுத்த முடியாது"[14] என்று தெளிவுறுத்துகிறார். அவ்வப்பொழுது செய்தித்தாட்களில் வெளிவரும் பகுத்தறிவுக்கு ஒவ்வாத சித்து வேலைகள், அதிசயங்கள் ஆகியவற்றின் பின்னணியில் மூடநம்பிக்கை குடிகொண்டிருப்பதை தம் மடல் வழியாகப் புலப்படுத்தி, பகுத்தறிவுவாதிகளின் பணி விரைவுபடுத்தப்படவேண்டியதின் தேவையைச் சுட்டுகிறார். இந்நிலை மாறுவதற்குத் தம் இயக்கத்தவர்கள் உழைக்க வேண்டும் என்ற அறிவுறுத்தும் அதே நேரத்தில் சட்டத்தின் மூலமும் மூடநம்பிக்கைகளை ஓரளவுப் போக்க முடியும் என்று தம் மடல்களில் தெரியப் படுத்தியுள்ளார். "அதிசய வேலைகள்! ஆருடக் கணிப்புக்கள்! ஜோசிய மோசடிகள்! இவைகள் நம்பத்தகாவை என்று கட்சிக்கும் அப்பாற்பட்ட மேதைகள் அனைவரும் திடமாகக் கூறியாயிற்று. ஆகவே, இந்தக் கொடுமையை ஒழிக்க - இந்தியநாட்டு அளவில் உடனடியாகச் சட்டம் தேவை! கள்ளக்கடத்தல் போல, அந்நியச்செலாவணி மோசடிபோல, இதுவும் "மிசா" அல்லது "போசா" போன்ற சட்டத்தால்

தடுக்கப்பட்டாக வேண்டும். இல்லையேல் இந்த நோய்,
சமுதாயத்தை - நாட்டை - மிக வேகமாகப்
பின்னுக்குத்தள்ளி, மக்களைக் கோழைகளாக்கி வீழ்த்தி விடும்"[15]

என்பது கலைஞரின் கருத்தாகும்.

பகுத்தறிவு

சாதி வேறுபாட்டையும், மூடநம்பிக்கைகளையும் அகற்றுவதற்குப் பகுத்தறிவு பெருந்துணை புரியும். எனவே பகுத்தறிவின் இன்றியமையாமையை அடிக்கடி தம் கடிதங்களில் கலைஞர் வலியுறுத்துகிறார். சாதி, மதமென்றும் சமூக அமைப்புக்களால் ஏற்பட்ட பேதங்களை அகற்றுவதற்கு மட்டுமல்ல, உழைக்க ஓர் பிரிவு; உண்டு கொழுக்க ஓர் பிரிவு என்ற பொருளாதார பேதத்தையும் சுட்டிக்காட்டி ஏற்றத்தாழ்வற்ற சமதர்ம சமுதாயம் அமைத்திடவும் பகுத்தறிவு மன்றமே தீர்ப்பு எழுதியது"[16] என்று குறிப்பிடும் கலைஞர் நாடு சிறப்பதற்கு அனைத்துத் துறைகளிலும் பகுத்தறிவின் தேவையை விளக்கும் பகுதி இங்குக் குறிப்பிடத்தக்கது.

"சமுதாயத்துறை, பொருளாதாரத்துறை, அரசியல்துறை
அனைத்திலுமே பகுத்தறிவு நீரோடை தங்கு தடையின்றிப்
பாய்ந்தோடிட வேண்டும். அப்போதுதான் நாடு வாழும்! நலிவு
தீரும்! பண்பு சிறக்கும்! பளிங்கெனத் தெளிவு பிறக்கும்!"[17] எனவே
தம் இயக்கத்தவர்கள் பெரியார், அண்ணா வழிநின்று இயக்கப்
பணிகளோடு பகுத்தறிவுப் பிரச்சாரத்தையும் செய்தல் வேண்டும்

என்றும் கட்டளையிடுகிறார்.[18]

மொழி

தமிழ்நாட்டு மக்களின் உள்ளங்களில் மொழியுணர்ச்சி காட்டாற்று வெள்ளமெனப் பெருகுவதற்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. கல்வியறிவு இல்லாத பாமர மனிதனும் தம் தாய்மொழியின் மாண்பை எண்ணிப் பெருமிதம் அடையச் செய்த பெருமை தி.மு.க.வுக்கு உண்டு. "தமிழ் மரபு, தமிழ் இலக்கியம், தமிழ் வரலாறு, தமிழ்மொழி ஆகியவை பாதுகாக்கப்பட வேண்டும். தரணியெங்கும் பரவிட வேண்டும், மங்காமல் மறையாமல் போற்றிப் புகழப்பட வேண்டும். அந்த மறுமலர்ச்சி தமிழுக்கு ஏற்படத்தான், தி.மு.கழகம் ஆட்சிபீடம் ஏறிட விரும்புகிறது" என 1967 இல் விருகம்பாக்கம் மாநாட்டில் அறிஞர் அண்ணா முழங்கியதைத் தம் 15.4.76 ஆம் நாளிட்ட மடலில்[19] எடுத்துக்காட்டும் கலைஞர், அவரது கடிதங்கள் பலவற்றில் மொழி உணர்வுச் சிந்தனையை வலியுறுத்தியுள்ளார். சென்னை மாகாணம் 'தமிழ்நாடு' எனப் பெயர்மாற்றம் பெற்ற நிகழ்ச்சியை 1968, டிசம்பர் முதல் நாளில் பெருவிழாவாகக் கொண்டாட வேண்டும் என்ற அண்ணாவின் வேண்டுகோளைத் தம் இயக்கத்தவர்களுக்குத் தெரியப்படுத்த விரும்பிய கலைஞர் தாம் எழுதிய மடலில்,

என் உயிரனைய நண்பா!
உயர்குண மேவிய தமிழா!

உலகெங்கும் பரவியிருக்கும் உத்தமனே!
உன் விழி திறந்த தமிழுக்கு விழா எடுப்பாய்!
தமிழ்நாடு வாழ்க! வாழ்க என முரசறைவாய்!
மங்கல முரசறைவாய்

கொடிகள், வான்முட்டப் பறக்கட்டும்!
கொள்கை மணக்கும் "பதாகைகள்"
தெருவெல்லாம் திகழட்டும்!

இனிமைத் தமிழ்நாடு வாழ்க என
இசைமுழக்கம் எங்கெங்கும் கேட்கட்டும்!
ஊர்வலங்கள் கடல் அலையை
வெல்லட்டும்
கூட்டங்கள், பட்டி தொட்டியெல்லாம்
நடக்கட்டும்!
விழா! விழா! விழா
மகிழ்ச்சி! மகிழ்ச்சி! மகிழ்ச்சி!
தமிழ்நாடு! தமிழ்நாடு! தமிழ்நாடு![20]

என்றெல்லாம் மகிழ்ச்சிக் கூத்தாடுகிறார். தமிழ்மொழியின் சிறப்புக்குரிய அடிப்படைக் காரணங்களுள் ஒன்று. அது பெற்றிருக்கிற தொடர்ச்சியான ஈராயிரம் ஆண்டுக்கால இலக்கிய வரலாறுதான். கலைஞர், நமக்குக் கிடைத்துள்ள இலக்கியங்களின் தொன்மையையும் தாண்டி, எட்டாயிரம் ஆண்டுக்கால பழமையான வரலாற்றைத் தமிழ்மொழிக்கு வழங்கும் தன்மையை, ''தொன்மை வாய்ந்த மொழி தமிழ்மொழி. அதங்கோட்டாசானிடம் மாணவராக இருந்தவர் தொல்காப்பியர். அவர் காலத்திலே இலக்கணம் எழுதப்பட்டது என்றாலும் அதற்கு முன்பு ஒரு ஐயாயிரம் ஆண்டுகளாவது தமிழ்மொழி பண்படுத்தப்பட்டிருப்பதால்தான், அதற்குத் தொல்காப்பியர் இலக்கணம் கண்டிருக்க முடியும். தொல்காப்பியர் காலமே மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது என்கிறார்கள். அதற்கு முன்பு ஐயாயிரம் ஆண்டு வளர்ச்சி தமிழுக்கு! ஆக எண்ணாயிரம் ஆண்டுக்கால வரலாறு படைத்த பழம்பெரும் மொழி தமிழ்மொழி"[21] எனவரும் அவரது கடித அடிகளால் அறிய முடிகின்றது. இத்தகைய கால ஆராய்ச்சி என்பது புறநிலை சார்ந்த அறிவியல் அணுகுமுறை இல்லையெனினும், தமிழனுக்குத் தன் மொழிகுறித்த பெருமித உணர்வும், மொழியின்மீது பற்றும் ஏற்படுவதற்கு இத்தகைய உணர்வுபூர்வமான எழுத்தோவியங்களைக் கலைஞர் போன்ற அரசியல் தலைவர்கள் வழங்குவதில் தவறில்லை.

கடிதங்களில் இலக்கியச் செல்வாக்கு

தணியாத தாய்மொழிப் பற்றாளராக விளங்கும் கலைஞர் தமிழ் இலக்கியங்களில் ஆழ்ந்த புலமையும், தோய்ந்த ஈடுபாடும் உடையவர். அவர் மேடைப்பேச்சுக்களிலும், அவர் படைத்தளிக்கும் பிற இலக்கிய வகைகளிலும் தமிழ் இலக்கியங்களின் செல்வாக்கைக் காணலாம்.

அவர்தம் கடிதங்களிலும் இலக்கியங்கள் மிகுதியாக ஆளப்பட்டுள்ளமையை நெட்டோட்டமாக அவர் கடிதங்களில் காணமுடிகிறது.

பழந்தமிழரின் பண்பு மேம்பாட்டை விளக்கிக் காட்டும் கருவிகளாக விளங்கும் சங்க இலக்கியப் பாடல்கள் பலவற்றைத் தாம் கூறவிரும்பும் கருத்துக்கேற்றவாறு தம் கடிதங்களில் பயன்படுத்தியுள்ளார். குறிப்பாகப் புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, கலித்தொகை, ஐங்குறுநூறு, திருக்குறள், நாலடியார் முதலிய நீதிநூல்கள், சித்தர்பாடல்கள், ஐம்பெரும் காப்பியங்கள், சிறுகாப்பியங்கள் , சிற்றிலக்கியங்கள், பாரதியார், பாரதிதாசன் பாடல்கள் முதலியன கலைஞர் கடிதங்களில் பயன்படுத்தப் பட்டுள்ளமையை அறிய முடிகிறது.

எந்த வகையில் வாழ்ந்தால் வாழ்வு இனியதாக,
எழிலுடையதாக, பண்புடையதாக பயனுடையதாக
இருக்குமென்பதை வலியுறுத்திக் கூறும் உயர்
தனிப்பெருநூல் திருக்குறளாகும்.[22]

மூன்று நாட்கள் அல்ல; முப்பது நாட்கள் கருத்தரங்கம்
நடத்தினாலும் விரிவுரை, விளக்கவுரை, கருத்துரை,
பதவுரை, பொழிப்புரை கூறி மாளாது; அவ்வளவு
அரும்பெரும் கருவூலங்களை அடக்கிக் கொண்டிருக்கிறது குறள்.[23]

இவை குறள் குறித்து கலைஞர் மடல்கள் தரும் மதிப்பீடுகளாகும்.

நெருக்கடிநிலை நடைமுறையில் இருந்த காலகட்டத்தில் கலைஞர் எழுதியள்ள கடிதங்களுள் சங்க இலக்கியக் காட்சிகள் அல்லது பாடல்கள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. அவற்றின் மூலம் சமகால நிலைகளைத் தெளிவுபடுத்தினார்.

உத்தி

கலைஞரின் கடித இலக்கியங்களுள் இடம்பெற்றுள்ள இலக்கிய ஆட்சிகள் அவர் உணர்த்த விரும்பும் கருத்துக்கள் கடிதத்தைப் படிப்பவரின் உள்ளத்தில் எளிமையாகச் சென்று சேர்வதற்குரிய உத்திகளாகவே அமைகின்றன.

குட்டிக்கதைகள், உருவகக் கதைகள், உவமை, உருவகம் போன்ற அணிகள், வரலாற்று நாயகர்களாக விளங்கிய பன்னாட்டுத் தலைவர்கள் இலக்கியவாதிகள் தத்துவவியலார் போன்றோரின் வாழ்க்கையில் இடம்பெற்றுள்ள நிகழ்ச்சிகள் ஆகியவற்றைக் கூடத் தம் கருத்து விளக்கத்திற்குரிய சிறந்த உத்திகளாக, கலைஞர் தம் கடிதங்களில் பயன்படுத்தியுள்ளார்.

கடித அமைப்பு

பாவாணர், கடிதத்திற்குரிய உறுப்புகளாக,

1. தலைப்பு
2. கொளு

3. விளி
4. செய்தி
5. உறவுத் தொடர்மொழி
6. கையெழுத்து
7. முகவரி

முதலியவற்றைச் சுட்டுகிறார்.

புனைவுக் கடித வகைக்கு மேற்கூறியவற்றுள் முகவரி என்ற உறுப்பு தேவையில்லை. கடித இலக்கியத்தின் மிக முக்கியமான உறுப்புக்கள் கலைஞர் கடிதங்களில் பொருந்தியுள்ளன. நூலாகத் தொகுக்கப்பெற்று வெளிவந்துள்ள பத்துத் தொகுதிகளில் இடம்பெற்றுள்ள 370 கடிதங்களுக்கு 365 தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒரே தலைப்புக் கொண்ட ஒன்றுக்கு மேற்பட்ட கடிதங்களும் காணப்படுகின்றன. இவரது கடிதத் தலைப்புகளுள் மிகுதியானவை எதுகை, மோனை நயத்துடன் விளங்குபவை.

விளி

தொடக்க காலக் கடிதங்களில் (1968) 'அன்பு நண்பா' என்று விளிப்பதையும், 1971க்குப் பின்னர் எழுதிய கடிதங்கள் அனைத்திலும் 'உடன்பிறப்பே' என்று விளிப்பதையும் மரபாகக் கொண்டுள்ளார். 'பழைய நண்பனே', 'மாஜி நண்பா', 'அன்புள்ள சுப்ரமணியம் அவர்களே' என்ற விளிகள் சில கடிதங்களில் காணப்படுகின்றன.

கையொப்பம்

22.10.68 முதல் 28.1.69 முடிய உள்ள கடிதங்களில் அன்புள்ள மறவன் என்றும், 1.1.71 முதல் 10.7.72 முடிய உள்ள கடிதங்களில் அன்புள்ள மு.கருணாநிதி என்றும் 17.7.72 முதல் அன்புள்ள மு.க. என்றும் தம் மடல்களில் கையொப்பமிட்டுள்ளார்.

பத்தியமைப்பு

கலைஞரின் கடித அமைப்பில் பத்தியமைப்பு முறை குறிப்பிடத்தக்கது. தான் உணர்த்த விரும்பிய கருத்தை உடன்பிறப்பு உளங்கொள்ளத்தக்க வகையில் பதிய வைப்பதற்கு அவரது பத்தியமைப்பு முறை காரணமாக அமைகிறது.

சிறுசிறு பத்திகளாக அமைக்கப்பெற்று, ஒவ்வொரு பத்தியும் ஒவ்வொரு செய்தியை மட்டுமே தாங்கி நிற்கும் வகையில் கடிதம் அமைந்துள்ளது.

பொதுமக்களும் ஓய்வூதியம் பெறுவதற்கு ஒரு திட்டம்
பரிசுப்பத்திரம் வாங்குவதின் மூலம், பணத்திற்கு இழப்பு இல்லாமல் ஆறுமுறை பரிசு பெறுகிற வாய்ப்புக் கொண்ட மற்றொரு திட்டம்.
அங்கீனர்களுக்கு வாழ்க்கைப் பாதுகாப்பு வழங்க ஏற்பாடு.
"பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்" அமைப்பு.
அரிசனங்களுக்கு ஐந்தாண்டு காலத்தில் ஒரு லட்சம் வீடு கட்டத் தனியாக ஒரு வீட்டு வசதி வாரியம்.

கட்டபொம்மன் நினைவுக்கோட்டை, திருவள்ளுவர் ஆலயம் எனவரும் பத்திகள் முன்னர்ச் சுட்டிய கருத்தை விளக்க வல்லன.

மிக நீண்ட பத்திகளில் சில கடிதங்கள் அமைந்துள்ளன.

"பெரியாரின் வெற்றி பற்றி நேற்று கடிதத்தில் எழுதியிருந்தேன். அதை எழுதி உனக்கு அனுப்பிய பிறகு சற்றுக் கண் அயரலாம் என்று படுத்தேன். உறக்கம் வரவில்லை. பெரியார், சாதி மத பேதங்களை வென்றார் என்றும், தன்னைத் தேசத்துரோகி என்றும் வகுப்புவாதி என்றும் சமுகவிரோதி என்றும் கூறியவர்கள், தங்கள் மனப்போக்கை மாற்றிக்கொண்டு உண்மையை உணருகிற அளவுக்கு அவர்களை எல்லாம் வென்றார் என்றும் எழுதியிருக்கிறேன். அதுசரிதான். ஆனால் ஒரு சந்தேகம். பெரியார் நம்மை வென்றாரா? என்ன இப்படித் திடீரென்று கேட்கிறேனேயென்று திகைக்கிறாயா? மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் சிலவற்றைச் சிந்தித்துப் பார்த்தால் பெரியார் நம்மை வென்றிடவில்லை என்றுதான் தோன்றுகிறது. கடவுள் கொள்கையில் "ஒருவனே தேவன்" என்ற நமது கருத்து ஏற்கெனவே வெளிப்படையாக அறிவிக்கப்பட்ட ஒன்று. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்பது நமது முழக்கம். ஆத்திகர் மனம் புண்படாமல் பண்படப் பணிகள் ஆற்றிட வேண்டும் என்பதே அண்ணா வகுத்த வழி! அதில் பெரியாருக்கும் நமக்கும் நடைமுறையில் வேறுபாடுகள் உண்டு என்பதைத் தெளிவாக்கு கிறோம். ஆனால் சாதிமத பேதங்களை மூடநம்பிக்கைகளை வேரோடு களைவதில் கட்சி வேறுபாடின்றி அனைவருமே பெரியாருடன் உடன்பாடு கொண்டவர்கள்தான்?

என்ற கடிதத்தினை நீண்ட பத்தியமைப்பு முறைக்குச் சான்றாகக் காட்டலாம்.

மொழிநடை

மொழிநடை குறித்து சுந்தரமூர்த்தி என்பார்

1. அழகிய செஞ்சொற்களால் இனிமையாகவும், எளிமையாகவும், நுட்பமாகவும் கருத்தினை உணர்த்துவதே நல்ல நடையாகும்.

2. எண்ண ஓவியத்தினைச் சொற்களால் அழகுபடுத்தும் வல்லமை நடைக்கு உண்டு. எனவே மொழிநடை என்பது உணர்த்தும் திறனை அடிப்படையாகக் கொண்டது என்பது தெளிவு.

3. நடை ஒருவருடைய உணர்திறனையும், உணர்த்தும் திறனையும், உள்ளத்திறனையும் நன்கு புலப்படுத்தும்.

4. உணர்திறனும், உணர்த்தும் திறனுமே அறிவின் தலையாய இயல்புகள் எனலாம். இவற்றுள் உணர்த்தும் திறன் ஆசிரியரின் நடை நலமாகத் திகழ்கிறது.

5. ஒருவருடைய நடையை உள்ளம் என்றும், நடையினை வைத்தே ஆசிரியரின் இயல்பை உணரமுடியும்

என்றும் கருத்துரைக்கிறார்.[27]

கலைஞர் தம்முடைய இயக்கத்தவர்கள் பங்கேற்க வேண்டிய

நிகழ்ச்சிகள், ஆற்ற வேண்டிய பணிகள் ஆகியன குறித்து எழுதும் கடிதங்களில் அவற்றைப் படிப்பவர்களை விரைந்து செயலாற்றத் தூண்டும் உணர்வுப்பூர்வமான நடையைப் பயன்படுத்தியுள்ளார். இக்கருத்தை,

வீரத்தின் திருஉருவே! மானமரபின் குலவிளக்கே! மாணிக்கத்
தமிழே! மரகதச் சுடரே! முன்னூறு நாட்களுக்கு மேலாக
நீ ஓய்வெடுத்துக் கொண்டிருந்து விட்டு வெளியே வந்ததும்
வராததுமாக நீ ஆற்றிட வேண்டிய பணி உன் எதிரே
மலைபோல் உயர்ந்து நிற்கிறது[28]

என்ற பகுதியால் அறியலாம். தேர்தல் பணியாற்றத் தம் கட்சியினருக்குக் கட்டளையிடும் கடிதமொன்றின் நடை, "கொடிகட்ட, தோரணம் தொங்கவிட, மேடையமைக்கப் பாடுபட்ட கரங்களப்பா உன் கரங்கள்! என் கரங்களும் கூட அப்படித்தான். கூட்டம் நடத்திப் பழக்கப்பட்டவன். கொடி தூக்கிக் கோஷம் போட்டுப் பழக்கப்பட்டவன். அந்த உரிமையோடுதான் உன்னை அழைக்கிறேன்; இத்தனை நாள் செய்த வேலை பெரிதல்ல. . . இன்னும் இரண்டு மூன்று நாட்கள் செய்திட வேண்டிய பணியே மிக முக்கியம். . .

வாக்காளர் பட்டியல் சரி பார்த்து விட்டாயா? தெருத்தெருவாகப்
பிரித்து எழுதிவிட்டாயா? இன்னென்ன தெருவுக்கு இன்னன்னார்
என்று குழுக்கள் அமைத்து அவர்பால் பொறுப்பை வழங்கிவிட்டாயா?
வீட்டுக்கு வீடு 'சிலிப்' கொடுத்துவிட்டாயா? விலாசம் மாறிய
வாக்காளர்களின் கணக்குத் தயாரா? இறந்துபோன வாக்காளர்கள்,
எழுந்துவராமல் பார்த்துக் கொள்ள கண்காணிப்பு செய்துவிட்டாயா?[29]

என்று அமைகின்றது. கழக உறுப்பினன் ஆற்ற வேண்டிய கடமைகளை அவன் உளங்கொளத்தக்க நடையில் எழுதக்கூடியவர் கலைஞர் என்பதற்கு இந்த மடல் சான்றாகும்.

நாவல், சிறுகதை போன்ற படைப்பிலக்கியங்களில் பயன்படுத்தப்படும் உரையாடல் வடிவிலமைந்த நடையையும் கலைஞரின் கடிதங்களில் பரக்கக் காணமுடிகிறது. இதனை,

"சாகிற வரையில் சிறைதான்" என்றனர்.
"என் சாம்பல் தமிழ் மணந்து வேகும்" என்றாய்.
கட்சியைத் துறந்திடு! கதவு திறந்திடும்" என்றனர்
"கட்சியைக் கட்டிடு! நடையைத் தொடங்கிடு"
என்று நறுக்கெனப் பதில் அளித்தாய்!
தலைமையைத் தாக்கி ஓர் அறிக்கை அளித்திடு!
தளைகள் அறுபடும் தப்பிடலாம்" என்றனர்.
"அதற்கு எம்முடன் சில எட்டப்பர்கள் வந்துள்ளனர்.
அவர்களை அணுகிடுக. தலையே அறுபடினும்
துரோகம் செய்யும் ரத்தம் இந்த ரத்தமல்ல"
என நிமிர்ந்து நின்று விடையளித்தாய்[30]

எனவரும் கடித அடிகள் உணர்த்த வல்லன.

தமிழில் மு.வ., அண்ணா, சுத்தானந்த பாரதியார், வ.சுப.மாணிக்கம், செ. கணேசலிங்கம், குன்றக்குடி அடிகளார் முதலியோர் எழுதிய

இருபதுக்கும் மேற்பட்ட புனைவுக் கடிதங்களும், சில மொழிபெயர்ப்புக் கடிதத் தொகுதிகளும், கலைஞரின் கடிதத் தொகுதிகள் பத்தும் நூலாக வெளிவந்துள்ளன. இவற்றுள் பல்துறைச் சிந்தனைகளை உள்ளடக்கியன வாகக் கலைஞரின் கடிதங்கள் சிறந்து விளங்குகின்றன.

ஜெர்மனியில் ஷில்லரும், ஃபிரெஞ்சு மொழியில் மதாமெ-தே-செவிக் என்பவரும், ஆங்கிலத்தில் ஹரேஸ் வால்போல், செஸ்டர்பீல்டு, கிரே, கூப்பர், எமிலி டிக்கன்ஸன், டி.எச்.லாரன்ஸ், பைரன், ஷெல்லி, லாம்ப், அலெக்ஸாண்டர் போப், வால்ட் விட்மன், செனாகா, கீட்ஸ் போன்றோரும் ஒப்பற்ற கடித எழுத்தாளர்களாகச் சுட்டப்படுகின்றனர். அவர்களுக்கு இணையானவராகத் தமிழில் சுட்டத்தக்க கலைஞரின் கடிதங்களை முழுமையாகத் தொகுத்துப் பார்க்கும்போது, அவரது கொள்கை, அவர்தம் பல்துறை உழைப்புகள், பரந்துபட்ட அவரது அறிவாற்றல், தமிழின முன்னேற்றத்தின் மீது அவர் கொண்டுள்ள பேரீடுபாடு ஆகியவற்றைத் தெளிவாக அறிந்து கொளளமுடிகிறது.

அடிக்குறிப்புக்கள்

1. The Encyclopedia Britannica, Vol.15, The Encyclopedia Britannica company Ltd, London, 1926 (13th Edition), p.501
2. ரா.அ. பத்மநாபன் (தொகு.), 'முகவுரை', பாரதியார் கடிதங்கள்,
3. வெ. சாமிநாத சர்மா, வரலாறு கண்ட கடிதங்கள்,
4. புலவர் இரா. இளங்குமரன் (தொகு.), பாவாணர் கடிதங்கள்,
5. க.த. திருநாவுகரசு, அறிஞர் அறவாழி,
6. ச.வே. சுப்ரமணியன், தமிழ் இலக்கிய வகையும், வடிவும்.
7. மோ. தமிழ்மாறன், நாவலர் ந,மு. வேங்கடசாமி நாட்டார் கடிதங்கள் ஓர் ஆய்வு, அச்சிடப்பெறாத எம். ஏ. பட்ட ஆய்வேடு,
8. க.த. திருநாவுக்கரசு, மு.கு. நூல், ப.108.
9. மா.செல்வராசன், 'டாக்டர் மு.வ.வின் கடித இலக்கியம்', இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும், ந.சஞ்சீவி (பதி.),
10. மு.கருணாநிதி, 'என்னுரை', கலைஞர் கடிதம், தொகுதி-1,
11. மு.கருணாநிதி, கலைஞர் கடிதம், தொகுதி-3,
12. மேலது, ப.34.
13. மு.கருணாநிதி, கலைஞர் கடிதம், தொகுதி-6,
14. மேலது. ப.34.
15. மு.கருணாநிதி, கலைஞர் கடிதம், தொகுதி-6, பக்.138 - 139.
16. மு.கருணாநிதி, கலைஞர் கடிதம், தொகுதி-7, ப.49.
17. மேலது., ப.44.
18. மு.கருணாநிதி, கலைஞர் கடிதம், தொகுதி-3, ப.95.
19. மு.கருணாநிதி, கலைஞர் கடிதம், தொகுதி-6, ப.36.
20. மு.கருணாநிதி, கலைஞர் கடிதம், தொகுதி-1, பக்.96-97.
21. மு.கருணாநிதி, கலைஞர் கடிதம், ஆறாம் தொகுதி, ப.44.
22. மேலது., ப.45.
23. மு.கருணாநிதி, கலைஞர் கடிதம், தொகுதி-8, பக். 15 - 16.
24. ஞா. தேவநேயப் பாவாணர், கடிதம் வரைவது எப்படி ? கழகம், 19
25. மு.கருணாநிதி, கலைஞர் கடிதம், தொகுதி-3, ப.51.

26. மேலது., ப.33.
27. இ. சுந்தரமூர்த்தி, தமிழாய்வு, தொகுதி-3, ப.86.
28. மு.கருணாநிதி, கலைஞர் கடிதம், தொகுதி-10, பக்.118 - 119.
29. மு.கருணாநிதி, கலைஞர் கடிதம், தொகுதி-1, ப.6.
30. மு.கருணாநிதி, கலைஞர் கடிதம், தொகுதி-10, ப.118.

8 கலைஞர் கடித இலக்கியத்தின் உள்ளடக்கம்

முனைவர் இரா. சக்குபாய்

மனித வாழ்வு நலம்பெறவும், வளம் பெறவும் உழைப்பவர்கள் உழைப்பாளிகளான மக்கள். வாழத் தகுதியற்ற உலகை, வாழத் தகுதிப்படுத்தித் தந்த பெருந்தகைகள் அவர்கள்தாம். இயற்கை தந்த செல்வத்தை மக்களுக்குத் தேவையான செல்வமாக மாற்றுபவர்களும் அவர்கள்தாம். ஆதலால் சமூகம், அரசியல், கலை இலக்கியம் எதுவாயினும் அவை அவர்களுக்காவே படைக்கப்பட்டனவாக இருக்க வேண்டும். மனித சமத்துவத்தைப் பேணுவதாக, மனித ஒப்புரவை நாடுவதாக, மனித உரிமைகளைக் காப்பதாக, மனித மாண்புகளை உயர்த்துவதாக அவை அமைதல் வேண்டும்.

தமிழ் நாட்டில் மனு தரும நெறியாம் ஆரியத்தால் இவை அனைத்தும் மண்ணோடு மண்ணாக்கப்பட்டிருந்தன. அரசியலில் வெள்ளையர்; பதவிகளில் பார்ப்பனர்; சமயத் தலைவர்களாகப் பார்ப்பனர். தமிழர்களோ சூத்திரர், பஞ்சமர், அவர்ணஸ்தர். தமிழர்க்குக் கல்வி மறுக்கப்பட்டது. கல்வியால் கிடைக்கும் பயன்கள் தமிழர்க்கு இல்லை. கலை இலக்கியங்களில் பார்ப்பனக் கருத்தோட்டம் பாய்ந்தோடியது.

திராவிட இயக்கங்களின் தோற்றம்

"இருக்கும் நிலை மாற்ற ஒரு புரட்சி மனப்பான்மை வேண்டும்" என்பார் பாரதிதாசன். அத்தகு மனப்பான்மையுடன் தலைகீழ்ப் புரட்சியைச் சாதிக்கத் தோன்றிய இயக்கங்கள்தாம் 1916-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட தென்னிந்திய நலஉரிமைச்சங்கம். 1925-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட சுயமரியாதை இயக்கம். 1944-ஆம் ஆண்டில் பெயர் மாற்றம் பெற்ற திராவிடர் கழகம், 1949-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட திராவிட முன்னேற்றக்கழகம்.

கலை இலக்கியங்களைப் போராட்டக் கருவியாகக் கொள்ளல்

மேலே குறிப்பிட்ட மூன்று திராவிட இயக்கங்களும் மக்களுக்காக உருவானவைதாம் என்றாலும், இவ்வியக்கங்களை, மக்கள் தங்களுக்கான இயக்கங்கள் என்பதை உணரவும், பார்ப்பனியப் பிடியினின்றும் விலகவும், பார்ப்பனியச் சார்புடைய காங்கிரசு இயக்கத்துக்குத் தந்துவரும் ஆதரவை விலக்கிக் கொள்ளவும், தமக்கான இயக்கங்களில் இணையவும், உரிமைகளை வென்றெடுக்கப் போராடவும், முன்வரக்கூடிய தெளிவை உண்டாக்கக் கலை இலக்கியங்களைக் கருவியாகக் கொண்டானர். இவ்வாறு கொண்டதை,

காங்கிரஸ் ஆட்சியாளரின் அடக்கு முறைகளுக்கும்
ஆணவத்திற்கும் நாங்கள் எங்களுடைய பேச்சையும்
எழுத்தையுமே மாற்று
ஆயுதங்களாகப் பயன்படுத்தி வந்த நிலையில். . . . . . .
வாள்வலிமையைக் காட்டிலும் பேனா வலிமை பெரிது; அதைவிடப்
பெரிது நாவின் வன்மை என்பதில் எங்களுக்கு ஏற்பட்டிருந்த உறுதி[1]

எனக் கலைஞர் எடுத்துரைப்பார்.

கலை இலக்கியத்தின் உள்ளடக்கம் மனித சமூகத்திற்குப் பயன்படத்தக்கதாய் அதாவது,

மக்கள் யாவரும் சமம் - பகுத்தறிவே பிரதானம் - உலக
இயற்கைப் போக்குகள், இன்பதுன்பங்கள் யாவர்க்கும் பொது.
இவற்றை யாரும் சரிசமமாய் அனுபவிக்கக் கடமைப் பட்டவர்கள்;
அதற்கேற்ற கொள்கைகளே வாழ்க்கை முறையாகவும்
ஆட்சி முறையாகவும் இருக்க வேண்டும்; இவற்றிற்கு விரோதமாய்
இருப்பவைகள் எல்லாம் அழிந்து ஒழிந்து மறையவேண்டும்
என்கின்ற கருத்துக்கு அனுகூலமாகவும், வழிகாட்டியாகவும்
இருக்க வேண்டுமென்று விரும்பி, இன்றையக் கொடுமையும்
பட்சாபாதமும் நிறைந்த உலகத்தை அன்பும் சமத்துவமும்
கொண்ட உலகமாய்ச் செய்ய உதவிபுரிய வேண்டுமென்று
ஆசைப்படுகிறேன்[2]

எனப் பெரியார் விரும்பினார். அதனால் இவ்வியக்க எழுத்தாளர்களின் கலை இலக்கியப் படைப்புகளில் பாடுபொருள் எனப்படும் உள்ளடக்கம் தனியிடத்தைப் பெறலாயிற்று. பாரதியாரின் காலம் வரையிலும் இருந்த பாடுபொருள், சுயமரியாதை இயக்கத்தின் எழுச்சியால் அடிபட்டுப் போயிற்று. ஆலையின் தொழிலாளி, விறகு வெட்டுபவன், கூடைமுடைபவன், மாடுமேய்ப்பவன் ஆகியோரெல்லாம் பாடல் தலைவரானார்கள். இந்தப் புதியபோக்கு அடித்தட்டு மக்களிடம் இவ்வியக்கத்தைக் கொண்டு சேர்க்கப் பெருந்துணை புரிந்துள்ளது.

இத்தகைய புதிய உள்ளடக்கத்துடன் வந்த கலை இலக்கியங்களை ஏற்கனவே ஆதிக்கவாதிகளாக இருந்த பார்ப்பனர்களும், பார்ப்பனச் சார்புடையவர்களும், காங்கிரசு இயக்கச் சார்புடையவர்களும் நடத்திய இதழ்கள் வெளியிட முன்வராததுடன் எதிர்க்கவும் செய்தன. இதனால் தமிழ்மொழி - இன உணர்வுடைய கருத்துக்களைப் பரப்ப திராவிட இயக்கத் தலைவர்களும், தொண்டர்களும் புதிது புதிதான இதழ்களைத் தொடங்கினர். மக்களுக்கான கருத்துக்களை மக்கள் மொழியில் மக்களிடம் கொண்டு செல்லும் வண்ணம் பேச்சாளர்கள் பலர் தோன்றினர். காப்பியம், நாடகம், பாடல், சிறுகதை, புதினம், திரைப்படம், ஆராய்ச்சி, விமர்சனம் என்று கலை வடிவங்களிலெல்லாம் நுழைந்து, கருத்துப் புரட்சியைத் தோற்றுவித்தனர்.

இருபதாம் நூற்றாண்டு தமிழ்நாட்டு அரசியல் சமூக, கலை இலக்கியவரலாற்றை எழுதுவோர் திராவிட இயக்கங்களின் பங்களிப்பைப்

புறக்கணித்துவிட்டு எழுதமுடியாது என்ற அளவிற்கு அவை வீச்சுடையன. அதிலும் குறிப்பாக இதழாசிரியர், சிறுகதை எழுத்தாளர், புதின எழுத்தாளர், நாடக ஆசிரியர், திரைப்பட எழுத்தாளர், பாடலாசிரியர், புதுக்கவிதைப் படைப்பாளர், தமிழ்நாட்டின் தலைசிறந்த பேச்சாளர், நாடகநடிகர் எனப் பன்முக ஆற்றலும் அண்ணாவைப் போல ஒருங்கே வாய்க்கப்பெற்றவரும், தலைசிறந்த அரசியல் வாதியும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் நெடுநாளையத் தலைவருமான கலைஞரைப் புறந்தள்ள முடியாது.

கலைஞரின் கலை இலக்கிய உள்ளீடு

பட்டுக்கோட்டை அழகிரியின் பேச்சாலும்[3] குடிஅரசு இதழ்க் கல்வியாலும்[4] சுயமரியதை இயக்கத்தின் வீரராகத் தமது 14-வது வயதிலேயே மாறியவர் கலைஞர். இவ்இயக்கத்தின் கொள்கைகளைப் பரப்பவே நாடகம் திரைப்படம் முதலானவை கருவியாகப் பயன்படும் என்று கருதியதை,

> தாழ்ந்த தமிழினத்தைத் தட்டி எழுப்பிட, அவர்களுக்குத்
> தன்மானஉணர்வினை ஊட்டிடத் தந்தை பெரியார் அவர்கள்
> சுயமாகவே சிந்தித்துச் சிந்திடும் ஒளிக்கதிர்களை - உன்னத
> இலட்சியங்களைப் பரப்புவதற்கு மேடைப் பேச்சைப் போலவே
> நாடகத் துறையும் பயன்படும் என்று என்னைப்போன்றவர்கள்
> அப்போது நம்பினோம்[5]

என்ற கலைஞரின் கூற்று உறுதிப்படுத்தும்.

கலைஞரது நாடக வசனங்களால் ஈர்க்கப்பட்ட திரைப் படத்துறையினர் திரைப்படங்களுக்கு வசனம், கதை எழுத வேண்டி விரும்பி அழைத்துச் சென்றனர்.[6] இவருடைய வசனங்களைப் பேசியதாலேயே சிறந்த நடிகர்கள் எனத் தமிழ்நாட்டில் புகழ்பெற்றவர் பலர்.

> நாட்டுக்குத் தேவையான நல்ல கருத்துக்களை நாடகங்களில்
> புகுத்திட எவ்வாறு முயற்சிகள் எடுத்துக் கொண்டேனோ
> அவ்வாறே மேலே குறிப்பிட்ட திரைப்படங்களுக்கும் சரி,
> அவைகளுக்குப் பிறகு வெளிவந்த திரைப்படங்களுக்கும் சரி,
> வசனங்கள் தீட்டிய போதெல்லாம் அவற்றிலே கழகத்தின்
> இலட்சியங்கள் இலைமறைகாயாக இழையோடிடுவதற்கும்
> அக்கரை காட்டியுள்ளேன்.
> . . . இலட்சியங்களைப் பரப்பிட ஏற்றதொரு கருவியாகக்
> கலையினைப் பயன்படுத்தினார் அண்ணா. அவர்தம் வழியிலேயே
> நானும் மற்றக் கழக எழுத்தாளர்களும் செயல்பட முயன்றிட்டோம்
> திரையுலகில்-நாடகத்துறையில்[7]

என்கிறார் கலைஞர். அதாவது அண்ணாவின் வழி நின்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியங்களைத் தாமும், தி.மு. கழக எழுத்தாளர்களும் திரைப்படத் துறையிலும், நாடகத் துறையிலும் பயன்படுத்தியதைக் குறிப்பிடுகின்றார்.

1949-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 17-ஆம் நாளில்

அண்ணாவின் தலைமையில், திராவிடர் கழகத்தினின்றும் பிரிந்து வந்த இளைஞர்கள் தோற்றுவித்த இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். இந்நிகழ்ச்சியில் கலைஞரும் கலந்து கொண்டார்; அண்ணாவின் தலைமையினை ஏற்றுக் கொண்டார். அண்ணா, கலைஞரை தி.மு.கழகத்தின் பிரசாரக்குழு உறுப்பினராக நியமித்தார்.[8]

கலைஞர் என்ற சிறப்புப் பெயர்

ஈ. வெ. ராவின் சமூகத் தொண்டினை மதித்து தமிழ்ச் சமூகம் அவரைப் பெரியார் எனவும், தந்தை பெரியார் எனவும் சிறப்பித்தது. சி.என்.அண்ணாதுரையின் சமூக அரசியல் தொண்டினை மதித்து அறிஞர் அண்ணா எனச்சிறப்பித்தது. இவர்களைப் போலவே திருவாரூர் மு.கருணாநிதியாகவும், மு.கருணாநிதியாகவும் இருந்தவரைக் 'கலைஞர்' எனச் சிறப்பித்தது. இச்சிறப்பினைப் பெற்றுத்தந்தது அவரது கலைப்படைப்புகள்தாம்.

பகுத்தறிவுப் பிரச்சாரத்தின் பொருட்டு நடிகவேள் எம்.ஆர். ராதாவின் விருப்பப்படி 1946-ஆம் ஆண்டு தூக்குமேடை நாடகத்தை எழுதித் தந்ததுடன் அந்நாடகத்தில் நடிக்கவும் செய்தார் கலைஞர். தஞ்சாவூரில் அரங்கேறிய இந்நாடகத்திற்குத் தலைமை தாங்கிய பட்டுக்கோட்டை அழகிரி, அவரின்

> எழுத்தாற்றலையும் நடிப்பையும் பார்த்துவிட்டுக் கலைஞர்
> என்ற பட்டத்தைத் தம்வாயால் உச்சரித்து வழங்கினார்.
> அதுமுதல் மு.கருணாநிதி பெயரோடு கலைஞர் என்ற
> அடைமொழிசேர்ந்து வழங்கப்படுவதாயிற்று. பொதுவாழ்வில்
> அவர்புகழ் சிறக்கச்சிறக்க அவரது இயற்பெயரைப்பெரும்பாலோர்
> எழுதுவதோ பேசுவதோ கிடையாது. கலைஞர் என்றஅடைமொழி
> இன்று தமிழ்நாட்டில் அவரை மட்டுமே குறிக்கின்ற
> சொல்லாகிவிட்டது.[9]

என்ற உண்மையைக் க. திருநாவுக்கரசு எடுத்துக் காட்டுவார்.

கடிதங்கள்

சமூக அரசியல் அறப்போராட்ட வீரராகவும், கழகக் கொள்கைகளைப் பரப்புகின்ற கலைப்படைஞராகவும் விளங்கிய கலைஞர், 1957-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் சட்டமன்ற உறுப்பினரானார். நிலவுக்குச் சென்று வந்தவன் பெற்ற தெளிவைப் போன்று தம் பார்வையிலும் இச்சட்டமன்ற நுழைவு தெளிவை ஏற்படுத்தியது என்கிறார். மேலும்,

> தமிழகமே என்கண்களுக்கு எப்போதுமில்லாத
> அளவுக்குப் பரிதாபமானதாகத் தெரிந்தது. வயற்புற உழவர்கள்
> ,நகர்ப்புறத் தொழிலாளர்கள், கல்லூரிக் காளைகள்,துவக்கப்பள்ளித்
> துளிர்கள், துன்பங்களின் சுமைகள் எவ்வளவுதாம்
> அழுத்தினாலும் ஒடிந்துவிழாமல் வளைந்து கொடுத்தே
> ஓட்டிவரும் தாய்மார்கள் ஆகிய அனைவருமே என்
> கண்களுக்குப் புதுமாதிரியாகத் தெரிந்தார்கள்.
> அதுவரையில் என்னைப் பொறுத்தவரை இவர்கள்

உலகத்தோடு ஒட்டி ஒழுகத் தெரிந்து கொள்ளாத,
தெளிவு பெறாத மக்களாகவே எனக்கிருந்த சமுதாயச்சீர்திருத்த
நோக்கத்தோடு பார்த்து வந்தேன். ஆனால் 1957-ல்இவர்கள்
அனைவரும் எனக்கு வேறுவிதமாகத் தெரியத்தொடங்கினர்.
அரசியல் ரீதியில் அவர்கள் எவ்வாறு வஞ்சிக்கப்ப
டுகிறார்கள்? சட்ட ரீதியாக அவர்கள் எத்தகு கொடுமை
களுக்கு ஆளாக்கப்படுகிறார்கள்? இவர்களுக்குஎதிர்காலத்தில்
எவ்வாறு பணியாற்றி மகிழ்ச்சியைச் சேர்க்கமுடியும்
என்பதிலேயே என் எண்ணங்கள் செல்லத் தொடங்கின.[10]

என எடுத்துரைக்கிறார். இத்தெளிவு அவருடைய எழுத்துக்களுக்கு மேலும் மேலும் தெளிவையும், வலுவையும், கூர்மையையும் வழங்கியது.

அரசியலில் பல்வேறு பொறுப்புக்களை அவர் ஏற்றிருந்தபோதும் கலை இலக்கியங்களைப் படைப்பதில் அவருக்கு இருந்த ஈடுபாடும் ஆர்வமும் சிறிதளவு கூட குறையவில்லை. இதனை,

கலை - அரசியல் இரண்டையுமே என் இரு கண்களாகக்
கருதுபவன் நான். இவற்றிலே எந்தக்கண் உயர்ந்தது
எந்தக்கண் தாழ்ந்தது என்ற ஆராய்ச்சிக்கே இடமில்லை.
இரு துறைகளிலுமே, என் இதயம் ஏற்றுக்கொண்ட
உயர்ந்த கொள்கைகளுக்காக- ஓய்வு பற்றி ஒரு கணமும்
எண்ணிடாமல் உளப்பூர்வமாக உழைத்தேன்; உழைக்கின்றேன்
என்பது மட்டும் உண்மை[11]

எனும் அவருடைய கூற்றே வெளிப்படுத்தும்.

ஆட்சிக்கு வந்துவிட்டாலும் கழக ஆட்சியின் சாதனைகளை மக்கள் அறிந்து கொள்ளவும், தொடர்ந்து அவர்கள் ஆதரவு அளித்துவரவும், ஆட்சியை இழந்துவிட்ட காங்கிரசு இயக்கத்தவரும், ஏனைய அரசியல் சமய இயக்கத்தவரும் கூறும் பொய்ப்பழியினை அம்பலப்படுத்தவும், சமயக் கலப்பு இல்லாத, மக்களுக்கான கருத்துக்களைத் தாங்கிய சங்க இலக்கியக் கருத்துக்களை மக்கள் அறிந்து போற்றவும், கழகத் தோழர்கள் இறுமாப்பு ஏதும் கொள்ளாது, வன்முறையில் ஈடுபடாது செயல்படவும், சூழ்ச்சியால் வஞ்சகத்தால் கழகம் ஆட்சியை இழக்க நேர்ந்தபோது துவண்டுவிடாமல் உறுதியுடன் தொண்டர்களை வழிநடத்தியும், ஆட்சியில் இல்லாத போதும் தமிழ்மக்கள் பெற்ற உரிமைகளை இழந்து விடாது பேணவும், திராவிடஇயக்கத் தலைவர்களான பிட்டி தியாகராயர், நடேசனார், நாயர், பனகல் அரசர், பெரியார், அண்ணா ஆகியோரின் அருஞ்செயல்களை நினைவூட்டவும், மாபெரும் மனித நலச் சிந்தனையாளரான அம்பேத்கரைப் பாராட்டவும், மனித மாண்புகளைப் பேணவும் கலை இலக்கியங்களில் ஒரு வகையான கடித இலக்கியங்களைக் கலைஞர் படைத்துள்ளார்.

நம்நாடு வார இதழில் வெளிவந்தனவும், முரசொலியில் இன்றுவரை வெளிவந்து கொண்டிருப்பவையுமான கடிதங்கள் பற்றி

உடன் பிறப்புக்களான கழகத்தினருக்குக் கூறவேண்டியவை
களையும், அவர்களை முன்வைத்து நாட்டுக்கு, சமுதாயத்

> துக்குச் சொல்ல வேண்டியவைகளையும் ஒரு பாசஉணர்வுடன் வெளியிட இந்தக் கடிதம் எழுதும்முறை எனக்கு மெத்தவும் பயன்படுகிறது.[12]

என விளக்குவார் கலைஞர்.

இக்கடிதங்கள் பொருளுக்கு ஏற்ற தலைப்பையும், அளவையும், செறிவையும், நடையையும் கொண்டு விளங்குகின்றன. நாடகப் பாங்கில் அமைந்தன, புள்ளி விவரங்களைத் தருவன, உருவகமாய் அமைந்தன, காட்சிகளைக் கண்முன் நிறுத்துவன எனப் பல்வேறு உத்திகளைக் கொண்டனவாய் இக்கடிதங்கள் உள்ளன.

தி.மு.கழக அரசின் சாதனைகள்

ஆட்சி அதிகாரம் பெறுவது என்பது சுகபோகம் துய்ப்பதற்கன்று; குட்டிகளைக் காக்கும் தாய்ப்புலி போல, குடிமக்களைப் பாதுகாப்பதாகவும்[13] குடிமக்கள் பழி தூற்றாததாகவும்[14] அமைய வேண்டும் எனப் புலவர் பெருமக்களும், ஆட்சியாளர்களும் கருதியிருந்ததைப் புறநானூறு புலப்படுத்தும். இத்தகு சிந்தனையாளராய் அண்ணா செயல்பட்டதையும், அவர்வழியில் கலைஞர் செயல்பட்டு வருவதையும் கடிதங்கள் காட்டும்.

> ஆளுகிற பொறுப்பு என்பது அந்தஸ்து அல்ல; அதிகாரப் பீடம் அல்ல; அன்றாடங் காய்ச்சிகளின் வாழ்வில் ஒளி ஏற்படத் தொண்டு புரிவதற்கு நமக்குக் கிடைத்த ஒருசாதனம் என்ற நினைவோடு இந்தக் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம். இது கண்டு போற்றுபவர் போற்றட்டும்; புழுதிவாரித் தூற்றுபவர் தூற்றட்டும் என்ற மன உறுதியோடு லட்சியப் பயணம் தொடருகிறது

என்று 28-5-1975 - ஆம் நாளிட்ட கடிதம் கூறுகிறது.[15]

இந்தக் காரியங்கள் என அவர் குறிப்பிடுவனவற்றுள் சில;

1. குடிசைகளில் குமுறிக் குடியிருந்த மக்களைக் கோபுரம் போன்ற வீடுகளில் குடியேற்றிக் கடற்கரைக் காற்றை அனுபவிக்குமாறு செய்ய குடிசை மாற்று வாரியத்தினை ஏற்படுத்தியது.[16]

2. மனிதனை மனிதன் இழுக்கும் கொடுமையை மாற்றி, கைரிக்ஷா வைத்திருந்த தோழர்களுக்கு சைக்கிள் ரிக்ஷாக்களை இலவசமாக வழங்கும் திட்டத்தை 50-வது பிறந்த நாள் திட்டமாக அறிவித்து நடைமுறைப்படுத்தியது[17] முதலானவற்றைக் குறிப்பிடலாம்.

சமூகத்தால் புறந்தள்ளப்பட்டுக் கிடக்கும் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம்[18], கிராமப்புறத்து ஏழை எளிய மக்களுக்குக் கண்ணொளி வழங்கும் திட்டம்[19], தாய் தந்தையரை இழந்து பேணுநரற்ற குழந்தைகளுக்குக் கருணை இல்லங்கள் அமைக்கும் திட்டம்[20] எனப் பலவாறாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இத்திட்டங்களெல்லாம் இருபதாம் நூற்றாண்டின் மணிமேகலையோ கலைஞர் என்று ஆய்வாளர்களை வியப்பில் ஆழ்த்த வல்லன.

குடும்பக்கட்டுப்பாடு

குழந்தைகள் ஒரு நாட்டின் சொத்து எனக்கருதப்பட வேண்டியவர்தாம். ஆனால் அக்குழந்தைகள் அளவிறந்தால் வீட்டிற்கும் நாட்டிற்கும் தாங்க வொண்ணா சுமைதாம்; கழுத்தை இறுக்கும் சுருக்குக் கயிறுதான். வசதி உள்ள இடத்தில் பிறப்பின் குழந்தைகள் அழகியனவாய் நல்ல வாழ்வு பெறும்; ஆனால் வறுமை வாட்டும் இடத்தில் வற்றலும் தொத்தலுமாய்க் காட்சியளிக்கும். நாடு வாழ்ந்திட நலிவு தீர்ந்திட எனும் தலைப்பிட்ட 30-12-1976 -ஆம் நாளிட்ட கலைஞரின் கடிதம் குடிசைப்பகுதிக்குக் கூட்டிச் செல்கிறது.

அதோ, கிழிந்த சாக்குப் படுதா தொங்குகிறதே - அதுதான்
அந்த மாளிகையின் மரகதக்கதவு! சேறும் சகதியும்
வழிந்தோடுகிறதல்லவா வளைந்து வளைந்து, அதுதான்
அந்த அரண்மனையைச் சுற்றியுள்ள அகழி! அந்த அகழிமீது
துள்ளி விளையாடுகிறதே தொப்பை சுருங்கிய ஒருகுழந்தை;
அதுதான் அந்த வீட்டு மகாராணியின் முதல் இளவரசன்.
அடுத்து ஒன்று சூம்பிய கால்கைகளுடன் தள்ளாடித் தள்ளாடி
ராகம் பாடுகிறதே, அது இளவரசி- மகாராணியின்தோள்மீது
ஒன்றும், மடிமீது ஒன்றம் எலும்புக் குச்சிகளாய்த் தேரைகள்
போல் ஒட்டிக்கொண்டு சிணுங்கி அழுவதற்கும்ஜீவனில்லாமல்
கிடக்கின்றனவே அவைதாம் மலர்க்கொத்துக்கள்-மாணிக்கப்
பரல்கள்-இப்படியொரு உலகம், இந்தியா முழுமையும்
அழகுமுகத்தின் குறுமருக்கள்போல் பரவிக்கிடக்கின்றன.[21]

எள்ளல் சுவையுடன் வறுமையும் சுகாதாரமின்மையும் கூடி, குழந்தைகளுக்கு ஏற்படுத்தியுள்ள அவலத்தைச் சுட்டிக்காட்டி, குடும்பக்கட்டுப்பாட்டின் இன்றியமையாமையை வற்புறுத்தும். பெண்களின் உடல் நலன், உள்ள நலன் ஆகியனவற்றை முன்னிட்டுப் பெரியாரால் வற்புறுத்தப்பட்ட குடும்பக் கட்டுப்பாட்டை நாட்டின் சுமையைக் குறைக்கும் எண்ணத்துடன் வற்புறுத்தப்பட்ட குடும்பக் கட்டுப்பாட்டை இவற்றுடன் கூட, பிறந்து கருகிடும் மொட்டுக்கள் பிறவாமலே தடுக்கும் திட்டமாகக் கலைஞர் கண்டார். அதனால்தான் குடும்பக் கட்டுப்பாட்டில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடத்தைப் பெற்று நிற்க முடிகிறது.

வகுப்புரிமை

பார்ப்பனரல்லா மக்களுக்குக் கல்வி வேலை வாய்ப்பில் வகுப்புரிமை தேவை என்று வற்புறுத்தி ஆரம்பிக்கப்பட்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கம் ஒளிவிளக்காய் வழங்கியதுதான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமை. தியாகராயர், நடேசனார், டாக்டர் நாயர், பனகல் அரசர் போன்றவர்களின் அயராத உழைப்புதான் இதனை வென்றெடுக்க உதவியது.

அரசியலில் 50 விழுக்காடு இடம் பார்ப்பனரல்லாதவர்க்கு ஒதுக்கீடு செய்யவேண்டுமெனத் தீர்மானம் கொண்டுவந்து வாதாடியும் காங்கிரசு

இயக்கம் ஏற்காததால் 1925-ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் காங்கிரசு மாநாட்டினின்றும், பின்னர் காங்கிரசு இயக்கத்தினின்றும் வெளியேறினார் பெரியார். சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பித்து வகுப்புரிமையைக் கொண்டு வந்த நீதிக்கட்சியைப் பாராட்டி ஆதரித்துவந்தார்.

1950 ஆம் ஆண்டில் இந்திய அரசியல் சட்டத்தால் வகுப்புரிமைக்கு ஆபத்து நேர்ந்தபோது கிளர்ச்சி செய்து அரசியல் சட்டத்தின் 15,16வது பிரிவுகளில் 4-வது உட்பிரிவைச் சேர்க்கச் செய்து பாதுகாத்தார் பெரியார்.

காங்கிரசு ஆட்சிக் காலத்தில் பிற்படுத்தப்பட்டவருக்கு 25 விழுக்காடாக இருந்த இட ஒதுக்கிட்டினை 31ஆக உயர்த்தியும், தாழ்த்தப்பட்டவர் மலைவாழ் மக்களுக்கு 16 விழுக்காடாக இருந்ததனை 18 விழுக்காடாக உயர்த்தியும் ஆணை பிறப்பித்தவர் கலைஞர். எம்.ஜி.ஆர் தம் ஆட்சிக் காலத்தில் வகுப்புரிமை வழங்குவதற்குப் பொருளாதார அளவுகோலை நுழைக்க முற்பட்டார். இதனைக் கடுமையாக எதிர்த்தவர் கலைஞர். மேலும், அண்ணாவின் கருத்துக்கு மாறாக அண்ணாவின் பெயரைக் கட்சியின் பெயரில் வைத்திருப்போர் செயல்படுவது அழகன்று என்று இடித்துரைக்கின்றார். காமராசரும் காப்பாற்றித் தந்தது வகுப்புரிமை என்பதனையும் மறைக்காது குறிப்பிடும் கலைஞரின் பண்பினை இக்கடிதம் சுட்டுகின்றது. வகுப்புரிமையின் நெடிய வரலாற்றினை இரத்தினச் சுருக்கமாக ஒரு கடிதம் எடுத்துரைக்கின்றது

பிற்படுத்தப்பட்டவருக்கு 50 விழுக்காடு இட ஒதுக்கீடு என எம்.ஜி.ஆர். அறிவித்தாலும் அதனைப் பாதுகாக்கும் பணியில் இடைவிடாது தி.மு.கழகம் ஈடுபட்டு வருவதை அனைவரும் அறிவர்.

அறங்காவலர் குழுவில் தாழ்த்தப்பட்டவரை இடம்பெறச் செய்தல்

கோவிலுள் நுழைந்து கடவுளை வழிபட முற்பட்ட நந்தனாருக்கும், திருப்பாணாழ்வாருக்கும், கண்ணிடந்தப்பிய கண்ணப்பருக்கும் பார்ப்பனர் வழங்கியதெல்லாம் மரணதண்டனைதான். இருபதாம் நூற்றாண்டு தாழ்த்தப்பட்ட மக்கள் உரிமை வேண்டி கிளர்ந்தெழுந்த காலம். தெருவில் நடக்கும் உரிமையற்றிருந்த ஈழவமக்கள் தொடங்கிய போராட்டத்திற்குத் தலைமை ஏற்று வென்று வைக்கம்வீரர் என்ற சிறப்புப் பெயரைப் பெற்ற பெரியாரின் மரபில் வந்தவர் கலைஞர். அதனால் தாழ்த்தப்பட்டோர் கோவில் அறங்காவலர் குழுவில் உறுப்பினராக ஆகும் தகுதியை ஏற்படுத்தினார். இரண்டாயிரம் தாழ்த்தப்பட்டவர் அறங்காவலர் குழுவில் இடம் பெற்றார்கள்.

> ஆண்டவன் முன்னே அனைவரும் சமம் என்பது உதட்டுப் பேச்சாக இருந்தால் மட்டும் போதாது என்பதற்காகத்தான் அறங்காவலர் குழுவில் ஓர் அரிஜனப் பிரதிநிதி கட்டாயம் இருந்தாக வேண்டுமென்று கழக அரசு விதி செய்தது.[23]

என்று சுட்டுவார். அதாவது மனித சமத்துவத்தின் பொருட்டு இதனைச் செய்ததாகக் கூறுவது மனித சமத்துவப் போராட்ட வரலாற்றில் கல்மேல்

எழுத்தாய்க் காலங்காலத்திற்கும் நிற்கும்.

அனைத்து சாதியினரும் அர்ச்சகராகச் சட்டம்

தாழ்த்தப்பட்ட மக்கள் கோயிலில் நுழையக் கூடாது என்றிருந்த நிலை, கோயில் நுழைவுப் போராட்டத்தால் நீங்கியது. ஆனால் கருவறைக்கு வெளியிலேயே பார்ப்பனரல்லா மக்கள் யாவரும் நிறுத்தப்படும் அவலம் மட்டும் அகன்ற பாடில்லை. இந்நிலையை மாற்ற பெரியார் கருவறை நுழைவுப் போராட்டத்தினை அறிவித்தார். இந்நிலையில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் சட்டத்தினைக் கொண்டு வந்தார் கலைஞர்[24]. மேலும் நீச பாஷை என்று இகழ்ந்து தமிழில் அர்ச்சனை செய்யலாகாது என்றும், சமற்கிருத மொழியில்தான் அர்ச்சனை செய்யவேண்டும் என்றும் இருந்த நிலையினை மாற்றி, எல்லாக் கோயில்களிலும் தமிழில் அர்ச்சனை செய்யும் சட்டம் செய்தது கலைஞர் தலைமையிலான தி.மு.கழகம்[25]. இவ்வாறு மண்ணின் மக்களுக்கும், அம்மக்கள் பேசும் மொழிக்கும் மானத்தையும், மரியாதையையும் மீட்டுத் தந்தவரலாற்றை வெளிப்படுத்துவதாகக் கலைஞர்கடிதம் அமைந்துள்ளது.

கலப்பு மணமும், னகர ஒற்று ரகர ஒற்றாதலும்

இந்தியாவில் மக்கள் சாதியாகப் பிறந்து சாதியாகக் கற்பிக்கப்பட்டு, சாதியாக வாழ்ந்து, சாதியாக இறக்கின்றனர். சாதிகளின் காப்பைவற்புறுத்தும் மனுதருமம் எவ்விதச் சங்கடமுமின்றி அரசியல் சட்டத்தில்இடம்பெற்று அருவெறுக்கத்தக்க முகத்தைக் காட்டிக்கொண்டுள்ளது. சாதிக் கலப்புக்கான கலப்பு மணத்தைப் பெரியார் ஆதரித்துடன் மனுதருமத்தைக் காக்கும் அரசியல் சட்டத்தை எரிக்கவும் முற்பட்டார். 1956-ல்நடைபெற்றஇப்போராட்டத்தின்போது மனித நேயச்சிந்தனையாளரான பெரியாரை நேரு இழிவுபடுத்திப் பேசினார். இவ்வாறுபெரியாரை இழிவுபடுத்தியதை எதிர்த்து நேருவுக்கும் கருப்புக்கொடி காட்டியது தி.மு.கழகம் என்பது வரலாறு. தம் பிள்ளைக்குக் கலப்பு மணம்செய்து வைத்தார் கலைஞர். கலப்பு மணம் செய்வோருக்கு உதவித் தொகையும் வழங்கி, ஊக்குவித்து வருவது தி.மு.கழக அரசு. இத்துடத்துடன் கலப்பு மணத்தால் பிறந்த குழந்தைகள் தாயின் சாதியையோ, தந்தையின்சாதியையோ தமக்குரிய சாதியாகக் கொள்ளலாம் எனவும் வழிவகை செய்தது.

சில சாதிகளின் பெயர், மரியாதைப் பன்மை விகுதியான அர் அல்லது ஆர் என்பதில் முடிய, சில சாதிகளின் பெயர்கள் மட்டும் அன் விகுதியில் முடிவதைச் சட்ட மன்ற உறுப்பினராக இருந்த கலைஞர் காங்கிரசு ஆட்சிக் காலத்தில் சுட்டிக் காட்டினார். அர் விகுதியில் முடிவதால் அச் சாதிகளுக்குப் பெருமையும் இல்லை; அன் விகுதியில் முடியும் சாதிகளுக்கு இழிவும் இல்லை என்று பொருத்தமற்ற பதிலைக் கூறினர் கக்கன் உட்பட காங்கிரசார். கலைஞர் முதலமைச்சராக ஆன பின்னர் பள்ளன், பறையன் முதலான பெயர்கள் னகர ஒற்றில் முடிவதை மாற்றி பள்ளர், பறையர் என மரியாதையுடன் குறிக்க அரசு ஆணை வழங்கினார். இவ்வாறு வழங்கியதைப் பதிவு செய்துள்ளது. “சத்திரத்துப்

பேர்வழிகள்" என்ற தலைப்பிட்ட கடிதம்.[26]

கோவில் சொத்துக்கள் மீட்பு

'கடவுள் இல்லை' என்றார் பெரியார். அண்ணாவும் கலைஞரும் பெரியாரின் கொள்கையரே எனினும், அண்ணா அரசியலின் பொருட்டு மக்களுக்காக 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற திருமூலர் கருத்தை முன் வைத்தார். கோயில் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக்கூடாது எனக் கருதிய கலைஞர் தலைமைலான தி.மு.கழக அரசு கோயில், அறநிலையச் சொத்துக்களை மீட்டெடுத்தது; கோயில் ஊழியர்களுக்கு ஊதியம் முதலானவற்றை முறைப்படுத்தி வழங்கியது.

தென்னிந்திய நலஉரிமைச்சங்க ஆட்சி, இந்து அறநிலையத் துறையை உண்டாக்கியது. கலை இலக்கியப் பெட்டகமாக விளங்கும் கோயில்களைப் பாதுகாக்க முற்பட்டது தி.மு.கழக ஆட்சி. கோயில் அறநிலையங்களின் வரவைப் பெருக்கியதுடன், வரவு செலவுக்கணக்கையும், அத்துறை ஆற்றியுள்ள பணிகளையும் பட்டியலிடுகின்றது 6-5-1976 -ஆம் நாளிட்ட கடிதம். 1970-ஆம் ஆண்டில் இந்து அறநிலையத்துறைக்குத் தனி அமைச்சர், தனி வரவு செலவுத்திட்டம், பேரவையில் தனிவிவாதம் என்ற நிலையையும் உருவாக்கியது தி.மு.கழக ஆட்சி.[27]

தமிழ்நாடு எனப் பெயர் சூட்டல்

ஆங்கிலேயரால்உருவாக்கப்பட்டது சென்னை மாகாணம். இதில் இடம் பெற்றிருந்த தெலுங்கு, கன்னட, மலையாளப் பகுதிகள் 1956-ஆம் ஆண்டில் மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்ட போதுபிரிந்துசென்றதுடன் தமிழ்ப்பகுதிகளையும் சேர்த்தே பறித்துச் சென்றன. இவ்வாறு பிரிந்து போனபின் இருந்த தமிழ்நிலப்பகுதியான சென்னை மாநிலத்தின் பெயரினை மாற்றித் தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டுமென அண்ணா சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்தார். காங்கிரசு ஆட்சி இதனை ஏற்க மறுத்தது. 7-5-1957 -ல் இத்தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. வாக்கெடுப்பில் தீர்மானத்துக்கு ஆதரவாக 42 வாக்குகளும் எதிர்ப்பாக 127 வாக்குகளும் பதிவாயின. தீர்மானம் தோல்வியுற்றது.

சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்தால் மத்திய அரசு, தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத்தை ஏற்க ஆயத்தமாக இருந்தும், தமிழ்நாட்டுக் காங்கிரசார் தீர்மானம் கொண்டுவரவோ, கொண்டுவந்ததை ஆதரிக்கவோ மனமற்று இருந்ததைக் காட்டுவதாக இச்செயல் அமைந்துவிட்டது.

தி.மு. கழகம் ஆட்சிக்கு வந்தவுடன் சென்னை மாநிலம் என்ற பெயரை மாற்றித் 'தமிழ்நாடு' என்ற பெயர் சூட்டும் தீர்மானத்தை நிறைவேற்றி 20-12-1968 -ல் சிறுவர் அரங்கில் (கலைவாணர் அரங்கில்) "தமிழ்நாடு பெயர் சூட்டுவிழா" நடத்தினர்.

தமிழர்களெல்லாம் பெருமிதம் கொள்ளத்தக்க இச்செயலைச் செய்த நமது இயக்கத்தையும், அவ் இயக்கத்தின் தலைவராக விளங்கிய

அண்ணாவையும் பெருமையுடன் நினைக்கும் கலைஞர்,

> தமிழ்நாடு என்ற பெயர் உள்ளவரையில் தமிழர்கள் வாழ்வார்கள். தமிழ்நாடு என்ற பெயர் பொலிவுற்றுத் திகழும் வரையில் அறிஞர் அண்ணா பெயரும் கழகமும் நினைவு கூரப்படும்.[28]

என்பார்.

காவற்பெண்டு

1976-ஆம் ஆண்டு, இந்திரா காங்கிரசால் பிறப்பிக்கப்பட்ட அவசரநிலை, மிசாச்சட்டம் தி.மு.கழகத் தோழர்கள் பலரைச் சிறையில் தள்ளியது. எழுத்துரிமை, பேச்சுரிமை மறுக்கப்பட்டிருந்த நிலையில் 'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை' என்ற தலைப்பிட்ட கடிதத்தில்

> மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை!
> புரட்சிக் கவிஞரின் புதுமை விளக்கம் ; அதோ
> அந்தப் பூஞ்சோலையில் மாங்குயில்!
> சோலை வாழ்வு முடிந்து நாளை அந்தக்குயில்
> வெளியே பறந்து வரத்தான் போகிறது.[29]

என்று கலைஞர் கூறும்பகுதி முற்றிலும் உருவகமாக அமைந்துள்ளது. பூஞ்சோலை - சிறைச்சாலையைக் குறிக்க, குயில்கள் - கழகத் தோழர்களைச் சுட்ட, சோலை வாழ்வு முடிதல் - சிறைவாழ்வு முடிவதைக் குறிக்க, வெளியில் குயில் பறத்தல் - கழகத் தோழர் விடுதலை பெறுவதைக் குறிக்க அமைந்துள்ள இக்கடிதம் காலத்தை வென்று நிற்க வல்லது.

சிறையனுபவம் பெற்றவர், அதுவும் பாளையங்கோட்டைத் தனிமைச் சிறையனுபவம் பெற்றவர்தான் கலைஞர். என்றாலும் கழகத் தோழர்களைச் சிறைப்படுத்திய நிலையில் அவர்களைச் சென்று காணும் வாய்ப்பையும் இழந்து நின்றார். அந்நிலையில் உன் மகன் எங்கே என்று கேட்ட பெண்ணுக்கு, 'புலியொத்த அவனைப் பெற்ற வயிறு இதுதான். போர்க்களத்தில் இருப்பான்' என்று பதிலுரைத்த காவற்பெண்டின் பாடலைக் கூறிவிட்டு,

> தாய் உள்ளம், பெண்களுக்கு மட்டுமே உரியதல்ல ;
> அது வீரமுள்ள ஆண்களுக்கும் உரியதாகும் என்பது
> என் வாதம்.[30]

என்கிறார். இயக்கத்தின் தலைவன், தாயுள்ளம் பெற்றிருப்பதால் பெருமிதமும், அதே நேரத்தில் கவலையும் ஒரு சேரப் பெற்றிருப்பதைச் சொல்லாமல் சொல்கிறது. 'தாய் உள்ளம் உணர்ந்த தாய்!' என்ற தலைப்பிட்ட இக்கடிதம்.

கழகக் குடும்பம்

கழகத்தைக் குடும்பமாகக் கருதுவது, கழகத்தவரை உடன்பிறப்பாகக் காண்பது, கழக மாநாட்டைக் குடும்பவிழாவாகக் கொண்டாடுவது, மனைவி மக்களுடன், பெற்ற தாய் தந்தையருடன், அண்ணன் அக்கா, தம்பி, தங்கையருடன் மாநாட்டிற்கு வருமாறு அழைப்பது, மாநாட்டிற்கு வரும் அவர்கள் நலனில் அக்கறை காட்டுவது முதலான அழகிய பாங்கினை

கலைஞரின் பல கடிதங்கள் உள்ளடக்கமாகக் கொண்டுள்ளன. அக்கடிதங்கள் மாநாட்டைக் கண்முன் கொண்டுவரும் சொல்லோவியங்கள் எனக் கூறத்தக்கவண்ணம் அமைந்துள்ளன.

கொட்டியும் ஆம்பலும்

கழகத்தின் ஆட்சிக் காலத்தில் பயன்பெற்று ஆட்சியில் இல்லாக் காலத்து இயக்கத்தை விட்டுச் சென்றவர்கள் பலர். அற்றகுளத்து அறுநீர்ப் பறவைபோல் சென்றுவிட்ட நிலையில் அதனைக்

> கேட்டினும் உண்டாங்கோர் உறுதி கிளைஞரை
> நீட்டி அளப்பதாம் கோல்

என்று படிப்பினையாக எடுத்துக்கொள்ளும் கலைஞரின் மனப்பக்குவத்தையும் நெஞ்சுறுதியையும் காட்டுகின்றது ஒரு கடிதம்.[31]

துன்பக் காலத்தும் தொடர்ந்து உறுதியுடன் நின்ற தோழர்களை 'அற்ற குளத்துக் கொட்டியும் ஆம்பலும் போல்வார்' என்று பாராட்டுகிறது மற்றொரு கடிதம்.[32]

நாடகக் கடிதம்

"வடிவேலருக்கு வந்த வாழ்வு" என்ற தலைப்பில் அமைந்த கடிதம் நாடகப் பாங்கில் அமைந்தது. அதில் இடம் பெற்றுள்ள மாந்தரெல்லாம் நடமாடும் மாந்தரே. கழக ஆட்சியில் பயன்பெற்று, அப்பயன் மீண்டுமொருமுறை கிட்டாமல் போனதும், நன்றி மறந்து நடந்து கொண்டவரின் இயல்பை, "முடவனுக்கு இறக்கிவிட்ட இடத்திலேயே கோபம் வரும்"[33] என்ற பழமொழியால் பளிச்செனக் காட்டுகின்றது.

கழகத்தின் கட்டுக் கோப்பு

ஒரு நாடாயினும், சமூகமாயினும், கட்சியாயினும் அவற்றின் வெற்றி அவற்றின் கட்டுக்கோப்பிலும் கொள்கை உறுதியிலும்தான் அடங்கியுள்ளது. அத்தகைய கட்டுக்கோப்பைக் கொண்டது தி.மு.கழகம். இக்கட்டுக் கோப்பினைப் பற்றி,

> இந்தியப் பெருநாட்டில், நமது கட்சிக்குஇருக்கக்கூடிய
> அமைப்புமுறை, கிளைகள், கிளைகளுக்கிடையே உள்ள
> தொடர்புகள், வட்ட, மாவட்டத் தலைமைக் கழகப்
> பிணைப்புகள் - இவை வேறு எந்தக் கட்சிக்கும் இல்லையென
> நாம் அறைகூவல் விட்டுச் சொல்லலாம்.[34]

எனப் பெருமிதத்துடன் 23-7-1973 -ஆம் நாளிட்ட இதழில் கூறுகிறார் கலைஞர். இத்தகையக் கட்டுக்கோப்புடன் இருந்ததால்தான் சம்பத் முதலான பலரும் பிரிந்த போதும் தி.மு.கழகம் வீழ்ந்து விடாமல் நிற்கின்றது.

அசைவிலா ஊக்கமும் உறுதியும்

தி.மு.கழகம் வலிமையிழந்துவிட்டது, தேர்தலில் பங்கேற்கும் நிலையில் இல்லை என்று வரவா ஏடொன்று கூற, "நாடிபார்க்கத் தெரியாதவன் நான்தான் நாடுபோற்றும் மருத்துவ மேதையென்று தன்னைப்பற்றிச் சொல்லிக்கொண்டானாம். அவன் செயலைப் போன்றது அவ் ஏட்டின் செயல். அது பிடித்துப் பார்த்தது நாடியை அல்ல தாடியை.

. . "[35] என்று அவ் ஏட்டினை எள்ளுகிறார் கலைஞர்.

இயக்கத் தலைவனின் அசைவிலா ஊக்கம்தான்தொண்டர்களைத் துவண்டுவிடாமல் காக்கவல்லது என்பதையும், தொண்டர்களும், தமிழ்மக்களும் இருக்கும்போது கழகத்திற்கு வீழ்ச்சியில்லை என்பதையும், விழுந்தாலும் விதைபோல விழுவோம் முளைப்பதற்காக, ஆல்போல் தழைப்பதற்காக விழுவோமே தவிர அழிவதற்காக விழமாட்டோம்![36] என்ற உறுதியையும் காட்டும் கடிதம் படிப்போரைச் சிலிர்க்கச் செய்யும் இயல்பினது.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்

கழகத்தால் பயன்பெற்றவர்கள் எதிரிகளைக் காட்டிலும் கூடுதலாகத் தாக்குவர். நாளும் சோறிட்டவனை ஒருநாள் சோறிடவில்லை என்பதற்காகத் தாக்கும் பிச்சைக்காரனைப் போன்றவர்கள் இவர்கள் எனவும், எட்டேகால்லட்சணமே என்ற ஔவையாரின் பாடல்வழி இவர்களின் இயல்பையும்கூறும் கலைஞர்,

--அந்தப் பாஞ்சாலிகள் கண்ணகியைப் பார்த்துப்பழித்துக்கொண்டே இருக்கட்டும்[37]

என்கிறார்.

மேலும், துரோகிகள் எவ்வளவு பழித்தாலும், கழக மேடைகள் கருத்துக்கள் தெளிந்த நீரோடைகளாகவும், ஏடுகள் - எண்ணப் பூஞ்சோலைகளாகவும் இருக்கட்டும். கண்ணியக் குறைவு கூடாது; ஆபாசம் அறவே கூடாது[38] என்று கழகக் கலை இலக்கியப் படையினருக்குக் கட்டளை வழங்குகிறார். தி.மு.கழக எழுத்தாளர்கள் மட்டுமன்று எக்கட்சி எழுத்தாளரும் பின்பற்ற வேண்டிய நெறியாகும் இது.

அகராதிகளில் அழகிய சொற்களிருக்க அவற்றை விடுத்து எதிர்க்கட்சியினர் தகுதிக்குறைவான சொற்களைத் தேர்ந்தெடுத்து வசைமாரி பொழியும் செயல், யசோதர காவிய மகாராணி அழகிய அரச கணவன் கட்டிலில் உறங்க, திருட்டுத்தனமாக யானைப் பாகனான தொழுநோயாளியிடம் சென்று வசவும் உதையும் பெறுவதை ஒத்தது[39] என்று கூறி எதிராளிகளையும் நாணச் செய்கிறது ஒரு கடிதம்.

மக்கள் தொண்டு

பிறப்பவர் இறப்பது உறுதி. நிலைத்து வாழ்பவர் எவரும் கிடையாது. அதனால் பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட காலத்தை வீணடித்து விடாது மக்களுக்கான தொண்டினை அறிவியல் வாயிலாக, அரசியல் வாயிலாக, இலக்கியம் வாயிலாக, சமுதாயப்பணி வாயிலாகக் கிடைக்கும் வாய்ப்புக்கள் அனைத்தையும் பயன்படுத்தி ஆற்ற வேண்டும் என்று அறிவுரை கூறுவதுடன் சாவைக் கண்டு சோர்ந்து வீழவும் கூடாது, வாழ்வோம் என்ற ஆணவமும் கூடாது என்று எச்சரிக்கவும் செய்கிறது.[40]

மூடநம்பிக்கை ஒழிப்புக்கெனப் 'பகுத்தறிவுப் பிரச்சாரத்தை ஓயாத கட்சிப் பணியில் ஒரு பகுதியாகக் கருதிச் செய்ய வேண்டும்' என்று கழகத் தோழர்களை 'மாம்பழ மங்கை'[41] என்ற தலைப்பிட்ட கடிதம் வற்புறுத்துகின்றது.

பெரியாரை ஆசான் என்று ஏற்றுக் கொண்டதால் ஈரோட்டுக்குச் சென்று வந்ததைப் பள்ளிக்குச் சென்று வந்தேன்![42] என்ற கடிதம் புலப்படுத்தும்.

இயக்கத் தோழர்கள் போராட்டக் களத்திலோ அன்றி இயற்கையாகவோ மறைந்து விட்டபோது கலைஞர் எழுதிய கடிதங்கள் இரங்கல் இலக்கியமாய் நிற்க வல்லன.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என ஔவையார் சொன்னதால் ஊரூருக்குக் கோயில் எழுப்பினர். இந்நிலையை மாற்றி, நாட்டுக்கு உழைத்த பெரியார், அண்ணாவுக்கு ஊரூருக்குச் சிலை, காமராசருக்குச்சிலை, ராஜாஜிக்கு நினைவாலயம், வ.உ.சிதம்பரனார்க்கு, தில்லையாடி வள்ளியம்மைக்கு, பாவேந்தருக்கு, பாரதிக்கு, திருவள்ளுவருக்கு, மறைமலையடிகளுக்கு பல்வகைச் சிறப்புச் சின்னங்களை, அம்பேத்கர் பெயரில் கல்லூரியைப் பல்கலைக்கழகத்தை உருவாக்கினார் கலைஞர். இவ்வாறு சிலைகள் அமைப்பது சின்னங்கள் ஏற்படுத்துவது, பெயர் மாற்றுவது சாதாரண விஷயங்கள் அல்ல - அவை சரித்திரத் திருப்பம் என்றும், மக்களுக்காகப் பாடுபடுவதையும் மறந்துவிடக்கூடாது! மக்களுக்காகப் பாடுபட்டவர்களையும் மறந்துவிடக்கூடாது! என்றும் கூறுகிறது 3-10-76 நாளிட்ட கடிதம். ராஜாஜி மண்டபத்திலிருந்து வெள்ளை அதிகாரிகளின் பெரிய உருவப்படங்களை ஒரே இரவில் அகற்றி நாட்டுத் தலைவர்களின் உருவப் படங்களைத் திறந்த செய்தியையும் அக்கடிதம் தருகிறது.[43]

வள்ளுவர் குடியில் தோன்றிய திருவள்ளுவர் உலகம் போற்றும் திருக்குறளைத் தந்தார். சமூகத்தின் அடித்தட்டில் தள்ளப்பட்டிருந்தவரும், கல்லூரியில் காலடி வைக்காதவருமான இளையராஜா உலகம் போற்றும் சிம்பொனி இசையை அமைத்துக் கொடுத்தார்.

பள்ளி இறுதி வகுப்பைத் தாண்டாத கலைஞர், எளிய குடும்பத்திலே பிறந்து சாதிபலமோ, செல்வபலமோ, இல்லாமலிருந்தும், தமது விடாப்பிடியான கொள்கையால், போராட்டத்தால், அரசியல் நுழைவால், தலைமையனுபவத்தால், பதவியில் இருப்பினும், இல்லாதிருப்பினும் தமிழருக்காகச் சிந்திக்கும் சிந்தனையால் வளம் பெற்ற செழுமையான உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளன கலைஞர் கடிதங்கள். இவை கருத்துப் பெட்டகமாய், வரலாற்று ஆவணமாய், அள்ள அள்ளக் குறையாத அறிவுப் புதையலாய் விளங்குகின்றன. இதனை விரிப்பின் பெருகும் தொகுப்பின் எஞ்சும்.

அடிக்குறிப்புகள்

1. மு. கருணாநிதி, "நெஞ்சுக்கு நீதி", முதல்பாகம் ப - 321.
2. தந்தை பெரியார், "இனிவரும் உலகம்", ப - 4.
3. கலைஞர் மு. கருணாநிதி, நெஞ்சுக்கு நீதி, முதல்பாகம். ப.43
4. மு. கருணாநிதி, நெஞ்சுக்கு நீதி, முதல் பாகம் ப - 94.

5. மு. கருணாநிதி, நெஞ்சுக்கு நீதி, முதல்பாகம் ப - 488.
6. மே. நூல், ப - 94.
7. மு. நூல், ப - 489
8. மு. நூல் ப - 133.
9. க. திருநாவுக்கரசு, திராவிட இயக்க வேர்கள். ப - 359.
10. மு. கருணாநிதி, நெஞ்சுக்கு நீதி முதல்பாகம், பக் 321 - 322.
11. மே. நூல், ப - 457.
12. மு. கருணாநிதி, கலைஞர் கடிதம், என்னுரை.
13. புறநானூறு பாடல் எண் 42 : 10 - 12.
14. மே. நூல் பாடல் எண் 72, 12
15. மு. கருணாநிதி, கலைஞர் கடிதம் தொகுதி 2 பக் 114 - 115
16. மே. நூல், ப - 116
17. மு. நூல், ப - 110
18. மு. நூல், ப - 110
19. மு. நூல் ப - 114
20. மு. கருணாநிதி, கலைஞர் கடிதம் தொகுதி ப -
21. மு. கருணாநிதி, கலைஞர் கடிதம் தொகுதி 10. பக் 31 - 32
22. மே. நூல் பக் 61 - 62
23. மு. நூல், தொகுதி 6, ப - 118
24. மு. கருணாநிதி, கலைஞர் கடிதம், தொகுதி 6, ப - 118
25. மே. நூல், ப - 118.
26. மு. நூல், தொகுதி 4 ப - 153-155
27. மு. நூல், தொகுதி 6 - பக்.118-119
28. மு. கருணாநிதி, நெஞ்சுக்கு நீதி, பக் 316, 347.
29. மு. நூல், தொகுதி 5, பக் 61 - 62.
30. மு. நூல். ப - 65
31. திருக்குறள் எண்.796
32. மு.கருணாநிதி கலைஞர் கடிதங்கள் தொகுதி - 7, ப.89
33. மு. நூல் தொகுதி 6, ப - 14
34. மு. நூல் தொகுதி 2. பக் 145 - 146
35. மு. நூல் தொகுதி 9. ப - 79.
36. மு. நூல் தொகுதி 9. ப - 79.
37. மு. நூல் தொகுதி 5. ப - 21
38. மு. நூல் ப - 21.
39. மு. நூல் தொகுதி 10, பக் 130 - 131.
40. மு. நூல் தொகுதி 7. பக் 131 - 132.
41. மு. நூல் தொகுதி 3. பக் 91 - 94.
42. மு. நூல், தொகுதி 7 ப.72
43. மு. நூல் தொகுதி 9 ப - 18.

9 ஒப்பு நோக்கில் இருபெரும் கடிதங்கள்

முனைவர் வே. இராமசாமி

பேச்சுக் கலை ஒரு சிறந்த அறிவுத்துறையாக கிரேக்க நாட்டில் தொன்மைக் காலந்தொட்டே வளர்ந்து வந்திருக்கிறது. மேடைப் பேச்சு சிறப்பாக அமைந்து கேட்போர் உள்ளத்தைக் கவர்ந்திடும் கலையைப் போற்றி வளர்த்த நாகரிகம் கிரேக்க நாட்டிற்குச் சொந்தமானது. கிரேக்க-ரோமானியக் கல்விமுறை மறைந்த போதே அந்நாடுகளில் வளர்ந்து சிறப்புற்றிருந்த பேச்சுக் கலையும் மறைந்து போயிற்று. மறுமலர்ச்சிக் காலத்தில் பேச்சுக்கலை ஓர் அறிவுத்துறையாகப் பயிலப்பட்டு வந்தது. அத்தோடு எழுத்து மொழியிலும் ஆற்றலோடு விளங்குவதற்கு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. தேர்ந்த மொழி ஆட்சியின் மூலம் கருத்துக்களைச் செம்மையாக வெளிப்படுத்துவதுவே சொல்லாட்சிக்கலை (Rhetoric) என்று கருதப்பட்டது.

இதேபோன்றதொரு நிலைமையைத் தமிழ்மொழி வரலாற்றிலும் காணமுடிகிறது. எழுதுபவன் மேற்கொள்ள வேண்டிய விதிகளும், தவிர்க்க வேண்டிய குறைபாடுகளும் பற்றித் தொல்காப்பியர் விரிவாகப் பேசியுள்ளார். எனினும் இந்தப் பகுதி ஓர் அறிவுத்துறையாகத் தமிழகத்தில் பின்னாளில் வளர்க்கப்படவில்லை. நன்னூலோடு நின்றுவிடுகிறது.

மொழித் திறன் (linguistic competence) பெற்றவர்களால் மொழியைச் சிறப்பாகப் பயன்படுத்தமுடியும் என்று கொள்ளமுடியாது. இந்தத் திறனோடு மொழியைச் சூழலோடு இணைத்துக் கையாளும் (Communicative competence) ஆற்றலும் கைவரப் பெற்றால்தான் எண்ணியதை எண்ணியாங்கு ஒருவன் கூறிவிடமுடியும். சொல்ல விரும்பும் பொருள் (subject matter), சென்றடையும் மக்கள் (audience), மொழியைப் பயன்படுத்தும் சூழல்(context) போன்ற கூறுகளும் இன்றியமையாதவை. இவைபற்றிய தெளிவுடையவர்களாலேயே தேர்ந்த முறையில் மொழியைப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெறமுடியும். இத்தகைய தேவையை இருபதாம் நூற்றாண்டில் கல்வியாளர்கள் உணர்ந்துள்ளதால் Rhetoric என்பது பாடத்திட்டத்தில் ஒரு பகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளது. குறியியல் (semiotics), நடையியல் (stylistics), பயன்பாட்டியல் (Pragmatics) போன்ற துறைகள் தோன்றியதற்குப் பின்னால் மரபுவழிப்பட்ட எழுத்துக்கலையில் (traditional Rhetoric) ஆர்வம் ஏற்பட்டு, புதிய முயற்சிகள் தோன்றின. ஐ.ஏ.ரிச்சர்ட்சு என்பவர் 1936 ஆம் ஆண்டிலேயே இலக்கியம் மற்றும் திறனாய்வுக் கலைகளோடு Rhetoric ஐ இணைத்து ஆய்வுகளை மேற்கொண்டார். அமெரிக்காவில் கிளியந்த் புரூக்ஸ், வாரன் ஆகியோர்

1972 ஆம் ஆண்டில் Modern Rhetoric என்ற நூலை வெளியிட்டு இந்தத் துறையின் பால் ஆர்வத்தை ஈர்த்தனர்.

பேசுவதும் எழுதுவதும் மற்றவர்களுக்காவே எழுதுபவன். பேசுபவன் ஆகிய இருவரின் 'ஆன்ம' திருப்திக்காக அல்ல என்பதை முதன்மைக் கொள்கையாக இந்தக் கலை வெளிப்படுத்தியது. ஆதலால் எத்தகைய மொழிக் கூறுகளைப் பயன்படுத்தினால் சொல்லப்படும் செய்தி கேட்பவனுக்கு எளிதாகச் சென்றடையும் என்பதில் (Rhetorical resources of the language) எழுத்தாளர்களும், மேடைப்பேச்சாளர்களும் கவனம் செலுத்தினர்.

மொழியைப் பயன்படுத்தும் ஆற்றலில் சிறந்து விளங்குபவர்களால் தான் மக்கள் தலைவர்களாக உயரமுடியும். மக்களைத் தங்களின் கொள்கைகளின்பால் ஈர்க்கமுடியும். இத்தகைய ஆற்றலாளர்களை உலகவரலாற்றில் நாம் காணமுடியும். மார்ட்டின் லூதர் கிங், ஆப்ரகாம் லிங்கன் போன்றவர்கள் சிறந்த பேச்சுக் கலைக்கு எடுத்துக் காட்டாக விளங்கியவர்களாவர்.

தமிழக அரசியல் சூழலில் பேறறிஞர் அண்ணா அவர்களும், டாக்டர் கலைஞர் அவர்களும் சிறந்த பேச்சாளர்களாகவும், எழுத்தாளர்களாகவும் ஏற்கப்பெற்றவர்கள். சமூக மாற்றத்திற்கான கருவியாக மொழியைப் பயன்படுத்தியவர்கள். ஆங்கில மொழியும், மணிப்பிரவாள நடையும் அரசியல் கருத்துக்களை வெளிப்படுத்தும் வாயில்களாக இருந்த காலச் சூழலில் நல்ல தமிழில் கருத்துக்களைச் செம்மையாக வெளிப்படுத்தி மக்களுக்கு அறிவுவெளிச்சம் ஊட்டி சாதனைபடைத்தவர்கள். அரசியல் மற்றும் சமூகப் புரட்சியைத் தங்களின் தமிழாட்சியால், ஏற்படுத்தியவர்கள். இத்தகையச் சாதனைகளுக்கு அடித்தளமாக விளங்கிய இவர்களின் மொழி ஆட்சியைப் பற்றி அறிவது இக்கட்டுரையின் நோக்கங்களில் ஒன்றாகும். கவிதை, நாடகம், சிறுகதை, புதினம், திரைப்படங்கள் ஆகியவைகளின் மூலம் மக்களோடு அவர்கள் உரையாடியிருக்கிறார்கள். அத்துடன் அவர்கள் நடத்திய இதழ்களில் தாங்கள் எழுதிய கடிதங்களின் மூலமும் மக்களோடு கருத்துப் பரிமாற்றங்கள் செய்துள்ளார்கள் அவர்கள் இருவரும். கடிதக் கலைக்குப் புத்துயிர் ஊட்டிப் புதுப்பித்துக் காட்டியவர்கள்.

தமிழக அரசியலில் திருப்பு முனைகளை உருவாக்கிய இருமாநாடுகளுக்காக அண்ணா அவர்களும், கலைஞர் அவர்களும் எழுதிய கடிதங்களை ஒப்பு நோக்கில் ஆய்வு செய்து உள்ளடக்க அடிப்படையிலும் (Content) சொல்லாடல் உத்திகளிலும் (Discourse level) கடைப்பிடித்த முறைகளைத் தெளிவுபடுத்துவதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சொல்லாடல் முறைகளை (Types of Discourse) விளக்க முறை, விவரிப்பு முறை, கதை சொல்லும் முறை, மற்றவரை இணங்க வைக்கும் முறை என்று நால்வகையாகப் பகுப்பர். இவை ஒவ்வொன்றுக்கும் தலைமையான நோக்கங்கள் உண்டு. விளக்கமுறை சொல்லாடல் வகைக்கு

(Expository discourse) செய்தியை விளக்கும், தெரிவிக்கும் பண்பாகவும் உணரப்பட்ட புலன் அனுபவங்களை வெளிப்படுத்துவது விவரிப்பு முறை சொல்லாடலின் பண்பாகவும், மற்றோரை, எழுத்தாளன் / பேசுவோன் கருத்தை ஏற்க வைப்பதை Persuasive disurse ன் பண்பாகவும், செயல் நடந்த விதத்தைக் கூறுவதைக் கதை சொல்லும் சொல்லாடலின் (Narrative discourse) பண்பாகவும் அமைந்திருப்பதை மொழி வாணர்கள் விளக்குவர், பொதுவாக எந்தவொரு சொல்லாடலும் ஒரே ஒரு தலைமைப் பண்பை மட்டுமே கொண்டிருக்காது. எல்லாவிதப் பண்புகளும் ஒரே சொல்லாடலில் சேர்ந்து வருவதும் உண்டு. எனினும் ஒவ்வொரு வகை எழுத்திற்கும் ஒரு முதன்மையான பண்பு உண்டு. இத்தகையப் பின்புலத்தில் 1966 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26 ஆம் நாள் அண்ணா எழுதிய கடிதமும், கலைஞர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற, எட்டாவது மாநில மாநாட்டிற்காக எழுதியக் கடிதங்களும் ஒப்பு நோக்கப்படுகின்றன. இவர்கள் எழுதிய கடிதங்கள் பலவகைப்பட்டவை; மாற்றுக்கட்சியினரின் வாதங்களுக்குப் பதிலுரைத்து எழுதப்பட்டவை, பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக எழுதப்பட்டவை எனப் பல வகை உண்டு. இவைகளிலெல்லாம் செய்திகளும், நியாயங்களும் (information and arguements) முதன்மைப்பட்டு நிற்கும். ஆனால் மாநாட்டிற்குத் தொண்டர்களை அழைக்கும் மடல்கள் உணர்வோட்ட முடையவனவாகத் திகழுகின்றன. கழக உறுப்பினர்களின் உள்ளத்தைத் தொடுபவைகளாகவும் அவர்களைக் குறிப்பிட்ட செயல் திட்டங்களை நிறைவேற்றிடத் தூண்டுபவைகளாகவும் (motivate) விளங்குகின்றன.

அரசியல் களம் - காலச் சூழல்

அறிஞர் அண்ணாவின் கடிதமான 'செந்தமிழே வா' என்னும் கடிதம் ஒரு மாபெரும் அரசியல் வரலாற்றுத் திருப்புமுனைக் காலத்தில் எழுதப்பட்ட ஒன்று. அரசியல் மாற்றத்தைக் கருக்கொண்ட காலச் சூழல், இந்திய விடுதலைக்குப் பின்னால் காங்கிரசுக் கட்சித் தமிழகத்தைத் தொடர்ச்சியாக ஆண்டு வந்த காலம். அதிருப்திகள் மேலோங்கி, விலைவாசி விண்ணைமுட்டி, மொழி ஆதிக்க எதிர்ப்புப் போர் கனல் தெறித்து, ஆட்சியாளர்கள் மீது கோபங்கொண்டு மாற்றத்தை உருவாக்க மக்கள் காத்திருந்த நேரம். அந்த வேளையில் மாபெரும் மாநாட்டை நடத்தி அரசியல் முடிவுகளை மேற்கொண்டு எதிர்காலத் திசைவழியை நிர்ணயத்திட வேண்டிய பொறுப்பினைச் சுட்டிக் காட்டி அண்ணா அவர்கள் கட்சித் தொண்டர்களை மாநாட்டிற்காக அழைத்து நீண்ட மடலை எழுதினார். அதே போன்றதொரு அரசியல் சூழல் 1995 ஆம் ஆண்டு இறுதியிலும் ஏற்பட்டது. அன்றைக்கிருந்த ஆட்சியின் வரம்பில்லா ஊழல், அதிகார அத்துமீறல், ஆடம்பர விழாக்கள் ஆகியவற்றால் நாடெங்கிலும் பரவலாக எதிர்ப்பு மேலோங்கி ஆட்சி மாற்றத்தை எதிர் நோக்கியிருந்த காலம். அந்த மாற்றத்தை உருவாக்கிட திருச்சியில் 1996 ஆம் ஆண்டு ஜனவரி 26, 27, 28 ஆகிய நாட்களில் நடைபெற்ற மாநாட்டிற்கு உடன்பிறப்புகளை அழைத்திடும் மடல்களை டாக்டர் கலைஞர் அவர்கள் எழுதினார்.

என்று விளித்து எழுதியிருந்த மடலில் வீரன் சேரன் செங்குட்டுவன் படையைப் பற்றிக் குறிப்பிட்டு, அப்படையினரின் வீரத்துக்கும் நெஞ்சுறுதிக்கும் மேலான உறுதியும், வீரமும் கொண்ட கொள்கை மறவர்களின் பேரணி - பேரணி அன்று, போரணி என்று 1956 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநாட்டின் பெருமைகளை நினைவூட்டி, திருச்சியில் நடைபெறும் எட்டாவது மாநாட்டிற்கு உடன்பிறப்புகளை அழைக்கின்றார் கலைஞர். அப்பகுதியில்,

"*வீரன் சேரன் செங்குட்டுவனுடைய படையைப் பற்றி 'பதிற்றுப்பத்து' கூறும் விதத்தைச் சிறிது சொல்லிக் கொள்கிறேன், எண்ணிறந்த* ஆட்களையும், தூசிப் படையினரை வெள்ளமாகவும், பகைமன்னரின் குடைமுறிப்பதையே தொழிலாகக் கொண்ட யானைப் படைகளை அலைகளாகவும், யானைப் படையின் மேலே வில்லேந்திய வீரர் தாமேந்திய வில்லின் தலைதோன்ற மேம்பட்டு வருவதை அலைமேல்தோன்றும் நீர் திவலைகளாகவும், கேடயத்தினுள்ளே தாம்பு மறைக்கப்பட்டு பளபளக்கும் அலகைமட்டும் நீட்டிக் கொண்டிருக்கும்வேல்களை மீன்களாகவும், போர்ப் பறையோடு கலந்தொலிக்கும்முரசொலியை முழக்கமாகவும் கொண்டு சேரன் படையென்னும் பெருங்கடல் நடந்து சென்று, எதிரிகளை வென்று, அவர்களது''சினத்தீயை அழித்ததாகக் கூறுகிறார் பெரும்புலவர்... ஆமாம்நண்பா! 17.5.1956 புதன் கிழமையன்று திருச்சி சிந்தாமணியிலிருந்துமாநாட்டுத் தலைவர் நெடுஞ்செழியனை திராடவிமுன்னேற்றக் கழகத்தின் தானை ஊர்வலமாக அழைத்துச் சென்ற காட்சி சேரன் செங்குட்டுவனது கடல் போன்ற சேனையையும் போட்டிக்கழைப்பது போலத்தானிருந்தது...நம்மிடம் வேழப்படைகள் இல்லையே தவிர வேழத்துக்கும் இல்லாத நெஞ்சுறுதிநமக்குண்டு என்பதை யார் மறுக்க முடியும்? எதிரிகளின் மீது எறிவதற்கு வேல் கிடையாதே ஒழிய கைகளிலேபற்றியிருந்த கொடிக் கம்புகளை வேல்பாய்ச்சும் பாங்கிலே நம் தோழர்கள் வீசி வந்ததை நேரில் பார்த்தால் தான் உனக்குப் புரியும். ஆமாம் தோழனே, அந்தக் காட்சி அத்தகைய உருக்க மிக்கதாய் இருந்தது" (7.12.95 முரசொலி கடிதம்)

இவ்வாறு தொண்டர்களை, கொண்ட கடமையில் உணர்வு பூர்வமாய் ஈடுபடுத்த தொன்மைக் காட்சியையும், அண்மைக் காட்சியையும் அருகருகே படம் பிடித்துக் காட்டி, கொள்கையில் உறுதி கொள்ள வைக்கும் உத்தியைக் காண்கிறோம். ஆண்ட நம் தமிழினம், மீண்டும் ஆளத்தான் போகிறது - அந்த சூளுரை எடுக்கும் திருச்சி மாநாட்டிற்குத்திரண்டு வருக என அழைப்பு விடுப்பதைப் பார்க்கிறோம்.

அறிவுத் தளத்தைக் காட்டிலும், உணர்வுத் தளத்திற்கு முறையிட்டுத் தொண்டர்களை ஊக்குவிக்கும் உத்தியானது மற்றோரை இணங்கவைக்கும் சொல்லாடல் முறையின் (persuasive discourse) சிறப்பம்சமாகும், 6

கட்சி-தமிழ்மரபு உன்னதமயமாக்கப்படுதல்

திராவிட முன்னேற்றக் கழகத்துத் தொண்டர்களை உணர்வு கொள்ளச் செய்திட வேண்டித் தமிழகத்தின் தொல் சிறப்பையும், அந்த மாட்சியின் இழப்பையும் சுட்டிக்காட்டி, மீண்டும் பழந்தமிழர் நாகரிகம் மலர்ச்சி பெற்றிட கழகம் எவ்வாறு வீறுகொண்ட கொள்கைப்பட்டாளமாக உருக் கொண்டுள்ளது என்பதை நினைவுபடுத்தி, தமிழர் உள்ளங்களை வீறு கொள்ளச் செய்யும் பாங்கை அண்ணாவும் கலைஞரும் எழுதிய இரண்டு மடல்களிலும் காணலாம். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பண்டையத் தமிழர் தம் மாட்சியை மீளுருவாக்கும் செய்திடும் கொள்கைப் படையாகவும், தற்போதையத் தமிழரை நீண்ட பாரம்பரியத் தமிழ்ச் சங்கிலியின் தொடர்ச்சியாகவும் சித்தரித்து, தொண்டர்களின் கடமை உணர்ச்சியைக் கிளர்ந்தெழச் செய்யும் பணியினை இம்மடல்கள் நிறைவேற்றுகின்றன. அண்ணா எழுதுகிறார்,

"கோட்டைக் கொத்தளம் அமைத்து இந்த மாநில முழுதும் ஆண்டிருந்தார்
நம்முன்னோர் என்று படிக்கிறோம். தாரணி மெச்சிட வாழ்ந்திருந்தார்
என்று அறிகிறோம். கத்தும் கடல் அடக்கி, வென்றார்; கடாரம் கண்டார்.
முத்தும் பவழமும் யவனம் கொண்டு சென்றார், உலகின் மூத்தகுடி
தமிழ்க் குடியே என்பதனை மெய்ப்பித்தார் என்றெல்லாம் படிக்கின்றோம்
ஒரோர் வேளை, மெய்யாக அந்த நிலை இருந்திருக்கக் கூடுமோ,
இல்லை வெறும் கற்பனையோ என்று ஐயம் எழக்கூடும், ஆயின்
தாழ்வுற்று நிலை கெட்டு, தாள் தொட்டால் பிழைத்திடுவீர் என்று
கூவிக் கொக்கரிக்கும் கொடியோரால் கொட்டப்பட்ட நிலை யெனினும்
"எத்தனை வீரமதைப் பெற்றுள்ளார் இம்மறவர், உறுதியின் தன்மை எத்தனை
உன்னதமாய் உள்ளது இங்கு என்பதனை மாநில மாநாடுதனில் காண்போர்,
ஐயம் அகன்றிடும், அத்தனையும் உண்மையே; இற்றை நாளிலேயே
இவர்க்கு இந்த ஆற்றல் உள்ளதெனில், அந்நாளில் பெரும்புலவர் கூறினரே
அதுபோல ஏன் இருந்திருக்க மாட்டார்கள்! எனக் கேட்டு, மரபின்
பெருமைதனை முற்றும் உணர்ந்து, இதனை இழந்திடுதல் பெரும்
தவறு என உரைத்து, மரபு காத்திடவும், அதன் மாண்பு
வளர்த்திடவும் உறுதிபூண்டிடுவர்; உண்மை; வெறும்
புகழ்ச்சியில்லை" (பக்.102)

அண்ணாவின் மடலில் நேற்றும்-இன்றும் இணைக்கப்பட்டு மரபின் பெருமைதனை முழுதும் உணர்த்தி, இதனை இழந்திடுதல் பெருந்தவறு எனவும் உரைத்து வீரங்கொள்ளச் செய்வார்.

25-5-1956 ஆம் தேதியிட்ட முரசொலியில் 'அன்புள்ள பொன்முடி'

அதேபோன்று சொல்லும் செய்தியில் தெளிவான நம்பிக்கையும் (confidence) உறுதிப்பாடும் (sincerity) தொனிக்கும் வகையில் எழுத்து அமைந்திருப்பது மேற்படி சொல்லாடல் வகையின் பண்பாகும். (7) இவ்விரண்டுக் கூறுகளும் அண்ணாவும் கலைஞரும் எழுதிய இரு கடிதங்களிலும் விரவியிருப்பதை உணரலாம்.

அறிஞர் அண்ணாவின் மடலில் திராவிடமுன்னேற்றக் கழகம் உருவகிக்கப்படும் காட்சியைப் பார்த்தால், கழகம் எவ்வாறு பொதுநலம் நாடுவோரின் கூடாரமாக, கொள்கைப் பற்றாளரின் படைவீடாக, கொடுமை புரிவோர் நடுங்கும் பாசறையாக, வறுமையிலும் கொடுங்கோலன் புன்மைக்குத் தலைவணங்கா அஞ்சா நெஞ்சர்களின் குடும்பமாக விளங்குகிறது என்பதை உணரமுடியும். கழகத்தை உன்னதமயமாக்கி அதில் தங்களை இணைத்துக் கொள்ளுதல் எத்தகைய பெருமைக்குரியது என்பதைத் தெளிவுபடுத்தி எழுதியிருக்கும் அண்ணாவின் வரிகள் நெஞ்சை ஈர்க்கும் தன்மையன.

> "காண்கின்றாயே பெண்ணே! இன்றென்ன கூறுகின்றாய்? கழகம்கழகமென்று கூவிக் கிடக்கின்றீரே, கழகம் என்னதான் சொக்குப்பொடி போட்டதுவோ? என்றெல்லாம் கேட்பாயே, எழிலரசி! காண் இன்று! இதுதான். என்கழகம்! இவரெல்லாம் என் குடும்பம்! இவர் கூடும் இடம் எனக்குத், திருஇடம், தீரர் இடம்! பெறுமகிழ்ச்சி பலவற்றுள் இதற் கீடு இல்லையன்றோ? வாழ்வளிக்கக் கூடுகின்றார், வன்கணாளர் கொட்டமடக்கிடுவார், கோல்கொண்ட காரணத்தால் கொடுமை உமிழ்ந்துலவும் கூட்டத்தை விரட்டிடுவார், அவர் பெற்ற உறுதியின் அடிப்படை அறிவாயோ? தன்னலம் மறுத்திட்ட தக்கோரின் உழைப்பேதான்! தன்னைத்தான் ஒப்படைத்த தகுதி மிக்கோரின் அறிவாற்றல்; தொண்டு! கூடுகின்றோம் இன்று! இங்கு, கொடிபறக்கக் காண்கின்றோம். முரசொலி கேட்கின்றோம் என்றால், முழுமதியே! இந்த நிலை நாம் பெற்றிடவே, எத்தனையே தோழர்கள் கொட்டினர் குருதியினை, தொடுவாளுக் கஞ்சாமல், பழி தாக்கிய போதும் பதறாமல் களம் நின்று, என் கழகம்! என் குடும்பம்! என்று கூறி நின்றார், ஏற்றார் எதிர்ப்புகளை, அவர்கண்ட தொல்லைக்கோர் அளவே கிடையாது! ஆண்டை எதிர்த்திருப்பார், அடி ஆள் எதிர்த்திருப்பார்; வேலை இழந்திருப்பார் வேதனையில் உழன்றிருப்பார், என்றாலும் எப்போதும், எது வந்திடினும் அஞ்சிடப் போவதில்லை, நெஞ்சத்துக்குடி
> கொண்ட உண்மைக்கே பணிந் திடுவேன் என்றுரைத்து என்கழகம்! என் குடும்பம் எனக் கூறிக்களம் நின்றார். எண்ணற்றவர் என் உடன் பிறந்தார்! இதோ! இதோ எங்கும்! காணடி என் உள்ளம் வென்றவளே! காட்சி
> இதுபோலக் கண்டதுண்டா கூறிடுவாய்," (பக்.98)

இசைநாடகமே உரைநடையாய் ...

உயர்ந்த கவிதையின் இலக்கணமாக, நாடகத் தன்மையும், இசையும்

களிநடம் புரிதல் வேண்டும் என்று சிறந்த கவிஞரும், திறனாய்வாளருமான டி.எஸ். எலியட் கூறுவார். அத்தகைய நாடகக் காட்சியை அண்ணாவின் மடலில் காணலாம். தனது கட்சி உறுப்பினருக்கு எழுதும் மடலில் ஒரு குறுங்காட்சியை, காமத்துப்பால் குறளோவிய நாடகப்பாங்கில் அமைத்து தலைவன்-தலைவியை உரையாட வைப்பது ஓர் அற்புதமான உத்தியாகும். மகளிர் அரசியலில் ஈடுபடாமல் குடும்பப் பொறுப்பை மேற்கொள்வதும், அரசியலுக்காகப் பொழுது, பணம், ஆற்றல் முழுவதையும் செலவழிக்கும் கணவர்களை, உடன்பிறப்புகளை, பெற்றோர்களைப் பார்த்து வியப்பும், ஆதங்கமும் அடையும் நடைமுறைச் சூழலில், அம்முறையை மாற்றிப் பெண்களும் அரசியலில் பங்கேற்கச் செய்தல் வேண்டும் என்ற அவாவில் கழகத்தையே குடும்பத்தின் உருவகமாக (metaphor) ஆக்கிக்காட்டி அதன் சிறப்பையும், தேவையையும் உணர்த்திவிடுவார் அண்ணா. கலைஞர் அவர்களும் தமது மடலில் கழகம் என்பது அன்பால் பிணைக்கப்பட்ட குடும்பப் பாசறை என்பதைச் சிறிய ஓவியக் காட்சியாய்-கணவன், மனைவி, குழந்தைகள் தந்தை ஆகியோர் பங்கேற்கும் உரையாடலாய் அமைத்திருக்கிறார். புரட்சிக் கவிஞரின் பார்வையில் சொன்னால், தனிமனித ஒதுக்கங்களிலிருந்து மக்கட்சமுதாயத்தின் நீக்க முடியாத பகுதியாக ஒருவன் மாறும் நீட்சியாகக் கழகம் காட்டப்படுகின்றது. அரிஸ்டாட்டில் துன்பியல் நாடகம் பற்றிக்குறிப்பிடும் போது, நான் என்னும் எண்ணத்திலிருந்து நாம் என்ற பொதுமை நாட்டத்திற்கு ஒருவனை மாற்றும் அற்புத ஆற்றல் உயர்ந்த கவிதையின் இலக்கணம் என்று கூறுவார். இத்தகையப் புரட்சியை நிகழ்த்தும் குடும்பமாக கழகம் பற்றிய கோட்பாடு உருவாக்கப்படுகிறது. இந்தி எதிர்ப்புப் போரில் ஒரு தாய் தன்மகனை இழந்துவிட்டாள். அவள் பறி கொடுத்ததை எப்படி ஈடுகட்டுகிறாள்:

> "மகனை இழந்திட்டேன், மாத்தமிழுக்கு அளித்திட்டேன்,
> ஒருவனைக் கொடுத்து இதோ இத்தனைப் பிள்ளைகளை
> நான்பெற்றேன். இவர்களிடம் உள்ளான் என்மகன்,
> இறந்தானில்லை! இவர்களோடு கலந்துவிட்டான், மடியவில்லை"

என்று கூறி மானுடச் சமுத்திரத்தோடு சங்கமமானதை அந்தத் தாயின் கூற்று குறிக்கிறது.

உரையாடல் உத்தியைப் புகுத்திச் சொல்ல வந்த செய்தியை நேரடியாகச் சொல்லாமல், ஒரு காட்சியின் மூலம் அல்லது ஒரு சூழலின் மூலம் அனுபவமாக மாற்றிக் கொடுக்கிறார்கள் டாக்டர் கலைஞரும் அறிஞர் அண்ணாவும். இதன் மூலம் அண்ணாவும், கலைஞரும் மொழியியலறிஞர் ஹாலிடே கூறுவது போன்று மொழியின் 'Interpersonal function' ஐ அற்புதமாகக் கையாண்டு தேர்ந்த முறையில் செய்தி பரிமாற்றத்தைச் செய்கிறார்கள்.

உரைநடை அன்று; உணர்வு மேலோங்கிய கவிதைமொழி

கடிதங்கள் எழுதப்படுவது கழகத் தோழர்களுக்கு,. எனினும் அம்மடல்கள் கவித்துவக் குளுமையுடன் அமைந்து படிப்பவனின் சிந்தனைக்கு மட்டும் விருந்தளிக்காமல் அவனது உள்ளத்தையும்

கொள்ளை கொள்ளும் தன்மை உடைய உரைநடையில் அண்ணா, கலைஞர் இருவரும் எழுதிய மாநாட்டுக் கடிதங்கள் அமைந்துள்ளன. எதுகை, மோனை அடர்த்தியாக விரவி வரும் சொற்றொடர்கள், சின்னஞ்சிறு வாக்கியங்களின் அணிவகுப்பு, இயல்பான தொடர் அமைப்புகள் முறைமாறி வந்து வியக்க வைக்கும் விந்தை, விடையை எதிர் நோக்கா வினாக்கள் பெருகி வந்து கருத்தை வலியுறுத்தும் பாங்கு, இலக்கிய மணங்கமழும் அரசியல் உரை வீச்சு, இதனைப் படிப்போன் எழுத்தின் ஒலிக்கோலத்தில், மொழிலயத்தில் (Rhythmic prose) தன்னை மறந்து மந்திர சக்திக் காட்பட்டவன் போன்றவனாகிவிடுகிறான்.

சான்றாக அண்ணாவின் கடிதத்தின் ஒரு பகுதி

இளஞாயிறுகள்! எழுஞாயிறுகள்! எல்லோரும் என்
தோழர்! விலை ஏறிவிட்டதனால் வேதனையுறுகின்றார்,
வேண்டாம் விபரீதம், விளைவு நல்லதல்ல என்று ஆண்டிடும்
பெரியோர்க்கு அறிவுரை கூறியதால் அடைபட்ட அதோ அந்த
தோழர் சிறைதனில் ஒராண்டு! இளைத்த உடல் காண்கின்றாய்;
ஆனால் உள்ளம்? எஃகு! ஆமாம்! அவரே கரம்கூப்பி நிற்கின்றார்
மாதெதிரில்! ஏனென்று அறிந்து கொள் ஆரணங்கே! மாத்தமிழ்
காத்திடவே! புறப்பட்டான் ஓர் காளை! இந்தி, தமிழர்க்குச் செந்தீ
என்றான், காரணம் பலகாட்டி! எப்பக்கம் வந்து புகுந்துவிடும்?
இந்தி எத்தனைப்பட்டாளம் கூட்டி வரும்? என்ற பண் எழுப்பிப்
புறப்பட்டான். பதைக்கச் சுட்டு வீழ்த்தினர் அத்திருமகனை! அந்த
மாது அவன் மாதா? நாடு வாழ மகனைப் பறிகொடுத்தாள் மாதா!
அவள் கால்பட்ட மண், மணம் பெற்றிடும் என்றிடலாம், மகனை
இழந்திட்டேன், மாத்தமிழுக்கு அளித்துவிட்டேன். ஒருவனை நான்
கொடுத்து இதோ இத்தனைப்பிள்ளைகளை நான் பெற்றேன்!
இவர்களிடம் உள்ளவன் என் மகன், இறந்தானில்லை! இவர்களோடு
கலந்து விட்டான், மடியவில்லை! மலரினின்று கிளம்பும் மணம்
கலந்திடும் காற்றில் என்பர். என் மகன் நறுமணமானவன்
பிணமானான் என்று எண்ணிடுதல் பேதமை! என்று
எண்ணித்தானோ அந்த மாது நடக்கின்றாள் எழுச்சியூட்டி!" (பக்.100)

அண்ணாவின் காலத்து அரசியல் சூழலில் உணரப்படாத வெப்பம் கலைஞர் மாநாட்டிற்காக கடிதம் எழுதும் காலங்களில் அதிகம் என்பதை நாம் அறிவோம். அதனால் தான் அவருடைய அழைப்பு மடலில் அவ்வப்போது இளைப்பாறும் மர நிழல் போன்று கற்பனையும், கனிவும் இலக்கியமணமும் பரிவும் கலந்து வரும் பொழிவினைக் காணுகிறோம். எனினும் அவர்தம் மடலில் மாற்றுக் கட்சியினரின் அவதூறுகளுக்குப் பதிலிறுத்துக் கழகக் கண்மணிகளுக்குக் கொள்கைத் தெளிவை உருவாக்கும் தேவை மேலோங்கியிருப்பதனால் பொதுவாகத் தகவல்களே ஓங்கியிருக்கும் (Ideational function) விளக்க முறைச் சொல்லாடல் (Expository discourse) அதிகமாக அவரின் கடிதத்தில் முதன்மைப் படுவதை ஒப்பு நோக்கில் உணரலாம். இதற்குப் பின்வரும் மடலே சான்றாகும்.

"தி.மு.க. மாநாட்டுக்குப் போட்டியாகத் தனது பண மூட்டைகளையும் அதிகார வர்க்கத்தையும் - அரசாங்க இலாக்காக்களின் துஷ்பிரயோகத்தையும் பயன்படுத்தி, பிரமாண்டமான மாநாட்டை நடத்திக் காட்டிவிட்டேன் என்று மார்தட்டிக் கொண்டு மாய்மாலம் செய்ய; அ.தி.மு.க. வினருக்கு ஒரு மாத காலம் கூடப் பொறுத் திருக்க இயலாதாம். அந்தக் கித்தாப்பை ஒருவார காலத்திற் குள்ளேயே காட்டிக் கொண்டு விட வேண்டுமாம். உடன்பிறப்பே உனக்கு கிரிக்கெட் ஆர்வமிருந்தால் ஒரு உதாரணம் சொல்கிறேன் கேள் அண்மையில் இந்தியாவுக்கும் நியூஜிலாந்துக்கும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்றன. நாகபுரியில் நடந்த போட்டியில் நியூஜிலாந்தை முதலில் ஆடவிட்டு விட்டு - பிறகு இந்தியா ஆடினால் நியூஜிலாந்தைவிட அதிக ரன் எடுத்து விடலாம் என்று நினைத்து இந்திய அணித்தலைவர் நியூஜிலாந்தை முதலில் ஆடவிட்டார். ஆனால் எதிர் பார்த்ததற்குமாறாக நியூஜிலாந்து அபாரமாக விளையாடி அந்த ஆட்டத்தில் முன்னூற்றி நாற்பது ரன்களுக்கு மேல் எடுத்துவிட்டது. அதற்குப் பிறகு விளையாடிய இந்திய அணியினால் அந்த ரன்களை எட்டிப்பிடிக்கமுடியவில்லை; திருச்சியில் தி.மு.க. மாநில மாநாடு முதலில் நடந்து ஒருவார காலத்தில் அ.தி.மு.க. மாநாடு நடந்தால் நாகபுரி கதையாகத்தான் இருக்குமென்பதில் ஐயமில்லை" (12.12.95 முரசொலி கடிதம்)

தலைவரும் - தொண்டரும் ஒரே தளத்தில்

கருத்துப் பரிமாற்றத்தில் பேசுவோன்-கேட்போன் இடையே உள்ள உறவுநிலை மிகவும் இன்றியமையாதது. நாம் பயன்படுத்தும் சொற்களும் இந்த உறவு நிலையை வெளிப்படுத்திடும். தா, கொடு, ஈ என்ற சொற்கள் பொதுநிலைப் பொருளில் ஒன்றாக இருப்பினும் பெறுவோன்-கொடுப்போனுக் கிடையே உள்ள ஏற்றத்தாழ்வான சமூக உறவு நிலைகளைக் (asymmetrical role relationship) காட்டி நிற்பன. கருத்துப் பரிமாற்றம் நிகழும் போது பேசுவானும்-கேட்போனும் ஒரே தளத்தில் இருக்கும் நிலையே உன்னதமானது. அப்போது தான் யாருக்கு யார் உயர்ந்தவர் என்ற வேறுபாடு எழாமல் தோழமை உணர்வுடன் செய்திப் பரிமாற்றம் நிகழும். இந்த நிலை புறத் தோற்றத்தால், பேசும் மொழியால், நடை உடைபாவனையால் எழலாம். இந்தச் சமநிலை உறவு பேரறிஞர் அண்ணாவாலும், டாக்டர் கலைஞர் அவர்களாலும், முழுவதுமாக இல்லாவிட்டாலும் ஒரு சில நிலைகளில் கடைபிடிக்கப்பட்ட நெறியாகும். தொண்டருக்கும், தலைவ ருக்கும் இடையே நெருக்கமான பிணைப்பிற்கும், தலைவர்களின் கருத்துக்களுக்கு உடனடி ஏற்பும் கிடைப்பதற்கு இந்த உறவுநிலை வழி வகுக்கிறது. அண்ணாவும் கலைஞரும் தங்களைச் சாமான்யத் தோழர்களைக் காட்டிலும் மேலானவர்களாக, வேறுபட்டவர்களாகக் காட்டிக் கொள்வதில்லை. தாங்கள் எல்லாம் அறிந்தவர்கள். எனவே அறியாத தொண்டர்களுக்குப் போதித்து வந்த ஆசிரியர்கள் என்ற எண்ணத்தோடு தங்களது சொல்லாடலை நிகழ்த்தவில்லை, அவர்களது சொல்லாடல்

முறையே இதற்குச் சான்றுபகரும். கலைஞர் மடலில் காணும் வாசகம் இதோ:

“பொதுவாகத் தமிழ் மக்களின் எல்லாப் பிரிவினரிடத்திலும்
ஒரு புத்துணர்வு-எழுச்சி-முகமலர்ச்சி! எதையோ
எதிர்பார்க்கிறார்கள்
அதை என்னால் கொடுக்க முடியுமா? நீயின்றி, உன் உழைப்பின்றி
உன் ஆற்றல் மிகு செயல்பாடின்றி-தனித்தியங்கித் தரையைக்
குடைந்து காட்டுவேன்-வானத்தைக் கிழித்துக் காட்டுவேன் என்று
என்றைக்கு நான் நினைத்திருக்கிறேன், நினைத்தால் அல்லவா
சொல்வதற்கு?” (13.1.96 முரசொலி கடிதம்)

அறிஞர் அண்ணா அவர்கள் தம்மை ஒருபடி தாழ்த்திக் கொண்டு தமது தம்பிமார்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து ஏற்றமளித்திடும் மாண்பையே வெளிப்படுத்தியுள்ளார். சான்றாக.

பிரச்சனைகளின் கடினம் என்னை மிரட்டும்போது, அவைகளை
நிறைவேற்றி வைத்திடும் ஆற்றல் நம்மிடம் ஏது என்ற கவலை
எழும்
போது, உன்னைத் தான் எண்ணிக் கொள்கிறேன்; தம்பிகளின்
தனித்தனி
ஆற்றலில் மொத்தத்தின் தன்மையைக் கணக்கெடுக்கும் போது
பிரச்சனைக
ளைத் தீர்த்திடத் தேவைப்படும் ஆற்றல் போதுமான அளவு
கிடைத்திடும்
என்ற நம்பிக்கை எழத்தான் செய்கிறது. என் ஆற்றலை மட்டுமே
நம்பிடின், ஏக்கமோ, ஏமாற்றமோதான் விளைவாகிட முடியும், என்
ஆற்றல், என் ஆற்றல் மட்டுந்தானா! இல்லை, தம்பி! இல்லை!
என் ஆற்றல் என்றது, என் தம்பிமார்களின் ஆற்றலின் கூட்டு-நான்,
இந்த கூட்டுச் சக்தியின் உரிமையாளன்” (5.11.67 அண்ணாவின்
கடிதம்)

மற்றவர்கள் தான் சொல்லும் கருத்தை ஏற்கச் செய்திட வேண்டுமானால் எழுதுபவன் தன்னை அதிபுத்திசாலியாகவும், தான் அதிக முக்கியத்துவம் உடையவன் என்றும் காட்டிக் கொள்ளாமலிருப்பதே சிறந்த சொல்லாடல் உத்தியாகும்.

கடிதக் கலைக்குப் புதுவாழ்வு

அரசியல் கட்சிகள், நாளேடுகள், வார ஏடுகள் நடத்தி, பொருளாதாரம், சமூகம், இலக்கியம், திரைப்படம் ஆகியனபற்றி அறிவார்ந்த கட்டுரைகளை வடித்து, கருத்துப்பிரச்சாரம் நடத்துவர். இத்தகு கட்டுரைகள், படித்த ஒரு சிலருக்கே சென்றடையும், பயனளிக்கும். இம்முறையின் குறைபாடுகளை உணர்ந்து செய்திகளையும், அவற்றை வெளிப்படுத்திட வேண்டிய உத்திகளையும் உணர்ந்து கடிதங்கள் வாயிலாக மக்களைத் தொடர்பு கொள்ளும் புதிய முயற்சிக்குக் கால் கோள் விழா

சமைத்து அதில் வெற்றியும் கண்டவர்கள் அண்ணாவும், கலைஞரும், சாகாவரம் பெற்ற கடிதங்களை எழுதி மேலை நாட்டில் இக்கலையில் அறிஞர் கார்லைல், கௌப்பர், கீட்சு, ஆகியோர் முன்னோடிகளாக விளங்கியதாகக் கூறுவர். அவர்களின் கடிதங்களைப் படிப்போர் நேரடியாக அருகிலிருந்து பேசும்போது எத்தகைய அனுபவம் பெறுவாகளோ அத்தகைய உணர்வைப் பெறுபவர்கள். ஒருவன் உணர்ந்த உணர்வுகளையும். எண்ணிய எண்ணங்களையும் அப்படியே வெளிப்படுத்தும் ஆற்றல் அவர்களின் கடிதங்களுக்கு இருந்தது. கார்லைல் கனடாவில் இருந்த தனது சகோதரர் அலெக்கிற்கு எழுதிய கடிதத்தில் அவர்களது வயதான தாயார் அருகில் வந்து தானும் தனது மகனுக்குத் தன் கையால் இரண்டு வார்த்தைகள் எழுதிட வேண்டுமென்று ஆவல் கொண்டு கடிதத்தை அவனிடமிருந்து பெற்று, தனி மேஜையில் உட்கார்ந்து, நடுங்கும் கரங்களால் தள்ளாத வயதிலும் கடைசி செய்தியை எவ்வாறு எழுதினாள் என்று அதில் விவரித்திருந்தார். இதைப் படிக்கும் அலெக் தனது தாயே அருகில் உட்கார்ந்திருப்பதைப் போலவும் அவளுடைய குரலைக் கேட்பது போலவும் உணர்ந்து மனம் கசிந்து போனார் என்று கூறுவார்கள். உள்ளத்தைப் பிணைக்கும் ஆற்றலுக்கு இத்தன்மைத்தான கடிதங்களை எடுத்துக் காட்டாகக் கூறுவர். இத்தகையகடிதங்கள் இருவருக்கிடையில் நெருக்கத்தை (Intimacy) உணர்த்தும்.

இந்தக் கூறுகளையெல்லாம் உள்ளடக்கிய கடிதங்களின் வாயிலாகத் தொண்டர்களோடு தொடர்பு கொள்ளும் முறையைக் கையாண்டதால்தான் அண்ணா அவர்களும் கலைஞர் அவர்களும் மற்றகட்சிகளுக்கு இல்லாத கட்டுக் கோப்பைத் தங்கள் கட்சியில் பெறமுடிந்தது. நேரடியாக மனக்கண்முன் காட்சிகளைக் கொண்டு வந்து சிந்தனைகளை, உணர்வாக அனுபவமாக உருமாற்றி எழுதியதால் தான் (transforming thought into feeling) சோதனைகள் வந்த போதும் நிலைகுலையாத் தொண்டர்களின் பாசறையாக கழகம் விளங்க முடிந்தது. செய்தியும் உணர்வும் அண்ணாவின் எழுத்தில் எவ்வாறு பின்னிப் பிணைந்து உலா வருகிறது என்பதற்கு

"அகமும் புறமும் கற்ற அருந்தமிழ்ப் புலவரவர் ஊரின் கோடியில்
உள்ளதோர் சிறுகுடிலில் வாழ்கின்றார், அவர் திறனோ நாட்டிற்கே
நல்லதோர் அணிகலனாம்! நம்தமிழர் வாழ்ந்தவிதம் நடுவில்
வந்துற்ற நலிவு, அதன் காரணம், இன்று நாம் பெற்றுள்ள
விழிப்புணர்ச்சி, அதன் விளைவு இத்தனையும் கூறிடுவார்,
தித்திக்கும் செந்தமிழில்" (பக் 99 அண்ணா கடிதம்) என்று
அண்ணா புலவர் அறிவரசன்'
அவர்களைப் படிமக் காட்சியாக அறிமுகப்படுத்துகிறார்.
கலைஞரும் பிறிதொரு கடிதத்தில் இவ்வாறு எழுதுகிறார்:
"உடன்பிறப்பே! என் சிந்தை-அணு ஒவ்வொன்றும் சிலிர்க்க
இதய வாழ்த்துக்களைப் பொழிந்து-கழகத் தேர்தல் நிதிக்காக
இரண்டரை இலட்சத்துக்கும் மேற்பட்ட வெண் பொற்காசுகளையும்

வாரி வழங்கி-பிறந்த நாளில் உன் திருமுகத்தையும் காட்டி
ஊருக்குத் திரும்பிவிட்டாய்

நலம் விசாரிக்க நேரமில்லை; 'உட்கார்' என்று உபசரிக்க இடமில்லை; வரிசை வரிசையாக நீ வீதியிலே அணிவகுத்து நின்று மெல்ல மெல்ல நகர்ந்து என்னருகே வந்து வாழ்த்துக் கூறியிருக்கிறாய் என்பதைக் கூட, மறுநாள் நாளேடுகளில் வந்த புகைப்படங்களில் கண்டுதான் புரிந்து கொள்ள முடிந்தது.

உன் தோளில் தொத்திவந்த கிள்ளை மொழிப் பிள்ளைச் செல்வங்கள், பிஞ்சுக் கரங்கள் குவித்து வணக்கம் தெரிவித்த போது, நெஞ்சம் எப்படி இன்பப் பேரருவியாக மாறிற்று தெரியுமா?

உன் கரமும்-என்கரமும் ஒன்றையொன்று பின்னிக் கொண்டது, மின்வெட்டும் நேரம்தான் இருக்கும்? அந்த உணர்ச்சிப் பெருக்கை வெளியிட வார்த்தைகளைத் தேடுகிறேன்-கிடைக்கவில்லை!

அந்த நொடிப் பொழுதிலும் நம் இதயங்கள் வாய்திறந்து எவ்வளவு உடன்பிறப்பே-உனக்கும் எனக்கும் தானே தெரியும் "(15.6.75)" முரசொலியில் கலைஞர் கடிதம்).

இக்கடிதங்களைப் படிப்போர் நெஞ்சுருகி நெகிழ்ந்து போவர், அருகருகே அமர்ந்து அன்பைப் பரிமாறிக்கொள்ளும் இன்ப உணர்வை அடைவர். தலைவன்-தொண்டன் உறவில் அந்நியத்தன்மை மறைந்து போகும்; இத்தகையப் பாங்கினைப் பெற்றிருக்கிற தன்மையால்தான் அண்ணா அவர்களும், கலைஞர் அவர்களும் எழுதிய கடிதங்கள் படித்தோரைப் பிணைத்தன; படிக்காதோரை வேட்பச் செய்தன, ஏ.ஜி, கார்டினர் கடிதக் கலையைப் பற்றிக் குறிப்பிட்டது இங்கு நினைவுக்கூரத்தக்கது.

> "நெருக்கமான உணர்வை ஊட்டுவதுதான் (Personal and intimate) உண்மையான கடிதத்திற்கு இலக்கணம், தூர தேசங்களில் பிரிந்து இருப்பினும் அருகில் இருப்பது போன்ற (destroys distance) உணர்வை ஏற்படுத்தும் எழுதுபவன் இல்லாதபோதும் அவன் பக்கத்தில் இருந்து உரையாடுவது போன்ற எண்ணத்தை (creates presence in absence) உருவாக்கும் நெஞ்சத்து உணர்ச்சிகளை அவை தோன்றிய வண்ணமே வெளிப்படுத்துவது தான் சிறந்த கடிதமாகும் அவ்வாறின்றி உணர்வுகளையும், கருத்துக்களையும் கோர்வைப்படுத்தி ஒன்றன்பின் ஒன்றாக வளர்த்தெடுக்கும் பாணியில் எழுதப்பட்டால் அது கடிதமாகாது, கட்டுரையாகவே அமையும்" என்று குறிப்பிடுவார்.[8]

ஏ.ஜி, கார்டினர் personal letter ஐ பற்றித் தான் இவ்வாறு கூறியுள்ளார், ஆனால் மேற்கூறிய அத்துணைக் கூறுகளையும் பயன்படுத்தி செய்திகளை, செய்திகள் என்று அறியா வண்ணம் சொல்லியிருக்கும் முறை டாக்டர் கலைஞருக்கும் அறிஞர் அண்ணாவுக்கும் உரித்தான தனித்துவமாகும்.

முடிவாக ...

ஒப்பீட்டு அளவில் இருவரின் கடிதங்களிலும் காணும் வியப்பான ஒப்புமைக் கூறுகளாகக் கீழ்காணுபவற்றைச் சுட்டலாம். கட்சியையும், தொன்மைத் தமிழினச் சிறப்பையும் உன்னதமயப்படுத்தி அவைகளை மீளுருவாக்கம் செய்யும் கோட்பாட்டை வலியுறுத்தியுள்ளனர் அவர்களின் எழுத்திலும் பேச்சிலும் போர் தொடர்பான படிமங்களின் மூலம் கட்சியை லட்சியப் போர் புரியும் பாசறையாக உருவகப்படுத்தியுள்ளனர். இந்தப் புனிதப் பணியில் போர் வீரர்களாகவும், புரட்சி சக்தியாகவும் ஏழை எளியோரை, ஏனோதானோக்களை, இல்லாதாரை முதன்மைப்படுத்தி கழகம் அவர்களுக்கான அமைப்புதான் என்று உணர்த்தியுள்ளனர். கட்சியைக் குடும்பமாகச் சித்தரித்து இடைவெளி உருவாகாமல் கட்சியைப் பாதுகாத்தனர். கருத்துப் பரிமாற்றத்தில் தகவல்களை, சிந்தனைகளை உணர்வு மயப்படுத்தப்பட்ட அனுபவமாக (sensuous apprehension of thought) வெளியிடும் சொல்லாடல் உத்திகளை மேற்கொண்டனர் எனலாம்.

அடிக்குறிப்புகள் :

1) P.2 **Modern Rhetoric**, Cleanth Brooks and warren
2) P,13 **Writing clear Paragraphs** - Robert and B.Donald and others.
3) P.150 **English Grammar for Today : A New Introduction,** Geoffrey Leech, Margaret Deuchar and Robert Hoogen Road
4) PP. 97-110 தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள் vol .18
5) முரசொலி சிறப்புமலர் 1996 தி.மு.க 8வது மாநிலமாநாடு திருச்சி
6) P.161 Modern Rhetoric
7) P.228 Writing clear Paragraphs
8) `On Letter writing' - AG Gardiner.

குறளோவியம்

10 குறளோவியம் ஓர் புதுவண்ணம்

முனைவர் வ.குருநாதன்

திருக்குறள் ஓர் ஓவியம். ஆயின், அஃது எந்தக் காலத்திற்கும் எந்த நாட்டிற்கும் எந்தப் பண்பாட்டிற்கும் ஏற்ப வண்ணமும் வனப்பும் கூட்டி, அகத்திலே மாட்டி மகிழ்தற்குப் பொருந்த வரைந்ததோர் புனையா ஓவியம். ஆகவேதான், அது தோன்றிய காலந்தொட்டே பல உரைகளோடும் விளக்கங்களோடும் மொழிபெயர்ப்புக்களையும் வழிவழியாகப் பெற்று வருகின்றது. பின்னெழுந்த நூல்களிலெல்லாம் அதன் பாமணிகள் பதிக்கப்பட்டு மின்னுகின்றன. ஒவ்வொரு பாடலின் உண்மைக்கும் பொருந்த ஒவ்வொரு வரலாற்றை இணைத்து முதுமொழி, முதுநெறி வெண்பாக்கள் பெற்ற நூல் இதுவொன்றே எனின் அது கதையன்று. சோமேசர் முதுமொழி வெண்பா, முருகேசர் முதுநெறிவெண்பா, இரங்கேசவெண்பா இன்னும் இவைபோல் பல வெண்பாநூல்கள் இம்முறையில் எழுந்துள்ளன. அவையும் குறளுக்கு அவ்வக் காலங்களில் தீட்டப்பட்ட புதுவண்ணங்களாய்த் திகழ்கின்றன. எடுத்துக்காட்டாக,

நந்தி கலம்பகத்தான் மாண்டகதை நாடறியும்
சுந்தரஞ்சேர் தென்குளத்தூர்ச் சோமேசா - சந்ததமும்
வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.
- (சோமேசர் முதுமொழி வெண்பா, 88)

என்ற வெண்பாவில் அமைந்த குறட்பாவில் வரும் சொல்லேர் உழவரைச் சிறப்பாக அறநூல் கற்றுச் சூழ்ச்சித்திறனுடைய அமைச்சராகப் பரிமேலழகர் காட்டியதற்கும் வேறாய்ப் புலமைத் திறனுடைய புலவராக இங்கே காட்டியுள்ள புதுவண்ணம் சிறப்புடைய பொதுவண்ணம்.

இத்தகைய முதுமொழி வெண்பா நூல்களின் வழியில் அவற்றினும் புதிய முறையில், எளிய உரைநடை மொழியில் திருக்குறளுக்கு வரலாற்று நிகழ்ச்சிகளால் மட்டுமன்றி நடைமுறை நிகழ்ச்சிப்புனைவுகளாலும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதியார் தம் கைவண்ணத்தால் தீட்டிய புதுவண்ணம்தான் குறளோவியம். முந்நூற்று ஐம்பத்துநான்கு குறட்பாக்களுக்கு முந்நூறு ஓவியங்கள் தீட்டப்பட்ட இந்நூலின் வண்ணப்புதுமைகள் சிலவற்றை இக்கட்டுரையில் நண்ணிக்காணலாம்.

வரலாற்று நிகழ்ச்சிகள்

வரலாற்று நிகழ்ச்சிகளைக் கொண்டு குறளோவியத்திற்கு வண்ணம் தீட்டியுள்ள கலைஞர், அதற்குத் தமிழக வரலாற்றை மட்டுமின்றி உலக

வரலாற்றையே குழைத்து மெருகினை இழைத்துள்ளார். திருக்குறள் உலகப் பொதுமறையென்ற உண்மையை உணர்த்துதற்கு இதுதான் உரியதோர் நெறியன்றோ? 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து, வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்ற பாரதியின் நாட்டுப்பற்றிலெழுந்த செம்மாந்த செருக்கினைக் கலைஞர்தம் சிந்தனையோவியங்களால் சீராக வரைந்துள்ளார்.

தமிழக வரலாற்றில் சங்ககாலத்துக் குமணன் தன் தம்பியின் சூழ்ச்சியால் நாடிழந்து காடுபற்றியிருந்தபோது, தன்னை நாடிவந்த புலவரான பெருந்தலைச் சாத்தனார்க்குப் பாடல்சான்ற பரிசுகளை அளிக்கவியலாத இரக்கநிலையில் தனது தலைக்கும் விலையறிவித்திருந்த தம்பியாலேனும் அப்புலவர்க்குப் பொருள் கிடைக்குமாறு தலையைக் கொடுக்கத்துணிந்த தமிழ் மன்னன் பெருஞ்செயலை,

சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை (230)

என்ற குறட்பாவிற்குப் புதுவண்ணமாகத் தீட்டியுள்ளார் (பக். 168 -169). காவா நாவின் கனகனும் விசயனுமாகிய ஆணவப் பேச்சுடை ஆரிய மன்னர் செந்தமிழ் வேந்தரின் சிறப்பாற்றலை மதியாதிகழ்ந்து செங்குட்டுவனின் சினவலையிற்பட்டுக் கண்ணகிப் படிவத்துக் கல்சுமந்த சிலப்பதிகார வஞ்சிக் காண்டத்து வரலாற்றை,

ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு (642)

என்னும் திருக்குறளுக்குத் தீட்டியுள்ளார் (பக். 480 - 481).

தமிழகத்து இருபதாம் நூற்றாண்டு அரசியல் சமூகத் தலைவர்களான இராசாசியும் பெரியாரும் தத்தம் கொள்கைகளில் எதிரிகளாயினும் உள்ளத்து உணர்வுகளிலே ஒன்றுபட்ட நண்பர்களென்ற உண்மையை 'நிறைநீர நீரவர் கேண்மை' (782) என்ற குறளுக்கு வண்ணமாகக் குழைக்கின்ற கலைஞர் இராசாசி இறந்துபட்டு நடந்த இறுதிப்பயணத்தில் பெரியார் தம் தடுமாற்ற வயதிலும் உடன்சென்று சுடலைக்களத்தின் மண்தரையில் அமர்ந்து, நண்பரது சடலத்தின் மீது தீநாக்குகள் சுழலக்கண்ட நிலையில் நெஞ்சுருகிக் கண்ணீர் வடித்த காட்சியைப் புனைவார் (பக். 361 - 362).

தமிழகத்தின் வெளியேயுள்ள உலக நிகழ்ச்சிகளைப் புனையுங்கால் முதலில் இந்திய நாட்டுத் தந்தையாகிய அண்ணல் காந்தியைச் சுட்டுக்கொன்ற கொடியோனின் கைகளுக்குள் கொலைக் கருவி ஒளிந்திருந்து உயிர்குடித்த செய்தியைத், 'தொழுதகையுள்ளும் படையொடுங்கும்' (828) என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு வண்ண்மாக்குவர் (பக்.101 - 102). அதேபோல்,

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் (580)

என்னும் தமிழ் மறைக்கும் கிரேக்க நாட்டுத் தத்துவஞானி சாக்கிரட்டீசு, தம் அறவுரைகளுக்கெதிராக நண்பர்களே வழக்குத்தொடுத்து முடிவில் நஞ்சைக் கொடுத்த போது கொஞ்சமும் தயங்காத நெஞ்சத்தோடு புன்முறுவல் பூத்து நஞ்சுண்ட நாகரிகத்தைக் காட்டாகத் தீட்டுவர் (பக்.145-146). இன்னும்,

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும் (792)

என்பதற்கு, அண்டை நாடான பாகித்தான் வரலாற்றில் படைத்தளபதி சியாவை நண்பனாகக் கொண்ட அதிபர் பூட்டோவின் அழிவையும் (பக்.317-318),

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை (51)

என்பதற்குப் பொதுவுடைமைச் சிற்பி காரல்மார்க்சின் மனைவியையும் (பக். 369-370) வண்ணப்படுத்துவார்.

நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறர் நெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள் (917)

என்ற குறளுக்கு உரோமாபுரி அரசர்களின் காமக்களியாட்டங்களைக் காட்டி (பக். 337-338), அவற்றால் அழிந்த அப்பேரரசின் வீழ்ச்சியையும், 'இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக' (539) என்னும் குறளோவியத்தில் தீட்டுவார் (பக்.602-603).

தம் வாழ்க்கை நிகழ்ச்சிகள்

குறளோவியத்திற்கு வரலாற்று நிகழ்ச்சிகளைக் குழைத்துத் தீட்டிய கலைஞர், தம் அரசியல் பொதுவாழ்க்கை அனுபவ நிகழ்ச்சிகள் சிலவற்றையும் குறட்பாக்களுக்கேற்ற வண்ணமாகக் கொண்டுள்ளார்.

அரசியலில் தமக்கு இடையீடு ஏற்பட்ட காலத்துத் தம்மிடம் பழைமை பாராட்டுதற்குப் பதிலாகப் பகைமை பாராட்டிப் போய்விட்ட சிலரைக் குறித்துத் தம் உயிர்த்தோழரொருவர், 'பற்றற்ற கண்ணும் பகைமை பாராட்டுதல், சுற்றத்தார் கண்ணேயுள' என்று தம்மருகே வந்து குறட்பாவை மாற்றிப் பாடியதாகவும், உடனே தாம் குறுக்கிட்டு அவ்வுயிர்த் தோழர்க்குத் தம்மிடமுள்ள பழைமையுணர்வை வைத்தே,

பற்றற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள (521)

என்று குறளின் வடிவத்தை உரைத்ததாகவும் விளக்குவர் (பக்.267-268). அதேபோல், 1982-ஆம் ஆண்டு பெப்ருவரித்திங்கள் 15-ஆம் நாள் தாம் தலைமையேற்று, மதுரையிலிருந்து திருச்செந்தூர்க்கு, 'நீதிகேட்கும் நெடிய பயணம்' மேற்கொண்டு, அசையாத ஊக்கத்தோடே இடையூறுகளுக்கெல்லாம் இடையூறுகொடுத்துக் கழகப் பேரணியை மிகப் பேரளவில் நடத்திச் சென்றதை,

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை (594)

மடுத்தவாய் எல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து (624)

என்ற இருகுறளோவியத்திற்கு ஏற்ற ஒருவண்ணமாக்குவர் (பக்.284-285).

நிகழ்ச்சிப்புனைவுகள்

பல குறட்பாக்களுக்குப் பொருத்தமாகப் பின்னணிப்புனைவுகளைத் தீட்டியுள்ள குறளோவியக் கலைஞரின் திறனையும் இங்கே சிறப்பாக எடுத்துக் காட்டலாம்.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர் (393)

என்ற குறளுக்கு இளங்கவிஞரொருவர் தமக்கு நண்பர் பார்த்துக் கூறிய மணப்பெண்ணைத் தாமும் பார்த்து, அவளது கண்ணழகில் மிகவும் ஈடுபட்டுக், 'கண்ணென்றால் இதுதான் கண்' என மகிழ்ந்து, கடைசியில் தாமெழுதிய கவிதையொன்றை அவளிடம் காட்டிப் படிக்கச் சொன்னபோது அவள் படிப்பறிவில்லாதவளென்பது வெளிப்படத் தமது மகிழ்ச்சியை யெல்லாம் மாய்த்தொழித்து, 'இவள் முகத்திலிருப்பது கண்ணல்ல, புண்' என்று கூறிவிட்டு, அவளையும் மணக்க மறுத்து வேகமாக வெளியேறுவதை நன்கு புனைந்துள்ளார் (பக்.70-71).

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்; அல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென் (301)

எனவரும் குறளுக்குப் போர்வீரனொருவன் தன் சினம் செல்லத்தக்க சிறுவனான தம்பியிடமும் எளியளான தாயிடமும் சினத்தைக் காவாது செலுத்திப் பின் தன்னைக் காலால் உதைத்துக் காரியுமிழ்ந்த படைத்தலைவனிடம் தன்சினம் செல்லாமையால் பொறுத்திருந்ததைப் பொறுமையன்றெனப் புனைந்து கண்டிப்பார் (பக். 81-82).

தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும் (510)

என்பதற்குக் கடல்கடந்துபோய் வாணிகம் செய்து மிக்க பொருளோடே மீண்டுவரும் நண்பரிருவருள் ஒருவன் வழியிடைப்பட்ட புதியோனைத் தேராதே தெளிந்து, அவன் பொய்ம்மொழியால் நீண்டநாள் நம்பிருந்த நண்பனை ஐயுற்று விலக்கியிருந்தபோது, அப்புதியோனிடம் பொருளையும் பறிகொடுத்துத் தானும் அவனுடைய வாளுக்கு இரையானதைப் புனைவார் (பக். 96-98).

இந்தப் புனைவுகளெல்லாம் குறளோவியத்திற்குக் கலைஞர் தீட்டிய புத்தம்புது வண்ணங்களென்பதைச் சத்தமிட்டுச் சொல்லலாம்.

பழைய கதைகளைப் புதுக்கித் தீட்டுதல்

புதிய நிகழ்ச்சிகளைப் புனைந்து கூறுவதோடு பல குறளோவியங்களுக்குப் பழைய கதைகள் வழக்கிலுள்ளவற்றையே எடுத்து அவற்றின் பழைமைக்குப் புதுமெருகூட்டித் தீட்டியுள்ளார் கலைஞர்.

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல் (664)

என்னும் குறட்பாவிற்கு, 'மலையைத் தலையிலே தூக்கிக் கொண்டு நாடு முழுதும் உலாவருவேன்; வானத்தை வில்லாக வளைப்பேன்; மணலைக் கயிறாகத் திரிப்பேன்' என்றெல்லாம் வாய்வெட்டு வெட்டிய இளைஞனொருவன் தன்நெடுமொழிகளால் ஒரு நாட்டு மன்னனையும் மக்களையும் மயக்கி அரண்மனையிலே மூன்று மாதங்கள் சிறப்பு விருந்தினனாயிருந்து ஊட்டமிக்க உணவுகளையுண்டு உடல் வளர்த்து முடிவிலே அம்மன்னனும் மக்களும் அவனையழைத்து மலையைத்தூக்கி நடக்கச் சொன்னபோது, 'எல்லோரும் சேர்ந்து மலையையெடுத்து என் தலையில் வையுங்கள்; நான் நடக்கிறேன்' என்று அந்நெடு மொழியாளன் மாற்றிப்பேசியதாக வழக்கிலுள்ள கதையைப் புதுக்கிக்காட்டி, அக்கதையின் முடிவிலே அந்த ஏமாளி மன்னனும் அவனாட்டு மக்களும் திருக்குறள் படிக்காதவர்களென்பதை அறிந்தேதான் அவர்களையெல்லாம் எளிதில் ஏமாற்றத் துணிந்ததாக அவ்விளைஞன் கூற்றிலேயே சொல்லவைக்கிறார் கலைஞர் (பக்.20-22).

நண்பர்களிருவர் காட்டுவழி நடந்த போது கரடியொன்று எதிர்ப்படக் கண்ட நிலையில் அவர்களுள் மரமேறத்தெரிந்த ஒருவன் தெரியாத மற்றொருவனையும் காப்பாற்றக்கருதாமல் தான்மட்டும் தப்பிப்பிழைத்தால் போதுமென மரத்திலேறிக்கொண்டது மட்டுமின்றி, அந்த மற்றவன் அங்கேயிருந்தால் அவனைக் காணும் கரடி அடுத்துத் தன்னையும் கண்டுகொள்ளுமென்று அவனை அப்பாலே போய் கரடிக்கிரையாகுமாறு கத்தியபோது, கரடி நெருங்குவது கண்டு கீழிருந்தோன் மூச்சை அடக்கிக்கிடந்தானாக, அவன் முகத்தருகே முகம் வைத்துப்பார்த்த கரடி பிணமெனக் கருதிப்போய்விட்டது என்ற அளவில் சிறுவர்க்கு வழங்கும் கதையைக் கலைஞர் சிறிதே நீட்டி, கரடி போனபின் எழுந்து நின்றவனிடத்தே மரத்திலிருந்து இறங்கிவந்தவன், 'உன் காதில் அந்தக்கரடி ஏதோ சொல்லிற்றே, என்ன சொன்னது ?' எனக்கேட்டானெனவும், அதற்கு மறுமொழியாக அங்கே நின்றவன்,

'கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்' (796)

என்ற குறளையும் அதன் பொருளையும் அக்கரடி கூறியது' எனக் குறித்தானென்றும் அதைக்கேட்டவன் வெட்கித் தலைகுனிந்தானென்றும் வரைகின்றார் (பக்.239-240).

இப்படிப் பழைய கதைகள் பலவும் கலைஞரின் புதுமெருகோடே பொலிகின்றன.

புதுமை விளக்கம்

குறட்பாக்கள் சிலவற்றிற்கு அமைந்த பழைய விளக்கம் பொருந்தாவெனத் தாம் கருதுமிடங்களில் கலைஞர் புதுமை விளக்கம் காட்டிப்புனைவார்.

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை (37)

என்னும் குறளுக்கு இவர் காட்டும் விளக்கம் புத்தம் புதியது. "அறவழியில் நடப்பவர்கள் பல்லக்கில் செல்பவனைப்போல் வாழ்க்கையில் வரும் இன்ப

துன்பங்கள் இரண்டையும் எளிதாகக் கருதிப்பயணத்தைத் தொடர்வர். தீய நெறிக்குத் தங்களை ஆட்படுத்திக் கொண்டவர்களோ பல்லக்கைத் தூக்குகிறவர்களைப்போல் இன்பத்திலும் அமைதிகொள்ளாமல் அதேசமயம் துன்பத்தையும் தாங்கிக்கொள்ளும் மனப்பக்குவமின்றி வாழ்வையே பெரும் சுமையாகக் கருதுவர். இவ்வாறு அறச்செயலின் பயனுக்குப் பல்லக்கில் செல்பவனையும் தூக்குபவனையும் உவமைகாட்டினேனேயல்லாமல், அவரவர்களின் பாவபுண்ணியங்களுக்கேற்பப் பல்லக்குச் சுமப்போராகவும் பல்லக்கில் செல்வோராகவும் ஆகிறார்கள் என்று நான் குறிப்பிடவே இல்லை'' எனத் திருவள்ளுவரையே தோற்றுவித்து விளக்கம் கூறவைக்கிறார் கலைஞர் (பக்.25-26). "தன் பின்புலக் கட்டுமானத்தில் திருவள்ளுவரையும் ஈடுபடுத்திப் பணிகொண்டிருப்பது இந்நூலின் மற்றொரு தனிச்சிறப்பு" என்ற மூதறிஞர் வ.சுப.மா.வின் மதிப்புரையை இங்கே நினையலாம்.

அடுத்துக் காமத்துப்பாலில் வருகின்றதோர் குறளையும் அதன் சூழலையும் கலைஞர் புதுமைசெய்துள்ள பொலிவைக்காணலாம். அகத்திணையில் பிரிவாற்றாமை என்பது களவுக்காதலையடுத்து மணம்புரிந்துவாழும் இல்லறமாகிய கற்புக்காதலில், காதலன் பொருள் தேடுதல், போர்புரிதல் போலும் காரணங்களால் காதலியைப் பிரிந்து போன நிலையில் அவளது ஆற்றாமை காட்டுவதோர் அருந்துறையாகும். முந்தைய காதல் வாழ்வில் காதலன் காதலி பெரும்பொழுது பிரிந்தேயிருத்தலால் கூடவேண்டுமென்ற அவர்களின் வேட்கையை விவரித்தலின்றிச் சிறப்பாகப் பிரிவாற்றாமையென்று அங்கே பேசப்படுதலில்லை. இது பண்டைத்தமிழர் அகத்திணை மரபு. இந்த மரபு வழியே திருக்குறள் காமத்துப்பாலிலும் 'பிரிவாற்றாமை' என்ற அதிகாரத்தைக் கற்பியலில் அமைத்துள்ளார் வள்ளுவர். ஆயின், நம் கலைஞர் அந்தப் பிரிவாற்றாமை அதிகாரத்தில் அமைந்த,

அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வோர் பலர் (1160)

என்ற குறளுக்குக் களவியல் வண்ணம் தீட்டிக்காட்டுவார். வேற்றூரிலிருந்து திங்களுக்கொருமுறை இருமுறை உறவினர் வீட்டிற்கு வந்து போகும் பெண்ணொருத்தி அடுத்த வீட்டு இளைஞனைக் காதலித்துத் தழுவிப்பிரியும் தவிப்பினை இக்குறளோவியத்திற் காண்கிறோம் (பக்.415-416). மரபு மாற்றமாயினும் கற்பியற் பிரிவாற்றாமையைக் களவியலிலும் கலைஞரின் கைவண்ணத்திற் காணலாமன்றோ?

பெயர்களில் புதுவண்ணம்

புதிய நிகழ்ச்சிகளைப் புனைந்து குறளோவியத்திற்குப் புதுவண்ணம் தீட்டுகின்ற கலைஞர், அந்நிகழ்ச்சிகளில் வருவோர் பெயர்களையும் புதுமையுற வைத்துள்ளார். நண்பர்களிருவரின் பண்புகளுக்கேற்ப அவர்கட்கு நல்லான், வல்லான் என்று பெயரிட்டுப் பேசுவார் (பக்.239-240). காதலர்களுக்கு அழகன்-அழகி (ப.536), கரிகாலன்-காவிரி (ப.549) என்பனபோல் பொருந்திய பெயர்களையிடுவார். தூய நெஞ்சுடைய

தோழிக்குத் தும்பை யென்றும் மயிலின் சாயலுடைய மங்கைக்குத் தோகையென்றும் (ப.478) காரணப்பெயரிட்டுக்காட்டுவார். தமிழ்மொழி காத்திடும் போராட்டத்தில் ஈடுபட்டு ஒரு கையையிழந்து செம்மலான தியாகத் தமிழனை 'அரிமா' (ப.525) என்பார். 'பழிக்கஞ்சாமல் பொருள்சேர்க்கும் உன்னைப் பாடமாட்டேன்' என்று மன்னனிடமே மறுத்துப்பேசும் தருக்குமிக்க தமிழ்க்கவிஞனைத் தன்மானச்சிங்கம் (ப.569) என்று தகைமைப்படுத்துவார்.

இவ்வாறெல்லாம் பொருந்திய பெயர்களால் புதுவண்ணம் தீட்டும் குறளோவியர், சில புனைவுகளிற் பேசப்படும் மாந்தர் பண்புக்கு மாறான பெயர்களையுமிட்டு நகைப்பூட்டுவார். எடுத்துக்காட்டாக, 'கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு, புண்ணுடையர் கல்லாதவர்' (393) என்ற குறளோவியத்தில் காட்டப்படும் கல்விக்கண் இல்லாத கவினழகுக் கயல்விழியென்று பெயரிட்டு அக்கண்களின் புறத்தழகுப் புன்மையை நகைப் போடே புலப்படுத்துவதைக் காணலாம் (ப.71).

முடிவுரை

கலைஞர் தீட்டிய கவின்மிகு குறளோவியத்தின் புத்தம்புது வண்ணங்களாக இங்கே எடுத்துக்காட்டிய இவற்றையேயன்றி, இன்றும் பலவற்றையும் பல வகைகளிலும் பார்க்கலாம்.

11 "குறளோவியத்தில் கலைஞரின் மொழி ஆளுமைத் திறன்"

- முனைவர். சண்முக. செல்வகணபதி

தமிழ், கால வகையாலும், இலக்கிய வகையாலும், இலக்கியம் கண்ட பாவலர் வகையாலும் வகைப்படுத்தப்படுவதுண்டு. தொன்மையும் தொடர்ச்சியுமுடைய இத்தமிழ் மொழி காலந்தோறும் புதுப்புது மலர்களைக் கண்டு வருவதோடு காலந்தோறும் புதுப்புது பொலிவும் பெற்றுவருவதால் தொன்மையுடைய இம்மொழியைக் கன்னித்தமிழ் என்கிறோம். சங்கத்தமிழ், வள்ளுவர் தமிழ், இளங்கோ தமிழ், தெய்வத்தமிழ், கம்பன் தமிழ், பாரதி பாரதிதாசன் தமிழ், அண்ணாவின் தமிழ் என்று தமிழ்மொழி, படைப்பாளர்களால் பெயரிடப்பட்டு அழைக்கப்படுவது போல, கலைஞர் தமிழ் என்ற ஒன்று நிலவிவருவதனை அனைவரும் உணர்வர். பேராசிரியர் க.அன்பழகன் கூறுவது போல 'கலைஞரின் கதைகள், நெடுங்கதைகள், குறள் ஓவியங்கள், நாடகங்கள் அனைத்தும் ஒரு லட்சியத் தன்மையிலிருந்து பிறப்பன. இந்த நூற்றாண்டில் தமிழுக்குத் தனித்தன்மையை வழங்கியவர் கலைஞர். சுருக்கமாகக் கூறின் இது கலைஞர் தமிழ்க்காலம் எனலாம். தமிழ்மொழி கலைஞரின் ஆளுமையால் சீரும் சிறப்பும், வீறும் பொலிவும், வலிமையும் வாழ்மையும், அழகும் ஆற்றலும் பெற்று வழித்தோன்றல்கள் பலரைத் தோற்றுவித்தும் ஆய்வாளர்களின் ஆய்வுப் பொருளாகியும், வருவதனைக் காணலாம்.

கலைஞர் தமிழ்

பள்ளிப்பருவம் முதல் இன்றளவும் தொய்வில்லாமல் ஏற்றமும் ஆற்றலும் கொண்டதாக இவரின் தமிழ் விளங்குகிறது. இவரது தமிழ், பருவத்திற்கேற்ற பரிமாண வளர்ச்சியோடு விளங்குகிறது. இவர்தம் இலக்கிய ஆற்றல், சொல்லாட்சித் திறன், சொற்பொழிவுப் பாங்கு, படைப்புத்திறன், மேடைப்பேச்சு, எழுத்துக்கலை, திரைக்கதை உரையாடல் அமைப்பு, சட்டமன்றப் பொழிவு, பத்திரிக்கையாளர்களுக்குத் தரும் பேட்டி, கவியரங்க மேடை, மடல் இலக்கிய வாயிலாக உடன் பிறப்புக்களுக்குத் தரும் செய்தி, நாவல், சிறுகதை, நாடக உலகப்படைப்புக்கள் போன்ற பல்வேறு துறைகளில் தமக்கென ஒரு தனிப் பாதையைக் கண்டுவரும் பல்கலை வித்தகராக விளங்கி வருகிறார். டாக்டர்.வ.சுப. மாணிக்கனார் குறளோவியத்தில் குறிப்பிடுவதனை ஈண்டு நினைவு கூர்தல் நலம். "இந்நூல், எழுதியவர் தமிழ்ப்பற்று, தமிழறிவு, தமிழுணர்வு மிக்கவர். சங்க இலக்கியப் பயில்வினர். 'தமிழ்நாகரிகமே மனித நாகரிகம்' என்ற கடைப்பிடியினர். புத்திலக்கியம் படைக்கும் கற்பனைக் கவிஞர், எழுத்திலும் சொல்லிலும் தொடை வளமிக்க உரைநடைக் கவிதையர், நாடகப் பார்வையர், உரைபல கற்றவர். நாட்டின் ஆட்சியில் உயர்பதவி தாங்கியவர். உலக

அரசியல் கண்ணோட்டத்தார். பல்துறை மக்களோடு அணுகிப் பழகிக் காலவுலகியல் கைவரப் பெற்றவர். வாழ்வுப் பாசறையில் மலையும் கடலும் கண்டவர். தோலா நாவினர், தொய்யா நெஞ்சினர், சாதிசமயச் சழக்கிற்புகாப் பகுத்தறிவினர். சிந்தனைச் செயலினர். திருக்குறள் சிந்தையர். தமிழினத் தலைவர். எழுத்துக்கலை, செந்நாக்கலை, நாடகக் கலை, கவிதைக் கலை, அரசியற்கலை, எழிற்கலை என்றாங்கு பல்கலைகளிலும் நெஞ்சு அறிவு செயல் தோய்ந்த கலைஞர் இவர்"[2] என்று தமிழாய்ந்த பேரறிஞரின் திறனாய்ந்த இக்கூற்று இவரின் பல்கலைத் திறனுக்குச் சாட்சியம் உரைக்கின்றது.

மொழி ஆளுமைத் திறன்

கருவிக்கு அழகு அதனைப் பயன்படுத்தும் திறனால் விளங்கும். மொழிக்கு அழகு அதனை ஆளும் திறனால் அறியப்படும். இதனை இதனால் இவ்வாறு சொல்லின் கருத்துச் சிறப்புறும் என்பதனை அறிந்து அதனை அதனால் அவ்வாறு சொல்லும் நிலை, மொழி ஆளுமைத்திறன் எனலாம். சொல்லின் சூட்சமங்களை அறிந்து அதனைச் செம்மையாகப் பயன்படுத்தும் நிலை எல்லோர்க்கும் கிடைத்து விடுவதில்லை. ஆனால் கலைஞருக்கு இது மிக எளிதில் வசப்படுகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறுவது போல் "என் தம்பி கருணாநிதியின் தமிழ் ஆளும் திறன், பாத்திரங்களைப் படைக்கும் உயர் தனி ஆற்றல் ஊரும் உலகமும் அறிந்தது. அறிந்து மகிழ்ந்தது. மகிழ்ந்து பாராட்டியது"[3] கனல் தெறிக்கும் வசனங்களும், அடுக்கு மொழி நடையும், அழுத்தம் திருத்தமான சொல்லமைப்பும், நளினமாக இருபொருள்பட சொல்லைக் கையாளும் திறனும், கற்கண்டு போலமையும் கவிதை நடையும், உரைநடையைக் கவிதையாக எடுத்துரைக்கும் பாங்கும், எதுகைமோனை இயைபுத் தொடைகள் மிளிரும் உரைநடைப்பாங்கும், விண்ணில் எழுந்து வட்டமிட்டுக்கொண்டு மேன்மேலே பறந்து செல்லும் பருந்தினைப் போன்று கருத்தை ஆலாபனை செய்யும் நிலையும், இலக்கியச் சொல்லாட்சியும், இலக்கியங்களைச் சிறுகதையாக்கித் தரும் படைப்பு முறையும், அரசியல் வரலாறு, நடப்பியல்களைச் சிறப்பாக எடுத்துரைக்கும் திறனும்; எளிமை, இனிமை, தெளிவுடன் பாமரருக்கும் புரியும்படி கூறும் ஆற்றலும், பண்டிதர்களை வியக்க வைக்கும் நுட்பமும் இன்னோரன்ன தகவுகள் இவரின் தமிழ் ஆளுமைத் திறனால் சிறப்புப் பெறுகின்றன. அரசியல் மற்றும் பிற காரணங்களால் கலைஞரின் கருத்துக்களில் சிலருக்கோ பலருக்கோ கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால் அவரது கருத்து வெளியீட்டு முறையினை அவரோடு கருத்து வேறுபாடு கொண்டவர்கூட மதிக்காமல் இருக்கமுடியாது''[4] என்னும் அளவிற்குக் கருத்து வெளியீட்டுமுறை திறமையானது; வளமானது என்ற கூற்று இதனை மெய்ப்பிக்கும்.

குறளோவியத்தில் மொழி ஆளுமைத் திறன்

"திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனினூஉங் கில்" - **குறள் 644**

என்ற குறளுக்கு விளக்கமாகத் திருக்குறளே அமைந்துள்ளது. பாவில் வெண்பாவையும், வெண்பாவில் குறள் வெண்பாவையும், கருத்து முதிர்ச்சியும், கருத்துரைக்கும் பாங்கும், கலையழகு குன்றாவகையில் நீதியைத் தரும் நிலையும், உவமை, உருவகம் முதலான அணிநயங்களை அள்ளித்தரும் பாங்கும், உடன்பாடு எதிர்மறை, செயற்குரியது, செய்யத்தகாதது, தீயது நன்மையானது, தலையாயது சிறந்தது, வினாவிடை போன்ற நிலைகளில் ஒன்றே முக்கால் அடிகளில் கருத்துரைக்கும் திருக்குறள் மிகவும் சிறப்புடையது. இத்தகு மொழி ஆளுமைத் திறனுக்கு ஏற்றதோர் இலக்கியமாகத் திகழும் திருக்குறளை மொழி ஆளுமை கொண்ட கலைஞர் வள்ளுவருக்குக் கோட்டம் அமைத்ததோடு அல்லாமல், உரைதந்து, குறளோவியமாக்கிக் காட்டியுள்ளார். இவரின் மொழி ஆளுமைத்திறனால் பண்டிதர்கட்குரியதாகத் திகழ்ந்த திருக்குறள் பாமரருக்குரிய சொத்தாகவும் மாறியது. இது குறித்துத் திருக்குறளில் நுண்மாண் நுழைபுலம் கண்ட மகாவித்வான் தண்டபாணி தேசிகர் கூறும்பொழுது "திருக்குறள் பண்டிதரின் பாவையாக நெடுநாள் இருந்து வந்தது. என்னுடைய பன்னிரண்டாவது ஆண்டிலேயே நான் பரிமேலழகர் உரையோடு கூட மனப்பாடம் செய்து ஒப்பித்தேன். இப்படி மனப்பாடம் செய்து ஒப்பித்த ஒன்றைப் பிறகு எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என்று சொல்ல அப்பொழுது ஆள் இல்லை. இப்பொழுது நமது கலைஞர் பெருமான் அவர்கள் தன்னுடைய கலை அழகினாலே காட்சிப்பொருளாகக் கருத்தில் பதிவித்தார்கள். அதனை அவ்வப்போது நான் படித்து மகிழ்ந்திருக்கிறேன். இன்று இளைஞர் முதல் என்னைப் போன்ற கிழவர் வரை எல்லோர்க்கும் பயன்படக்கூடிய முறையில் குறளோவியம் அமைந்துவிட்டது"[5] என்கிறார்.

திருக்குறள் முழுமைக்கும் உரைகண்ட கலைஞர், குறளைக் காவியமாக்கும் நிலையில் ஓவியமாகப் படைத்துள்ளார். குறளோவியத்தில் 354 குறட்பாக்கள் ஓவியமாக்கப்பட்டுள்ளன. அறத்துப்பாலில் 76, பொருட்பாலில் 137, காமத்துப்பாலில் 141, ஆக குறட்பாக்கள் 300 குறளோவியங்களாக ஆக்கப்பட்டுள்ளன. 1956 ஆம் ஆண்டில் எழுதத் தொடங்கி 30 ஆண்டுகள் உழைப்பால் முரசொலி, தினமணி கதிர், குங்குமம் முதலான இதழ்களில் வெளிவந்த இத்தொடர் 1985 இல் நூல் வடிவம் பெற்றது. இதன் படைப்புப்பற்றி இந்நூல் ஆசிரியர் கூறும்பொழுது, "ஒன்றுக்கோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குறட்பாக்களுக்கோ பதவுரை, விரிவுரை என்று எழுதிக் கொண்டிராமல் பலரும் விரும்பிப் படிக்கத்தக்க வண்ணம் அவர்களைக் கவர்ந்திழுத்துக் கருத்துக்களை நெஞ்சில் பதிய வைத்திட வேண்டுமென்ற ஆசைத்துடிப்பு எனக்கு முப்பது ஆண்டு காலமாகவே உண்டு. முதல் முயற்சியை 1956 ஆம் ஆண்டு தொடங்கினேன். முரசொலி வார இதழில் குறளோவியம் என்ற தலைப்பில் தொடர்ந்து எழுதிடத் துணிந்தேன்"[6] என்கிறார். இவர் கூறுகின்றபடி திருக்குறளைப் பலரும் விரும்பிப் படிக்கும் நிலைக்குக் கொண்டு வந்தமை பெரும்வெற்றியாகும். இதனை அடைந்ததில் இவரின் மொழி ஆளுமைத் திறன் முக்கிய இடம் பெறுகிறது.

குறளோவியத்தில் அமைந்துள்ள மொழி ஆளுமைத் திறனை மூன்று நிலைகளில் காணலாம்.

1. அமைப்பியல் நோக்கு
2. அழகியல் நோக்கு
3. சொல்லியல் நோக்கு

அமைப்பியல் நோக்கு

முப்பால் அமைப்பு

இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார்" (650)

கற்றதைப் பிறர் உணர்ந்து கொள்ளும் வகையில் விளக்கிச் சொல்லுவது ஒரு தனிக்கலை. பொருளைத் தேர்வதும், தேர்ந்த பொருளை நிரல்பட வைப்பதும், நிரல்பட வைப்பதனைப் பொருத்தமுற வைப்பதும், கருத்துக்கான படிமுறை வளர்ச்சி நோக்கில் சொல்வதும் சிறப்புடையதாக அமையும். திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்ற முப்பால் அமைப்பாலும், அதிகார முறைவைப்பாலும், குறள் வைப்புமுறையில் வரும் அமைதியாலும் சிறப்புறும். இதற்கு நூலின் 354 குறள்களை எடுத்து அழகு சேர்ப்பது போல் அறம் பொருள் காமத்துப்பால்களில் வரும் குறள்பாக்களைப் பலவண்ணப்பூக்கள், தொடுக்கும் முறையால் கவின்மிகு மாலையாவது போல் மாறிமாறித் தொகுத்துள்ளார்.

குறளோவியம்	1. இல்வாழ்க்கை - அறத்துப்பால்
"	2. பொழுதுகண்டிரங்கல் - காமத்துப்பால்
"	3. மக்கட்பேறு - அறத்துப்பால்
"	4. குறிப்பறிதல் - காமத்துப்பால்
"	5. வினைத்திட்பம் - பொருட்பால்
"	6. தனிப்படர்மிகுதி - காமத்துப்பால்
"	7. அறன் வலியுறுத்தல் - அறத்துப்பால்
"	8. இடுக்கண் அழியாமை - பொருட்பால்
"	9. நலம்புனைந் துரைத்தல் - காமத்துப்பால்
"	10. உட்பகை - பொருட்பால்

இவ்வாறு அமைந்துள்ள திறன் ஆழ்ந்து சிந்திப்பதற்குரிய வொன்றாகும். திருவள்ளுவர், 'அறத்துப்பாலில் ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோராகவும், பொருட்பாலில் மதிநுட்பம் நூலோடு உடைய மூதறிஞராகவும், காமத்துப்பாலில் கலையுள்ளம் கொண்ட கலைஞராகவும் திகழ்கிறார்.[7] வள்ளுவரின் கலையுள்ளம் காமத்துப்பாலைக் கலைக்கோயிலாகப் படைத்து மகிழ்கிறது. இதனை நன்குணர்ந்த கலைஞர், 354 குறட்பாக்களில் 141 பாக்களைக் காமத்துப்பால் பற்றியனவாக அமைத்து இடைஇடையே காமத்துப்பாலின் கலைச்சுவையைக் கலந்து வாசகரின் ஈர்ப்பு நிலையைக் கருத்தில் கொண்டு குறளோவியங்களைத் தந்துள்ளார்.

2. குறள் ஓவிய அமைப்பு

திருக்குறள் அதிகார முறையில், அதிகாரம் தோறும் பத்துப்பாக்களைக் கொண்டு அமைந்துள்ளது. அதிகாரத்துள் அமையும்

குறள்வைப்பு நிலையைப் பரிமேலழகர் முதலான உரையாசிரியர் விளக்கியுரைப்பார். கலைஞர் குறளோவியத்தில் ஓர் அதிகாரத்தில் உள்ள பத்து குறட்பாக்களையும் எடுத்துக் கொள்ளாமல் சில அதிகாரங்களில் ஒரு பாடலையும், சிலவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட பாடல்களையும், சிலவற்றில் ஒரிரு அதிகாரங்களில் காணப்படும் பாடல்களை ஒன்றிணைத்தும் தந்துள்ளார். இவ்வாறு கலைஞர் அமைத்துக் காட்டியுள்ள முறையில் ஓர் அழகு உள்ளது. இந்நிலையில் **354** குறட்பாக்கள் **300** குறளோவியங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

1. வையத்துள் வாழ்வாங்கு - **(50)** . இல்வாழ்க்கை
2. அ. காலை அரும்பி - **(1227)** பொழுது கண்டு இரங்கல்
   ஆ. அழல்போலும் மாலைக்கு- **(1228)** பொழுது கண்டு இரங்கல்
3. குழல் இனிது யாழ் இனிது - **(66)** - மக்கட்பேறு

வீரனையே சுழற்றும் பலமுள்ள யானை, சேற்றிலே சிக்கினால் நரியிடம் தோல்வியுறும் (ப.136) பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் "சாக்கரடீசு காட்சியும் (ப.147) தம் மக்கள் சிறுகை அளாவிய கூழ் அமிழ்தினும் இனியவாகும் காட்சியும் (ப.218) இந்நூலிலுள்ள ஒவியங்கள் கருத்து விளக்கத்திற்குப் பெரிதும் அரண் செய்கின்றன.

கதையும் கருத்தும்

குறள் கருத்தை விளக்கும் முகத்தான் கதையாக்கிக் கூறும் திறன் பெரும்பாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. போர்வந்த நேரத்தில் களத்தில் தள்ளிவிட்டு ஓடும் குதிரையைப் போன்றவர்களின் நட்பைவிட ஒரு நட்பும் இல்லாமல் தனித்திருப்பதே சிறந்தது **(814)** என்ற அறிவுரைக்காக வில்லவன் என்ற வீரன் கதை கூறப்பட்டுள்ளது.

2. கல்வி இல்லாதவர்க்கு முகத்திலிருப்பது கண்ணல்ல புண் **(393)** என்ற கருத்திற்கு, கவிஞர் பெண்பார்க்க விரும்பிச் சென்று கல்வியில்லாத பெண்ணை ஏற்க மறுத்த நிலை கூறப்பட்டுள்ளது.

3. "அற்றேமென்று அல்லற் படுபவோ பெற்றேமென்று
ஓம்புதல் தேற்றா தவர்" **(626)**

இக்குறளுக்கு இளங்கோவடிகள் துறவறம் ஏற்ற செய்தியைக் கூறுகிறார்.

4. "பொய்மையும் வாய்மையிடத்த" **(292)** என்று தொடரும் குறளுக்கு வேடுவன் அம்பிற்குப் பிழைத்த மானைக் காப்பாற்றிய கதையையும் கூறுகிறார்.

5. செயத்தக்க அல்ல செயக்கெடும், செயத்தக்க செய்யாமையானும் கெடும் **(466)** என்ற குறளுக்கு, அழகர் குறவாழ் செல்வந்தனின் கொடுமையையும், இறந்தபின் அவன் வேண்டுகோளை நிறைவேற்றியதால் விளைந்த கேட்டையும் கூறியுள்ளார். கதையின் மூலம் கருத்தை விளக்கும் பொழுது புரிந்து கொள்ளும் திறன் மேம்படும். இக்கதைகள், நடைமுறை வாழ்வோடு ஒட்டியனவாகவும், அறிந்த இலக்கியக் கதைகளாகவும் அமைந்துள்ளன.

குறள் அறிமுகம்

கதையைச் சொல்லி, அக்கதையின் சாரமான கருத்தைச் சொல்லி, இக் கருத்துக்களைத் தாங்கி நிற்கும் குறளை அறிமுகம் செய்கிறார். கல்வி உளவியலில், கற்பித்தல் மேம்பாடு அடைய, அறிந்ததிலிருந்து அறியாத ஒன்றிற்குச் செல்ல வேண்டும்; எளிமையிலிருந்து அரிய ஒன்றிற்குச் செல்லவேண்டும் என்பர். இதனால் புரிந்துகொள்ளும் திறன் மேம்படும் என்பர். இந்நிலையில் குறள் அறிமுகம் அமைந்துள்ளது.

1. "தம்பி! இதோ இந்த நெற்கதிரும், மாங்கனியும், மலர்க் கொத்தும் எந்த நிலத்தில் விளைந்தவை என்று இவைகளைப் பார்த்தே கண்டுபிடிக்க முடிகிறதல்லவா? இதைப்போலவே ஒருவன் எப்படிப்பட்ட குடியில் உதித்தான் என்பதை அவனது வாய்ச்சொற்கள் வாயிலாகவே கண்டுபிடித்து விடமுடியும்"

கிழவனின் விளக்கத்திற்கு இதோ இந்தக் குறள்
'நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்" (959)

2. இப்படித் தோன்றிடக் கூடும் என்பதை வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே எழுதி வைத்துள்ளார். (ப. 494)

3. இதைத்தான் வள்ளுவ அறிஞன், துணிவுடன் துன்பத்தைச் கடந்தால் பணிவுடன் இன்பம் வந்து கைக்கட்டி நிற்குமென்றான் (ப.490)

4. 'குறளடி - குறள்' எனக் கூறியவாறு அந்த இடத்தைவிட்டுக் குதித்தோடினாள் தோழி (ப.483)

5. திருவள்ளுவரே நேரில் கூறுவது போல் 'இதோ சொல்கிறேன் கேள் அந்தக் குறளை' (ப.469)

6. வள்ளுவர் கூறியிருக்கிறார் என்ற நிலையில் (ப.461)

7. உலக நிலைகளைக் கண்டு அதனைச் சாரமாக்கித் தருவது(ப.448) "வள்ளுவரும் அவையஞ்சும் அந்த மனிதனைப் பார்த்துச் சிரிக்கிறார். அவனை யாருடன் ஒப்பிடுவது எனச் சிந்திக்கிறார். பகையஞ்சும் அந்தப்பேடி அவர் நினைவுக்கு வரவே; குறளை வடித்துக் கொடுக்கிறார்". இதுபோன்றே பல நிலைகளில் குறள் அறிமுகமாகிறது.

எடுத்துக்காட்டுகள் தந்து விளக்கல்

கருத்தைத் தெளிவுபடுத்த பல்வேறு எடுத்துக் காட்டுக்களைத் தருகிறார். இவ்வெடுத்துக்காட்டுகள் நடைமுறையில் பலரும் அறிந்தனவாக உள்ளன. இதனால் கருத்து எளிதில் புரிந்து கொள்ளும் நிலையை அடைகிறது.

1. "இருநோக்கு இவளுண்கண் உள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து" 1091

என்ற குறளுக்கு விளக்கம் தரும் முகத்தான் 'வைத்தியர் ஊசி குத்துகிறார். உடலில் வலி ஏற்படுகிறது. ஆனால் அந்த ஊசி வழியே உடலுக்குள் செல்கிற மருந்து, நோய் தீர்க்கப் பெரிதும் உதவுகிறது. வைத்தியரிடம்

வேதனை தரும் ஊசியும் இருக்கிறது, நோய் வேதனையை நீக்கும் மருந்தும் அதனுள் இருக்கிறது" (ப.18) என்பதனை எடுத்துக்காட்டுகிறார்.

2. "தொழுத கையுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் நீரும் அனைத்து" *(828)*

காந்தியடிகளின் முடிவு இந்தக் குறளை மெய்ப்பிக்கும் எடுத்துக்காட்டாகும். (வ.102) என்கிறார்.

3. "சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை" *(230)*

சாவதைவிடத் துன்பமானது வேறொன்றுமில்லை என மொழிந்த வள்ளுவர், வறியவர்க்கு எதுவும் வழங்கிட முடியாத நிலை வந்துவிட்டபோது அந்தச் சாதலும் இனியதே என்ற அருங்கருத்தினைப் பொழிந்திடுகிறார். இந்தக் குறளுக்குகேற்ற ஓவியமாகத்தான் குமணவள்ளலின் வாழ்வுக் காவியம் அமைந்திருக்கிறது. (ப.169)

4. "பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்" (580)

என்ற குறளுக்கு சாக்ரடீஸ் வாழ்க்கையை எடுத்துக்காட்டுகிறார்.

அழகியல்

தான் உணர்த்த விரும்பும் கருத்துக்களை ஒழுங்குபட அமைத்துத் தருதலோடு கற்பவர் உள்ளத்தைக் கவரும் வகையில் அழகுபடுத்திக் கூறுவது இயற்கையாகும். கற்பனை, அணிநலன் போன்ற கலை நலன்களால் கருத்து மெருகு கொடுக்கப்படும். திருவள்ளுவர், 'உடுக்கை இழந்தவன் கைபோல' (788) பீலிபெய் சாகாடும் அச்சிறும் (475) என உவமை முதலான அணிநலன்களால் குறளை அழகுபடுத்தியுள்ளார்.

கலைஞரின் குறளோவியம் அழகிற்கு அழகு செய்வதுபோல் அமைந்துள்ளது. கருத்தை விளக்க பரந்த சூழ்நிலையைப் பின்புலமாகக் கொள்கிறார். சங்கப் பாடலில் காணப்படும் உரிப்பொருளுக்கு முதல் கருப்பொருள்கள் பின்புலமாக அமைவது போல, குறள்களுக்கு விளக்கமாக வருணனைகள் அமைந்துள்ளன. இயற்கையாயினும், காதலாயினும், வீரமாயினும், அரசியலாயினும், கலையாயினும், கலைஞரின் எழுத்தாற்றலால் தனிச்சிறப்புப் பெறுகின்றன. வருணனையைத் தெளிவாக்கும் சொல்லமைப்பும், சொற்றொடர் அமைப்பும் கற்பனை வளத்தோடு வெளிப்படுகின்றன.

இயற்கை

"இருள் சூழ்ந்த நேரம். இயற்கைப் பெண் தன் ஒளிபொருந்திய முகத்தைத் திருப்பிக்கொண்டு, கரிய கூந்தலின் அழகைக் காட்சியாக்கி உயிரினங்களை மயங்கச் செய்தும், இன்பக் கூத்து ஆடச்செய்தும், சோர்ந்து போய் தூங்கச் செய்தும், இடையிடையே நட்சத்திரப் பற்கள் காட்டிச் சிரித்துக் கொண்டுமிருந்தாள்" (ப.113)

இயற்கையை வருணிக்கும் பொழுதும் கருத்தை அடுக்கி, ஒரேமாதிரியான எச்சங்களை அடுக்கி முற்றுக் கொடுக்கும் மொழித்திறனைப் பல இடங்களிலும் காணலாம்.

காதல்

காதல் வருணனையில் கலைஞரின் மொழி ஆளுமைத் திறன் தனிச்சிறப்பிற்குரியதொன்றாகும். தமிழ்க்காதல் எழுதிய டாக்டர்.வ.சுப. மாணிக்கனார் கூறும் கருத்து ஈண்டுச் சிந்திக்கற்பாலது கலைஞரின் குறளோவியத்தில் காதற்காமக்குறள்கள் கற்புக் காவியமாக உயர்கின்றன. . . . சங்க இலக்கியத் தோய்வுடைய தமிழ்ப் பெருமகனார் தொல்காப்பியம் வரையறுத்த நெறியில் நின்று, காதலோவியங்களைப் பொன்வண்ணத் தமிழ்நடையில் வரைந்துள்ளது கண்டு வியந்தேன். அன்றொழியும் ஐம்புல நுகர்ச்சியாகக் காட்டாமல், என்பும் இன்பும் அன்பும் கலந்த ஆராப்புணர்ச்சியாக ஒவ்வொரு குறட்கும் உள்ளழகு காட்டியிருப்பது எம்போன்ற புலவோர்க்கும் விருந்து படைப்பு"[3]. கடலின் ஆழ்ந்த ஒண்தீந்தமிழின் அகத்திறனைக் கண்ட அறிஞரின் கூற்றுக்குப் பிறகு பிறிதொரு கூற்றுத் தேவையில்லை.

"கண்ணைக் கவரும் இசையரங்கம். அந்த மன்றத்தில் மண்ணை ஆளும் மன்னவனும் மக்களும் வீற்றிருந்தனர். எண்ணையும் எழுத்தையும் தந்த தமிழ்மொழி இசைக்கோர் இலக்கணத்தையும் வழங்கி, விண்ணை எட்டும் புகழைப் பெற்றிருப்பதை எடுத்தியம்பும் ஏற்றமிகு இசைக்கலைவாணர் அரங்கிலமர்ந்து அமுத மழைபொழிந்து கொண்டிருந்தார். அருவியின் ஆலோலம், தென்றலின் தென்பாங்கு, குயிலின் தாலாட்டு, சிற்றாறு பாடுகிற சிந்தோ, செந்தமிழ் மகளிர் வீசி ஆடுகிற மலர்ப்பந்தோ, வியப்பும் வினாக்குறியும் ஒன்றையொன்று முந்தும் வண்ணம் அமைந்தது அந்த இசை நிகழ்ச்சி" (ப.109)

சொல்லமைப்பும், சொல்லொழுங்கும் இசை நிகழ்ச்சியைக் கண்முன் கொண்டு வருகின்றன. இவரின் வருணனைத் திறனில் வியப்பும், வினாக்குறியும் ஒன்றையொன்று முந்தும் வண்ணம் அமைந்துள்ளன.

அணிநலன்கள்

உரைக்க நினைக்கும் கருத்தைத் திறம்பட உரைக்க உவமை, உருவகம் முதலான அணிநலன்கள் துணைபுரிகின்றன. நீதிஉரைக்க வந்த திருவள்ளுவர் பல்வேறு அணிநலன்களால் கருத்தைத் தெளிவுபடுத்தியுள்ளார். கலைஞரும் குறளோவியத்தில் பல்வேறு அணிநலன்களைக் கையாண்டுள்ளார்.

அடடா சிட்டுக்குருவியின் பேச்சு, கிழவருக்குத் தினைமாவுப் பிட்டுப்போல் இனிக்கிறது (ப.42)

வேங்கை போல் எடுத்துவைத்த அடி (ப.54)

யானைத் தலைகள் போல் உருண்டு கிடக்கும் சிறிய கற்பாறை (ப.77)

பெருங்காற்றில் வேகமாக அசைந்தாடும் நரைமூதாட்டியின்
வெள்ளிய கூந்தலை யொத்துத் தொலைவில் காட்சி தந்த நீர்வீழ்ச்சி
(ப.89)

இதுபோன்ற உவமைகள் நிரம்ப எடுத்துரைக்கப்பட்டுள்ளன. பேராசிரியர் டாக்டர் மா. நன்னன், கலைஞரின் உருவகச் சிறப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டினைத் தருகிறார். "ஒரு பெண் காதலனைப் பிரிந்த வருத்தத்திலே இருக்கிறாள். தூக்கம் வரவில்லை. தாழிட்டுக் கொள்கிறாள். அந்தப் பொல்லாத விழிகள் இமைக்கதவுகளைத் தட்டிப் பார்த்துவிட்டு நினைவுச் சாளரத்தின் வழியாக வெளியே எட்டிப் பார்க்கின்றன. இதுவரை எங்காவது எந்த இலக்கியத்திலாவது இதுபோன்ற உருவகம் இருக்கிறதா என்று விசாரித்துப்பாருங்கள். நான் கேட்டறிந்த வரையிலே கூட இப்படி ஒரு உருவகத்தை யாரும் அமைத்ததாக எனக்கு நினைவில்லை" (ப.5) என்கிறார். இக்கூற்றின் உண்மை கலைஞரின் கற்பனைத் திறனின் சான்றாகும்.

பெயரிடல்

பாத்திரங்களின் வாயிலாகக் கருத்துணர்த்தும் திறனைக் குறளோவியத்தில் காணலாம். இம்முறையில் கூறும்பொழுது கருத்து வலிவும், பொலிவும் பெற்று விடுகிறது. இப்பாத்திரங்களுக்குக் கலைஞர் அழகிய தமிழ்ப் பெயர்களை இடுகிறார். தேன்மொழி (ப.66), கயல்விழி (ப.71), வில்லவன் (ப.79) வடிவழகன் (ப.90) தேனப்பன் (ப.99), மலையன் (ப.137) சிலம்பன் (ப.137) என்பன போன்ற தமிழ்ப் பெயர்களைச் சூட்டியுள்ளார்.

சொல்லியல்

மொழி ஆளுமைத் திறனில் சொல்லியல் பகுதி முக்கிய இடம்பெறும். சொல்லின் தன்மையை அறிந்து, அதனைப் பொருளமைதிக்கேற்பப் பயன்படுத்தும் திறனால் சொல் வன்மையும் பொலிவும் பெறும். சொல்வன்மை என்ற ஓர் அதிகாரம் படைத்த திருவள்ளுவர்,

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து" (645)

என்றும், 'திறனறிந்து சொல்லுக சொல்லை' (644) என்றும், கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்' என்றும் (643) வகைப்படுத்தியும், சுவையாகவும் கருத்துக்களைச் சொல்லும் வல்லமையுடையோர் சுட்டிக் காட்டும் பணியை உலகத்தார் உடனடியாக நிறைவேற்ற முனைவார்கள்[10] என்றும், கற்றதைப் பிறர் உணர்ந்து கொள்ளும் வகையில் விளக்கிச் சொல்ல முடியாதவர், கொத்தாக மலர்ந்திருந்தாலும் மணம் கமழாத மலரைப் போன்றவர் என்றும் குறிப்பிடுகிறார். இத்தகு இலக்கண வரையறைகளை நன்குணர்ந்த கலைஞர், வாழ்விலும், எழுத்திலும் செம்மையாகப் பயன்படுத்தி வருகிறார்.

1. அடுக்குமொழி

கலைஞரின் மொழி ஆளுமையில் அடுக்கு மொழி நடை தனிச்சிறப்பிடம் பெறும். அடுக்குமொழி கேட்பவர் உள்ளத்தைக் கவர்வதுடன் செய்தியை ஆழமாகவும், அழகாகவும் பதிய வைக்கிறது.

"மாலை நேரத்திலே - சோலை ஓரத்திலே - வேலை நிகர்த்தவிழியினர் காதல் பயில்வர் " (ப.12)

"கூட்டுக்குரல் எடுத்துக் குயில்கள் நலுங்கு இசைக்க - ஒட்டம் பிடித்து அணில்கள் மரங்களிலே இலை அசைக்க, மீட்டிய வீணையென மெல்லியல் முனகலிட (ப.604)

இவை போன்ற ஒலி இயைபு அடுக்கு நடை இடம்பெற்றுள்ளது.

"மான் வளர்ப்பர், மாடப்புறா வளர்ப்பர், கிள்ளை வளர்ப்பர், கீரிப் பிள்ளை வளர்ப்பர், நாய் வளர்ப்பர், பூனை வளர்ப்பர் - ஆனால் யாரும் நான் வளர்ப்பது போலப் பாம்பு வளர்த்திட மாட்டார்" (ப.566)

"பிறை நிலவெனப் புகழப்பட்ட நெற்றிக்கு மேலே முழுநிலவின் வெண்ணிறந் தாங்கிய தலைமுடி தோன்றுகிறது" (ப.54)

உவமை அடுக்கு முறைகள்.

"இழித்துரைத்தல், பழித்துப் பேசுதல், கடுமொழிகூறல், சுடுமொழி பொழிதல், ஊரார் தூற்றிட தீவினைகளில் ஈடுபடுதல், உலகம் பழிக்கும் செயல்களில் உவப்புடன் இணைந்திடல்" (ப.546)

என்ற நிலையில் ஒருபொருள் பல சொல்லடுக்குமுறை.

"நீயோ விண்ணில் ஒளிவிடும் நட்சத்திரம், நானோ மண்ணில் கிடக்கும் கரிக்கட்டை
நமக்குள் மணப் பொருத்தமிருக்கலாம் - மணப்பொருத்தம் உண்டென்று
யார்தான் ஒப்புவார்? (ப.45)

"நகைத்தார் - நகை தந்தேன், தொட்டார் - சுட்டேன், தழுவினார் - நழுவினேன், தொடர்ந்தார் - படர்ந்தேன், பிரிந்தார் - இருக்கிறேன்' (ப.64)

முரண் தொடர் அடுக்கு.

இவ்வாறு பல்வேறு அடுக்குமொழி நடைகள் பயிலப்பட்டுள்ளன.

அணி வினா

வினாவும் செப்பே வினா எதிர்வரினே'[12] வினாவே விடையாக வருவதும் உண்டு. விடைதர வேண்டிய இன்றியமையாமை இன்றி கேட்கப்படும் வினாவே விடையாக அமையும். இதனை அணிவினா உரைநடை என்பர்.[13] குறளோவியத்தில் இவ்வகை அணிவினா உரைநடை அமைப்பு உளது.

"அவள் அன்னத்தூவி பரப்பிய மஞ்சத்திலே ஆனந்தநித்திரை செய்து கொண்டிருக்கிறாள்.
தூங்கும் அந்தத் தோகையாளின் துடியிடை நெளிவதேன்?
தூய்மை நிறை அவள் செவ்விதழ்களிலே அமுதம் நிறைவதேன்?

மின்னித் தேங்கும் அந்த அமுதத்தை அவளது அரும்பு இதழ்கள் அவளை அறியாமல் சுவை பார்ப்பதேன்? - ஆகா - ரத்தினத்தின் நிறம் பதிக்கும் விதத்திலே அவள் கன்னங்கள் மாறுபடுகின்றனவே அது ஏன்?

எத்தகைய மந்தகாசமான புன்னகை! முல்லைச் சிரிப்பா? முழு நிலாத் தோற்றமா? எல்லையிலா மகிழ்ச்சியின் கோடுகள் அவள் வதன மெங்கும் அழகுக் கோலங்கள் போடுகின்றனவே" (ப.60)

தொடரில் தொடைநயம்

எதுகை, மோனை, இயைபுத் தொடைகள், சரளமாக அமைந்துள்ளன. பாக்களில் காணப்படும் தொடை நயம், உரைநடையில் அமைந்து உரைநடைக்கும் அழகூட்டுகின்றன.

'வெள்ளி மணல் படுக்கையில் புள்ளிமயில் படுத்திருந்தாள்' (ப.53)

'சும்மா இருந்த என்னைச் சுந்தரியின் நினைவு வாடச்செய்யும்' (ப.53)

"மஞ்சத்திலே கொஞ்சு மொழிகள், உதிரும்' (ப.56)

'விரக விருந்தளிக்கும் பாவை விழியெதிரே நிற்பதைக் கண்டாலே மகிழ்ச்சி பொங்கும்' (ப.91)

உரையாடல் அமைப்பு

உரையாடல் அமைப்பு வாசகரை ஈர்க்கும் மொழித்திறனாகும். ஒரே அடியாகத் தொடர்ச்சியாகப் பேசிக்கொண்டு இருக்காமல் கொடுத்து வாங்கி உரைக்கும்பொழுது கவன ஈர்ப்பு மிகுதியாகும். இதனை இன்றைய கல்வியியலார் நுண்நிலைக் கற்பித்தல் (Micro - Teaching) முறை மூலம் கற்பிக்கின்றனர். குறளோவியத்தின் சிறப்புக்களுள் இதுவும் ஒன்றாகும்.

"நீ பெண்ணல்ல, புராணங்கள் கூறுகின்ற தேவர் உலகத்து ரம்பை, ஊர்வசி, திலோத்தமை ஆகியோரில் ஒருத்தியாகத்தான் இருக்கவேண்டும்.

"ஓ! அப்படியா! அவ்வளவு அழகா நான்?

"அவர்களை விட நீ அழகியென்பேன்!"

"அந்த மூவரையும் பார்த்திருக்கிறீர்களா"

"புராணக் கதைகள் வர்ணிப்பதைக்கேட்டிருக்கிறேன்"

"என்னை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?"

"கண்ணே! இந்த மீனைப் பிடித்துவிட்ட தூண்டில்முள் அல்லவா உன்பார்வை" (ப.380)

கவிதை

கற்கண்டு கவிதைகளைக் கவினுடன் தரும் கலைஞர், குறளோவியத்தில் சில இடங்களில் கவிதை மயமான குறளோவியத்தைப் படைத்துள்ளார். பழைய செய்திகளையும் பகுத்தறிவு நெறியில் சீர்மை செய்து தருவார். பாடுபொருளுக்கேற்ற பாவடிவத்தை மேற்கொள்கிறார். "இவர் கவிதைகளில் யாப்பை விடப் பொருண்மையும், சொல்லமைதியைவிட சொல்லாட்சித் திறனும் மிக்கோங்கி விளங்கும். ஒலிநயம் தொடைநயம் சந்த நயம் அணிநயம் கருத்து நயத்திற்குத் துணைபுரியும். 'கவி எழுத நேரமில்லை, எனினும் கலை உள்ளம் எனைவிடுவதில்லை' என்ற இவரின் கூற்று உண்மையே.

"கற்கள் அவன் காலைக்குத்தின!
இரத்தினங்கள் பதித்தவைபோல
இருபாதங்கள் காட்சி தந்தன
கோடைவெயில் கொளுத்திற்று
குடைபிடிக்க வழியில் ஒருமரமும் தயாராக இல்லை
நடந்து கொண்டே யிருந்தான்
பாம்பொன்று சுற்றியது காலில்!
பசலைக்கொடி போல எடுத்துப் போட்டுப்
பாதை மாறாமல் பார்த்தபடி
பாழ்காட்டில் பயணம் செய்தான்
தூற்றலும் போட்டது வானம்
கூற்றமாய்ச் சிரித்தது மின்னல்
மூட்டமாய்ச் சேர்ந்த முகில்கள்
முழங்கின இடிகளாய்ப் பின்னே

ஆய்வு முடிவு

1. இன்றைய தமிழ் இலக்கியக் காலத்தைக் கலைஞர் தமிழ்க்காலம் என்று கூறும் அளவிற்கு தமிழ் இவரின் ஆளுமையால் தகுதிபெற்றுள்ளது.

2. 'பாராளும் தலைவன் பாட்டு முதலான கலை இலக்கியப் பாவலனாகவும் நம் காலத்தில் வாழ்ந்து வரும் தலைவனாகவும் திகழ்கிறார்.

3. அரசியல் மற்றும் பல்வேறு நிலைகளால் கருத்து மாறுபாடு கொண்டவர்களும் இவரின் மொழி ஆளுமைத் திறனைப் போற்றி வருகின்றனர்.

4. திறனறிந்து சொல்லும் சொல்லுக்கு இலக்கியமாகத் திகழும் திருக்குறளைத் திறனறிந்து குறளோவியமாகத் தீட்டியுள்ளார்.

5. குறளோவியத்தில் காணப்படும் மொழி ஆளுமைத் திறன், அமைப்பியல் நோக்கு, அழகியல் நோக்கு, சொல்லியல் நோக்கு என்ற முறைகளில் ஆராயப்பட்டுள்ளது.

6. முப்பால் அமைப்பு, குறள் ஓவிய அமைப்பு, காவியம் தந்த ஓவியங்கள், காவியம் தந்த கதைகள், குறளை அறிமுகப்படுத்தும் முறை, கருத்து விளக்க உதவும் எடுத்துக்காட்டுகள் ஆகியன அமைப்பியல் நோக்கில் ஆராயப்பட்டுள்ளன.

7. அழகியல் நோக்கில் வர்ணனைகள், அணிநலன்கள், பெயரிடல் முறை ஆகியன ஆராயப்பட்டுள்ளன.

8. சொல்லியல் நோக்கில் அடுக்குமொழி நடை, அணிவினா முறை, தொடரில் தொடைநயம், உரையாடல் அமைப்பு, கவிதைநடை ஆகியன ஆராயப்பட்டுள்ளன.

9. மண்ணின் சிறப்பை வனம் காட்டும், பண்ணின் சிறப்பைத் தமிழ்காட்டும், குறளோவியத்தின் சிறப்பைக் கலைஞரின் மொழி ஆளுமைத் திறன் காட்டும்.

கலைஞரின் மொழி ஆளுமைத் திறன் மேன்மேலும் ஆராயும் தகுதி பெற்று விளங்குகிறது.

அடிக்குறிப்பு

1. கலைஞர் மணி விழா மலர் 1984 ப.17
2. குறளோவியம் மதிப்புரை 1992 ப.viii
3. கலைஞரின் சிலப்பதிகார நாடக நூலின் அணிந்துரை
4. கலைஞர் களஞ்சியம் - ப.135
5. திருக்குறள் கலைஞர் உரை 1996 (அட்டை எ.டு.)
6. குறளோவியம் முகப்புரை ப.iv
7. க.த.திருநாவுக்கரசு, திருக்குறள் நீதி இலக்கியம் (ப.356 - 57)
8. குறளோவியம் மதிப்புரை ப.10
9. குறளோவியம் மதிப்புரை ப.5
10. திருக்குறள் கலைஞர் உரை குறள் 648
11. அதே நூல் குறள் 650
12. தொல் சொல். கிளவியாக்கம்
13. டாக்டர் மா. இராமலிங்கம், புதிய உரைநடை ப.103.

12 குறளோவியம் - ஒரு பார்வை

முனைவர் அ. அப்துல்ஜப்பார்

குறளோவியம் டாக்டர் கலைஞரின் அரிய நூல். குறளின்கண் கலைஞருக்குள்ள தொடர்பையும் ஆழத்தையும் நன்குப் பிரதிபலித்துக் காட்டும் ஒப்பற்ற நூல் குறளோவியம். பல நூல்களை எழுதிச் சாதனை படைத்துள்ள கலைஞரின் இப்படைப்பு தமிழ் இலக்கிய உரைநடை நூல்களுள் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. நாடகம், புதினம், சிறுகதைகள், உரைநடை நூல்கள் எனப்பலவகைப் படைப்புகளின் ஆசிரியராகத் திகழும் கலைஞர் ஒரு சிறந்த எழுத்தாளருமாவார். சிறுவயதிலிருந்து பெரியாரின் பகுத்தறிவுப் பாசறையில் பட்டை தீட்டப்பட்டவர். பிறகு பேரறிஞர் அண்ணாவின் தம்பியானார். நீதிக்கட்சி வளர்த்தோங்கிய காலகட்டத்தில் அதன்பால் ஈர்க்கப்பட்டவருள் கலைஞரும் ஒருவர் . 1949 ஆம் ஆண்டு தி.மு.க பிறந்தது. பெரியாரின் திராவிட கழகத்திலிருந்து அண்ணா பிரிந்து சென்றபோது அவருடன் கலைஞரும் மற்றும் பலரும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஐக்கியமாகி அதன் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாய் ஈடுபட்டனர். அரசியல் ஒருபுறம் இருக்க மற்றொரு பகுதியாகிய இலக்கியத்திலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் கலைஞர். தமிழில் தமக்கென ஓர் இலக்கியப் பாணியை வகுத்துக் கொண்டு அதில் வெற்றியும் பெற்றுள்ளார். 1969 இல் பேரறிஞர் அண்ணா மறைந்த நிலையில் தமிழக அரசியல் வானில் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் விண்மீன் என விளங்கினார். தமிழகத்தின் முதலமைச்சராக வந்தபோது தமிழ்நாட்டில் பல பதிய செயல் திட்டங்களைக் கொணர்ந்தார் சமுதாய விழிப்புணர்ச்சி ஏற்படவேண்டும் என்பதற்காக 'முரசொலி' போன்ற நாளேடுகளில் திராவிட இயக்க மறுமலர்ச்சிக் கோட்பாடுகளைத் தவறாது எழுதலானார். இன்றும் அதனைத் தொடர்ந்து எழுதி வருகிறார். தமிழக மக்களின் நலனுக்காகப் பாடுபடும் கலைஞருக்கு ஈடுஇணை அவரே தான்.

திருக்குறள் 1330 குறள்வெண்பாக்களைக் கொண்டுள்ளது. அறம், பொருள், இன்பம் என முப்பாலாகி வீட்டின்பத்தையும் உணர்த்தும் பேறு பெற்றது. அறத்துப்பாலில் 38 அதிகாரங்களும், பொருட்பாலில் 70 அதிகாரங்களும் இன்பத்துப்பாலில் 25 அதிகாரங்களையும் கொண்டுள்ளது. திருவள்ளுவமாலை எனும் வாழ்த்துப்பாக்களையும் பெற்றுள்ளது.

"ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிக விளங்கித் - தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு."[1]

என்ற மாங்குடி மருதனாரின் கணிப்பு திருக்குறளுக்கு மிகவும் பொருந்தும். "சங்ககாலத்திற்குப் பின்னர், நீதி நூல்கள் பல தமிழில் தோன்றியுள்ளன. இந்நீதி நூல்களுக் கெல்லாம் முன்னோடியாகவும் முடிமணியாகவும் திருக்குறள் விளங்குகிறது. சுருங்கச் சொல்லுவதானால் மனிதனின் உணர்ச்சி (Feeling) விருப்பு (Willing) அறிவு (Knowing) ஆகிய மூவகை மனப்பண்புகளுள் அறிவாற்றலைத் தூண்டுவதாக அமைவதே நீதி இலக்கியம்"[2] என்று நாம் கூறலாம். "நீதி இலக்கியம் என்பது மனிதனை மனிதனாக வாழச் செய்வதற்கும் மாண்புமிகு மனிதனாகச் சிறப்புற்று விளங்கச் செய்வதற்கும் வழிகாட்டும் அறநெறிக் கருத்துக்களை எடுத்துரைப்பதாகும்"[3]

இத்தகு பொய்யில் புலவரின் வாய்மொழியில் ஈடுபாடு கொண்ட கலைஞர் தம் உள்ளத் திரையில் பதிந்த குறளோவியங்களை முதன்முதலில் முரசொலியில் எழுதத் தொடங்கினார். சிறிதுகால இடைவெளிக்குப் பிறகு தினமணிக்கதிர் ஆசிரியர் சாவி அவர்களின் தூண்டுதலினால் அக்கதிரில் குறளோவியங்கள் வந்தன. பின்னர் குங்குமத்தில் தொடர்ச்சியாக வெளிவந்தன. இவ்வாறு 30 ஆண்டுகள் பல இதழ்களிலும் வரையப்பட்ட குறளோவியம் இறுதியாகக் கலைஞரின் விருப்பத்திற்கேற்ப பாரதிபதிப்பகம் அதனை நூல் வடிவில் வெளியிட்டது.

குறளோவியத்தில் திருக்குறள் முழுமைக்கும் உரையே விளக்கமோ தரப்படவில்லை. அறத்துப்பாலில் 76 குறள்பாக்களுக்கும் பொருட்பாலில் 137 குறள்களுக்கும், இன்பத்துப்பாலில் 141 குறள்களுக்கும் உருவக முறையிலும், உரையாடல் வாயிலாகவும், வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சுட்டிக் காட்டுவது மூலமாகவும், தலைவன், தலைவி, தோழி ஆகியோர் கூற்றாகவும், வண்ணனை மூலமாகவும், புதுக்கவிதை வழியாகவும் விளக்கிக் காட்டியுள்ளமை இந்நூலின் தனிச் சிறப்பாகும். மேலும் கலைஞர் அறத்தின் 38 அதிகாரங்களில் 36 அதிகாரப்பாக்களை எடுத்தாண்டும், பொருளில் 70 அதிகாரங்களில் 61 அதிகாரப்பாக்களுக்கு விளக்கமளித்தும், இன்பத்தில் 25 அதிகாரங்களில் 25 அதிகாரப்பாக்களைக் கையாண்டும் குறளமுதம் படைத்துள்ளார்.

குறளோவியத்தைக் கீழ்க்கண்ட தலைப்புகளில் வகைப்படுத்தலாம். 1. உருவகமாகக் கூறுதல் 2. இலக்கியச் சான்று 3. தலைவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள். 4. வரலாற்று நிகழ்வு 5. தலைவன், தலைவி அல்லது தோழி கூற்று. 6. நேருக்குநேர் உரையாடல். 7. வண்ணனை 8. சிறுகதையமைப்பு.

உருவகமாகக் கூறுதல்

குறளோவியத் தொடக்கமே கடவுள் வாழ்த்து அதிகார விளக்கம் தான். வள்ளுவர் குறள் எழுதிய காலத்தில் கடவுள் நம்பிக்கையுள்ள மக்களே தமிழ் நிலத்தில் வாழ்ந்து வந்துள்ளனர். தொன்மைத் தமிழ் இலக்கியங்களும் இதை எடுத்துரைக்கின்றன. இயற்கையின் அற்புதங்களைக் கண்டு மெய்மறந்த மனிதன் ஏதோ ஒரு சக்தி இவையெல்லாவற்றையும் இயக்குவதாக உணர்ந்தான். அந்த சக்தியைக்

கடவுள் என்றான். அச்சக்தியைத் தான் இறைவன் என்றும் இறையென்றும் தெய்வமென்றும் போற்றினர். வள்ளுவர் தான் வாழ்ந்த காலத்து நிலையைத் தனது குறளில் வடித்துக் காட்டாமல் இல்லை. இறை அல்லது இறைவன் அல்லது தெய்வம் இவற்றுக்குச் சொல்லப்படும் இலக்கணங்களை அவர் புறக்கணிக்காதது மட்டுமல்ல, அந்த இலக்கணங்களின் வடிவமாக மாந்தர் திகழ வேண்டுமென்பதை விரும்பினார். தெய்வத்திற்கென எத்தனையோ அருங்குணங்கள் சொல்லப்படுகின்றன. காட்டாக வாலறிவன், வேண்டுதல் வேண்டாமை இலான், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதான், அறவாழி அந்தணன், எண்குணத்தான் ஆகிய இறைவனுக்குரிய இத்தனை பெருமையும் கொண்டு ஒருவன் வையத்தில் வாழவேண்டும் என வள்ளுவர் விரும்பினார். அதன் எதிரொலி தான்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" என்ற குறள்.

ஆதலின் கலைஞர் உருவகமாகக் காட்ட விரும்புவது இறைவனின் அருங்குணங்கள் பெற்ற மனிதன் தெய்வத்திற்கு இணையாக வைத்து மதிக்கப்படுவான் என்பதே. இறைவனின் அரும்பண்புகளை விவரிக்கும் கலைஞர் உலக வாழ்க்கையை மறக்கவில்லை. மாறாக அவ்வாழ்க்கை செம்மையுற வேண்டுமே என்ற தொனியில் தான் ' தெய்வத்துக்கு இணையாக மதிக்கப்படுவான்' என்ற வள்ளுவரின் கருத்தை உளமார ஏற்றுச் சார்புடையவராகிக் கடவுள் வாழ்த்தையும் இல்வாழ்க்கையையும் இணைத்துக் குறளோவியத் தொடக்கமாக வரைகின்றார் எனல் பொருந்தும். குறளோவிய இறுதிப் பகுதியில் நிலையாமை பற்றிக் கூறும்,

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ் வுலகு"

எனும் குறளைக் கலைஞர் எடுத்தாள்கிறார். உலகத்தை 'நிலமகள்' என உருவகப்படுத்துவது இயல்பு அம்முறைக்கேற்ப நிலமகள் ஒருநாள் திருவள்ளுவரைச் சந்திக்க வருகிறாள். கலைஞர் நடையில் உரையாடல் தொடர்கிறது. தாயும் மகனும் ஒருவரை ஒருவர் நலம் விசாரித்த பின்னர் தாயாகிய நிலமகள்

"அருங்குறள் காவியம் எழுதிக் கொண்டிருக்கிறாயே ? உன்னிடம் ஒரு ஐயப்பாட்டுக்கு விளக்க மறிந்து போகலாம் என்று தான் வந்தேன்" என்றாள். மேலும் தொடர்கிறாள்.

"எனக்குள்ள பெருமைகளைப்பற்றி நீ என்ன கருதுகிறாய் ? அதை உன் குறளில் எழுதிக் காட்டு. நான் அதைத் தெரிந்து கொள்ளவே துடிக்கிறேன்"

உலகத்தாய்க்கு இப்படி ஒரு ஐயமும் அவாவுமா ?
வேடிக்கைதான்! பரவாயில்லை. இப்போது உனக்குள்ள
பெருமைகள் எவ்வாறெல்லாம் கூறப்படுகின்றன ?

அப்படியா! மகிழ்ச்சி! இதோ கூறுகிறேன். இரவும் பகலுமாக மாறிமாறிக் காட்சியளிக்கிறேன். இதம்தரும் பனிக் காற்றையும் வீசுகிறேன். பாலைவனத்து மணற் காற்றையும் கொட்டுகிறேன். ஏரி, குளம், ஆறு என இயற்கை எழிற் செல்வங்களையும் வழங்குகிறேன். எரிமலை எனும்

விளைவுகளும் என்னாலேதான். "தொடர்ந்து இன்னும் பல நிலைகளையும் அடுக்கிக் கொண்டே போனாள் நிலமகள். உடனே வள்ளுவர் போதுமம்மா! போதும்! இதுவரை நீ சொன்னவற்றை எதையுமே நான் உனக்குரிய பெருமையாகக் கருதவில்லை. இவற்றையெல்லாம் விடமிகச் சிறந்த பெருமையொன்று உனக்கு உண்டு என்ன மகனே அது? அதைத்தான் நான் குறளாக எழுதப் போகிறேன். நேற்று இருந்த ஒருவர் இன்று இல்லாமல் மறைந்து போய்விடுகிறார் அல்லவா? அதுதான் உலகத்தாயே! உனக்குள்ள பெருமை"

நிலையாமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்தினை ஏற்று நிலமகளை உருவகமாய்க் காட்டி அவளின் பலநிலைகளையும் தொகுத்துரைத்து முடிவில் பூமியாகிய நிலமகளின் உண்மையான பெருமையை உலகோர்க்கு உணர்த்தி இனிய தமிழில் நெஞ்சில் புதியும்படித் தரும் குறளோவியத்தின் மாண்பினை என்னவென்று புகழ்வது?

2. இலக்கியச்சான்று

ஈகை குறித்த "சாதலின் இன்னாததில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை" என்ற குறளின் பொருளாவது:

சாவதைவிடத் துன்பமானது வேறொன்றுமில்லை. ஆனால் வறியவர்க்கு ஒருபொருள் கொடுக்க முடியாத நிலைவந்தபோது அச்சாதலும் இனியதே ஆகும். இதற்குக் கலைஞர் தரும் இலக்கியச் சான்றுவருமாறு. குமண வள்ளல் தனது தம்பியின் சூழ்ச்சியால் காட்டில் வாழநேரிடுகிறது. நாடிழந்து நலிவுற்றுக் காட்டில் வாழும் அவனை உயிருடன் விட்டு வைப்பதும் தன்னுடைய ஆட்சிக்கு ஆபத்து என உணர்ந்த இளங்குமணன் அண்ணனின் தலையைக் கொணர்வார்க்குப் பொற்கிழி வழங்கப் படுமென்று அறிவிக்கின்றான். சாவின் வருகையை எதிர்பார்த்துக் காட்டில் வாழும் குமணனை நாடி வறுமையில் வாடிய புலவர் சாத்தனார் அங்குச் செல்கிறார். சாத்தனாரின் வறுமைக் கோலத்தைக் கண்ட குமணன் மனம் வருந்தி தன் தலையைக் கொண்டு போய்த் தன் தம்பியிடம் கொடுத்தாவது பொற்கிழி பெறுக என வேண்டினான். வறியவர்க்கு எதுவும் வழங்கிட முடியாத நிலை வந்தபோது அந்தச் சாதலும் இனியதே எனும் குறள் கருத்தினுக்கேற்ற ஓவியமாகக் கலைஞர் ஒப்பிடும் குமண வள்ளலின் வாழ்வுக் காவியத்தில் இலக்கிய மணம் கமழ்வதை நம்மால் நுகரமுடிகின்றது.

பொன் வேண்டேன்; பொருள் வேண்டேன் மண்ணாளும் அரசர் தருகின்ற புகழ்வேண்டேன்; எந்நாளும் கண்ணாளர் அருகிருந்தால் ஊன்வேண்டேன்; உயிர் வேண்டேன்; தேன் வேண்டேன், தேவர் வாழ் உலகும் வேண்டேன் எனத் தன்மடியிற் கிடத்தியவாறு

"நிலவுப் பயன் கொள்ளும் நெடுநிலா முற்றத்து
கலவியும் புலவியும் காதலர்க்கு அளித்தாங்கு"[4]

மாதவி நல்லாள் காதல் மொழி இசைத்து இன்பம் தந்திட, அசைந்திடும் அவள் இதழ் அழகை விழிகளால் மொண்டு மொண்டு குடித்துக் களித்து மயங்கிக் கிடந்தான் கோவலன். கண்டனக் கணைகள் கிளம்பின. கண்ணகிக்கோ மேலும் ஒருகவலை. கணவனைப் பிரிந்திருக்கும் துன்பத்தை விட அவனை அன்பில்லாதவன் என ஊரார் தூற்றுவது கண்ணகிக்குப் பிடிக்கவில்லை. "காதலன் எப்போதும் என் உள்ளத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறான். ஆனால் இதை இவ்வூரார் அறியாமல் அவன் என்னைப் பிரிந்து வாழ்கிறான். அன்பில்லாதவன் என்று வீணாக அவனைப் பழிக்கின்றாரே" கண்ணகியின் இந்த உறுதியான அன்புப் பெருக்கினைத் தான் இதோ இந்தக் குறள் எடுத்துரைக்கின்றது.

"உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்
ஏதிலர் என்னும் இவ் வூர்"

இன்பத்துப்பாலில் வரும் இக்காதற் சிறப்புரையைக் கலைஞர் தரும் பான்மையே தனி அலாதி. சிலப்பதிகாரச் செய்தி அவரின் கை வண்ணத்தால் குறளோவியமாகக் காட்சியளிக்கின்றது.

3. தலைவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள்

பொருட்பால் கூடாநட்பிலிருந்து ஒருகுறள்

"தொழுத கையுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுத கண்ணீரும் அனைத்து" இதன் பொருளாவது:

பகைவர் வணங்கித் தொழுத கையினுள்ளும் கொலைக் கருவி மறைந்திருக்கும். பகைவர் அழுது சொரிந்த கண்ணீரும் அத்தன்மையானதே. கலைஞரின் எண்ணச்சிதறல் 1948 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 30 ஆம் நாளை எண்ணிப் பார்க்கின்றது. மேற்றிசையில் கதிர் மறையும் நேரம். டில்லியருகில் ஒருமேடை. அம்மேடையில் அமர்ந்து இறைவணக்கம் தொடங்கப் போகிறார் காந்தியடிகள். அவரோடும் இணைந்து நல்லோர் பலரும் அவ்வணக்கப் பாடலை இசைக்கப் போகின்றனர். அனைவரும் அவரை வணங்குகின்றனர். கூப்பியிருந்த கரங்களில் ஒரு கரம் அவரை நோக்கி வருகிறது. அவரைத் தாழ்ந்து வணங்குகின்றது. அந்தத் தும்பை மலர் உள்ளம் அவன் மீது அன்பை அள்ளி வீசுகிறது. அந்தக் கொடியவனின் கும்பிட்ட கைக்குள்ளே கொலைக் கருவி பதுங்கியிருக்கிறது. அந்தக் கைத்துப்பாக்கி திடீரென அந்த இடத்தின் அமைதியைக் கெடுக்கிறது. அமைதி அழிந்தது. இருள் மூடிக் கொண்டது. இதயப்பகுதியிலிருந்து குருதி வெள்ளம் பெருக்கெடுக்க அந்த எளிய உருவம் ஏழைகளின் நம்பிக்கை விளக்கு பூமியில் சாய்ந்து விட்டது. தொழுதகைக்குள்ளிருந்த கருவி நாட்டுத் தந்தையின் உயிரை குடித்துவிட்டது. இதுபோலவும் நடக்கக் கூடும் என்பதை வள்ளுவரின் நுண்ணறிவு அன்றே உணர்ந்திருந்தது. கலைஞரின் குறளோவியம் அண்ணல் காந்தியடிகளின் துயரமான வாழ்க்கை நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டுகின்றது. இதுபோன்றே கலைஞர் பல தலைவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளைக் குறளோவியமாகத் தீட்டியுள்ளார். 'நட்பாராய்தல்' எனும் அதிகாரத்தில்.

'ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும்" குறளுக்கு பாக்கிஸ்தானில்

ஆட்சி செலுத்திய புட்டோவையும் அவரால் தளபதியாக நியமிக்கப்பட்டுத் தூக்குத் தண்டனை அளித்த ஜெனரல் ஜியாவையும் இவண் நினைவு கூர்கிறார்.

4. வரலாற்று நிகழ்வு

உகாண்டா நாட்டை ஆண்டுவந்தான் இடி அமீன் என்னும் சர்வாதிகாரி. பயிர்களைக் களைகள் அழிப்பது போல் மக்களை அழித்து மகிழ்ந்த இடி அமீன் என்னும் கொடுங்கோலனின் ஆட்சி சுவடு தெரியாமலே மறைந்தொழிந்தது. குடிமக்கள் என்னும் பயிரையே அழிக்கும் அரசு, களைகள் எனும் கொடிய கொலைகாரனைவிடத் தீமையானது என்பார் வள்ளுவர். அவர் அன்று எழுதிய குறளுக்கு இன்று சான்றுப் பொருளாக அமையும் இடி அமீனின் வரலாற்றைக் கலைஞர் குறளோவியமாகத் தருகின்றார். இதோ, அந்தக்குறள்,

"கொலைமேற் கொண்டாரிற் கொடிதே அலை மேற் கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து"

5. தலைவன், தலைவி அல்லது தோழி கூற்று

இன்பத்துப்பாலில் 141 குறள்களுக்கு விளக்கமளித்து 25 அதிகாரங்களையும் நிறைவு செய்து விடுகின்றார் கலைஞர். குறளோவியத்தில் அதிகமான பாக்களைக் கொண்டு அமைந்த பகுதி இன்பமே. சங்ககால அகத்தினை மரபையொட்டியே கலைஞரும் குறளோவியத்தில் தலைவன், தலைவி தோழி ஆகியோரின் பெயர்களைச் சுட்டாது செய்திகளைத் தெரிவிக்கின்றார். விளக்கமும் உரையாடலும் தான் இப்பிரிவில் பெரும்பான்மையாகக் கையாளப்படுகின்றன.

குறிப்பறிதல் பற்றிய ஒரு குறள்

"இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து"

மருத்துவர் ஊசி குத்துகிறார். உடலில் வலி ஏற்படுகிறது. ஆனால் அந்த ஊசிவழியே உடலுக்குள் செல்கின்ற மருந்து நோய் தீர்க்கப் பெரிதும் உதவுகிறது. மருத்துவரிடம் வேதனை தரும் ஊசியும் இருக்கிறது. நோயின் கடுமையைப் போக்கும் மருந்தும் அதனுள் இருக்கிறது. வள்ளுவர் இவண் ஒரு மருத்துவரைக் குறள் மூலம் அறிமுகப்படுத்துகின்றார்.

அழகி அழகனைப் பார்க்கிறாள். அந்தப் பார்வையை அவன் வண்ணனை செய்கின்றான். இந்த அணங்கு இரு பார்வையுடையவளாக இருக்கின்றாள். ஒருபார்வையால் அவனுக்கு வேதனை உண்டாக்கியும் மற்றொரு பார்வையால் அவன் பெற்ற வேதனையையும் போக்கினாள். இந்த அதிசயமான மருத்துவப் பெண்மணியின் பார்வைச் சிறப்பைத் தான் வள்ளுவர் பாட, கலைஞர் குறளோவியமாகக் காட்டுகின்றார்.

ஒரு காட்சி தலைவி கூற்றாக அமைவது. காதலனின் நெஞ்சமெனும் மாளிகையில் குடியேறக் காதலி சென்றாளாம். மாளிகையின் வாயிலில் காவல் போட்டு அவளை உள்ளேவிடாமல் காதலன் தடுத்து விட்டானாம். அதனால் அவள், அவன் நெஞ்சுக்குள் நுழைய முடியாமல் போய்விட்டதாம்.

அதேசமயம் அந்தக்காதலன் மட்டும் ஓயாமல் அவளுடைய நெஞ்சமெனும் மாளிகைக்குள் நுழைந்துவிடுகிறானாம். அப்படி அடிக்கடி ஓயாமல் நுழைவதில் அவனுக்கு நாணமே கிடையாதா என்று அவள் கடிந்து கொள்கிறாள். காதலி, காதலனின் நினைவாகவே இருக்கிறாள் என்பதற்கும், காதலனுக்கோ, காதலியின் நினைவு இல்லையென்று காதலி சுமத்தும் குற்றச்சாட்டின் எதிரொலிதான் வள்ளுவர் தரும் குறள்.

"தந்நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார் நாணார்கொல்
எந்நெஞ்சத்து ஓவா வரல்"

ஓர் அணங்கின் ஆதங்கத்தை நுட்பமாக வெளிப்படுத்தும் வள்ளுவரின் குறளுக்குக் கலைஞரின் குறளோவியம் ஈடுகொடுப்பதை இவண் அறிந்து பூரிப்படைகின்றோம்.

6. நேருக்கு நேர் உரையாடல்

"மலையொன்றைத் தலையில் தூக்கிக் கொண்டு நாடு முழுவதும் பவனி வருவேன். இது என்னுடைய முதல் திட்டம். வானத்தை வில்லாக வளைத்து அந்த வில்லுக் கேற்ற நாணாக மணலைக் கயிறாகத் திரித்துக் காட்டுவேன். இது என்னுடைய இரண்டாவது திட்டம்." இவ்வாறு மக்களின் மன்றத்தின் நடுவே தோள் தட்டி அறை கூவல் விடுத்தான் ஒரு வாலிபன். இப்படி ஒரு வாலிபன் வீரம் பேசிக் கொண்டு திரிவது மன்னரின் காதுக்கும் எட்டியது. அவனைக் கொலு மண்டபத்திற்கு அழைத்து வருமாறு ஆணை பிறப்பித்தார். மன்னனுக்கும் வாலிபனுக்குமிடையே நீண்டதொரு உரையாடல் தொடர்கிறது. வாலிபன் தான் சொன்னதைச் செய்ய அவகாசம் கேட்க மன்னனும் மூன்று மாதங்கள் தர இசைகின்றான். மூன்றுமாதங்கள் முடிவுற்றன. மலையடி வாரத்தில் மக்கள் கூட்டம் கூடியது. மன்னரும் அமைச்சர்களும் தங்கள் தங்கள் இடங்களில் அமர்ந்திருந்தனர். வாலிபன் வண்ணரதமொன்றிலிருந்து இறங்கினான். அவன் மேனி புதுப் பொலிவுடனும் வலிவுடனும் விளங்கியது. " நான் மலையைத் தலையில் தூக்கிக் கொண்டு நடக்கத் தயார்" என்று கூவினான். ஆனால் அவன் மலையைத் தூக்கவில்லை "செய்து காட்டு" என மன்னவன் உரத்த குரலில் கூறவும், 'மன்னா! மலையைத் தலையில் தூக்கிக் கொண்டு நடப்பதாகத்தான்சொன்னேன் நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இப்போதே இந்த மலையை என் தலையில் தூக்கி வையுங்கள். அதைத் தூக்கிக் கொண்டு நாடு முழுவதும் நடக்கிறேனா இல்லையா என்பதைப் பாருங்கள் 'என்றான். மன்னன் வெகுண்டான். அவனைக் கைது செய்ய உத்தரவிட்டான். அதற்கெல்லாம் அந்த வாலிபன் நிதானமாகப் பதிலுரைத்தான். இறுதியில் அந்த வாலிபன்

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

எனும் குறளை மன்னருக்கு அறிமுகப்படுத்தினான். இந்தக் குறளோவியத்தை உரையாடல் வாயிலாகத் தொடங்கும் கலைஞர் நிகழ்ச்சியூடே வாலிபன் தான் நுழைந்த நாட்டில் மக்களுக்குத் திருக்குறள் புழக்கத்தில் உள்ளதா என வினவ எங்கள் நாட்டு அரசர் திருக்குறளை அறியார் என்று கூறினர். இந்நிலையைத் தான் கலைஞர் இந்தக் குறளோவிய இறுதிப் பகுதியில் சுட்டிக் காட்டி அப்படிப்பட்ட நிலைமை தமிழ் நாட்டில் வந்து விடக்கூடாது என்ற உணர்வுடன் இந்த உரையாடலை நிறைவு செய்கின்றார். இங்கு டாக்டர் ந.சஞ்சீவி அவர்கள் கலைஞர் பற்றிக் கூறுவது எவ்வளவு பொருத்தமாக அமைந்துள்ளதென்பதைப் புரிந்து கொள்ளலாம்.

"நம் மாண்பு மிகு கலைஞரின் திருக்குறள் ஈடுபாட்டுள்ளம்
திருவள்ளுவர் வழிபாட்டு உள்ளமுமாகத் திகழல் தெளிவாகும்"[4]

சிறுகதை அமைப்பு

குறளோவியத்திற்கு இணையான ஒரு நிகழ்ச்சியைச் சிறுகதை வடிவில் தருகின்றார் கலைஞர். இது ஒரு கற்பனை. மாங்காடு என்னும் அழகிய சிற்றூர் அங்கு மருதன் என்பவன் வாழ்ந்து வந்தான். பெரிய குடும்பத்தில் பிறந்தவன், செல்வந்தன். ஆனால் அறிவுத் திறனில்லை. இருப்பினும் தன்னை மிகையாக நினைத்துக் கொண்டான். அவ்வூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வீரகாளைகளை அடக்கிய இளைஞர்களைப் பாராட்டுவதற்குப் பதிலாக அவர்களை ஏளனம் செய்கின்றான். நாட்டிய மங்கையின் சிறப்பையும் ஆசிரியர்களின் உயர்வையும் இகழ்ந்து பேசுகிறான். இந்நிலையில் ஒரு நாள் இரவில் மருதன் வீட்டில் கொள்ளைக்காரர்கள் நுழைந்து அவனைப் பயமுறுத்துகின்றனர். மருதன் அந்த நள்ளிரவில் திக்குத் தெரியாமல் ஓடினான். ஏளனம் செய்த நாட்டியக்காரி வீடு செல்கிறான். அவள் இவனுக்குப் புகலிடம் தரமறுத்து விடுகின்றாள். பாதையில் மாணவர்கள் சூழ்ந்து கொண்டு கேலியுடன் கும்மாளம் அடிக்கத் தொடங்கினர். மருதன் மேலும் ஓடிக் கொண்டேயிருந்தான். மிரண்டு போன காளையொன்று அவனைத் துரத்தியது ஆங்குற்ற இரு இளைஞர்கள் அவனைக் காப்பாற்றினர், முன்னாளில் அவர்களின் வீரத்தைப் பழித்துரைத்த மருதன் இப்போது அவர்களுடைய வீரத்தைப் பாராட்டிப் பேசுகிறான்.

பித்துப் பிடித்தவனைப் போல் ஆகிவிட்ட மருதன் தள்ளாடியவாறு வீடு நோக்கி நடந்தான். வீட்டைச் சுற்றிக் காவலர்கள் நின்றிருந்தனர். அவர்களைப் பார்த்ததும் மருதன் "அய்யா! என்னை மன்னித்துவிடுங்கள்! 'நான்' என்ற அகந்தையால் எல்லோரையும் பகைத்துக் கொண்டேன். இப்போதுதான் புரிகிறது. ஒரு பித்தனின் அறிவைவிட என் அறிவு குறைவானது' எனக் கூறியவனாய் அவர்களைத் தொழுது வணங்கினான். சிறுகதைப் போக்கில் மருதனுடைய வாழ்க்கையின் ஒரு நிகழ்ச்சியை மட்டும் சுட்டி அமைகின்றது இக்குறளோவியம். மருதனுக்குப் பொருத்தமான திருக்குறள் இதோ.

"ஏமுற்றவரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன்"

வினைத் திட்பத்தில்

"துன்பம் உறவரினும் செய்கதுணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை" எனும் குறளில் வள்ளுவர் 'முடிவில் இன்பம் கொடுக்கும் தொழிலைச் செய்யும் போது துன்பம் மிக வந்தபோதிலும் துணிவு மேற்கொண்டு செய்து முடிக்க வேண்டும்' என்கிறாா் இதற்குரிய குறளோவியம் சிறுகதை வடிவில் புதுக்கவிதை நடையில் மிளிர்கின்றது.

"கற்கள் அவன் காலைக் குத்தின
இரத்தினங்கள் பதித்தவைபோல்
இருபாதங்களும் காட்சி தந்தன
கோடை வெயில் கொளுத்திற்று-
குடை பிடிக்க வழியில் ஒரு மரமும் தயாராக இல்லை
- - - - - - - - - - - - - - - -
- - - - - - - - - - - - - - - -
நடந்து கொண்டே யிருந்தான்
பாம்பொன்று சுற்றியது காலில்
பசலைக் கொடிபோல எடுத்துப் போட்டுப்
பாதை மாறாமல் பார்த்தபடி
பாழ்காட்டில் பயணம் செய்தான்.
- - - - - - - - - - - - - - - - - -
- - - - - - - - - - - - - - - - - -
நடந்தான் - நடந்தான்
நடந்து கொண்டே யிருந்தான்
நஞ்செனத் தோன்றிய துன்பங்கள்
பஞ்செனப் பறந்தன - பயணமும் முடிந்தது!- - - -
நாடிய இலட்சியக் காதலி காத்திருந்தாள்-
- - - - - - - - - - - - - - - - - -
- - - - - - - - - - - - - - - - - -
இதைத் தான் வள்ளுவ அறிஞன்
துணிவுடன் துன்பத்தைக் கடந்தால்
பணிவுடன் இன்பம் வந்து
கைகட்டி நிற்கு மென்றான்"

புதுக்கவிதை வாயிலாகச் சிறுகதை அமைப்பில் அரிய விளக்கம் தந்து வள்ளுவரின் குறளுக்கு எவ்வளவு பொருத்தமான ஓவியத்தை வரைகின்றாா் என்று எண்ணி வியப்புறுகையில் இதைவிடச் சிறந்த ஒரு விளக்கத்தை வேறு எவரால் தரமுடியும் ? கலைஞரைத் தவிர்த்து!

7. வண்ணனை : நீத்தாா் பெருமையில்

"நிறைமொழி மாந்தா் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்" எனும் குறளில்

பயன் நிறைந்த மொழிகளில் வல்ல சான்றோரின் சிறப்பை உலகில் அழியாமல் விளங்கிடும் அவர்களது மறைமொழிகள் காட்டிவிடும்' என்றுரைக்கின்றார் திருவள்ளுவர். இதற்குக் கலைஞர் எடுத்துக் கொள்ளும் ஓவியம் நம் சிந்தனைக்கு அரிய விருந்தாகக் காட்சியளிக்கின்றது.

அயல் நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இந்தியத் திருநாட்டைக் காணவந்தனர். இந்தியாவில் பல்வேறு கலாசார இடங்களைக் கண்டுகளித்தனர். மேலும் டில்லியில் உள்ள இராஜ்காட்டில் அமைந்த காந்தியடிகளின் சமாதி, உலகின் சமாதானப் புறாவாகப் போற்றப்பட்ட நேருஜியின் உடல் எரியூட்டப் பெற்ற இடம், அரசியலில் அருந்திறன் கொண்ட சிந்தனையாளர் மூதறிஞர் இராஜாஜிக்கு அமைக்கப்பட்ட நினைவாலயம், தியாகச் சுடர் காமராஜருக்கு எழுப்பப்பட்டுள்ள நினைவிடம், பகுத்தறிவுப் பாசறையாம் பெரியாரின் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடம் முதலியவற்றைக் கண்டு வணங்கினர். மேலும் தென்புலத்துச் சிங்கம் தேவர் திருமகனின் திருவுருவச் சிலையைப்பார்த்தனர் மதுரையம்பதியில் தாழ்த்தப்பட்டோருக்கென உரிமைக் குரல் கொடுத்த அம்பேத்காரின் புகழ்பாடும் கல்லூரிகளைக் கண்டனர். மதப்பூசல் எழாமல் அரணாகக் காத்து நின்ற காயிதே மில்லத் அவர்களின் நினைவு கலையாமல் நின்று கொண்டிருக்கும் கலைக் கூடங்களைக் கண்டனர். பின்னர் பயணிகளின் பார்வை சென்னையின் நீண்ட கடற்கரை மீதுவிழுந்தது. அங்கே வானளாவிய நின்ற நெடியதூண் அவர்கள் வருகையைக் கல்லறைக்குள் உறங்கிக் கொண்டிருக்கும் அந்தத் தூயவருக்கு உணர்த்துவது போல் அமைந்திருந்தது. சுற்றுலாப் பயணிகள் கல்லறையைத் தங்கள் கண்களால் தொழுதனர். " எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது" என எழுதப்பட்டிருந்த அந்த வாசகத்திற்குப் பொருள் புரிந்து கொள்ள அயல் நாட்டினர் ஆவலுற்றனர். மொழிபெயர்ப்பாளர் விளக்கினார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று சொற்களை மறை மொழிகளைப் போலத் தமிழர்களுக்குத் தந்தவர் எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று தன்னைப் பின்பற்றியோருக்கு வலியுறுத்தியவர் அந்த இதயத்திற்குச் சொந்தக்காரர்-அவர் பெயர்தான் அண்ணா. அண்ணாதுரையாகப் பிறந்தார். இத்தகைய மறைமொழிகளை என்றும் அழியாத அளவுக்குத் தந்த காரணத்தால் அண்ணாவாக மறைந்தார். சுற்றுலாப் பயணிகள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய சொற்களின் ஆழத்தை ரசித்தனர், புகழ்ந்தனர், போற்றினர்.

வண்ணனைப்படுத்தும் பான்மையில் கலைஞர் நம் இந்தியத் தலைவர்களையும் தமிழகத்துத் தலைவர்களையும் ஒருசேர நினைவுபடுத்துகிறார். பின்னர் தமிழகத்தின் பெர்னாட்சா எனப் போற்றிப் புகழ்பாடும் தன்னுடைய தலைவராம் முன்னாள் தமிழக முதலமைச்சராம் பேரறிஞர் அண்ணாவைக் கண்ணியப்படுத்தும் முறையில் மூன்று மறை மொழிகளாகிய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதை விளக்கிக் குறளோவியத்தை நிறைவு செய்கின்றார். அன்றே "நிறைமொழிமாந்தர்" எனும் குறளை விளக்கியதன் மூலம் சமத்துவ புரத்தைத் தோற்றுவித்த

கலைஞர் இன்று அதனை உருவாக்க முயல்வதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. குருதியில் கலந்த அந்த நல்லுணர்வுகள் தாம் குறளோவியத்தில் எதிரொலிப்பதைக் காண்கின்றோம்.

இவ்வாறே கிரேக்க நாட்டுச் சிந்தனைச் சிற்பி சாக்ரடீசு, ஆபிரகாம் லிங்கன், காரல் மார்ச்சு, ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின், ஜின்னா போன்ற தலைவர்களையும் பகத்சிங், இராஜகுரு, சுகதேவ் ஆகிய இந்திய நாட்டின் விடுதலைக்காகப் போராடி வீர மரணமுற்ற வீரர்களையும் கலைஞர் குறளோவியத்தில் இடம் பெறச் செய்துள்ளார். ஆங்காங்குப் புராணச் செய்திகளையும் தொட்டுச் செல்கின்றார். மேலும் சங்க வரலாற்றுச் செய்திகள், உலக வரலாற்று நிகழ்ச்சிகள், பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களின் மனோன்மணீய நாடக மாந்தர்களாகிய புருடோத்தமன், குடிலன் ஆகியோரையும் உருவக விளக்கத்துடன் குறளோவியத்தில் அணிபெறச் செய்துள்ளார். நாடுபற்றிக் கூறுகையில் அரணியல் தலைப்பில் நாட்டிற்கான உறுப்புகள் குறித்தும் தெளிவுபடுத்துகின்றார். நல்ல பல செய்திகளின் பெட்டகம் குறளோவியம் திருக்குறளுக்கு அன்று திருவள்ளுவமாலை தோன்றியது. இன்று குறளோவியம். மலர்ந்துள்ளது. இந்நூலில் 300 குறளோவியங்களும் 354 குறள்பாக்களும் பயன்படுத்தப் பட்டுள்ளன. இந்நூலின் பெருமை குறித்துப் பேரறிஞர் அண்ணா கூறுகின்றார்.

> "நூல் முழுவதும் கருணாநிதி ஒரு காவியப்படைப்பிற்குத் தேவையான செழுஞ் சொல்லோட்டத்தை, சீரிய அழகு அமைப்பை உருவாக்கித் தருகிறார்"[5]

டாக்டர் மு.வ. அவர்களின் கருத்துரையும் ஈண்டு அறியத்தக்கது.

"தமிழகத்தின் பெருமையைச் சங்ககாலம் போல மீண்டும் உலகம் போற்றக் கூடிய அளவுக்கு உயர்த்த வேண்டும் என்ற கனவை நனவாக்க விடாமுயற்சியை மேற்கொண்டுள்ள சிறந்த அறிஞர் கலைஞர்"[6].

சான்றெண் விளக்கப் பட்டியல்

1. மாங்குடி மருதனார் - திருவள்ளுவமாலை பா.எண்.7
2. க.த.திருநாவுக்கரசு - திருக்குறள் நீதி இலக்கியம்-பக்-59
3. - மேலது - -மேலது - பக் -76
4. இளங்கோவடிகள் - சிலப்பதிகாரம்-அந்திமாலைச் சிறப்புச்செய்காதை வரிகள்-31-32.
4.அ. ந.சஞ்சீவி - இலக்கியத் தலைவர் கலைஞர்-பக் 133
5. மு. கருணாநிதி - குறளோவியம் முகப்பு அட்டையில் அறிஞர் அண்ணா எழுதிய சிலப்பதிகார அணிந்துரையில்
6. - மேலது - - மேலது - டாக்டர் மு. வரதராசன்

சங்கத்தமிழ்
சிலப்பதிகாரம்

13 ஒப்பியல் பார்வையில் சங்க இலக்கியத் தமிழும் கலைஞரின் சங்கத் தமிழும்

முனைவர். தமிழண்ணல்

போற்றிக் கலைஞருக்குப் பூத்தூவி
வாழ்த்துகிறோம்!
ஆற்றலுடன் பல்லாண்டு
அரசாள்க!

தமிழறிஞர்களின் சார்பாக வாழ்த்தியது இஃது எனலாம். பாரதியார் பல்கலைக்கழக முன்னைத் தமிழ்த்துறைத் தலைவரும் புதுக்கவிதை முன்னோடிகளில் முத்திரை பதித்த பாவலருமாகிய பண்புசால் செம்மல் கவியரசர் சிற்பி வடித்த அழகிய வெண்பா இது!

கலைஞரின் 'சங்கத் தமிழ்' ஓர் இலக்கியப் பெட்டகம். நமது சங்க இலக்கியக் கருவூலத்தை, இக்காலத்தவரும் அணிந்து மகிழும் அணிகலன்களாக்கித் தந்த மாணிக்கப் பெட்டகம் அது. ஆட்சியில்இல்லாத போதெல்லாம் - ஆம்ஆம்! - அவர் தமிழை ஆட்சிசெய்துகொண்டிருந்தார்; தமிழால் தமிழ் இலக்கியத்தைக் கற்றும் சொல்லியும் எழுதியும் ஆட்சி செய்துகொண்டிருந்தார். ஆம்! எப்பொழுதும் 'ஆட்சி' செய்துகொண்டிருந்ததால்தான் அவருக்கு இன்பமும் துன்பமும் சமமாயின; இடர்ப்பாடும் மிகைப்பாடும் அவரை அசைக்கவில்லை.

'சங்கத் தமிழ்' வெளியீட்டுவிழா, சங்கம் திகழ்ந்த மதுரையில் நடந்தது. பி.டி.ஆர். பழனிவேல்ராசனார் முன்னின்று, அரசர் முத்தையாமன்றத்தில் அதனை ஓர் இலக்கிய விழாவாக நடத்தினார்கள். கலைஞர் அன்று ஆட்சியில் இல்லை என்றாலும் இவ்விழா மிகுந்த மாட்சிமையோடு நடந்தது. "மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில், இன்று தமிழ்த்துறைத் தலைவராக இருக்கும் யான் இவ்விழாவில் கலந்துகொள்ளலாமா என்று நண்பர்கள்-ஏன் மேல் அதிகாரிகள் கூடக் கேட்டார்கள். நான் இவ்விழாவில் கலந்துகொள்ளக் காரணம் இது அரசியல் விழா அன்று; முழுக்க முழுக்க இலக்கிய விழா. கலைஞரின் படைப்பு முழுவதும் இலக்கியமாக இருப்பதைச் சுட்டிக் காட்ட விழைகின்றேன். முதலிலிருந்து முடிவுவரை 484 பக்கங்களிலும் சங்கத் தமிழின் சாரமே இடம் பெற்றிருக்கிறது. அதாவது இலக்கியமே இடம்பெற்றிருக்கிறது. ஓரிடத்தில் கூடத் தம்மை ஒரு கட்சிக்காரராகக் காட்டி, இன்றைய அரசியல் மாறுபாடு-வேறுபாடுகளைப் புகுத்தாமல், முழுவதும் தாம் ஒரு இலக்கியவாதியாகவே இருந்துகொண்டு, இதை எழுதியுள்ளார். ஐம்பதாண்டு, நூறாண்டுக்குப் பிறகு இதைப் படிக்கும் ஒருவன், இவரை ஓர் அரசியல்வாதி என்பதைவிட, இலக்கியவாதி என்றே முதன்மைப்

படுத்துவான். இவர் ஒரு கட்சிசார்ந்தவர் என்ற நினைப்புக்கூட அன்று வாராது. ஏனெனில் 'இலக்கியக் கலைஞர்' கட்சிக்கு அப்பாற் பட்டவர்; அவர் 'தமிழ்க் கலைஞராக; அனைவராலும் மதிக்கப்படுபவராக இருப்பார். அதனால்தான் ஓர் 'இலக்கியவாதி' எழுதிய, 'முழுவதும் இலக்கியமயமான ஒரு நூலைப் பற்றித் திறனாய்வு செய்ய ஒரு தமிழ்ப்புலவனாகிய தமிழண்ணல் வந்துள்ளேன்", என்று தற்காப்பு உணர்ச்சியுடன் என் பொழிவைத் தொடங்கினேன். இன்றும் அக் கருத்தையே முதன்மையான மதிப்பீடாக முன்வைக்க விழைகின்றேன்.

பன்முகப் படைப்பாளி

அறிஞர் அண்ணா வழியில் எழுத்திலும் பேச்சிலும் தங்களை வளர்த்துக்கொண்ட, தம்பிமார்கள் பலராவர். அவர்களுக்குள் கலைஞர் ஒருவரே, இறுதிவரை, பல்வேறு அரசியல் பணிகளுக்குகிடையேயும் தம்மை ஒப்புயர்வற்ற எழுத்தாளராக-காப்பியப் புலவர், நாடகக் கலைஞர், திரைப்படச்செல்வர், கவிஞர் கோமான், கதையாசிரியர், புதினப் படைப்பாளர், இதழியல் வித்தகர், இலக்கிய ஆய்வாளர் என இவ்வாறு தம்மை ஒரு பன்முகப் படைப்பாளியாக இனங்காட்டிக்கொண்டவர். இன்றைய ஆரவாரம் அடங்கிய பிறகும், அவரைக் காலந்தோறும் இனங்காட்டிக் கொண்டிருக்கப்போவன அவர் படைத்த இலக்கியங்களேயாம்.

'மனோகரா' திரைப்படத்தை முதன்முதலில் பார்த்துவிட்டு வந்த என் அண்ணன் மகன் சொன்னது இன்றும் என் நினைவில் உள்ளது: "கொட்டகை உள்ளே போய் உட்கார்ந்தது முதல், இருக்கையில் சாயவே இல்லை, நிமிர்ந்தது நிமிர்ந்தபடி இருக்கவைத்துவிட்டது, தொடர்ந்து வந்த கதையும் காட்சியும் வசனமும்", என்றான். அதை ஒரு நல்ல திறனாய்வு உரையாகக் கருதிக்கொண்டேன்.

குறளுக்கு ஓவியங்கள் வரைந்தபோது, அதை ஒருவாழ்வியல் நூலாக்க முயன்ற புலவர்கள் என் கண்முன்னர் வந்தனர். அவர்கள் நடுவே, ஒரு புதிய உத்தியைக் கையாண்டு, புதுமை படைத்த ஆற்றலைக்கண்டு டாக்டர் மு.வ. அவர்களே பாராட்டினார்கள். கலைஞரின் சிலப்பதிகாரத்தை, இளங்கோவின் சிலப்பதிகாரத்தோடு ஒப்பிட்ட மூதறிஞர் வ.சுப.மாணிக்கம் அவர்களே, இப்புதிய சிலம்பு காலத்திற்கேற்ற மாறுதல்களுடன் படைக்கப்பட்டுப் புத்துணர்ச்சி தருவதாகக் கூறியுள்ளார்கள்.

நமது அரசியல் தலைவர்களில், மிகுதியாகப் **'படைப்பிலக்கியம்'** படைத்தவர் என்ற பெருமை கலைஞருக்கு உண்டு. இப் படைப்புக்களில் புதிய நடை, புதிய வடிவம், புதிய உத்தி, புதிய பாணி எனப் பல புதுமைகள் உள. எனவே ஒட்டுமொத்தமாகக் கலைஞரின் படைப்புக்களை மதிப்பிடும் ஓர் ஆய்வாளர் 'கலைஞர் தமிழ்' என ஒன்றைக் கண்டு, கூற வாய்ப்புளது. அத்தமிழ், தமிழின் ஆணிவேராகிய சங்கத்தமிழிலிருந்து வளர்ந்தது; அறிஞர் அண்ணாவின் வழி வந்தது; பாவேந்தர் பாரதிதாசனின் பெருமிதம் படிந்தது; புத்துலக இலக்கியச் சிற்பிகளின் புதுமைப்போக்குகளையும்

அரவணைத்துக்கொண்டது. அதனால் புதிய மறுமலர்ச்சித் தமிழ் என்ற இலக்கிய வரலாற்றில், கலைஞர் பக்கம் ஒன்று தக்க 'கனத்து'டனும் கவனத்துடனும் இடம் பெறுகிறது. இலக்கியக் கலைஞர், அரசியல் கலைஞரினும் முன்னிற்கிறார் எனில், உண்மை-வெறும் புகழ்ச்சி இல்லை. இன்றைய நிலையை விட, எதிர்காலத்தில்தான் அது நன்கு விளங்கும்.

ஒளியும் புகழும்

ஒருவர் உலகிடை விளங்கித் தோன்றுவதைக் கூறவரும் நம் தெய்வப்புலவர் திருவள்ளுவர் இரண்டு சொற்களை எடுத்தாள்கிறார். ஒளி, புகழ் என்பனவே அவை. ஒளி என்பது ஒருவர் வாழுங்காலத்துப் பெறுகின்ற சிறப்பு; புகழ் என்பது ஒருவருக்குப் பிறகும் நிலைத்திருப்பது.

இன்றைய அரசியலிலும் இதைப் பார்க்கலாம். ஒருவர் ஆட்சி இருக்கை மீது வீற்றிருக்கும்போது எத்துணை ஆரவாரம்; சிறப்பு; பெருமை. இவை 'ஒளி' எனப்படும். இவை பதவி போங்காலத்து உடன் போய்விடுவதுண்டு; சிலர் வேண்டுமானால் வாழுங்காலமெல்லாம் ஒளியுடனிருப்பர். அவர்தம் ஆளுமையால் விளையும் 'ஒளி' அது!

புகழ் என்பது நிலைத்திருப்பது. ஒருவருக்குப்பிறகும் பெயர் சொல்வது. ஒருவர் திறன் நினைக்கப்படுவது. 'ஒளி' போல் மங்காது, மறையாது நூற்றாண்டுகளுக்குப் பிறகும் நினைக்கப்படுவதே புகழாகும்.

கலைஞரின் ஆட்சித்திறன் உலகறிந்தது. 'செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சி' அது. அவரது நினைவாற்றல், நினைவைத் தொகுத்துரைக்கும் திறன் எதிரியைத் திகைக்க வைக்கும்; அதிகாரிகள் மறுமொழியவொண்ணாது கையைப்பிசைய வைக்கும். அவரது ஆளுமை ஒளி, வெற்றாரவாரத்தால் விளைவதன்று. "இந்திய நாட்டிலேயே ஆண்ட, ஆளுகிற முதல்வர்களில் முதல்வர் அவர், ஆட்சித்திறனில்" என்ற பெருமை அவருக்கு உண்டு.

அவரது ஒளியுடைமை 'அவிந்துபோகும் ஆயிரம் 'வோல்ட்டு' மின்விளக்குப்' போன்றதன்று. ஞாயிற்றினின்று எழும் இயற்கை ஒளி போன்றது.

ஆனாலும் இந்த 'ஒளியுடைமை' பெரும்பாலும் வாழுங்காலத்ததாகும்; ஆட்சித்திறன் வரலாற்றில் புகழாக நிலை பெறும்.

அவர் படைத்த இலக்கியங்களே, பிற்காலத்தில் அவர் புகழை முன்னிறுத்தும் என்பதை மறத்தலாகாது. அவர் பெயரை வரலாற்றில் பதிவிப்பதில் 'இலக்கியமே' முன்னிற்கும். இத்தகைய இலக்கியம் படைத்தவர் என்ற முதன்மையுடன் தான், அவர்தம் ஆட்சித்திறன் மதிப்பிடப்படும். அதாவது 'பெயர் சொல்லும் பிள்ளை' என்பதுபோலப் பெயர் சொல்லவைப்பது, அவர்தம் படைப்புக்களாகவே இருக்கும்.

நுண்மாண் நுழைபுலம்

இலக்கியம் படைப்பவரெல்லாம் திறனாய்வாளராவதில்லை. திறனாயும் புலமை, கணப்பொழுதில் கண்டுணரவல்லது, பிறரெல்லாம் ஒரு பொருள் இல்லாத இடத்தில் அதை நுட்பமாய்த் திட்பமாய்த் தேடிக்கொண்டிருப்பர். திறனாயும் இயல்பான கூர்த்த அறிவோ, உள்பொருளைப் பளிச்செனப் பாய்ந்து பற்றிக்கொள்ளும்! பிறர் திகைக்குமிடத்தில் இது வெற்றிவாகை சூடும்!

இதை 'உணர்வின் உடனடி வெளிப்பாடு' என்பர், மேல் நாட்டவர். கலைஞரிடம் ஆட்சித்திறனிலும் இதைக் காணலாம். இலக்கிய ஆய்விலோ அதனிலும் கூடுதலாய்க் கண்டு மகிழலாம்!

காரைக்குடிக் கம்பர்விழாவில் முதன்முதலாகக் கலைஞர் பேச வருகிறார். ஆண்டாண்டுக் காலமாகக் கம்பரைப் புகழ்பவர் விண்டுரைக்கும் பாடல் ஒன்றை எடுத்துக் கொள்கிறார்.

வண்மை இல்லைஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லைஓர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லைபொய் உரைஇலாமையால்
வெண்மை இல்லைபல் கேள்வி மேவலால்

கோசலநாட்டில் வறுமையே இல்லையாதலால், அங்கு வண்மைக்கு இடமில்லையாம். 'எத்தகைய நாடு கோசலம் பார்த்தீர்களா?' என்று எல்லோரும் புகழ்ந்து பேசும் பாடல் இது. கோசலம் ஒரு சமத்துவபுரி; பொதுவுடைமையாம் சோஷலிசம் பூத்தநாடு; அதற்கு இல்லை ஈடு என்றே பலரும் முழங்கி வந்தனர்.

கலைஞர் அன்று தம் பேச்சில், "கோசலம் இருக்கவேண்டிய நிலையைக் கம்பர் 'உடோபியா' போல இருக்க வேண்டுமெனக் கற்பனை செய்கிறாரே தவிர, உண்மைநிலை வேறு; அங்கு இரப்பவர்களும் ஈபவர்களும் நிறைந்திருந்ததை அடுத்துவரும் செய்திகளால் உணரலாம்" என்று கூறிச் சான்றுடன் விளக்கினார்.

மந்தரை கைகேயியைப் பலவாறு தந்திரமாய்ப் பேசி மனத்தை மாற்ற முயலும்போது, "இராமனுக்கு முடி சூடிவிட்டால், துன்புற்று வறுமை தொடரத் துயரத்தோடு உன்னிடம் வருபவர்களுக்கு, கோசலையிடம் நிதியுதவி கேட்டு ஈவாயா? அல்லது 'போங்கள் சனியன்களா' என்று அவர்களை வெகுண்டு, விரட்டுவாயா?" என்று இவ்வாறு கேட்கும் பாடலைக் காட்டி, கலைஞர் அவர்கள் கோசலத்தின் உண்மை நிலை நம்நிலைமையே என விளக்கினார். வறுமை இல்லாததால் வண்மை இல்லை என்றால், மந்தரை சொல்வதும் கோசலநாட்டு நிலைதானே? இங்கு வறுமையைக் காட்டி, வண்மைக்கு என்ன செய்வாய் என்று கேட்கும் இது முன்னுக்குப்பின் முரணாகுமே? அதனால் முன்னதை டி. மூர். என்பார் கற்பித்தெழுதிய 'உடோபியா' போன்றதொரு கற்பனை நாடு என்றும், கோசலத்தில் வறுமையும் வண்மையும்

இருக்கவே செய்தன என்றும் கேட்பவர் தலையசைத்து ஏற்குமாறு விளக்கினார்.

தூண்டும்இன்னலும், வறுமையும் தொடர்தரத் துயரால் ஈண்டு வந்துஉனை இரந்தவர்க்கு, இருநிதி அவளை வேண்டி ஈதியோ ?வெள்குதியோ ? விம்மல் நோயால் மாண்டு போதியோ ? மறுத்தியோ ? எங்ஙனம் வாழ்தி ?

தொல்காப்பியர் எதனையும் 'மறித்து நோக்கி' உண்மை அறியவேண்டும் என்பார் 'நோக்கு' என்றும் அதைப் பெயர் சூட்டி, அழைப்பார் 'ஏன் ? இது இவ்வாறு அமைவது கூடுமா ? என மறித்துமறித்து; வினாத் தொடுத்துத் தொடுத்து அறிவதே நோக்கு ஆகும்.

சிலர் மறித்து - எதிர்வினா எழுப்பிப் பார்க்காமல் புகழ்ந்தபடி இருப்பர். அன்னவர்கட்கெல்லாம் ஒரு பாடமாக அமைந்தது, கலைஞரின் அன்றைய பேச்சு!

எழுத்தாளனின் கலைநுட்பம்

யான் இடைநிலை உயர்கல்வி (Intermediate) படித்த ஞான்று 'கட்டுரையாளனின் கலை' (The art of the essayist) என்ற கட்டுரை ஒன்று, எனது ஆங்கிலப் பாடத்தில் இடம் பெற்றிருந்தது. அதில் இரண்டு செய்திகள் எனக்கு மறக்கவொண்ணாதனவாயின.

"எழுத்தாளன் என்பவன் தான் சொல்லப்புகும் கருத்திற்கு முதற்பத்தியிலேயே வந்துவிடவேண்டும்; இன்னும் முதல் வாக்கியத்திலேயே வருவது சிறந்தது; மேலும் முதற்சொல்லிலேயே வந்துவிடின் அதுவே தனிச்சிறப்பாகும்".

சங்க இலக்கியத்திற்கு இது மிகவும் பொருந்தும். கலைஞரின் 'சங்கத்தமிழ்' அதை உள்ளவாறே பின்பற்றுவது கூடுதல் சிறப்பாகும்.

மற்றொன்று "எழுத்தாளன் என்பவன் நாம் பார்ப்பதைத் தான் பார்க்கின்றான்; நாம் கேட்பதைத்தான் கேட்கின்றான்"; நாம் அனுபவிப்பதையே அவனும் அனுபவிக்கின்றான். ஆனால் நாம் பார்த்ததில், கேட்டதில், நுகர்ந்ததில் நாம் பாராது விட்ட ஒன்றைக் கண்டு கூறி, அட! நாமும்தானே பார்த்தோம்; நமக்கு அது தோற்றவில்லையே" என நம்மைச் சூள் கொட்ட வைத்துவிடுகின்றான்".

கலைஞரிடம் இந்தத் திறமை மிகுதி. அவரிடம் எழுத்துக் கலைத்திறமை பலவுள. அவை தொகுத்துக் காணப்படவேண்டும். வெறும் பாராட்டு மொழிகள், பகட்டு மொழிகளாகிவிடும். 'புலமிக்கவரைப் புலமை தெரிதல் புலமிக்கவர்க்கே புலனாம்'. ஆம்! தேர்ந்த ஆய்வாளர்கள் தேடினால், இத்தகைய அறிவொளி தவழும் நன்முத்துக்கள் பல கிடைக்கும்.

நாமும்தான் புறநானூறு படிக்கின்றோம். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பாடலைப் படிக்கின்றோம். கீழே 'கணியன் பூங்குன்றன் பாட்டு' என்று போடப் பெற்றுளது. மூடிவைத்துவிட்டுப் பாடலை வானளாவப்

புகழ்கிறோம். கலைஞருக்கு ஓர் உண்மை பளிச்சிடுகிறது. 'கணியன் என்பான் வானநூல் வல்லவன்; கணிப்பவன்; சோதிடன்'. சரி, அவன் பூங்குன்றத்தைச் சேர்ந்தவனாதலால் 'பூங்குன்றன்' எனத் தன் ஊர்ப்பெயரால், தன் பெயரை வெளிப்படுத்தியுள்ளான். 'யாதும் ஊரே' என்றவன் தன் ஊரால் தன் பெயரை வெளிப்படுத்துவது முரண் அல்லவா? அன்று, அன்று! தன் அடையாளத்தை இழந்து, உலகப் பொதுமை பேசுவது அறியாமை. தன் ஊர்ப் பெயருடன் விளங்கித் தன் அடையாளம் இழக்காமல், தன்னை இழக்காமல் ஊரை, உலகை அணைத்துக் கொள்வதே மானுடப் பொதுமையாகும். அதனாலேயே, 'யான் பூங்குன்றன்; ஆயினும் யான் எல்லா ஊரையும் என் ஊரென நேசிப்பவன்' எனப் பாடுகின்றான். நமக்குப் பளிச்சிடாத' இவ் அறிவுச் சுடர் கலைஞரிடம் ஒளி பரப்புகிறது. அவர் சங்கத்தமிழில், இப் பாடலின் மீட்டுருவாக்கத்தை இவ்வாறு முடிக்கின்றார்:-

" ஆனால் ஒன்று,
ஊரெல்லாம் இணைந்து ஒருலகாய் ஆவதென்பதும்
உறவுகொண்டே மனிதகுலம் ஒன்றே எனத் திகழ்வதும்
உயரிய குறிக்கோளாம் என்றுரைத்த புலவன்கூட,
தனது ஊரை மறவாமல்

பூங்குன்றம் என இணைத்தே, கணியன் பூங்குன்றன் எனும் கவிஞனாய் உலவியதைக் கவனமுடன் எண்ணிப் பார்த்தால் -

அந்த மாமனிதனையும்
மண்ணின் பற்று விடவில்லை என்பதுதான்
உண்மையன்றோ?

[சங்கத்தமிழ், 1987. பக்.8,9]

'நேர் கொண்ட பார்வை' என்பார் பாரதியார். யாதும் ஊரே என்றால், தன் ஊரை விட்டன்று; யாவரும் உறவென்றால் தன்னை அழித்தன்று; அதுவே நேரிய பார்வை.

தன் வீடு சிறக்க வாழ்ந்து, ஊர்ச் சிறப்பைத் தேடவேண்டும். தான் சுத்தமாக இராது, ஊரின் சுத்தம் பற்றி ஒருவர் பேசினால் என்ன நினைப்போம்? பூங்குன்றன் பாடிய 'யாதும் ஊரே' என்பதில், இத்துணையும் இருப்பதைக் கலைஞர் உள்ளம் கண்டு கொள்கிறது என்றால், அந்த உள்ளத்திலுள்ள கலைத்திறன் சிறப்பை யாரும் ஏற்காதிருக்க இயலுமா? நாம் அடிக்கடி பார்த்தும், படித்தும் உணராத ஒன்றை, அவரால் 'பட்'டென்று சொல்லிவிட முடிகிறதே!

குறளோவியத்தை உணர்த்தும் சங்கத் தமிழ்

சங்க இலக்கியத்தைப் படிக்கும் பொழுது, பல இடங்கள் குறள் விளக்கமாக, குறட்கருத்துக்கு அடிப்படை போல இருப்பது கண்டுகொள்ளப்படும்.

முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்

(நற்றிணை 355)

இதனை, 'பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க, நாகரிகம் வேண்டுபவர்' (580) என்ற குறளுடன் ஒப்பு நோக்கினால் இவ்வுண்மை புலனாகும். இது போல் மேலும் பல இடங்கள் உள. ஆனால், வேறு ஒரு வழியில் திருக்குறளுக்கு விளக்கம் தரக் கலைஞர் சங்கத் தமிழைப் பயன்படுத்திக் கொள்கிறார்.

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும். (114)

இக்குறளுக்கு இயல்பான உரை யாது? திருவள்ளுவர் என்ன கருதியிருப்பார்? பலர் கருத்து வேறுபடும் குறள் இது. பரிமேலழகர், "அவரவருடைய நன்மக்களது உண்மையானும் இன்மையானும் அறியப்படும்" என்று உரையெழுதி, 'தக்கார்க்கு எச்சமுண்டாதலும் தகவிலார்க்கு இல்லை யாதலும் ஒருதலையாகலின்" என விளக்கமும் தருகிறார்.

அதாவது 'எச்சம்' என்பது மக்கள்-புத்திர சந்தானம்-சந்ததி.- சந்ததியாகப் பிள்ளை பிறந்திருந்தால் அவர் தக்கார்; சந்ததி பிறக்கவில்லையா, அவர் தகவிலார். வடநூல் முறையை ஒட்டிய இவ் விளக்கமே வழி வழியாகச் சொல்லப்பட்டு வந்தது. அண்மையில் புத்துரை கண்ட பலர், மக்கள், செல்வம், புகழ் என எஞ்சியிருப்பவற்றால் ஒருவர் தக்கார் அல்லது தகவிலர் என அறியப்படுவார், என எழுதினர்.

"அவரவர் எச்சத்தால் காணப்படும்" என்றால், அவரவர் இறந்த பிற்பாடு, எஞ்சியிருப்பது - அவர் தமது எச்சமாக இவ்வுலகில் விட்டுச் சென்றிருப்பது எதுவாயினும் அதன்தகுதி தகுதியின்மையே, அவர் தக்கவற்றால் வாழ்ந்து மறைந்தாரா? அல்லது தகவிலராய் இருந்து மறைந்தாரா? என்பனவற்றைக் காட்டும். குறிப்பிட்டு மக்கள் என்றோ புகழ் என்றோ குறள் சுட்டவில்லை.

சங்க காலத்தில் சேரமான் கணைக்கால் இரும்பொறை என்ற மன்னன் வாழ்ந்தான். அவன் ஒரு பெருவீரனேயாயினும், கோச்செங்கணான் எனும் சோழ மன்னனிடம் தோற்றுச் சிறைப்பட்டான். திருப்போர்ப்புறம் எனும் போர்க்களத்தில் தோற்ற அவனைக் குடவாயிற் கோட்டச்சிறையில் அடைத்துவைத்தான் சோழன். ஒருநாள் தாகம் காரணமாகத் தண்ணீர் கேட்ட பொழுது, சிறைக் காவலன் மிக அலட்சியமாகக் காலந்தாழ்த்துக் கொண்டுவந்தான். தன் இழிநிலை கண்டு மனம் வெதும்பிய சேரனின் மானவுணர்வு துடிதுடித்தது. அந்நீரைப் பருகாமலே, தன் மானவுணர்வை வெளிப்படுத்தும் ஒரு பாடலைப் பாடிவிட்டு, அம்மாமன்னன் உயிர்நீத்தான்.

குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆள்அன்று என்று வாளின் தப்பார்;
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்

மதுகை இன்றி, வயிற்றுத் தீத்தணியத்
தாம்இரந்து உண்ணும் அளவை
ஈன்மரோ இவ்வுலகத் தானே!"

(புறம் 74)

இதற்கு, முன்னுரை போலக் கலைஞர் தரும் வாசகம் இது.

ஏடொன்று எழுதிவைத்து
எதிர்காலத் தமிழகமே - அதனைப்
பாடென்று விட்டுச் சென்றான்!

இப் புறப் பாடலை, வழக்கம்போல் அவர் எளிமைப் படுத்தித் தரும் விதத்தைப் பாருங்கள்:

பிள்ளையொன்று இறந்து பிறப்பினும் - சதைப்
பிண்டமொன்று பிறந்து தொலைக்கினும்
மூப்புக் கொண்டு மடிந்திடினும்
முடிவிலொரு நோய்கண்டு முடிந்திடினும்
போரில் கலந்து விழுப்புண்பெற்று -
மானமிகு வீரரென மாண்டிடாத பழி
துடைப்பதற்காக,
வாள் கொண்டு உடலில் கீறி -
வான்புகழ் வாழ்வில் சேர்த்த பின்பே
உடலடக்கம் செய்திடும் மானமரபே
அடலேறுகள் மலிந்திடும் தமிழர்மரபு!
அந்தப்
பண்பாட்டு மரபுவழி வந்துதித்த நானோ - மனப்
புண்பட்டு, பகையரசின் சிறைப்பட்டு நாய்போல
தண்ணீர்க்கும் காத்திருக்கலானேன் - இனி
உண்ணீர் என்று பன்னீர் தந்து உபசரித்தபோதும்
தகுதியன்று இனி உயிர் வாழ்தல் - அதனாலே
தமிழ்த்தாயே! என் மானங் காக்க
உன்மடிதனிலே விழுகின்றேன், தாங்கிக்கொள்க!

இப்பாடல் ஒன்றே, இரும்பொறை இவ்வுலகில் விட்டுச்சென்ற எச்சம்! அவனைப் பற்றி வேறு எதனையும் நாமறியோம். என்றாலும் 'எச்சமாய்' அவன் பெயர் கூறி நிற்கும் இப் பாடல் ஒன்றே, "அவன் எவ்வளவு பெரிய மறவன்; எத்துணை மானவுணர்ச்சி மிக்கவன்; எவ்வளவு பெருமைக்குரிய தமிழன்" என்பதை - அதாவது அவன் எந்த அளவு 'தக்கவன்' - 'தக்கார் வரிசையில் சேர்க்கத் தக்கவன் என்பதைக் காட்டிநிற்கிறது.

திருக்குறளுக்கு உரைவிளக்கம் தருவார் போலக் கலைஞர், இப் பாடலுக்குத் தரும் முடிப்புரையையும் ஒருகணம் படித்துப் பாருங்கள்:

எப்படிப்பட்டோர் இருந்தார் மறைந்தார் என்பது
-அவரவர்
எச்சத்தாற் காணப்படும் என்பதற்கொப்ப

சேரமான் கணைக்கால் இரும்பொறை
வீரவாளினை ஓலையாய்க் கொண்டு
தீட்டிய புறப்பாடலை
நீட்டுகின்றேன் உம்மிடையே -
படித்துப் பாரீர்! - உணர்ச்சியால்
துடித்துப் போவீர்!

கலைஞரின் மதிநுட்பத்திற்கு இஃதொரு சான்றாகும்! எத்துணை ஆழமாகக் கற்றிருந்தால், சங்கத் தமிழ் திருக்குறளுக்குச் சான்றாகும் இதை அவர் உணர்ந்து எழுதியிருக்க முடியும் என்பதை எண்ணிப் பார்ப்பார் யாரும் வியப்படைவர்!

ஒப்புமைகள்

சங்கப் பாடல்கள் ஓரடி ஈரடித் தொடர்களால் புகழ் பெற்றவை.

'நின்றசொல்லர் நீடுதோன்று இனியர்'
'யாதும் ஊரே யாவரும் கேளிர்'
'ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே'

இவ்வாறு ஓரடியே முழுப் பாட்டுப்போலப் பொருள்படும் இயல்பு அங்குளது. கலைஞர் தமிழிலும் இதுபோல் காணலாம்.

தமிழரிடை ஒற்றுமை என்பது அத்திப்பூ, ஆடிப்பிறை தோட்டத்துமுல்லை அவன் தேர்த்தட்டு மார்பில் படர்வதற்குத் தவித்திருக்க (பக். 152)

அடி தும்பை மலர்முடி தாங்கி (அகவை முதிர்ந்த கிழவி) (பக்.24)

சங்கப் பாடல்களில்,
நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
(புறம் 186)

முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநாகரிகர் (நற். 3கிகி)

என இவ்வாறு, பாடலிடையே பதிந்திருக்கும் பாடல்கள் என, ஈரடி மூன்றடித் தொடர்கள், முழுமையாய்ப் பொருள் உணர்த்தி நிற்கக் காணலாம்.

கலைஞரிடம் இப்பண்பு மீக்கூர்ந்து நிற்கிறது. பழமொழி, கொன்றைவேந்தன் போல நூற்றுக்கணக்கில் தொகுத்துப் படித்து மகிழலாம்.

கொஞ்சிப் பிணைந்த குடும்பக் கொடியில்
பிஞ்சு போன்று ஒரு பிள்ளை பிறந்தது ***(50)***
அந்தத்
திறல் மறவன் பிடிக்குள்ளே சிக்கிவிட்டால்
குறள் பாட்டின் ஈரடிபோல் இணைந்துதான் கிடக்கத்தோன்றும்
(118)

பரத்தையர் இல்லங்களை விடுத்துத் தலைமகன் வீடுதிரும்பினான்.

எவ்வாறு ?

மரங்கொத்திப் பறவைகளை விட்டகன்று
மாங்குயில் கூவும் தனது மனைநோக்கித் திரும்பி வந்தான்!

154

மணக்க மணக்க மலருது முல்லை - என்னை
மணந்ததாகச் சொன்னவர் இன்னும் வரவில்லை!

(358)

போரில் கலந்திடப் பிரிந்து சென்றவன்
தோளில் தவழ்ந்திட வரவில்லை ***(32)***

ஔவையார் யார் தெரியுமா?
கனித் தமிழ்ச் சொல்லுதிர்க்கும் புலமை மிக்காள்
காக்கை பாடினி, பொன்முடியார்க்குத் தமிழில் அவள் அக்காள்!

(22)

இவ்வாறு சங்கப் பாடல்களின் எளிமை கருதிய மீட்டுருவாக்கம் போலச் சங்க இலக்கியச் சிறப்பியல்புகள் படியக் கவிஞர் வடித்திருக்கும் காவிய அடிகள் ஆயிரம் உள. அவற்றைத் தொகுத்துப் படிப்பார்க்கு, இன்சுவை வெள்ளம் இதயத்தில் பாயும்!

அம்மட்டோ? தொடங்கும் முறை, முடிக்கும் விதம், காதற்சுவை, வாழ்வுக்கலை, பெருமித நடை, அடைமொழி புணர்த்த சொல்லாட்சித்திறன்- இவை யாவற்றிலும் சங்க இலக்கியத் தமிழுடன், கலைஞரின் சங்கத்தமிழ் இணைந்துசெல்லும் ஈடற்ற பகுதிகள் பல தனித்தனி ஆய்வாக எண்ணிப்பார்க்கத்தக்கன.

மாரிக் கொக்கின் கூர்அலகு அன்ன
குண்டுநீர் ஆம்பல் தண்துறை ஊரன்

- சங்கப் பாட்டு

கொக்கின் மூக்கைப்போல் நீண்டிருக்கும்
குளத்தாம்பல் மலர் குலுங்கும் ஊரன்

- கலைஞரின் சங்கத்தமிழ்ப்பாட்டு

இவ்வாறு, 'அருமையில் எளிய அழகே போற்றி' என மாணிக்கவாசகர் பாடியது போல், மதிக்கத்தக்க பண்பட்ட, தமிழர் பண்பாட்டு வடிவமைந்த **'சங்கத் தமிழ்'**, இக்காலத் தமிழர்க்குக் கலைஞர் தந்த கொடையாகும்.

14 சங்கத்தமிழ் மூதின்மகளிர்

திருமதி. முனைவர் க. திலகவதி

தமிழ் வளர்ச்சிக்கும், தமிழர் வாழ்வு முன்னேற்றத்திற்கும் அணிசேர்த்த ஆன்றோர்கள், சான்றோர்கள் மிகப்பலர். அச்சான்றோர்களின் பட்டியலில் தமிழ்ப்பெருமகனாராகிய கலைஞர் தனிமுத்திரை பதித்துள்ளார். தமிழர்களின் நெஞ்சில் உலகோர்களின் நெஞ்சில் தமக்கென தனிஇடம் பெற்றுள்ளார். இலக்கியத்தொண்டு, அரசியற்தொண்டு, கலைத்தொண்டு, சமூகத்தொண்டு ஆகிய எத்துறையாயினும் அத்துறையில் சாதனை படைக்கும் பெருந்தகைமையாளராகத் திகழ்கின்றார் சிறுகதை, நாவல், நாடகம், கவிதை, அங்கதம், குறுங்காவயிம், கட்டுரை, கடிதம், திரைஉரையாடல் ஆகிய அனைத்துத்துறைகளிலும் தமிழுக்காக வளம்சேர்த்து, தமிழ் இலக்கிய உலகில் இமயம்போல் உயர்ந்து நிற்கிறார். கலைஞரின் குறளோவியம், சங்கத்தமிழ், உரோமாபுரிப் பாண்டியன், நெஞ்சுக்கு நீதி, பொன்னர்-சங்கர், சிலப்பதிகார நாடகக் காப்பியம், நச்சுக்கோப்பை, தென்னவன்காதை, பண்டாரகவன்னியன், ஒரேமுத்தம், தூக்குமேடை, கிரேக்கப்பெரியார், வெள்ளிக்கிழமை, சுருளிமலை, தென்பாண்டிச்சிங்கம் முதலிய படைப்புக்கள் குறிப்பிடத்தக்கன.1 இலக்கியம் படைப்பதோடு நின்றுவிடாமல், அவ்விலக்கியங்கள் என்றும் பெயர் சொல்லுமாறு வள்ளுவர் கோட்டத்தையும், பூம்புகார் எழில்மாடத்தையும், வீரபாண்டியன் கோட்டையையும், குமரிமுனையில் திருவள்ளுவர் சிலையையும், திருவள்ளுவர் காட்சியகத்தையும், தஞ்சைத்தரணியில் இராசராசன் சிலையையும் நிறுவிப்பெருமை சேர்த்தார்.

கலைஞரின் சங்கத்தமிழ்

இருபதாம் நூற்றாண்டில் வாழும் தமிழ்மக்கள் அனைவர்க்கும் புரியும்வண்ணம், சங்கப்பாடல்களில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அகமாகவும், புறமாகவும், குறுங்காவியமாகவும் (ஒருதலைக்காதல்) எளிய நடையில், சுவையான முறையில் கற்போர் மகிழும் வண்ணம் சங்கத்தமிழைத் (100 பாடல்களில்) தேனில் நனைத்த பலாச்சுளையாக கலைஞர் தந்துள்ளார். கலைஞர் சங்கத்தமிழில் மூதின்மகளிர்க்கு (வீரத்தாயர்க்கு) மிகுந்த சிறப்பளித்துப் போற்றியுள்ளது கவனத்திற்குரியது.

சங்ககால மூதின்மகளிர்

சங்ககாலத் தமிழர் வாழ்வில் வீரமும், காதலும் முதன்மை இடம் பெற்றிருந்தன. வீரர்கள் களத்தில் போரிட்டு 'வீரசுவர்க்கம்' அடைவதைப் பெருமையாகக் கருதினர். சங்ககாலம், தமிழர்களின் வீரயுகமாகப் போற்றப்பட்டது.[2] சுமேரிய, கிரேக்க வீரயுகத்திற்கு அடுத்த மூன்றாம் நிலையில் பழந்தமிழரது வீரயுகம் விளங்கியது என்று கைலாசபதி குறிப்பிடுவர்.[3]

போரில் வீரமரணம் அடைந்தவர்க்கு நினைவுச்சின்னமாக நடுகல்நட்டு, அவ்வீரனின் பெயர் பொறிந்து ஆடவரும் மகளிரும் வழிபட்டதைச் சங்கஇலக்கியங்கள் இயம்புகின்றன. வீரமிக்க கணவன், புதல்வன், தந்தை ஆகியோரைப் பெற்ற மகளிரும் வீரத்தில் சிறந்து விளங்கினர் என்பதை அவர்களின் செயல்கள் வாயிலாக அறியமுடிகின்றது. வீரத்தில் சிறந்த மகளிரை மூதின்மகளிர், மூதின்மகள், மூதிற்பெண்டிர், மறக்குடிமகளிர் என்று குறிப்பிட்டனர். மூதின்முல்லை என்னும் துறையில் அமைந்த புறநானூற்றுப் பாடல்கள் அம்மகளிரின் சிறப்பை எடுத்துரைக்கின்றன. 'மூதின்முல்லை' என்பது மறக்குடியில் வந்த ஆடவர்க்கேயன்றி அக்குடியில் பிறந்த மகளிர்க்கும் வீரமுண்டாதலை மிகுத்துச் சொல்லுதல் - மறக்குடிமகளிரின் மறப்பண்பினைக் கூறுதல் - என்று பொருள்படும். இதனை 'மறங்கடை கூட்டிய குடிநிலை' என்று தொல்காப்பியமும்,[4] 'அடல்வேல் ஆடவர்க்கன்றியும் அவ்வில் மடவரல் மகளிர்க்கும் மறம் மிகுத்தன்று' என்று புறப்பொருள்வெண்பாமாலையும்[5] கூறுகின்றன. மூதிம்மகளிர் மறப்பண்பு, தன்மானம், நாட்டுப்பற்று, அரசப்பற்று, முதலிய குணங்களைக் கொண்டிருந்தனர். மூதின்மகளிர் போர்க்களத்திற்குக் கணவரையும், புதல்வரையும், தந்தையரையும், உடன்பிறந்தோரையும் அனுப்பி வைப்பதில் பெருமகிழ்வு கொண்டனர். தம் வயிற்றில் பிறந்து, முலைப்பால் உண்ட புதல்வன் வீரம் குன்றாமலும், அஞ்சா நெஞ்சம் உடையவனாய்க் கடும்போர் புரிந்து வெற்றியும் புகழும் அடையவேண்டும் என்பதே வீரத்தாய்மார்களின் குறிக்கோளாக இருந்தது. இத்தகைய சிறப்புவாய்ந்த மூதின்மகளிரைக் கலைஞர் உளங்கொண்டு சங்கத்தமிழில் மெருகேற்றிப் பாடியுள்ளார். மூதின்மகளிரைப் பற்றி ஆறு பாடல்களில் சிறப்பித்துள்ளார். ஒவ்வொரு பாடலுக்கும் பொருத்தமான தலைப்பில் பெயர் சூட்டியுள்ளார்.

வ. எண்.	சங்கத் தமிழ்-பக்கம்	பாடல் தலைப்பு	பாடிய புலவர்	புறநானூற்றுப் பாடல் எண்
1.	ப. 22.	சுமந்தவள் சுமந்தசோகம்	ஔவையார்	புற. 286.
2.	ப. 92.	ஒரு தாயின் தாலாட்டு	பொன்முடியார்	புற. 310.
3.	ப. 232	வாளிங்கே அவன் நாக்கெங்கே	காக்கைப் பாடினியார் நச்செள்ளையார்	புற. 278
4.	ப. 330	சென்றுவாமகனே செருமுனை நோக்கி	ஒக்கூர் மாசாத்தியார்	புற. 279
5.	ப. 394	மணித்தேரில் சென்ற மகன்	வெள்ளை மாறனார்	புற. 296
6.	ப. 405	இருவிழி மழையும் இதயமகிழ்வும்	பூங்கணுத் திரையார்	புற. 277

சுமந்தவள் சுமந்த சோகம்

தன் சொந்த மண்ணின் - நாட்டின் - நலங்காக்க அரசனுடன் துணையாகச் சென்ற மகனைக் குறித்துக் கவல்கின்ற முதிய தாயொருத்தியிடம் ஔவைப்பிராட்டி வினவுகின்ற முறையில் இப்பாடலை அமைத்துள்ளார் கலைஞர்.

"களம் சென்ற மகன் வீரம் புகழ்ந்து கூறிக்
கண்கலங்காத் தாய் வீரம் காட்டுதலே தமிழர்மரபு!
முதியவளே! மறவர் குல வழக்கிற்குப்
புதியவளாய் இருக்கின்றாய்!- வியக்கின்றேன்" என்றாள்.

அதற்கு மறுமொழியாக, அவ்வீரனது தாய், 'பெருமாட்டி! என்றன் கரந்தொட்டு வணங்கிச்சென்ற மகனை யான் மறக்கவில்லை: பொன்னைக் கொடுத்தாலும் வளையாத மனவலிமையும், அவன் மடியில் புலிக்குட்டி விளையாடும் வீரத்தையும் உடையவன். அவனை நினைத்துக் கவலையினால் அழுதழுது புலம்புகின்றேன். காரணம் யாதெனில் படையெடுத்துச் செல்லும் அரசர்க்குப் பின்னால் ஆயிரக்கணக்கான வீரர்கள் அணிவகுத்துச் செல்வர். ஆயிரம்வீரர்கள் மன்னரின் பின்னால் இருந்தாலும் அவர் என்மகன்பால் அளவற்ற அன்பு கொண்டிருந்தார். போர்முனையில் போரிட்டு ஓய்வெடுக்கும் பொழுதில் தேறல் என்னும் உற்சாகச் சாற்றினை அருந்த வீரர்பலர் திரண்டு நிற்பர். அப்போது மன்னர் என்மகனை அருகழைத்து அனைவரினும் அதிகத்தேறலைக் கொடுத்து மகிழ்வார் அத்தகைய சிறப்புடைய மன்னனுக்காகப் போரிடும் களத்தில் என்மகன் தன்தலையைத் தந்தாலன்றோ மன்னன் அளித்த தேறலுக்கும் பெருமையுண்டு. மன்னனின் அன்பையும், தேறலையும் அதிகம் பெற்றவன் போரில் மாண்டனன்; புகழ் பூண்டனன் என்னும் காட்சியையான் காண்டிடல் அரிதோ எனக் கலங்கினேன் அம்மா' என்று வருந்தியுரைத்தாள். அதைக்கேட்ட ஔவைமூதாட்டி, அந்தத் தாயாக நான் இல்லையே என அகமிக நொந்தாள் என்று உரைப்பதாகக் கலைஞர் எடுத்துக் கூறியுள்ளார். இப்பாடலில் 'அந்தத் தாயாக நான் இல்லையே' என்று கூறும் செய்தி புறப்பாடலில் இடம்பெறாத, கலைஞர் புதிய நோக்கில் எடுத்துக்காட்டியுள்ள உத்தியாகும்.

இப்பாடலில் மூதின்மகள் தன் மகனது இறப்பைப் பற்றிக் கவலைப்படவில்லை; அவனது வீரமரணம் அரசனுக்காகவும் காட்டைக் காக்கவும் பயன்படவேண்டும், என்று விரும்பிய அவளது தாயுள்ளம் போற்றத்தக்கது.

ஒருதாயின் தாலாட்டு

களத்தில் போரிட்டு வீழ்ந்துபட்ட தம் காதற்கொழுநனின் மகனும் போரில் சிறந்து விளங்கி, அம்பு பட்டு இறந்துகிடக்கும் நிலையை ஒருதாய் புகழ்ந்துரைக்கின்றதை "ஒருதாயின் தாலாட்டாகப்" பாடியுள்ளார். குழந்தைப்பருவத்தில் பால்கொண்டு மடுப்பவும் உண்ணாதவன், யான் சினந்தவளைப் போலச் சிறுகோல் எடுப்பினும் அஞ்சி உடனே பால் உண்பான்; ஆனால், இன்றோ களிறுகளைக் கொன்றும் அமையானாகிப்

போர்க்களத்தே மார்பில் அம்புபட்டுக் கேடகத்தின் மேல் வீழ்ந்து கிடந்தான். அவ்வாறு கிடந்தானை எடுத்து மார்பில் அம்புதைத்துள்ளதே, உனக்குத் தாங்காதே மகனே! என யான் வருந்த, அவனோ புண்ணிற்பட்ட அம்பை யான் அறியேன் என்றான்; என் மடிமீது தலைசாய்த்து உயிர்விட்டான்; எனை மட்டும் உயிரோடு விட்டுவிட்டுப் போய்விட்டான். சிறந்த வீரனின் மகனல்லவோ இவன்' என்னும் உள்ளடக்கம்கொண்டு இக்கவிதை அமைந்துள்ளது.

இப்பாடற்கண், மறக்குடிப்பெண்ணொருத்தியின் கணவனது வீரத்தையும், மகனை இளம்பருவத்தில் அவன் தாய் வளர்க்கும் முறையையும், போர்க்களத்தில் மகன் காட்டும் வீரத்தையும், போர்க்களத்தில் தாய் மகனைக் கண்டு அளாவும் காட்சியையும் கலைஞர் சுவைபட வருணித்துள்ள திறம் படிப்போர் அனைவரையும் உணர்வுகொள்ளச் செய்கிறது.

"தாலாட்டப் பிள்ளையொன்றைத் தந்துவிட்டுப்
போராட்டக் களம் சென்ற என்னவரோ;
தமிழ்மண்ணின் பண்பாட்டுக்கு ஏற்றவாறு
தடமார்பில் வேல்தாங்கி நடுகல்லாய் நின்றுவிட்டார்"!

என்று கணவன் இறந்துபட்டு நடுகல் ஆயினதையும், கணவன் இறப்பினும் மனம் தளராது மகனைச் சிறந்த வீரனாக வளர்க்கும் பான்மையை,

"வானதிரப் புவிவாழ்த்துகின்ற மானத்தை
ஊனமின்றிக் காப்பதற்கு உறுதிபூண்டு
உயர் வீரக்குடிமகனாய்ப் பிள்ளைதனை வளர்த்தேன்!
கட்டியணைத்து களித்த என் கணவனது நெஞ்சகத்தை
வெட்டிப் பிளந்து வீழ்த்திவிட்ட பகைப்புலத்தை;
எட்டியுதைத்துத் துரத்தி ஏற்றிடுக வெற்றிக்கொடி என்றும்,
எதிரிகளின் கோட்டையிலே நம்முரசு முழங்கட்டுமென்றும்,
உச்சிமோந்து திலகமிட்டுக் குடுமிதனைக் கோதிவிட்டு
உடைவாளைக் கையில்தந்து, "சென்றுவா மகனே" என
அனுப்பிவைத்தேன்.

என்று அத்தாயின் வீரஉள்ளத்தைக் காட்டுகிறார்.

கொடுவாளால் களிறுகளைக் கொன்று, குன்றுகளைப் பந்தாடுதல்போல் அவற்றை உருட்டிவிட்டுப் போர்க்களத்தில் விளையாடி வினை முடிக்கின்றான் என்றும், நெடுமரம்போல் பகைப்படை வீழ்கின்றன என்றும் போர்க்களத்திலிருந்து மகிழ்வான செய்திகள் வந்து சேர, ஆவலுடன் போர்க்களம் காணச் சென்றாள் அத்தாய்.

"ஆழ்ந்துள்ளேன் கவலையினால்; அருமை மகனே! நீ
போர்க்களத்துப் பிணமாகி வாழ்கின்றாயா? அன்றி
புறமுதுகிட்டோடிச் செத்துத் தொலைந்தாயா?" எனக் கேட்டுத்
துடித்திட்டேன்!

"வாழ்கின்றேனம்மா வீரனாக"! என்றொரு குரல்
தாழ்கின்ற என் தலையை நிமிர்த்திற்றாங்கே!

என்று களத்தில் தன்மகனைக் கண்டு தாய் உளம் பூரிக்கும் காட்சியைக் காட்டுகிறார். போர்க்களத்தில் மகன் கிடக்கும் கோலத்தைக் கண்டு தாய் வருந்தும் நிலையையும் மகன் உரைக்கும் கூற்றையும் கலைஞர் பின்வருமாறு எடுத்துரைப்பர்.

"தாங்கிப் போரிட்ட கேடயம் தரையில் கிடக்க; அதில்
தங்கமகன் மார்பில் அம்புதாங்கி வீழ்ந்து கிடந்தான்!
'வெற்றியம்மா வெற்றி' என்றான் - அவன்
நெற்றியிலே முத்தமிட்டு, என் நித்திலமே!
போர்முனையில் உயிர்விட்டு மானம்காத்த தந்தைக்கு
நேர்வழித் தோன்றலாய் வந்துதித்தாய் வாழ்க! என்றேன்!
ஊடுருவியிருக்கின்றதே மார்பில் அம்பு - வலி
உனக்குத் தாங்காதே மகனே! என்றேன்; அழுதுவிட்டேன்!
உண்மையா அம்மா? உன் கண்ணால் கண்டு நீ எனக்கு
உரைக்கும் வரை நான் உணரவில்லையம்மா! என்றான்!
உயிர்விட்டான் மடிமீது! போய்விட்டான்
. . . .
ஓங்கிய கோல் கண்டு ஓடிய என் மகனா: மார்பில்
தாங்கிய கணையுடனே தாயகத்தை மீட்கும்போரில்
தன்னுயிரைத் தருவதற்கும் துணிந்து நின்றான்!
என்னுயிரே! என் மகனே! நீ வாழ்க! என வாழ்த்துகின்றேன்"!

இப்பாடலில் தந்தையின் குடிப்பெருமையைக் காப்பாற்ற மகன் செய்த கடமையையும், கடமையாற்றிய மகனைத் தாய் வாழ்த்துவதையும் காணலாம்.

வாளிங்கே - அவன் நாக்கெங்கே

'போரில் புறமுதுகிட்டு ஒடினான் நின்மகன்' என்று கூறக்கேட்டுச் சினந்து, என் மகன் புறங்காட்டி ஓடியிருப்பின் அவனுக்குப் பாலூட்டிய முலையினை அறுத்து எறிவேன் என வஞ்சினம் கூறிக் களம் புகுந்தாள் வீரத்தாயொருத்தி. தன் மகன் இறந்து கிடப்பது கண்டு அவனை ஈன்ற பொழுதினும் பெருமகிழ்ச்சியுற்றாள் முதிய தாயொருத்தி' என்று காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் பாடிய புறப்பாடலின் கருத்தைக் கலைஞர் எடுத்துக் காட்டியுள்ளதோடு புதுமைநோக்கில் பொய் சொன்ன கயவனெங்கே? அவன் நாக்கெங்கே? வாளியங்கே! என்று கூறியிருப்பது அத்தாயின் மன ஆவேசத்தைக் காட்டும் தன்மையில் அமைந்துள்ளது.

மானத்தின் உறைவிடமாகத் திகழும் மறவன்மாளிகையின் ஒருபுறத்தே போர்புரிய தேவையான வேல், வாள் ஆகிய படைக்கருவிகள் மின்னிக்கொண்டிருந்தன. அவ்வில்லத்து வாயிலில் பெருநரையுடைய கிழவியொருத்தி அமர்ந்திருந்தாள். ஒருவீரன் ஓடிவந்து, பாட்டி! ஒருசேதி உண்டு என்றான். அவனை நோக்கி முதியோள்,

"ஆடி வந்த சிறுமி போல்
பெருமூச்சு வாங்குகின்றாய்
ஆண்மகனா நீ தம்பி!
மூச்சுக்கு மூச்சு இடைவேளை ஏற்படட்டும்; பின்

பேச்சுக்குத் துவக்கம் செய் என்றாள் அந்தக்
கிண்டலுக்குப் பேர்போன
கிழட்டுத் தமிழச்சி"!

என்று முதுமையிலும் அவள் நகைச்சுவையுடன் பேசும் திறத்தைக் கலைஞர் தமக்கே உரிய பாணியில் காட்டியுள்ளார்.

சேதி கூறவந்த வீரனோ, 'உன் மகன் களத்தில் மடிந்தான்' என்றான்; காயம் மார்பிலா? முதுகிலா என்று கேட்டாள். காயம் முதுகில் என்று கூற; அதனைக் கேட்டுத் துடித்தனள்; இதயம் வெடித்தனள்; வாளை எடுத்தனள்; முழவு ஒலித்த திக்கை நோக்கிச் சென்றனள்.

"கோழைக்கா பால் கொடுத்தேன்
குப்புற வீழ்ந்து கிடக்கும்
மோழைக்குப் பெயர்
போர் வீரனாம்! முன்பொருநாள்
பாய்ந்து வந்த ஈட்டிக்குப்
பதில் சொல்ல மார்பைக் காட்டிச்
சாய்ந்து கிடந்தார் என் சாகாத கண்ணாளர்!
அவருக்குப் பிறந்தானா?
அடடா மானமெங்கே - குட்டிச்
சுவருக்கும் கீழாக வீழ்ந்து பட்டான்
இமய வரம்பினிலே வீரம் சிரிக்கும் - இங்கு
வீணை நரம்பினிலே இசை துடிக்கும்
அதுவும் மானம் மானமென்றே முழங்கும்!
மாற்றார்க்கு மண்டியிட்டு வாழுகின்ற
மானமற்ற வம்சமா நீ - ஏடா
மறத் தமிழ்க் குடியிலே மாசு தூவிவிட்டாய்
மார்வு கொடுத்தேன்
மடிமேல் வளர்த்தேன்
. . . . பகைவர்
வேலுக்கு வழிசொல்ல வகையற்ற
கோழையே - என் வீரப்
பாலுக்கு வழி சொல்வாய்!
என்று கதறினாள்
என்பதை நெருங்கிய ஏழைக்கிழவி".

இவ்வாறு புலம்பிய அம்முதியோள், செருமுனையில் சிதறிக் கிடக்கின்ற வீர்களைப் புரட்டிப் பார்த்தாள். பிணக்குவியலிலே பெருமூச்சுவாங்க நடந்தாள். மணப்பந்தலிலும் அந்த மகிழ்ச்சியில்லை; மகன் பிறந்தபோதும் மகிழ்ச்சிக்கு எல்லை இருந்தது. அவன் ஈட்டிக்கு மார்பு காட்டி இறந்து கிடந்ததைக் கண்டாள்; மனம் குளிர்ந்தாள்; எதைக் கண்டாலும் இனிக் கவலை இல்லை. என்மகன் வீரனாய் இறந்தான்; அறுத்தெறிய இருந்தேன் அவன் குடித்த மார்பை; அடடா! கருத்தெரியப் பொய் சொன்ன கயவனெங்கே? அவன் நாக்கெங்கே? என்று வீரமுழக்கமிடுகிறாள்.

சென்றுவா மகனே செருமுனை நோக்கி

போரில் தந்தை, கணவன் ஆகியோரை இழந்த நிலையிலும், ஒரு மகனன்றித் தன்னைக் காக்க வேறுயாரையும் பெற்றிராத நிலையிலும் மூதின் மகளொருத்தி, தன் மகனைப் போர்க்கு ஆயத்தப்படுத்தி அனுப்பி வைக்கும் அவளது மனத்துணிவைப் போற்றும் ஒக்கூர் மாசாத்தியாரின் புறப்பாடல்(279) கருத்தைக் கவிதைப் பொருணாக்கி அழகுபடப் புனைந்துள்ளார்.

பண்டைக்காலத் தமிழ் மண்ணில் சேர, சோழ, பாண்டிய மன்னர் கோபுரத்துக் கலசத்தில் யார் கொடியைப் பறக்கவிட வேண்டும் என்று போட்டி மேற்கொண்டு போர் தொடுத்து வருவர். அந்நாளில் களத்தில் தாய் நாட்டைக் காக்க மூதின் மகளொருத்தியின் தந்தை போரிட்டு செத்தார் என்று செய்திகேட்டு மனம் மிகநொந்தாள். அயலூர் சென்ற கணவன் வர, அவள் போர்ச்செய்தியைக் கூறினாள். தந்தை களத்தில்பட்ட செய்திக்கோ தவித்தாய் என்றுரைத்தான். அதற்கு மறுமொழியாக,

"இல்லை அன்பே!
முல்லை சூழ் இந்நாட்டுப் படையிலோர் வீரர் குறைந்திட்டால்,
நல்ல உடையிலோர் கிழிசல் வந்தது போலன்றோ? இனித்
தடையின்றி நுழைவரே பகைவர் என எண்ணினேன்;
அடைபட்ட கண்ணீர், அணை உடைத்தது அத்தான்" என்றாள்.

என்று நாட்டின் பாதுகாப்பை எண்ணிக் கவலையுறுவதை எடுத்துக் காட்டுவர். அவள் கணவன் போருக்குச் செல்லும் காட்சியையும், அவள் வழி அனுப்பிவைக்கும் காட்சியையும் பின்வருமாறு வருணிப்பர்.

"குகை விட்டுக் கிளம்பும் ஒரு புலியென,
பகைவிட்டுக் கிளம்பும் எரிமலையென,
பகைவெட்டிச் சாய்க்கும் வாளெடுத்தான்;
சூளுரைத்தான்; சுடர்முகம் தூக்கினான்;
சுக்குநூறுதான் சூழ்ந்து வரும், பகை! " என்றான்,
"நாடு மீட்காமல் வீடு திரும்பேன்" என்றான்!
நங்கையோ,
நகை முழக்கம் செய்து "நடந்திடுக கண்ணே" என்றாள்!
"திரும்பி வருவேனோ இல்லையோ
எதற்கும் இப்போது ஒருமுத்தம்
இந்தா - திரும்பு" என்றான்!
கொடுத்தான் - பின் தொடுத்தான்
பகைவர் மீது பாணம்"!

போரில் முரசம் ஒலிக்க, மிகச் சிறப்பாகப் போரிட்டு வெற்றிகளை வாரிக் குவிக்கின்றான் நின் கணவன் என்று வீரர் பலர் சொல்லக் கேட்டு மனம் பூரித்தாள். அரசனின் தூதுவர் வந்து வாழ்த்துக்கள் கூறினர். வீட்டருகில் வசிக்கும் தோழிகள் வந்து வெற்றி நீட்டோலை வாசித்து மகிழ்ந்தனர். அதைக் கேட்டு ஆனந்தக் கண்ணீர் பொழிந்தாள். அப்பொழுது இழவுச் சேதி சொல்வதற்கு ஒருவன் வந்து, அவளிடத்து,

"என்னருமைப் பெண்பாவாய்!
கண்ணல்ல - கலங்காதே!
களச்சேறி, கடைசிச்சேதி கேள்' என்றான்
மாவிலைத் தோரணங்கட்டி, மணவிழா மேடைதன்னில்
வாழ்விலே ஒன்றானோம் என்று சொன்ன கண்ணாளன்
மார்பிலே வேல்தாங்கி நல்ல
சாவிலே வீழ்ந்துவிட்டான்"

என்று அவள் கணவன் இறந்து பட்டதை உரைக்கின்றான். கணவன் இறந்துபட்டால் அவள் படும் துயரத்தை வடிக்க வார்த்தைகளே இல்லை. கொத்தான மலராக இருந்தது இக்குடும்பம். அதைக் கொத்தாமல் கொத்திவிட்ட கொடிய சாவைப் பழித்தாள்; இழித்துரைத்தாள்; இனி என்ன மிச்சம். இனிய மொழியில் பேசி பள்ளியறையில் கவிபாடும் நாளெல்லாம் மண்தானோ? இனி இது தூங்காத கண்தானோ என அழுதாள். அத்தான் பிணம் கிடக்கும் களம் நோக்கித் தொழுதாள். சோகத்தில் மூழ்கியிருந்த அவள் காதில் போர் முரசு ஒலி கேட்டதுதான் தாமதம். உடனே எழுந்தாள். கெட்டதுதான் கெட்டது என்குடி; மட்டில்லாப் புகழ் கொண்ட நாட்டுக்கே என்குடி முழுவதுமே பட்டொழிந்து போகட்டும் என்று கருதி, ஆலமரத்தடி ஆசானிடம் கல்வி கற்கச் சென்ற தன் மகனை அழைத்து வர விரைந்தாள். அம்மாவைக் கண்டு பாய்ந்த வந்த அன்புச் செல்வன், அப்பா, தாத்தா ஊர் திரும்பினாரோ? எனக் கேட்டான். திரும்பி வந்தனர். ஆனால் அவர்கள் சாவூர் சென்றுவிட்டனர்; கரும்பே நீயும் வா என்றழைத்தாள். என்ன வாங்கி வந்தார்? என்றான்.

"மானம்! மானம்! அழியாத மானம்" என்றாள்
"மகனே! அதைச் சுவைக்க நீயும் வருக! "என்றாள்
எதிரிகளின் படையெடுப்பால் - நம் குடும்பம் தழை
உதிர்த்துவிட்ட மரமாகப் போனதடா தம்பீ!
ஆனாலும் இந்தநிலம் உள்ளவரையில் 'மானங்காத்தார்'
என்றபெயர் பூண்டார்"!

என்று கூறி, நீயும் உன் தாய்த் திருநாட்டிற்காகப் பலம் உள்ளவரையில் பகையைச் சாடு, பரணிபாடு என்று கூறி மகனைச் சீவிமுடித்துச், சிங்காரித்து, இரத்தக் கறை படிந்த வாளைக் கொடுத்துச் "சென்றுவா மகனே, செருமுனை நோக்கி!" என வாழ்த்தி அனுப்பிவிட்டாள். (இக் காட்சியை இப்பூவுலகில் போற்றிப் பாடாதார் உண்டோ)

மணித்தேரில் சென்றமகன்

போருக்கு சென்ற வீரர்கள் பலரும் இல்லம் திரும்பினர். ஆனால் மணித்தேரில் சென்ற முதிய தாயொருத்தியின் மகன்மட்டும் இன்னும் திரும்பிவில்லை. மாற்றாரை விரட்டாமல் திரும்பிவர அவன் விரும்பவில்லை என்னும் பொருளில் வெள்ளைமாறனார் பாடிய பாடலின் (புறம்.296) கருத்தை 'மணித்தேரில் சென்ற மகனாக' கலைஞர் காட்டியுள்ளார்.

இப்பாடற்கண் போரில் விழுப்புண்பட்ட வீரர்களின் புண்களைப் மனைவியர் வேம்பின் இலைகொண்டு ஆற்றி, வேம்பின் தழையை முகப்பில் செருகி வைப்பதையும், காயமுற்றோர்க்கு ஆறுதலாய்க் காஞ்சிப் பண் பாடுவதையும், வெண்சிறுகடுகை நெய்விட்டுப் புகைப்பதையும் மூதின் மகளிர்க்குரிய செயல்களாக குறிப்படுவர். இச் செயல்களால் களம் சென்று திரும்பியோரின் மனைகள் எல்லாம் ஆரவாரமுடையதாய் இருந்தது. ஆனால் களம் சென்ற ஒரு வீரன் மட்டும் திரும்பி வரவில்லை. அதற்குக் காரணம்,

"கொடுத்த பணி முடித்திடாமல் வருதல் - அவன்
கொண்ட கொள்கை குன்ற வைக்கும் என்பதால்
கிடைத்தவரை வெற்றியென எண்ணி - அப்
படைத்தலைவன் நிறைவு கொள்ளவில்லை!
பாசமிகு அன்னையினைப் பார்ப்பதற்கு
பறந்தோடி வருகின்ற நினைவும் வரவில்லை!
மாற்றாரை விரட்டாமல் திரும்பிவர அவன் விரும்பவில்லை"

எனச் சுட்டுவர். ஆயினும் மகன் தன்னைக் காண வருவான் என்ற நம்பிக்கையுடன் காத்து நிற்கும் மூதின் மகளொருத்தியை,

தமிழகத்துத் தாய்க் குலத்து வீரமங்கை
தன் புதல்வன் காலந் தாழ்த்து வருவதற்குக் கலங்கிடாமல்
தடந்தோளால் பகை சாய்த்த பின்பே - என்
தங்கமகன், தாய் முகத்தைக் காண்பதற்கு வருவான் என்றாள்!

எனக் காட்டுவர்.

இருவிழிமழையும் இதய மகிழ்வும்

'நரை முதிர்ந்த கூந்தலையுடைய முதியோள் ஒருத்தி தன் மகன் களிறெறிந்துபட்டனன் என்னும் செய்தி கேட்டு ஈன்றபொழுதினும் பெரிதும் மகிழ்ந்தாள்' என்று பூங்கணுத்திரையார் பாடிய புறப்பாடலின் கருத்தை அடியொற்றி 'இருவிழிமழையும் இதயமிகிழ்வும்' என்னும் தலைப்பில் கலைஞர் புத்தாக்கம் செய்கின்றார்.

போர் வாளேந்தி, பகைவர்களை வீழ்த்தி மார்பில் விழுப்புண் பெற்று, நாட்டைக் காக்க உயிர்விட்ட தன்மகனை நினைத்துப் பெருமிதம் கொண்டு வாழ்த்துகின்றாள் ஒரு வீரத்தாய். அவனைப் பெற்று வளர்த்துச் சீராட்டியதற்காகப் பெருமிகிழ்வு கொள்கின்றாள் இதனை

"துள்ளி வரும் பகையின் - தலைகளைக்
கிள்ளிவரும் வீரனைத்தான்
பிள்ளையாய்ப் பெற்றிருந்தேன்;
பெருமகிழ்ச்சி கொண்டிருந்தேன்!
'களம் சென்று வருகின்றேன் அம்மா, என்று;
கன்னத்தில் ஒருமுத்தம் கொடுத்தான் அன்று!
கட்டித்தழுவி என் வீரக்களஞ்சியத்தை

தட்டிக் கொடுத்து 'வென்றுவா மகனே' என்றேன்

... ...

கொக்கின் சிறகாய் நிரைத்துவிட்ட என்கூந்தல் தடவி; உன்
பொக்கை வாய் திறந்து வாழ்த்தம்மா எனக் கேட்ட வடிவழகன்;
பொருதடக்கை வாளிங்கே; போருக்கு வந்த பகை எங்கே ? எனப்
பொங்கும் கடலாய் ஆர்ப்பரித்தான்!
'போய்வா மகனே' என்றுரைத்தேன்";

என்று தன் மகனைப் போருக்கு வழியனுப்பி வைக்கும் காட்சியை சுவைபடக் கூறியுள்ளார்.

போரில் பகைவர்களை வென்று வருவான் என வழிபார்த்து நின்றிருந்தாள் அத்தாய்; அவனோ, கிழங்குகளை மிதிப்பது போல் கொடிய பகைவர்களின் உடலை மிதித்து, குன்றமொன்று சாய்ந்ததுபோல் சாய்ந்துவிட்டான்: குலவரலாற்றில் குன்றாப்புகழ் கொண்டு குடியேறிவிட்டான் என்று போரில் மாண்ட தன்மகனை நினைத்து கண்ணீர் வடிக்கின்றாள்.

இளமையிலே அவனை வீரமுடையவனாக அத்தாய் வளர்த்து வந்த பான்மையை,

மானம்; என் மகன் கேட்ட தாலாட்டு;
மரணம் அவன் ஆடிய விளையாட்டு!
பால்குடிக்கும் குழந்தையாய் இருந்தபோதே
வேல்பிடிக்கும் வித்தையினைக் கற்றுத்தந்தேன்
ஆல்விட்ட விழுதுபோல் தந்தைக்கு மகனாகி - ஆட்டு
வால்போலக் குட்டை மனம் கொண்ட பகை; நம்
கோல் பறிக்கக் கூடாதென்று கொந்தளித்து; அவர்,
தோல் உரித்துத் துரத்திவிட்டுப் போரில் மாளுகின்றான்;
பெரும்புகழை ஆளுகிறான்!

என்று காட்டுகின்றாா். அவன் இறப்புக்காக அத்தாய் மகிழ்ச்சி கண்ணீர் வடிக்கின்றாள். இதனை,

"புகழ் மலையின் உச்சியிலே கொடிபோட்டான் என்று
புன்னகையோ மின்னலிடும் என் முகத்தில்!
விழிகளிலே ஒளிவீசும் மகிழ்ச்சியுடன்
பொழிகின்ற கண்ணீரோ;
ஓங்கி வளர்ந்துயர்ந்த
மூங்கில் மரங்களிலே
தேங்கி வடிகின்ற மழைத்துளியை வென்றிடுமாம்"!

அதனால்,

என் இருவிழி மழைதனைக் காணாதீர்; என் இதயம்
மகிழ்வதைக் காண்பீரே!

என்று உலகோர்க்குக் காட்டுகின்றாா்.

களம் சென்று திரும்பிவரும் தன் மகனுக்குத் திருமணம் செய்வதற்காகப் பெண்பார்த்து வைத்திருந்தாள் அவ்வீரத்தாய். அவனோ

காதலியையும், தாயையும் தவிக்க விட்டுக் கடமையினை முடித்துச் சென்றுவிட்டான். இச்செய்தியைக் கலைஞர் புதிய நோக்கில் அழகுற வாழ்த்துகின்றார்.

"காதலுக்குத் தடை சொல்லக் கூடாதென்று - ஒரு
கட்டழகுப் பெட்டகத்தைத் துணை சேர்க்க; அவன்
கருத்துக்கு ஏற்றதொரு கன்னியிளமானை
களம் சென்று திரும்பியபின் மணமுடிக்கக் காத்திருந்தேன்;
அவனோ
கயவர்களின் வாள்முனையை நெஞ்சில் தாங்கி
காதலியைத் தவிக்கவிட்டு
காலத்தை நகர்த்துகின்ற இந்தக் கிழவியையும்
கண்ணீரில் மிதக்கவிட்டு
கடமையினை முடித்துவிட்டான். . . . .
களிப்பொரு பக்கம் . . . . . கண்ணில் நீர் ஒரு பக்கம்
களப்புகழ் பெற்ற மகனை வாழ்த்துகின்றேன்!
கருவில் சுமந்த தாயல்லவோ; அதனால் வாடுகின்றேன்!

இவற்றால், அக்கால மூதின் மகளிர் தன்னலம் கருதாது, நாட்டின் நலத்தை முதன்மையானதாகக் கருதும் பொதுநலமனப் பாங்கு புலனாகிறது. மகளிர் இன்ப வாழ்க்கை மட்டுமே பெறவேண்டும் என்று எண்ணாது, சிறந்த வீரமகனைப் பெறவேண்டும், நாட்டிற்குத் தீங்கு வருங்கால் நாட்டைக் காக்கத் தன்மகன் உயிர் துறக்கவும் வேண்டும் என்னும் பரந்த நோக்கம் உடையவராய்த் திகழ்ந்தனர் என்பதை இப்பாடல்களின் வாயிலாகக் கலைஞர் உணர்த்தியுள்ளார். அகவாழ்விலும், புற வாழ்விலும் வீரப்பண்பைப் போற்றியும், வீரவுணர்வு கொண்டு வாழ்ந்ததையும், வீரக்கணவனைப் பெற்ற மனைவியாகவும், வீரப்புதல்வனை ஈன்ற தாயாகவும் அக்கால மூதின்மகளிர் புகழ் பெற்று விளங்கியதைக் காட்டியுள்ளார். மேலும், தம் கணவர், தந்தை, உடன்பிறந்தோர், மைந்தர் போரில் இறந்தபோதும் அஞ்சித் துவண்டுவிடாது, மனத்துணிவுடன் வாழ்ந்த பண்டை வீரமகளிரின் பண்பைப் பாராட்டியுள்ளார். சிறந்த பேரரசுகள் தமிழகத்தில் உருவாகியதற்குச் சங்ககாலத் தமிழகத்து வீரத்தாய்மார்கள் பெருமளவு உதவியுள்ளார்கள். துன்பம் வரும் காலத்தில் துணிந்து நின்ற சங்ககால மூதின் மகளிர் (வீரமகளிர்) பண்பு எக்காலமும் போற்ற வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்ட கலைஞர் அவர்களுக்குச் சங்கத்தமிழில் பாமாலைப் புனைந்துப் போற்றியுள்ளார்.

சங்கத்தமிழ் வாழ்க !

அடிக்குறிப்புகள்

1. கலைஞர் களஞ்சியம் - பாரதிபதிப்பகம், சென்னை, 1989, ப.318
2. Kailasapathy, K., -Tamil Heroic poetry, The claredan press, oxford, p. 7
3. கைலாசபதி, க. -ஒப்பியல் இலக்கியம். சென்னை, 1982, - பக்.67-69
4. தொல். பொருள். இளம். புறத்திணையியல் நூ.4;
5. புறப்பொருள் வெண்பாமாலை, நூ. 175.

15 கலைஞரின் சிலப்பதிகார மீட்டுருவாக்கம்

முனைவர். சரளா இராசகோபாலன்

ஒரு பழைய இலக்கியத்தின் கருத்து நிலையையும், நடையையும் மீட்கும் கொள்கையைப் பின்பற்றும் இலக்கியப்போக்கு, மீட்டுருவாக்கம் என்று கூறப்படுகிறது. இதைப் புதிய செவ்வியல் (Neo classism) என்பர்.

இரு கவிஞர்களுக்கிடையே காணப்படும் கொள்கை வேறுபாடுகள், கால இடைவெளியால் நேரும் பண்பாட்டு மாறுபாடுகள், இரு வேறுபட்ட மொழி இன மதத்தினருக்கிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகள் ஆகியவை மீட்டுருவாக்கத்திற்குக் காரணமாகின்றன. படைப்பாளர் ஒருவருக்கு மற்றொருவரின் படைப்பில் விருப்பம் இருப்பினும் கருத்து மாறுபாடுகள் எழுமாயின் அவர் அதை மீட்டுருவாக்கம் செய்து தன் உள்ளத்திற்கு ஏற்ற முறையில் மாற்ற விரும்புவார். அவர் தன் கால மக்களின் விருப்பு, வெறுப்பை விட, தன் விருப்பு, வெறுப்பு உணர்ச்சிகளுக்கே முதல் இடம் தருவார்.

20-ஆம் நூற்றாண்டின் சிறந்த கவிஞரில் ஒருவராகிய முத்தமிழறிஞர் - கவிஞர், கலைஞர், மு. கருணாநிதி அவர்கள் **1800** ஆண்டுகளுக்கு முற்பட்ட சிலப்பதிகாரத்தில் தோய்ந்தார். கருத்து முரண்பாடுகளைக் கண்டார். தன் கருத்திற்கும் கொள்கைக்கும் ஏற்ற முறையில் அதை மீட்டுருவாக்கம் செய்தார். "சிலப்பதிகார நாடகக் காப்பியம்' எனப் பெயரிட்டார்.

பல துறை இலக்கியங்களைப் படைத்து வரும் கலைஞர், நாடகத் துறையில் கொண்டுள்ள நாட்டம் காரணமாக, பதினெட்டு நாடகங்கள் எழுதியுள்ளார். இவற்றுள் பழங் கதைகளை நாடகமாக்கும் முயற்சியில் முகிழ்த்தவை பரதாயணம், சிலப்பதிகார நாடகக் காப்பியம், சேரன் செங்குட்டுவன் ஆகிய மூன்று நாடகங்கள் ஆகும். அவற்றுள் கோவலன், கண்ணகி கதையை முழுமையாக உரைக்கும் முறையில் சிலப்பதிகார நாடகக் காப்பியம் எழுந்துள்ளது.

கலைஞர் சிலப்பதிகாரக் கதையை முப்பத்தெட்டு காட்சிகளில் விளக்கிச் செல்கிறார். ஒவ்வொரு காட்சிக்கும் கவிதை நயம் பொருந்திய தலைப்பும் கொடுத்துச் செல்கிறார்.

காப்பியமும், நாடகமும் எழுந்ததன் காரணங்கள்

இளங்கோவடிகள், சிலப்பதிகாரம் எழுதியதன் நோக்கங்களாக அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாதல், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துதல், ஊழ்வினை உருத்து வந்தூட்டுதல் ஆகிய மூன்று

காரணங்களைக் குறிப்பிடுவர். அவை கலைஞர்க்கு உடன் பாடல்ல. அவர் தன் நூலின் தோற்றத்திற்கு வேறு காரணங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

1. சிலப்பதிகாரத்தில் இலக்கிய நயம் - கலை அம்சம் - வரலாற்றுச் செழுமை - பாத்திரங்களின் மாண்பு - இவற்றையெல்லாம் புறக்கணித்து விட்டுத் தமிழகத்து நாடக மேடைகளிலும், திரையரங்குகளிலும் முரண்பட்ட வகையில் சிலப்பதிகாரத்தை உருவாக்கி நடத்தி வந்தனர். இந்நிலையை மாற்ற விரும்பிய கலைஞர் மூல ஆசிரியரின் கருத்துக்கு மாறுபடாமல் காலத்திற்கேற்ப சில மாறுதல்களைச் செய்திருக்கிறார்.

"கண்ணகி - கர்ணகி ஆனாள்
மாதவி - மாதகி ஆனாள் ; ஏன்
பாதகியும் ஆனாள்
கோவலன் கோவிலன் ஆனான்.

மாசாத்துவான் - மாச்சோட்டான் செட்டியென்றும் மாநாய்கன் மாணாக்கன் செட்டியென்றும் (பிறநூல்) மாற்றிவிட்டனர். அதைக் கண்ட சிலப்பதிகாரம் உணர்ந்தோர் புழுங்கித் துடித்தனர். மூலக் கதையின் ஆசிரியர் கொண்ட கருத்துக்கு மேலும் வலுவூட்டுவது போன்ற மாற்றங்களும் அவரால் படைக்கப்பட்ட பாத்திரங்களின் பண்பு கெடாமல் தரப்படுகின்றன. உருவகமும் மறுக்கத்தக்கன அல்ல. காலத்திற்கேற்ற சில மாற்றங்களைக் கதையின் நோக்கம் கெடாதவாறு அமைப்பதும் தவறல்ல. மூலக்கதை ஆசிரியர் விட்ட கருத்துகளையோ காட்டத் தவறிய காரணங்களையோ அடிப்படைக்குக் குந்தகமின்றிப் புகுத்துவதும் குற்றமல்ல. இந்த நோக்கத்துடன் நான் மாறுதல்களை, சிலப்பதிகாரத்தை நாடகக் காப்பியமாக்கும் இந்த முயற்சியில் கையாண்டிருக்கிறேன் என்று கலைஞர் அவர்களே இந்நூலின் முன்னுரையில் காரணங்களை விளக்கியுள்ளார். (ப.15).[1]

2. "தமிழ்த் துறவி இளங்கோவடிகள் சித்தரித்த கண்ணகியும், கோவலனும், கனிமொழியாள் மாதவியும், நீதிக்கு உயிர் தந்த நெடுஞ்செழியப் பாண்டியனும், இமயம் சென்று கண்ணகிக்குச் சிலை வடிக்கக் கல் கொணர்ந்த வீரச் செங்குட்டுவனும் நம்மைப் பார்த்துத் தமிழரின் புகழை எத்தனை முறை பாடினாலும் தெவிட்டாது என உரைக்கிறார்கள். அந்த உணர்வே இந்த நாடகக் காப்பியம் 1" என்று கலைஞர் அவர்களே தம் முன்னுரையில் கூறுகிறார். எனவே தமிழரின் பெருமையைப் பறைசாற்ற - தமிழினத்தின் சிறப்பைக் கூறி இன்பமுற இக்காவியத்தைக் கலைஞர் நாடகமாக்கினார் என்பது தெரியவருகிறது.

தமிழரின் மீதுள்ள அன்பால் - பற்றால் - பாசத்தால் - தமிழ் காத்துத் தமிழரின் நலம் காக்கும் தொண்டர்க்குத் தொண்டனாகிய நான்

" மணங்கமழும் தமிழே!
மணங்கவரும் தாயே!
இன்ப மொழியே
அன்பு விழியே
உயிரான தமிழே! உலகில்

உயர்வான மொழியே!
உன்னைப் போற்றிப் புகழ்வதன்றி
வேறுபணி எனக்கில்லையே".

என்ற ஆசிரியர் கூற்று, தமிழின் புகழ்பாட அவர் சிலப்பதிகாரத்தைக் கருவியாக்கிக் கொண்டமையை தெளிவாக்குகிறது.

காப்பியத்திலும் நாடகத்திலும் அடிப்படையிலேயே முரண்பாடு ஏற்படுவதால், நாடகம் முழுவதிலும் மாற்றம் ஏற்படுவது இயல்பாகிறது. அவர் தம் கொள்கைகளுக்கேற்ப புதிய பாத்திரப் படைப்புகளையும் நிகழ்ச்சிகளையும் உருவாக்கியுள்ளார். இளங்கோவடிகள் கூறியுள்ளவற்றுள் சிலவற்றை நீக்கினார். இளங்கோவடிகளின் கருத்தினை ஏற்றுப் பல மாற்றங்களைச் செய்தார். இம்மூன்று நிலைகளில், இரு நூல்களை ஒப்பிட்டு ஆயும் முறையில் இக்கட்டுரை அமைகிறது.

புதியவற்றைச் சேர்த்தல்

இளங்கோவடிகளின் பாத்திரங்களில் அமைந்துள்ள சில குறைகளை நிறைவு செய்துள்ளார். தெளிவில்லாத சில பகுதிகளைத் தெளிவாக்கியுள்ளார். புதிய பாத்திரப் படைப்புகளைச் சில காரணங்களுக்காக உருவாக்கியுள்ளார்.

கோவலன் வாணிகக் குடியில் பிறந்தும் பொருள் ஈட்டாத குறையுடையவனாக இளங்கோவடிகள் அவனைக் காட்டியுள்ளார். இக்குறையைக் கலைஞர் நீக்கியுள்ளார். கோவலன் வாணிகத் தொடர்பாகக் கிரேக்க நாடு சென்று பொருள் திரட்டிவர, அவனுக்காகக் கரையில் காத்திருந்த பூம்புகார்ப் பொற்கொடி கணவனை நோக்கி ஓடினாள். அவளைப் பார்த்த கிரேக்கக் கிழவன் ஒருவன் கிளியோபாத்ரா போன்ற உலகப் பேரழகிகளைக் கண்ட தங்கள் கிரேக்க நாடு, இதுவரை கண்ணகியைப் போன்ற பேரழகியைத் கண்டதில்லை என்று பாராட்டினான். (கா.6) இதன் மூலம் தமிழகத்து அழகியான கண்ணகியின் சிறப்பினைக் கலைஞர் மேம்படுத்தியுள்ளார்.[2]

பாண்டியனின் செங்கோலாட்சியை நிறுவ, புதிய காட்சியைக் கலைஞர் படைத்துள்ளார். பாண்டியனும் ஒரு கவிஞன் என்பதைப் புறநானூற்றுப்பாடல் தெரிவிக்கிறது. பாண்டியன் அவைக்கு வழக்கொன்று வந்தது. மலைவாணர், அருளாளர் இருவரும் காவியம் ஒன்றைத் தன்னுடையது என்றனர். காவியத்தைக் கொளுத்துவதாகப் பாண்டியன் கூற அருளாளர் துடித்தார். இதைக் கொண்டு உண்மைப் புலவரைக் கண்டு பிடித்த பாண்டியன் கழஞ்சுப் பொன்னையும் பரிசாகக் கொடுத்தான்.

ஆடல் மகளின் நடனத்தில் பாண்டியன் ஈடுபட்டமையால் தேவி ஊடுவதாக இளங்கோவடிகள் காட்டுகிறார். இந்நாடகத்தில், தேவி வருவதும் தெரியாமல், சிலம்பைப் பற்றி அவள் கேட்ட கேள்விக்கும் பதில் கூறாமல், மன்னன் கல்வியைப் பற்றிப் புறப்பாடல் எழுதிக்கொண்டிருந்ததற்காக அவள் ஊடுகிறாள்.[3] (ப.13) பாண்டியனின் கவிப் புலமை தேவியின் ஊடலுக்குக் காரணம் என இரண்டையும் ஒன்றாக்கும் கலைஞரின் நாடகத் திறன் வியத்தற்குரியது.[4] (கா.28).

சோதிடத்தில் நம்பிக்கையற்ற கலைஞர், சோதிடனின் கூற்றைப் பொய்ப்பிப்பதற்காக இளங்கோவடிகளைத் தன் நாடகத்தில் ஒரு பாத்திரமாக அமைத்துள்ளார். "அடிகளார் நிமித்திகனைப் பார்த்து, நீர் பெருமையோடு பேசினீரே, இந்த விதியின் வீழ்ச்சி, மதிப்பின் வெற்றி". தோல்வி கண்டமுகத்தைத் தொங்க விட்டுக் கொண்டு உமது தொழிலையே துறந்து விட்டு என்னைத் தொடர்ந்து வாரும்" என்று எள்ளி நகையாடுகிறார். நிமித்திகனும் தனக்குள் "இப்போது பிழைப்பே போனது; இனி மாளிகைப் பக்கம் போனால் மானம் போய்விடும். தோல்வி பெரிய தோல்வி "[5] (கா.4) என்று சொல்லி ஓடுவதாகக் காட்டப்படுகிறது. இக்காட்சி தேவையற்றதாயினும் தன் கொள்கையை நிறுவவும், நாடகம் காண்போருக்கு நகைச் சுவையை ஊட்டவும் இது கலைஞர் கையாளுகிற புதிய உத்தியாகிறது.

கண்ணகி கோவலன் இருவரும் கவுந்தியடிகளின் துணையுடன் மதுரை நோக்கிச் சென்ற போது, நடுவழியில் கோசிகமானி, மாதவியின் கடிதத்தைக் கோவலனிடம் கொடுக்க, அதை மாசாத்துவானுக்குக் கோவலன் அனுப்பினான். மாசாத்துவான் கடிதத்தைப் படித்தாரா ? படித்த பின் மாசாத்துவானின் நிலைமை என்ன என்பதை இளங்கோவடிகள் கூறவில்லை.

கலைஞர் தெளிவு நோக்கி, புதிய காட்சியினைச் சேர்த்துள்ளார். கடிதத்தைப் படித்துக் கலங்கிய மாசாத்துவானிடம் மாதவி பொற் குவியலைக் கொண்டு வந்து கொடுத்தாள். மாசாத்துவான் அவளைத் தன் அன்பு மருமகளாகக் கூறி மகிழ்ந்தார். மணிமேகலையைக் கையில் வாங்கி கண் கலங்கினார். இக்காட்சியின் மூலம் பொன்னை விரும்பாத மாதவியின் தூய அன்புள்ளத்தையும் மாசாத்துவானின் உயர் அன்பையும் அறிய முடிகிறது.

கலைஞர் புதிய பாத்திரப் படைப்புகளைப் படைத்துள்ளார். மாசாத்துவானும், மாநாய்கனும் காப்பியத்தில் நடமாடும் பாத்திரங்களாகக் காட்டப்படவில்லை. இந்நூலில் மாசாத்துவானும். மாநாய்கனும் கண்ணகி, மாதவி ஆகியோரின் பண்பு நலனை விளக்கிக் காட்ட உருவாக்கப்பட்ட பாத்திரங்களாகப் படைக்கப்பட்டுள்ளனர்.

சித்திராபதி இழிந்த பரத்தமைச் சமுதாயத்தின் பிரதிநிதியாக அமைந்திருப்பதால் அவளை இளங்கோ பெயரளவில் கூட சுட்ட விரும்பவில்லை. கலைஞர், மாதவியின் பண்புகளை மிகுதிப்படுத்திக் காட்ட அவளையும், அவளைச் சார்ந்தவர்களையும் உருவாக்குகிறார். அவர்கள் கோவலனின் பொருளைக் கவரவில்லை என்றால், கோவலன் மதுரை செல்ல நேர்ந்திருக்காது. கதையோட்டமே முடிந்திருக்கும். மாதவியின் சிறப்பையும் அறிய முடியாது. கதையை நடத்திச் செல்வதற்கு உறுதுணையாக அமைகின்றவர்கள் இவர்கள் என்பதை அறியலாம்.

கிரேக்கக் கிழவன், கலைஞர் படைத்த புதிய பாத்திரம். இவன் வாயிலாகப் பழந்தமிழரின் வணிகச் சிறப்பினை அவர் புலப்படுத்துகிறார். தமிழ்நாட்டு முத்தினை வாங்கிச் செல்வதற்காகக் கிரேக்க நாட்டிலிருந்து

கோவலனோடு தமிழகம் வந்தவன் அவன். கோவலன் மாலையை வாங்குவதற்கும், மாதவி அவனைத் தன் மாளிகைக்கு அழைத்துச் செல்வதற்கும் அவன் ஒரு கருவியாகிறான். காப்பியத்தில் கோப்பெருந்தேவியின் சிலம்பைப் பொற்கொல்லன் திருடுகிறான். இச்செயல் அக்குலத்தினரைப் பாதிக்கக் கூடாது என்பதற்காக, அதிகாரி என்ற புதிய பாத்திரத்தைப் படைத்து, சிலம்பைத் திருட வைத்துள்ளார் கலைஞர்.

நீக்குதல்

சடங்குகளும், சமய நம்பிக்கைகளும் தமிழ்ச் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பதாகக் கருதி, அவற்றின் பொய்ம்மை முகமூடியைக் கிழித்து மக்களுக்கு உண்மையை உணர்த்த, நாடகத்தைக் கருவியாகத் தேர்ந்தெடுத்தார் கலைஞர். தாம் சார்ந்த கட்சிக் கொள்கைகளையும், நம்பிக்கைகளையும் பரப்பும் கருவியாக நாடகத்தைப் பயன்படுத்துகிறார் அவர்.

சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் திருமணம் வேத நெறியில் நடப்பதால் அதை ஏற்றுக்கொள்ளாத கலைஞர் அக்காட்சியை நீக்கினார்.

சூரிய குண்டம், சோமகுண்டம் மூழ்கிக் காமக் கோட்டம் வழிபடும்படி கூறும் தேவந்தியின் உரையாடலை - (ஆரியர்களின் நம்பிக்கையை) நீக்கினார்.

முற் பிறப்புக் கதைகளும், மறு பிறவிக் கதைகளும் கலைஞரின் நாடகத்தில் இடம் பெறவில்லை. அவர் கருத்துப்படி, நம்ப இயலாத ஒன்றை பகுத்தறிவுக்குப் பொருந்தாத ஒன்றை மக்களிடையே பரப்புவது பொருந்தாது. இதன் காரணமாகவே, சமுதாயத்தில் நிலவி வரும் சில நம்பிக்கைகளுக்கு நாடகத்தில் இடமில்லாதவாறு செய்துள்ளார். சில கிளைக் கதைகளையும் ஒதுக்கித் தள்ளுகிறார்.

ஊர்வசி மரபில் மாதவி வந்தவள் என்று அவளுக்குத் தெய்வத்தன்மை ஏற்றாமல் (அரங்கேற்று 1 - 7) சித்திராபதியின் மகளாகவே கலைஞர் காட்டுகிறார். கண்ணகி-கோவலனை இழித்துரைத்த வம்பப் பரத்தையரைக் கவுந்தியடிகள் "முள்ளுடைக் காட்டில் முதுநரியாகுக" எனச் சாபம் இடுகிறார். (நாடு காண் 219 - 245) கலைஞர் இக்காட்சியை நீக்குகிறார்.

கவுந்தி, கோவலன், கண்ணகி ஆகிய மூவரும் செல்லும் வழியில், வான் வழியாகச் சாரணர்கள் இறங்கி அருகக் கடவுளைத் தொழுகின்றனர். (நாடுகாண் 209: 2 8) அவர்களின் சமண சமயக் கொள்கைகளையும் கலைஞர் நீக்குகிறார். மதுரை வரும் வழி இடையூறுகளையெல்லாம் இளங்கோவடிகள் சமண சமயக் கொள்கைகளாகக் காட்டுகிறார். அவற்றிலிருந்து ஒரு நீதியைக் கோவலன் கற்பதாகக் கலைஞர் காட்டுகிறார்.[6]

காடுறை தெய்வம் வசந்த மாலையின் வடிவில் வந்து கோவலனை மயக்க நினைக்கிறது. கோவலன் துர்க்கை மந்திரத்தை உச்சரிக்க, அது "புனமயிற் சாயற்கும் புண்ணிய முதல்விக்கும் உரைக்காதே" என வேண்டி மறைகிறது. (காடு: 170 - 200) இந்நிகழ்ச்சியைக் கலைஞர் நீக்கியுள்ளார்.

கலைஞர் கனவுகளையோ உற்பாதங்களையோ நம்பாததால், அவற்றைக் காட்டவில்லை. தேவந்தியையும், சாலினியையும் தெய்வத்தோடு தொடர்புடையவர்களாகக் காட்டவில்லை.

வினைக் கோட்பாட்டை நம்பாத கலைஞர் கோவலன், கண்ணகி, தேவந்தி ஆகியோரின் பழம்பிறப்பு நிகழ்ச்சிகளையும், மாதவி, கோவலனின் தாய், கண்ணகியின் தாய் ஆகியோரின் மறுபிறவிச் செய்திகளையும் நீக்கியுள்ளார்.

மாற்றம்

தன் கொள்கைகளுக்கேற்ப, காலச் சூழலுக்கேற்ப, பல மாற்றங்களைக் கலைஞர் செய்துள்ளார்.

முப்பெரும் உண்மைகளில் மாற்றம்

இளங்கோவடிகள், 'அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்" என்றார். பாண்டியனின் இறப்பிற்கு அறம் பிழைப்பது காரணமாக்கப்படுகிறது. அறம் ஒறுக்கும் என்னாது மக்கள் ஒறுப்பர் என்று கலைஞர் மாற்றம் செய்கிறார். கண்ணகியின் சிலம்பை நம்ப முடியாது என்று கூறிய பாண்டியனிடம் 'நீயார் நம்புவதற்கு' உன்னை யார் நம்பச் சொன்னார்கள் ? உன் மீது வழக்குரைக்க வந்தவள் நான்! குற்றவாளி நீ! அதனால் தீர்ப்பளிக்கும் உரிமை உன் கையில் இல்லை! இதோ இருக்கிறார்கள். பெருங்கேண்மைப் பெரியோர்கள்! அவர்களே இப்போது நீதிபதிகள்! அவர்கள் உரைக்கட்டும் நல்ல தீர்ப்பு"[7] (ப.85) என்று இன்றைய வழக்கறிஞரின் சட்ட முறையில் எடுத்துரைக்கிறாள்.

உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் என்பது இளங்கோ கண்ட இரண்டாவது உண்மை. மானிடப் பெண்ணைப் படிப்படியாகத் தெய்வமாக்கினார் இளங்கோவடிகள். கலைஞரோ முதலிலிருந்து முடிவுவரை உயர்ந்த உள்ளம் கொண்ட மானிடப் பெண்ணாகவே கண்ணகியைக் காட்டுகிறார். புகாரில் பிறந்த கண்ணகி, பாண்டியன் அவையில் வழக்கறிஞராக மாறிச் செஞ்சிலம்பால் வென்றமைக்காகக் கண்ணகியைப் போற்றினார். கணவன் இறந்தவுடன் அக்கால வழக்கிற்கேற்ப உயிர் வாழ்தலோ உயிர் துறத்தலோ செய்யாமல் மன்னனே ஆனாலும் அவன் இழைத்த அநீதியை உலகுக்கு அறிவிப்பேன். என் கணவன் பழியைத் துடைப்பேன். என் கணவனுக்காக இந்த உலகத்தையே பேச வைப்பேன்'' என்று புரட்சிப் பெண்ணாய்ப் பொங்கி எழுந்தமைக்காகத்தான் கலைஞரின் நாடகமே தோன்றியது.

"ஊழ்வினை உருத்து வந்தூட்டும்" என்றார் அடிகளார். அதனால் காவியம் முழுவதும் ஊழ்வினை ஊடுருவியுள்ளது. பகுத்தறிவுக் கொள்கையராகிய கலைஞரோ நாடகச் சுவையை மிகுதிப்படுத்தவும், மூடத்தனத்தின் முடை நாற்றத்தை அகற்றவும், மக்களிடத்தில் ஊழ்வினையின்பால் உள்ள நம்பிக்கையைப் போக்கித் தன்னம்பிக்கையை உருவாக்கவும், சமுதாயத்தில் சிறந்த மக்களை உருவாக்கவும் ஊழ்வினையை அறவே நீக்கினார்.

புகார், மதுரை, வஞ்சி என்று ‘காண்ட அமைப்பு முறையினையே மாற்றி அமைத்து, வஞ்சிக் காண்டத்திலிருந்து நாடகத்தை ஆரம்பிக்கிறார். இளங்கோவடிகளின் துறவு நிலை நாடகத்தின் பின்னோக்கு உத்தியாக அமையினும் ஊழையும் உப்பக்கம் காணும் முயற்சியாலே சிறப்புப் பெறுகின்றது. ஊழ், நிமித்தம் ஆகியவை பொய்மைச் சரக்கு என்பதை மக்களுக்கு அறிவுறுத்த இளங்கோவடிகளின் துறவில் தொடங்கினார். விதியையும் மதியால் வெல்லலாம் என்பதைக் கலைஞர் இந்நாடகத்தின் வாயிலாக வலியுறுத்தியுள்ளார்.

நாடகத் தொடக்கம்

பேரியாற்றங்கரையில் இருந்த சேரன் செங்குட்டுவனிடம் குன்றக் குறவர்கள் கண்ணகியைப் பற்றிக் கூற, அதை அங்கிருந்த சீத்தலைச் சாத்தனாரைக் கேட்டு விரித்துக் கூறுவதாக இளங்கோவடிகள் அமைத்துள்ளார். நாடகத்தின் உத்திக்கேற்ற முறையில் கண்ணகியின் கதையை நேராகத் தொடங்காமல், பின்னோக்கு உத்தி முறையில் கலைஞர் கதையைத் தொடங்கியுள்ளார்.

பாத்திரப் படைப்புகளில் மாற்றம்

கோவலன்

காவியக் கோவலனிடத்தில் உள்ளனவாக ஆய்வாளர்களால் சுட்டப்படுகின்ற சில குறைகளைக் கலைஞர் நீக்குகிறார். கோவலன் மாதவியை அடைவதற்கும் அவன் வீழ்ச்சி உருவாவதற்கும் காரணம் அவனுடைய கலையுணர்வே என்று சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். (அ. சிதம்பரநாதன், இளங்கோவின் இன்கவி ப. 43 - 47) இ. மாணிக்கவாசகம், செந்தமிழ்ப்பாவை ப.54).

கோவலனுடைய அவலத்திற்குக் காரணம் காம உணர்வே என்று சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். (எஸ். ஆர். மார்க்கபந்து சர்மா, சிலம்பின் ரசனை ப. 54) இக்கூற்றுகளைக் கலைஞரின் உள்ளம் ஏற்கவில்லை. அதனால் அவர் சில மாற்றங்களைச் செய்கிறார்.

மாலையை வாங்கிய உடனே கோவலன் மாதவி வீட்டுக்குப் போய் விடுகிறான் என்பது சிலப்பதிகாரம். அவன் கண்ணகிபால் கொண்ட அன்பானது அவ்வளவு விரைவில் திடீரென முறிந்துவிடக் கூடியதாகத் தோன்றவில்லை. “மலையிடைப் பிறவா மணியே! அலையிடைப் பிறவா அமிழ்தே என்றெல்லாம் கண்ணகியிடம் காதல் காவியம் பாடியவன் அவ்வளவு எளிதில் அவளை மறப்பது இயலுமோ? என்ற கேள்விக்கணை தாக்கிற்று. அதனால் ஆசிரியரே இம்மாற்றம் செய்வதாக இந்நூலில் முன்னுரையில் கூறியுள்ளார். (ப-15) யவனக் கிழவன் 1008 கழஞ்சு பொன் கொடுத்து மாலை கொள்வது கண்டு மாதவி அழுகிறாள். அதைக் கண்டு இரங்கிய கண்ணகியே மாதவியைக் காப்பாற்றக் கோவலனை அனுப்புவதாக மாற்றம் செய்துள்ளார். (கா.7) 1008 கழஞ்சு பொன் தரக்கூடிய தகுதி எவருக்குமில்லை என்று நடன அரங்கில் கூறிய யவனக் கிழவனுக்கு மாற்று தேடும் முறையில், தமிழினப் பெருமையை நிலை நாட்டும் வகையில்

தன்முத்து மாலையைக் கொடுத்து மாதவியின் மாலையைக் கோவலன் வாங்குவதாகக் காட்டப்படுகிறது. மாலை வாங்குபவர் மாதவியுடன் வாழ வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளாமலே மாலை வாங்குவது குறித்தற்குரியது.[8]

கலைஞரின் கலையுணர்வையும் தமிழ் உணர்வையும் வெளிப்படுத்துகிற படைப்பாகவே கோவலன் பாத்திரம் அமைகிறது. தமிழரின் மானம் காப்பதற்காகக் கோவலன் மாலை வாங்குவதாகக் காட்டப்படுகிறது. இறக்கும்போது, தமிழரின் உணர்வைப் பேசுகிறான். தமிழரின் வீரத்தை நிலைநாட்ட முதியவனை யானையிடமிருந்து காக்கிறான். (காட்சி 17)[9] தமிழர் மறை தந்த பழக்கத்தால் அறத்தைக் கூறிக் கீரியைக் கொன்ற பார்ப்பனத்தியைக் காக்கிறான்.

இளங்கோவின் கோவலன் மீது கூறப்படுகின்ற குற்றம், அவன் கள்வன் என்று பழி கூறப்பட்டபோது கூட ஒன்றும் பேசாமல் இருந்தான் என்பது இதையும் கலைஞர் மாற்றுகிறார். கொலைக் களத்தில் "தமிழ் படித்த நெஞ்சமிது - தமிழ்த்தாய் வயிற்றினிலே கருவாகி, உருவாகித் திருநாட்டின் மடி மீது தவழ்ந்தவன் நான்"[10] (கா.32) என்று அவன் கூறுகிறான். இவ்வாறு கோவலனின் குற்றங்களை ஆய்ந்து ஆய்ந்து மாற்றுபவராகக் கலைஞர் விளங்கினார்.

கோவலனின் கலையார்வத்தில் பங்கு கொள்ளும் உணர்வு கண்ணகிக்கு இல்லாததால் அவன் மாதவியின் மனை புகுந்தான் என்பது ஆய்வாளர்கள் கண்ணகியைப் பற்றிக் கூறும் குற்றச்சாட்டு. (ம. பொ. சிவஞானம்; கோவலன் குற்றவாளியா? (ப.29) (அ. சிதம்பரநாதன், இளங்கோவின் இன்கவி.ப.48). கலைஞரின் கண்ணகி ஆடல், பாடல், தெரியாதவளாயினும் கலை ஆர்வமும், உணர்வும் உடையவள். அவள்தான் மாதவியின் நடனத்தைப் பற்றிக் கோவலனிடம் கூறுகிறாள். (கா.6) கோவலனுடன் சென்று மாதவியின் நடனத்தைக் கண்டு களிக்கிறாள். (கா.6).

கண்ணகியிடம் ஊடல் உணர்வு இல்லை என்பது இன்னொரு குற்றச்சாட்டு. (மரா.பொ. குருசாமி, சிலப்பதிகாரச் செய்தி.ப.30) கோவலன் நலம் பாராட்டும்போது கூட அவள் மறுபேச்சு பேசாததைச் சுட்டிக் குறை கூறப்படுகிறது". கோபிப்பானேன் பிறகு சமாதானம் ஆவானேன்? என்று வினா தொடுக்கிறாள் கலைஞரின் கண்ணகி.[11]

கோவலன் கண்ணகியை விட்டுப் பிரிந்து செல்வதற்கு அவனுடைய இளமைப் பருவமும் அவன் இச்சையை உணர்ந்து கண்ணகி நடந்து கொள்ளாமையும் தகுந்த காரணங்கள். (எஸ். ஆர். மார்க்கபந்து சர்மா, சிலம்பின் சிந்தனை ப 52) என்பது இன்னொரு குற்றச்சாட்டு. கலைஞரோ கண்ணகியின் அன்பை நாடக உத்தியாக மாற்றுகிறார். கோவலன் வருகை நோக்கி, கண்ணகி தனியாகவே கடற்கரையில் காத்திருக்கிறாள். கோவலன் வரும் படகைக் கண்டவுடன் சதிராடி வருகிறாள். அலைகளால் தழுவப்பட்டு, இருவரும் தழுவிக் கொள்கின்றனர்.

இளங்கோவடிகள், கோவலனைப் பிரிந்த மாதவியின் துயரைக் காட்டுகின்ற அளவிற்குக் கண்ணகியின் துயரைக் காட்டவில்லை. இந்தக் குறையைக் கலைஞர் நீக்குகிறார். கோவலன் மீண்டும் உரோமாபுரிக்குப் போவதாகக் கூறியவுடன் முத்துச் சுமை ஏற்றிக் கத்து கடல் கீறிச் செல்லுகையிலே குத்து விளக்கொன்றை இங்குச் செத்து மடியவிட்டுச் செல்கின்றோம் என்று நினைப்பீரோ? அத்தான்" என்று புலம்புகிறாள்.[12] கோவலன் மாதவியிடம் சென்றபோது, அவன் உருவப் படத்தின் முன், "அவள் நின்று எரிமலையின் மூச்சை என் மீது திருப்பி விட்டீர்களா? ஈட்டியாலே கூர்பார்க்க என் இதயந்தான் கிடைத்ததா?".[13] என்று அவள் அழுகிறாள். இந்திர விழா நிகழ்ச்சிகளும் அவளை வருத்த, ஒரு முறையாவது அவனைப் பார்த்தால்தான் முடியும் என்று வெளியில் ஓடுகிறாள்.[14]

மாதவி

சங்க இலக்கிய அகத்துறைப் பாடல்கள், தலைவன் தலைவி பரத்தை ஆகியோரிடையே நிகழும் மும்முனைப் போராட்டத்தை விளக்குவது போல, சிலப்பதிகாரக் கதையும், கோவலன், கண்ணகி, மாதவி இவர்களிடையே நடைபெறும் மும்முனைப் போராட்டமாக இருப்பதால் கதைப் போக்கில் மாதவி பெறும் பங்கு குறிப்பிடத்தக்கதாக உள்ளது. கலைஞரின் நாடகம் ஒரு தலைவனை விரும்பும் ஒப்பற்ற இரு தலைவியரின் கதையாக அமைந்துள்ளதால் தலைமை மாந்தர் நிலையில் வைத்து மாதவி எண்ணப்படுகிறாள்.

காப்பியத்தில், கண்ணகிக்கும், மாதவிக்கும் இருந்த தொடர்பு புலப்படுத்தப்படவில்லை. கலைஞர், அவர்களுக்கு இடையே இருக்கும் உறவு முறையைச் சிறப்பாகக் காட்டுகிறார். மாநாய்கன், மாதவியைத் திட்டும்போது, 'மாதவியை இகழாதீர்கள் - அவள் என்னைவிட உயர்ந்தவள்; அழகில் மட்டுமல்ல. அன்பிலும் கூட"[15] என்று கண்ணகி கூறுவதன் மூலமாக நாடகத்தில் மாதவியை உயர்த்துகிறார்.

காப்பியத்தில், மாதவியால்தான் தன் செல்வம் இழந்ததாகக் கோவலன் கூறுகிறான். நாடகத்தில் மாதவி அறியாமல் கோவலனின் செல்வத்தைச் சித்திராபதியும், கூனியும் கவர்கின்றனர். இதை அறிந்த மாதவி கடிவதோடு அப்பொற் குவியலை, மாசாத்துவானிடம் சேர்க்கிறாள். மாசாத்துவானும், "நீ மாற்றுக் குறையாத பசும்பொன்" என்று கூறுவதுடன் அவளையும் மருமகளாக நினைக்கிறார்.[16]

கண்ணகிக்கு உரியவனைத் தனக்கு உரியவனாக ஆக்கிக் கொண்டவள் என மாதவியைக் குறை கூறுவர். அந்தக் குறையையும் நீக்குகிறார் கலைஞர். அந்தணன் மனைவியின் துயரத்தைக் கண்ணகியின் துயரத்தோடு ஒப்பிட்டுக் காட்டுகிறாள் மாதவி. கோவலன் கண்ணகியைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தால்தான் பேசுவதாகவும், ஊடல் கொள்ளுகிறாள்.[17]

கோவலன் இறந்த செய்தியைக் கேள்வியுற்ற மாதவி தன்னிடமிருந்த கலையைத் துறந்து தன் மகள் மணிமேகலையையும் துறவுக் கோலம் கொள்ளுமாறு செய்ததாகவும் காப்பியம் காட்டுகிறது. கலைஞரோ மாதவியை மட்டும் துறவியாக்கி, மணிமேகலையைக் குழந்தையாகவே

காட்டுகிறார். தாயின் குற்றத்திற்காக மகளும் தண்டனையடைவதா என்ற வாதமே மணிமேகலையைக் குழந்தையாகப் படைத்தது.

கொள்கை வழி மாற்றம்

சிலப்பதிகாரத்தில் வழக்காடும் கண்ணகி, சிபி, மனு ஆகிய புராண கால அரசர்களைக் கொண்டு பழம்பெருமை பேசி வழக்காடுகிறாள். கலைஞரின் கண்ணகியோ, "உன்மீது வழக்குரைக்க வந்தவள் நான். குறறவாளி நீ! அதனால் தீர்ப்பளிக்கும் உரிமை உன் கையில் இல்லை"[18] (கா.35) என்று இன்றைய வழக்கறிஞரின் வாதத் திறமையோடு பேசும்படிச் செய்கிறார். அது மட்டுமன்றி. முடியாட்சி அரசைக் குடியாட்சி நிலைமைக்கு மாற்றுவதாகவும் அவர் காட்டுகிறார்.

மதுரையை எரித்தலில் பெருமாற்றம் செய்கிறார் கலைஞர். கண்ணகியை அங்கியங் கடவுள் ஏவல் கேட்கவில்லை. மதுராபதித் தெய்வம் பழம் பிறப்புக் கதை கூறவில்லை. நகிலைத் திருகிப் போடுவதால் மதுரை எரியவில்லை. மாறாக, கோவலன் கொலையுண்ட செய்தி கேட்டு, கண்ணகி வேகமாக ஒடுகிறாள். அருகிலிருந்த குத்து விளக்கு ஒன்று சரிந்து குடிசை தீப்பற்றி எரிகிறது. மற்றவர்களும் கோவலன் கொலை நிகழ்ச்சியால் அதிர்ச்சியுற்று நிற்க, மதுரை எரிவதைக் கண்டும் அதை அணைக்க நினைக்கவில்லை"[19] என மாற்றம் செய்கிறார்.

கண்ணகி, வேங்கை மரத்தின் அடியில் நின்ற போது வானிலிருந்து இந்திர விமானம் இறங்கி அவளை ஏற்றிச் சென்றதைக் குன்றக் குரவர்கள் பார்த்ததாகக் காட்டுகிறார் இளங்கோவடிகள். (காட்சிக்காதை 57 - 62) கலைஞர், மலை மக்களின் வாயிலாக, திடீரென ஒரு நாள் அவளைக் காணவில்லை. எங்குப் போனாளோ தெரியாது. கணவன்தான்-இறந்தவன்-திரும்பி வந்தானோ அல்லது அவள்தான் அவனோடு போய் விட்டாளோ - தெரியாது எங்களுக்கு அவளைப்போல் ஒரு பெண்ணை இதுவரை நாங்கள் கண்டதில்லை என்று கூறுகின்றனர். காப்பியத்தில், கண்ணகிக்குச் சிலை எடுக்கும்போது, மாதவி மணிமேகலை தவிர மற்றவர் எல்லோரும் வருகின்றனர். நாடகத்தில் இவர்கள் இருவர் மட்டுமே வருகின்றனர்.

சிலப்பதிகாரத்தில், சிலம்பைப் பற்றித் தெளிவு இல்லை. சிலப்பதிகாரம் படிப்பவர் நெஞ்சில் நிழலாடுகின்ற ஓர் ஐயம்; ஏன் காவிய ஆசிரியர் ஒற்றைச் சிலம்பை விற்குமாறு செய்கிறார்? அது உலகியலுக்கு ஒத்ததா? அதனால்தானே கோவலன் கொலையே நிகழ்கிறது? சிலம்பை வாங்குபவர் எவராயினும் அணிவதற்காகத்தானே வாங்குவர்? அதை உருக்கி உள்ளே இருக்கும் மாணிக்கப் பரலை எடுப்பதற்காகவா சிலம்பை வாங்குவர்? ஒற்றைச் சிலம்பை வாங்கினால் காலில் போட்டுக் கொள்ள முடியுமா? என்பன போன்ற ஐயங்கள் எழத்தான் செய்கின்றன.

ஒரு சிலம்பைக் கழற்றிய கண்ணகி, இன்னொரு சிலம்பைக் கழற்றப் போகும்போது கோவலன் "ஒரு சிலம்பு உன் காலிலேயே இருக்கட்டும். அந்த ஒற்றைச் சிலம்பு ஒலி எழுப்பும்போதெல்லாம் உத்தமியாம் உனக்குக் கேடு நினைத்த இந்த உன்மத்தனின் உள்ளத்தில் ஆயிரமாயிரம்

சம்மட்டியடிகள் விழுந்து கொண்டேயிருக்கட்டும். புத்தி வரட்டும்.[20] (கா:29) என்று சொல்லித், தான் பார்த்து வருந்த வேண்டும் என்பதற்காகவே ஒற்றைச் சிலம்பைக் கண்ணகி காலில் அணிய விடுகிறான். இது கலைஞரின் கருத்தாகப் புலப்படுகிறது.

பாண்டிமாதேவி ஏன் ஒற்றைச் சிலம்பைக் கொடுத்தாள் என்ற வினாவும் உடன் எழுகிறது. பாண்டிமாதேவியின் காலில் இருந்த சிலம்பு பழுதாகிவிட்டதால் கழன்று விடுகிறது. பாண்டியன் இன்னொரு சிலம்பையும் கொடு என்று கேட்கும்போது "காலிலேயே சிலம்பில்லாமல் இருப்பதா? வேண்டாம். இதை மாத்திரம் சீர் செய்தால் போதும்" என்று ஒற்றைச் சிலம்பையே கழற்றிக் கொடுக்கிறாள்.[21] என்று கலைஞர் தெளிவு நோக்கி, இம்மாற்றத்தைச் செய்துள்ளார்.

இவ்வாறு கலைஞர், இளங்கோவடிகளின் காப்பியத்தில் பல மாற்றங்களைச் செய்து, மீட்டுருவாக்கம் செய்துள்ளார். இம்முறையினால் கலைஞர், சிலப்பதிகாரக் கதையைப் பாமர மக்களும் உணரும் வண்ணம் தமக்குப் பிடித்தமான முறையில் அறிமுகப்படுத்தியுள்ளார். இளங்கோவடிகளின் கருத்திற்கு மேலும் வலுவூட்டியுள்ளார். பாத்திரங்களின் பண்பு நலனை மிகுதிப்படுத்தியுள்ளார். இளங்கோவடிகள் குறிப்பாகவும் மறைமுகமாகவும் உணர்த்தியவற்றை ஐயப்பாடுகளுக்கு இடமின்றித் தெளிவு படுத்தியுள்ளார். அடிகள் சொல்லாமல் விட்ட சில வரலாற்று உண்மைகளைக் கூறியுள்ளார். தமிழர்தம் பெருமையை உணர்த்தியுள்ளார். இக்காலச் சமுதாயச் சிந்தனையை உணர்த்தும் வகையில் - காலத்திற்கேற்ற முறையில் கருத்து மாற்றங்களைச் செய்துள்ளார். பகுத்தறிவுக் கொள்கைகளுக்குப் பொருந்தாதவற்றை - இயற்கைக்குப் பொருந்தாதவற்றை - விலக்கியுள்ளார். ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழரின் தன்னிகரற்ற காப்பியத்தைக் கலைஞர் இக்காலத்திற்கு ஏற்றவாறு சிறந்த முறையில் மீட்டுருவாக்கம் செய்துள்ளார்.

அடிக்குறிப்புகள்

1. கலைஞர் மு. கருணாநிதி சிலப்பதிகாரநாடகக்காப்பியம் ப.15

2. மே.நூல்	"	காட்சி	6	15	மே.நூல்	காட்சி'	13
3. "	"	"	13				
4. "	"	"	28	16	"	"	20, 23
5. "	"	"	4				
6 "	"	"	22	17	"	"	14
7. "	"	"	85				
8. "	"	"	8	18	"	"	35
9. "	"	"	17				
10. "	"	"	32	19	"	"	36
11. "	"	"	9				
12 "	"	"	9	20	"	"	29
13 "	"	"	15				
14 "	"	"	18	21	"	"	25

திருக்குறள் உரை

16 திருக்குறள் - கலைஞர் உரை சில சிந்தனைகள்

பேராசிரியர் தி.முருகரத்தனம்

1. முப்பாலும் பல்சமயப் பார்வைகளும்

பல நூறாண்டுகளுக்கு முன்னர்த் தமிழரின் தலைமை சான்ற சிந்தனையாளர் திருவள்ளுவர் இயற்றிய முப்பால் காலந்தொறும் எல்லா இயக்கத்தாராலும் சமயத்தாராலும் போற்றப்பட்டு வந்துள்ளது. தெய்வத்தன்மை குறிக்கும் 'திரு' என்னும் அடைமொழி பெற்று, அது யாக்கப் பெற்ற செறிவு நிறைந்த வெண்பாவின் பெயரோடு திருக்குறள் என வழங்கப்படுகிறது. ஆனால் வள்ளுவர் தம் நூலுக்கு இட்ட பெயர் முப்பால் என்பதாகலாம். முப்பால் தோன்றிய பின்னர் மணிமேகலைக் காப்பியம் இயற்றிய சாத்தனார்,

> "தெய்வம் தொழஅள் கொழுநன் தொழுதெழுவாள்
> பெய்எனப் பெய்யும் பெருமழை என்ற அப்
> பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்"
>
> -மணிமேகலை 22:59-61

என வள்ளுவரது குறட்பா ஒன்றைச் சுட்டி அவரைப் போற்றினார். அவர் வள்ளுவரைப் பவுத்தராகக் கொண்டாடியிருப்பார்.[1]

அடுத்த காலம் சமண எழுச்சிக் காலம். நீலகேசி என்னும் சமணக் காப்பியத்தில் அதன் ஆசிரியர் 'தேவன் உரைப்பத் தெளிந்தேன்' என வள்ளுவரைக் குறிப்பிடுகிறார். அதற்கு உரை எழுதிய சமய திவாகரமுனிவர், வள்ளுவர் முப்பாலை "இஃது எம் ஒத்து" என உரிமை கொண்டாடி எழுதியுள்ளார். இன்றும் சமணர்கள் முப்பாலைத் தம் நூல் எனக் கொண்டாடி வருகின்றனர்.[2]

சைவ சமயத்தார் - முன்பு இல்லாமற் போனாலும் - இன்று முப்பாலைத் தம் நூலாக உரிமை கொண்டாடுகின்றனர். "திருக்குறளின் உட்கிடை சைவசித்தாந்தமே" (1953) என வச்சிரவேல் முதலியார் நூல் எழுதிச் சைவத்தின் உரிமையை நிலைநாட்ட முயன்றுள்ளார்கள்.[3] அண்மையில் திரு.ரா.கேசவ அய்யங்கார் "வள்ளுவருள்ளம்" (1985) என்னும் பெருநூலின் வழி வள்ளுவரது முப்பால் வைணவ நூலே எனக் காட்ட முயன்றுள்ளார். கிறித்தவர்களும் தயங்கவில்லை. முனைவர். மு.தெய்வநாயகம், "திருவள்ளுவர் கிறித்தவரா? (1989), "நீத்தார் யார்?" (1970) முதலான நூல்கள் வழியாகவும், டாக்டர் இரா.அருளப்பா "திருக்குறள் புத்தாய்வு" (1987) என்னும் உரைநூல் வாயிலாகவும் முப்பாலைக் கிறித்தவத்தாக்க நூல் எனக்காட்ட முனைந்தனர்.[4] டாக்டர்.ஜியுபோப் சென்ற

நூற்றாண்டில் முப்பாலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அதில் கிறித்துவத் தாக்கம் உண்டு எனக் காட்டியுள்ளார்.[5]

2. முப்பாலும் புதிய பார்வைகளும்

இருபதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் புதிய சிந்தனைகள் தோற்றம் பெற்றன. தென்னிந்திய - தமிழர் - உரிமையியக்கம், பிராமணர் அல்லாதார் இயக்கம், தன்மான இயக்கம், பகுத்தறிவியக்கம், இந்து சமய எதிர்ப்பியக்கம், தமிழியக்கம், திராவிட இயக்கம் என்றெல்லாம் இந்தப் புதிய சிந்தனைகள் தோற்றம் கொண்டன. இந்தச் சிந்தனைப் போக்கினர் தமிழர் நாகரிகம், தமிழர் இலக்கியங்கள் ஆகியவற்றைத் தனித்துப் பிரித்துத் தமிழரின் அடையாளங்களாக - தமிழரின் தனிச்சிறப்புப் பண்புகளாக - முன் நிறுத்தினர். இவர்களுக்கு வள்ளுவர் முப்பால் அரிய பேறாகக் கிடைத்தது. பேராசிரியர் க.அன்பழகன் தம் கட்டுரை ஒன்றில், இந்தப் புதிய சிந்தனைகளை அழகுற விளக்குகிறார்கள். "சிலம்பும் மேகலையும் தோன்றும் முன்னரே, சங்க காலத்திலேயே தோன்றிய திருவள்ளுவர், எந்த ஒரு சமயச் சார்பும் கொள்ளாதவராய், ஒரு சமயக் கடவுளைச் சுட்டாதவராய், மனித நேயம் வளர்த்திடும் குறிக்கோளுடன் திருக்குறளை வழங்கியுள்ளார். மனிதனின் கடமையை உணர்த்தி ஒழுக்கத்தை வலியுறுத்தி, மானமுடன் வாழ்ந்திடும் வழியை விளக்கியவர் அவர். திருவள்ளுவர் சமயக்கணக்கர் மதிவழி கூறாது, உலகியல் கூறிப் பொருள் இது வென்றார்' என்பது அவரது பெருமை. அப்படிப்பட்ட ஒரு பொது நோக்குடன் ஓர் அறநூல் - முப்பால் விளக்க நூல் - இயற்றப்பட வேண்டுமாயின், அந்நாளில் அப்படிப்பட்ட தெளிந்த சிந்தனை உருக்கொள்ளுதற்கு ஏதுவான எண்ணப் போக்கே, தமிழ்ச் சான்றோரிடம் நிலவியது என்றால் அது தவறாகாது. திருவள்ளுவரின் நுண்மாண் நுழைபுலத் திறனால் அவர் வகுத்த வாழ்க்கை நெறி, சங்ககாலத் தமிழ் இலக்கியங்கள் வழங்கிய சிந்தனையினைப் பகுத்தறிந்ததன் விளைவு எனலாம். ஆம்! உலகியல் வாழ்க்கையை 'இயற்கை' என ஏற்கும் தெளிவான எண்ணங்களுடன் உலவியவர்களே அந்நாள் தமிழர்கள். தமிழுக்கு ஆக்கம் செய்யும் இருபதாம் நூற்றாண்டுச் சிந்தனை!"[6]

அய்ரோப்பியர் வருகை தந்து இந்திய ஆட்சியையும் கைப்பற்றி அமர்ந்த போது வடபுலத்தில் சமற்கிருதம் படித்து அதன் சமய நூல்களையும் சாத்திரங்களையும் இலக்கியங்களையும் மொழிபெயர்த்து வெளியுலகுக்குக் கொண்டுவந்தனர். இவையே இந்தியச் சிந்தனையும் பண்பாடுமோ என அவர்கள் மயங்கினர். வடமொழிச் சார்பான சிந்தனைகள் கடவுள், இம்மை, மறுமை, வினை (கருமம்)க் கோட்பாடுகளை வற்புறுத்திப் பெரும்பாலும் இவ்வுலக வாழ்வை வெறுத்தன; மறுத்தன. மக்களிடையே உயர்வு தாழ்வினைக் கற்பித்தன. ஒரு குலத்துக்கு ஒருநீதி பேசின; கிறித்தவச் சிந்தனையாளர்களான அய்ரோப்பியர்க்கு இந்த இந்தியச் சிந்தனைகள் புதிராகவும் அறமற்றனவாகவும் தோன்றின. அவர்கள் குறிப்பாகக் கிறித்தவப் பாதிரிமார்கள் - வாழ் விருப்புக் கொள்கையையும், மக்கட் சமன்பாட்டுக்கொள்கையையும், பகுத்தறிவுக் கொள்கையையும் பேசும் சிந்தனைகளையும் இலக்கியங்களையும் இந்திய மண்ணில் எதிர்நோக்கியிருந்தனர். அவர்களுக்குத் தமிழகத்தில் அருஞ்செல்வமாகத்

திருக்குறள் எனப்போற்றப்படும் முப்பால் கிடைத்தது. அவர்கள், எதிர்பார்த்த சிந்தனைகள் அனைத்தையும் திருக்குறளில் கண்டனர். வள்ளுவர் முப்பாலில் உலக விருப்புக் கொள்கை உள்ளார்ந்து படிந்திருப்பதை 'இந்தியச் சிந்தனையும் அதன் வளர்ச்சியும்' என்னும் தம் நூலில் ஆல்பர்ட் ஸ்வைட்சர் என்னும் செருமானியப் பேரறிஞர் விளக்கியுள்ளார். இவையே இந்திய அடித்தள மக்களின் வாழ்க்கைக் கொள்கைகள் என்பது அவர்தம் கருத்து.[7]

இந்த நூற்றாண்டில் பகுத்தறிவியக்கமும் தமிழியக்கமும் முப்பாலைத் தம் பண்பாட்டுக் குறியீடாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டதில் வியப்பில்லை. முப்பாலின் பண்டைய உரைகள் கண்டனத்துக்கு உள்ளாயின. ஆரியச் சார்புடைய 'பரிமேலழகர் உரை வள்ளுவர் உள்ளத்திற்கு இட்ட திரையே ஆனது' (பாரதிதாசன்) எனக் கடுமையாகத் தூற்றப்பட்டது. பகுத்தறிவு நோக்கத்தில் புத்துரைகள் எழுதப்பட்டன. புலவர் குழந்தை, அறிஞர் கா.அப்பாத்துரை, பாவேந்தர் பாரதிதாசன், நாவலர் நெடுஞ்செழியன் கலைஞர் கருணாநிதி (1996) ஆகியோர் முப்பாலுக்குப் பகுத்தறிவு நோக்கில் உரை வகுத்தனர்.

பெரியார் ஈ.வெ.ராமசாமி 1940-ஆம் ஆண்டுகளிலேயே முப்பாலுக்குப் பகுத்தறிவு நோக்கில் விளக்கம் சொல்லி வந்துள்ளார்.[8]

பெரியாரைப் பின்பற்றிய பகுத்தறிவாளரின் கொள்கைகள்
கடவுள் ஆத்மா சிறுதெய்வங்கள் மறுப்பு
மோட்சம் சொர்க்கம் நரகம் மறுப்பு
கருமபலன் பலபிறப்பு மறுப்பு
பூசை பண்டிகை பக்தி விரதம் மறுப்பு
வருணாசிரம தருமம் மறுப்பு

எனப்படுபவை ஆகும். இவற்றுக்கு ஒத்த வகையிலேயே பகுத்தறிவாளர்கள் முப்பாலுக்கு உரை வரைய முயன்றனர். உரை வகுத்தலில் பழமரபுக்கும் புதுமரபுக்கும் இடையே மோதல் இருக்காதா? முப்பாலும் பகுத்தறிவாளருக்கு இடம் தருமா? எனும் வினாக்கள் எழுதல் இயல்பு.

3. கடவுள் வாழ்த்தும் பகுத்தறிவாளர்களும்

முப்பாலின் முதற் பத்து - முதல் அதிகாரம் - கடவுள் வாழ்த்து எனும் தலைப்பினை உடையதாகும். இந்தத் தலைப்பே கடவுள் மறுப்பாளராகிய பகுத்தறிவாளர்க்குச் சிக்கலாகிவிட்டது. இந்தத் தலைப்பினை மாற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதற்குக் காரணமும் சொல்லப்பட்டது. " 'கடவுள்' என்னும் சொல் முப்பாலில் 1330 குறட்பாக்களில் பிறிது ஓரிடத்தில் கூட வள்ளுவரால் ஆளப்பட்டிருக்கவில்லை. வள்ளுவர் தலைப்பில் ஆண்ட சொல்லைப் பாக்களுக்குள் ஆள்வது வழக்கம்; முறையுமாகும். ஆதலால் 'கடவுள் வாழ்த்து' என்னும் தலைப்பு வள்ளுவர்க்குப் பின்வந்தோரால் வழங்கப்பட்டிருக்க வேண்டும்". பெரியார் இவ்வாறு பேசுகிறார்.

"கடவுள் வாழ்த்துப் பாடி இருக்கிறாரே; அவரை அறிவியல் வாதி என்று குறிப்பிடுகிறீர்களே? என்று கேட்கலாம். பதில் என்னவென்றால் "கடவுள் வாழ்த்து" என்று இங்கு அதிகாரத்திற்குத் தலைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் அது அவர் கொடுத்த தலைப்பாக இருக்க முடியுமா? கடவுள் வாழ்த்து என்ற பெயர் அவர் கொடுத்த பெயராக இருக்க முடியாது என்றுதான் சொல்வேன். என்ன ஆதாரம் என்றால் அவரது 133 அதிகாரங்களில் 132 அதிகாரங்களை எடுத்துக்கொண்டால் அந்தத் தலைப்பைக் கொண்ட சொல்லை ஒன்று முதல் சில இடங்களில் அய்ந்து குறள்களில் அந்தத் தலைப்பைப் பல அத்தியாயங்களில் பயன்படுத்தியிருக்கிறார். அதாவது ஒரு அதிகாரத்தில் உள்ள பத்துக் குறள்களில் ஒன்றுக்குக் குறையாமல் அய்ந்து அய்ந்து குறட்பாக்கள் வரையில் அந்த அதிகாரத் தலைப்புச் சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார்". "ஆனால் முதல் அதிகாரத்தில் உள்ள பத்துக் குறட்பாக்களில் கடவுள் வாழ்த்து என்ற தலைப்பில் உள்ள 'கடவுள்' என்ற சொல் ஒரு குறளில் கூடப் பயன்படுத்தப்படவில்லை".

"ஆனால் மற்றவர்கள் கடவுள் தன்மைகொண்ட இறைவன் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்களே என்று கேட்கக்கூடும். இறைவன் என்பது கடவுளுக்கும் பயன்படுத்தப்படுகிறது. நான் அச்சுப்போட்டு விற்ற திருக்குறளைப் பார்த்தால் தெரியும். அதில் கடவுள் வாழ்த்து என்று போடாமல் 'பண்பு சிறப்பு' என்றுதான் போட்டிருக்கிறேன். என் கருத்துப்படி நாஸ்திகன் என்ற தன்மையில், அறிவையே பிரதானமாகக் கொண்டவன் என்ற தன்மையில்தான் இந்தப் பத்துக் குறட்பாக்களுக்கும் பொருள் காண்கிறேன்".

கடவுள் நம்பிக்கை இல்லாத நாத்திகராகிய பெரியார் ஒன்று தலைப்பை மாற்றுகிறார்; இரண்டு புதுப்பொருள் - வேறுபொருள் - வகுக்கிறார். பகுத்தறிவு நோக்கில் முப்பாலுக்கு உரை வகுக்கும் அனைவருமே முதல் பத்தின் தலைப்பை மாற்றுகின்றனர்.

அறிஞர் கா.அப்பாத்துரையார் முதற்பத்தினுக்கு 'இறைவாழ்த்து' எனத் தலைப்பிட்டு, அதற்கு 'உலக குருவாகிய ஆதிபகவனை வாழ்த்துதல்' எனப் பொருள் உரைப்பார். புலவர் குழந்தை 'இறை நலம்' எனத் தலைப்புத் தருகின்றார். 'முதன்மையான குணம்' என்றும் பொருள் தருகிறார். பாரதிதாசன் 'உலகின்தோற்றம்' எனத் தலைப்புத் தருகிறார்.[9] கலைஞர் அவர்கள் 'வழிபாடு' எனத் தலைப்புத் தருகிறார். கலைஞர் தலைப்பில் பொருளை விளக்கி உரைக்காமற் போனாலும் தெய்வத்தை வழிபடுதலை - வணங்குதலை - அவர் உரைக்கவில்லை என்பது அவர் அப்பத்துக் குறட்பாக்களுக்கும் உரை வரைந்த போக்கால் உணரலாம்.

கடவுள் உண்மையை உடன்படும் இன்றைய உரையாசிரியர்கள் கூட முப்பாலின் முதற்பத்தினது தலைப்பை மாற்றி அமைப்பது பொருத்தம் எனக் கருதுகின்றனர். இரா.சாரங்கபாணி இவ்வாறு எடுத்துக் காட்டுகிறார். "முதற்பொருள் வாழ்த்து என ஆதிகாரப் பெயர் கூறி உலகிற்கு முதலாகிய

பதியைக் கூறுதல் என்பார் சுகாத்தியர்". "இந்நூலின் அதிகாரத்தலைப்புக்கள் அவ்வவ்வதிகாரத்தின் முதற்பாட்டில் உள்ள அதிகாரப் பொருளை உணர்த்தும் சொல்லையோ பொருளையோ கொண்டவை என அறிகிறோம். அம்முறையில் இவ்வதிகாரம் ஆதிபகவன் அல்லது உலகமுதல் என்றிருக்கலாம் என்று தோன்றுகிறது எனக் கூறுவார் திரு.வி.க.". "முதற்பகவன் வாழ்த்து என்பார் தேவநேயப் பாவாணர்". "இவ்வதிகாரத்தில் வாலறிவன், மலர்மிசை ஏகினான் முதலிய பெயர்கள் இறைவனைக் குறிப்பினும் முதற் குறளிற் கூறப்பட்ட ஆதிபகவன் என்னும் பெயர் சிறப்பினதாகலின் அப்பெயரான் இவ்வதிகாரம், ஆதிபகவன் வாழ்த்து என்றிருக்கலாம் எனக் கருத்துரைப்பவர் வ.சுப.மாணிக்கனார்".[10]

பண்டை உரையாசிரியர்களிடை ஓர் அதிகாரத் தலைப்புத் தவிர வேறு எந்த அதிகாரத் தலைப்பிலும் மாற்றம் காணப்படவில்லை. மணக்குடவரும் பிறரும் 'மக்கட்பேறு' என்ற தலைப்பைக் கொண்டிருக்கப் பரிமேலழகர் மட்டில் 'புதல்வரைப் பெறுதல்' எனத் தலைப்பினை மாற்றி வைத்துக் கொண்டுள்ளார். அதிகாரத்தின் தலைப்புக்கள் மணக்குடவர் காலமுதல் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளாக மாறாமல் வழக்கில் இருந்து வருபவை. கிடைத்த பண்டை ஏடுகளுள் ஒன்றிலேனும் காணப்படாத மாற்றத்தைச் செய்தலை பனுவல் திறனாய்வு (Textual Criticism) உடன்படுவதில்லை. இன்றைய உரையாசிரியர்கள் பலரின் தலைப்பு மாற்றங்கள் ஏற்புடையனவானால் கலைஞர் கருணாநிதியவர்கள் 'வழிபாடு' என மாற்றியதும் ஏற்புடையதாகலாம்.

4. முதற்பத்திற்குக் கலைஞர் உரை

பகுத்தறிவாளர் நோக்கில் உரைவகுக்கப் புகுந்த கலைஞர் கருணாநிதியவர்கள் கடவுள் உண்மைபற்றிய சிந்தனையை ஒதுக்கி வைத்துவிட்டே உரைவகுப்பதாக முகவுரையில் குறிப்பிட்டுள்ளார். 'கடவுள் வாழ்த்து' எனும் அதிகாரத் தலைப்பை வழிபாடு எனக் குறித்துள்ளேன். வள்ளுவரைக் கடவுள் மறுப்பாளர் அல்லது கடவுள் நம்பிக்கையாளர் எனும் வாதத்திற்குள் சிக்கவைக்க நான் விரும்பவில்லை. 'வழிபாடு' எனும் அதிகாரத்தில் அமைந்துள்ள குறட்பாக்களுக்கு நான் எழுதியுள்ள உரைகளைக் கொண்டு இதனை உணரலாம்".

அவர் வரைந்த உரையினை இப்போது காணலாம்:

குறட்பா : 1 ஆதிபகவனுக்கு வேறு விளக்கம் இல்லை. ஆதிபகவன் என்றே உரையில் உள்ளது.

குறட்பா : 2 வாலறிவன் = தன்னைவிட அறிவில் மூத்த பெருந்தகையாளர். நற்றாள் தொழுதல் - முன்னே வணங்கி நிற்கும் பண்பு.

குறட்பா : 3 மலர்மிசை ஏகினான் = மலர் போன்ற மனத்தில் நிறைந்தவன். அடிசேர்ந்தார் - பின்பற்றுவோர்.

குறட்பா : 4 வேண்டுதல் வேண்டாமை இலான் = விருப்பு வெறுப்பற்றுத் தன்னலம் இன்றித் திகழ்கின்றவர்.

குறட்பா : 5 இறைவன் பொருள் சேர் புகழ் புரிந்தார். இறைவன் என்பதற்கு உரிய பொருளைப் புரிந்துகொண்டு புகழ்பெற விரும்புகின்றவர்கள்.

இங்கு இறைவனுக்கு விளக்கம் இல்லை. உண்மையாகவும் இன்மையாகவும் கருத இடம் தரும் இறை எனக் கொள்ளலாம். 'இறைவன்' என்பதற்குரிய பொருள் பகுத்தறிவாளர் கொள்ளும் இன்மைப் பொருளாகவும் இருக்கலாம். இருள் சேர் இருவினை = நன்மை தீமைகள். சேரா = எதிர் கொள்ளத்தக்கன.

குறட்பா : 6 பொறிவாயில் ஐந்தவித்தான் = ஐம்பொறிகளையும் கட்டுப்படுத்திய தூயவன்

குறட்பா : 7 தனக்கு உவமை இல்லாதான் = ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன். தாள் சேர்ந்தார் = அடி ஒட்டி நடப்பவர்கள்.

குறட்பா : 8 அறவாழி அந்தணன் = அறக்கடலாகவே விளங்கும் சான்றோர். பிறஆழி = பிற துன்பக்கடல்கள்.

குறட்பா : 9 எண்குணத்தான் = ஈடற்ற ஆற்றலும் பண்பும் கொண்டவன். தாளை வணங்கல் = வணங்கி நடத்தல். எண் குணத்தான் என்ற தொடரில் அமைந்துள்ள 'எண்' என்னும் சொல்லுக்கு 'எண்ணத் தக்க' 'மதிக்கத்தக்க' என்று பொருள் சொல்லப் படுகிறது போலும். எண் என்றால் எட்டு எனக் கொள்ளப்படவில்லை.

குறட்பா : 10 இறைவன் = தலையானவனாக இருப்பவன். அடிசேராதார் = அடி தொடர்ந்து செல்லாதார்.

பகுத்தறிவாளராகிய கலைஞர் கருணாநிதி, வள்ளுவரின் முப்பாலது முதற்பத்தில் பேசப்படுபவர் அறிவில் மூத்த பெருந்தகையாளர், விருப்பு வெறுப்பு, தன்னலம் அற்று புலனடக்கம் பெற்ற தூய சான்றோர், ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஈடற்ற ஆற்றலும் பண்பும் கொண்ட தலையானவர் எனக் கொள்கிறார். அத்தகையார் அடிசேர்தல், அவரை வணங்குதல் என்பன அவர் கொள்கைகளைப் பின்பற்றி நடத்தல் ஒழுகுதல் ஆகும் எனவும் அவர் கொள்கிறார்.

வள்ளுவரின் கடவுள் வாழ்த்திற்கு இருவகைப் பொருள்தான் கூற முடியும். ஒன்று, அதில் கடவுளுக்கு வணக்கம் செய்தல்; வழிபாடு செய்தல், அவர் வழிப்படுதல், நெறி நிற்றல் என்பதாகும். அவர் அனைத்திற்கும் முதலான - அடிப்படையான - தெய்வம்; பரம்பொருள். இரண்டு, அதில் கூறப்படுபவர் மாந்தராய்ப் பிறந்து உயர்ந்து தலைமை சான்றவராக இருத்தல்; அவர் வழிநிற்றல் என்பதாகும். கூறப்படுபவர் கடவுள் இல்லையேல் மாந்தராதல் வேண்டும்; மாந்தர் இல்லையேல் கடவுளாதல் வேண்டும். பகுத்தறிவாளர் அதில் பேசப்படுபவர் மாந்தரே எனக் கொள்ளுதலில் வியப்பில்லை. 'வள்ளுவரைக் கடவுள் மறுப்பாளர் அல்லது கடவுள் நம்பிக்கையாளர் எனும் வாதத்திற்குள் சிக்கவைக்க விரும்பவில்லை' எனக் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டாலும் தம் உரையில் வள்ளுவர் கடவுள் மறுப்பாளர் என்றே உணரும்படி உரை வகுத்துவிட்டார்.

5. வள்ளுவர் கொள்கை

ஆனால் வள்ளுவர் கொள்கைதான் என்ன? அவர் கடவுள் மறுப்பாளரா? கடவுள் நம்பிக்கையாளரா?

வள்ளுவரைச் சமணர் என்றோ சமணத் தாக்கம் பெற்றவர் என்றோ பலர் கொள்ளுகின்றனர். திரு.வி.க., வையாபுரிப்பிள்ளை, தெ.பொ.மீ. ஆகியோர் இக்கருத்தினர். இன்னும் சிலர் அவர் பவுத்தர் எனக் கருதுகின்றனர். வள்ளுவர் சாங்கியக் கொள்கையாளர் எனப் பாரதிதாசன் கருதுகிறார். பரிமேலழகர் உரையும் இக்கருத்தைச் சுட்டுகிறது. முப்பாலில் ஆசீவகக் கோட்பாடு உண்டு எனக் கூறுவோரும் உண்டு.[11] இவை எல்லாம் வள்ளுவர் காலச் சூழல் இக்கருத்துக்கள் உண்மை என்று வைத்துக்கொண்டு பார்க்கலாம்.

சமணம், பவுத்தம், ஆசீவகம், சாங்கியம் (அதாவது நிரீஸ்வர சாங்கியம்) மீமாம்சை, உலகாய்தம் ஆகியவற்றின் கொள்கைகளில் கடவுள் இல்லை. அதாவது 'பாராதி அண்டப் பரப்பெல்லாம் படைத்து அளித்துத் துடைக்கும் ஒரு பரம் பொருள்' அவற்றுக்கு உடன்பாடு இல்லை.[12] வள்ளுவர் இவற்றுள் ஏதாவது ஒன்றைச் சார்ந்தவரானால் அவருக்கும் இத்தகைய கடவுள் உடன்பாடில்லை என்பதே பொருள். முப்பாலின் கடவுள் வாழ்த்து எனும் பத்தும் சமணம் பேசுகிறது என்பதற்கே வலிவான சான்றுகள் உண்டு. மாந்தராய்ப் பிறந்து அறவொழுக்கம் மேற்கொண்டு துறவு பூண்டு அனைத்தும் அறியும் 'கேவல ஞானம்' பெற்று அருகபதவி என்னும் வீடுபேறு அடைந்த மாந்தரையே கடவுளாகவும் வழிபாட்டிற்கு உரியராகவும் சமணம் கொள்ளுகிறது. பவுத்தமும் இவ்வாறே மாந்தராய்ப் பிறந்து புத்த பதவி அடைந்தோரையே கடவுளாக வழிபடுகிறது. இத்தகையோர் பண்பு நலன்களே முப்பாலின் கடவுள் வாழ்த்தில் பேசப்படுகின்றன. பகுத்தறிவாளர் பேசும் உரைகளும் இத்தகைய கருத்துக்களே எனக் கொள்ளவேண்டும். சமண பவுத்தர் உரைக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளுவோமானால் பகுத்தறிவாளர் உரைக்கருத்துக்களையும் எற்றுக் கொள்வதில் தடை இருக்கக் காரணம் இல்லை.

பிற இந்தியச் சமயங்களாகிய வைதிகம், வைணவம், சைவம், வேதாந்தம் ஆகிய வைதிகச் சமயங்களும் முப்பாலின் கடவுள் வாழ்த்துப் பத்திற்கு உரைகண்டுள்ளன. கடவுள் உண்மையை அடிப்படையாகக் கொண்டு அவை உரை கண்டுள்ளன. ஆனால் இவற்றுள்ளே சிக்கல் இல்லாமல் இல்லை. ஆனால் வள்ளுவர் கொள்கை யாது?

வைதிகச் சமயங்கள் வீடுபேறு என்பதை ஆன்மா பற்றறுத்துத் துறவு பூண்டு பிறப்பறுத்து அதன் அதன் கடவுளை அடைதல் என விளக்குகின்றன. அவைதிகச் சமயங்களாகிய சமண, பவுத்தம், சாங்கியம் ஆகியவை உயிர், பற்றுக்களைத் துறந்து புலனடக்கம் மேற்கொண்டு பிறப்புச் சுழற்சியிலிருந்து விடுபட்டு அருகபதவி புத்த பதவி அடைதலை வீடுபேறு எனக் கொள்ளுகின்றன. கடவுளை அடைதல் அவைதிகச் சமயங்களில் இல்லை. காரணம் கடவுள் உண்மை இவற்றுக்கு உடன்பாடில்லை. இந்திய மண்ணில் தோன்றிய சமயங்கள் பலவற்றிடையே இந்த அடிப்படை வேறுபாடு உள்ளது என்பதை நாம் மனத்தில் கொள்ளுதல் வேண்டும். இந்திய மண்ணில் தோன்றிய பழந் தத்துவங்களும், சமயங்களும் 'பாராதி அண்டப் பரப்பெல்லாம் படைத்து அளித்துத் துடைக்கும் பரம்பொருளை, கொள்ளவில்லை என்பது

வரலாற்றுண்மை. இன்று உலகில் மாபெரும் சமயமாக ஆசியா முழுவதும் பரவி இருக்கும் இந்தியச் சமயமாகிய பவுத்தம் இத்தகைய கொள்கையுடையது என்பது நமக்குப் பெருமை சேர்க்கத்தக்கது. கடவுள் உண்மைக் கோட்பாடு இடைக்காலத்தில் தோன்றி மறுப்புக்கும் வெறுப்புக்கும் மாற்றத்துக்கும் பொருளாகிய கோட்பாடுதான்.[13] இந்திய மண்ணில் அன்று முதல் இன்றுவரை தோன்றிய சிந்தனையாளர் நூறுபேர்கள் எனில் அவர்கள் நூறு பேர்களும் நூறுவகைக் கடவுட் கோட்பாடுகளை கூறி வைத்துள்ளனர் என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். இந்த வரிசையில் திருவள்ளுவர் எத்தகைய சிந்தனையாளர்?

வள்ளுவரும் உயிரின் இறுதிச் செலவு பற்றிப் பேசுகிறார். அவர் வீடு அல்லது விடுதலை அல்லது மோட்சம் ஆகிய சொற்களைப் பயன்படுத்தவில்லை. பற்றுக்களைத் துறந்து மெய்யுணர்ந்து அவா நீத்தால் உயிர் இயற்கை நிலை அடையும் என்பது வள்ளுவரின் வீடுபேற்றுக் கோட்பாடு.

ஆராஇயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்

என்பது ஊழியல் நீங்கிய அறத்துப்பாலின் 'அவா அறுத்தல்' ஆகிய இறுதிப் பத்தின் இறுதிக் குறட்பா. அவா நீத்தால் பிறப்பறுத்து இயற்கை அடையலாம் என்கிறது இக்குறட்பா. வள்ளுவர் கூறும் இந்த வீடுபேற்றில் கடவுள் இல்லை; வேறு தெய்வம் இல்லை; அவர்தாள் வணங்குதல் இல்லை; அடிசேர்தல் இல்லை. முப்பாலின் முதற்பத்தில் பிறவிக் கடல் நீந்துதலுக்கு இறைவன் தாள் வணங்கல் கூறப்படுகிறது. அவா அறுத்தல் கூறப்படவில்லை. இந்த முரண்பாட்டைக் கருத்தில் கொள்ளவேண்டும். ஆதிபகவன் போன்ற யாரொருவரும் இன்றியே இயற்கைப் பேறு அடைதல் வள்ளுவர் கொள்கை என்பதை அவா அறுத்தல் என்னும் பத்தும் காட்டுகிறது.

இயற்கைப் பேற்றுக்கு கடவுள் தேவை இல்லையானால் வேறு எதற்குத் தேவை?

6. கடவுள் – பொருட் குழப்பம்

'கடவுள்' என்னும் சொல்லுக்குப் பாராதி அண்டப் பரப்பு எல்லாம் படைத்துக் காத்து அழிக்கும் பரம்பொருளாகிய எல்லாம் வல்ல எல்லாம் அறிந்த எங்கும் நிறைந்த ஒன்றுதான் என்று பொருள் கொள்வது வரலாற்று நோக்கில் முறையல்ல. இன்று அவ்வாறுதான் பொருள் கொள்ளப்படுகிறது. முப்பாலுக்கு உரை வரைந்த பண்டை உரையாசிரியர்களாகிய பரிமேலழகர் முதலானவர்களும் அவ்வாறே கொண்டுவிட்டனர்.

கடவுள் மாநகர் (மணி.25.201), கடவுட் கடிகை (மணி.21.7) கடவுட்கடி நகர் (9கலி.84.6), கடவுள் சான்ற கற்பு (புறம் 198.3), கடவுட் பத்தினி (பதிற்று.பதி.5.4), (சிலம்பு 27.2.) கடவுள் கணிகை (மணி.13.95), கடவுள் ஆலம் (நற்.343.4, புறம்.199.1), கடவுளர் (கலி.9.29.35, சிலம்பு, 5,178, 14.41, 21), கரந்து உருவு எய்திய கடவுளாளர் (மணி.1.15), மன்ற மரா அத்த பேஎம் முதிர் கடவுள் (குறுந்.87), கடவுட் கற்பு (குறுந்.252) என்னும் பழந்தமிழ்

இலக்கிய ஆட்சிகள் கடவுள் என்னும் சொல்லுக்குப் பேய், பூதம், அச்சுறுத்துவது (அணங்கு), சக்தி, புனிதம், மனிதநிலை கடந்த ஆற்றல், முனிவர், தேவர், பரம்பொருள் என்றெல்லாம் பொருள் உண்டு என்பதைக் காட்டுகின்றன. இந்த வரிசையிலேயே கடவுட் கோட்பாடு வரலாற்றுப் போக்கில் வளர்ந்துள்ளது.

கடவுள் எனும் சொல் 'கட' எனும் ஒரு வேர்க் கிளவியாலும் - உள் எனும் ஒருவிகுதியாலும் அமைந்தது. 'கட' எனும் சொல், வழி, பாட்டை, பாதை என்னும் பொருளுடையது. நடுகல் முதலான சிறு தெய்வங்கள் மக்கள் செல்லும் வழியில் அமைக்கப்பட்டருந்தன. ஆதலால் கடவுள் என்னும் பெயர் வழியில் உள்ளது எனும் பொருளில் அமைந்தது போலும். இதே பொருள் உடையதுதான் 'இயவுள்' எனும் சொல்லும். இயவு-வழி, பாட்டை; - உள் என்னும் கிளவி, 'விளையுள்' 'விக்குள்', 'பொருள்', 'அருள்' என்னும் சொற்களில் இடம்பெற்ற பெயராக்கவிகுதி.[14] '-உள்' என்னும் கிளவிக்கு 'உள்ளது' எனும் பொருள் இல்லை. கடவுள் என்னும் சொல்லிற்கு 'எல்லாவற்றையும் கடந்து உள்ளது' என்னும் பொருள் கற்பிப்பது பின்னைச் சமயவாதிகளின் கற்பனையே. ஜியார்ஜ் ஹார்ட் என்னும் அமெரிக்கத் தமிழறிஞர் 'கடன் பெறுவது' என்னும் கருத்தில் கடவுள் என்னும் சொல் அமைந்திருக்கலாம் என்பர். 'கடவுள் கடம் பூண்டு' (கலி.46.16) 'எயினர் இடுகடன் உண்குவாய்' (சிலம்பு 12;21.22) என்பன இவர் கருத்துக்குச் சான்றாகலாம்).

ஆதலால் கடவுள் என்னும் சொல் புத்தரையும் அருகனையும் குறிக்கலாம். பொதிகைக் கடவுளாம் அகத்திய.முனிவரையும் குறிக்கலாம். சிவனையும் திருமாலையும் குறிக்கலாம்.

வள்ளுவர் முப்பாலின் முதற்பத்தாகிய கடவுள் வாழ்த்து சமணர்க்கு அருகக் கடவுளையும் பவுத்தருக்கு புத்தக் கடவுளையும் பகுத்தறிவாளர்க்கு மாந்தருட் சிறந்த சான்றோரையும் குறிக்கலாம். (பகுத்தறிவாளர்க்கு அச்சான்றோர் யார் என்பது தெளிவுபடவில்லை. கலைஞர் அவர்களுக்கு அச்சான்றோர் காந்தியாக, பெரியாராக, அண்ணாவாக இருக்கலாம்).

கடவுள் என்னும் சொல்லிற்கு 'முழு முதற் பரம்பொருள்' என ஒரு பொருளே வைத்துக்கொண்டு வள்ளுவரை அணுகியதே முப்பால் உரைகளில் குறையாகப் போய்விட்டது.

7. முரணுக்குத் தீர்வு

முப்பால் ஆய்வில் சிக்கலும் சிந்தனையும் இக்கருத்துக்களோடு முடிவுறவில்லை. 'கடவுள் வாழ்த்திற்கும்' நூலுக்குள் உள்ள 'மெய்யுணர்தல்', 'அவா அறுத்தல்' ஆகிய பத்துக்களுக்கும் இடையுள்ள (மேலே காட்டிய) முரண்பாட்டை எங்கனம் தீர்ப்பது?

இந்த முரண்பாடு தீர்க்க முடியாதபடி அடிப்படையானது. ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், பொறிவாயில் ஐந்தவித்தான், அறவாழி அந்தணன், ஐந்தவித்தான், அறவாழி அந்தணன் ஆகிய தொடர்களும் கருத்துக்களும் வள்ளுவர் காலத்துக்கு உரியவையாகத் தோன்றவில்லை;

பிற்காலத்தன. பாயிரத்தின் பிற பத்துக்களில் இடம்பெற்ற பூசனை, கணம், நீத்தார், துப்பு, போன்ற சொல்லாட்சிகளும் வள்ளுவர் காலத்துக்கு உரியவை அல்ல; பிற்காலத்தன.[15] தாள் தொழுதல் என்னும் சமய வழக்கம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னதே என ஆய்வறிஞர் குறிப்பிடுகின்றனர்.[16] அறத்தோடு பொருளையும் இன்பத்தையும் சமனாக வைத்துப் போற்றும் வள்ளுவர் வாழ்க்கை விருப்பக் கோட்பாட்டிற்குப் பாயிரத்தின் கருத்துக்கள் ஒத்து வருவனவாகத் தோன்றவில்லை. வள்ளுவர் முப்பாலின் பாயிரம் நூலொடு ஒப்பாது தனித்தே நிற்கின்றது. அது பாயிர இலக்கணத்துக்கும் ஒத்து வரவில்லை. வள்ளுவர் காலத்திற்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர் யாரோ ஒரு சமண முனிவர் கடவுள் (அருக) வாழ்த்தொடு கட்டிய பாயிரத்தை எழுதிச் சேர்ந்திருக்கலாம் என்பதைத் தவிர வேறு என்ன கூற முடியும்!

கலைஞர் அவர்களின் திருக்குறள் உரையினை இந்தச் சிந்தனைப் பின்னணியில் பார்த்து நிறைவு கொள்ளலாம்; பாராட்டலாம்.

அடிக்குறிப்புக்கள்

1. முனைவர்.சோ.ந.கந்தசாமி, "குறள் கூறும் உறுதிப்பொருள்" (1997) என்னும் நூலின்வழி முப்பாலின் பவுத்த சமயச் சார்பை எடுத்துக்காட்டுகிறார். (மணிவாசகர் நூலகம், சிதம்பரம்).

2. ஓரிருநூற்றாண்டுகளுக்கு முன்னர்க் கவிராஜ பண்டிதர் என்னும் சமணர் முப்பாலுக்கு உரை எழுதியுள்ளார் என்பர். சக்கரவர்த்தி நயினா அதனை வெளியிட்டுள்ளார்கள். அத்துடன் முப்பாலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து முப்பால் சமணநூல் என வாதிட்டுள்ளார்கள்.

அனந்தநாத நயினார் என்பார் 1932இல் வள்ளுவர் முப்பால் சமண நூலே என வாதிட்டு ஒரு பெருநூல் வரைந்துள்ளார்.

அண்மையில் சென்னை ஜைன இளைஞர் மன்றம் 'திருக்குறள் மூலமும் கட்டுரைகளும்' என ஒன்று வெளியிட்டு உரிமையைக் காட்டியுள்ளது. வடநாட்டில் தொழில்வல்ல சமணர் (ஜெயின்) பாரதிய ஞானபீடம் அமைத்துள்ளனர். இதன் முயற்சியுடன் முப்பாலைப் பற்றி ஒருவிரிவான நூலை க.நா. சுப்பிரமணியத்தை ஆங்கிலத்தில் எழுதுவித்து வெளியிட்டுள்ளனர். முப்பால் சமணநூல் என இந்நூல் நிறுவுகிறது.

3, 'திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே' - க.வச்சிரவேல் முதலியார் (திருக்குறள் தவநெறி மன்றம், மதுரை, 1953). ஆசிரியர். இதன் 'பின் இணைப்புத் துணை நூலாகத் 'திருக்குறள் துலக்கும் ஒழுக்க நெறி' எனப்பிறிது ஒரு நூலையும் இப்பொருள் குறித்தே எழுதியுள்ளார்கள் (1971),

தி.தெ. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வள்ளுவரைச் சைவக் கோலத்துடனேயே வரைந்து வெளியிட்டு வந்தனர்.

4. தெய்வநாயகம், அருளப்பா நூல்கள் 'மெய்ப்பொருள் பதிப்பகம், அயன்புரம், சென்னை வெளியீடுகள்.

5. The Sacred Kurral of Tiruvalluva Nayanar, 1986.

6. பேராசிரியர் க. அன்பழகன், தமிழ்க்கடல் அலையோசை பரவும் தமிழ்மாட்சி - பக் 290-305.

7. Albert Sweitzer in his Book, Indian Thought and its Development. Discusses about the Theories of life Negation and Life Afirmation in the Indian Perspective.

8. திருக்குறளும் பெரியாரும், பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை - 7, 1983 1948, 1958இல் சென்னையிலும் நெல்லை முக்கூடலிலும், பெரியார் ஆற்றிய சொற்பொழிவுகளும் 'குடியரசி'ல் எழுதிய கட்டுரையும் இதில் உள்ளன.

9. பாரதிதாசன் குயில் 1.12.59

10. பேராசிரியர் இரா. சாரங்கபாணி, திருக்குறள் உரை வேற்றுமை, அறத்துப்பால், ப.1 (1989).

11. தமிழகத்தில் ஆஜீவகம், விஜயலட்சுமி.

12. Indians worshipped a God, but Indian Philosophy never recognised a God as creator and controller of the world, p.111, Some Fundamental problems in Indian Philosophy, C. Kunhan Raja, 1960.

13. "The Miimaamsaa is the only system of thought in the whole world where there is a bold denial of God, and of the creation of the world and its control by God, and also of One Man above humanity.

Miimaamsaa attempted to restore the philosophy of Vedic days. But after the Vedic period, God and super-man came to Indian territory. Miimaamsaa wanted to save the nation from these new encroachments. Miimaamsaa fought bravely, fell in the battle like a great hero. Still man and the world remain what Miimaamsaa wanted to present them to be as their nature, real and free" - C. Kunhan Raja, Ibid., p.278.

14. கால்டுவெல் நூல், பக்.552 காண்க.

15. இந்தக் கருத்துக்களின் விரிவை கட்டுரையாளர் தி. முருகரத்தனத்தின் "வள்ளுவர் முப்பாலின் பாயிரம் - சில ஐயங்கள்" என்னும் கட்டுரையில் காணலாம். பேராசிரியர் க. அன்பழகனார் பவழ விழா மலர், 1998.

16. புத்தர் திருவடிகளை வணங்குதல் கி.பி. நான்காம் நூற்றாண்டுக்குப் பின்னராகத்தான் இருக்கும் என ஆராய்ச்சியாளர் ஆனந்தகுமாரசாமி தரும் கருத்தை சோ. ந. கந்தசாமி தம் 'குறள் கூறும் உறுதிப்பொருள்' என்னும் நூலில் எடுத்துக் காட்டுகிறார், ப.217.

17 திருக்குறள் கலைஞர் உரை

பேராசிரியர்.க. முத்துச்சாமி

திருக்குறள் கலைஞர் உரை 'முரசொலி' நாளேட்டில் நாள்தோறும் எழுதப்பெற்றுத் 'திருமகள் நிலையம்' சார்பில் 1996ஆம் ஆண்டில் நூலாக வெளியிடப்பெற்றது.[1] "இமயமலைக்குப் பொன்னாடை போர்த்துகிற முயற்சியில் ஈடுபடுவதும், திருக்குறளுக்கு உரை எழுதுவதும் ஒன்று தான்" எனத் தமக்கே உரித்தான முறையில் திருக்குறளுக்கு உரை எழுதுவதன் அருமைப்பாட்டைக் கலைஞர் அழகுற விளக்கியுள்ளார்.[2] திருக்குறளுக்கு உரை எழுதுவோர் மேற்கொள்ள வேண்டிய நெறிமுறைகள் யாவை என்பதையும் அம்முகவுரையில் கலைஞர் குறிப்பிட்டுள்ளார்.[3]

1. திருவள்ளுவர் வாழ்ந்த காலத்து நம்பிக்கைகள், பண்பாடுகள், அவை குறித்த அவரது பார்வை ஆகியவற்றிற்கு மாறுபடாமல் உரை இருக்கவேண்டும்.

2. உரையாசிரியர் தம் கருத்து எதையும் வலிந்து திணிக்கக்கூடாது.

3. உரையாசிரியர்கள் சொன்ன பொருளன்றித் தமிழில் மற்றொரு பொருளும் இருக்கிறது என்ற உண்மைநிலை உரையில் கடைபிடிக்கப்பெறல் வேண்டும்.

4. தாம் எண்ணியது போல் திருவள்ளுவர் எண்ணினாரா என்று நோக்காமல் திருவள்ளுவர் எண்ணி எழுதியது என்ன என்பதை அறிவதில் அக்கறை கொண்டு உரை எழுதவேண்டும்.

5. திருவள்ளுவரைக் கடவுள் மறுப்பாளர் அல்லது கடவுள் நம்பிக்கையாளர் என்ற வாதத்திற்குள் சிக்கவைப்பது விரும்பக்கூடியது அன்று.

இவ்வாறு தாமே வகுத்துக் கொண்ட உரைநெறிகளுக்கொப்பக் கலைஞர் திருக்குறளுக்குச் சிறப்பான, நடைமுறைக்கு ஏற்புடைய ஓர் அருமையான உரையைப் படைத்துள்ளார்.

புத்துரை

கலைஞர் நடைமுறைக்கேற்றவாறும், திருவள்ளுவரின் உள்ளத்தைப் புரிந்துகொண்டும், இதுவரை யாரும் கூறாத புதிய உரைகளைப் பல குறள்களுக்கு வழங்கியுள்ளார். அவை கலைஞரின் நடைமுறை அறிவுக்கும், பல்துறை அனுபவங்களுக்கும், அறிவு நுட்பத்திற்கும், தனித்தன்மைக்கும் சான்றாய் விளங்குகின்றன.

இயல்புடைய மூவர்

இல்வாழ்க்கை என்ற அதிகாரத்தின் முதற் குறளான,

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை (41)

என்பதில் உள்ள 'இயல்புடைய மூவர்க்கும்' என்ற தொடருக்குப் பழைய உரையாசிரியர்களும், தற்கால உரையாசிரியர்களும் வேறுவிதமாகப் பொருள் கூறியுள்ளனர். முனைவர் தமிழண்ணல், "இல்வாழ்க்கை முதற்குறள் கூறும் இயல்புடைய மூவர் யார் என்பதில் யாருக்கும் இதுகாறும் ஒரு தெளிவேற்படாமை நன்கு புலனாகிறது. ஒரு தொடரைத் திருவள்ளுவர் விரிவு சுட்டாமல் தொகைப்படுத்திக் கூறியது, எத்தனையோ சிந்தனைகளுக்கு இடமளித்துவிட்டது" எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.[4]

கலைஞர் மேற்கூறிய குறளுக்குப் "பெற்றோர், வாழ்க்கைத்துணை, குழந்தைகள் என இயற்கையாக அமைந்திடும் மூவர்க்கும் துணையாகஇருப்பது இல்லறம் நடத்துவோர் கடமையாகும்" என உரை கூறியுள்ளார். இயல்புடைய மூவர் யார் எனச் சிந்தித்து, பெற்றோர் என்பதனை உய்த்துணர்ந்து, அடுத்து வரும் வாழ்க்கைத் துணைநலம், மக்கட்பேறு ஆகிய இரண்டு அதிகாரங்களைக் கொண்டும், இந்த அதிகாரத்தில் அடுத்துவரும் இரு குறள்களை (42, 43) அடிப்படையாகக் கொண்டும் கலைஞர் புத்துரை வரைந்துள்ளார். இதுவரை தெளிவேற்படாத ஒரு குறளுக்குக் கலைஞர் தெளிவான உரை கண்டுள்ளார்.

என்பும் உரியர்

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. (72)

என்ற குறளுக்குக் கலைஞர் "அன்பு இல்லாதவர், எல்லாம் தமக்கே என உரிமை கொண்டாடுவர். அன்பு உடையவரோ தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தும் பிறர்க்கென எண்ணிடுவர்" என உரை வரைந்துள்ளார்.

என்பும் என்ற சொல்லுக்குப் பிற உரையாசிரியர்கள் போலச் சொற்பொருள் நோக்காது அதன் கருத்துப் பொருளான உடல், பொருள்,ஆவி எனப் பொருள்கொண்டு திருவள்ளுவரின் உள்ளக் கிடக்கையை அறிந்து கலைஞர் பொருள் கொண்டுள்ளார்.

அவ்வுலகமும் இவ்வுலகமும்

அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு. (247)

என்ற குறளுக்குக் கலைஞர், "பொருள் இல்லாதவர்களுக்கு இல்லற வாழ்க்கை சிறப்பாக இராது. அது போலவே கருணை உள்ளம் இல்லாதவர்களின் துறவற வாழ்க்கையும் சிறப்பாக அமையாது" எனப்புத்துரை கூறியுள்ளார்.

அவ்வுலகம் என்பதை உரையாசிரியர்கள் மேலுலகம், தெய்வலோகம், வீட்டின்பம் எனக்கூறக்[5] கலைஞரோ துறவற வாழ்க்கை எனப்பொருள்

கொண்டுள்ளார். அவ்வாறே இவ்வுலகம் என்பதை உரையாசிரியர்கள் இந்த உலக வாழ்க்கை எனப் பொருள் கூறக்[6] கலைஞரோ இல்லற வாழ்க்கை எனப்பொருள் கூறியுள்ளார். உரையாசிரியர்கள் சொன்ன பொருளன்றித் தமிழில் மற்றொரு பொருளும் இருக்கிறது என்ற உண்மை நிலையைக் கருத்தில் கொண்டு இவ்வாறே பல குறள்களுக்குக் கலைஞர் புத்துரை கண்டுள்ளார்.

ஈண்டு வாரா நெறி

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி **(356)**

என்ற குறளுக்குக் கலைஞர் "துறவற வாழ்வுக்குத் தகுதியுடையவராகச் செய்திடும் அனைத்தையும் கற்று, உண்மைப்பொருள் உணர்ந்து அதன்படி ஒழுகுபவர், மீண்டும் இல்லற வாழ்க்கையை விரும்ப மாட்டார்கள்" என்று உரை கூறியுள்ளார்.

'ஈண்டு வாரா நெறி' என்பதற்கு உரையாசிரியர்கள் பிறவாநெறி, வீட்டுநெறி எனப் பொருள் கூறியிருக்கக்[7] கலைஞர் இல்லற வாழ்க்கை எனப்பொருள் கூறியுள்ளார். திருக்குறள் உரைக்களஞ்சியம், துறவறவியல் முகவுரையில் பெரும்புலவர் ச. தண்டபாணி தேசிகர் கூறும் கருத்துகள் இங்கே குறிப்பிடத்தக்கன. அவர், "இல்லறமும் துறவறமும் என்றும் இயைபுடையனவே. இல்லறத்தின் பின் இயற்றப்படுவதுதான் துறவறம். இது தான் தமிழ் மரபு" என்கின்றார்.[8] மேலும் அவர், "இல்லறத்தின் வளர்ச்சியும் முதிர்ச்சியுமே துறவு என்பது வள்ளுவர் கருத்தாதல் தெளிவு. இல்லறம் காய்நிலை, துறவறம் கனிநிலை. காய் முற்றின் இன் தீங்கனியாம் என்று, பயிலும் நம்மையுங் கருதச் செய்கிறார்; பின்பற்றச் சொல்கிறார்" எனத் திருவள்ளுவரின் சிந்தனையைத் தெளிவுபடுத்துகிறார்.[9] இக்குறள் உரையின் வழிக் கலைஞர் தமிழ் மரபறிந்து திருவள்ளுவரின் சிந்தனையைச் செவ்வனே உணர்ந்து புத்துரையாத்துள்ளார் என்பது தெளிவாகும்.

கசடற

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. **(391)**

என்ற குறளுக்குக் கலைஞர், "பிழை இல்லாதவற்றைத் தனது குறைகள் நீங்குமளவிற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். கற்றபிறகு அதன்படி நடக்க வேண்டும்" என உரை கூறியுள்ளார்.

'கசடற' என்பதற்கு உரையாசிரியர்கள் நூலைக் குற்றமின்றிக் கற்கவேண்டும் என உரை கூறியிருக்கக் கலைஞர், தனது குறைகள் நீங்குமளவிற்குக் கற்கவேண்டும் என்று புத்துரை கூறியுள்ளார். கற்றபிறகு அதன்படி நடக்க வேண்டும் என்னும் கருத்துக்குத் தன் குற்றம் நீக்கல் இன்றியமையாததாதலின் கலைஞர் பொருள், மிகுந்த பொருத்தமுடையது.

கண்ணுடையர்

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். **(393)**

என்ற குறளுக்குக் கலைஞர் "கண்ணில்லாவிடினும் அவர் கற்றவராக இருப்பின் கண்ணுடையவராகவே கருதப்படுவார். கல்லாதவருக்குக் கண் இருப்பினும் அது புண் என்றே கருதப்படும்" என உரைத்துள்ளார்.

"கண்ணில்லாவிடினும்" என்ற கலைஞரின் புத்துரை குறளின் கருத்துக்கு மேலும் மெருகூட்டுவதைக் கற்போர் உணரலாம்.

உடையார் முன் இல்லார்

உடையார் முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர். (395)

என்ற குறளுக்குக் கலைஞர், "அறிவுடையார் முன் அறிவில்லாதவர் போல் தாழ்ந்து நின்று, மேலும் கற்றுக் கொள்பவர்களின் ஆர்வத்தைக் கற்றுக் கொள்ளாதவர்கள், கடைநிலை மாந்தராகக் கருதப்படுவார்கள்" என உரை தீட்டியுள்ளார்.

'உடையார் முன் இல்லார்' என்பதற்கு உரையாசிரியர்கள் செல்வம்உடையார்முன் வறியவர் தாழ்ந்து நிற்பதைப் போல என உரைகூறியுள்ளனர்.[10] கலைஞர் உடையார் என்பதை அறிவுடையார் என்றும் இல்லார் என்பதை அறிவு இல்லார் என்றும் கூறி நயமுடன் புத்துரை வரைந்துள்ளார்.

நரியடும்

காலாழ் களரின் நரியடுங் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு. (500)

என்ற குறளுக்குக் கலைஞர் "வேலேந்திய வீரர்களை வீழ்த்துகின்ற ஆற்றல் படைத்த யானை, சேற்றில் சிக்கிவிட்டால் அதனை நரிகள் கூடக் கொன்றுவிடும் என உரை கூறியுள்ளார்.

யானை ஒன்றை ஒரு நரி கொல்வது இயல்புக்கு மாறானது எனக் கருதிக் கலைஞர் நரி என்ற சொல்லிற்கு நரிகள் எனப் பொருள் கொண்டுள்ளார். "பால்பகா அஃறிணைப்பெயர் பாற்பொதுமைய" என நன்னூல் இலக்கண மரபை உட்கொண்டு கலைஞர் தம் நுண்மாண் நுழைபுலத்தால் இவ்வாறு புத்துரை செய்துள்ளார். இது கலைஞரின் இலக்கணப் புலமைக்கும், நடைமுறை அறிவிற்கும் தக்க சான்றாகும்.

நோய்

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். (948)

என்ற குறளுக்குக் கலைஞர் "நோய் என்ன? நோய்க்கான காரணம் என்ன? நோய் தீர்க்கும் வழி என்ன? இவற்றை முறையாக ஆராய்ந்து சிகிச்சை செய்யவேண்டும்" என்று உரை கூறியதோடு அமையாது, உடல் நோய்க்கு மட்டுமின்றிச் சமுதாய நோய்க்கும் இது பொருந்தும்" எனவும் உரை கூறியுள்ளார். திருக்குறளின் இருமடிச் செயல்முறைப் பயன்பாட்டை மனதிற் கொண்டு அரிய உரையைக் கலைஞர் கூறியதோடு, சமுதாய

நோயை நீக்க முன்வரும் சமுதாய மருத்துவர்களுக்கான செயல்முறைத் திட்டத்தையும் இதன் வழிப்பரிந்துரைக்கின்றார்.

மேலல்லாரும் கீழல்லாரும்

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர். (973)

என்ற குறளுக்குக் கலைஞர் "பண்பு இல்லாதவர்கள் உயர்ந்த பதவியில் இருந்தாலும் உயர்ந்தோர் அல்லர்; இழிவான காரியங்களில் ஈடுபடாதவர்கள் தாழ்ந்த நிலையில் இருந்தாலும் உயர்ந்தோரேயாவார்கள்" என உரை வரைந்துள்ளார்.

பரிதியார் குலஞ்சுட்டி உரை எழுதியதற்கு மாறாகத்[11] திருவள்ளுவரின் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற கோட்பாட்டை மனதிற்கொண்டு கலைஞர் உரை வரைந்துள்ளார்.

மண்புக்கு மாய்வது மன்

பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன். (996)

என்ற குறளுக்குக் கலைஞர் "உலக நடைமுறைகள், பண்பாளர்களைச் சார்ந்து இயங்கவேண்டும். இல்லையேல் அந்த நடைமுறைகள் நாசமாகிவிடும்" என உரை வரைந்துள்ளார். உரையாசிரியர்கள் உலகம் அழிந்துவிடும் எனக் கூறியதற்கு[12] மாறாகக் கலைஞர் உலக நடைமுறைகள் நாசமாகிவிடும் எனக்கூறுவதே நடைமுறைக்குப் பொருந்தும் முறையில் அமைந்துள்ளது.

தொழுதுண்டு பின் செல்பவர்

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். (1033)

என்ற குறளுக்குக் கலைஞர் "உழுதுண்டு வாழ்பவர்களே உயர்ந்த வாழ்வினர்." ஏனென்றால் மற்றவர்கள் அவர்களைத் தொழுதுண்டு வாழவேண்டியிருக்கிறது[13] என உரை கூறியுள்ளார்.

மற்றவர்கள் தொழுதுண்டு வாழ்பவர் என்ற உரைக்கு மாறாகக் கலைஞர் உழவர்களை மற்றவர்கள் தொழுதுண்டு வாழ வேண்டியிருக்கிறது என்று கூறுவது புதுமையும் பொருத்தமும் உடையது.

இல்லாளின் ஊடிவிடும்

செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்
தில்லாளின் ஊடி விடும். (1039)

என்ற குறளுக்குக் கலைஞர் "உழவன் தனது நிலத்தை நாள்தோறும் சென்று கவனிக்காமல் இருந்தால் அவன்பால் வெறுப்புற்று விலகி இருக்கும் மனைவி போல அது விளைச்சலின்றிப் போய்விடும்" என்று உரை கூறியுள்ளார்.

'இல்லாள்' என்ற சொல்லை இரட்டுற மொழிதலாகக் கொண்டு விலகி

இருக்கும் மனைவி எனப்பொருள் கொண்டு கலைஞர் புத்துரை கூறியுள்ளார்.

மறுமையும் இம்மையும்

இன்மை எனவொரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும். (1042)

என்பதற்குக் கலைஞர் "பாவி என இகழப்படுகின்ற வறுமைக்கொடுமை ஒருவருக்கு ஏற்பட்டுவிட்டால் அவருக்கு நிகழ்காலத்திலும் வருங்காலத்திலும் நிம்மதி என்பது கிடையாது" என உரை கூறியுள்ளார்.

உரையாசிரியர்கள் பலர் இம்மை என்பதற்கு இப்பிறப்பு என்றும் மறுமை என்பதற்கு மறுபிறப்பு என்றும் பொருள் கூறியிருக்கக்[14] கலைஞர் முறையே நிகழ்காலம், வருங்காலம் எனப்புத்துரை வரைந்துள்ளார்.

வரின்துஞ்சா ஆரஞர் உற்றனகண்

வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண். (1179)

என்ற குறளுக்குக் கலைஞர் ''இன்னும் வரவில்லையே என்பதாலும் தூங்குவதில்லை, வந்துவிட்டாலும் பிறகு தூங்குவதில்லை. இப்படியொரு துன்பத்தை அனுபவிப்பவை காதலர்களின் கண்களாகத்தானே இருக்கமுடியும்" என உரை கூறியுள்ளார்.

வரின் கண்கள் துஞ்சாமைக்குக் காரணமாக ''வரின் துஞ்சாமைக்குக் கலவி கருதித் துஞ்சா'' எனப் பரிதியும்[15] ''பிரிவஞ்சித்துயிலா'' எனப் பரிமேலழகரும்[16] உரை கூறியுள்ளனர். இருவர்கூறிய காரணங்களும் பொருந்துபவைதான் என்பதை உட்கொண்டுகலைஞர் படிப்போருக்கு உரிமை தந்து "வந்துவிட்டாலும் பிறகு தூங்குவதில்லை" எனப்பொருள் கூறியிருப்பது நுட்பமுடையது.

மரபு அடிப்படையில் தலைவியின் கண்கள் தூங்குவதில்லைஎன்பதே இக்குறளுக்குப் பொருளாயினும், காதலியின் வருகையை எதிர்நோக்கும் தற்காலக் காதலனுக்கும் இந்த உணர்வு உரியதுதான் என்பதைக் கலைஞர் மனதில் வைத்துக் கொண்டு உரை கூறியுள்ளார். மரபுப் பொருளுக்கும் இடையூறின்றிப் புதுப் பொருளையும் உள்ளடக்குமாறு கலைஞர் ஆண்பால் பெண்பால் வேறுபாடு காட்டும் சொல்லைப் பயன்படுத்தாது பலர்பால் சொல்லால் 'காதலர்களின் கண்கள்' என உரை கூறியிருப்பது கலைஞரின் சதுரப்பாட்டிற்குத் தக்க சான்றாகும்.

சொற்பெய்து பொருள் விளக்கல்

திருக்குறளின் கருத்தை விளக்குவதற்குத் தேவையான சொற்களைப் பெய்து பொருள் விளக்கும் உத்தியைக் கலைஞர் பல இடங்களில் மேற்கொண்டுள்ளார்.

உழாஅர் உழவர்

ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்
வாரி வளங்குன்றிக் கால். (14)

என்ற குறளுக்குக் கலைஞர் "மழை என்னும் வருவாய் வளம் குன்றிவிட்டால்

உழவுத்தொழில் குன்றிவிடும்" என உரை கூறியுள்ளார்.

திருவள்ளுவர் 'ஏரின் உழாஅர் உழவர்' எனக் கூறியதற்கு உழவர் ஏர்கொண்டு உழமாட்டார் என்பதே நேரடியான பொருளாகும். திருவள்ளுவர் உழாஅர் என அளபெடை அமைந்துள்ளதாலும், உழவுத்தொழில் முற்றிலும் இல்லாது போயின் உலக இயக்கம் முட்டுப்படுத்தும் என்பதாலும் கலைஞர் ஆழமாகச் சிந்தித்துப் பார்த்து, உழவுத்தொழில் நடைபெறாது எனக்கூறாமல் உழவுத்தொழில் குன்றிவிடும் என உரை கூறியுள்ளார். இது கலைஞரின் நுட்ப அறிவுக்குச் சான்றாகும்.

பிறப்பொழுக்கம்

மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும். (134)

என்ற குறளில் உள்ள 'பிறப்பொழுக்கம்' என்ற தொடருக்குக் கலைஞர் 'பிறப்புக்குச் சிறப்புச் சேர்க்கும் ஒழுக்கம்' என உரை கூறுகிறார். சிறப்புச் சேர்க்கும் என்ற சொல்லைப் பெய்து பொருள் விளக்கம் செய்கின்றார்.

நோக்காத

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ ஆன்ற வொழுக்கு. (148)

என்ற குறளில் உள்ள நோக்காத என்ற சொல்லிற்கு, கலைஞர் 'காம எண்ணத்துடன் நோக்காத' எனப் பொருள் கூறுகிறார்.

தன்னுயிர் தானறப் பெற்றான்

தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயி ரெல்லாந் தொழும். (268)

என்ற குறளுக்குக் கலைஞர் "தனது உயிர்" என்கிற பற்றும் "தான்" என்கிற செருக்கும் கொள்ளாதவர்களை உலகம் புகழ்ந்து பாராட்டும் என உரை வரைந்துள்ளார். பற்றும், செருக்கும் என்ற சொற்களைப் பெய்து வேறு உரையாசிரியர் கூறாத முறையில் பொருளைத் தெளிவு செய்கின்றார்.

சொல்லாதிருக்கப்பெறின்

கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின். (403)

என்ற குறளுக்குக் கலைஞர் "கற்றவர்களின் முன்னிலையில் எதுவும் பேசாமல் இருக்கக் கற்றிருந்தால் கல்வி கற்காதவர்கள் கூட நல்லவர்களாகவே கருதப்படுவார்கள்" என உரை கூறியுள்ளார். கல்வி கற்காதவர்கள் கற்றிருந்தால் என முரண்நயம் தோன்ற 'கற்றிருந்தால்' என்பதைப் பெய்து உரையை அமைத்துள்ளார்.

மெய்ப்பொருள்

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (423)

என்ற குறளுக்குக் கலைஞர் "எந்தவொரு பொருள் குறித்து எவர் எதைச்

சொன்னாலும் அதை அப்படியே நம்பி ஏற்றுக் கொள்ளாமல் உண்மை எது என்பதை ஆராய்ந்து தெளிவது தான் அறிவுடைமையாகும்" என உரை கூறியுள்ளார். "இதில் அப்படியே நம்பி ஏற்றுக்கொள்ளாமல்" என்ற தொடரும் "ஆராய்ந்து தெளிவது" என்ற தொடரும் குறளின் கருத்தைத் தெளிவு செய்வது வெளிப்படை.

ஆனால்

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை. (612)

என்ற குறளுக்குக் கலைஞர் "நிதானமாகச் செய்யவேண்டிய காரியங்களைத் தாமதித்துச் செய்யலாம். ஆனால் விரைவாகச் செய்யவேண்டிய காரியங்களில் தாமதம் கூடாது" என உரை கூறியுள்ளார். ஆனால் என்ற சொல்லை இடம் நோக்கிப் பெய்து கலைஞர் குறளின் கருத்தை நன்கு புரியச்செய்கின்றார்.

புறம், அகம்

உறாஅ தவர்போற் சொலினும் செறாஅர்சொல்
ஒல்லை உணரப் படும். (1096)

என்ற குறளுக்குக் கலைஞர் "காதலை மறைத்துக் கொண்டு புறத்தில் அயலார் போலக் கடுமொழி கூறினாலும் அவள் அகத்தில் கோபமின்றி அன்பு கொண்டிருப்பது விரைவில் வெளிப்பட்டுவிடும்" என உரை கூறியுள்ளார். இதில் 'புறத்தில்' 'அகத்தில்' என்ற சொற்களைப் பெய்து உரை கூறியிருப்பது குறளைப்புரிந்து கொள்ளப்பெரிதும் உதவுகிறது.

சொற்பொருள் விளக்கம்

கலைஞர் உரைகூறிச் செல்லும்போது கையாளும் சொற்கள் உரையின் தனித்தன்மையைப் புலப்படுத்துகின்றன. பிறவிப் பெருங்கடல் (10) என்ற குறளில் உள்ள 'பிறவி' என்ற சொல்லிற்கு 'வாழ்க்கை' என்றும் அமிழ்தினும் ஆற்ற இனிதே (64) என்ற குறளில் உள்ள 'அமுதம்' என்ற சொல்லிற்குச் 'சிறந்த பொருள்' என்றும் சொற்பொருள் விளக்கம் செய்துள்ளார். தந்தை மகற்காற்றும் நன்றி (67) என்ற குறளில் உள்ள 'நன்றி' என்ற சொல்லிற்கு 'நல்லுதவி' என்றும், மகன் தந்தைக்காற்றும் உதவி (70) என்ற குறளில் உள்ள 'உதவி' என்ற சொல்லிற்கு 'கைம்மாறு' என்றும் பொருந்தச் சொற்பொருள் விளக்கம் செய்துள்ளார்.

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து (90) என்ற குறளில் உள்ள 'முகந்திரிந்து' என்ற சொற்களுக்கு 'முகங்கோணி' என்றும், நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று (108) என்ற குறளில் உள்ள 'அன்றே' என்ற சொல்லுக்கு 'அக்கணமே' என்றும் உரை கூறியுள்ளார். புறங்கூறி (183) என்பதற்கு விளக்கமாக "கண்ட இடத்தில் ஒன்றும், காணாத இடத்தில் வேறொன்றுமாகக் கூறல்" எனப்பொருள் கூறுகிறார். அறம் சூழும் (204) என்பதில் உள்ள 'சூழும்' என்ற சொல்லுக்கு 'முற்றுகையிட்டு விடும்' என்றும் பொருள் கூறுகிறார்.

குறியெதிர்ப்பு (221) என்ற சொல்லிற்கு "ஏதோ ஓர் ஆதாயத்தை

எதிர்பார்த்து வழங்கல்" எனத் தற்கால நடையில் விளக்குகிறார். குறிப்பிற் குறிப்புணர்வார் (703) என்ற குறளில் உள்ள முதற் சொல்லுக்கு 'முகக்குறிப்பு' என்றும், இரண்டாம் சொல்லுக்கு 'உள்ளக்குறிப்பு' என்றும் பொருந்தப் பொருள் கூறியுள்ளார். புணர்ச்சி பழகுதல் வேண்டா (785) என்ற குறளில் உள்ள 'புணர்ச்சி பழகுதல்' என்ற தொடருக்கு 'தொடர்பும் பழக்கமும்' எனப் பொருளைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

பகுத்தறிவு உரை

கலைஞர் பகுத்தறிவு அடிப்படையில் சில குறள்களுக்கு உரை வரைந்துள்ளார். அறிவியல் கண்டுபிடிப்புக்களால் விளைந்த தற்கால அணுகுமுறைகளின் அடிப்படையில் சில குறள்களை விளக்கியுள்ளார். பழம் நம்பிக்கைகளின் அடிப்படையில் பழைய உரையாசிரியர்களின் விளக்கங்களைத் தற்கால அணுகுமுறைகளுக்கு ஒப்ப, மறு ஆய்வு செய்து அவர் தரும் விளக்கம் கற்போருக்குக் களிப்பூட்டுபவை.

அடியளந்தான்

மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு. (610)

என்ற குறளுக்குக் கலைஞர் "சோம்பல் இல்லாதவர் அடையும் பயன், சோர்வில்லாத ஒரு மன்னன் அவன் சென்ற இடமனைத்தையும் தனது காலடி எல்லைக்குள் கொண்டு வந்ததைப் போன்றதாகும்" என உரை கூறியுள்ளார்.

'அடியளந்தான்' என்ற தொடருக்குப் பரிமேழலகர் இறைவன் என்று கொண்டும்[17] பிறர் திருமால் மூன்றடியால் உலகை அளந்ததைக் கருத்தில் கொண்டும்[18] உரை கூறியுள்ளனர். புலவர் குழந்தை 'சோம்பலில்லாத அரசன், சோம்பலடைந்ததால் முன்பு தன்னைவிட்டு நீங்கிய செல்வத்தை யெல்லாம் ஒருங்கே அடைவான்" என உரை கூறியுள்ளார்.19 இரா. சாரங்கபாணி "புலவர் குழந்தை மடியளந்து ஆன்று ஆயது எனப் பலபடப் பிரித்துப் பொருள் கூறுவாராயினர். இவ்வகைப் பிரிப்பு இயல்பாகத் தோன்றவில்லை. பொருளும் சிறக்கவில்லை" என்று சுட்டிக்காட்டியுள்ளார்.[20] கலைஞரோ பிரிக்காமல் இயல்பாகப் புத்துரை கூறியுள்ளார்.

பொறியின்மை

பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை இன்மை பழி. (618)

என்ற குறளுக்குக் கலைஞர் "விதிப்பயனால் பழி ஏற்படும் என்பது தவறு. அறிய வேண்டியவற்றை அறிந்து செயல்படாமல் இருப்பதே பெரும்பழியாகும்" எனப் பகுத்தறிவுப் புத்துரை வரைந்துள்ளார்.

பெயலும் விளையுளும்

இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு. (545)

என்ற குறளுக்குக் கலைஞர் "நீதி வழுவாமல் ஓர் அரசு நாட்டில்

இருக்குமேயானால் அது, பருவ காலத்தில் தவறாமல் பெய்யும் மழையினால் வளமான விளைச்சல் கிடைப்பதற்கு ஒப்பானதாகும்" என பகுத்தறிவுக்கேற்ற உரை கூறியுள்ளார்.

பரிமேலழகர் அரசனது நீதியால் தான் மழையும் விளைச்சலும் உண்டு என்ற பழம் நம்பிக்கை அடிப்படையில் உரை கூறியிருப்பக்[21] கலைஞர் அரசனது நீதிக்கும் இயற்கை ஆற்றலுக்கும் தொடர்பு இருக்கமுடியாது என்று கருதி, பகுத்தறிவுக்கொப்ப, உவமையாகக் கொண்டு உரை கூறியுள்ளார்.

உறைகோடி ஒல்லாது வானம் பெயல்

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல். (556)

என்ற குறளுக்குக் கலைஞர் "முறை தவறிச் செயல்படும் ஆட்சியில் நீரைத் தேக்கிப் பயனளிக்கும் இடங்கள் பாழ்பட்டுப் போகுமாதலால் வான் வழங்கும் மழையைத் தேக்கி வைத்து வளம் பெறவும் இயலாது" என உரை வரைந்துள்ளார்.

பரிமேலழகர் முதலான உரையாசிரியர்கள் பழம் நம்பிக்கை அடிப்படையில் அரசனது கொடுங்கோன்மையால் மழை பெய்யாது என்றே பொருள் கூறுகின்றனர்.[22] கலைஞர் 'உறை' என்ற சொல்லிற்கு 'நீரைத் தேக்கிப் பயனளிக்கும் இடங்கள்' என்றும், 'கோடி' என்பதற்குப் 'பாழ்பட்டுப் போதல்' என்றும் உரை கூறியுள்ளார். மனிதச் செயலால் இயற்கை ஆற்றலை மாற்றமுடியாது என்ற அறிவியல் அடிப்படையில் கலைஞர் பகுத்தறிவு உரை வரைந்துள்ளார்.

பகுத்தறிவுச் சொற்பொருள் விளக்கம்

கலைஞர் பகுத்தறிவு அடிப்படையில் பல சொற்களுக்குப் பொருள் கூறியுள்ளார். 'எழுபிறப்பு' (62) என்ற தொடருக்கு 'ஏழேழு தலைமுறை' என்றும் 'செய்யாள்' (84) என்ற சொல்லிற்கு செல்வம் எனும் திருமகள் என உருவகம் செய்தும் உரை கூறியுள்ளார்.

'வானத்தவர்' (86) என்பதற்குப் 'புகழ்வானில் இருப்போர்' என்றும் 'தவ்வை' (167) என்பதை 'மூதேவி என வர்ணிப்பதுண்டு' என்றும், புத்தேள் (290) என வரும் இடங்களிலெல்லாம் 'புதிய உலகம்' அல்லது 'புகழுலக வாழ்க்கை' என்றும் பொருள் கூறியுள்ளார். 'ஊழ்' (371) என வருமிடமெல்லாம் 'இயற்கை நிலை' என்றும் 'பே எய்' (565) என்ற சொற்கு 'பேய்த்தோற்றம் எனப்படும் அச்சந்தரும் தோற்றம்' என்றும் உரை கூறியுள்ளார். 'அளறு' (835) என்பதற்குச் 'சகதி' என்றும், 'தெய்வம்' (1023) என்ற சொல்லிற்கு 'தெய்வச் செயல் எனக் கூறப்படும் இயற்கை ஆற்றல்' என்றும் உரை கூறியுள்ளார். உலகியற்றியான் (1062) என்பதற்கு 'உலகத்தைப் படைத்தவனாகச் சொல்லப்படுபவன்' என்றும், தேவர் (1073) என்பதற்குப் 'புராணங்களில் வரும் தேவர்கள்' என்றும் பகுத்தறிவு அடிப்படையில் விளக்கம் தந்துள்ளார்.

தெளிவுதரும் உரைநலம்

கலைஞர் பல இடங்களில் தெளிவும் செறிவும் சுருக்கமும் மிகுந்த உரை வரைந்துள்ளார். எளிமையும் அருமையும் உடைய அவர் உரையில் அமைந்துள்ள தெளிவு மிகவும் போற்றத்தக்கதாக உள்ளது.

1. நல்லொழுக்கம் வாழ்க்கையில் நன்மைக்கு வித்தாக அமையும். தீயொழுக்கம் தீராத துன்பம் தரும்.[23]

2. நடுவுநிலைமை தவறுவது நாணித் தலைகுனியத் தக்கது என்று நினைப்பவர், தமக்கு ஒரு பயன் கிடைக்கும் என்பதற்காகப் பழிக்கப்படும் செயலில் ஈடுபடமாட்டார்.[24]

3. புலனடக்கம் வாய்ந்த தூயவர், வறுமையில் வாடும் நிலையிலே கூடப் பிறர் பொருளைக் கவர்ந்திட மாட்டார்.[25]

4. நெருங்கிப் பழகியவரின் குறையைக் கூடப் புறம்பேசித் தூற்றுகிற குணமுடையவர்கள் அப்படிப் பழகாத அயலாரைப்பற்றி என்னதான் பேசமாட்டார்கள் ?[26]

5. மயக்கம் சிறிதுமில்லாத மாசற்ற அறிவுடையார் மறந்தும் கூடப் பயனற்ற சொற்களைச் சொல்லமாட்டார்கள்.[27]

6. பழி உண்டாகாமல் வாழ்வதே வாழ்க்கை எனப்படும், புகழ் இல்லாதவர் வாழ்வதும், வாழாததும் ஒன்று தான்.[28]

7. கொல்லாமை அருளுடைமையாகும். கொல்லுதல் அருளற்ற செயலாகும். எனவே ஊன் அருந்துதல் அறமாகாது.[29]

8. நமக்குத் தீங்கு செய்தவரைத் தண்டிப்பதற்குச் சரியான வழி, அவர் வெட்கித் தலைகுனியும்படியாக அவருக்கு நன்மை செய்வதுதான்.[30]

9. பெரிதாக நன்மை தரக்கூடிய அளவுக்கு ஒரு கொலை பயன்படக்கூடுமெனினும், நல்ல பண்புடைய மக்கள், அந்த நன்மையை இழிவானதாகவே கருதுவார்கள்.[31]

10. சேர்த்து வைத்த பணமும் சொத்தும் ஒருவரை விட்டுப்போவது, கூத்து முடிந்ததும் மக்கள் அரங்கத்தை விட்டுக் கலைந்து செல்வதைப் போன்றதாகும்.[32]

11. கற்றோர்க்கு எல்லா நாடுகளிலும் எல்லா ஊர்களிலும் சிறப்பு என்கிறபோது, ஒருவன் சாகும் வரையில் கற்காமல் காலம் கழிப்பது ஏனோ ?[33]

12. கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். அதற்கொப்பான சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை.[34]

13. மனிதர்களுக்கும் விலங்குகளுக்குமிடையே என்ன வேற்றுமையோ, அதே அளவு வேற்றுமை அறிவு நூல்களைப் படித்தவர்களுக்கும் அந்த நூல்களைப் படிக்காதவர்களுக்கும் இடையே உண்டு.[35]

14. மனம் போன வழியெல்லாம் போகவிடாமல் தீயவழிகளைத் தள்ளிவிட்டு, நல்ல வழியைத் தேர்வு செய்வதே அறிவுடைமையாகும்.[36]

15. அறிவில்லாதவர்கள் தான் அஞ்சவேண்டியதற்கு அஞ்சமாட்டார்கள். அறிஞர்கள் மட்டுமே அஞ்சவேண்டியதற்கு அஞ்சுவார்கள்.[37]

16. அறிவு இல்லாதவர்களுக்கு வேறு எது இருந்தாலும் பெருமையில்லை அறிவு உள்ளவர்களுக்கு வேறு எது இல்லாவிட்டாலும் சிறுமை இல்லை.[38]

17. மனத்தில் பேராசை, மான உணர்வில் ஊனம், மாசுபடியும் செயல்களில்மகிழ்ச்சி ஆகியவை தலைமைக்குரிய தகுதிக்கே பெருங்கேடுகளாகும்.[39]

18. சொல்லுவது எல்லோருக்கும் எளிது; சொல்லியதைச் செய்து முடிப்பதுதான் கடினம்.[40]

19. பசியும், பிணியும், பகையுமற்ற நாடு தான் சிறந்த நாடு எனப் பாராட்டப் பெறும்.[41]

20. மதுவை உண்டால் தான் மயக்கம் வரும். ஆனால் கண்டாலே மயக்கம் தருவது காதல் தான்.[42]

21. கள்ளத்தனமான அந்தக் கடைக்கண் பார்வை காம இன்பத்தின் பாதியளவைக் காட்டிலும் பெரிது.[43]

22. அவளுக்காக நல்ல பறை ஒலிக்கவில்லை. ஏனெனில் அவள் இடை ஒடிந்து வீழ்ந்து விட்டாள். காரணம் அவள் அனிச்ச மலர்களைக் காம்பு நீக்காமல் தலையில் வைத்துக்கொண்டது தான்.[44]

மேலே குறிக்கப்பெற்றுள்ள கலைஞரின் உரையைக் கற்றோர் அவற்றின் எளிமை, ஆழம், சுருக்கம், தெளிவு, செறிவு, நுட்பம், கலைத்திறன் ஆகியவற்றைக் கண்டறிந்து மகிழலாம்.

நடைநலம்

திருக்குறள் கலைஞர் உரையின் தனித்தன்மைகளில் தலையாயது அவரது நடைநலமே எனலாம். எதுகை நடையிலும், மோனைநடையிலும் இயைபு நடையிலும், முரண் நடையிலும் இவை எல்லாம் கலந்த நடையிலும் அடுக்கு நடையிலும் பல்வேறு குறள்களுக்குக் கலைஞர் உரை வரைந்துள்ளார்.

எதுகை நடை

அழுக்காறாமை என்ற அதிகாரத்தில் இடம்பெற்ற 170வது குறளுக்குக் கலைஞர் "பொறாமை கொண்டதால் புகழ்பெற்று உயர்ந்தாரும் இல்லை; பொறாமை இல்லாத காரணத்தால் புகழ் மங்கி வீழ்ந்தாரும் இல்லை" என எதுகை நடையில் உரைகூறியுள்ளார்.

மோனை நடை

கேள்வி என்ற அதிகாரத்தில் உள்ள 411வது குறளுக்குச் "செழுமையான கருத்துக்களைச் செவி வழியாகப்பெறும் செல்வமே எல்லாச் செல்வங்களுக்கும் தலையாய செல்வமாகும்" எனக் கலைஞர் மோனை நடையில் தம் முத்திரையைப் பதித்துள்ளார்.

தெரிந்து வினையாடல் என்ற அதிகாரத்தில் உள்ள 520வது குறளுக்கு "உழைப்போர் உள்ளம் வாடாமல் இருக்கும் வரையிலும் உலகின் செழிப்பும் வாடாமல் இருக்கும். எனவே உழைப்போர் நிலையை ஒவ்வொரு நாளும் அரசினர் ஆய்ந்தறிந்து ஆவன செய்யவேண்டும்" என மோனை நடையில் முத்தாய்ப்பாய் உரை கூறியுள்ளார்.

கலந்த நடை

வெருவந்த செய்யாமை என்ற அதிகாரத்தில் உள்ள 562வது குறளுக்குக் கலைஞர் "குற்றங்கள் நிகழாமல் இருக்கக் கண்டிக்கும்போது கடுமை காட்டித், தண்டிக்கும்போது மென்மை காட்டுகிறவர்களின் செல்வாக்கு தான் தொய்வின்றி நெடுநாள் நீடிக்கும்" என எதுகை நடையும் மோனைநடையும் முரண் நடையும் உடைய கலந்த நடையில் உரை கூறியுள்ளார்.

ஊக்கம் உடைமை என்ற அதிகாரத்தில் உள்ள 598ஆம் குறளுக்குக் கலைஞர் "அள்ளி வழங்கும் ஆர்வம் இல்லாத ஒருவர் தம்மை வள்ளல் எனப் பெருமைப்பட்டுக்கொள்ள வழியே இல்லை" என எதுகையும் மோனையும் கலந்த நடையில் உரை கூறி உள்ளார்.

இடுக்கண் அழியாமை என்ற அதிகாரத்தில் உள்ள 629ஆம் குறளுக்குக் கலைஞர் "இன்பம் வரும்பொழுது அதற்காக ஆட்டம் போடாதவர்கள் துன்பம் வரும்பொழுதும் அதற்காக வாட்டம் கொள்ளமாட்டார்கள். இரண்டையும் ஒன்று போல் கருதும் உறுதிக்கு இது எடுத்துக்காட்டு" என எதுகையும் மோனையும் கலந்த நடையில் உரை கூறி உள்ளார்.

அமைச்சு என்ற அதிகாரத்தில் உள்ள 640வது குறளுக்குக் கலைஞர் "முறைப்படி தீட்டப்படும் திட்டங்கள் கூடச் செயல்திறன் இல்லாதவர்களிடம் சிக்கினால் முழுமையாகாமல் முடங்கித்தான் கிடக்கும் என மோனை நடையிலும் எதுகை நடையிலும் உரை கூறியுள்ளார்.

அடுக்கு நடை

வினைத்தூய்மை என்ற அதிகாரத்தின் 659ஆம் குறளுக்குக் கலைஞர் "பிறர் அழத் திரட்டிய செல்வம் அழஅழப் போய்விடும். நல்வழியில் வந்த செல்வமென்றால் அதனை இழந்தாலும் மீண்டும் வந்து பயன்தரும்" என அடுக்குநடையில் உரை கூறி உள்ளார்.

இயைபு நடை

பிரிவு ஆற்றாமை என்பதில் உள்ள 1151ஆம் குறளுக்குக் கலைஞர் "பிரிந்து செல்வதில்லையென்றால் அந்த மகிழ்ச்சியான செய்தியைஎன்னிடம் சொல். நீ போய்த்தான் தீரவேண்டுமென்றால் நீ திரும்பி வரும்போது யார் உயிரோடு இருப்பார்களோ அவர்களிடம் இப்போது விடைபெற்றுக்கொள்" என இயைபு நடையில் உரை கூறியுள்ளார்.

கவிதை நடை

நட்பு என்ற அதிகாரத்தில் உள்ள 786ஆம் குறளுக்குக் கலைஞர் "இன்முகம் காட்டுவது மட்டும் நட்புக்கு அடையாளமல்ல; இதயமார நேசிப்பதே உண்மையான நட்பாகும்" எனக் கவிதை நடையில் உரை கூறியுள்ளார்.

பகை மாட்சியில் உள்ள 864ஆம் குறளுக்குக் கலைஞர் "சினத்தையும் மனத்தையும் கட்டுப்படுத்த முடியாதவர்களை, எவர் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும் எளிதில் தோற்கடித்து விடலாம்" எனக் கவிதைநடையில் உரை கூறியுள்ளார்.

குறிப்பறிவுறுத்தல் என்ற அதிகாரத்தில் உள்ள 1275ஆம் குறளுக்குக் கலைஞர் "வண்ணமிகு வளையல்களை அணிந்த என் வடிவழகியின் குறும்புத்தனமான பார்வையில் "என்னைத் துளைத்தெடுக்கும் துன்பத்தைத் தீர்க்கும் மருந்தும் இருக்கிறது" எனக் கவிதை உரை கூறி உள்ளார்.

இதுகாறும் கூறியவற்றால் திருக்குறள் கலைஞர் உரை நடைமுறைக்கேற்றது; பொருத்தமான புத்துரை கொண்டது; சொற்பொருள் விளக்கம் அமைந்தது; பகுத்தறிவால் இயன்றது; உரைவளம் உடையது; நடை நலம் வாய்ந்தது என்பவை உறுதியாகும்.

அடிக்குறிப்புகள்

01. திருக்குறள் கலைஞர் உரை, திருமகள் நிலையம், சென்னை, முதற்பதிப்பு 1966. கலைஞர் முகவுரை ப. 4.
02. " ப. 4.
03. " ப. 4.
04. ச. தண்டபாணிதேசிகர், திருக்குறள் உரைக்களஞ்சியம் அறத்துப்பால், இல்லறவியல், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, முதற்பதிப்பு, 1983. முனைவர் தமிழண்ணல் முன்னுரை ப. 4.
05. ச. தண்டபாணிதேசிகர், திருக்குறள் உரைக்களஞ்சியம் துறவறவியல்- ஊழியல், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, முதற்பதிப்பு 1986. பக். 27 - 28.
06. " பக். 27-28
07. " பக். 348
08. " ப. 9
09. " ப. 9
10. இரா. சாரங்கபாணி, திருக்குறள் உரைவேற்றுமை, பொருட்பால், செல்வி பதிப்பகம், காரைக்குடி, முதற்பதிப்பு 1960. பக். 28-29.

11. " பக். 422 - 23
12. "பக். 440 - 41
13. முற்காட்டியநூல், கலைஞர் உரை ப. 207.
14. இரா. சாரங்கபாணி, முற்காட்டியநூல் ப. 469.
15. ச. தண்டபாணி தேசிகர், திருக்குறள் உரைக்களஞ்சியம், காமத்துப்பால் மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை முதற்பதிப்பு 1990 ப. 301.
16. " ப. 301.
17. இரா. சாரங்கபாணி, முற்காட்டிய நூல். பப. 176 - 177
18. " ப. 177.
19. " ப. 177
20. " ப. 177
21. " ப. 124.
22. " ப. 133.
23. குறள் 138
24. குறள் 172
25. குறள் 174.
26. குறள் 188
27. குறள் 199
28. குறள் 240
29. குறள் 254
30. குறள் 314
31. குறள் 328
32. குறள் 332
33. குறள் 397
34. குறள் 400
35. குறள் 410
36. குறள் 422
37. குறள் 428
38. குறள் 430
39. குறள் 432
40. குறள் 664
41. குறள் 734
42. குறள் 1090
43. குறள் 1092
44. குறள் 1115.

18 உரையாசிரியர் கலைஞர்

திருமதி. அன்புச் செல்வி

உலகப் பொதுமறையாம் வள்ளுவன் செய்த வான்புகழ் திருக்குறளுக்கு அன்றுதொட்டு இன்றுவரை உரைகண்டோர் பலர். பொய்யாமொழிக்கு, தம் கருத்தை வலிந்தேற்றி உரைகூறியோர் சிலர். செந்நாப்போதாரின் செவ்விய வழியிலேயே உரைகண்டோர் சிலர். இதில் வள்ளுவர் நோக்கறியும் முயற்சியிலே உரை பகன்றுள்ளார் கலைஞர். இதனை,

> வள்ளுவர் வாழ்ந்த காலத்து நம்பிக்கைகள்,
> பண்பாடுகள், அவை குறித்து அவரது பார்வை
> ஆகியவற்றுக்கு மாறுபடாமலும், வலிந்து
> என்கருத்து எதையும் திணிக்காமலும்,
> குறளில் அவர் கையாண்டுள்ள சொல்லுக்கு
> இதுவரை உரையாசிரியர்கள் கொண்டுள்ள
> பொருளையன்னியில் தமிழில் மற்றொரு
> பொருளும் இருக்கிறது என்ற உண்மை
> நிலையைக் கடைப்பிடித்து, நான்
> எண்ணுவதுபோல் அவர் எண்ணினாரா என்று
> நோக்காமல் அவர் எண்ணி எழுதியது என்ன
> என்பதை அறிவதில் மட்டுமே அக்கறை
> கொண்டு என் அறிவுக்கும் ஆற்றலுக்கும்
> எட்டியவரையில் இப்பொன்னாடையை
> நெய்துள்ளேன்.[1]

என கலைஞரே கூறியுள்ளார்.

உலக மக்களனைவர்க்கும் தேவையான அறமனைத்தையும் பகரும் குறளுக்கு அனைத்து மக்களும் எளிதில் பொருள் அறியும் வகையில் காலத்திற்கேற்ற எளிய உரைகள் அவசியமானவை. அவற்றின் மெய்ப்பொருள் அறிதல் மக்கள் கடமை. இத்தகு முயற்சியில் எவ்வித சார்புமற்ற எளிய உரையைப் பலர் ஆக்கியிருப்பினும் கலைஞரின் உரை இன்றைய உலகுக்கேற்ற உரையாக அமைந்துள்ளது. எனவே,

> இக்கால தேவையைச் சரியாக ஈடுசெய்ய
> வல்லதாய் எழுந்ததே கலைஞர் உரை என்னும்
> தெரியுரையாகும்.[2]

என்ற மா.நன்னன் கருத்து நோக்குதற்குரியதாகிறது.

குறளோவியம் கண்ட கலைஞர் அவர்கள் திருக்குறள் முழுமைக்கும் எழுதியுள்ள உரையில் அனைத்தையும் விரிக்கின் பெருகும். எனவே,

அறத்துப்பால் அதிகாரக் குறள்களுக்கு அவர் அளித்த உரைகளின் கருத்துச் சிறப்புகளில் புதுமையானவை மட்டும் இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றன. இதில்,

1. அதிகாரப் பெயர்ப் புதுமை
2. குறட்பாக்களின் உரைப்புதுமை

என்ற இருநோக்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. அதிகாரப் பெயர்ப் புதுமை

என்று தொடங்கியது என்று உய்த்துணர முடியாத அளவிற்கு மக்களினத்தின் வாழ்வில் பேரிடம் பெற்று ஊடுறுவியுள்ளது கடவுள் நம்பிக்கை. இந் நம்பிக்கையற்றவரை காண்பதரிது என்னுமளவிற்கு மனித குலத்தின் அனைத்துச் செயல்பாடுகளிலும் கடவுள் வழிபாடு முக்கியத்துவம் பெற்றுள்ளது. கடவுள் வாழ்த்து இல்லாத நூல்களே இல்லையெனுமளவிற்கு இஃது இல்லாத நூல்களைக் காண்பது மிகமிகக் கடினமாயுள்ளது.

இந்நிலையில் வள்ளுவர் வகுத்தளித்த திருக்குறளுக்கும் 'கடவுள் வாழ்த்து' என்ற அதிகாரம் காணப்படுகிறது. சமயவாதிகள் தங்கள் கடவுளையே வள்ளுவர் வாழ்த்துவதாகக் கூறினாலும், குறளைக்கொண்டு எந்தக் கடவுளை வள்ளுவர் குறிப்பிடுகிறார் என அறிய இயலவில்லை.

ஆயினும் திருக்குறளுக்கு உரைகண்டோர் அனைவரும், கடவுள் வாழ்த்து, இறைவாழ்த்து என்ற பெயர்களாலேயே இவ்வதிகாரத்தைக் குறிப்பிடுகின்றனர்.

தந்தை பெரியாரின் அணுக்கத் தொண்டராய் இருந்து 'பெரியார்த் தொண்டர்', 'கருப்புச் சட்டைக்காரர்' என்றழைக்கப்பட்ட பகுத்தறிவாளரான புலவர் குழந்தை அவர்கள், மக்களுக்குத் தேவையான, மேன்மையான உயர்ந்த குணங்களின் சிறப்புகளைக் கூறுவது எனவே இறைநலம் (இறை - மேன்மை; நலம் - குணம்) என இவ்வதிகாரத்திற்குப் பெயர் கூறினார்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் பேரன்பினைப் பெற்று, அவர் வழியில் வாழ்ந்துவரும் கலைஞர் அவர்களோ, இவ்வதிகாரத்திற்கு 'வழிபாடு' எனப் பெயர்தந்து, வள்ளுவர் எப்படி கடவுள் பெயரைச் சுட்டவில்லையோ அதைப்போன்றே கடவுள் பெயரைக் கூறாமல் விட்டதோடு, இவ்வதிகாரக் குறட்பாக்களுக்கும் நடுநிலையோடு பொருள்தந்து தானோர் பகுத்தறிவாளர் என்பதை நிறுவியுள்ளார்.

2. குறட்பாக்களின் உரைப் புதுமைகள்

2. கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

இக்குறளில் 'வாலறிவன்' என்பதற்குத் தூய அறிவு வடிவாகிய இறைவனெனப் பொருள்கொண்டு, ஒருவன் கல்வி கற்றதன் பயன் இறைவனின் திருவடிகளைத் தொழுதலே என்றே பலரும் உரைகூறியுள்ளனர்.

பகுத்தறிவாளராகிய புலவர் குழந்தை, உண்மையறிவினை உடையவனது நல்லதாள்களைத் தொழாராயின் ஒருவர்க்குக் கற்றதனால் உண்டாகிய பயன் ஒன்றுமில்லை எனக் கூறியுள்ளார்.

அறிவில் மூத்தவர்களை மதிக்கும் பண்பாளராகிய கலைஞர்,

"தன்னைவிட அறிவில் மூத்த பெருந்தகை
யாளரின் முன்னே வணங்கி நிற்கும்
பண்பு இல்லாவிடில் என்னதான் ஒருவர்
கற்றிருந்தாலும் அதனால் என்ன பயன்?
ஒன்றுமில்லை."

என உரைகூறி, அறிவில் மூத்தவரே உயர்ந்தோர் ; அவரிடத்தில் பணிந்து நடத்தலே ஒருவர்க்குப் பயனுடைத்தாகும் என்று அறிஞர் அண்ணாவின் அறிவாற்றலின் முன் பணிந்து நின்று செயற்பட்டதனாலேயே தன்நிலை இன்று உயர்ந்துள்ளதை சுட்டாமல் சுட்டுகிறார்.

3. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

மலரில் வீற்றிருக்கும் இறைவனுடைய திருவடிகளை இடைவிடாது நினைப்போர் இன்ப உலகில் நிலைத்து வாழ்வார் என இறைவனை இடைவிடாது நினைத்தலே சிறப்பென இதுவரை பொருளுணர்ந்த நமக்கு, உலகில் நெடுங்காலம் நிலைத்து நிற்கும் புகழ்வாழ்வு மலர்போன்ற மனத்தில் நிறைந்தவனைப் பின்பற்றுவோர்க்கே உண்டாகும் என்ற கலைஞரின் விளக்கம் நல்லறிவாளர்களின் நற்செய்கைகளைப் பின்பற்ற வேண்டுமென்ற நற்சிந்தனையைத் தூண்டுகிறது.

4. வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

வேண்டுதல் வேண்டாமையற்றவன் இறைவன் என்றே இத்தனை காலமும் கருத்துரைக்கப்பட்டு வந்ததை மாற்றி கலைஞர் அவர்கள்,

விருப்பு வெறுப்பற்றுத் தன்னலமின்றித்
திகழ்கின்றவரைப் பின்பற்றி நடப்பவர்களுக்கு
எப்போதுமே துன்பம் ஏற்படுவதில்லை

எனத் தெரிவித்து, தன்னலமின்றித் திகழ்பவர்க்கு மட்டுமன்று அவர் வழி நடப்பவர்க்கும் துன்பம் இல்லை ; எனவே தன்னலமற்ற வாழ்வு உயர்ந்தது என்ற சிந்தையைத் தோற்றுவிக்கிறார்.

5. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

கடவுளின் உண்மைப் புகழை விரும்பி அன்பு செலுத்துகின்றவரிடம், அறியாமையால் விளையும் இருவகை வினையும் சேர்வதில்லை என்பார் மு.வ.

முதன்மையான உண்மைப் புகழை விரும்புவோர் அறிவுமயங்கித் துன்பந்தரும் செயல்களைச் செய்யார் என்பார் புலவர் குழந்தை.

இறைவன் என்பதற்குரிய பொருளைப்புரிந்து கொண்டு புகழ்பெற விரும்புகிறவர்கள், நன்மை தீமைகளை ஒரே அளவில் எதிர்கொள்வார்கள் எனத் தெளிவுரை கூறும் கலைஞர் அவர்களோ, ஒரு சொல்லின் பொருளைத் தெளிய வேண்டும் என்ற அறிவையும், நன்மை தீமை இரண்டையும் ஒரே மாதிரியாக எண்ணும் மனம் வேண்டும் என்பதையும் கற்பாருக்குத் தெரிவிக்கிறார்.

இவ்வுலகில் நிலைபெற்ற நல்வாழ்க்கையை விரும்புவோர் ஐம்பொறிகள் வாயிலான ஆசையை அறுத்த இறைவனுடைய ஒழுக்க நெறியில் நிற்கவேண்டுமென்பதை வள்ளுவர்,

6. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்

என்றார். இதற்கு உரைகூறப்போந்த கலைஞர், ஐம்பொறிகளையும் கட்டுப்படுத்திய தூயவனின் உண்மையான ஒழுக்க நெறியைப் பின்பற்றி நிற்பவரின் புகழ்வாழ்வே நிலையானதாக அமையும் என்கிறார்.

இறைவனின் திருவடிகளை நினைக்கின்றவர்க்கல்லாமல் மற்றவர்க்கு மனக்கவலை மாற்றமுடியாததாகிவிடும் என அறிஞர்கள் உரை கூற,

'அறவாழி அந்தணன்' என்பதற்குப் பொருள் சான்றோர் என்பதால் அச்சான்றோரின் அடியொற்றி நடப்பவர்க்கு அல்லது மற்றையோர்க்கு பிற துன்பக் கடல்களைக் கடப்பது எளிதல்ல எனப் பகுத்தறிவுச் சிந்தையோடு பகர்கிறார் கலைஞர்.

9. கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

எண்குணங்களை உடைய இறைவனின் தாளை வணங்காத தலை பயனற்றது என்ற கருத்தை மாற்றி, ஈடற்ற ஆற்றலும் பண்பும் கொண்டவனை வணங்கி நடக்காதவனின் நிலை, ஐம்பொறிகள் இயங்காவிட்டால் எப்படியிருக்குமோ அதைப்போன்றிருக்கும். எனவே, ஆற்றலும் பண்பும் நிறைந்தவர்களை வணங்கி நடத்தல் ஒவ்வொருவர்க்கும் கடனாகும் எனத் தெளிவுபடுத்துகிறார்.

பிறவியாகிய பெரிய கடலென்பதற்கு, வாழ்க்கையை பெரிய கடலெனக்கொண்டு, இறைவனடி சேர்தல் என்பதற்குத் தலைவனின் அடிதொடர்ந்து செல்லல் எனப்பொருள்கொண்டு அரியஉரை கூறும் கலைஞரின் உரை, கடவுள் என்னும் கற்பனைச் சிந்தையிலிருந்து விலக்கி நற்பண்பாளரையும், அறிஞரையும், தன்னலமற்றவரையும், ஆற்றல் வாய்ந்தவரையும் பின்பற்ற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கை, வற்புறுத்துகிறது எனலாம்.

மனித ஒழுக்கமே உயர்ந்தது என்ற நம்பிக்கையை 'வழிபாடு' அதிகாரக்குறள்களில் வலியுறுத்திய கலைஞர், 'வான்சிறப்பு' அதிகாரத்தில்

17. நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்

என்ற குறளுக்கு,

மனித சமுதாயத்திலிருந்து புகழுடன் உயர்ந்தவர்களும்
அந்தச் சமுதாயத்திற்கே பயன்பட்டால்தான் அந்தச்
சமுதாயம் வாழும்

என மேகத்தைப்போல மனிதனும் மக்கட் சமுதாயத்திற்குப் பயன்படுவதே இச்சமுதாயத்தால் பயன்பெற்றோரின் கடமை என்பதைச் சுட்டுகிறார்.

மானுடத்தையே உயர்வாக எண்ணும் பகுத்தறிவாளராகிய கலைஞர் வீடுபேற்றை நம்பாதவர் என்பதனை,

24. உரனென்னுந் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து

எனும் குறளுக்கு விளக்கம் தருமிடத்து,

உறுதியென்ற அங்குசம் கொண்டு, ஐம்பொறிகளையும்
அடக்கிக் காப்பவன், துறவறம் எனும் நிலத்திற்கு
ஏற்ற விதையாவான்

என்று கூறித் தம் கொள்கைப்பற்றை வெளியிடுகிறார்.

மக்களின் வாழ்க்கையில் சிறப்பானது அறனாற்றல். எனவே அறன்வலியுறுத்தல் அதிகாரம் சிறப்புடையதாகிறது. இதில்,

37. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை

என்ற குறள் அறம் செய்தவன், செய்யாதவன் பெறும் பயன்களைக் காட்டுவதாய் அமைகிறது.

இதற்குப் பொருள் கூறுமிடத்து,

அறவழியில் நடப்பவர்கள் பல்லக்கில் உட்கார்ந்து
செல்பவர்களைப் போல, வாழ்க்கையில் வரும் இன்ப
துன்பங்கள் இரண்டையும் எளியவாகக் கருதி
மகிழ்வுடன் பயணத்தை மேற்கொள்வார்கள்.
தீயவழிக்குத் தங்களை ஆட்படுத்திக்
கொண்டவர்களோ பல்லக்கைத் தூக்கிச்
சுமப்பவர்களைப் போல இன்பத்திலும்
அமைதிகொள்ளாமல், துன்பத்தையும்
தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவமின்றி
வாழ்வையே பெரும் சுமையாகக்
கருதுவார்கள்.

என்ற இவ்வுரைப் புதுமை கற்றறிந்தார் வியந்து பாராட்டி ஏற்கவேண்டிய ஒன்றன்றோ?

57. சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை

தம்மைத்தாமே காத்துக்கொண்டு சிறந்த பண்புடன்
வாழும் மகளிரை அடிமைகளாக நடத்த எண்ணுவது
அறியாமையாகும்.

58. பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

நற்பண்பு பெற்றவனைக் கணவனாகப் பெற்றால்
பெண்டிர்க்கு இல்வாழ்க்கையெனும் புதிய உலகம்
பெருஞ்சிறப்பாக அமையும்.

மேற்கூறிய வாழ்க்கைத் துணை நலம் அதிகாரக் குறட்பாக்களின் தெளிவுரைகள் பெண்ணுரிமைக்கு முதன்மை கொடுக்கும் திராவிட இயக்கக் கொள்கையில் நிற்கும் கலைஞரின் கொள்கைத் தெளிவிற்கு நற்சான்றுகளாகின்றன.

85. வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்

விருந்தினரைப் போற்றுபவனது நிலத்திற்கு விதையும் இடல் வேண்டுமோ? என இக்குறளுக்குப் பொருள் கொளின் விதையிடாமல் நிலம் விளைவதெப்படி? என்றவினா எழுமே. அதனாற்றான் கலைஞர்,

விருந்தினரைப் போற்றும் பண்பாளன்
தன் நிலத்திற்குரிய விதையைக்கூட
விருந்தோம்பலுக்குப் பயன்படுத்துவான்
எனத் தெரிவிக்கிறார்.

234. நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தே ளுலகு.

நிலவுலகின் எல்லையில் நெடுங்காலம்
நிற்கவல்ல புகழைச் செய்தால், வானுலகம்
(அவ்வாறு புகழ்செய்தாரைப் போற்றுமே அல்லாமல்)
தேவரைப் போற்றாது
என டாக்டர் மு.வ. இக்குறளுக்குப் பொருளுரைக்கிறார்.

வானுலகம் என்பதை ஏற்காத டாக்டர் கலைஞர், இனிவரும் புதிய உலகம் கூட இன்றைய உலகில் தன்னலம் துறந்து புகழ் ஈட்டிய பெருமக்களை விடுத்து, அறிவாற்றல் உடையவரை மட்டும் போற்றிக் கொண்டிராது எனப் புத்தேள் உலகு என்ற சொற்றொடருக்குப் புது விளக்கத்தைத் தருகிறார்.

247. அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு

இதில் அவ்வுலகம், இவ்வுலகம் என்பவற்றிற்கு கலைஞர் தரும் உரைகள் நடைமுறைக்கு ஒத்தவையாகின்றன.

பொருள் இல்லாதவர்களுக்கு இல்லற
வாழ்க்கை சிறப்பாக இராது. அதுபோலவே
கருணை உள்ளம் இல்லாதவர்களின்
துறவற வாழ்க்கையும் சிறப்பாக அமையாது

என இல்லற, துறவற வாழ்க்கைகளுக்குச் சிறப்பானவற்றைச் சுட்டுகிறார்.

ஊழ் என்பதனை இயற்கைநிலை எனக்கொண்டு இவ்வதிகாரத்திற்கு அவர் அளித்துள்ள உரைகளை அறிதல் சிறப்பாகும்.

371. ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்று மடி

ஆக்கத்திற்கான இயற்கைநிலை, சோர்வு தலைகாட்டாத
ஊக்கத்தைக் கொடுக்கும். ஊக்கத்தின் அழிவுக்கான
இயற்கைநிலை சோம்பலை ஏற்படுத்தும்.

372. பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்
ஆகலூ முற்றக் கடை

அழிவுதரும் இயற்கைநிலை, அறியாமையை
உண்டாக்கும்; ஆக்கம் தரும் இயற்கைநிலை,
அதற்கேற்ப அறிவை விரிவாக்கும்.

373. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும்.

கூரிய அறிவு வழங்கக் கூடிய நூல்களை
ஒருவர் கற்றிருந்த போதிலும் அவரது இயற்கை
அறிவே மேலோங்கி நிற்கும்.

374. இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு

உலகின் இயற்கைநிலை இருவேறுபட்டதாகும்,
ஒருவர் செல்வமுடையவராகவும், ஒருவர் அறிவுடையவ
ராகவும் இருப்பதே அந்த வேறுபாடாகும்.

375. நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவும்
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு

நல்ல செயல்களை ஆற்ற முற்படும்போது
அவை தீமையில் போய் முடிந்துவிடுவதும்,
தீயசெயல்களை ஆற்றிடமுனையும் போது
அவை நல்லவைகளாக முடிந்துவிடுவதும்
இயற்கை நிலை எனப்படும்.

380. ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்

இயற்கைநிலையை மாற்றி மற்றொரு செயற்கை
நிலையை அமைத்திட முனைந்தாலும், இயற்கை
நிலையே முதன்மையாக வந்து நிற்பதால்
அதைவிட வலிமையானவையாக வேறு
எவை இருக்கின்றன ?

மேற்காட்டிய புதியபொருள் உரைகள் சொற்சிதைவிற்கோ மாற்றத்திற்கோ உட்படாமல் நயமாக அமைந்திருப்பது கலைஞரின் புலமை நலத்திற்கு நற்சான்றாக உள்ளன. இவ்வெளிய உரை திருக்குறளின்பால் கலைஞர் கொண்ட பற்றின் வெளிப்பாடாகும். குறளோவியமும், வள்ளுவர் கோட்டமும் கண்ட கலைஞர், குறள் முழுமைக்கும் உரைவரைந்திருப்பது குறித்து,

"திருக்குறள் வகுத்திட்ட வாழ்க்கை நெறியொன்றே
திருவிடத்தின் பண்பாட்டு ஊற்றுக்கண். ஆகலின்
திருமறை உரைபொருள் எவரும் எளிதுணர
திருக்குறள் கருத்துரை வரையலானார் கலைஞர்.

குறட்பா மொழிந்திடும் பொருளொன்றே எனினும்
குறள்பொருள் தெளிவார் உணர்திறன் வேறாகலின்
குறட்பா சொற்றொடர் புணர்வகை யாலன்றிக்
குறள்நெறி உளத்தூன்ற உரைத்தார் கலைஞர்"[3]

எனப் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் குறிப்பிடுவது மிகையன்று.

இவ்வாறே முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம்,

"கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைசிறந்து
விளங்குவதற்குக் காரணம் அவர் திருக்குறளை
நன்கு படித்ததனால்தான்"[4]

என்று கலைஞர் திருக்குறளை நன்கறிந்தவர் எனப்பாராட்டுகிறார்.

இத்தகு சிறப்பிற்குரிய டாக்டர் கலைஞர் அவர்கள் பல வழிகளிலும் தம் திறனை வெளிப்படுத்தியதோடு, திருக்குறளுக்கு உரையெழுதியதன் மூலம் தாம் ஓர் எளிய, சிறந்த உரையாசிரியர் என்பதையும் நிரூபித்துள்ளார்.

இவ்வுரைநூல், பிற உரைகளோடு ஒப்பிட்டு முழுமையாக ஆய்வு செய்யப்பட வேண்டியதாகும். இதன்மூலம் கலைஞரின் புலமைத்திறன், திராவிட இயக்கக் கொள்கைகளிடத்தும் வள்ளுவரிடத்தும் அவர்கொண்ட பேரன்பின் வெளிப்பாடு ஆகியவை தெள்ளிதின் அறியலாகும்.

அடிக்குறிப்புகள்

1. கலைஞர், திருக்குறள் கலைஞர் உரை, முகவுரை, ப.iv
2. மா. நன்னன், திருக்குறள் கலைஞர் உரை. பதிப்புரை, ப.xii
3. பேராசிரியர் க.அன்பழகன், திருக்குறள் கலைஞர் உரை, ப.vii
4. கி.ஆ.பெ.விசுவநாதம், 'திருக்குறளின் செயல்திறன் கலைஞர்' கலைஞர் மணிவிழா மலர், 1984.

புதினம் - சிறுகதை - கவிதை - மேடைத்தமிழ்

19 'பொன்னர் - சங்கர்' - ஒரு வாசகியின் பார்வை

- திருமதி. மீனாட்சி முருகரத்தனம்

ஒரு மொழியின் இலக்கிய வரலாற்றில் நாள்தோறும் புதிய புதிய படைப்புக்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. இலக்கியத்தில் ஒரு வகை புதினம் என்ற பெயராலேயே அழைக்கப்படுகிறது. ஆனால் உண்மையில் 'புதிது' என எல்லா வகையிலும் முழுமையாகவும் சுட்டக்கூடிய படைப்புக்கள் எத்தனை? பிறக்கும் ஒவ்வோர் உயிரும் புதியது தான். ஆனால் மனித இனத்தின் பொதுத் தன்மைகள், பிறந்துள்ள குலத்தின் சிறப்புத் தன்மைகள் ஆகியவற்றை விடுத்துப் பார்த்தால், வேறு எவ்வுயிர்க்கும் இல்லாததும் அதற்கு மட்டுமே உரியதுமான தனித்தன்மைகளாக - முற்றிலும் புதிய கூறுகளாக - ஒவ்வோர் மனித உயிர்க்கும் எத்தனை தேறும்? மரபணுவியல் ஆய்வினால் கட்டைவிரல் ரேகை, பற்கள், தலைமுடி, விந்தணுக்கள் முதலியவற்றின் மரபீனிகள் (DNA) கொண்டு சுட்ட வேண்டிய அளவு உயிரின் தனித்தன்மைகள் அரியன. இலக்கியத்திலும் அவ்வாறே முற்றிலும் புதியது என்று சுட்டக்கூடிய படைப்பு மிக அரியது.

கோடிக் கணக்கில் படைப்புகள் இருந்தாலும், இனி வரவிருப்பனவற்றையும் கருத்தில் கொண்டாலும் இலக்கியக் கருப் பொருள்களாக அமையக்கூடிய செய்திகள், உணர்வுகள் ஆகிய அனைத்தையும் ஐம்பதிலிருந்து அறுபதுக்குள் அடக்கிவிடலாம் என்று திறனாய்வாளர்கள் சொல்வதுண்டு. அவ்வாறிருந்தும் இலக்கியத்தில் நமக்குள்ள ஈடுபாடு குறைவதில்லை. குறிப்பாகப் புதின இலக்கியத்தில் பல கதைகளின் அடிப்படைக் கதைக்கட்டுமானம் (Basic story structure) ஒன்றாக அமையப் பெற்றவை. பெயர்கள், சூழல், நிகழ்ச்சிகள், கதை கூறப்படும் முறை, கதைப்பின்னல் அமைப்பு, பாத்திரப் பண்புகள், மொழி நடை ஆகிய கூறுகளின் மேற்போக்கான வேறுபாடுகளால் அந்தப் பொதுத்தன்மை நமக்குப் புலனாவதில்லை.

எடுத்துக்காட்டாகத் திரைப்படக் கதைகள் பலவற்றில் கருப் பொருளாகப் பழிவாங்கல் அமைகிறது. நேர்மையான ஒரு குடும்பத்தை நேர்மையற்றவன் சிதைத்தல் - இளவயதில் உடன் பிறந்தோரை/ பெற்றோரை இழந்து/பிரிந்து குழந்தைகள் வளர்தல்-பெரியவனாக வளர்ந்த மகன் பழையன அறியவரல்-குடும்பம் சிதைத்தவன் வீட்டுப் பெண்ணுடன் உறவு-எதிரியைப் பழிவாங்கல் - துணையுடன் இணைதல். இந்தப் பொதுவான கட்டமைப்பில் ஒவ்வொரு விஷயத்திலும் சில மாறுதல்கள் இருக்கலாம். அவ்வளவுதான். ஆனாலும் சராசரி ரசிகர்கள் படங்களை மீண்டும் மீண்டும் பார்க்கச் செல்லாமல் இல்லை.

நெடுங்கதைகளில் கூடச் சமூகப் புதினங்கள் என்றால் தொடக்க காலத்தில் குடும்பக்கதைகளாக அமைந்து, கூட்டுக் குடும்ப அமைப்பில் பொறுப்பற்ற பலர் நடுவே பொறுப்புள்ள ஒருவன்/ஒருத்தி பொறுமையுடன் கட்டிக் காத்துத் தியாகம் செய்து குடும்பத்தைக் காக்கும் கதைகள்; சமூகச் சித்திரிப்புக் கதைகளாக அமைந்து அநீதியையும் அக்கிரமத்தையும் எதிர்த்துப் போராடும் கொள்கை வீரனின் வெற்றி அல்லது (வீர) மரணம் பற்றி விவரிக்கும் கதைகள்; சாதி, சமயம், குடும்பப் பகை முதலிய பல்வேறு காரணங்களில் ஒன்றால் தடைப்பட்ட காதல் முடிவுறும் விதம்பேசும் கதைகள்; வரலாற்றுக் கதைகள் எனில் பேரரசனோ பெருவீரனோ களத்திலும் காதலிலும் பகை வென்று வாகை சூடலை விவரிக்கும் கதைகள் என்றிவ்வாறு எவ்வகையில் பார்த்தாலும் ஒரே அமைப்புக் கொண்ட கதைகளே மிகுதி. இன்று கூட 'ஜனரஞ்சகமான' கதைகள் அத்தகையவையே. எனவே, விதிவிலக்குகள் உண்டென்றாலும் வணிகரீதியாக வெற்றி பெறும் கதைகளில் பலவும் கருப்பொருளும் கதைக்கட்டுமானமும் அடிப்படையில் ஒன்றாகப் பெற்றிருப்பது நிறுவக் கூடிய உண்மை. அவ்வாறெனில் அந்த அடிப்படையை உணராதவாறு அல்லது உணர்ந்தாலும் பொருட்படுத்தாதவாறு கற்போரை ஈர்க்கும் அம்சங்கள் யாவை ?

மிகமிக அடிப்படையான ஒரு காரணம் கதை கேட்பதில் நமக்குள்ள ஆர்வம். சின்ன வயதில் பாட்டிக்கதை கேட்கும் போதும் திரும்பத் திரும்பச் சில கதைகளைக் குழந்தைகள் அலுப்பின்றிக் கேட்டுக் கொண்டிருப்பதுண்டு. பார்த்த படம் என்றாலும் அலுப்பூட்டுவது என்றாலும் தொலைக்காட்சியின் முன் பலரை அமரவைப்பது இந்த ஆர்வமே. பொழுதுபோக்கு ஈடுபாடும் கற்பனையில் உள்ள ஆர்வமும் கதை கேட்கவும் பார்க்கவும் தூண்டுவன. இந்த ஆர்வம் நெடுங்கதைகளில் உள்ள அடிப்படை ஒற்றுமையை உணராமல் அல்லது உணர்ந்தும் பொருட்படுத்தாமல் படிக்க வைக்கிறது.

உணர்வுகள் மனித மனத்திற்கு இதம் தருவது மற்றொரு காரணம். இனியவையும் இன்ப உணர்வுகளும் மட்டுமல்ல, அவலமும் இளிவரலும் அச்சமும் அனுபவிக்க இனியவையே. அரிசுடாடில் பேசும் கதார்சிஸ் (Catharsis) என்பதன் அடிப்படையும் அதுவே எனலாம். கற்பனையே என்றாலும் மனமொன்றிப் படிக்கும் போது நெடுங்கதைகள் மனதிற்கு அனுபவ உணர்வைத் தருகின்றன. உணர்வுகள் உணவுபோல அவ்வப்போது நிறைவு தருபவை. இறையனார் களவியல் உரை இல்லற இன்பத்திற்கு உவமை கூறல் இங்கே பொருத்திப் பார்த்தற்கு உரியது. ஒருவேளை உண்டதால் பசியாறினாலும் ஒவ்வொரு வேளையும் பசிக்கத்தான் செய்கிறது. உண்டு பழகிய உணவென்றாலும் ஒவ்வொரு முறை உண்ணும் போதும் சுவைக்கத்தான் செய்கிறது. உணர்வுகளும் அங்ஙனமே யாதலின் உணர்வுக் கருவூலங்களான நெடுங்கதைகளும் அலுக்காமல் படித்தற்குரியனவாகின்றன - அவை அரைத்த மாவையே அரைத்தபோதும்.

சராசரிக் கதைகளின் வெற்றிக்கு இவையே போதுமான காரணங்கள். ஆனால் முடித்து மூடியபின் முற்றிலும் மறந்து போகும் கதைகளில், படிக்கும் போது மட்டும் சுவைதரவே இவை பயன்படும். மறக்க முடியாமல் மனத்தில் தங்கும் கதைகளில் அடிப்படை அமைப்பொருமையை மீறி அவை நிலைத்து இன்பம் தருவதற்கு முக்கியமான மூன்று காரணங்கள் -சுவையான கதைப் பின்னல், மனத்தில் தங்கும் பாத்திரப்படைப்பு, உலகளாவிய உணர்வுப் பொதுமை ஆகியவை.

கலைஞரின் கதைகள் 'புதினம்' என்ற பெயருக்கேற்பப் புதுமையாய்த் தோன்றிச் சுவை தருவதற்கும் அந்த மூன்று இயல்புகளும் அவர் படைப்புக்களில் முற்றிலும் சிறந்திருப்பதே முதன்மைக் காரணம்.

கலைஞரின் புதினங்களில் பெரும்பாலானவை வரலாற்றுக் கதைகள். வரலாற்றுக் கதைகளில் இன்றியமையாததும் தமிழில் வரலாற்றுக் கதைகள் பலவற்றில் இல்லாததுமான இயல்பாகிய வரலாற்று மீட்டுருவாக்கமும் கலைஞரின் கதைகளில் சிறப்பாக அமைந்திருக்கும்.

இந்த நான்கு இயல்புகளும் கலைஞரின் பொன்னர்-சங்கர் என்ற புதினத்தில் அமைந்துள்ளவாறு இங்கே கோடிட்டுக்காட்டப்படுகிறது.

வரலாற்று மீட்டுருவாக்கம்

புதினங்களில் மிகுதியாகவும் முதன்மை நிலையிலும் இடம்பெறும் செய்தியின் அடிப்படையில் புதினங்கள் வகைப்படுத்தப்படுகின்றன.கதை நிகழ்ச்சிகளிலும் பாத்திரப் படைப்பிலும் வரலாற்றுச் செய்திகளை நீக்கிவிட்டால் கதையே இல்லை என்னுமளவு வரலாற்றைச் சார்ந்திருப்பவையே வரலாற்றுப் புதினங்கள். அவற்றில் புனைவுரைகள் எல்லாம் கதை நிகழும் வரலாற்றுக் காலத்தைக் கண்முன் கொணரும் வகையில் சமூகநிலைத் தொகுப்புரை (Social Documentary) போல அமையும். சிறப்புச் சொற்களால் (Specific Diction) ஆன மொழி நடையே அதற்கேற்றது. சான்றாக, உணவு உண்டான், சிற்றுண்டி அருந்தினான், பழச்சாறு பருகினான், தட்டில் பழமும், குவளையில் பாலும் கொணர்ந்தாள், உடை, அணி, காலணி, கூந்தல் போன்ற பொதுச் சொற்களின் (General Diction) பயன்பாட்டில் கதை நிகழும் காலம் பற்றிய செய்திகளோ காட்சிகளோ கிடைப்பதில்லை. மாறாகக் கதை நிகழும் காலத்திற்கே சென்றுவிட்டது போன்ற உணர்வைக் கற்பவர் பெறுமாறு சொற்கள் சொற்சித்திரங்கள் ஆதல் வேண்டும் சத்யஜித்ரேயின் பதேர் பாஞ்சாலியின் காட்சிகள் போன்ற சொல்லோவியங்களே வரலாற்று மீட்டுருவாக்கங்கள். பொன்னர் - சங்கர் புதினத்தின் பெரும்பகுதி இத்தன்மையினவே. பதச்சோறாக ஓரிடம் :- கடைசி நேரத்தில் மணமகனை மாற்ற வேண்டும் என்று தாமரை கூறியபோது ஏற்பாடுகள் எல்லாம் முடிந்த நிலையில் அது இயலாதெனச் சொல்லும் மலைக்கொழுந்தாக் கவுண்டர் அந்த ஏற்பாடுகள் என்னவென்பதைப் பின்வருமாறு விளக்குகிறார்.

"மாந்தியப்பன் தான் மாப்பிள்ளையென்று நிச்சயதார்த்தம் செய்யப்பட்டுச் சுமங்கலிப் பெண்களிடம் அருமைப் பெரியோர் சீர்த்தட்டங்களை நீர் சுற்றிக்

கொடுத்தாயிற்று. முப்புரித்தாலிக்கான பொன்னும் வழங்கிப் பொற்கொல்லரும் அதனைத் தயாரித்து அனுப்பிவைத்துவிட்டார். நெல்வேக வைத்து உலர்த்தும் சடங்கும் மணவீட்டில் நடந்துவிட்டது. பாலுள்ள மரத்துக்குப் பால்விட்டுப் பூஜை செய்து ஒரு கிளையை வெட்டி மூன்று கட்டுக்கட்டி மணவிழா மண்டபம் கூரையின்மீது காயப்போட்டாகிவிட்டது. இருவீட்டாரும் இருகூடை உப்பு மாற்றியாகிவிட்டது. மணவறையில் மேடையிட்டுப் பூசி மெழுகப் புற்று மண்ணும் சம்பிரதாயப்படி எடுத்தாயிற்று. இருபத்தி நாலு நாட்டில் உள்ள பெரியவர்களையும் வாழ்த்து வழங்கவருமாறு அழைத்து அவர்களும் பெரும்பாலோர் வந்து இறங்கிவிட்டார்கள். மாப்பிள்ளை தலையில் தொங்கவிட்டுக் கட்டிச் சிங்காரிக்க உருமாலையும், வால்கோவணம் போட்டு உடுத்திடப் பட்டு வேட்டியும், மாலையணிவித்து அழைத்துவர வாட்டசாட்டமான குதிரையும் மாப்பிள்ளையின் மைத்துனன் தயாரித்துவிட்டான். திருமணச் செய்தி எல்லா ஊர்களுக்கும் முரசு ஒலியால் "குப்பாரி கொட்டித்" தெரிவிக்கப்பட்டாகிவிட்டது. மாப்பிள்ளை வீட்டார் நமது வீட்டுக்கு மரபுப்படி நாழியரிசிக் கூடை அனுப்பிவைத்தது மட்டுமல்ல. "பொன்பூட்டிக் குலம் ஒதுதல்" என்ற சடங்கு செய்யவும் மணமகனின் உறவுப் பெண்கள் வந்துவிட்டார்கள். அவர்களுக்குப் "புதுக்கலத்துண்ணல்" என்ற விருந்தும் நம் வீட்டில் நடைபெற்றாகிவிட்டது.(பக். 21) இதனினும் விரிவாக மணவிழா நிகழ்ச்சிகளும் (பக்.32, 33) கரகம் விடும் திருவிழாவும் (பக். 67-70) விவரிக்கப்படுகின்றன.

இவ்வளவு விரிவான, துல்லியமான புனைவுரைகள் இப்புதினத்தை வெறும் வரலாற்றுச் செய்தித் தொகுப்பாக ஆக்கிவிடாமல் காப்பது சுவையான கதைப்பின்னல்.

கதைப்பின்னற் சிறப்பு

தமிழின் முதலும் முதன்மையுமான இரட்டைக் காப்பியங்களில் போலத் திருவிழாவில் கதை தொடங்குகிறது. மலைக்கொழுந்தாக் கவுண்டரின் மகள் தாமரைக்குத் திருமணம். செல்லாத்தாக் கவுண்டர் மகன் மாந்தியப்பன் மணமகன். குல வழக்கப்படி தாமரை ஏழைகளுக்குத் தானியம் வழங்கும்போது அவள் முறைப்பையனான நெல்லியங்கோடன் மாறுவேடத்தில் கூட்டத்தில் நுழைந்து வந்து தாமரை அருகில் சென்று தான் யாரென உணர்த்துகிறான். அவன் தந்தை கோளாத்தாக் கவுண்டர் இறக்கும்போது சிற்றப்பனான செல்லாத்தாக் கவுண்டர் பொறுப்பில் தன் மகனை விட்டுவிட்டுச் சென்றார். தன் தங்கையான பெருமாயியிடம் அவள் மகள் தாமரையைத் தன் மகனுக்கு மணமுடிக்க வேண்டும் என்று வாக்குறுதியும் பெற்றிருந்தார். ஆனால் செல்லாத்தாக் கவுண்டரோ அண்ணன் மகனை விரட்டியடித்துவிட்டுத் தன் மகனுக்குத் தாமரையை மணம் செய்ய ஏற்பாடு செய்கிறார். தாமரைக்கு விருப்பமில்லை என்றாலும் நெல்லியங்கோடன் இருக்குமிடம் தெரியாததாலும் பெற்றோரை எதிர்க்கும் துணிவின்றியும் மண ஏற்பாடுகளில் மனமின்றிச் செயற்படுகிறாள். ஆனால் அவன் வந்துவிடவே மகிழ்ச்சியும் மன உறுதியும் கொண்டு நெல்லியங்கோடனையே மணம் செய்து கொள்ளப்போவதாக அறிவித்து விடுகிறாள். தாயும் அதற்கு ஆதரவு. அவர்கள் அணிக்கு முன் தன்

வாதங்கள் எடுபடாமற் போகவே தந்தை வேறுவழியின்றிச் செல்லாத்தாக் கவுண்டரிடம் சென்று நிலைமையைக் கூறுகிறார். அவரோ அடிபட்ட புலியாகச் சீறுவதுடன் வழக்கம் போலத் தன் குயுக்தி மூளையால் நிகழ்ச்சியைத் திசை மாற்றி விடுகிறார். தலையூர் அரசன் காளிக்குத் தன் சார்பில் அழைப்பு விட்டிருந்த அவர், அந்நேரம் பார்த்து அவன் வரவே, மலைக்கொழுந்தாக் கவுண்டருக்குத் தலையூரானை அழைக்க விருப்பமில்லை என்றும் தான் அழைத்துவிட்டதால் திருமணத்தை நிறுத்த விரும்பித் தன் மகனை மணமகனாக்க மறுக்கிறார் என்றும் தன் மதிப்பிற்குரிய தலையூரானை அவமதித்த இடத்தில் தான் உறவு கொள்ள இயலாது என்றும் கூறி ஏதோ திருமணத்தைத் தானே நிறுத்தியது போலப் போக்குக் காட்டிச் சென்றுவிடுகிறார். தாமரை - நெல்லியங்கோடன் திருமணம் நடக்கிறது. ஆனால் கோபமாகச் சென்ற தலையூரானிடமிருந்து வந்த ஓலையால் தந்தையும் தமையனும் தாமரையை வீட்டைவிட்டு வெளியேறுமாறு கூறிவிடுகின்றனர். தன்னையும் கணவனையும் மதிக்காத இடத்துச் சீர்வரிசையும் தனக்குத் தேவையில்லை என உதறிவிட்டுத் தாமரை கணவனுடன் வெளியேறிவிடுகிறாள். ஆனால் போகும்போது தான் ஒரு மகனைப் பெற்றுத் தன் அண்ணன் வீட்டில் சம்பந்தம் செய்வதாய்ச் சபதம் செய்கிறாள். ஒன்றுக்கு இரண்டாகப் பெற்றால் தன் வீட்டின் முன் காவலுக்கு நிற்கலாம் என்று அவள் அண்ணன் கூறிவிடத் தாமரை சினத்துடன் போய்விடுகிறாள். முதல் ஐந்து இயல்களில் இந்நிகழ்ச்சிகள் சொல்லப்படுகின்றன. ஆறாம் அத்தியாயத்தில் மாயவர் என்ற கிழவர் ராக்கியண்ணன் என்பவரின் பயிற்சிப் பாசறையைத் தேடிவரும் வழியில் வலிய காட்டுப் பன்றிகளை எதிர்த்துப் போராடி வென்ற மூன்று இளைஞர்களைச் சந்திப்பதும் பாசறையில் ராக்கியண்ணனைச் சந்திப்பதும் பேசப்படுகிறது. தொடர்ந்து வரும் இயல்களில் தாமரையின் மணம் முடிந்து இருபத்தைந்து ஆண்டுகள் கழிந்துவிட்டன என்பதும் அவளுக்குப் பிறந்து இளவயதில் காணாமற்போன சிறுவர்கள் இருவரும் சோழன் தோட்டியின் மகன் வீரமலையுடன் தம்மிடம் வளர்ந்து வருவதாகவும் பெற்றோர்க்கே அந்த உண்மை தெரியாதென்றும் மூன்றாவதாகப் பிறந்த மகள் அருக்காணித் தங்கத்துடன் மிக உயர்ந்த நிலையில் தாமரை வாழ்ந்து வருவதும் ராக்கியண்ணன் மூலம் விளக்கப்படுகின்றன. இதற்கிடையில் தன் தங்கை மக்கள் என்று தெரியாமலே தன் பெண்களைக் காப்பாற்றியவர்கள் என்ற நன்றி உணர்வுடன் பொன்னர்-சங்கரை அழைத்துச் சென்று உபசரிக்கிறார் தாமரையின் தமையனான சின்னமலைக் கொழுந்து. தன் பெண்களின் மனதில் பொன்னர்-சங்கர் இடம் பெற்றிருப்பதை அறியும் அவர் மனைவி பவளாயி, அவர்கள் இன்னார் என்று தெரியாததால் திருமணம் நடக்குமோ நடக்காதோ என்று கவலைப்பட்டவாறே ஊர் திரும்புகையில் மாந்தியப்பன் தூண்டலால் தலையூர்க்காளி அவர்களைச் சிறையெடுத்துச் செல்கிறான். அந்த ஆபத்திலிருந்தும் பொன்னர்-சங்கர் காப்பாற்றுகின்றனர். காத்தவர்களைப் பாதுகாப்பாக வைக்கச் சங்கரன் மலையே ஏற்ற இடம் என அழைத்துச் செல்கின்றனர். அதே சமயம் குன்றுடையானான நெல்லியங்கோடனின்

குடும்பம் பற்றிய உண்மையை- அவன் மக்கள் உயிருடன் இருப்பதை-அவர்கள் காணாமற்போன இடமான சங்கரன் மலையில் வைத்தே கூறுவதாகச் சொல்லி மாயவர் அவர்களை அங்கே அழைத்து வருகிறார். கோட்டைக்குள் குன்றுடையான் குடும்பம் இருப்பது தெரிந்து சின்னமலைக் கொழுந்து திடுக்கிடுகிறார். ஆனால் குன்றுடையானின் வரவேற்பில் மனம் குளிர்கிறார்.

அத்தனை காலமாகப் பிரிந்திருந்த அண்ணன்-தங்கை குடும்பம் சேர்ந்து பேசும்போது புதிய சிக்கல் முளைக்கிறது. தன் பெண்களைக் காப்பாற்றியவர்களுக்கே அவர்களை மணம் செய்வதாகச் சின்னமலைக் கொழுந்து வாக்குறுதி கொடுத்திருந்தாள். தன் பையன்களுக்குத் தமையன் பெண்களை மணமுடிப்பதாகத் தாமரை சபதம் செய்திருந்தாள். அப்போது மாயவர், பொன்னரும் சங்கரும்தான் காணாமற்போன குழந்தைகள் என்ற உண்மையை விளக்குகிறார். அந்தக் கிளைக் கதை ராக்கியண்ணனின் தியாகத்தை விளக்குவது. அதன்மூலம் வாக்குறுதியும் சபதமும் முரண்படவில்லை என்றுணர்ந்து மகிழ்கின்றனர். ஆனால் பொன்னர்-சங்கரை வளர்த்த ராக்கியண்ணன் அவர்களைக் காப்பாற்றுவதற்காகத் தன் குழந்தைகளைப் பலியிட நேர்ந்ததால் அதற்குக் காரணமானவர்களை அவர்களைக் கொண்டே பழிவாங்குவதென்றும் அதுவரை அவர்கள் பிரம்மசரியம் பூண்டிருப்பதென்றும் சபதம் செய்திருந்தார். கடைசியில் திருமணம் நடக்கலாம் என்றும் சபதம் நிறைவேறும் வரை மணவுறவு கொள்ளாதிருப்பது என்றும் முடிவாகிறது.

இதற்கிடையில் இவர்களனைவரும் சங்கரன் மலையில் இருக்கும்போது மாந்தியப்பன், குன்றுடையானின் அரண்மனையில் புகுந்து அட்டகாசம் செய்வதாகச் செய்தி வருகிறது. அவசரமாகத் திருமணம் முடித்துப் பொன்னரும் சங்கரும் போருக்குப் புறப்படுகின்றனர். போரில் வெற்றி. ஆனால் ராக்கியண்ணன் படுகாயம் அடைகிறார். சாவின் தலைவாயிலில் நிற்கையில் தன்னால் நான்கு இளம் நெஞ்சங்கள் வாடவேண்டாம் என முடிவு செய்து தன் சபதம் நிறைவேறினால் போதும் என்றும் பிரம்மச்சரிய நிபந்தனை தேவையில்லை என்றும் கூற முடிவு செய்து அழைக்கிறார். ஆனால் கருத்தை வெளியிடுமுன் உயிர் பிரிந்துவிடுகிறது.

ராக்கியண்ணன் தலையூரானுக்கும் ஆசான் என்பதால் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள அவன் வருகிறான். அவனுடன் வரும் மாந்தியப்பன் சாவு வீட்டிலும் சதியை விடவில்லை. அருக்காணித் தங்கத்தைக் கடத்தி வர ஏற்பாடு செய்கிறான். பொன்னர்-சங்கரின் வீரத்தை அறிந்த சோழ அரசன் மாயவர் வேண்டுகோளால் அவர்களுக்கு உதவியதுடன் அவர்கள் வெற்றியைப் பாராட்டத் தன் நாட்டில் ஒரு வரவேற்புக்கும் ஏற்பாடு செய்கிறான். அவர்கள் அங்கே சென்றிருக்கும் போது அருக்காணியைக் கடத்தி வந்து தலையூரானுக்குத் திருமணம் செய்து வைத்துவிட்டால் தங்கை கணவனான தலையூரானுக்குப் பொன்னர்-சங்கரால் ஆபத்தில்லை என்று மாந்தியப்பன் கூறுவதைத் தலையூரான் நம்பிச் சதிக்கு உடன்படுகிறான்.

தலையூரானின் தளபதி பராக்கிரமன் தன் காதலி வடிவழகியைச் சோழ இளவரசியாக நடிக்க வைத்து வளநாட்டு அரண்மனையிற் புகுந்து வீரமலையின் மேல் அடாத பழி சுமத்திக் களேபரத்தில் அருக்காணி என்று எண்ணிக் குப்பாயி என்ற பெண்ணைக் கடத்திச் சென்று விடுகின்றனர். தடுக்கும் தாமரையைக் குத்திவிட அவள் இறந்த அதிர்ச்சியில் குன்றுடையானும் இறந்துவிடுகிறான். குப்பாயி தப்பித்து வந்துவிடுகிறாள்.

பல வழிகளில் முயன்றும் வெற்றி பெறாத நிலையில் கடைசிக் கட்டமாகப் பொன்னர்-சங்கரைப் பிரிக்கத் திட்டமிட்டு அதில் வெற்றியும் காண்கின்றனர் மாந்தியப்பனும் செல்லாத்தாக் கவுண்டரும். சமாதானம் பேசுவதற்கு வருமாறு அழைத்து மாயவரைக் கொன்று வீரமலையையும் அவனைக் காக்க வந்த சங்கரையும் சிறையில் அடைக்கின்றனர். பொன்னரைக் கொல்ல அவர்கள் செய்த சூழ்ச்சி மட்டும் பலிக்கவில்லை. சங்கரின் குதிரை மூலம் அவன் இருப்பிடம் தெரிந்து அவனை வளநாட்டுப் படை விடுவிக்கிறது.

நம்பி ஏமாறும் தலையூரானின் துணையுடன் தொடர்ந்து செல்லாத்தாக் கவுண்டர் செய்த சதிகளால் நடந்த போர்களில் ஒன்றில், மறைந்திருந்து தலையூரான் எய்த அம்பு நெற்றியில் தைக்கத் தன் வீரத்திற்கு அது மாசு எனக் கருதும் சங்கர் தன் வாளைத் தானே மேலே எறிந்து அது கீழே வரும்போது அதற்கு நேராக நின்று தன் மார்பில் அதை ஏற்று மடிகிறான். பொன்னர்-சங்கர் இல்லாத நேரம் தலையூரானின் படை வளைத்துக் கொள்ளவே மானம் காக்க எண்ணி அரண்மனைக்கு எரியூட்டி மடிகின்றனர் முத்தாயியும் பவளாயியும். அவர்கள் அண்ணன் வையம் பெருமானும் சங்கரின்-நண்பன் வீரமலையும் போரில் இறக்கின்றனர். அருக்காணி அதிர்ச்சியில் மாய்கிறாள். தானும் சாக விரும்பும் பொன்னரைச் சோழ அரசர் தடுத்து நாட்டுக்காக வாழச் செய்கிறார்.

ஆர்வநிலையும் சுவையும்

கதைச் சுருக்கமே இவ்வளவு நீளமாக அமைவதன் காரணம் கதைப் பின்னலின் அடுக்கடுக்கான நிகழ்ச்சிகள். ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒரு எதிர்பாராத திருப்பமாகவும் அடுத்து விளைவது பற்றிய ஆவலைத் தூண்டும் ஆர்வநிலையினதாகவும் அமைகிறது. மேலும் நுகத்திடைக் கோர்த்த கழியினைப் போல நிகழ்ச்சிகள் பொருத்தமும் நம்பகத் தன்மையும் உடையனவாய் அமைகின்றன. கதை படிக்கும் ஆர்வத்தில் நாம் கவனிக்கத் தவறுவதும் கவனித்தால் பெரும் வியப்பு அளிப்பதும் ஆவது அந்தப் பொருத்தச் சிறப்பு. எடுத்துக்காட்டாக மணிமேகலைக் காப்பியக் கதையில் ஓரிடம். மேகலை உருமாறி உலவ வேண்டிய கட்டாயம். காடசண்சிகையின் உருவெடுப்பதாகக் கதை செல்கிறது. மணிமேகலை கொள்ளும் மாற்றுருவம் காயசண்டிகையின் அமையக் காரணம் என்ன ? அச்சூழலில் மிகப் பொருத்தமானது அவ்வுரு மட்டுமே என்பது சிந்தித்தால் விளங்கும். மணிமேகலை உருமாறியது புகாரில். அவ்வூரில் வாழ்ந்துவரும் யாராகவும் உருக்கொள்ள இயலாது. வேற்றுருக் கொண்டால் யார், எவர் என்ற வினா

எழும். ஒரே நாளில் ஊரைவிட்டுப் போவதென்றால் சரி, ஆனால் அவளோ பலநாள் தங்கவும் பாத்திரத் துணையுடன் பசிப்பிணி போக்கவும் விழைகிறாள். அந்நிலையில் ஊராரின் வினாவிற்கும் ஐயத்திற்கும் அப்பாற்பட்டதாக அவள் கொள்ளும் உருவம் அமைய வேண்டும்.

காயசண்டிகை பலநாட்கள் புகாரில் திரிந்து ஊரார்க்கு நன்கு அறிமுகமானவள். எனவே அவளை யாரும் எதுவும் ஐயுறவோ வினாவவோ மாட்டார்கள். அவள் சென்று விட்டதால் அவளால் குழப்பம் வராது. அவள் விண்ணகம் சென்றுவிட்டதால் வேற்றூரில் யாரும் அவளைக் கண்டு குழப்பம் வரவும் வாய்ப்பில்லை. எனவே மணிமேகலை அவள் உருவைக் கொள்வதே பொருத்தமாகிறது. அது மட்டுமன்று. ஒரு வேளை வேறொரு உருவும் இதே வகையில் பொருந்துவதாகலாம். ஆனால் கதையின் முன்னோக்கிய நகர்வுக்கு மணிமேகலை சிறைப்படல் அவசியம். அதற்கான காரணம் வேண்டும். காயசண்டிகை உருக்கொண்டால், அவள் தன் பிணிநீங்கி விண்ணகம் சென்ற அதே வேளையில் அதை அறியாமல் அவளைத் தேடிவந்த கணவன் கண்களில் படத் தன் மனைவியிடம் உதயகுமாரன் தவறாக நடப்பதாக எண்ணி அவன் கொலை செய்யப் பழி மேகலை மேல் விழ அவள் சிறைப்படுகிறாள். காப்பியத்தின் உயிர்நாடியான 'சிறைக் கோட்டம் அறக் கோட்டம் ஆக்கிய காதை' பிறக்க உதவி செய்வது இந்த உருமாற்றமே. எனவே கதை நிகழ்ச்சிகளும் அவற்றில் ஏற்படும் திருப்பங்களும் சுவையாகவும் எதிர்பாராதவையாகவும் மட்டுமன்றிப் பொருத்தமாகவும் அமையவேண்டும். அத்தகைய நிலையை இப்புதினத்தின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் காணலாம். ஒவ்வொரு பாத்திரத்தின் இயல்புக்கும் ஏற்ற செயல்கள், அந்தச் செயல்களுக்கேற்ற விளைவுகள், அந்த விளைவுகளின் தவிர்க்க முடியாத நெருக்கடிகள் என்று கதைப் பின்னல் செறிவாக அமைகிறது.

கதைத் தொடக்கத்தில் பேசப்பட்ட தாமரையின் திருமணம் நடந்து 25 ஆண்டுகள் கழிந்துவிட்டன என்பது ஒரு வரியில் உணர்த்தப்பட்டு விடுகிறது. இடையில் நிகழ்ந்த முக்கியமான விஷயங்கள் ராக்கியண்ணன் பேச்சில் வெளியாகின்றன. அப்போது, காணாமல் போனமக்கள் பொன்னர்-சங்கராக வளர்ந்த உண்மை தெரிகிறது. அதுவும் கதையின் முக்கிய பாத்திரங்களுக்குத் தெரியாமல் கற்போர்க்கும் கதையில் ஒரு சிலர்க்கும் மட்டும் தெரிவதாக அமைவதால் ஆர்வநிலை (suspence) பிறக்கிறது. ஓடக்காரன் சந்திப்பு கதையின் தலைமை மாந்தர் சந்திப்பிற்கு உதவுகிறது. அவ்விடத்தில் காப்பியங்களுக்கே உரிய கிளைக்கதைப் போக்கு பெரியகாண்டியம்மன் கதையாக இடம்பெற்றுச் சுவை தருகிறது. சூறைக் காற்றின் வருகையும் நிற்றலும்கூடப் பொருத்தமாக நுழைகின்றது. சங்கரன் மலையில் 25 ஆண்டுகளாகப் பிரிந்திருந்த குடும்பங்கள் கூடுவதையும் திருமணம் தொடர்பாகத் தொடர்ச்சியாகச் சிக்கல் எழுவதையும் ஆர்வநிலை மிகுமாறு ஆசிரியர் புனைந்துள்ளார்.

உளவியலின் பயன்பாடு

கதைப் பின்னலில் முக்கியமான பங்கு வகிப்பது மனிதமன உளவியலின் பயன்பாடு. கோயிற் பூசாரி செம்பகுலனைக் கொண்டு நிறைவேற்றப்படும் சூழ்ச்சிகள் அனைத்தும் தனிமனித, சமூக உளவியல்களின் அடிப்படையில் அமைபவை. கண்ணனை எண்ணிக் கம்சன் அஞ்சினாற்போலத் தாமரையின் மக்களை எண்ணித் தலையூரான் அஞ்சும் வகையில் பூசாரிக்கு அருள் வரச் செய்து புரவலனுக்கு மருள் வரச் செய்வதும், தேரில் சதிவேலை செய்து தேர்நகரப் பலிதர வேண்டும் என்று கூறி மக்கள் நலனை மனதில் கொண்ட குன்றுடையானின் குடும்பம் முன்வரச் செய்வதும் மாணிக்கக் கிளியைத் தான் மாற்றவில்லை என நிறுவவேண்டிய கட்டாயத்தில் மக்களின் மதிப்பிற்கே பழகிய மனம் அதை இழவாமல் காக்க எதற்கும் துணியும் எனத் திட்டமிட்டுப் பொன்னரை வெள்ளாங்குளத்தில் மூழ்கி எழ ஒப்புதல் பெறுமிடமும், மக்கள் நலன் கருதும் மாயவரின் கண்முன் வயலில் பன்றிகளை மேயவிட்டு அவரை மனம்பதறச் செய்து தங்கள் சதியில் சிக்க வைப்பதும் என நூல் முழுவதும் எதிரியின் மனமறிந்து செயற்படும் உளவியல் நுட்பம் குவிந்து கிடக்கிறது.

கூற்றுமுறை (Focus-print)

கதைப் பின்னலைச் சுவையாக்கும் உத்திகளில் ஒன்றாகக் கூற்றுமுறை மாற்றம் அமைகிறது. பொதுவாக கதை முழுவதும் படர்க்கைக் கூற்றில் அனைத்துமறியும் ஆசிரியர் கூற்று முறையில் (Third Person - omniscient point of view) கூறப்பட்டாலும் ஆங்காங்கே பொருத்தமான இடங்களில் பாத்திரங்களின் கூற்றில் நிகழ்ச்சிகள் நீண்ட உரையாக அமைகின்றன. அலுப்பைத் தவிர்ப்பதுடன் பொருத்தச் சிறப்பையும் இப் போக்கு மாற்றம் வழங்குகிறது. சான்றாகத் தாமரையின் குழந்தைகளை ராக்கியண்ணன் காப்பாற்ற நேர்ந்த சம்பவத்தில், வெளிப்படையாக நடந்த நிகழ்ச்சிகள், வெறும் பார்வையாளரான மாயவரின் கூற்றில் சொல்லப்பட, யாருமறியாமல் திட்டமிட்டு ராக்கியண்ணன் செய்த செயல்களை அவர் வாயிலாகத் தாம் கேட்டறிந்ததாக மாயவர் கூறுவதும் அதன் பின்னரும் ராக்கியண்ணனின் தியாகம் தொடர்பானதும் வேறு யாருக்கும் தெரியவே முடியாததுமான நிகழ்ச்சிகளை மாயவரோ பிறரோ அறிந்திருக்க முடியாது என்பதுடன் ராக்கியண்ணனே கூறுவது தற்பெருமையாகத் தோன்றிக் கற்பவர் மனத்தில் அச்செயல்களால் ஆசிரியர் பதிக்க விரும்பும் மதிப்புணர்வை ஏற்படுத்தத் தவறிவிடும் என்பதால் அனைத்துக்கும் சாட்சியாக அன்றிருந்த வீரமலையின் கூற்றில் சொல்லப்படுகிறது. அதே போல் பெரிய காண்டியம்மன் வரலாற்றை ஓடக்காரன் கூற்றில் உணர்த்துவதும் நுட்பமான படைப்புத்திறன் எனலாம். பகுத்தறிவுப் பாசறையில் வளர்ந்த மனத்திற்குப் புராணக் கதைகளை - நம்ப இயலாதவற்றை - எழுதவும் கைவரவில்லை. அதே சமயம் கூறிவரும் வரலாற்றிற்கு இன்றியமையாததும் மக்களிடையே வழக்கில் இருப்பதுமான கதையைச் சொல்லாமல் இருப்பதோ மாற்றிச் சொல்வதோ முடியாது. எனவே தன் ஓடத்தில் ஏறிச் செல்லும் பல்வேறு மக்களின் உரை வழியே பலவும் அறியும் வாய்ப்புப் பெற்றவனும் அந்த மண்ணின் மைந்தனுமான ஓடக்காரன்

வரலாற்றைத் தெரிந்து வைத்திருப்பதும் தன் ஓடத்தில் ஏறுவோரிடம் தான் அறிந்தது பற்றி அளவளாவுவதும் மிகவும் பொருத்தம். நூல் முழுவதும் இவ்வுத்தி அருமையாகக் கையாளப்படுகிறது.

நடப்பியலும் நம்பகத்தன்மையும்

வரலாற்றுப் புதினமான இப் படைப்பின் கதை அமைப்பில் தொடக்க முதல் கடைசிவரை நிறையப் போர்கள் நிகழ்கின்றன. ஒவ்வொரு போரும் திட்டமிடப்படும் திறமும் நிகழும் விதமும் முடியும் வகையும் விளக்கமாக விரித்துரைக்கப்படுகின்றன. பொதுவாகப் படைப்பாசிரியர்கள் தாங்கள் அறிந்தவற்றை விரித்துரைப்பதும் அறியாதவற்றை நிகழ்ந்ததாகச் சொல்லி அமைவதுமே வழக்கம். அவ்வகையில் புனைகதைகள் புனைவோரை உணர்த்துவன என்றே சொல்ல வேண்டும். பொன்னியின் செல்வன் என்ற புதினத்தில் வரும் வந்தியத்தேவனின் பாத்திரப் படைப்பிற்கும் வேங்கையின் மைந்தன் என்ற புதினத்தில் இடம்பெறும் அதே பாத்திரப் படைப்பிற்கும் இடையில் சித்திரிப்பில் நுண்ணிய வேறுபாடு உண்டு. முன்னைய படைப்பில் பேச்சிலும் செயலிலும் அவன் நகைச்சுவை புலனாகும். பின்னையதில் அவன் செயல்கள் பிறரை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்தன என்ற ஆசிரியர் கூற்றே இடம்பெறும். புனையப்பட்ட பாத்திரம் ஒன்றே. ஆனால் புனைந்த மனங்கள் வேறு. அந்தந்த மனத்தின் இயல்பைப் பாத்திரப் புனைவு புலனாக்கும். அவ்வகையில் நோக்குகையில் இன்றைய அரசியலில் திறமுடைய மனம் அன்றைய போர் வியூகங்களைக் கற்பனை செய்ய இயன்றமை ஒரு சிறப்பு. இத்தகு புனைவுரைகள் பிற புதினங்களிலும் உண்டென்றாலும் போர்நூல்கள், பிற இலக்கியங்கள் ஆகியவற்றின் துணையின்றித் தன் சொந்தக் கற்பனையில் படைப்பதும் வெற்றி மட்டுமின்றித் தோல்வியும் சிலசமயம் காணவைக்கும் நடைமுறைப் பாங்கும் சிறப்பாகக் குறிப்பிடற்குரியன. புனைகதைத் தலைவர்கள் சாமானிய மனிதரை ஒத்தவர்கள். வெற்றி மட்டுமின்றித் தோல்வியும் அவர்க்குண்டு. இந்த உண்மை இக் கதையின் போர்ப் புனைவுகளில் இடம்பெற்றிருப்பது கதைக்கு இயல்புப் போக்கையும் நம்பகத் தன்மையையும் நல்குகிறது. நல்லவரும் வல்லவருமே வெல்லவேண்டும் என்பது நாம் விழைவதானாலும் அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான் கேடும் செந்நாப் போதாராலேயே நினைக்கப்பட்ட நிலைமைகள் அல்லவா? அதை இக் கதைப் பின்னலில் காணலாம்.

திட்டமிடும் திறம்

ஒரு படைப்பாளன், தான் எழுதவிருக்கும் கதையின் அடிப்படைச் சட்டம் தயாரானபின் முக்கியமான நிகழ்ச்சிகளைத் திட்டமிடுகையில் தான் எண்ணியுள்ள முடிவை நோக்கி நகரும் வகையில் நிகழ்ச்சிகளைப் பின்னுவான். அந்நிலையில் வலிந்து புனைவதாகத் தோன்றாத வண்ணம் அமைக்க வேண்டும். கற்போர் ஒன்றும் வகையில் சுவாரசியமாகவும் அமைய வேண்டும் அதிலும் வரலாற்றுக் கதைகளில் சதித்திட்டங்கள் திறம்படத் தீட்டப்படவேண்டும். இக் கதையில் அருக்காணி கவரப்படத் தீட்டப்படும்

திட்டம் மிக அருமையானது. தலையூர் மன்னனின் தளபதி பராக்கிரமன் வளநாடு சென்று அருக்காணியைக் கவர்ந்து வர வேண்டும். அதற்கு அவன் தீட்டும் திட்டம் நந்தரை வென்ற சாணக்கியனின் திறனுக்கு இணையானது. அவன் காதலி வடிவழகியைச் சோழ இளவரசியாக அறிமுகப்படுத்தி தான் அவள் பாதுகாவலன் போல உள்ளே நுழைய எண்ணுகிறான். ஆனால் என்னதான் வளநாடு சோழநாட்டின் நட்பு நாடு என்றாலும் அறிவிக்காமலும் அனுமதி பெறாமலும் யாரும் உள்ளே நுழைய முடியாது. அத்துடன் சோழ இளவரசி முன்கூட்டி அறிவிப்பின்றி வரமாட்டாள். எனவே முதலில் புலிக்கொடி பறக்கும் தேரில் பராக்கிரமன் தன் காதலியுடன் சென்று வளநாட்டு வாயிலை அடைகிறான். தடுக்கின்ற காவலரிடம் தயக்கம் இன்றிப் பேசுகிறான். அப்போது, முன்னரே திட்டமிட்டிருந்தபடி வீரர்களில் ஒருவன் சோழவீரன் போல் உடையணிந்து புலிக்கொடி ஏந்தி வருகிறான். சோழ இளவரசி வருகிறாள் என்ற ஓலையைத் தாங்கித் தான் முன்னே வந்ததாகவும் வழியில் தலையூரானின் வீரர்கள் தடுத்து ஓலையைக் கைப்பற்றிக் கொண்டதாகவும் தான் மட்டும் தப்பித்துச் செய்தி கூற ஓடிவந்ததாகவும் கூற ஓலையின்றியே உள்ளே நுழைந்துவிட முடிகிறது. இச் சதியின் அறிவுக் கூர்மை ஒரு புறம் இருக்க இப்படி நுழைபவர்கள் பராக்கிரமனும் வடிவழகியும் என்பது வாசகர்க்கே கூடத் தெரியாத வகையில் கதையைக் கொண்டு செல்வது மிகுந்த ஆர்வகலையை ஊட்டுகிறது. வந்தவனின் நடத்தை அருவருப்பையும் ஐயத்தையும் விளைத்தாலும் வீரமலை அகப்பட்டுக் கொள்ளும் போதுதான் விளங்குகிறது. இந்த நிகழ்ச்சியின் இறுதியில் சதித்திட்டம் புரிந்த பிறகும் கூட அருக்காணி கடத்தப்பட்டு விட்டதாகவே அனைவரும் நினைத்துக் கொண்டு இருக்கும் போது அருக்காணி அங்கே ஓடிவர அப்போதுதான் அவளுக்குப் பதில் குப்பாயியைக் கடத்திச் சென்ற செய்தி தெரிகிறது. இத்தகைய வியப்பும் திகைப்பும் ஊட்டும் இந்திர ஜாலங்கள் நிறைந்தது இந்த வளநாட்டுப்பரணி.

நாடா நடனத்திறன்

அனைத்திலும் சிறப்பாகச் சுட்டக்கூடியது கதைப் பின்னலை ஆசிரியர் முடித்திருக்கும் திறமை. சிக்கலைப் பின்னிவிடுவது சுலபம். சிடுக்கு விழாமல் அதைப் பிரிப்பதே கடினம். முன்பெல்லாம் மகளிர் கல்லூரிக் கலை நிகழ்ச்சிகளில் பெரு வழக்கில் இருந்த ஒரு நிகழ்ச்சி நாடா நடனம் (Ribbon Dance) வண்ண வண்ண நாடாக்களைச் சேர்த்துக் கொத்தாகக் கூரையில் கட்டியிருப்பார்கள். ஒவ்வொரு பெண்ணும் ஒரு நாடாவின் நுனியைப் பிடித்தவாறு மேடையில் ஆடவேண்டும். நீளமான நாடாவை ஏந்திக் குறுக்கும் நெடுக்குமாக ஒவ்வொருவரும் சுற்றி வருகையில் ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு விதமான வண்ணக் கோலத்தை நாடாக்கள் காட்டும். பல சிக்கலான கோலங்களைத் தந்து பிரமிக்க வைத்தபின் மீண்டும் ஒவ்வொருவரும் தம் கையில் பிடித்த நாடாவுடன் அவரவரின் பழைய இடத்திற்கே வந்து விடவேண்டும். யாராவது ஒருவர் தவறாக ஒரு திருப்பத்தை செய்துவிட்டலும் நாடாக்கள் சிக்கிக் கொண்டு கிழிந்து விடும். வலிந்து இழுத்தால் அறுபடும். மிக மென்மையாகப் பற்றினால் நழுவி

விடும். அளவான வன்மையுடன் பிடித்துத் திறமையாக ஆடினால் அழகுக் கோலமாக அமையும். அதைப் போலத்தான் இந்தக் கதைப் பின்னலும். கதை முடிவில் ஒவ்வொரு பாத்திரமும் ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு வகைக் குழப்பத்தில் சிக்கி நிற்கின்றனர். திறமையான ஒரு வடிவத்தை நாடா நடனத்தில் கொண்டு வந்த நிலை. பின்னிய சிக்கலின் முடிச்சுகள் அறாமலும் சிடுக்கு விழாமலும் அவிழ்க்க வேண்டும். அதைத் திறமையாகச் செய்கிறார் ஆசிரியர். இவ்வளவு சிறப்பான கதைப் பின்னலுக்கு இயல்பாற்றலாக அமைபவர்கள் கதையின் பாத்திரங்கள்.

பாத்திரப்படைப்பு

கதைக்கு விறுவிறுப்புத் தருவது கதைப் பின்னல்தான் என்றாலும் அந்தப் பின்னலில் - கதை நிகழ்ச்சிகளில்- கற்பவர் மனம் ஒன்ற வேண்டுமென்றால் பாத்திரங்கள் மனதில் பதிய வேண்டும். யாருடைய நாட்குறிப்பையோ படிக்கின்ற மூன்றாம் மனிதரின் மனநிலையில் விலகி நின்று விடாமல் தனக்கு வேண்டப்பட்ட மனிதரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளில் மனம் ஈடுபாட்டுடன் ஒன்றுவது போல் வாசகர் ஒன்றவேண்டும். பேருந்தில் பயணம் செய்கையில் வழியில் நிகழ்ந்த சாலை விபத்தைப் பார்க்க நேர்கிறது. பரிதாபப்பட்டாலும் பயணம் தொடர்கிறது. ஆனால் விபத்தில் சிக்கியவர் வேண்டியவர் என்றால் இறங்கிக் கவனிக்கிறோம். அறிந்தவர் தெரிந்தவர் அன்பிற்குரியவர் என்றால் தான். மனம் ஒன்றும். கதை மாந்தர் அறிமுகமாகும் போதே வாசகர் மனம் கவர்ந்து பதிய வேண்டும். அவ்வகையில் இப்புதினத்தில் அனைத்துப் பாத்திரங்களுமே அமைகின்றனர்.

அரிய பாத்திரங்கள்

புதினம் என்பது உரைநடைக் காப்பியம் என்று சொல்லப்படுவதை மெய்ப்பிப்பது போலத் தன்னிகரில்லாத் தலைவன் தலைவியர் கதை முழுவதும் காணப்படுகிறார்கள். தலைப்பில் இடம் பெறும் பொன்னரும் சங்கரும் வீரமும் தியாகமும் விளங்கப் பெற்றவர்கள். மூத்தவன் நிதானமும் விவேகமும் கொண்டிருக்க இளையவன் பதட்டமும் துடிப்பும் கொண்டவனாகிறான். தாமரை மறக்குல மங்கையாகக் குன்றுடையான் மரச்சாமியானாலும் மாண்புடைய சாமியாக இருக்கிறான். மாயவரும் ராக்கியண்ணனும் பொறுப்புள்ள மக்கள் தலைவர்களாக அமைகிறார்கள். வீரம் நல்லவர் கூட்டம் ஒருபுறம் என்றாலும் பழைய மரபில் தீமையே உருவான எதிர்த்தலைவர்களாக மாந்தியப்பன், செல்லாத்தாக் கவுண்டர், பராக்கிரமன், வடிவழகி ஆகியோர் உள்ளனர். தலையூர் காளியின் பாத்திரம் தடுமாற்றத்திற்குரியதாகிறது. ஆனால் ஆசிரியரின் படைப்புத் திறனும் அவன் பண்பு பற்றி அவர்தரும் விளக்கமும் (பக்.512) அவன்பால் பரிதாபம் கொள்ளச் செய்கின்றன.

வீரமலையின் படைப்பு குறிப்பிடத்தகுந்தது. பொதுவாகவே நாட்டுப்புறக் கதைகளிலும் பழைய வீரதீர சாகசக் கதைகளிலும் தலைவனை விட சிறந்தவனாக ஒரு நண்பன் அமைந்து துணையாகவும்

வழிகாட்டியாகவும் இருக்கக் காணலாம். பட்டி விக்கிரமாதித்தன் கதை என்று சேர்த்தே அழைக்கப்படும் அளவு பட்டி என்ற தோழன் விக்கிரமாதித்தன் கதையில் முக்கிய பங்கு வகிப்பான். பொருளதிகாரப் பாங்கனின் படைப்பும் தோழியின் படைப்பும் இவ்வகையில் எண்ணிப் பார்த்தற்குரியவை. இங்கும் வீரமலை அவ்வாறே அமைகிறான். எனினும் மற்றக் கதைகள் போலத் தலைவனையும் விஞ்சும் வீரமும் அறிவும் உடையவனாக ஆசிரியர் படைக்கவில்லை. பண்பும் நட்பும் தியாகமும் கொண்ட செம்மலாகக் காட்டுகிறார். எனினும் இவன் படைப்பு தனியே ஆய்வதற்குரியது.

சிறிய-சிறந்த பாத்திரங்கள்

இக்கதையின் சிறப்பே, தலைப்பில் இடம் பெறுவோரையும் தலைமைப் பாத்திரங்களாக்கித் தனித்து நிற்கச் செய்யாமல் இயல்பாக எல்லோருடனும் உலவவிட்டிருப்பதுதான். நடப்பியல் சான்ற புதினங்களில் தலைமக்கள் எனத் தனியே யாரும் அமைய மாட்டார்கள். வாழ்க்கையில் எல்லோருமே ஒரு வகையில் சாமானியர்கள் தான். அவ்வப்போது அவரவர் வாழ்க்கையில் சில முக்கியமான நிகழ்ச்சிகள் நடைபெறும்போது எல்லோருமே அசாதாரணமானநிலை பெறுகின்றனர். அவ்வளவுதான். ஒருவர் வாழ்க்கையில் நடக்கும் நிகழ்ச்சிகள் ஏதோ அவர்கள் மட்டுமே உலகில் இருப்பது போலவும் அந்த நிகழ்ச்சிகள் அவர்களை மட்டுமே பாதிப்பது போலவும் காட்டுவது - மற்றவர்களின் தொடர்பு இன்றித் தலைமை மாந்தரை மட்டுமே தனியே காட்டுவது - உருப் பெருக்கியினை கீழ்வைத்து ஆய்வுத் தகடுகளைப் பார்ப்பது போன்றது. ஆய்வுக்கு அத்தகைய தனிமைப்படுத்தல்கள் (isolation) அவசியம். ஆனால் வாழ்வில் அவை மனிதரை அந்நியப்படுத்தி (alinate) விடும். எனவே, எப்படி நிஜ வாழ்க்கையில் ஒருவர் பலர் சூழ வாழ்ந்துவர, அவர் வாழ்க்கை நிகழ்ச்சிகள் ஊரின் ஒரு பகுதியில் தெருவின் ஒரு ஓரத்தில் நடப்பதாக இருக்கச் சுற்றிலும் மற்றவர் வாழ்க்கையும் இயல்பாக நடந்துவர, இவர்கள் வாழ்க்கை நிகழ்ச்சிகளும் இவர்களை மட்டுமன்றி இவர்களைச் சுற்றி நிற்பவர்களையும் குளத்தில் வீழ்ந்த கல் சுற்றிலும் அலையெழுப்புவது போல் பாதிக்க, ஒரு சாவித்துளை வழியே காணும் அறையானாலும், ஒரு சாளரத்தின் வழியே காணும் வீடானாலும் முழுமையான காட்சியாக அமைவது போலவே கதையிலும் அமைய வேண்டும். இந்தக் கதையில் அந்தப் போக்கு உண்டு. எவ்வளவு முயன்றாலும் எவ்வளவுதான் வேண்டாதவற்றை விலக்கிப் பார்த்தாலும் பொன்னர்-சங்கரின் கதையாக மட்டும் இதைக் காணவே முடியாது. அனைத்துப் பாத்திரங்களும் பிரிக்க முடியாமல் பிணைந்து நிற்கிறார்கள். சங்கரின் குதிரையைக் கூட விட்டுவிட்டுக் கதையைச் சொல்ல முடியாது. சிறப்பாகக் கட்டிய வீட்டில் ஒவ்வொரு செங்கலும் ஒரு பகுதியாகிக் கட்டமைப்பில் பங்கு பெறுதல்போல எல்லாக் கதைமாந்தரும் இதில் இன்றியமையாப் பங்கு பெறுகின்றனர். யாருக்கும் முக்கியத்துவம் கூடுதலாகவோ குறைதலாகவோ இல்லை. ஒரு சில காட்சிகளில் வரும் குப்பாயி - ஒரு சில பக்கங்களே இடம் பெறும் ஒற்றன் - ஒரே காட்சியில் இடம்பெறும் செம்படவனின் தாயார் - ஒரு சில வரிகளில் மட்டும் இடம்

பெறும் வாங்கலாயி என அனைவருமே கதைக்கு முக்கியமானவர்கள். அவர்களை விட்டுவிட்டு அவர்கள் பங்கை ஒதுக்கிவிட்டுக் கதையை என்ன, கதைச் சுருக்கத்தைக் கூடச் சொல்ல முடியாது.

இன்றைய நிஜமான சமத்துவபுரங்களின் அன்றைய நிழலாக அமைகிறது இக்கதையின் பாத்திரப் படைப்பு.

பாத்திரப்படைப்பின் வெற்றிக்கு அடிப்படையாக அமையும் ஒரு விஷயம் மனத்தை நெகிழ்விக்கும் இனிய உணர்வுகளின் சித்திரிப்பு. அதில் விளையும் உலகப் பொதுமை உணர்வே கதையின் வெற்றிக்கு வித்திடுகிறது.

20 கலைஞரின் பொன்னர்-சங்கர்: கருப்பொருளும், கலைவடிவமும்

- முனைவர் கா. செல்லப்பன்

புதினங்கள், வாழ்வின் சாதாரணத்துவத்தை ஏற்ற உரைநடைக் காப்பியங்கள் (Comic epic poems in Pross) என்று ஆங்கிலப் புதினங்களின் தந்தையான பீல்டிங் குறிப்பிட்டுள்ளார். வரலாற்றுப் புதினங்கள் வாழ்வின் அகன்ற பரிமாணத்தைப் பிரதிபலிப்பதனால் அவற்றில் காப்பியத் தன்மை மிகுதி. கலைஞரின் வரலாற்றுப் புதினங்களில் வரலாறு புதுமைபெறுகிறது; உரைநடை, காப்பியமாகிறது. கதைப்பின்னலும், கவிதை நடையும், ஒரு வீர வரலாற்றில் ஒளிந்திருக்கும் மௌனக்கவிதையையும், வாழ்வுத் தத்துவத்தையும் வெளிக்கொணர்கின்றன. வரலாறுபடைக்கும் கலைஞரின் வரலாற்றுப் புதினமான பொன்னர்-சங்கரின் கட்டுக்கோப்பும் (structure) நடையும் (style) அவரது வரலாற்று வாழ்வியல் தத்துவத்தின் கலை வடிவங்களாகக் காட்சியளிக்கின்றன என்பதைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

இலக்கிய நூல்கள், வரலாற்றுப் புதைபொருள்களல்ல; கடந்த காலத்தின் நிகழ்கால நிழல்கள் -not documents, but monuments என்பார் ஆங்கிலத் திறனாய்வாளர் ரெனேவெல்லக். அதிலும் குறிப்பாக வரலாற்றுப் புதினங்களை மார்க்சீயச் சிந்தனைப்படி ஆராய்ந்த லூக்காஷ் (Lucacs) என்பவருமே, வரலாற்றுப்புதினங்கள், வர்க்க பேதங்கள் வரலாற்றில் வளர்ந்ததைக் காட்டினாலும் அந்த பேதங்களுக்கும் அப்பால் அடித்தளமாயிருக்கும் வரலாற்றுச் சக்தியைக் காட்டுவதாகக் குறிப்பிடுகிறார்.

கலைஞர் கூற்றிலே கூறுவதானால் தமிழக வரலாற்றிலே ஏறத்தாழ முந்நூறு அல்லது நானூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட காலக்கட்டத்தில், "வெளிநாட்டார் காலடி எடுத்துவைப்பதற்கு முன்பு, - உள்நாட்டார் சின்னஞ்சிறு அரசுகள் நிறுவி ஆட்சி செலுத்தி அவற்றையும் பெருமளவு இழந்த நிலையில் தான் இருண்டு கிடந்த தமிழகத்தின் ஒரு பகுதியில் ஒளிக்கீற்றாக இந்த வீரவரலாறு நிகழ்கிறது."

வரலாற்றுத் தளத்தில் உருவான இந்தக் கற்பனைக் கலைக்கோயிலின் கட்டுக்கோப்பு, அடித்தளத்தின் அடியில் ஒளிந்திருக்கும் உண்மை வரலாற்றுத்துவத்தை வெளிக்கொணர்வதாகவே அமைந்துள்ளது. அப்போது அது இருண்ட வரலாற்றை நிகழ்கால வெளிச்சத்தில், அதன் கரடு முரடான பாதையைக் கலைவண்ணத்தில் தருகிறதே தவிர, வரலாற்றை மாற்றவில்லை.

எந்த உயிர்ப்படைப்புக்கும் கருவாக ஒரு பார்வை, ஒரு கனவு அமையும். கலைஞரின் அடிப்படைக்கரு, கனவு (theme) இழையோடும் அடிநாதம், இந்தக் கதை நிகழ்வுகளின் ஊடுபாயும் உயிர்ச்சக்தி அவற்றை முன்னிட்டுச் செல்லும் உந்து சக்தி பல்வேறு சாதிப்பிரிவுகளாக வாழ்ந்த கொங்கு மக்களுக்கிடையே இருந்த பகையுணர்வு அன்று; மாறாக வேளாளர் பெருங்குடியொன்றில் விளைந்த பங்காளிக் காய்ச்சலே என்பது தெளிவு. கலைஞரின் இந்த வரலாற்று விளக்கம் (interpretation of history) அவரது வாழ்வியல் வரலாற்றுத் தத்துவத்துக்கு ஏற்ப அமைந்துள்ளது. இப்படி அவர் அமைத்ததின் நோக்கம் தமிழ்ச் சாதியினர் ஒருங்கிணைந்து வாழவேண்டும் என்ற அவரது கவலையையும் காட்டுகிறது. சிலப்பதிகாரத்தின் மூன்று காண்டங்களும் பிரிந்த தமிழகத்தின் முக்கூறுகளைப் பற்றித் தனித்தனியே பேசினாலும், முழுக்காப்பியமும் தமிழக ஒருமைக்கனவின் வெளிப்பாடாக அமைந்துள்ளமையை இங்கு நினைவுகொள்வது நல்லது. உலக வரலாற்றிலும், இனவெறி, மதவெறியைவிட, குடும்பங்களுக்கு இடையே உள்ள பகைதான் ஆழமானதாயும், நிரந்தரமானதாயும் இருப்பதை நாம் உணர்கிறோம். எனவே கதையிலே, வேட்டுவர் தலைவர் தலைக்காளி, எதிர்த் தலைவனாக, முற்றிலும் தீயவனாகக் காட்டப்படவில்லை. அவனை ஆட்டிவைக்கும் அழிவுச் சக்திகள் குன்றுடையாரின் உறவினர்களான செல்லாத்தாக் கவுண்டரும் அவர் மகன் மாந்தியப்பனும்தான். கதையின் மையம் பொன்னர் சங்கர்தம் வீரம்; அதற்கு முன்னோடியாகக் குன்றுடையான் கதை பேசப்படுகிறது. குன்றுடையான் தாமரை நாச்சியார் திருமணத்தில் அரும்பிய பகை, பொன்னர் சங்கர் திருமணத்திற்குப் பிறகும் தொடர்கிறது. தாமரை நாச்சியாரின் உறுதியால் அவள் மணந்த நெல்லியங்கோடனின் குழந்தைகளான பொன்னர் சங்கரை குழந்தைகளாகவே, அழிக்கும் முயற்சியினை ராக்கியண்ணன் போன்றோர் முறியடிக்கிறார்கள். அவள் நெல்லியங்கோடனை மணக்கத்துடித்தபோது, அவளது தந்தையும் உடன்பிறப்பு சின்னமலைக் கொழுந்துவும் செய்த அநீதிக்கு எதிராக அவள் பூண்ட சபதம் தான்-கதையின் முதல் தொகுப்பு- "ஆனால் ஒன்று அண்ணா; என் சகோதரனான உன் முன்னால்; என்னைப் பெற்றெடுத்த தன் தாயின் மேல் ஆணையாக-தந்தைமேல் ஆணையாகச் சொல்கிறேன், பந்த பாசம் இன்றோடு முடிந்துவிட்டது என்றாயே; நிச்சயம் முடியாது!. முடியவே முடியாது. சீர்வரிசையை வைக்கவீடு வாசல் கிடையாது என்று கிண்டல் செய்த என் அண்ணனே; நானும் என் அத்தானும் மாட மாளிகையில் இருப்பதை நீ பார்க்கத்தான் போகிறாய். பந்தபாசம் எரிந்துவிட்டது என்ற என் அருமைச் சகோதரனே; நான் பெற்றெடுக்கிற சிங்கக்குட்டி மகனுக்கு-உன்பெண்ணைக் கட்டிவைக்க நீ வந்து என்னைக் கெஞ்சத்தான் போகிறாய்!" என்ற தாமரையின் சபதம் இந்தக் கதைத் தேரின் அச்சாணி. சின்னமலைக் கொழுந்தின் பதில் பெண்மைவழியாக வெளிப்படும் உறவுகளின், உணர்வுகளின் எதிர்ச்சக்தியான ஆணுருவில் அரசியல் மதிப்பீடுகளின் வெளியீடாக விளங்குகிறது.

இந்தக் கதையின் கட்டுக்கோப்பின் அடுத்த தளத்தில் பொன்னர் - சங்கர் அறிமுகப்படுத்தப்படுகின்றனர். அவர்கள் எடுத்த எடுப்பிலேயே செல்லாண்டியம்மன் கோயில் ஆற்றில் கரகம் விடும் விழாவில் வெள்ளத்தில் சிக்கிய சின்னமலைக்கொழுந்துவின் பெண்கள் முத்தாயியையும் பவளாயியையும் வெள்ளத்திலிருந்து வீரத்தால் விடுவிக்கிறார்கள். இப்போது வீரம், காதலில் முழுமைபெறுகிறது. கதையிலும் வீரப்போர் வரலாறு, காதலால் சிக்கலாகிய பின் மனித உணர்வுகளால் மெருகேறுகிறது. முரட்டுத்தனமான வீரமும் ஆண்மையும் மாத்திரமே குடிகொண்ட பொன்னர்-சங்கர் இருவரின் முகங்களிலும், பாசமும் அன்புப் பிரவாகமும் மலர்ந்ததை 'ஒரு பாறையின் மீது படர்ந்த பனிப்படலம் போல் கெட்டியாகப் படிந்தது' எனக் கதாசிரியர் குறிப்பிடுவது, இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தக் காதல் நிறைவேறுவதற்கு இடையூறாக முதலில் தாமரை நாச்சியாரின் சபதம் - தன் பிள்ளைகளுக்குத் தன் தமையனின் பெண் குழந்தைகளைத் திருமணம் செய்து கொள்ளுவேன்- என்ற பழைய வாக்கு வருகிறது. ஆனால், மாயவர் வழிப் பழைய வரலாற்றுக்கு இட்டுச்சென்று பொன்னர்-சங்கர் தாம் அவளது ஆண் மக்கள் என உணர்த்தி அதே சமயத்தில், இப்போது, அவர்களது ஆசானின் சபதம்-பொன்னரும் சங்கரும் அவர்களுக்காக தம் குழந்தைகளைத் தியாகம் செய்த ஆசான் ராக்கியண்ணனின் சபதத்தை நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந்தம், அவர்கள் திருமணத்துக்குத் தடையாக அமைந்தது. ஒருபக்கம் தியாகத்தின்-காதலாலும் உந்தப்பட்ட வீரத்தின், வஞ்சினத்தின் உருவகமாக பொன்னர் சங்கரும் அவர்களது தங்கை அருக்காணித் தங்கமும் காட்சியளிக்கின்றனர். மறுபக்கம் தோல்வியினாலும், காம உணர்வுகளாலும் வன்மம் பெற்ற வஞ்சகத்தின் உருவமாக செல்லாத்தாக் கவுண்டரும் அவர் மகனும் உருவாக்கப்படுகின்றனர். அவர்களை, நல்ல உளநூல் ஆய்வுகளாகவும் (psychological species) சாத்தான், குடிலன், சகுனி போன்ற பழைய மூலப்படிவப் பாத்திரங்களின் (archetypes of evil) புதிய வடிவங்களாகவும் கொள்ளலாம். இயல்பிலே நல்லவனான வேட்டுவத் தலைவன் தலையூர்காளி தருமத்தைப் பற்றிய சிந்தனைக்கும் - தந்திரக்காரர்களின் அணுகுமுறைக்கும் இடையே ஊசலாடும் தீமைக்கு இணங்கிப்போகும் பாத்திரமாகப்படைக்கப்பட்டுள்ளான். இந்தக் கதையின் எதிர்த்தலைவனாக அவன் காட்டப்பட்டிருந்தால் இது வேளாளர்வேட்டுவர் சாதிச்சண்டையாக உருவாகியிருக்கும். பொன்னர் சங்கர் குன்றுடையானின், குழந்தைகள் தாம் என்ற செய்தி, தீயவர்களின் தீய உணர்வுக்கும் பொறாமை உணர்வுக்கும் மேலும் தீனிபோடுகிறது. அவர்கள் தலையூர்க்காளியின் துணையுடன் படையெடுத்து வருகிறார்கள். அந்தப் போரில் பங்குபெறும் பொன்னரும் சங்கரும், பிரம்மச்சரியத்துக்கு ஊறில்லாமல் முத்தாயி, பவளாயியை மணம் செய்துகொள்கிறார்கள். பிறகு உறையூர்ச் சோழனின் துணைபெற்றுப் போரிடும்போது, சூழ்ச்சி தாமரை நாச்சியாரைப் பலிகொள்கிறது. ஆனால் அவள் உயிரோடு, குன்றுடையான் உயிரும் இணைந்து பிரிகின்ற காட்சி, அற்புதமான தியாக வரலாற்றின் மணிமகுடமாக, அன்பைப்பிரிக்கும் சக்தி

மாந்தியப்பனின் சூழ்ச்சிக்கு மட்டுமின்றி, சாவுக்கே கிடையாது என்பதை உறுதிப்படுத்துகிறது. மரச்சாமியான குன்றுடையானின் பாத்திரத்தின் தனித்தன்மை கதை முழுவதும் நயமாக காட்டப்பட்டுள்ளது.

மாயவன், ராக்கியண்ணன், குப்பாயி என்ற பல இரண்டாம் நிலைப்பாத்திரங்கள் (secondary characters) மிக நுண்மையாகவும் திண்மையாகவும் படைக்கப்பட்டுள்ளனர். மாயவர், தீயவர்கள் கூடாரத்திலிருந்து, விலகி அறத்துக்குத் துணைசெய்யும் மூலப்படிவங்களின் (archetypes) வழி உருவாக்கப்பெற்ற, ஒரு மனிதப் பாத்திரம். எல்லா மனிதத் தியாகங்களையும் மிஞ்சும்படியாக, ஒரு ஊமைப்பிராணி படைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தக் கதையின் ஆழ்நிலை சக்தியாக விளங்குவது பெண்பாத்திரங்கள்தாம்-ஆண்களின் வீர வரலாற்றை மேலெழுந்த வாரியாகச் சொன்னாலும், அவற்றின் அடித்தளமாக பெண்மையினைக் காட்டுவதில், கலைஞர் சிலம்பு வழிச்சென்றமை தெளிவாகிறது. தாமரை நாச்சியாரின் உறுதி, அருக்காணிதங்கத்தில் முழுமை பெறுகிறது, அவள் எடுத்த எடுப்பிலேயே அண்ணன்மாரில்லாத குறையை நிறைவேற்றத்துடிக்கும் வீரமகளாகக் காட்சியளிக்கிறாள். “இழந்துவிட்ட அண்ணன்மார்கள் இருவரின் வலிமையையும், துணிவையும், நான் ஒருத்தி ஏன் பெறக்கூடாது? நம்மைப் பழிவாங்குவதையே குறிக்கோளாகக் கொண்டு அலையும் செல்லாத்தாக் கவுண்டர் குடும்பத்தையும் அவர்களுக்குத் துணை நிற்கும் தலையூர் ஆட்சியையும் இனிநானே எதிர்த்துப் போராட எனக்கு அனுமதி கொடுங்கள்! இன்று நடந்துவிட்ட இந்த அக்கிரமமான நிகழ்ச்சிக்குப் பிறகும் பொறுமையாக இருப்பது கோழைத்தனம். அநியாயத்தை எதிர்த்து நாம் நடத்தப்போகும் தர்மயுத்தத்தில் நமது குடும்பமே பூண்டற்றுப் போனாலும் சரி; ஒரு புனித காரியத்துக்காக அழிந்து போனோம் என்று எதிர்கால வரலாறு நமக்காக ஒரு புதிய அத்தியாயத்தைச் சேர்க்கட்டும். அனுமதி கொடுங்கள்.” என்று வீரமுழக்கம் இடுகிறாள். தன் பெற்றோர் இறந்தபின் ஆணுடைதரித்து, வாள்வீசி, தனக்காக துன்பத்துக்கு ஆளான குப்பாயியை மீட்கத் துணிகிறாள். இக்காட்சியிலும், தமிழ்ப் பெண்மை, ஆண்மையின் ஆற்றலை வெளிப்படுத்த விழைவதின் உருவாக்கத்தையே காண்கிறோம். அவள் பிரளயம் ஒன்று பெண் உருக்கொண்டது போல் களம் நோக்கி நடந்தால் எனப்பேசப்படும் போது கண்ணகி, பாரதிதாசனின் தமிழச்சி ஆகிய தமிழ் நாகரீகத்தின் வீரப்பெண் மூலப்படிவத்தின் பிரதியாகக் காட்சியளிக்கிறாள். தங்களின் மானத்தைக் காக்க உயிர்நீத்த அண்ணியார்களின் சாவு மேலும் அவளை அனலாக்குகிறது. அப்போது தன் குடும்பத்துக்கு ஏற்பட்ட துயரைவிட அதனால் மக்களுக்கு ஏற்பட்ட சீரழிவினை நினைத்து அவள் வருந்துவதாகக் காட்டப்பட்டிருப்பது கண்ணகி மரபிலும் ஒரு புதிய வளர்ச்சியினைக் காட்டுகிறது.

அதேபோல சங்கரின் வீரமரணம், தமிழக வீரவரலாற்றின் ஒரு புதிய அத்தியாயமாக விளங்குகிறது. ‘சேரன் செங்குட்டுவன் போன்ற, வீரர்கள் பிறந்து வாழ்ந்து புகழ்செதுக்கிய இந்தத் தமிழ் மண்ணில் முதுகிலே

காயம்பட்டல்ல, நெற்றியிலே பட்ட விழுப்புண்ணுக்காக நாணிய ஒருவன், போர்க்களத்தில் தன்னுயிரை மாய்த்துக்கொண்டு வீரமரணம் அடைந்தான்-அவன் பெயர் சங்கர். . . என்று எதிர்கால வரலாறு பேசட்டும் என்று தன்னை மாய்த்துக்கொள்ளும்போது அதற்கு தளபதிகள் தயங்கும்போது அவர்களுக்கு ஆணைபிறப்பிக்கும் கட்டம் ஷேக்ஸ்பியரின் அந்தோனியின் கடைசி காலக்காட்சியை நினைவுபடுத்துகிறது. இறுதியாக அவன் மறைவுக்காகத் தன்னைமாய்த்துக்கொள்ள அருக்காணித் தங்கம் துடிக்கும்போது, 'இதோ வீழ்ந்து கிடக்கிற இரு தரப்பு வீரர்களையும் பார்க்கும்பொழுது - அவர்களில் ஒருவனாகத்தான் தம்பி சங்கரை நான் கருத வேண்டும்! வீரமலையை-வையம் பெருமானை - நான் அப்படித்தான் கருத வேண்டும்!. நமது வளநாட்டுக்காக உயிர்கொடுத்த வீரர்களின் பெயர்கள்- ஆம் பலரது பெயர்கள் பிரபலமானவைகளாக இல்லாமல் இருக்கலாம்! ஆனால்-சொந்த மண்ணின் மானங்காக்க உயிர் கொடுத்த எல்லாவீரர்களையும் நான் என் தம்பி சங்கராகத்தான் கருதுகிறேன். அருக்காணி! நீயும் என்னைப் போலத்தான் கருதவேண்டும் - இந்தப்படுகளத்தில் உயிரற்றுக் கிடக்கும் எண்ணிறந்த உடல்களில் சங்கரின் உடலுக்கு மட்டும் தனித்தன்மை காட்டி அழுது புலம்புவது சரியல்ல! இப்படி நான் சொல்வதால் சங்கராகட்டும், வையம் பெருமானாகட்டும், எல்லோருடனும் சேர்த்து எண்ணக்கூடிய சராசரியான வீரர்கள் என்று அர்த்தமல்ல! பேராற்றல் பெற்ற போர்வீரன் என் தம்பி-சங்கர்-அதனால் தான் தலையூர்க் காளியை யுத்த களத்தை விட்டே அவனால் ஓடச்செய்ய முடிந்தது. இருப்பினும் நமது நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்தவர்களில் அவனும் ஒருவன் என்ற பட்டியலில் தானே இடம் பெறுகிறான்! அவனுக்கு நானோ, அல்லது நீயோ தனி முக்கியத்துவம் அளித்துத் துக்கப்பட்டால் இந்தப் படுகளத்தில் சிதறிக்கிடக்கும் அத்தனை வீரர்களுக்காகத் துயரப்பட யார் இருக்கிறார்கள்?' என்று பொன்னர் கூறும் மொழிகளில் வீரர்கள் அத்தனை பேரையும் ஒரு குடும்பத்தினராக்கும் ஒரு புதிய வீரமரபும் உருவாகிறது. அருக்காணியின் உயிர், அண்ணன் சங்கர் உயிரோடு உடன் சென்றதும் பொன்னரும் தன்னை மாய்க்கத் துணிகிறபோது, சோழ அரசன் வழியாக, அது தடுக்கப்படுகிறது. அப்போதும் உறவினர் பாசத்தைவிட மக்கள் பணிமேல் என்ற தத்துவம் நிலைநாட்டப்படுகிறது. தம்பியின் வீரத்துக்கும் தங்கையின் பாசத்துக்கும் நினைவுச்சின்னமாகப் போர்க்களம் நிலைப்பதோடு புதிய ஆட்சி-வேட்டுவர் துணையோடு கொங்குவேளிர் ஆட்சி-தொடர்கிறது. அப்போது பொன்னர்-சங்கர் சாவால் பிரிக்கப்படினும், சரித்திரத்தில் இருவரும் ஒருவராகவே வாழ்வார்கள் என்ற கருத்தும் நிலைநாட்டப்படுகிறது.

இந்தப் புதினத்தின் அடித்தளம் நாட்டார் வரலாறு. அது புராணீயத் தன்மை கலந்து, விந்தை நிகழ்ச்சிகள் நிறைந்த கற்பனையிலே வீரக் கதையாக, (romantic heroic tale) மக்கள் வாய்வழிக் காப்பியமாக வளர்ந்தது. அதை வாழ்வோடு இணைந்த வரலாற்றுப் புதினமாக கலைஞர் மாற்றியுள்ளார். கதையின் அதிசய நிகழ்ச்சிகள் மாற்றப்பட்டுள்ளன. இந்த

உரைநடைக் காப்பியத்தின், வரலாற்றுக் கரு, கலைஞரின் கற்பனை வண்ணம் பெற்று சிலம்பு, திருக்குறள் ஆகியவற்றின் வாழ்வியல் தத்துவத்தின் விளக்கமாக விளங்குகிறது. இக்கதையின் முக்கியப் பாத்திரங்கள், செல்லாண்டியம்மன் போன்ற தெய்வங்களோடு இணைக்கப்பட்டுள்ளன. ஆனால் கலைஞர் பார்வையில் அவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுகிறார்கள். குறளோவியத்தில் கடவுள் வாழ்த்தையும், வையத்துள் வாழ்வாங்கு வாழ்தலையும் இணைத்து, இறைவன், மனிதனின் உயர்ந்த நிலை எனக்கூறுவது இங்கு ஒப்புநோக்குதற்குரியது. முதலிலே அம்மன்கோயில் கரக விளையாட்டின்போது, முத்தாயியும், பவளாயியும் இரண்டு தெய்வங்கள் போல் இருந்ததாகப் பேசப்படுகிறார்கள். பிறகு அருக்காணியும் தெய்வத்தன்மை பெற்றுவிடுகிறாள். பொன்னரும் சங்கரும் கற்பரசியான அருக்காயின் உற்ற தோழனான வீரபாகு சாம்புவனும் கோயிலில் வழிபடும் தெய்வங்களாக மக்கள் மனத்தால் மாற்றப்படுகிறார்கள். அவர்கள் இனம் கடந்த மனிதப்பண்பின் விளக்கமாக உயர்ந்ததனால், எல்லா மக்களாலும் வழிபடப்பட்ட, குழுத்தெய்வமாக அல்லாமல், இன, பொது மனிதப்பண்புகளின் எடுத்துக்காட்டாக உயர்ந்தனர்.

கலைஞர் புராணீயத்தில் புதைந்துகிடக்கும் மாட்சிமைமிக்க மனித வரலாற்றைக் கற்பனையில் அகழ்ந்தெடுத்துத் தந்துள்ளார். அண்ணன்மார் கதை, பழைய மரபில், நாட்டார் இலக்கியம் என்றால், பொன்னர்-சங்கர் பழைமைத் தளத்தில் நிறுவப்பெற்ற, புதிய உலகத்தின் புதினவகையில் மக்கள் இலக்கியமாக மலர்கிறது.

இப்புதினம் ஒரு . சமுதாயத்தின் சரித்திரமானதால், அவர் தம் பண்புகளின் நினைவுச் சின்னமாய் நிலைபெறுகிறது.

21 கலைஞரின் பாயும் புலி பண்டாரக வன்னியனில் சுந்தரலிங்கம்

முனைவர். தே.ஞானசேகரன்

கலைஞர் கருணாநிதி அவர்கள் எழுதிய பாயும்புலி பண்டாரக வன்னியன் நாவலில் இடம்பெறும் இந்தியச் சுதந்திரப் போராட்ட வீரர் தளபதி சுந்தரலிங்கக் குடும்பனாரின் பாத்திரப் படைப்புத் திறம் குறித்தும் இந்நாவல் நடைபெற்ற காலமாகிய இந்தியச் சுதந்திரப் போராட்டக் காலத்தின் சில வரலாற்றுக் குறிப்புகளையும் இக்கட்டுரை சுட்டிக்காட்ட முயல்கின்றது.

வரலாற்று நாவல் விளக்கம்

நாவலுக்கு கால எல்லை எதுவும் இல்லை. ஆனால் வரலாற்று நாவலுக்குக் காலம் உண்டு. வரலாற்று நாவல் என்பது வரலாற்றில் காணப்பெறும் மாந்தர்களையும் நிகழ்ச்சிகளையும் அதன் பின் புலத்தையும் பயன்படுத்தும் நாவல் வகையாகும். வரலாற்று நாவல்கள் ஏன் தோன்றுகின்றன என்பதற்கு . . . . சமூகத்தின் மிக நெருக்கடியான கட்டங்களில் பொது ஜன உணர்வு கொந்தளித்து நிற்கும் நிலையில் வரலாற்றுப் புதினங்கள் தோன்றுகின்றன என்று எஸ். தோதாத்ரி குறிப்பிடுவதாகச் சிற்பி சொல்லுகிறார். இவ்விளக்கத்திற்கேற்ப தமிழ்ச் சமூகங்களிடையே சாதிய உணர்வு தலை தூக்கி ஒருவரை ஒருவர் வெட்டி சாய்க்கும் இன்றைய அவல நிலைகண்டு வருந்திய கலைஞர் தேவேந்திரர், தேவர், வன்னியர் ஒற்றுமையை வலியுறுத்த இவர்களின் முன்னோரின் வரலாற்றைக் கற்பனை கலந்து ஒரு வரலாற்றுப் புதினமாக உருவாக்கியுள்ளார் எனலாம்.

இந்நாவலின் கதைக்கரு

தமிழகத்தில் எந்த அளவுக்கு வீரபாண்டியக் கட்டபொம்மன் வெள்ளையரை எதிர்த்துப் போராடி தன் உயிரைத் தியாகம் செய்தானோ- அதைப் போலவே இலங்கை வன்னி நாட்டில் 'உண்டேல் சுதந்திரம் 'இன்றேல் இல்லை வாழ்வு' என்ற கோஷத்தை முன்வைத்து தனது இறுதி மூச்சு வரையில் போராடி உயிர்விட்ட தியாகி மாவீரர் பண்டாரக வன்னியன். இவர் தமிழ்நாட்டில் ஏற்பட்டுவந்த அரசியல் நிலவரங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் கொண்டிருந்ததுடன், கட்டபொம்மனின் படைத் தளபதிகளில் ஒருவரான சுந்தரலிங்கத்துடன் நட்பாடியவர். இந்த இரண்டு வரலாற்று விதைகளை மட்டுமே கருவாகக் கொண்டு 466 பக்கங்கள் கொண்ட மிகப்பெரிய வரலாற்று நாவலைப் படைத்துள்ளார் டாக்டர். கலைஞர் மு.கருணாநிதி அவர்கள். இந்நாவலுக்கு அணிந்துரை எழுதியுள்ள பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் வருமாறு குறிப்பிடுவதும் இந்நாவல் எழுந்தமைக்கான காரணமாக அமையும். "தமிழர்கள் வரலாற்றுச் செய்திகளைக் குறித்து வைப்பதிலோ, முன்னோர் வரலாற்றைப் போற்றி அறிந்து கொள்வதிலோ

ஆர்வம் அற்றவர்கள். அதன் விளைவு அவர்தம் வரலாறு, சிதைந்த சித்திரமாகத்தான் கிடைக்கிறது. அதனால் தமிழர்கள் தம்மை ஒரு வரலாற்றுப் பெருமை கொண்ட இனமாக மதித்திடவும் அறியாதவராயினர். இனவுணர்வு மங்கிய சமூகத்தில்தான் ஒற்றுமை அரிதாகி, பொதுநலமும் தம்மவர் உரிமை வாழ்வும் காக்கும் உணர்வு மங்கி துரோகம் தலை தூக்கும். தமிழர்தம் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது இனவுணர்வு கொள்ளாமையே என்று தெளிவர்." (பாயும்புலி பண்டாரக வன்னியன், அணிந்துரை) இவ்வாறு தமிழர்களிடம் இனவுணர்வு குறைந்து, தற்காலத்தில் ஒருவருக்குள் ஒருவர் மோதிக் கொள்வதைத் தவிர்த்து, அவர்களுக்குள் இன ஒற்றுமையை வளர்க்க வேண்டும் என்பதான சூழலில் தேவேந்திரர்-தேவர்-வன்னியர் ஒற்றுமையை ஒளிவிடச் செய்யும் நோக்கில் எழுதப்பட்டதே இந்நாவல் என்றும் சொல்லலாம்.

இந்தியச் சுதந்திரப் போர் சில வரலாற்றுக் குறிப்புகள்

கட்டபொம்மனுடன் இணைந்து போராடிய தளபதி சுந்தரலிங்கக் குடும்பனார் போன்று பல மள்ளர் குல வீரர்கள் அக்காலத்தில் போராடிய வரலாறுகள் குறித்த செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன. இவ்வரலாற்றுச் செய்திகள் ந. இராசையா எழுதிய 'விடுதலைப் போரில் தாழ்த்தப்பட்டோரின் பங்கு', எனும் நூலில் காணப்படுவதாகும். பூலித்தேவன் படையில் தளபதியாக இருந்த தளபதி பெரியகாலாடி, கான் சாகிபுடன் நடந்த போரில் வீரமரணம் அடைகிறார். இவர் மாண்ட இடம் காலாடி மேடு என்று அழைக்கப்படுகிறது. நெற்கட்டான் செவல் கோட்டையில் தளபதி பெரிய காலாடிக்கு நடுகல்நாட்டி 'பூலித்தேவன் சிறப்புச் செய்திருப்பதும் குறிக்கத்தக்கது. இதேபோன்று மருதுபாண்டியர், ஊமைத்துரையுடன் இணைந்து போராடிய குலசேகரப் பட்டினம்' என்பவரை 1801ம் ஆண்டு ஆங்கிலேயர் 'பிரின்ஸ் ஆப் வேல்சிற்கு' நாடு கடத்தினர். இதில் குறிப்பிட்டுள்ள மூப்பன் என்பவர் தேவேந்திர குல மள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர் என்றும் திருச்சி, தஞ்சை பகுதியில் வாழும் தேவேந்திர குலத்தாரில் ஒரு சாரார் மூப்பன் பட்டம் பெற்று அழைக்கப்படுவதும் இதனை உறுதி செய்யும் என்பார் ந. இராசையா (ப.57) இதே போன்று கொல்லங் கொண்டான் பாளையக்காரர் வாண்டையத்தேவன் படையில் ஆயிரக்கணக்கான தேவேந்திர குல வேளாளர் பணியாற்றினர். 1767-இல் கொல்லங் கொண்டான் கோட்டையை கர்னல் காம்பெல் தாக்கியபோது நல்ல மாடன் எனும் தேவேந்திர குலம் சேர்ந்த வீரர், பல வீரச் செயல்கள் புரிந்து இறுதியில் வீர மரணம் அடைந்தார். அவருடைய தாயார், தன் மகனின் பிரிவைத் தாங்க முடியாமல், அவர் மரணமடைந்த இடத்திலேயே உயிரைவிட்டாள். இன்றும் அந்த இடம் 'நல்லவன் ஆத்தாள்' விழுந்து செத்த இடம் என்று அழைக்கப் பெற்று வருகிறது (ப. 57) இவ்வாறு அன்றைய பாளையக்காரர்களாய் விளங்கிய தேவர்களுடன் தேவேந்திரர் படைத்தளபதிகளாய் இருந்து போராடிய வீர வரலாறுகள் நிறையவே இருக்கின்றன. இவையெல்லாம் இம்மக்கள் மள்ளர் மரபைச் சேர்ந்த வீர குடியினர் என்பதைக் காட்டுவதாகும்.

தளபதி சுந்தரலிங்கக்குடும்பனார், வெட்டும் பெருமாள் பாண்டியன் பரம்பரையில் வந்தவர்.

சுந்தரலிங்கக் குடும்பனாரை பண்டாரக வன்னியன் தனது காதலி குருவிநாச்சியாரிடம் அறிமுகம் செய்வதாக அமையும் பகுதிகளில்

இவர் பெயர் சுந்தரலிங்கம்.

மற்ற விபரம் சொல்கிறேன் கேள்! பாஞ்சாலங்குறிச்சி மன்னர் கட்டபொம்மன் படைத்தளபதி வெள்ளையத் தேவன் என் ஆருயிர் நண்பன் என்பதுதான் உனக்குத் தெரியுமே! அந்த நண்பருக்கு நண்பர் இந்தச் சுந்தரலிங்கம்! இவரும் ஒரு படைப் பிரிவின் தளகர்த்தர்தான். தேவர் குலத்தில் உதித்த வெள்ளையத்தேவனும் தேவேந்திர குலத்தில் உதித்த இந்தச் சுந்தரலிங்கக் குடும்பனும் கூடப் பிறக்காத சகோதரர்கள்! நம்மைப் போலவே நாடு காக்கும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். . . . பாண்டிய மண்ணின் உரிமைக்காக வீரப் போரிட்ட வெட்டும் பெருமாளின் பரம்பரையில் வந்தவர் இந்தச் சுந்தரலிங்கக் குடும்பன் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். (பாயும்புலி பண்டாரக வன்னியன் பக்கம் 36-37) என்றவாறு பண்டாரக வன்னியனின் கூற்றாகச் சொல்லப்படும் வரலாற்றுச் செய்திகள் நாவலாசிரியரின் கருத்துக்கள் ஆகும். பாண்டிய மண்ணின் உரிமைக்காகப் போரிட்ட வெட்டும் பெருமாள் பாண்டியனின் வம்சாவழியைச் சேர்ந்தவர் தளபதி சுந்தரலிங்கக் குடும்பனார் என்பது குறித்த பல வரலாற்றுக் கருத்துக்கள் தென் தமிழகப் பிற்காலப் பாண்டிய மன்னர்களின் வரலாற்றில் பொதிந்து கிடக்கின்றன. இவ்வரலாறுகள், வரலாற்று ஆசிரியர்களால் மறைக்கப்பட்டுள்ளன. வெட்டும் பெருமாள் பாண்டியனின் நாட்டுக் கதைப் பாடல்கள் தொடர்பான ஓலைச் சுவடிகள் கூட மறைக்கப்பட்டுவிட்டதாகத் தெரிகின்றது. இதனை ஐவர் ராசாக்கள் கதை எனும் நூலில் தமிழகத்தின் நாட்டுப்புறவியல் தந்தை என்று புகழப்படும் பேராசிரியர் நா.வானமாமலை வருமாறு குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

"கன்னடியர்" படையெடுப்பின் போது பாண்டியர்கள் எதிர்த்துப் போராடிய வரலாற்று நிகழ்ச்சியே ஐவர் ராசாக்கள் கதையின் கருவாகும்.

இக்கதையொன்று மட்டுமல்லாமல் இன்னும் பல கதைகளும் இந்நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு வழங்கி வந்திருக்கின்றன. 'பஞ்சபாண்டியர்கதை', 'வெட்டும் பெருமாள் கதை', 'கன்னடியன் படைப்போர்' முதலியவை அவை.

இவையாவும் பலவிடங்களில் பாண்டியரும் கன்னடியரும் போராடியதாகக் கூறுகின்றன. முடிவில் பாண்டியர் உயிர் நீத்ததாகக் கூறுகின்றன.

எனவே இக்கதைகள் ஒரே ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுவனவல்ல. பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வந்த ஆதிக்கப் போராட்டத்தில் சிற்சில பகுதிகளில் நடந்தவற்றை முதன்மைப்படுத்தி, பல்வேறு நிகழ்ச்சிகளையும் கதையோடு பொருத்திக் கற்பனையால் இணைத்துக் கூறுகின்றன.

கன்னடியன் பாண்டியன் போர் பலவிடங்களில் நடந்ததாக நெல்லை மாவட்டத்தில் செவிவழிச் செய்திகள் வழங்கி வருகின்றன. அதற்கு ஆதாரமாகச் சிற்சில தொல்பொருள் சான்றுகளும் கிடைத்துள்ளன.

கயத்தாற்றின் அருகில் வெங்கலராசனுக்கும் வெட்டும் பெருமாள் ராசாவுக்கும் போர் நடந்ததாகவும் அப்போரில் கயத்தாற்றுக் கோட்டை அழிந்ததாகவும் வெட்டும்பெருமாள் போரில் மாண்டதாகவும் செவிவழிச் செய்திகள் வழங்கி வருகின்றன. இதற்குச் சில கல்வெட்டுகளும் இளவேலங்காலில் காணப்படும் சிற்பங்களின் சித்திரங்களும் தொல்பொருள் சான்றுகளாகக் காட்டப்படுகின்றன. எனவே, கயத்தாற்றில் ஒரு போர் நிகழ்ந்தது என்றும் அப்போரில் வெங்கலராசன் வெற்றி பெற்றான் என்றும் முடிவு செய்யலாம். இப்போரைப் பற்றிய கதைதான் 'வெட்டும் பெருமாள்கதை'. இக்கதை, சாதி வரலாற்று நூல்கள் சிலவற்றில் காணப்படினும் அச்சு நூலாகவோ, ஏட்டுப் பிரதியாகவோ இதுவரை எங்கும் அகப்படவில்லை."(ஐவர் ராசாக்கள் கதை, பக்கம் **2-3**) என்று குறிப்பிடும் நா. வானமாமலையின் கருத்துப்படி கன்னடியர்களின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்ட தமிழ் மன்னர்களான ஐவர் ராசாக்களில் (பஞ்சபாண்டவர்களின்) வெட்டும் பெருமாள் பாண்டியனும் ஒருவர் என்பதை அறிகிறோம். மேலும், இக்கதைப் பாடல் மட்டும் மறைக்கப்பட்டுள்ளது என்பதையும் இங்கே நினைய வேண்டும். தென் தமிழகத்தில் கன்னடியர் ஆதிக்கம் ஏற்பட்ட பின்னர் தான் மன்னர் மரபில் இருந்த மள்ளர் பரம்பரை பள்ளராக வீழ்த்தப்பட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இதன்படி தளபதி சுந்தரலிங்கக் குடும்பனாரின் முன்னோரான வெட்டும் பெருமாள் பாண்டியனின் மறைக்கப்பட்ட வரலாற்றை வெளிக்கொண்டுவர இந்நாவலின் ஆசிரியரும் தமிழக முதல்வருமான டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் முயற்சிக்க வேண்டும்.

தென்னிந்தியாவின் ஜிப்ரால்டர்

நாடு சுதந்திரம் பெற தன்னை முன்னிறுத்திப் போராடியவர் சுந்தரலிங்கம். அவர் வாழ்ந்த மண்ணைத் தென்னகத்தின் ஜிப்ரால்டர் என்று வெள்ளையர் வர்ணித்தனர். கட்ட பொம்மனின் கோட்டையைக் கைப்பற்றும் நோக்கத்தோடு வெள்ளையர்கள் சுற்றி வளைத்தபோது, வீரன் சுந்தரலிங்கமும் அவரது முறைப்பெண் வடிவும் தீப்பந்தங்களைக் கொண்டு அவர்களின் வெடி மருந்துக் கிடங்கை அழித்தனர். இவ்வாறு தன்னையே அழித்துத் தியாகங்களைச் செய்தவர் தளபதி சுந்தரலிங்கம் என்றவாறு **19-4-98** அன்று சுந்தரலிங்கம் பிறந்த ஊரில் அவரின் நினைவைப் போற்ற உருவாக்கப்பட்ட வீரன் சுந்தரலிங்கம் நினைவுக் கிராமத் திறப்பு விழாவில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பேசியுள்ளது இங்கு நினைக்கத்தக்கது. ஆங்கிலேயர் தளபதி ஜெனரல் வேல்ஸ் தனது நாள்குறிப்பேட்டில் வருமாறு எழுதி வைத்திருந்தானாம். "The Next day the 31st March the Gibralter of the Insurgents" அதாவது மறுநாள் மார்ச்சு **31ம்** தேதி நாங்கள் அந்த புரட்சிக்காரர்களின் ஜிப்ரால்டரை நோக்கி முன்னேறினோம். ஜிப்ரால்டர் என்பது ஸ்பெயின் நாட்டின் தென் கோடியிலுள்ள ஒரு கடற்கரை அரணாகும். மத்திய தரைக்கடல் பிரதேசத்தில் இது ஓர்

முக்கியப்பகுதியாகும். கட்டபொம்மன் கோட்டையை விட்டு வெளியேறிய பின் ஆளில்லா அக்கோட்டையை பாஸ்ஷா என்ற ஆங்கிலேயத் தளபதி **9-9-1799** அன்று பீரங்கிக் குண்டுகளால் தொடர்ந்து துளைத்தும் கடப்பாரைகளால் பெயர்த்தும் தரைமட்டமாக்கிவிட்டார். **16-10-1799** இல் கயத்தாற்றில் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட பிறகு தப்பிச் சென்ற ஊமைத்துரை மீண்டும் வந்து மள்ளர் மக்களின் உதவியால் கட்டபொம்மனின் கோட்டை போன்றே மணல் மூட்டைகளால் அடுக்கி உருவாக்கினான். இக்கோட்டையைத்தான் ஜெனரல் வேல்ஸ் தென்னிந்தியாவின் ஜிப்ரால்டர் என்று வர்ணித்து எழுதியுள்ளான். (விஜயதனுசு, மாவீரர் சுந்தரலிங்கம், ப.5)

தென் தமிழகத்தில் நடந்த வெள்ளையருக்கு எதிரான போரில் சாதிய ரீதியில் சுந்தரலிங்கக் குடும்பனார் தலைமையில் ஆண், பெண் என்று வேறுபாடில்லாது மள்ளர் குலத்தோர் கலந்து கொண்டு போராடியதை நாட்டுப் புறக்கதைப் பாடல்கள் வரலாறாக ஆக்கியுள்ளன. கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் குறிப்பிடும் தென்னிந்தியாவின் ஜிப்ரால்டர் கோட்டையை ஊமைத்துரையின் தலைமையில் மள்ளர் குலத்தவர்களே மிகுதியாகப் பங்கேற்று கட்டியுள்ளனர். இக்கோட்டை கட்டபொம்மன் மரணத்திற்குப் பின்னர் கட்டப்பட்டது ஆகும். கட்டபொம்மன் மரணத்திற்குப் பின்னர் ஊமைத்துரையுடன் கொரில்லாப் போர்முறையில் வெள்ளையர்க்கு அதிகத் தொல்லைகள் கொடுத்தவர்கள் மள்ளர்களே ஆவர். ஊமைத்துரை வெள்ளையர் படைக்குச் சிக்காது மள்ளர் குடியிருப்பில்தான் மறைந்திருந்தாகக் கருதி, மள்ளர் குடியிருப்புக்கு வெள்ளையர் படை சென்று தேடுகின்றது. ஆனால் ஊமைத்துரையை மறைத்து வைத்திருக்கும் இடத்தை அங்கிருந்த மள்ளத்தியரை கடந்து சென்று வெள்ளையரால் கண்டு பிடிக்க முடியவில்லை. இதனைப் பின்வரும் கட்டபொம்மன் கதைப்பாட்டு வரிகள் தெரிவிக்கும்.

இனிமேல் நம்மளைக் கும்பினியான் (வெள்ளையர்)
இருக்க ஒட்டான் பூமியிலே
என்றவாறு மனங்கலங்கி தப்பி வந்து
பள்ளக் குடியிலே வந்திருந்தான்.
. . . .
மேல் வீட்டில் வைத்துக் கொண்டு
பள்ளன் மெல்லினமான தேன்பால் பழமும்
பசி அமர்த்தியே வைத்திருந்தான்
. . . .
பள்ளக் குடியிலே இருக்கின்றான் அந்தப்
பாதரு ஊமைத்துரையுமே தான்
சந்தோச மாச்சுது எட்ட பொம்முவென்று
தட்சணங் கர்னலும் அந்நேரம்
பள்ளக்குடியை வளைத்துக் கொண்டார்
. . . .
(வி. மாணிக்கம், கட்டபொம்மன் கும்மிப்பாடல், பக்கம் 79)

இங்கு பள்ளக்குடி என்று குறிக்கப்படுவது சுந்தரலிங்கக் குடும்பனாரின் ஊரான கவர்ணகிரியென்றே அறியமுடிகிறது. இங்கு முற்றுகையிட்ட வெள்ளையர் படை, இவ்வூரின் மள்ளத்தியரிடம் ஊமைத்துரை குறித்து விசாரணை செய்கின்றது. அதனை,

ஊமைத்துரை இங்கு வந்தானா
ஒளித்து வைத்த நீ
உண்மை சொல்வாய்
உண்மையைச் சொல்லாவிட்டால்
குண்டாலே உன்னையும்
சுட்டுப் பரத்திடுவேன்
. . . .
(வி. மாணிக்கம், மேலது, பக்-81)

இவ்வாறு துப்பாக்கியைக் காட்டி மிரட்டியும் கூட மள்ளத்தியர்கள் பின் வருமாறான பதிலையே சொல்கின்றனர்.

ஊமைத்துரை முகம் நானறியேன்
உங்கள் முகத்தையும் நானறியேன்
என் வீட்டுக்காரர்தான் அம்மையினால்
ஏங்கிக் கட்டிலில் தூங்குகிறார்
அடிமை சொல்வதில் பொய்யும் மெய்யும்
அறிந்து சொல்லிட வேண்டுமய்யா
வந்து பாருங்கள் வீட்டுக்குள்ளே
வம்பு செய்வாளோ பள்ளி மகள்
. . . .
(நா. வானமாமலை, கட்டபொம்மன்கூத்து, பக்கம்.75)

என்றவாறு மள்ளர்களாலும் மள்ளத்தியராலும் காக்கப்பட்ட ஊமைத்துரை, பின்னர் மக்களை ஒன்று திரட்டி கட்டபொம்மனின் இடிக்கப்பட்ட கோட்டையை மீண்டும் கட்டி மக்களால் பட்டம் சூட்டப்பட்டார். இதனை,

வடுகத் தட்டானொருவன்
பள்ளக் குடும்பன் கரையாளங்
பாயும்புலி போல சிங்கங்களும்
எல்லோரும் கூடி அளப்புகள் பேசி
எட்டு நாளைக் குள்ளாக
பாளையங் கோட்டையில் வைத்து
நம்மாளைப் பட்டம் கட்டியே
வைக்க வேண்டும்
விறகுக் கட்டிலும் புல்லுக் கட்டிலும்
வேணுமென்ற ஆயுதம் தானும் வைத்து

(தி. நடராசன், கட்டபொம்மன் கும்மிப் பாடல், பக்கம் 82-83)

என்றவாறான பாடல் எட்டு நாளுக்குள் கட்டபொம்மன் கோட்டையை மறுபடியும் ஊமைத்துரையின் தலைமையில் கட்டி அவனுக்குப் பட்டம் சூட்டியதைச் சொல்லும். இதில் மள்ளர்கள் பெரும் பங்கு வகித்ததையும் நாட்டுப் பாடல்கள் வரலாறாக ஆக்கியுள்ளதைப் பார்க்க முடியும். இதன் பின்னர் மள்ளர்களின் உதவியுடன் திண்டுக்கல் வரை தப்பிவந்து இறுதியில் வத்தலக்குண்டு கண்மாயில் ஊமைத்துரை வெள்ளையர்களால் கைது செய்யப்படுகின்றார். ஊமைத்துரையுடன் வந்த மள்ளர்களில் பெரும்பாலானவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதிலிருந்து தப்பிய மள்ளர்களின் வம்சாவழியினர் சங்கரா ரெட்டி கோட்டை, செம்பட்டி மற்றும் அதைச் சுற்றியுள்ள ஊர்களில் வாழ்ந்து வருவதைக் காணமுடியும். இவ்வூரினர் இன்னமும் தங்களுக்கு ஆண் குழந்தை பிறந்தால் அதற்குச் சேனைபோட (முதல் உணவு) கவர்ணகிரியிலிருந்து (பாஞ்சாலங் குறிச்சி) எடுத்து வரப்பட்ட மண்ணைக் கரைத்துத்தான் பயன்படுத்துகின்றனர். குழந்தையின் தொட்டிலுக்குக்கீழ் பிறந்த மண் எனும் பெயரில் பாஞ்சாலங்குறிச்சி மண்ணையே போட்டு வைப்பதையும் காணமுடியும்.

சுந்தரலிங்கக் குடும்பனாரின் பாத்திரப்படைப்புத் திறம்

நாவலில் பாத்திர வார்ப்பே மிக முக்கியமான அம்சமாகும். பாத்திரப்படைப்பு என்பது கதையில் வரும் பாத்திரங்களைக் கையாளும் முறையாகும். அதன் பயனாக நாவலாசிரியர் பாத்திரத்தை உருவாக்குகின்றார். மேலும் பாத்திரத்தின் ஆளுமையை நாம் உணரும்படிச் செய்கின்றார் என்று சொல்லுவர். இப்பாத்திரங்கள் வாயிலாகவே தமது உலக அனுபவங்களையும் சமூக உணர்வுகளையும், வாழ்க்கை நிலைகளையும் நாவலாசிரியர் சித்திரிப்பார் என்பதற்கேற்ப, கலைஞர் அவர்கள் நாவலின் முழு நோக்கில் பண்டாரக வன்னியன் முதன்மைப்பாத்திரமாகச் சித்திரிக்கப்பட்டிருந்தாலும் நாவலாசிரியரின் கூடுதல் அழுத்தத்தால் தளபதி சுந்தரலிங்கக் குடும்பனார், நாவலின் இணைக் கதாநாயகனாக ஆக்கப்பட்டுள்ளார் என்றால் மிகையில்லை. நாவலின் தொடக்கத்தில் சுந்தரலிங்கனார் இலங்கை செல்லும் பயணமே அறிமுகம் செய்யப்படுகின்றது. நாவலின் கதைப் பின்னலான ஆங்கிலேயர் எதிர்ப்புப் போர்ச் செய்திகள் சுந்தரலிங்கனாரின் மூலமே நாவல் முழுதும் தூவப்பட்டு பின்னப்பட்டுள்ளது.

நாவல் புனையும் பொழுது பொதுவாக இருமுறைகள் உண்டு என்பர். கதைக்கருவிற்கு முதன்மை கொடுத்து எழுதுவது ஒருமுறை. கதை மாந்தர்க்கு முதன்மை கொடுத்து எழுதுவது மற்றொருமுறை. இங்கே நாவலாசிரியர் கதை மாந்தருக்கே முதன்மை கொடுத்து எழுதுகின்றார். கதைத் தொடக்கமே தளபதி சுந்தரலிங்கக் குடும்பனார் எனும் படைத்தளபதியை அறிமுகம் செய்வதாகத் தொடங்கி நாவலின் மையம் வரை சுந்தரலிங்கக் குடும்பனார் எனும் பாத்திரத்திற்கே முதன்மை கொடுத்துள்ளார் நாவலாசிரியர். இதில் சுந்தரலிங்கக் குடும்பனாரை அறிமுகம் செய்யும்பொழுது நேரடிமுறை (Expository method) மூலம் அப்பாத்திரத்தின் எண்ணம், உணர்வு, விழைவு, பெருமைகள் என்றவாறு ஆசிரியரே விளக்குகின்றார். எடுத்துக்காட்டாகச் சுந்தரலிங்கக்

குடும்பனாரின் இலங்கைப் பயணத்தைக் காட்சியாக்கும் ஆசிரியர், வாசகர்களுக்கு அவரை வருமாறு அறிமுகம் செய்வார்.

"அப்படியானால் அந்த சுந்தரலிங்கம் யார்?

மருதன் - பரதன் என்ற இருவருக்கும் தோழன் என்று கூறினால் மட்டும் போதுமா?

போதாது! நிச்சயமாகப் போதாது!

வீரபாண்டியக் கட்டபொம்மனின் அன்புக்குரிய தளபதி வெள்ளையத்தேவனுக்கு உற்ற நண்பனும் - அவனையொத்த வீரனுமான சுந்தரலிங்கம் பாஞ்சாலங்குறிச்சிப் படைமுகத்துச் சிங்கங்களிலே ஒருவன்! தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்து இந்தத் தமிழ் மண்ணை அந்நியர் ஆக்கிரமிக்கக்கூடாது என்பதற்காகத் தடந்தோள் தட்டிய பெருவீரன்" (ப.12)

இதேபோன்று நாடகமுறை மூலமும் (Dramatic Method) சுந்தரலிங்கனாரின் பாத்திரப்படைப்பை மெருகேற்றியுள்ளார் நாவலாசிரியர். சுந்தரலிங்கனாரின் பேச்சு, நடத்தை எண்ணம் இவைகளைக் கொண்டு இப்பாத்திரத்தின் மேலாண்மையை வாசகர்கள் உணரும் படியும் செய்துள்ளார் நாவலாசிரியர்.

ஆங்கிலேயருடன் நடந்த போர் குறித்துப் பண்டாரக வன்னியனிடம் விளக்கும் சுந்தரலிங்கனார்,

"பிறந்த மண்ணின் சுதந்திரத்திற்காக எங்கள் பிணங்களை எருக்களாகத் தருவதற்குச் சபதம் எடுத்துக் கொண்ட எங்களின் தோள்களுக்கு ஈடு கொடுக்க ஆங்கிலேயக் கூலிப்படையினால் ஆகாது என்பது எங்கள் திடமான நம்பிக்கை"

என்று பேசுவது வாசகனின் முன்னே ஒரு போர்த் தளபதி நின்று வீரவசனம் பேசும் நாடகப் பாங்கை தோற்றுவிக்கும் என்றால் மிகையாகாது. இப்படியாக நாவல் முழுமையுமே கதைப் பாத்திரங்கள் உயிருள்ள மாந்தர்களாகவே பரிணமித்துக் காட்டப்பட்டுள்ளனர். நாவல்களில் மொழிநடையும், உரையாடலும் சொல்லாட்சியும் நன்கு அமைக்கப்படவேண்டும். கதைக்கும் நாடகத்திற்கும் இடைப்பட்டதே நாவல் என்றும் பைக்குள் வைத்துப் பார்க்கும் நாடகமே நாவல் என்றும் திறனாய்வாளர்கள் கூறுவதற்கேற்ப இந்நாவலில் இடம் பெறும் கதை மாந்தர்களின் உரையாடல்கள், காட்சி மாற்றங்கள், நாடகப் பாங்குடன் அமைந்து படிப்போரின் மனதில் ஒரு நாடகமாய் விரியும் ஆற்றலையும் இந் நாவலாசிரியர் தம் படைப்புத்திறமாய் காட்டியுள்ளார் என்றால் மிகையாகாது. மொத்தத்தில் சுந்தரலிங்கனாரின் பாத்திரப்படைப்பு என்றும் வாழும் உயிர்ப்படைப்பாக இந்நாவலில் படைக்கப்பட்டுள்ளது எனலாம்.

தேவேந்திரர் - தேவர் சமூக ஒற்றுமை

வீரபாண்டிய கட்ட பொம்மன் படையில் தோளோடு தோள் நின்று வெள்ளையர்களை எதிர்த்த வெள்ளையத் தேவனும், தளபதி சுந்தரலிங்கக்

குடும்பனாரும் போரிட்ட அதே ஒற்றுமை உணர்வை மீண்டும் கொண்டுவரும் நோக்கத்தோடு நாம் செயல்பட வேண்டும் என்றவாறு 18-4-1998ல் வீரன் சுந்தரலிங்கம் நினைவுக் கிராமத் திறப்பு விழாவில் பேசிய கலைஞரின் உள்ளத்தை 1991ல் அவர் எழுதி வெளியிட்ட பாயும்புலி பண்டாரக வன்னியன் நாவலிலும் பல இடங்களில் திரும்பத் திரும்ப வலியுறுத்துகின்றார்.

நாவலின் தொடக்கமே தளபதி சுந்தரலிங்கக் குடும்பனார் இலங்கைக்கு ரகசியப் பயணம் மேற்கொள்வதிலிருந்து தொடங்குகின்றது. நாவலாசிரியர் சுந்தரலிங்கத்தை வருமாறு அறிமுகம் செய்வார்.

வீரபாண்டியக் கட்டபொம்மனின் அன்புக்குரிய தளபதி, வெள்ளையத்தேவனுக்கு உற்ற நண்பனும் - அவனையொத்த வீரனுமான சுந்தரலிங்கம் பாஞ்சாலங்குறிச்சிப் படைமுகத்துச் சிங்கங்களிலே ஒருவன்! தேவேந்திர குல சமுதாயத்திலே பிறந்து இந்தத் தமிழ் மண்ணை அந்நியர் ஆக்கிரமிக்கக் கூடாது என்பதற்காகத் தடந்தோள் தட்டிய பெருவீரன்! (ப.13) என்றவாறு நாவலைப் படிக்கின்ற வாசகர்களுக்குத் தளபதி சுந்தரலிங்கக் குடும்பனாரை அறிமுகம் செய்வார். மேலும் பல இடங்களில் தமிழர்கள் சமூக ஒற்றுமை பெற்று வாழவேண்டும் எனும் தனது உள்ளக்கிடக்கையைத் தெரிவிக்கின்றார்.

சுந்தரலிங்கம் : என் பெயர் சுந்தரலிங்கம். பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் படையில் ஒரு தளபதி.

குருவி நாச்சியார் தாத்தா : ஓ! அந்த தேவேந்திர குலத்துச் சிங்கம் நீதானா! நீயும் அந்த வெள்ளையத் தேவனும் சகோதரர்கள் மாதிரியென்று கேள்விப் பட்டிருக்கின்றேன். (ப.23)

இப்படியாகக் கதையின் தொடக்கம் முதல் இலங்கைப் பயணம் முடித்து தமிழகம் திரும்பும் வரை சுந்தரலிங்கத்தின் பெருமை பேசும் போதெல்லாம் நாவலாசிரியர் கூற்று அடிப்படையில் இணைத்தே பேசுகிறார். இது நாவலாசிரியரின் உள்ளக்கிடக்கையைக் காட்டுகின்றது. இன்று கீரியும் பாம்புமாக எதிரெதிர் கோணங்களில் சண்டை செய்து கொண்டிருக்கும் தமிழ் இனம் இனவுணர்வுடன் வாழவேண்டுமென்ற ஆசையுள்ள தமிழ் உள்ளத்தை (கலைஞர்) நாம் காணமுடியும். மேலும் இந்நாவல் வெளிவந்த காலம், போடி கலவரத்தில் தேவேந்திரரும் தேவரும் மோதிக் கொண்ட காலம். இதனாலும் இவர்களின் ஒற்றுமை குறித்து நாவலாசிரியர் அடிக்கடி பேசியிருக்கின்றார் என்றும் கருதலாம். நாவலின் கதைப்போக்கு வரலாற்று நோக்கில் என்றாலும், அன்றைய இன்றைய தமிழக அரசியலின் நிலை நாவலாசிரியரால் கதை நெடுகிலும் பதிவு செய்யப்படுகின்றது. தமிழக அரசியலின் வெற்றி தோல்வியை நிர்ணயம் செய்யும் தேவேந்திரர், தேவர், வன்னியர் மூவரும் ஓரணியில் இருப்பின் தமிழனுக்கு என்றுமே தோல்வியில்லை என்ற நாவலாசிரியரின் அரசியல் நோக்கமும் மறைமுகமாகச் சொல்லப்படுகின்றது.

வெள்ளையத் தேவனை தேவர் என்று அறிமுகம் செய்யும் நாவலாசிரியர், சுந்தரலிங்கக் குடும்பனாரை தேவேந்திர குலச் சிங்கம் என்று அறிமுகம் செய்தாலும் தாழ்த்தப்பட்ட குலம் என்பதான முறையில் பல இடங்களில் பேசியிருப்பது இன்றையச் சமூகச் சூழலில் நெருடலாகப் படுகின்றது. காரணம் மனிதப் பிறப்பில் உயர்வு தாழ்வு என்பதெல்லாம் ஒன்றும் இல்லை. ஏதோ அரசியல் காரணங்களுக்காகப் பொருளாதாரத்தில் நசுக்கப்பட்டவர்களை Scheduled Castes (அட்டவணைச் சாதியினர்) என்று அழைத்தது அன்றைய வெள்ளையர் அரசு. அதனைத் தவறாக அரிசன், தாழ்த்தப்பட்டவர், தலித் என்று காலந்தோறும் தமிழகத்தில் மட்டும் மொழிப் பெயர்ப்புச் செய்கிறார்கள். இந்தச் சொல்லாக்கத்தை நாவலாசிரியர் தவிர்த்திருக்கலாம். காரணம் அச்சமூகம் தன்னைத் தேவேந்திர குல வேளாளர் என்றே அழைக்க விரும்புவதால் தேவர், தேவேந்திரர் என்றே எழுதப்பட்டிருக்கவேண்டும். இருப்பினும் நாவலாசிரியரின் காவிய நாயகனான சுந்தரலிங்கம் நாவலின் 22 அத்தியாயங்கள் வரை அதாவது 145 பக்கம் வரை முழுமையான அதாவது பண்டாரக வன்னியனுக்கு இணையான இணைக் கதாநாயகனாகச் சித்திரிக்கப்பட்டிருப்பது சிறப்பிற்குரியது.

தமிழக அரசியல் பேசும் சுந்தரலிங்கம்

நாவலாசிரியர் பல இடங்களில் சுந்தரலிங்கம் எனும் பாத்திரம் வாயிலாக அன்றைய (1991) தமிழக அரசியலைப் பேசுகின்றார்.

இலங்கையில் பண்டாரக வன்னியனின் காதலி குருவிநாச்சியாரின் தாத்தா தளபதி சங்கிலித் தாத்தாவிடம் சுந்தரலிங்கம் அறிமுகம் ஆகும்போது, நீ யாரென்று சொல்லவில்லையே தமிழ்நாடு என்று மட்டும் மொட்டையாகச் சொன்னால் எப்படி என்று கேட்க அதற்கு

சுந்தரலிங்கம் : தமிழ்நாடு இன்று மொட்டையாகத் தானே இருக்கிறது தாத்தா!

சங்கிலித் தாத்தா : ஏன் அப்படிச் சொல்கிறாய்? வளம் பொருந்திய பூமியல்லவா அது?

சுந்தரலிங்கம் : வளம் பொருந்திய பூமிதான்! ஆனால் இன்று, அந்நிய ஆதிக்கத்தின் கொடியல்லவா பறக்கத் தொடங்கியிருக்கிறது! உரிமை அழிக்கப்படுகிறது! அதை மீட்க வேண்டுமென்ற உணர்வு கொஞ்சம் கொஞ்சமாகப்பட்டுப்போகிறது! தமிழர்களுக்குள் ஒற்றுமையில்லை, தன்மான உணர்ச்சி இல்லை. உரிமைக்காகவும் அதற்காக உயிரையும் தரவும் சித்தமாக இருப்பவர்களைக் காட்டிக் கொடுத்துப் பதவிசுகம் அனுபவிக்கப் பல் இளிக்கும் துரோகிகள்தான் பெருகிக் கொண்டிருக்கிறார்கள் (பக் 21-22)

இவ்வாறான உரையாடல்கள் தமிழகத்தில் அன்றும் இன்றும் தமிழர்களுக்கு எதிரி தமிழர்கள்தான். அவர்களுக்குள் ஒற்றுமை இல்லாமையால் யார் யாரோ தமிழனை ஆள்பவராக வருகிறார்கள் என்று பேசும் அரசியல் உரையாடலையும் இந்நாவலில் பரந்து காணமுடியும்.

இலங்கையில் பண்டாரக வன்னியனுக்குச் சுந்தரலிங்கம் உதவுதல்

இலங்கை சென்ற சுந்தரலிங்கம் தனது பணியை முடித்தவுடன் உடனே திரும்பிவிடாது அங்கு பண்டாரக வன்னியனுக்கு, காக்கை வன்னியனால் ஏற்பட்டுள்ள அரசியல் சிக்கலைத் தீர்க்கமுயன்று வெற்றி பெறுதலையும் நாவலாசிரியர் சித்திரிக்கின்றார். ஆங்கிலேயரிடம் உறவுகொண்ட காக்கை வன்னியன், பண்டாரக வன்னியனுக்கும் குருவி நாச்சியாருக்கும் நெருக்குதலை ஏற்படுத்த சங்கிலித் தளபதியைச் சிறைப் பிடிக்கின்றான். இதனால் போர் மூண்டு பண்டாரக வன்னியனைத் தோற்கடிக்கலாம் என்பது காக்கை வன்னியன் மற்றும் வெள்ளையர் திட்டம். இதனை முறியடிக்க சுந்தரலிங்கம் ஒரு சிறிய படையுடன் கிளம்புகிறார். அச்சமயம் குருவி நாச்சியார் வருமாறு குறிப்பிடுவார்.

''நீங்கள் எதற்காக இங்கே புதிய சிரமத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும்? நீங்கள் தமிழகம் திரும்புங்கள்! இங்குள்ளவற்றை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்!" என்றாள் சுந்தரலிங்கத்தைப் பார்த்து.

"எங்கும் விளையும் தீமை எனினும் அது தமிழனுக்கு வரும் தீமை தானே! அதில் இங்கு அங்கு என்று பேதம் பார்ப்பானேன்? சங்கிலித் தாத்தாவை மீட்கும் வரையில் நான் தங்களுக்குத் துணையாக இருப்பது என்று தீர்மானித்துவிட்டேன்!'' என்று உறுதியாகப் பதில் அளித்தான் சுந்தரலிங்கக் குடும்பன். (ப.76) இவ்வாறாக இந்நாவலின் இணைக்கதா நாயகனான சுந்தரலிங்கக் குடும்பனாரின் பாத்திரப் படைப்பு, தமிழர் நலனும் தமிழர் நலனுக்காகத் தன் இன்னுயிரையும் நீக்கத் தயாராகும் துணிவும் மிக்க பாத்திரமாக நாவலாசிரியரால் படைக்கப்பட்டுள்ளது.

"வீரம், விவேகம், தியாகம் இவை எந்தத் திசையிலிருந்து ஒளி உமிழ்ந்தாலும் அதனைப் போற்றிப் புகழ்க் காவியம் படைக்க வேண்டுமென்ற ஆர்வமுடையவன் நான்!"

"அதிலும் அந்த வீரமும் விவேகமும் தியாகமும் தமிழ்க் குலத்தின் சொத்துகளாக எங்கேயிருப்பினும் அவை கால வெள்ளத்தின் கொடுமையால் கவனிப்பாராற்றுப் போய்விடக்கூடாது என்ற கவலை எனக்கு மிக உண்டல்லவா?'' (ப.2) என்றவாறு இந்நாவல் ஆசிரியர் தனது முன்னுரையில் எழுதியுள்ளபடி இந்நாவலில் இடம்பெறும் தளபதி சுந்தரலிங்கக் குடும்பனாரின் வரலாறு இன்னமும் தென்தமிழக மக்களால் நாட்டுப்புறப்பாடல் வடிவில் பாடப்பட்டு வருவது போன்றும், இவரின் முன்னோரான வெட்டும் பெருமாள் பாண்டியன் கதை வரலாற்றுப்படியும் இக்கதை நாயகனை ஒரு மாபெரும் தனித்த காவியமாக ஆக்கவேண்டும் என்பதே இந்தக் காவிய உள்ளம் படைத்த கலைஞர் அவர்களிடம் இம்மக்கள் எதிர்பாக்கும் உள்ளக்கிடக்கை ஆகும்.

பார்வை நூல்கள்

1. ந. இராசையா, விடுதலைப்போரில் தாழ்த்தப்பட்டோரின் பங்கு, ஞான முருகன் எழுத்தகம், இராஜபாளையம்.

2. டாக்டர் பா. சம்பத்குமார், மு.வ. நாவல்களில் பாத்திரங்கள் ஒருதிறனாய்வு - ராஜ்காந்தி பதிப்பகம், கோவை.
3. டாக்டர் தா.வே. வீராசாமி, தமிழ்நாவல் வகைகள், தமிழ்ப்பதிப்பகம், சென்னை.
4. டாக்டர் இரா. மோகன் (பதிப்பாசிரியர்), நாவல் வளர்ச்சி, மணிவாசன் பதிப்பகம், சென்னை.
5. நா. வானமாமலை, கட்டபொம்மன் கூத்து, பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.
6. வி. மாணிக்கம், கட்டபொம்மன் கும்மிப்பாடல், மாநில தமிழ்ச்சங்கம், திருநெல்வேலி.
7. தி. நடராசன், கட்டபொம்மன் கும்மிப் பாடல், தமிழ்த்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
8. விஜயதனுசு, மாவீரர் சுந்தரலிங்கம், மருதமலர் பதிப்பகம், திருநெல்வேலி.

22 கலைஞரின் 'வெள்ளிக்கிழமை' - ஒரு சமுதாயப்பார்வை

முனைவர். ஆ. நாராயணசாமி

சமுதாயம் என்ற சொல் மனித இனத்தை மட்டுமே குறிப்பிடக்கூடியது. பல்வேறு விதமான பழக்க வழக்க வேறுபாடுகளுடைய மக்களும் சமுதாயம் என்ற பொது அமைப்பின் கீழ் ஒன்றுபடுகிறார்கள். ஆதலால் "ஒரு சமுதாயத்தின் அடிப்படைச் சக்தி மக்களே. அவர்களோடு தொடர்பு உடையவை அனைத்தும் சமுதாயத்தோடு தொடர்புடையனவாகக் கருதப்பெறும்."[1]

"இலக்கியம் சமுதாயச் சூழ்நிலையில் உருவாகும் மரம் மட்டுமன்று. சமுதாயச் சூழ்நிலையை உருவாக்கும் வித்துமாகும்"[2] ஆனால் அண்மையில் பலருடைய இலக்கியப் பார்வையும் சமுதாய நோக்கை அடியோடு புறக்கணிப்பதாக உள்ளமை வருந்தத்தக்க ஒன்றாகும். ஆனால் கலைஞர் இதிலிருந்து மாறுபட்டு, இலக்கியம் சமுதாயத்துடன் தொடர்புடையதாக-சமுதாயத்தைச் சீர்படுத்தும் தன்மையுடையதாக அமைய வேண்டும் என்ற எண்ணமுடையவர் என்பது அவர்தம் படைப்புகளின் வாயிலாக உறுதிப்படுவதை அறியலாம்.

"சமுதாயக் கொடுமைகளைச் சரியாகக் காண்கிற பார்வை பெறுவதே ஒரு புரட்சி. அதனைச் சந்திப்பது பெரும் புரட்சி. அப்பார்வையில் தாக்குண்டு அடங்கிப் போவாரும் உண்டு; ஆனால் அதன் இயல்பான வேகத்தோடு மேலும் உந்துதல் பெற்று எரிமலையாகக் குமுறும் எழுச்சி உள்ளம் பெறுவோரும் உண்டு. இவர்களே சமுதாயத்தில் மாற்றம் ஏற்படுத்தவல்ல ஆற்றலாளர்கள்."[3] என்று டாக்டர் மா. செல்வராசன் குறிப்பிடுகின்ற வரையரைக்குட்பட்ட எழுச்சி உள்ளம் கொண்ட ஆற்றலாளராக விளங்குகிறார் கலைஞர்.

தென்னிந்திய நலஉரிமைச்சங்கம், (நீதிக்கட்சி) சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகிய இயக்கங்களும், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் தலைமையும் கலைஞரின் சமூக உணர்வைச் செம்மைப் படுத்தின. பொதுவாழ்வில் பொன்விழாவையும், தம்சொந்தவாழ்வில் பவளவிழாவையும் கண்ட கலைஞர், சீர்திருத்தக்கருத்துக்களை முனைப்புடன் பரப்புவதிலும், செயல்படுத்திக் காட்டுவதிலும், நாட்டம் காட்டி, அரசியல், கலை, இலக்கியத்துறைகளில் ஆற்றிய பணிகள் எண்ணற்றவை. இலக்கியப்பணி இவற்றுள் குறிப்பிடத்தக்கது. தம்முடைய இலக்கியப் படைப்புகள் அனைத்திலும் சமுதாயச் சீர்திருத்தத்தையே பெரிதும் வற்புறுத்துகிறார்.

படைப்பாளர் ஒருவர் தமது காலத்தோடும், சமுதாயத்தோடும் நெருங்கிய தொடர்புடைய கருத்துக்களைத் தம் படைப்பின் கருவாகக் கொள்ளும்பொழுது, அவரது சமுதாய உணர்வு, துலக்கமுறும். அவருடைய கருத்துக்களும் நெஞ்சார்ந்த விழைவுகளும் அப்படைப்பில் வெளிப்பட்டு அவர்தம் சமுதாயநோக்கிற்குச் சான்று பகரும். இவ்வடிப்படையில் கலைஞரின் படைப்புகளை அணுகி அவருடைய சமுதாய நோக்கினைக் கண்டறிதல் இன்றியமையாதது.

கலைஞர், ஒருமரம்பூத்தது, ஒரே இரத்தம், சுருளிமலை, தென்பாண்டிச் சிங்கம், புதையல், பொன்னர்சங்கர், ரோமாபுரிப் பாண்டியன், வான்கோழி, பாயும்புலி பண்டாரக வன்னியன், வெள்ளிக்கிழமை முதலான புதினங்களைப் படைத்துள்ளார். இவற்றுள், வெள்ளிக்கிழமை, எனும் புதினத்தின் மூலம் கலைஞர் புலப்படுத்தும் சமய எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, புராண இதிகாச எதிர்ப்பு, மூடநம்பிக்கைகள் எதிர்ப்பு, பெண்விடுதலை ஆகிய சமூகக் கோட்பாடுகள் இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

புதினச்சுருக்கம்

சிவநேசர், சிவகாமி ஆகியோர் தெய்வ பக்தியும், நாள் கோள்களைப் பார்த்துச் செயல்களைப் புரிவதில் நம்பிக்கையும் உடையவர்கள். அவர்களின் மகள் சிந்தாமணி. இவளைப் பெண் பார்க்க பெங்களூரிலிருந்து மணமகன் அழகப்பன், அவன் தாய், நண்பன் நயினா ஆகியோர் வருகின்றனர். சிந்தாமணியை, உள்ளூரிலிருக்கும் டைகர் என்பவன் அடைய விரும்புகிறான். எனவே, மணமகன் வீட்டாருக்கு வரும்வழியில் தடை ஏற்படுத்துகிறான். குளித்துவிட்டு படித்துறையில் ஏறும்போது, சிந்தாமணி மீது சிறியகல் ஒன்றை வீசுகிறான். இதனால் அதிர்ச்சி அடைந்து கால் சறுக்கி விழுந்த சிந்தாமணி மருத்துமனையில் சேர்க்கப்படுகிறாள். அழகப்பனும், நயினாவும், பெண்ணைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலால் மருத்துவமனைக்குச் செல்கின்றனர். டைகர் மருத்துவர் ஆனந்தியை அச்சுறுத்தி, சிந்தாமணியின் அருகில் ஒரு சிறு குழந்தையைப் படுக்கவைக்கிறான். இதனால் திருமணத்திற்கு முன்பே தாயானவள் என்ற பழிக்கு ஆளாகிறாள் சிந்தாமணி. மணம் தடைப்படுகிறது. மகளுக்கு நேர்ந்த களங்கம் தாளாது, தந்தையும் தாயும் தற்கொலை செய்து கொள்கின்றனர். தன்மீது சுமத்தப்பட்ட களங்கத்தைப் போக்க முற்படும் நிலையில் அபின் கடத்தியவள் என்ற குற்றச்சாட்டுக்கும் ஆளாகிறாள் சிந்தாமணி. பல இன்னல்களுக்குப் பிறகு, தன் மீது சுமத்தப்பட்ட பழிகள் அனைத்தையும் போக்கி, ஒரு வெள்ளிக்கிழமையிலேயே சிந்தாமணியும் மடிந்து விடுகிறாள்.

சமய எதிர்ப்பு

“மதமானது மனிதனின் அறிவை அடியோடு கெடுத்துவிடுகிறது. மனிதர்களின் ஒற்றுமைக்குப் பதிலாகப் பிரித்துக் காட்டவே மதம் உதவுகின்றது. மதமானது மனிதனை ஒழுக்கத்தில் கவலை செலுத்தச் சிறிதும் கட்டாயப் படுத்துவது இல்லை. மதத்தில் பகுத்தறிவுக்குச் சிறிதும் இடமில்லை”[4] என்பது பெரியார் கூற்று. மதவெறி காரணமாகவே

காந்தியடிகளை இழக்க நேர்ந்ததும் இங்கு எண்ணத்தகும். "சமுதாயப்புரட்சியில் ஈடுபடுவோர் முதலில் சமயத்தையே தாக்குவர்"[5] என்பதற்கேற்ப, பெரியார் வழிவந்த கலைஞரும் சமயப் போக்கை எதிர்க்கிறார்.

வாழ்க்கையை நன்முறையில் வழிநடத்திக்கொடுக்கும் வழிகாட்டி என்றில்லாது, தோற்றத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்திச் சமயவெளிப் பாட்டைப் புலப்படுத்தும் நிலையைக் கண்டிக்கிறார் கலைஞர். "மனிதனுக்கு மனிதன் அவயவங்களைச் சில மாறுதல் பண்ணிக் கொள்வதுதானே மதம்"[6] என்று புதினமாந்தர் நயினா என்பவரைப்பேச வைத்து, மொட்டையடித்தால் முசுலீம், காது குத்திக் கொண்டால் இந்து என்ற சில செயல்களின் அடிப்படையில் சமயம் பின்பற்றப்படுவதை எள்ளுகிறார். புறத்தோற்றத்தினால் பின்பற்றப்படும் சமயப்போற்றுதல் தேவையற்றது என்கிறார்.

இன்னல்களிலிருந்து விடுதலை பெற மதம் மாறியோர், புதிதாகச் சேர்ந்த மதத்திலும் வேறுபாடுகள் மலிந்திருப்பதைக் கண்டு வேதனைப்படுகின்றனர். இப்புதினத்தில், இசுலாம் சமயத்தைச் சேர்ந்த நயினா, ஆனந்தி என்னும் இந்துப்பெண்ணைக் காதலிக்கிறான். அவளிடம், காதல் நிறைவேற, மதம் மாற வேண்டுகிறான். இதற்கு ஆனந்தியோ, 'மதம் மாறவேண்டாம்-மனம் மாறாமலிருந்தால் போதும்"[7] என்று பதிலளிக்கின்றாள். தீமையை வெறுத்து நன்மை நாடுவது, நன்மையை ஒதுக்கித் தீமையைச் சேர்வது மனச்செயலே. மனத்தை உறுதிப்படுத்தி நல்வழி நிற்க முயல்வோர்க்கு மதமாற்றம் மட்டுமல்லாது-மதமே தேவையற்றது என்று உணரவைத்துத் தம் சமய எதிர்ப்பைக் காட்டுகின்றார்.

மனத்தை மதம் எனும் களைகள் நிறைந்த நிலமாக வைத்து, அதில் பொருளியல் சீர்திருத்தம் எனும் விதையைத் தூவினால் பயன் இராது; மதம் தொடர்பான எண்ணத்தில் மக்களிடையே முதலில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்று கருதியவர் கலைஞர். தமிழ்நாட்டில் சமய எதிர்ப்பு, பெரியார் வாயிலாகத் தொடக்கம் பெற்றது. பெரியார், அண்ணா, புரட்சிக்கவிஞர் ஆகியோரின் கருத்துத் தாக்கம் கலைஞரின் சமய எதிர்ப்புக்குத் தக்க பின்னணியாயிற்று எனலாம்.

கடவுள் மறுப்பு

"மனிதன் பிறந்து வளர்ந்து நிர்ணயிக்கப்பட்ட பிறகு தான் கடவுள் என்கிற ஒரு வஸ்து நிச்சயம் செய்யப்பட்டு இருக்க வேண்டும். அதையாரும் மறுக்க முடியாது"[8] என்பது பெரியாரின் முடிவு. கலைஞரும் இம்முடிவினரே. "அனைத்தையும் படைத்தவன் ஆண்டவன்தான் என்கிறான் மனிதன். இந்த மனிதன் படைத்தது தான் என்ன ?" என்ற வினாவை எழுப்பி, "இது தெரியாதா ? மனிதனின் படைப்புதான் ஆண்டவன்"[9] என்று அனைத்தையும் படைப்பவனாகக்கருதப்படும் கடவுளை மனிதன் தான் படைத்தான் என்பதை வெளிப்படுத்துகின்றார் கலைஞர்.

கலைஞர், தாம் படைத்த கதைமாந்தர்களின் துணைகொண்டு, தமது கடவுள் மறுப்புக்கொள்கையை நிலைநாட்டுகிறார். கடவுளின் இயலாமையைக் கதை மாந்தர் வாயிலாக உணர்த்தியும், கடவுளை நம்பினோர், இறுதியில் கடவுளைத் தூற்றுவதாகப் படைத்தும் கடவுள் மறுப்பினை உணர்த்துகின்றார்.

இப்புதினத்தில் இடம்பெறும் சிவநேசர், 'அவனன்றி ஒரணுவும் அசையாது' என்ற நம்பிக்கையாளர். மகளுக்குத் திருமண ஏற்பாடு செய்கிறார். அப்போது மகள் மீது வீண்பழி சுமத்தப்படுகிறது. திருமணம் தடைப்படுகிறது. இன்னல்கள் நிகழ்கின்றன. சிவநேசர் அவருடைய மனைவி மகள் மூவரும் மடிகின்றனர். இவர்கள் ஆழ்ந்த கடவுள் பற்றுக் கொண்டவர்களாக இருந்தும், இவர்களுக்குக் கடவுள் உதவாத நிலையைக் கூறும்போது,

> "பூமி அசைவுகளையும் - பூகம்ப அதிர்ச்சிகளையும் - பூவோடும்
> பிஞ்சோடும் குடும்பங்கள் புயல்காற்றில் சிக்கி மடிவதையும்,
> கடல் கொந்தளிப்பில் நாடு நகரங்கள் நாசமாவதையும்,
> அமைதியோடு பார்த்துக் கொண்டிருக்கிற 'ஆண்டவன்'
> சிவநேசர் குடும்பத்திலே ஏற்பட்ட சிறு கொந்தளிப்பு கண்டா
> அதிர்ச்சி அடையப்போகிறான்"[10]

என்று வினா எழுப்புகிறார். இயற்கையில் நடப்பது, இல்வாழ்வில் நடப்பது எல்லாவற்றிற்கும் கடவுளே காரணம் என்று நம்பி ஏமாறும் மக்களின் அறியாமையை வெளிப்படுத்துகின்றார்.

சிவநேசர், அறிவுத் தடுமாற்றம் காரணமாக, 'நான்தான் சிவபெருமான்; தாருகாவனத்து ரிஷிபத்தினிகளையெல்லாம் சோதனை செய்ய எழுந்தருளியிருக்கிறேன்"[11] என்று கூறுவதாகப் படைத்து, கடவுளின் செயல்களிலுள்ள கறைகளைக் காட்டுகின்றார்.

கடவுள் நம்பிக்கையாளர்கள், எச்செயலில் ஈடுபட்டாலும் கடவுள் மீது பொறுப்பை அல்லது பழியைச் சுமத்திவிட்டுத் தொடங்குதல் வழக்கமாகி விட்டது. இப்புதினத்தில் டைகர் என்பவன், அழகப்பன், நயினா ஆகியோரிடமிருந்து தப்புவதற்காகப், பொய் சொல்ல முற்படும் போது கடவுள் மீது பாரத்தைப் போட்டு விட்டுச் செல்வதாகக் கூறுகிறான். அப்போது நயினா, 'இப்படியெல்லாம் பயல்கள் பாரத்தைப் போடுவார்கள் என்று பயந்து தானே எங்கள் ஆண்டவன் கல்லாகவும் இல்லை; சிலையாகவும் இல்லை; கண்ணுக்குத் தெரியாமலே இருக்கிறார்"[12] என்று கூறுகின்றான்.

கடவுள் நம்பிக்கை தேவையற்றது; உருவ வழிபாடு ஒழிக்கப்பட வேண்டியது; இவை அறிவுக்கு உகந்த செயல்களன்று. இவற்றால் பொருள், கால இழப்பு ஏற்படுமே தவிர எவ்வித நன்மையும் இல்லை என்று உணர வைக்கின்றார்.

புராண இதிகாச எதிர்ப்பு

அறிவும் தன்மானமும் அடைவதற்குப் புராண இதிகாச ஒழிப்பு அடிப்படைத் தேவை என்பார் பெரியார்.[13] தமிழ்மக்கள், புராண இதிகாச

மாயையினால் அடிமை வாழ்க்கை நடத்துவதைக் கண்டு, அவர்களிடம் புராண இதிகாசங்களின் பொய்மையை எடுத்துக்காட்ட விரும்புகின்றார் கலைஞர்.

இப்புதினத்தில் இடம் பெற்றுள்ள சிவநேசர், அறிவு மயங்கிய நிலையில், "நான் தான் சிவபெருமான் - நெற்றிக்கண்ணன்! இயற்பகை நாயனாரின் மனைவியைப் பரிசோதிக்கப் புறப்பட்டிருக்கிறேன். சிறுத் தொண்டரின் பிள்ளையைக் கறி சமைத்துச் சாப்பிடப்புறப்பட்டிருக்கிறேன்."[14] என்று கூறுவதாகப் படைத்து, புராணக்கதை குறித்த தம் எள்ளலை வெளிப்படுத்துகின்றார்.

மணமகன் அழகப்பனைப்பற்றிக் குறிப்பிடும் போது "குணத்தில் தருமனம்மா தருமன்" என்றாள், சிந்தாமணியின் தாய் சிவகாமி. "குதிரைப்பந்தயப் பழக்கமுண்டோ?"[15] எனச் சடக்கெனக் கேள்வியை வீசினாள் ஆண்டாள். இதன் வாயிலாகத் தருமன் என்றாலே பந்தயப் பழக்கமுடையவன் என்று மக்கள் கருதவே முற்படுவர் என்பதை உணர்த்துகின்றார்.

"இராமாயணத்திலே முக்கால்வாசி கதை காட்டிலே நடந்தது - நாட்டிலே நடந்தது நாலில் ஒன்று! இராமாயணம் என்பது ஒரு காட்டுக்கதை - காட்டிலே உள்ள பிராணிகள் சிலவற்றைக் கதாநாயகனாகவும் கதாநாயகியாகவும் வைத்து எழுதப்பட்ட கதை"[16] என்று சிவநேசரைப் பேசவைத்து, கலைஞர் தம் இராமாயண எதிர்ப்பைப் புலப்படுத்துகின்றார்.

இப்புதினத்தில் டைகர், சிந்தாமணியைத் தனக்குத் திருமணம் செய்து தர வேண்டும் என்று சிவநேசரைக் கேட்கும் போது அவர், "கன்னிகழியாமல் பிள்ளைபெற்றவள்; அவள் தான் அசல் குந்திதேவி! ஏ பாண்டு மகாராஜனே! அவளைக் கல்யாணம் செய்து தர முடியாது! ஓடிவிடு"[17] என்று கூறுவதாகப் படைத்தும் பாரதக்கதை நிகழ்ச்சியை எள்ளுகிறார்.

மூடநம்பிக்கை எதிர்ப்பு

பெரியாரின் சமுதாயச் சீர்திருத்தப்பள்ளியில் பயிற்சி பெற்றுப் பகுத்தறிவியக்கப் பணியாற்ற முற்பட்டவர் கலைஞர். மூடநம்பிக்கைகள் வாழ்க்கையில் உள்ள பிடிப்பைத் தளர்த்தி - முன்னேற்றத்திற்குத் தடையாகி நிற்பன என்பதில் உறுதி காட்டுகின்றார். இனிவரும் தமிழ்ச்சமுதாயம் குருட்டு நம்பிக்கைகளிலிருந்து விடுபட்டு மூளையோடு முன்னேற வேண்டும் என்று விரும்பி, மூடநம்பிக்கைகளின் போலித் தன்மையை வெளிப்படுத்துகின்றார்.

இப்புதினத்தில் நாளும் கோளும் பார்த்து எச்செயலையும் மேற்கொள்ளும் செயலைக்கண்டிக்கின்றார். "ஏகநாதருக்கு ஏற்றநாள்"[18], வீடுவாசல் தூய்மை செய்து கோலமிட்டு அழகுகூட்டுவதற்கு உரிய நாள்,"[19] "வீட்டுத் தெய்வத்துக்கு விளக்கேற்றிப் படையல் போட உகந்தநாள்,"[20]

மங்கலநாள், மஞ்சள் குங்குமம் ஆகியவற்றிற்கு இணையான சிறப்புடைய நாள்"[21] என்றெல்லாம் வெள்ளிக்கிழமையை மக்கள் கருதும் மனப்பாங்கினை எடுத்துக்காட்டி, அந்த நாளில் சிவநேசர் குடும்பத்திற்கு நேர்ந்த இன்னல்களைப் படைத்து, அந்நாளைப் புனிதமெனக் கருதுவது மடமை என அறிவுறுத்துகின்றார்.

நல்லநாள் பார்த்துப் பெண் பார்க்க வந்த மணமகன் அழகப்பன் வீட்டார், டைகரின் ஆட்களால் தடுக்கப்பட்டனர்.[22] குளிக்கச் சென்ற சிந்தாமணி மீது டைகர் கல்லெறிய, அவள் கால்சறுக்கிக் கீழே விழுந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள்.[23] சிந்தாமணி மாசு படிந்தவள் என்ற பொய்யான செய்தியை டைகர் பரப்பியதால் சிந்தாமணியின் தந்தை சிவநேசர் வாழ்வை முடித்துக் கொண்டார்.[24] சிந்தாமணியின் தாய் சிவகாமி, மகளின் நிலையறிந்து, மனந்தாளாது தற்கொலை செய்துகொண்டாள்.[25] சிந்தாமணி மீது அபின் கடத்திய குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.[26] இவ்வாறு, நல்ல நாள் பார்த்துத் தொடங்கிய செயலினால்? அடுக்கடுக்காகப் பல துன்பங்கள் தொடர்ந்து பல உயிர்களைப் போக்கிய "மங்களமான வெள்ளிக்கிழமை தன் கடையைக் கட்டிக் கொண்டு சனிக்கிழமைக்கு வழிவிட்டது"[27] என்று கலைஞர் நல்லநாளில் நடந்த துன்பங்களைக் காட்டுகிறார்.

"நான் நம்பிய நாளோ - நட்சத்திரமோ - கோயிலோ - தெய்வமோ எதுவுமே என்னையும் என் குடும்பத்தையும் மானத்தோடு வாழ விடவில்லை.[28] என்று நாள் நட்சத்திரத்தில் நம்பிக்கை கொண்ட சிவநேசரே இறுதியில் அத்தகைய நம்பிக்கையால் பயனில்லை என்று எடுத்துக் கூறுவது கருதத்தக்கது. "வெள்ளிக்கிழமை பொழுது விடிந்தாலும் விடிந்தது நம்ப குடும்பத்துக்கு விநாசகாலமும் வந்து முடிந்தது"[29] என்று சிவகாமியும் நாளும் கோளும் பற்றிய எண்ணத்தில் மாறுபட்டதைக் காட்டுகின்றார்.

பெண்பார்க்க மணமகன் வருகிறான் என்று ஆவலோடு எந்த வெள்ளிக்கிழமையைச் சிந்தாமணி எதிர்பார்த்தாளோ அதைப் போன்றதொரு வெள்ளிக்கிழமையிலேயே தன் உயிரையும் முடித்துக் கொண்டாள்.[30] என்று படைத்து, நல்லநாள் என்னும் நம்பிக்கையை மறுக்கின்றார் கலைஞர்.

வெள்ளிக்கிழமையை எல்லா மக்களும் விரும்பி நல்ல செயல்களைச் செய்ய விழைகின்ற நிலையில், உலக மக்கள் விரும்பாத செயலும் அத்தகைய வெள்ளிக்கிழமையில் நடந்து முடிந்ததைக் கலைஞர் தெரிவிக்கிறார். உலக உத்தமர் காந்தி கொல்லப்பட்ட நாள் கூட வெள்ளிக்கிழமை தான்[31] என்று நல்ல நாளில் தீய செயலும் நடந்துள்ளதைப் புலப்படுத்தி, நாள் பார்த்துச் செய்யும் மூடத்தனத்தை மக்கள் விலக்கவேண்டுமென்கிறார். ஏசுவின் மறைவும் வெள்ளிக்கிழமையில் நடைபெற்றமை இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

எல்லா நாளும் நல்லவையே; அவற்றில் உயர்வு தாழ்வு கற்பிப்பது தேவையற்றது மட்டுமன்று; மூடநம்பிக்கையும் ஆகும் என்பது கலைஞர் முடிவு.

பெண் விடுதலை

சமுதாயத்தில் ஆடவருக்கு நிகரான எண்ணிக்கையில் வாழுகின்ற பெண்கள், குடும்ப வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையாக விளங்குபவர்கள். ஆனால் அவர்களுக்குச் சமுதாயத்தில் சமஉரிமையுடன் வாழும் நிலையில்லை. சமுதாய அமைப்பு காரணமாகப் பல்வகைத் துன்பங்களுக்கு ஆளாகின்றனர். தொடக்கத்தில் குழந்தைமணம், உடன்கட்டை ஏறுதல், கைம்மை ஆகிய கொடுமைகளுக்கு ஆளானார்கள். காதல், கல்வி, உடைமை ஆகியவற்றிலும் உரிமை இல்லாதவர்களாகவே அவர்களின் நடைமுறை வாழ்வும் அமைந்துள்ளது.

இந்த நூற்றாண்டில் பெண்களுக்காக ஏற்பட்ட இயக்கங்கள், போராட்டங்கள் ஆகியவற்றினால் பெண்களின் நிலை வியத்தகு முன்னேற்றம் கண்டாலும் ஆடவர் வல்லாண்மையிலிருந்து முற்றும் விடுதலை அடையவில்லை என்றே கூறலாம். கொலை, தற்கொலை, கற்பழிப்பு, உயிருடன் வருத்துதல் முதலானவை பெண்கள் நாள்தோறும் சந்திப்பவைகளில் சில. சமுதாயச் சீர்திருத்தக் கொள்கைகளில் பெரியாரின் வழியைப் பின்பற்றி வரும் கலைஞர் பெண்களைப் பற்றிய கருத்திலும் அத்தகைய மனப்போக்குக்கொண்டவராகவே விளங்குகின்றார்.

"வெள்ளிக்கிழமை" புதினத்தில் தலைமைப் பெண் மாந்தராக இடம் பெறும் சிந்தாமணியை, பழிதுடைக்க அஞ்சாப் பாவையாகப் படைத்துள்ளார் கலைஞர். சிந்தாமணி, திருமணமாவதற்கு முன்பே டைகரின் சூழ்ச்சியால் 'வழுக்கி விழுந்தவள்' என்ற பழிக்கு ஆளாகின்றாள். உண்மையை நிலைநாட்ட முயலும்போது, 'அபின்கடத்தியவள்' என்ற குற்றசாட்டும் சுமத்தப்படுகிறது. பெற்ற தாய் தந்தையர் வேதனை தாங்காது மடிந்து விட்டனர் என்ற நிலையிலும், மனங்கலங்காது பழிதுடைக்கப்போராடி, இறுதியில் விபச்சாரப்பட்டத்திலிருந்தும், அபின் கடத்தல் குற்றத்திலிருந்தும் தன்னை விடுவித்துக் கொண்டு மாசற்றவள் என்பதை, தன்னை விரும்பி வந்தவனிடம் உணர்த்தி மடிகின்றாள். பெண்கள் பழி சுமக்கும் பொதிகளாக இன்றிப் பழிதுடைக்க அஞ்சாப் பண்பினராக விளங்கவேண்டும் என்பதை வற்புறுத்துகின்றார்.

சிந்தாமணி, தன் தாயிடம், "கல்யாணத்தைப்பற்றிக் கவலைப்படவில்லையம்மா நான்! மணிமேகலையைப் படித்திருக்கிறேன். அவளுக்கிருந்த உள்ளத்தை என்னாலும் படைத்துக் கொள்ள முடியும். ஆனால் என் மீது வீசப்பட்ட அவச்சொல்லை - அவமானச் சொல்லை அறவே அகற்றியாக வேண்டும் - அதுவரையில் எனக்குத் தூக்கமில்லை"[32] என்று கூறுவதாகப் படைத்து, மனஉறுதியுடையவர்களாக மங்கையர்கள் திகழவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார்.

பெண்கள், தம்மைக் காத்துக்கொள்ளும் வலிமையைப் பெற்றிருக்க வேண்டும் என்ற கொள்கையுடையவர் கலைஞர். பழியைத் துடைக்கச்சீறியெழும் நிலையில், சிந்தாமணியை, டைகர் கைப்பிடித்து இழுத்துக்கொண்டு ஓடும்போது, தன் வலிமையை ஒன்றுதிரட்டி,

'எண்ணெயிலிட்ட அப்பளம் போல் வீங்குமளவுக்கு அவன் கன்னத்தில் அறைந்தாள்.[33] 'உமியல்ல மாதர் வலக்கை; தீயர் உயிரைக் குடிக்கும் உலக்கை'[34] என்பதை உண்மையாக்கி, பெண்கள் துணிவுடைய வாழ்க்கை மேற்கொள்பவர்களாக மாற வேண்டும் என்ற விழைவை வெளிப்படுத்துகின்றார்.

சிந்தாமணிக்கு அவப்பெயரை ஏற்படுத்த, தன்னலம் காரணமாக டைகர் வற்புறுத்தும் போது இப்புதினமாந்தர் ஆனந்தி, 'அவள் வாழ்வு முள்நிறைந்த காடாகி விடுமே[35] என்று கண்கலங்குவதாகவும், இளமையின் துடிப்பு நிறைந்த ஒருத்தியின் எதிர்காலத்தில் கரிபூசிவிட்ட நிலையை மாற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டு இறுதிவரை ஆடவர் வல்லாண்மை, துரோகம் ஆகியவற்றுக்கு எதிராகப் போராடி மடிவதாகவும் படைக்கப் பட்டிருக்கிறாள். ஆணாதிக்கக்கொடுமையிலிருந்து விடுபடப் போராடும் பெண்களுக்கு, பெண்ணினமே எதிராகச் செயல்படக்கூடாது; தன்னினத்துக்கு என்றும் ஊன்று கோலாகத் திகழ வேண்டும் என விழைகின்றார்.

பெண்களின் முன்னேற்றம் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு வழிகோலும் என்பதில் உறுதி கொண்டுள்ள கலைஞர். பெண்கள் தமக்கேற்படும் பழியைத் துடைத்திடல் வேண்டும் என்பதையும் தீமை கண்டு பொங்கியெழும் போர்ப்பண்பு பெண்ணுக்குத் தேவை என்பதையும், தம்மைக் காத்துக் கொள்ளும் திறமை பெண்களுக்கு இன்றியமையாதது என்பதையும் உணர்த்துகிறார்.

சமயமும் கடவுளும், இவற்றின் சார்புடைய மூடநம்பிக்கைகளும், புராண இதிகாசங்களும், பெண்ணடிமை முதலான கொடுமைகளும் சமுதாயத்தைப் பிணித்து வதைக்கின்ற நோய்கள். இவற்றிலிருந்து மக்கள் விடுபட, மக்களை விடுவிக்க வேண்டும். இதன்பிறகே பொருளாதார நிலையில் சமுதாயம் வளம் பெறும் என்பதே கலைஞர் முடிவு. இதனடிப்படையிலேயே, குறிப்பாக, நாளும் கோளும் பார்த்துச் செய்வன தீமையிலும் முடியும் என்பதை வலியுறுத்த 'வெள்ளிக்கிழமை' என்று புதினத்துக்குப் பெயர் சூட்டித் தமது கருத்துப்பரப்பலை மேற்கொள்கிறார் கலைஞர்.

குறிப்புகள்

1. நா.செயபிரகாசு, சிலப்பதிகாரம் காட்டும் தமிழகச் சமுதாயநிலை (சென்னை, 1978), ப.62.
2. ப.ஜீவானந்தம், சங்க இலக்கியத்தில் சமுதாயக் காட்சிகள், (சென்னை, 1973), ப.42.
3. மா.செல்வராசன், பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர், (சென்னை, 1979) ப.35.
4. ஈ.வெ.ராமசாமி, பிரகிருதிவாதம் அல்லது மெட்டீரியலிசம், (திருச்சி, 1970), ப. 12.

5. மா.செல்வராசன், மு.கு.நூல், ப.63.
6. மு. கருணாநிதி, வெள்ளிக்கிழமை, (சென்னை, 1983) ப. 41.
7. மு. கருணாநிதி, வெள்ளிக்கிழமை, (சென்னை, 1983) ப. 134.
8. ஈ.வெ.ராமசாமி, மு.கு. நூல், ப.4.
9. மு.கருணாநிதி, சிறையில் பூத்த சின்னச் சின்ன மலர்கள், (சென்னை, 1978), ப.11.
10. மு.கருணாநிதி, சிறையில் பூத்த சின்னச் சின்ன மலர்கள், (சென்னை, 1978), ப.78.
11. மு.கருணாநிதி வெள்ளிக்கிழமை, ப.97.
12. மு.கருணாநிதி வெள்ளிக்கிழமை, ப.67.
13. ஈ.வெ.ராமசாமி, இராமாயணப்பாத்திரங்கள், (திருச்சி, 1972), ப.12
14. மு.கருணாநிதி, வெள்ளிக்கிழமை, ப. 97
15. மு.கருணாநிதி வெள்ளிக்கிழமை, ப.18
16. மு.கருணாநிதி, வெள்ளிக்கிழமை, ப. 98
17. மு.கருணாநிதி, வெள்ளிக்கிழமை, ப. 86
18. மு.கருணாநிதி, வெள்ளிக்கிழமை, ப. 10
19. மு.கருணாநிதி, வெள்ளிக்கிழமை, ப. 10
20. மு.கருணாநிதி, வெள்ளிக்கிழமை, ப. 10
21. மு.கருணாநிதி, வெள்ளிக்கிழமை, ப. 10
22. மு.கருணாநிதி, வெள்ளிக்கிழமை, ப. 45
23. மு.கருணாநிதி, வெள்ளிக்கிழமை, ப. 27
24. மு.கருணாநிதி, வெள்ளிக்கிழமை, ப. 144.
25. மு.கருணாநிதி, வெள்ளிக்கிழமை, ப. 151.
26. மு.கருணாநிதி, வெள்ளிக்கிழமை, ப. 129.
27. மு.கருணாநிதி, வெள்ளிக்கிழமை, ப. 132.
28. மு.கருணாநிதி, வெள்ளிக்கிழமை, ப. 144.
29. மு.கருணாநிதி, வெள்ளிக்கிழமை, ப. 98
30. மு.கருணாநிதி, வெள்ளிக்கிழமை, ப. 180
31. மு.கருணாநிதி, வெள்ளிக்கிழமை, ப. 10
32. மு.கருணாநிதி, வெள்ளிக்கிழமை, ப. 121.
33. மு.கருணாநிதி, வெள்ளிக்கிழமை, ப. 124.
34. பாரதிதாசன், தேனருவி, புதுச்சேரி, 1956), ப.13.
35. மு.கருணாநிதி, வெள்ளிக்கிழமை, ப. 59.

23 கலைஞரின் சிறுகதைகளில் சமூகப் பங்களிப்பு

முனைவர். சு. ஆனந்தன் பிள்ளை

முன்னுரை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில்தான் 'சிறுகதையும் இலக்கியத்தில் ஒரு பகுதி' என்ற கொள்கை வலுப்பெற்றது. (தமிழில் சிறுகதைகள் - சாலை. இளந்திரையன்)

சிறுகதைகளின் முன்னோடிகளாக வாசிங்டன் இர்வின், எட்கர் ஆலன்போ ஆகிய அமெரிக்கர்கள், ஸ்டீவன்சன், கிப்ளிங், ஹாக்கார்டு முதலிய ஆங்கிலேயர்கள், எமிலிசோலா, மாப்பசான், தாதே போன்ற பிரெஞ்சுக்காரர்கள், டால்ஸ்டாய், ஆண்டன் செக்காவ் போன்ற ருசியர்கள் ஆகியோரைக் குறிப்பிட்டாதல் வேண்டும்.

எனினும் மு. வரதராசன், அடைக்கலசாமி முதலான இலக்கிய வரலாறு எழுதிய ஆசிரியர்கள் சிறுகதையின் தோற்றுநராக எட்கர் ஆலன் போவையே பெரிதும் குறிப்பிடுகின்றனர்.

தமிழைப் பொறுத்தவரையில் வ.வே.சு. ஐயர் சிறப்பாகக் குறிப்பிடப்படுபவர். வீரமாமுனிவரைக் குறிப்போரும் உண்டு. தமிழில் சிறுகதையின் தோற்றம் பற்றிய வரலாறு இவ்வாய்வின் பெருக்கம் கருதி இங்கு இடம் பெறவில்லை.

சிறுகதை இலக்கியத்தில் புதுமைப் பித்தன், கு. இராசவேலு, பி.எஸ். இராமையா, மௌனி, கு. அழகிரிசாமி ஆகியோர் ஆற்றிய பணிகள் ஒருவிதமென்றால், சமுதாயத்தில் புரையோடிப் புண்ணாய்ப் போன ரணங்களைச் சுட்டிக்காட்டி, மருந்திட்டு அதற்குத் தீர்வு காணும் கதைகளைத் தந்தவர் கலைஞர். எனவே சிறுகதை இலக்கியத்தில் தமக்கெனத் தனியிடம் பெறும் கலைஞரின் சிறுகதைகளை ஆய்வு செய்தலே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமெனலாம்.

கலைஞர் சிறுகதைகளைத் தீட்டி அதில் நம் தமிழ்ச் சமுதாயத்தின் அவலத்தைக் காட்டியுள்ளார். பேச்சின் கற்கண்டு எழுத்தில் இனிக்கவில்லை. மாறாகத் தமிழ்ச் சீரழிவைச் சாடிப் படிப்போரை வருத்துகிறது. அவர்தம் சிறுகதைப் படைப்பு தமிழ்த் தொண்டு என்பதை விட சமூகத் தொண்டு என்பதே பொருந்தும்.

அறிவும் உணர்வும், கருத்தும் கற்பனையும், பகுத்தறிவும், கலைத்திறனும், சொல்வன்மையும் எழுத்து வன்மையும், இலக்கியப் பண்பும், அரசியல் ஆண்மையும், சிந்தனை விளையும் செயல் திறனும் கலைஞர் அவர்களின் சிறுகதைகளில் சிந்தனைக்களமாகி ஒளிவீசுகின்றன.

கலைஞர் அவர்களின் ஏழு சிறுகதைகள் இங்கு ஆய்வு

செய்யப்படுகின்றன. அவை 1. காந்திதேசம் 2. அணில் குஞ்சு 3. எழுத்தாளர் ஏகலைவன் 4. மலரவில்லை 5. சுமந்தவள் 6. புகழேந்தி 7. நளாயினி (16 கதையினிலே எனும் கலைஞரின் சிறு கதைத் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டவை).

காந்தி தேசம்

காந்தி தேசம் சிறுகதை, காந்திதேசம் போகிற போக்கினை ஓர் அவலச் சுவையோடு சித்திரிக்கின்றது.

காந்தி சுடப்பட்ட அன்று அதைப்பற்றிக் கவலைப்படாத மக்கள் கூட்டம் சென்னையிலும் உள்ளது. இதனை ஆதங்கத்தோடு காந்திதாசன், பாத்திரம் வழிக் கலைஞர் வெளிப்படுத்துகின்றார்.

வறுமைக் கோட்டுக்குக் கீழே வெளவால்களாகத் தொங்கிக் கொண்டிருப்பவர்களை வானம்பாடிகளாகப் பறக்க விடவேண்டும் என்ற நம்பிக்கையில் காந்தி சுதந்திரம் வாங்கினார். அச்சுதந்திரம் முழுமையாக விடிந்தபோது அந்த விடியலில் காந்தி இல்லை. காந்தி மட்டுமா இல்லை. சுதந்திரத்தை முழுமையாக உணர்ந்தோருமில்லை. இங்குச் சிறுகதை கவிநயமாய் மாறி நம்மனத்தை நெருடுகிறது.

காந்தி கொல்லப்பட்ட அன்று டாக்சியில் உடல் விற்கும் வணிகம்; தடுத்து நிறுத்தும் காந்திதாசன். ஆயிரம் பேர் எழுதி வைத்த கடிதமாய் விளங்கும் அப்பெண்ணை 'இன்று இத்தொழில் வேண்டாம்' என்று காந்திதாசன் கூற,

'யாரைச் சுட்டா எங்களுக் கென்னய்யா - இது எங்க பொழப்பு' சட்டென்று பதில்.

பெண் வடிவில் அறியாமை இருள் ஒரு பக்கம், அறிந்தும் இருளில் மூழ்கும் ஆண் ஒரு பக்கம், இதைத் தடுத்து நிறுத்த முனையும் காந்தியவாதி ஒரு பக்கம். மண்ணின் யதார்த்தம் இங்குப் பெண்ணின் யதார்த்தமாகிறது. தன்னை அழைக்க வந்தவனைப் பார்த்து அந்தப் பெண் 'இந்த ஆளு யாரு? யாரோ செத்ததுக்கு என்னைக் கட்டி அழச் சொல்லுது. எவனோ ஒருத்தனை தினம்தினம் கட்டி அழுதாத்தானே எங்க அப்பன், ஆயி புள்ள குட்டிங்க வயிறு நிரம்பும்' என்கிறாள். வயிற்றுக்கு உணவிட காசை வழங்கி அவளை அனுப்பி வைக்கிறான் காந்திதாசன்.

திக்கற்றுத் தவிப்போர், வழியின்றி உடல்விற்போர், இவரை நாடும் மன ஊனமுற்றோர் ஆகியோருக்கு அறிவுரைகூறி அவர்களில் பலரை நல்வழிப் படுத்தியவன் காந்திதாசன். அவனுக்குச் சரியான வேலை கிடையாது. பம்பாயில் வங்கி ஒன்றில் வேலை பார்க்கும் விதவை அம்மா அனுப்பும் பணத்தில்தான் இந்த நற்செயல்கள் எல்லாம். அம்மாவும் மகன் புரியும் செயல்களை அங்கிருந்தே ஊக்கப்படுத்தினாள்.

காந்திதாசன் விடுதிக்கு வந்தபோது ‘அம்மா மாரடைப்பால் காலமானார்’ என்ற தந்தி கிடந்தது. பம்பாய் பறந்து அம்மாவைப் பார்க்கப் போனபோது அவனுக்குத்தான் எப்படிப்பட்ட அதிர்ச்சி. அம்மா வங்கியில் வேலை பார்க்கவில்லை. பம்பாயின் சிவப்பு விளக்கில் அம்மாவும் ஓர் அங்கம். எனவேதான் தான் படும் துன்பத்தைப் பிற பெண்கள் படவேண்டாம் எனச் சீரழிந்த பெண்களைத் திருத்தும் பணியை மகன் மேற்கொண்டபோது முழு ஒத்துழைப்பு கொடுத்தாள்.

‘ஆகாரத்துக்காக அழுக்கைச் சாப்பிட்டுத் தடாகத்து நீரைச் சுத்தப்படுத்த முயற்சித்த, அந்தத் தாயின் உடலைக்காண அவன் நத்தையாய் ஊர்ந்தான்’. ஆனால் படிப்போர் மனம் ஓடிக் களைத்த குதிரைபோல் வேகமாய்த் துடிக்கும். ஊருக்கு ஒரு காந்திதாசன் புறப்பட்டால் இந்தியாவின் சமூக விடியல் கிழக்குத் திசையில் நம் கையில். இறுதி முடிவு சிறுகதைக்குரிய இலக்கணத்தோடு அமைந்துள்ளது.

இச்சிறுகதையில் காந்திதாசன் தாய் எழுதிய கடிதம் கதாசிரியரின் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துகின்றது. தாய்நாடு எனும் பெயரில் தாய்மை விலைபேசப்பட சிவப்பு விளக்கின் அச்சத்தில் பாவம் காந்திதேசம் தடுமாறுகிறது.

அணில் குஞ்சு

அணில் குஞ்சு. காலத்தால் அழியாத சிறு காவியம் போல் அமைந்த சிறுகதை. இன்றைய மதப்பிரச்சனையை யார் மனதும் புண்படாத வகையில் பக்குவமாய் எடுத்து வைக்கும் அழகுக் கவிதை எனலாம்.

மதக் கலவரத்திற்கு அடிப்படைக் காரணம் எதுவும் தேவையில்லை. மதத்தால் மனம் பிரியும்போது அணில் குஞ்சு கூட அணுகுண்டாய் மாறிவிடும். மனம் ஒன்றுபட்டால் அணுகுண்டுகூட ஆடும் விளையாட்டுப் பந்தாய் உருண்டோடும். மனிதன் படைத்த கடவுளர்களுக்கிடையே பேதமில்லை. மனித பேதம் மத பேதமாய் மாறி மனித நேயம் இரத்தமாய்ச் சிந்தும் அவலம் தேவையா! அணில் குஞ்சு நம்மிடம் கேட்கும் கேள்வி இதுவே. நம்முடைய பதில் என்ன? கதை முடிந்து விடுகிறது.

ஒரு சிறுகதை எழுத்தாளனின் பணி நேரடியாக அறிவுரை கூறுவது அன்று. தன் கதைப் பாத்திரங்கள் மூலம் நுட்பமாய் வெளிப்படுத்துவது. சமயம் என்ற நிலையில் எந்தப் பக்கம் சாய்ந்தாலும் முத்திரை குத்தப்படும் என்ற வகையில் எங்கும் சாயாது கழைக் கூத்தாடிபோல் கலைஞரின் பேனா நடனமிடுகின்றது. இராமன் தடவிய அணில் குஞ்சு சிறு கதையாய்க் கருப்பெற்று உருப்பெற்று கலைஞரின் கைவண்ணத்தில் வளர்ந்துள்ளது.

இராமன் கதை தெரியாத போது அதைத் தடவிக் கொடுத்த ராவுத்தர், கதை தெரிந்ததும் அணில் குஞ்சைத் தூக்கி எறியச் சொல்கிறார். ‘ராமர் கடாட்சம் பெற்ற ஜீவன் அணில் அதை நீங்கள் தொடக் கூடாது. என்கிறார்.’ அய்யங்கார். இங்கு அணில் குஞ்சு தத்தளிக்கிறதா, மதங்கள் தடுமாறுகின்றதா? இல்லை, மனித மனங்களின் வக்கிரப் புத்தி விசுவரூபம் எடுக்கிறதா? கலவரம் உருவாகும் வேளை அணில் குஞ்சைக் கீழே விட, பருந்து ஒன்று பற்றிச் செல்கிறது. மக்கள்

கூட்டம் அணிலுக்கு அனுதாபக் கூட்டம் போலியாகப் போட்டு கலைகிறது.

அந்த ஊரின் அமைதியை அந்த அணில் குஞ்சு காத்தது. அதனால் முடிந்த தியாகத்தைச் செய்தது. மதபேதங்கள் அறியாச் சிறுவன் பரூக் கண்ணில் மட்டும் கண்ணீர். அந்தக் கண்களில் போலியில்லை என்கிறார் கதாசிரியர். அவன் கண்களில் மட்டுமல்ல; மதபேதங்களின் உண்மையை உணர்ந்த அனைவர் கண்ணிலும் நீர்கோத்துவிடச் செய்யும் உன்னதமான சிறுகதை அணில் குஞ்சு.

எழுத்தாளர் ஏகலைவன்

ஒரு சிறுகதைக்குரிய கரு என்பது தோற்றுவாயில் எளிமையான ஒன்றல்ல. வயிற்றில் கருவைத் தாங்கி ஈன்றெடுக்கும் பெண்படும் வேதனைபோல மனத்திற்குள் கருவைச் சுமந்து எண்ணங்களின் நெருடலில் நிற்பது. வேதனையிலும் தாய்க்கு மகிழ்ச்சிபோல் எழுத்தாளனுக்கும் மகிழ்ச்சி. இதைக் கலைஞரின் எழுத்தாளர் ஏகலைவன் கதை நன்கு சுட்டுகிறது.

கதையின் கரு எந்த இடத்திலும் பூத்துவிடலாம். பூத்ததாலேயே பூவெல்லாம் சிறப்படைவதில்லை. அவற்றிற்குரிய அழகும் மணமும் சேரும்போது ஒளி கூடுகிறது.

கண்ணகியின் சிலையைப் பார்த்து எத்தனை கண்ணகிகள் காவல் நிலையத்தில். இது கருவானால்! வேண்டாம் பலபேர் கருவாக்கித் தெருவில் விட்டதுதானே. பாரதிதாசன் சிலையைப் பார்த்து தமிழ்ப் பற்று குறைந்து வரும் நிலை கதையாக்கப்பட்டால் முன்னோர் முயன்று முடியாத பயணம். இப்பயணங்கள் முடிவதில்லை.

கடற்கரையில் நண்டுகள் மனிதர்களைக் கண்டவுடன் ஓட கிராமத்தில் பருவமடைந்த பெண்கள் ஆண்களைக் கண்டதும் மறைவது உவமையாக, பெண் விடுதலையை எழுதினால் என்ன? வேண்டாம் இது பற்றி ஆயிரம் கதைகள் வந்து விட்டன.

கடற்கரையில் சுண்டல் விற்கும் பையன் - அவனிடம் பேசியபோது அவன் ஏழ்மை - தாய்மீது அவன் கொண்ட பாசம் - அவன் கதை அருமை - அப்போது சுண்டல் விற்ற பையனின் தாய் இறந்து விட்டதை ஒரு பையன் ஓடி வந்து கூற, சுண்டலைப் போட்டுவிட்டு அவன் ஓட, அதைப் பெட்டியுடன் எடுத்தார் எழுத்தாளர்.

பக்கத்தில் பெண்மடியில் படுத்துக்காற்று வாங்கிய ஒருவன் அவரைப் பார்த்து 'இந்தா சுண்டல் இங்கே வா!' என்றான். யதார்த்தம் கதையை விழுங்கக் கற்சிலையாக நின்றார் எழுத்தாளர்.

இக்கதையில் மெல்லிய நகைச்சுவை சிறுகதை முழுக்க விரவியுள்ளது. ஒரு கதைக் கருவைத்தேட யதார்த்தம் கருவாகிறது.

பத்திரிகைத் தேவைகளுக்கு எழுதும் எழுத்தாளர்கள் கதைக் கருவிற்காக அலையும் துன்பத்தை நன்கு விளக்குகிறார். தேடல் உந்து சக்தியாய் உள்ளிருந்து இயக்காது, தேவை கருதி கருவைத் தேடும் எழுத்தாளன் நிலை எண்ணிப் பார்க்கத் தக்கது.

மலரவில்லை

மலரினும் மெல்லிய காதல் நாம் நினைப்பதால் மட்டும் மலர்ந்து விடுவதில்லை. எனவேதான் சங்ககாலம் தொடங்கி இன்றுவரை ஒருதலைக் காதல்கள் ஒருகோடியில் நின்று முகாரி பாடுகின்றன. ஓரிடத்தில் மலர்வது ஓரிடத்தில் மலர்வதில்லை. இந்தச் சூழலை மையமாக வைத்து அதே நேரத்தில் சினிமாத் தொழிலில் பிறருக்கு ஒளிதரும் ஒரு லைட்பாயின் இருட்டு வாழ்க்கையைத் தனக்கேயுரிய எள்ளல் நடையில் 'மலரவில்லை' சிறுகதையில் வெளிப்படுத்துகின்றார். இலக்கியப் போக்கு இக்கதையில் மிகுந்துள்ளது.

திரைத் துறையில் தனக்குரிய அனுபவத்தை இக்கதையில் நுட்பமாகத் தரும் விவரங்கள் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். லைட்பாயின் பெயரில் ஒளியைக் காட்ட நினைத்த ஆசிரியர் அவனுக்கு ஆதவன் என்று பெயர் வைத்துள்ளமை சிறப்புமிக்கது.

ஆயிரக் கணக்கில் பணம் வாங்கி நடிகர்கள் நேரத்திற்கு வருவதில்லை. இதனை 'இந்திய சர்க்காரின் ரயில்களைப்போல இருநூறு முந்நூறு நிமிடங்கள் தாமதமாக வருவதையும் எண்ணிப் பார்த்துத் தயாரிப்பாளர் பெருமூச்சு விடுவார்'. இங்கு இன்றைய நடைமுறை உவமையைப் பயன்படுத்தி எழுத்தாளர் தற்கால உணர்வுகளுக்கு முதலிடம் தருகிறார்.

ஒவ்வொரு நாளும் படப்பிடிப்பிற்கு முன் கருவிகளுக்குத் தேங்காய் உடைத்துப் பூவைத்துப் பூசை நடக்கும். இதனைப் பார்த்து அந்த லைட்பாய் உள்ளுக்குள் சிரிப்பான் 'எவனோ ஒரு மேல் நாட்டு முட்டாள் கண்டு பிடித்த விஞ்ஞானச் சாதனைகளுக்கு நமது நாட்டு அறிவாளி பூப்போட்டுப் பூசையாவது செய்கிறானே' என்பான். இங்கு ஆசிரியரின் ஏக்கம் எள்ளல் சுவையாகி வெளிவருகிறது.

தாய்மீது மகன் கொள்ளும் பாசத்தைக் கலைஞர் சுட்டத் தவறவில்லை.

'தான் பட்டினி கிடந்தாவது தாய்க்குடல் கருகாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்பதில் ஆதவனுக்குள்ள அக்கறை எல்லாப் பிள்ளைகளுக்கும் அமையுமென்று கூறிவிட முடியாது. ஒருவாழைப்பழம் கிடைத்தால் கூட அம்மா இன்று ஒரு சீப்பு வாழைப்பழம் கிடைத்தது. எல்லாம் தின்று விட்டேன். உனக்கு மட்டும் ஒன்று கொண்டு வந்தேன். சாப்பிடு என்பான்.

இந்த அன்பின் வெளிப்பாடு ஏழைக் குடும்பங்களில் போலியின்றி அமைகிறது.

அவனுக்குத் திருமணம் செய்யத் தாய் நினைக்கும்போது, கிராமத்தில் சிறுவயதில் தன்னோடு ஓடியாடி விளையாடிய ஆனந்தியை மணக்க நினைத்துக் கிராமம் போய் அவள் ஊரில் இல்லையென்பதை அறிந்து வருந்துகிறான். சிறு வயது விளையாட்டுக்களைக் காதலாக நினைக்கும் பக்குவமின்மை அவனிடம் காணப்படுகிறது.

அன்று புது நடிகை ஒருத்தி நடிக்கும் காட்சி படமாக்க லைட்களைச் சரி செய்து, 40 அடி உயர பரணில் ஏறி உட்கார்ந்து லைட்டிங் சரியாக இருக்கிறதா என்று ஆதவன் பார்த்துக் கொண்டிருந்தான்.

லைட்டிங் ஒளி வெள்ளத்தில் அந்த நடிகையைப் பார்த்தபோது வெளிச்சமெல்லாம் மனத்தில் இருட்டாக 'ஆனந்தி' அல்லவா இவள். அவன் மனத்தில் கூக்குரல். பக்கத்திலிருந்தவன் 'அண்ணே, இவள் ஒரு குக்கிராமம். பெயர் ஆனந்தி. சினிமாவிற்கு வேண்டி 'ஆஷா' என மாற்றிக் கொண்டாள். அவன் முடிக்கவில்லை. நாற்பதடி பரணிலிருந்து விழுந்து விட்டான் ஆதவன். மறுநாள் அவன் மரணம் பத்திரிக்கையில் வெளிச்சம். அதைப் பார்த்த ஆனந்தி என்ற ஆஷா 'நம்முடைய முதல் படத்திற்கு சனியன் விழுந்து கெடுத்துவிட்டதே' என்று கணவனிடம் கூறினாள்.

ஆதவனின் ஏழைத்தாய் அவன் திருமணத்திற்குச் சேர்த்து வைத்திருந்த பணம், இறுதிச் சடங்கை நிறைவேற்றிக் கொண்டிருந்தது.

விளையாட்டுக் காலப் பருவ நிகழ்வுகளைக் காதலாகக் கணக்கிட்டு ஏமாந்து போன ஓர் அப்பாவி இளைஞனின் சோக முடிவு சமூகத்திற்கு ஒரு பாடமாக அமைகிறது.

சுமந்தவள்

தாயன்பு எது? தாய் என்பவள் யார்? இக்கேள்வி கதையாகி நம்மனச் சுமையைப் பெருக்கும் சிறுகதை சுமந்தவள் என்பதாகும். கலைஞரின் சிறுகதை வரிசையில் சுமந்தவளுக்குத் தனியிடம் உண்டு.

பெற்றுவிட்டால் மட்டுமே தாயாகி விடுவாளா? பிள்ளை பெற்றவர்கள் எல்லாம் தாய்கள் தாமா? இதற்கு ஒரு மகனுக்குத் தாயே விளக்கம் கூறுவதாக அமைந்த கதையே சுமந்தவள். வேறுபட்ட ஒரு புதுப்பாணியில் இச்சிறுகதை அமைகிறது. தாயின் விளக்கம் ஒரு சிறுகதையாய் அமைகிறது. அந்த விளக்கத்தில் தாய்மை எது என்பது தன்னை இனங்காட்டுகிறது.

தன் கணவனின் தம்பிக்குத் திருமணம் செய்து வைக்கும் சாக்கில் தனக்கு வேலை செய்ய வசதியான பெண்ணாகப் பார்த்து மணம் பேசி முடித்து, அவளையே வேலை வாங்கி, தான் ஒய்வெடுக்கவும் மாதர்சங்கங்களில் பவனி வரவும் செய்யும் சௌந்தரி. அதைக் கடமையாக ஏற்றுச் செய்யும் மரகதம். இதுவரையில் சிக்கலில்லை. இப்போது சௌந்தரி, மரகதம் இருவருமே குழந்தைபெற, பால் கொடுத்தால் தன் அழகுபோய்விடுமென்று அஞ்சி சௌந்தரி தன் குழந்தை வளர்ப்பைத் தம்பி மனைவியிடம் ஒப்படைத்து ஒய்வெடுக்கிறாள்.

தன் குழந்தை போல் மரகதம் தன் கணவனின் அண்ணன் குழந்தையையும் வளர்க்கிறாள். இருந்தும் இருவரும் சண்டையிடும் சூழல் உருவாக, தம் கணவனின் தம்பி மனைவி என்று கூட நினைக்காது அவள் கூந்தலைப் பற்றி 'சின்னப் புத்திக்கார நாயே! ஏழை வீட்டு எச்சில் இலையே! நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தது என் குற்றம்' என்று ஆவேசமாய்க் கத்தி சௌந்தரி மயங்கி விழ, டாக்டர் வந்து பார்த்து அவளுக்கு எலும்புருக்கி நோய் எனக் கூறிவிட்டார்.

காலங்கடந்த ஞானம். நேரம் போனபின் குழந்தைப்பாசம். சௌந்தரி குழந்தையை அழைக்க அது அம்மா என்று தன் அம்மாவை விட்டுச் சித்தியிடம் ஓடுகிறது.

வயிற்றில் கரு உருவாக அதைப் பத்துமாதம் சுமந்துதான் தீரவேண்டும். சுமந்தவள் பின்னர் பெறத்தான் வேண்டும். சுமப்பது - பெறுவது இவ்விரண்டு வேலையும் செய்தால் மட்டும் ஒருத்தி தாயாகி விட முடியாது. குழந்தை பிறந்தபிறகு அவள் காட்டும் அன்பு, தாய்மையின் வெளிப்பாடு இவைகளே அவளைத் தாயாக்குகிறது.

இங்கு ஒரு கேள்வி எழுப்பப்படுகிறது. 'அப்படியென்றால் பிள்ளை பெற்றவள் தாயில்லையா?' அதற்குப்பதில் தான் இந்தச் சிறுகதையின் இறுதிமுடிவு எனலாம்.

பிள்ளையைப் பேணி வளர்க்காவிடில் அவள் தாயல்ல. 'சுமந்தவள்' அவ்வளவுதான்.

இங்குத்தாய்மைக்கு அளிக்கும் விளக்கம் கலைஞரின் நடையியல் உத்திக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

வயிற்றில் சுமப்பது என்பது ஒரு பகுதி. குழந்தை பிறந்தபின் அதனைப் பேணி அவையத்து முந்தியிருக்கச் செய்தல் என்பது இன்னொரு பகுதி. எனவே பெறுவது என்பது மட்டுமே தாய்மையாகி விடாது. அது ஒரு சுமையை இறக்குவது என்ற அளவில்தான் நிலைக்கும். அப்படியென்றால் அந்த ஒரு செயலை மட்டும் செய்து இரண்டாம் பகுதியைப் புறக்கணித்தவளை என்ன சொல்வது. 'சுமந்தவள்' அவ்வளவுதான் என்கிறார் கதாசிரியர்.

இக்கதையில் தாய் தன் மகனுக்குத் தாய்மையை விளக்க ஒருகதை சொல்வது சிறப்பான உத்தியாக அமைகிறது. தாயின் கடமையை நிறைவாகச் செய்த ஒரு தாயால்தான் தன்மகனுக்கு இப்படியொரு கதையைச் சொல்லமுடியும். அந்தவகையில் நிறைவைத் தரும் சிறந்த சிறுகதை சுமந்தவள் எனலாம்.

புகழேந்தி

புகழில் குளிப்பாட்டப்பட்ட ஒருவனுக்கு இயல்பான தன் உணர்வுகளைக் கூட வெளிப்படுத்த முடியவில்லை. புகழே அவனுக்கு எதிரியாக, தொலையாதோ தன்னைவிட்டு இந்தப் புகழ் என வெறுக்கும் மனப்பான்மை இங்குச் சிறுகதையாக மலர்ந்துள்ளது.

எங்கு போனாலும் தனிமனித சுதந்திரம் பறிபோய் விட்டது. மேதை வந்துவிட்டார் எனக்கூட்டம். பொதுமக்கள் புகழ்ந்து புகழ்ந்தே அவன் மன உணர்வைச் சாகடித்து விட்டனர்.

'நம்மேதை பெண்களைத் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை' மக்கள் கருத்து. வேறுவழியின்றி மேதையும் 'பெண்ணாவது மண்ணாவது' என்பான்.

கல்லூரிப் பேச்சில் மேதையின் பேச்சுக்குக் கை தட்டல். அன்று மேதை தங்கியிருந்த வீட்டின் எதிர்வீட்டில் கல்லூரியில் இவனையே பார்த்த அந்தப் பெண். ஏக்கப்பார்வை. இவனுக்கு வேண்டிய உதவிகள் செய்த சிறுவன் எதிர்வீட்டிற்குப் போனதும் அப்பெண் அவன் கையிரண்டையும் எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்டாள். மேதை அவனிடம் காரணம் கேட்ட போது 'நான் உங்கள் கால்களைப் பிடித்தேன் அல்லவா அதனால் என் கைகள் பாக்கியம் செய்தன என்று என் கைகளைக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்' என்றான்.

மேதை வாயால் சொல்லவில்லை. நினைத்துக் கொண்டான். 'நான் அவள் கால்களையே கண்களில் ஒத்திக் கொள்ளத் தயாராயிருக்கிறேன். அவளோ என் காலில்பட்ட உன் கரங்களை முத்தமிடுகிஷூள். நல்ல புகழப்பா! என்னைக் கொல்லாமல் கொல்கிறது' என முணுமுணுத்தான் மேதை.

மனிதர்களில் இயல்பான உணர்வுகள், ஆசைகள் பூத்துக்கிடக்கச் சமுதாயம் மேதை என்ற பட்டத்தைச் சூட்டி, போர்வையைப் போர்த்தி அவன் ஆசைகளைப் புதைத்துவிடுகிறது. உண்மை முகம் போலி முகங்களுக்கிடையே காணாமல் போய்விட்டது.

ஊரிலுள்ளோர் என்ன ஞானம்? என்ன ஞானம்? என்று அந்த மேதையைப் புகழ, மேதையோ அந்தப் பெண்ணைத்தேடி, கூட்டத்திற்குள் பார்க்காததுபோல் வேடமிட்டது. இவ்வுணர்வு இச் சிறுகதையில் நன்கு கையாளப்பட்டுள்ளது.

புகழ், போதையைமட்டும் தருவதன்று. பல நேரங்களில் வேதனையையும் தருவது. ஊருக்கெல்லாம் மகிழ்ச்சி தந்த மேதையென்ற பட்டம் அவனுக்கு வெறுப்பாகிவிட்டது.

நளாயினி

புராணத்தை, புராணம் கூறும் கதையை மாறுபட்ட முறையில் சிந்திக்கின்றது. பழமையை மாற்றுதல் மரபன்று என்பர். மாற்றாவிடிலும் அதை ஒரு புதிய நோக்கில் காணுதல் தவறன்று. ஓர் ஆராய்ச்சி நோக்கே எனலாம். அந்தவகையில் கலைஞரின் 'நளாயினி' சிறுகதை, கருஅமைப்பிலும், கதை கூறும் முறையிலும், பழமையான உவமைகளிலும் சிறப்பிடம் பெறுகிறது.

புராணம் என்பதால் பழமையான உவமைகள் புதியவடிவில் வெளிவருகின்றன. சிக்கலான கதை - எதிர்பாரா முடிவு - சர்ச்சைக்குரிய வாதங்கள். இவற்றை மிகுதியும் பெற்றுள்ள 'நளாயினி' சிறுகதை கலைஞரின் கைவண்ணத்தில் புதுப்பரிமாணம் பெறுகிறது. இக்கதைக் கோட்பாடுகள் ஏற்றுக் கொள்ளத்தக்கதா என்பதும் ஆய்விற்குரியது. காலம் காலமாய்க் கூறப்பட்டு வரும் புராணக் கருத்துக்களை மாற்றுதல் ஏற்புடைத் தன்று என்று வாதம் புரிவோர் பலர். ஒருவரின் கதையைத் திறனாய்வு செய்யுலாம், மாற்றுவதற்கு நமக்கு உரிமையேது. அது போல் தான்

புராணக் கதைகளையும் பகுத்தறிவுக்கேற்பத் திறனாய்வு செய்யலாம். ஆனால் கதையை மாற்றுதல் கூடாது என்பர். இக்கருத்து ஏற்புடைத்தே. இக்கருத்தைப் புறக்கணித்து விட்டார் 'நளாயினி' கதையில் கலைஞர் என்பர். ஆனால் இக்கூற்று முழுமையாக ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

புராண நளாயினியை அவர் மறக்கவில்லை. புராணம் விட்டுச் சென்ற நளாயினியின் அகவுணர்வுகளைத் தன்கருத்திற்கேற்ப வெளிப்படுத்துகின்றார். அவள் உணர்வுகள் இப்படியும் ஓடியிருக்கலாம் என்று கோடிட்டுத்தான் காட்டுகிறார். இது தவறன்று. கதைக்கு மாறுபட்டதன்று. கணவனோடு வாழும் மனைவியர் எல்லாம் சிரித்த முகத்தோடுதிரிவதால் மகிழ்ச்சிப் பெருமிதத்தில் உலா வருகிறார்கள் என்று கூறமுடியுமா? அவர்கள் உள்ளத்தில் கணவனைப்பற்றி என்ன எண்ணம் ஓடுகிறது என்பது யாருக்குத் தெரியும்.

கலைஞரும் நளாயினியின் உள்ளத்தில் உணர்வுகள் இப்படி ஓடியிருக்கலாம் என்கிறார். அதை உணராதோர் நளாயினியின் பதிபக்திக்குக் கொடி பிடித்திருக்கலாம். எனவே வேறுபட்ட சிந்தனை மாறுபட்ட கருத்து - சிக்கலான முடிச்சுகள் - சிக்கலின்றிப் போகிறது நளாயினி சிறுகதை.

மாற்றங்களை ஏற்றுக் கொள்ளும் வாசகர்களுக்கு ஜெயகாந்தனின் அக்னிப் பிரவேசம் போல் 'நளாயினியும்' ஒரு சிறப்பான வரவேற்கத்தக்க சிறுகதையாகவே விளங்கும்.

மௌத்கல்யரின் தர்மபத்தினி நளாயினி குட்டரோகம் பிடித்த கணவனோடு கூட விரும்பாது அவரைத் தாசி வீட்டிற்குத் தானே அழைத்துச் செல்கிறாள். அவரைத் தீண்டக்கூட கூசுகிறாள். கையால் தொடாது கூடையில் சுமக்கிறாள். தன்வயதுத் தோழி காதலனுடன் மகிழ்ந்திருக்க அதைப் பார்த்துக் காமத் தீயில் தவிக்கிறாள். கணவனால் இன்பம் பெறமுடியாது போன அவளுக்கு, அவளின் தெய்வீகத்தன்மை பெற்ற தோழி 'கணவனின் இன்பம் பெற இப்பிறவியில் இயலாது போன நீ அடுத்த பிறவியில் பாஞ்சாலியாய்ப் பிறந்து ஐவரை மணந்து, அந்த ஐந்து ஆடவர்களால் காம இன்பம் பெறுவாய்' எனவரம் நல்குகிறாள்.

இவ்வரமே சாபம் என படிப்போரில் சிலர் நினைக்கலாம். ஆனால் நளாயினியின் தவமே இவ்வரத்திற்காகத்தான் என ஏன் இருக்கக்கூடாது? கூடையில் கணவனைத் தாசி வீட்டிற்குச் சுமந்ததால் பத்தினியாகிவிட இயலாது. சுமந்தவளின் நினைப்புக்கள் எப்படியிருந்தன என்பது பற்றிப் புராணம் எதுவும் கூறவில்லை. படிப்போர் கூறிக் கொண்டது. அம்முறையில் அப்புராணக் கதையைப் படித்த கலைஞர், நளாயினியின் உள்ளுணர்வுகளை வேறு விதமாகச் சிந்திக்கிறார்.

பெருவியாதி பிடித்த கணவர் மௌத்கல்யரை நளாயினி, தாசி வீட்டிற்கு எடுத்துச் செல்வதை ஆசிரியர் 'நளாயினி பூத்திருக்கும் ரோஜா, அழுகிப்போன வண்டை - கருகிப்போன ஒரு மலரிடம் எடுத்துச் செல்கிறது' எனக் குறிப்பிடுகிறார்.

புதுமைப்பித்தனின் 'அகலிகை மீண்டும் கல்லானாள்' கதைபோல் புராணத்தில் இது ஒருபுது அலசல். அந்த வகையில் தமிழ் இலக்கியச் சிறுகதை உலகில் 'நளாயினி' ஒரு திருப்புமுனை எனலாம்.

சமூகப்பயன்பாடு

இதுவரை காந்திதேசம், அணில் குஞ்சு, எழுத்தாளர் ஏகலைவன், மலரவில்லை, சுமந்தவள், புகழேந்தி, நளாயினி ஆகிய ஏழுகதைகள் கதைக் குறிப்புடன் திறனாய்வும் செய்யப்பட்டன. இனி இக்கதைகளின் மூலம் சமூகம் பெறும் பயன்கள், சமூகத்திற்குக் கலைஞர் உணர்த்த நினைப்பது யாது என்பதைக் காணுதல் வேண்டும். அந்நிலையில்தான் இவ்வாய்வுக் கட்டுரை முழுமைபெற முடியும்.

'ஆசிரியன் தான் எடுத்துக் கொண்ட கருமத்தில் எந்த அளவு வெற்றி பெற்றிருக்கிறான் அல்லது தவறி இருக்கிறான் என்பதைக் கொண்டே அந்த நூலின் மேன்மை தாழ்மையை நிர்ணயிக்கவேண்டும்' (இலக்கிய விமர்சனம், சிதம்பரநாதன்) என்பர். அந்தவகையில் கலைஞரின் சிறுகதைகள், சொல்லவந்த கருத்தை நடுக்கமின்றி, அழுத்தமாக எடுத்துரைத்து விடுகின்றன.

சமூகம் கெட்டுப் போய்விட்டது. நாமும் ஒரு கல்லையெடுத்து வீசுவோம் என்போர் மத்தியில் கெட்டுப் போன பெண் தன்நிலை பிறருக்கு ஏற்படாது காக்க, தன் உடலை விற்றுச் சம்பாதித்த பணத்தைச் செலவழிக்க, உண்மையறிந்து தாயின் சாவின்போது தடுமாறி நிற்கும் மகனின் உணர்வுகள். இங்கு உடலை விற்கும் பெண்ணிற்குள்ள உயர்ந்த உள்ளம் காந்திதேசத்தின் காந்திய வாதிகளுக்கு இல்லையே எனக் கதாசிரியர் ஏங்குகின்றார்.

மனத்தில் வேற்றுமை வளர்ந்துவிட்டால் பகைமைக்குப் பெரிய பொருள்கள் - காரணங்கள் தேவையில்லை. அணில்குஞ்சே போதுமானது. இந்து-முஸ்லீம் அன்பாய் இருந்தவரை அணில்பற்றிக் கவலைப்படாத சமூகம் வேற்றுமைவந்ததும் 'இது ராமன்தடவிய அணில் நமக்கு வேண்டாம்; தூக்கி எறி' என ராவுத்தரும்; ராமன் தடவிய அணிலை ஒரு முகமதியர் எப்படித்தொடலாம்' என அய்யங்காரும் கூக்குரலிட, இதுவே ஊர்க்கலவரமாக உருவெடுக்கிறது. கடவுளின் பெயரால் மனிதநேயம் சாகடிக்கப்படவேண்டுமா? கேள்வியும், அதனுள்ளே பதிலும் அடங்கிவிடுகின்றன.

காதல் என்பது தானாக மலர்வது. அதுமலரவில்லையென்றால் வாழ்க்கையில் மலரச் செய்ய எத்தனையோ இருக்க அதிர்ச்சி அடைந்து தாயைத் தவிக்கவிட்டு மரணத்தைத் தேடவேண்டுமா? ஒரு லைட்பாயின் வாழ்க்கை மூலம் இவ்வுண்மையை யதார்த்தமாக விளக்குகிறது இக்கதை.

அம்மா! அந்த மூன்றெழுத்து 'உயிர்', தந்த மூன்றெழுத்து. அந்த உயிரைத் தந்ததால் மட்டுமே ஒருத்தி தாயாகிவிட முடியுமா? சிக்கலான கேள்வி. கலைஞர் அதற்குச் சிக்கலின்றி விடை தருகின்றார். பெற்றால் மட்டும் போதாது; அன்போடு வளர்த்துப் பாலூட்டிச் சீராட்டும் போதே

தாய்மை மலர்கிறது. அப்படியென்றால் பெறுவதோடு தன் அழகு கெட்டுவிடும் என்று ஒதுங்கிவிடுபவள் யார்? அவரே கூறுகிறார், அவள் சுமந்தவள். இச்சிறுகதை, தாய் எப்படி இருக்க வேண்டும் என்ற அறிவுரையைச் சமூகத்திற்குத் தரும் சமூக உணர்வுமிக்கது.

கலைஞரின் சிறுகதைகள் சமுதாயச் சீர்திருத்தக் கதைகளே. சமுதாய உணர்வு கதாசிரியரிடம் மேலோங்கியதால் கற்பனை சில கதைகளில் சிறிது வளமை குன்றினும், அவ்வறட்சியே அக்கதைக்கு வளமையாகவிடுகிறது என்பதே உண்மை. சமுதாயத்தின் சீர்கேடுகளுக்குச் சாட்டையடி கொடுக்க அவரது கதைகள் தவறவில்லை. சமுதாயம் ஏற்றுக் கொள்ளுமா என்பது பற்றியும் அவர் கவலைப்படவில்லை. (அதற்கு எடுத்துக் காட்டு இங்கு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளாத அவருடைய 'வாழமுடியாதவர்கள்' சிறுகதை)

வாழ்க்கையைப் பார்த்து அதன் மேடுபள்ளங்களை எழுதும் எழுத்து ஒருவகை. வாழ்க்கையைப் பார்த்து அதனை உள்வாங்கி எழுதும் எழுத்து இன்னொருவகை. இரண்டாம் வகையைச் சார்ந்த கலைஞரின் சிறுகதைகளில் கற்பனை ஊற்றுக் குறைவு தான். ஆனால் நிறைவாக உள்ளவை சமூக உண்மைகள். ஒரு சிறுகதை எழுத்தாளனுக்கு அடிப்படைத்தேவை இந்தச் சமூக உணர்வே. இதனையடுத்தே கதை சொல்லும் உத்தி, நடை, கற்பனை வரிசைப்படுத்தப்படும். இயல்பிலேயே கவிஞராக கலைஞர் இருப்பதால் இவர்தம் கதைகளில் நடைவீச்சில் உரை அழகில் ஓர் ஈர்ப்புணர்வை நம்மால் உணர முடிகிறது. அதுவே இவர்தம் சிறுகதைகளுக்குக் கிடைத்த வெற்றி எனலாம்.

முடிவுரை

இதுவே முடிந்த திறனாய்வன்று. ஏனெனில் திறனாய்விற்கு ஓர் அளவுகோல் இல்லை. இலக்கியம் அளவுகோலுக்கு உட்படும்போதே திறனாய்வு அந்த எல்லைக்குள் வர முடியும். எனவே இங்குக் கலைஞரின் சிறுதுளியே பெருவெள்ளமாக ஆராயப்பட்டுள்ளது.

கருத்தில் கூர்மையும், சமூக நெருடல்களும், உருவாக்கத்தில் உள்ளாக்கமும், நடையில் முருகுணர்வும் கொண்ட கலைஞரின் சிறுகதைகள், சமூகநலத்தில் அக்கறை வேண்டும் என்ற உணர்வுகளுக்காக, மழைக்காக ஏங்கித்திரியும் வானம்பாடிபோல் இலக்கிய உலகில் பவனிவருகின்றன.

பயன்பட்ட நூல்கள்

1. தமிழில் சிறுகதைகள் - சாலை இளந்திரையன்
2. தமிழ்ச் சிறுகதைகள் ஒரு மதிப்பீடு - ச. செந்தில் நாதன்
3. தமிழ்நாவலின் தோற்றமும் வளர்ச்சியும் - கி. வா. ஜகந்நாதன்
4. 16 கதையினிலே - கலைஞர். மு. கருணாநிதி
5. கலைஞர் அவர்களின் 48வது பிறந்தநாள் விழாமலர்
6. இலக்கியவரலாறு - டாக்டர். மு. வரதராசன்
7. இலக்கிய விமர்சனம் - சிதம்பர ரகுநாதன்
8. கலைக்களஞ்சியம்
9. வாழ்வியற்களஞ்சியம்.

24 கலைஞரின் சிறுகதைகள் காட்டும் சமுதாய அவலங்கள்

முனைவர் தா. ஈசுவரபிள்ளை,

சமுதாயம்

சமுதாயம் என்பது குறித்துச் சமூகவியலாளர்கள் பல்வேறு விளக்கங்களைத் தருகின்றனர். அவற்றுள் சிலவற்றை இவண் காணலாம். சமூக அமைப்பாக்கத்திற்கேற்ப (social patterns) ஒரே செயலெதிர் செயல்களை (interactions) மேற்கொள்ளும் பெரும் எண்ணிக்கையிலடங்கிய தனிமனிதர்களை உறுப்பினர்களாகக் கொண்டது சமுதாயம் ஆகும். (Melvin De Fleur, 1973, P. 100) தனிமனிதர்களின் கூட்டமைப்பு, உரிமை மற்றும் ஒற்றுமை உணர்வு, ஏறத்தாழ நிரந்தர இயல்பு முதலான சிறப்புத் தன்மைகளைக் கொண்டது சமுதாயம் ஆகும் (P.C. Deb, 1981, p.10). தம்மைப் பேணிக்காத்துக் கொள்வதற்கும், அழியாமல் நிலைநிறுத்திக் கொள்வதற்கும் ஒன்றாக இணைந்துள்ள மானுடக்குழு சமுதாயம் ஆகும் (வாழ்வியற் களஞ்சியம், தொகுதி.8, ப. 558). குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கட்கூட்டம் ஏற்படுத்திக்கொள்ளும் அமைப்பே சமுதாயம் ஆகும் (கலைக் களஞ்சியம், தொகுதி.4, ப. 478).

சமுதாய ஒழுங்கு

சமுதாய மக்கள் இணக்கமான சமூக உறவு கொள்ளவும், சமுதாயத்தில் காணப்பெறும் நிறுவனங்கள் சீராகச் செயல்படவும், சமூகக் கட்டுக்கோப்பு சிதறாமல் காக்கப்பெறவும், சமூக ஒற்றுமை பேணப்படவும் சமுதாய ஒழுங்கு (social order) தேவை. ஒரு சமுதாயத்தின் ஆக்கக் கூறுகளிடையே நிலையான இணக்கம் நிலவும் போது காணப்படும் நிலையே சமுதாய ஒழுங்கு ஆகும்.

சமுதாயக் கட்டுப்பாடு

சமுதாய ஒழுங்கை நிலைநாட்டச் சமுதாயக் கட்டுப்பாடு தேவை. தனி மனிதர்களின் சமுதாய உறவுமுறைகளில் முறைமை காணப்படவேண்டும். எனவே, ஒவ்வொரு தனிமனிதனின் நடவடிக்கைகளும் சமுதாயத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன. சமூகமயமாதலில் பிறப்பு முதல் இறப்பு வரை சமுதாய உறுப்பினர்கள் சமூக ஒழுங்குகளுக்குக் கட்டாயப்படுத்தப்பெறுகின்றனர். சமுதாய ஒழுங்கு இல்லையெனில் சமுதாயத்தில் முரண்கள் (conflicts), குழப்பங்கள், ஒழுங்கின்மை முதலியன ஏற்பட்டுச் சமூகக் கட்டுக்கோப்பு சிதறிவிடும். எனவே சமுதாயத்தை முறைப்படுத்தும் சமுதாய ஒழுங்கே சமுதாயக் கட்டுப்பாடு ஆகும்.

பல்வேறு சமுதாய, பொருளாதார, சமய, அரசியல் காரணிகளால் தனி மனித நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்படும்போது, சமுதாயக் கட்டுப்பாடு குலைய, அதனால் சமுதாய ஒழுங்கு சிதைய, இவற்றின் விளைவுகளால் சமுதாய அவலங்கள் தோன்றுகின்றன.

சமுதாயமும் இலக்கியமும்

சமுதாயத்தில் காணப்பெறும் பல்வேறு கூறுகளில் இலக்கியமும் ஒன்றாகும். இலக்கியம் சமுதாயத்தில் வாழ்கின்ற படைப்பாளரால் சமுதாய உறுப்பினர்களுக்காக இயற்றப்படுகின்றது. எனவே, இலக்கியம், தான் தோன்றிய காலச் சமுதாயநிலை, அச்சமுதாயத்தில் காணப்பெறும் பல்வேறு பிரச்சனைகள், சமுதாய உறுப்பினர்கள் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய வழிமுறைகள் முதலியனவற்றைக் கூறும் நிலையிலும் அமைகின்றது. சமுதாயமும் இலக்கியமும் நெருங்கிய தொடர்புடையனவாகத் திகழ்கின்றன. இலக்கியச் சான்றுகள் முழுமையையும் அறியாது சமுதாயம் பற்றி ஆராயும் சமுதாய ஆய்வாளர், ஒரு குறிப்பிட்ட சமுதாயம் பற்றிய அறிவில் குருடராகவே காணப்பெறுவார் என்ற கருத்து (Richard Hoggart, 1966, p. 13) இலக்கியத்திற்கும் சமுதாயத்திற்கும் உள்ள உறவைக் காட்டுவதாக அமைகின்றது. இலக்கிய ஆய்வு என்பது சமுதாயத்தின் பண்பாடு, சமுதாய, பொருளாதார, அரசியல் நிறுவனங்கள் ஆகியவற்றைக் கற்பதுடன் மட்டுமன்றிப் பல்வேறு மக்களையும் அவர்கள் வாழ்க்கை மற்றும் நடத்தைகளையும் (behaviours) ஆராய்கின்றது. (Sulochana Rengeya Raghava, 1987,p.1). கலைகளும் அவற்றுள் ஒன்றாகிய இலக்கியமும் அவை உருவாகும் சமுதாயச் சூழலுடன் வைத்துச் சோதிக்கப்பெறும்போதுதான் அவற்றை முழுமையாகப் புரிந்துகொள்ள இயலும் (Raymond William, 1950, p.p. 199-100). இலக்கியம் வெறுமையில் உருவாக்கப்படுவதன்று. இலக்கியப் படைப்பாளி குறிப்பிட்ட ஓர் இடத்தில் குறிப்பிட்ட ஒரு காலத்தில் வாழ்கிறார். இலக்கியப் படைப்பாளி சமுதாயத்தில் இன்றியமையாத பங்கு வகிக்கும் பொறுப்பாளி ஆவார். எனவே சமுதாயத்திற்கும் இலக்கியத்திற்கும் இடையே உள்ள உறவு பரஸ்பரமானதாக (reciprocal) உள்ளது (Slochana Rengeya Raghava, 1987, p.3).

காலத்தின் தேவைக்கேற்பவும்,அரசியல், சமுதாய, பொருளாதார, சமயச் சூழல்களுக்கேற்பவும், மக்களின் சுவை உணர்விற்கேற்பவும் காலந்தோறும் பல்வேறு இலக்கியங்கள் தோன்றி, வளர்ந்து வருகின்றன. அவற்றைப் பல்வேறு கோணங்களில் வகைப்படுத்திக் காண்பர். அவற்றை இலக்கிய வகை (literary genre) என்பர். தமிழ்மொழியிலும் பல்வேறு இலக்கியவகைகள் காணப்படுகின்றன. அவற்றுள் சிறுகதை என்ற இலக்கிய வகையும் அடங்கும்.

மற்றெல்லா இலக்கிய வடிவங்களைவிடவும் நாவல் மனிதச் சமுதாயத்தை ஒவியப்படுத்துவதால் அது சமுதாயத்தில் மிகவும் நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது. போராட்டம் (struggle), ஒழுங்கின்மை (chaos), அமைதிக்குறைவு (anarchy) முதலான சமுதாயக் குழப்பநிலைகளில் நாவல்படைப்பாளர்கள் பல பிரச்சனைகளை எழுப்பி, அப்பிரச்சனைகளை

மையமாகக் கொண்டு தம் படைப்புக்களை உலவவிடுகின்றனர். சமகாலத்தில் சமுதாயத்தில் நிலவும் மதிப்புகள் (values), கருத்துக்கள் (ideologies), பிரச்சனைகள் (issues) முதலியனவற்றைத் தம் எதிர்செயல்களாக (reaction) மட்டுமன்றி, தாம் படைக்கும் நாவல் உலகின் மக்களாகவும் காட்டுகின்றனர் என்று நாவல் பற்றிக் கூறப்படும் கருத்துக்கள் (Sulochana Rangeya Raghava, 1987, p.3) சிறுகதை இலக்கிய வகைக்கும் பொருந்தும் எனலாம்.

கலைஞரின் சிறுகதைகள் காட்டும் சமுதாய அவலங்கள்

இலக்கியப் படைப்பு என்பது உணர்வுபூர்வமான உள்ளத்தின் வெளிப்பாடு ஆகும். படைப்பாளரின் பகுத்தாயும் உள்ளம், கூர்நோக்கு, அனுபவங்கள், அவர்வாழ்க்கையில் ஏற்பட்ட தாக்கங்கள் என்பனவும் அவர் படைப்புக்களில் வெளிப்படும். படைப்பாளியால் படைக்கப்படும் பாத்திரங்கள் அவர் வாழ்க்கையில் கண்டு, கடந்து வந்த பாத்திரங்கள். அவர் படைப்புக்களில் காணப்பெறும் மகிழ்ச்சி, துக்கம் முதலான உணர்வுகள் அவருடைய உணர்வுத் தேக்கங்கள் (emotional stocks) ஆகும்.

கலைஞர் பல்வேறு இலக்கிய வகைகளைத் தமிழுலகிற்கு அளித்துத் தமிழ்மொழிக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் ஆக்கம் சேர்த்த பெருமையுடையவர் ஆவார். அவர் படைத்த இலக்கிய வகைகளில் சிறுகதை இலக்கிய வகையும் அடங்கும். அவர் தம் பல்வேறுபடைப்புக்கள் மூலம் சமுதாயத்தில் காணப்பெறும் சமுதாய, அரசியல், பொருளாதார, பால் பிரச்சனைகளையும், அவற்றின் விளைவுகளையும், அவற்றை அகற்றும் வழிமுறைகளையும் வெளிப்படுத்தக் காணலாம்.

இவ்வகையில் கலைஞர் முரசொலியில் அவ்வப்போது எழுதிய 37 சிறுகதைகளை உள்ளடக்கிய "கலைஞர் கருணாநிதியின் சிறுகதைகள்" என்ற நூலை அடிப்படையாகக் கொண்டு சமுதாய, பொருளாதார, சமய, மதிப்பு அடிப்படையில் காணப்பெறும் சமுதாய அவலங்களை எவ்வாறு சுட்டுகின்றார் என்பதைக் காணும் நிலையில் இக்கட்டுரை அமைகின்றது.

சமய அடிப்படையிலான அவலங்கள்

சமுதாயம் சீராகச் செயல்பட அச்சமுதாயத்தில் பல்வேறு நிறுவனங்கள் அமைந்துள்ளன. நிறுவனங்கள் (institutions) என்பது பற்றி, நிலைத்து நிற்பதும், அமைக்கப்பெற்றதும், நிறுவப்பெற்றதும், சமுதாயத்தின் ஒன்று அல்லது பல சிக்கல்களைத் தீர்க்கும் ஒழுங்குமுறைகளைக் கொண்டதுமாகிய அமைப்பு நிறுவனம், (Ronald W. Smith, 1977, p.169) எனவும், சமுதாயத்தில் காணப்படும் ஏற்றுக்கொள்ளப்பெற்ற, மிகவும் நிலையான ஒழுங்கமைதி கொண்ட பண்பாட்டுக்கூறுகளின் அமைப்பாக்கமும், சமுதாய அமைப்புக்களின் அமைப்பாக்கமும் நிறுவனம் (Melvin De Fleur, 1973, p.621) எனவும் சமூகவியலாளர்கள் பல்வேறு விளக்கங்களைத் தருகின்றனர்.

சமுதாயத்தில் காணப்பெறும் நிறுவனங்களில் ஒன்றே சமயம். சமயம் பற்றி அளிக்கப்பெறும் விளக்கங்களில் சிலவற்றை இவண் சுட்டலாம். புனிதப் பொருள்களுடன் தொடர்புடைய நம்பிக்கைகள், சடங்குகள்

ஆகியவற்றின் சிறந்த முறையாகவும், புனிதப்பொருளுடனும் நம்பிக்கைகளுடனும் தொடர்புடைய செயல்பாடுகளின் ஒருங்கிணைந்த முறையாகவும் சமயத்தை இமைல்டர்க்கியாம் விளக்குகிறார். குளூக் மற்றும் ஸ்டோர்க் என்பார் அடையாளங்கள் அல்லது குறியீடுகள், நம்பிக்கைகள், மதிப்புகள், சடங்குகள், இயற்கையிறந்த சக்திகள் போன்றனவற்றின் நிறுவனமாக்கப்பெற்றமுறை சமயம் என்கின்றனர் (George Ritzer, 1987, p.449).

இச்சமய நம்பிக்கைகளின் அடிப்படையில் மக்களிடையே பகுத்தறிவுக்கொவ்வாத சில மூடநம்பிக்கைகள் நிலவுகின்றன. சமுதாயத்தில் சிலர் தம் மேலாண்மையைத் தக்கவைத்துக்கொள்ளவும், பிறரைச் சுரண்டவும் மூடநம்பிக்கைகளை மக்கள் மனத்தில் பதிய வைக்கின்றனர். மக்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வொரு செயல்பாடுகளிலும் மூட நம்பிக்கைகள் ஆதிக்கம் செலுத்துகின்றன. இதனால் தனிநபர் முன்னேற்றமும் சமுதாய முன்னேற்றமும் பாதிப்புக்குள்ளாகின்றன. இந்நிலையை உணர்ந்த கலைஞர் மக்கள் மூட நம்பிக்கையாகிய போதையில் சிக்கித்தவிப்பதாகக் காட்டுகிறார் (ஆட்டக்காவடி, ப.27). வெள்ளைக்காரன் கடலில் மீனைப் பார்த்துச் சப்மரின் செய்ததாகவும் நாம் மச்சாவதாரம் செய்ததாகவும் கூறி மக்களின் மூடநம்பிக்கையைக் கிண்டல் செய்கின்றார்.

மக்களை ஏமாற்றுதல்

சமுதாயத்தில் மூடநம்பிக்கையின் காரணமாகச் சிலர் மக்களை ஏமாற்றும் அவலநிலை காணப்படுவதைச் சுட்டுகின்றார். "அஷ்டமாசித்திபுரி ஐயனே போற்றி! துஷ்டர்தம் துடுக்கடக்கும் தூயனே போற்றி! கஷ்டங்கள் தீர்க்கும் எங்கள் கண்கண்டதெய்வமே போற்றி! போற்றி!" எனப் பாமரமக்களால் போற்றிப் புகழப்படும் மேன்மையுடையவராகச் சங்கிலியானந்தசாமி திகழ்கின்றார். ஆனால் அந்தரங்க வாழ்க்கையோ வேறு. இரயில் தண்டவாளத்தைத் தன் கையாள் மூலம் பெயர்க்கச் செய்துவிட்டு, அதே பாதையில் ஓடும் இரயிலில் பயணம் செய்கின்றார். தண்டவாளம் பெயர்க்கப்பட்ட இடம் நெருங்கியதும் இரயிலின் சங்கிலியை இழுத்து நிறுத்துகிறார். காரணம் கேட்டபோது இரயில் தண்டவாளம் உடைக்கப்பட்டுள்ளதைத் தன் ஆன்மீக ஞான சக்தியால் உணர்ந்ததாகக் கூறுகிறார். அவர் குறிப்பிட்டுள்ள இடத்தைச் சென்று பார்க்கும் போது தண்டவாளம் உடைக்கப்பட்டிருந்தது. இதைக் கண்ட மக்கள் அவரைத் தெய்வ நிலைக்கு உயர்த்திப் போற்றுகின்றனர். இவர் மக்களை ஏமாற்றிப் பணம் பறிக்கின்றார். (சங்கிலிச் சாமி). நாட்டுக்கு எதிரான கொடிய செயல் செய்துள்ள கயவனை ஞானியாக எண்ணி மக்கள் ஏமாறும் அவநிலையை இக்கதையில் சுட்டுகின்றார்.

கடவுளின் பெயரைக் கூறிக் காமச்சேட்டைகள் செய்தல்

மிராசுதார் மிருகண்டு முதலியார் நெற்றியில் அலகுகளைக் குத்திக்கொண்டு பக்திப் பெருக்குடன் பால்காவடி எடுக்கின்றார். வழியில் ஒரு வீட்டில் கனிமொழி என்ற பெண்ணைக் கண்டு காமம் கொள்கின்றார். இந்நிலையை, "தோளிலே காவடி மனத்திலே கனிமொழி மந்திரம்! அத்துணை

பக்திபூர்வமாக நின்றுகொண்டிருந்தார் பண்ணையார்" எனக் கலைஞர் காட்டுகிறார் (ஆட்டக்காவடி, ப.32). அலகுகளைக் குத்திப் பால்காவடி எடுத்த பண்ணையார் கனிமொழியின் வீட்டுக்குச் சென்று கற்பழிக்க முனையும் அவல நிலையையும் சுட்டுகிறார்.

இராமலிங்கக் குருகுலத்தின் பிரதம ஆசிரியர் இராமலிங்க சிவானந்தம். இராமலிங்க அடிகளின் அருட்பாக்களை மனப்பாடம் செய்து வைத்துள்ளார். தேவார, திருவாசகங்களில் புலி. எம்மதமும் சம்மதம்; தென்னாடுடைய சிவனே போற்றி என எப்போதும் முணுமுணுப்பவர். அனாதைப் பெண்ணாகிய சிந்தாமணிக்குக் குருகுலத்தில் இடம்கொடுக்கிறார். அவளுக்கும் அவர் மகனுக்கும் காதல் ஏற்படுகிறது. இதை அறிந்த இராமலிங்க சிவானந்தம், அவள் ஒழுக்கம் கெட்டவள் எனக்கூறி அவளை மடத்தைவிட்டு விரட்டுவதுடன், அவள் வாழ்க்கையைச் சீரழித்து அவளைப் பிச்சைக்காரியாக்கி விடுகின்றார் (அபாக்கிய சிந்தாமணி). கடவுளின் பெயரைக் கூறிக்கொண்டு, போலி வேடம் தரித்துக்கொண்டு, பிறர் வாழ்க்கையைச் சீரழிக்கும் அவல நிலை இக்கதையில் உணர்த்தப்படுகிறது.

பொருளாதார ஏற்றத்தாழ்வு அடிப்படையிலான அவலங்கள்

சமுதாய மக்களைப் பல்வேறு காரணிகளின் அடிப்படையில் உயர்ந்தவர்கள் என்றும் தாழ்ந்தவர்கள் என்றும் பாகுபடுத்தும் நிலையைச் சமுதாய அடுக்கமைப்பு அல்லது சமுதாயத்தரப்பிரிவு (social stratification) என்பர். இச்சமுதாயத்தரப்பிரிவை உருவாக்கும் காரணிகளில் பொருளாதார ஏற்றத்தாழ்வும் இன்றியமையாத காரணி ஆகும். பொருளாதார ஏற்றத்தாழ்வின் அடிப்படையில் சமுதாய வகுப்புகள் (social classes) உருவாகின்றன. சமுதாயத்தில் சிறுபகுதி மக்கள் உயர்நிலை வகித்துக்கொண்டு முழு நன்மைகள் அடைவதையும், பெரும்பகுதி மக்கள் தாழ்நிலையில் மிகக்குறைந்த அளவு நன்மைகள் அடைவதையும், இவ்விரு நிலைகட்கும் இடைப்பட்ட நிலையில் வாழ்பவர்கள் இடைப்பட்ட அளவு நன்மைகள் அடைவதையும் குறிப்பனவாய்ச் சமுதாய வகுப்புகள் அமைகின்றன (David C.King, 1975, p.104). இச்சமுதாய வகுப்புகளின் அடிப்படையிலும் பல்வேறு அவல நிலைகள் சமுதாயத்தில் இடம்பெறக் காணலாம். இவ்வவலங்களையும் கலைஞர் சுட்டுகின்றார்.

செல்வர்களின் அவலச் செயல்கள்

பொருளாதார வளம் காரணமாகச் செல்வர்களாகிய மேட்டுக் குடியினர் இன்பம் நிறைந்த, வளம்மிக்க, பொழுதுபோக்கு நிறைந்த வாழ்க்கை வாழ்கின்றனர். இவர்களில் சிலர் சுயமைச் செயல்களில் ஈடுபடும் கொடுமையைக் கலைஞர் காட்டுகின்றார். செல்வந்தராகிய இராமதுரை நல்லவர்; நாடு புகழும் வள்ளல்; நாகேசுவரன் கோயிலில் நவராத்திரிக்கு உபயம் கொடுத்தவர்; அகிலாண்டேசுவரி ஆலயத்தில் ஆயிரக்கால் மண்டபம் அமைத்தவர்; புண்ணியவான் என மக்களால் புகழப்படுபவர். இவர் தன் ஆலையில் வேலைசெய்யும் விட்டலின் மனைவி தங்கத்தைக் கற்பழிக்கின்றார் (குப்பிவிட்டார்கள்).

அண்ணாமலை முதலியார் நிலவுரிமையாளர்; தருமதுரை எனப் புகழப்பெறுபவர்; கோயில் கட்டியவர்; கும்பாபிசேகம் செய்தவர். கோயில் திருப்பணிகள் புரிந்தவர்; இவர் தன் பண்ணையில் பணிபுரியும் ஏழைப்பெண்ணாகிய, கணவனை இழந்து அல்லலுறும் பெண்ணாகிய கருப்பாயியைக் கற்பழிக்கிறார். ஊரில் இருந்தால் தலையை வெட்டி விடுவதாகக் கூறி ஊரைவிட்டே அவளைத் துரத்துகிறார் (பிரேத விசாரணை). செல்வராகிய கோடி வீட்டுக் கோவிந்தன் எல்லப்பன் மனைவி செல்லாயியின் மீது காமம் கொண்டு அவளைக் கெடுக்கிறான் (செத்தவள் கதை). மோதகவிநாயகம்பிள்ளை ஊர்ச் சொத்தைத் திருடி வாயில் போட்டுக்கொள்ளும் பெருச்சாளி. புறம்போக்கு நிலங்களை உரிமையாக்கிக் கொண்டவர். கமலம் என்ற ஏழைப்பெண்ணின்பால் காமம் கொண்டு, வயதான வேடத்தில் சென்று தன்னை ஓடிப்போன அவள் தந்தை என்றும், அவள் காதலன் வேலனை ஓடிப்போன அவள் அண்ணன் எனக் கூறியும் இருவரும் இறக்கக் காரணமாகின்றார் (பனங்குலை). செல்வர் வீட்டுக்குழந்தையை வண்டியில் வைத்துப் பூங்காவுக்கு அழைத்துச் செல்கிறாள் ஏழை வேலைக்காரியாகிய பார்வதி. வழியில் புயல், இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்கிறது. மரத்தின்கீழ் ஒதுங்குகின்றனர். மரக்கிளை ஒடிந்து விழுகின்றது. பார்வதியும் குழந்தையும் மயங்கி வீழ்கின்றனர். அப்போது குழந்தையின் தந்தை காரில் வருகின்றார். குழந்தையை மட்டும் அழைத்துக்கொண்டு பார்வதியை விட்டுவிட்டுச் செல்கின்றார் (ஏழை). இந்நிகழ்ச்சிகளின் மூலம் மேட்டுக்குடியினர் கயமை வாழ்க்கை வாழ்தல், பிறர் குடும்பங்களைக் கெடுத்தல், மனித நேயமின்றி வாழ்தல் ஆகிய இழிநிலைகளைக் கலைஞர் புலப்படுத்துகின்றார்.

வறியவர்களின் அவல வாழ்க்கை

பொருளாதார நிலையில் நலிவுற்ற வறியவர்கள் தம் வறுமை காரணமாகவும், செல்வர்களின் ஆதிக்கநிலை காரணமாகவும் பல்வேறு அவல நிலைகளுக்கு உள்ளாகின்றனர். உத்தண்டிக் கோனாரின் வயல் வரப்பை ஆக்கிரமித்த சண்டாளனும், சிவராமனின் தங்கை ஓடைக்குப் போனபோது உபத்திரவம் பண்ணிய அயோக்கிய மனிதனும், அபின் வியாபாரத்தில் கூட்டாளியை ஏமாற்றியவனுமாகிய பண்ணையார் கொலை செய்யப்பெற்றமைக்காக, ஏழையும் குற்றமற்றவனுமாகிய முத்து கைது செய்யப்படுகிறான் (தப்பவில்லை). லீலா ஆலை உரிமையாளர் கொலை செய்யப்பட்டபோது மக்கள் அவர் இறப்புக்காக இரங்குவதை, “காலையிலெழுந்து ‘கடவுளே’ என்று கூப்பிட்டு ஒருமுறை தலைவிதியை நொந்துகொண்டு வயிற்றுப்பாட்டைப் பார்க்கும் ஓர் ஏழை மனிதரா? ஏழை கொல்லப்படுவது ஓர் எறும்பு நசுக்கப்படுவது போல! ராமதுரை போன்ற பணக்காரருக்குச் சாவு வரலாமா? வாழ வசதியும் வளமும் வற்றாத இன்பமும் அளித்திருக்கிற கடவுள் ஆயுளையும் ஆயிரமாக அதிகப்படுத்தக் கூடாதா என்ற கவலை அவர்களுக்கு வளர்பிறை ஆகுமே!” எனக் கலைஞர் குறிப்பிடுவதன் மூலம் இறப்பிலும் பொருளாதார வேறுபாடு நிலவுவதைக் காட்டுகின்றார். “அவள் பெண்ணல்ல; இந்த உலகத்தில் ஒரு மாடு. பகல் முழுதும் எலும்பு முறிய உழைப்பது போல் வீட்டு வேலைகள். அவளுக்கு

எஜமான் மாளிகைதானே வீடு. மாலையில் சூரியனுக்குக்கூட வேலை முடிகிறது. ஆனால் பார்வதிக்கு?" எனச் செல்வந்தரின் வீடுகளில் வேலை செய்யும் பெண்களின் நிலையை உணர்த்துகிறார் (பார்வதி). மாதம் முடிந்து சம்பளம் கேட்கும்போது மேகத்தைவிட அதிகமான கறுப்பை எஜமானனின் முகத்தில் காண்கின்றனர் (ஏழை). "குடிசை மன்னர்களுக்கும் ராணிகளுக்கும்தான் தங்கள் வறுமை ராஜ்யத்தில் இன்பத்துக்காக ஒருசில நிமிடங்கள்கூட ஒதுக்கமுடியவில்லை. கடன்காரர் படையெடுப்பு; தயிர்க்காரி முற்றுகை; இவ்வளவையும் சமாளித்துவிட்டு, இரவு கருணை கூர்ந்து தருகிற சிலமணி நேரங்களில் கர்மவினையை நினைத்துப் புலம்பவும் கடவுளை எண்ணி அழவும் போனதுபோக, மிச்ச நேரத்தை எப்போதாவது பயன்படுத்திக்கொள்ளலாம். அதுவும் ஏழை சாம்ராஜ்யத்தில் பிரஜைகள் அதிகம். ஏழெட்டுக் குழந்தைகளுக்குக் குறையாது. ஏழாவது குழந்தை, முதல் குழந்தையைவிட ஆறுவயதுதான் இளையதாயிருக்கும். கருணாம்பாளைப் போலக் காசைத் துச்சமாக மதித்துக் கர்ப்பப்பையை மாற்றிப் போட வசதியா படைத்திருக்கிறார்கள் அந்தப் பரிதாப ஜந்துக்கள்?" என வறியவர்களின் வாழ்க்கை அவலத்தைக் காட்டுகின்றார் (ஏழை). இத்தகைய அவலநிலை காரணமாக, "பணம் இல்லையென்றால் அவளுக்கு வாழ்வு கிடையாதா? உணர்ச்சி கிடையாதா? கடவுளே! ஏழைகளுக்கு வயிற்றையும் நெஞ்சையும் ஏன் உண்டாக்கினாய்? உனக்குப் படைப்புத்தொழிலில் தேர்ச்சியிருந்தால் ஏழைகளை வெறும் நடமாடும் பொம்மைகளாக அல்லவா சிருஷ்டித்து முதலாளிகளின் வேலை செய்யும் இயந்திரங்களாக ஆக்கியிருக்கவேண்டும்" என அவர்கள் குமுறும் குமுறலைக் காட்டுகின்றார் (வாழ முடியாதவர்கள்). கணவனை இழந்த முத்தம்மா தன் குழந்தைக்குத் தேவையான நாலணா, எட்டணாவுக்காகக் கற்பை விற்கிறாள் (அய்யோ ராஜா). வறுமை காரணமாகச் சாலையோர விபச்சாரம் காணப்பெறுகிறது (குப்பைத்தொட்டி). "தேசத்தில் பிழைக்க எந்த வழியும் இல்லை. வழியில்லாத காரணத்தால் வயிறு காய்கிறது. மனைவி மக்கள் பட்டினி கிடக்கிறார்கள். அந்தக் கொடுமையைச் சகிக்கமுடியவில்லை குடும்பத்தலைவனால். பெரிய மனிதர்கள் 'பெர்மிட்' வாங்கிக்கொண்டு குடிக்கிறார்கள். அதற்கு ஒரு தனி கௌரவமே சமுதாயத்தில் அளிக்கப்படுகிறது. கவலையைத் தீர்க்கக் கள்ளச்சாராயம் அருந்தும் ஏழைகளும் அந்த ஏழைகளை நம்பிக் கள்ளச்சாராயம் காய்ச்சும் பரம ஏழை வியாபாரிகளும் பரவுகிறார்கள்" (குப்பவில்லை) என ஏழ்மையின் காரணமாகக் கள்ளச்சாராய விற்பனை பரவுவதைக் கூறுகிறார். ஏழைகளைச் சமுதாயம் வாழவிடாமல் தடுப்பதைச் சிந்தாமணி வாழ்க்கை மூலம் காட்டுகிறார் (அபாக்ய சிந்தாமணி).

ஏழ்மையின் காரணமாகக் கல்வி கற்கவேண்டிய சிறுவர்கள் இரயிலில் இடம் வாடகைக்கு விடுகின்றனர் (சபலம்).

சமுதாய அவலங்கள்

சமுதாய மக்களைத் தரப்படுத்தும் காரணிகளில் ஒன்றாகச் சாதிமுறை (caste system) என்ற சமுதாய நிறுவனம் செயல்படுகிறது. இச்சாதிமுறை நெருங்கிய சமூகக்குழுக்களின் (closed social groups) இறுக்கமான அமைப்பு என்றும், குடும்பம், சமயம், இனம் போன்ற

நிர்ணயிக்கப்பட்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்டது என்றும், சாதிமுறையில் சமய நம்பிக்கைகள், வழக்கங்கள், சட்டங்கள் ஆகியவற்றால் தரப்பிரிவின் அமைப்பாக்கம் நிறுவனமாக்கப்பெறுகிறது என்றும், சமூகச் செயலெதிர் செயல்களின் (social interactions) எல்லா வடிவங்களும் தனிநபர்கள் பிறப்பின்மூலம் பெற்ற வாழ்க்கைத் தரத்தால் நிர்ணயிக்கப்பெறுகின்றன என்றும் விளக்கப்பெறுகிறது (Melvin De Fleur, 1973, pp. 611 - 612). சாதிமுறையின் தன்மைகளில் ஒன்று மக்களை உயர்ந்தவர்கள் - தாழ்ந்தவர்கள் எனப் பாகுபடுத்தல் ஆகும். இப்பாகுபாட்டில் உயர்நிலை வகிப்பவர்கள் ஆதிக்கம் மிக்க வாழ்க்கை வாழ்கின்றனர். தாழ்த்தப்பட்ட பிரிவினர் சமுதாய, பொருளாதார, சமய, பால், அரசியல் அடிப்படைகளில் இயலாமை உடையவர்களாக வாழும் அவல நிலை ஏற்படுகின்றது. இதனையும் கலைஞர் தம் சிறுகதைகளின்மூலம் வெளிப்படுத்துகின்றார்.

தீண்டாமை

சமுதாயத்தில் சாதிமுறையின் அடிப்படையில் உயர்நிலையினராகக் கருதப்பெறுவோர், தாழ்நிலையினராகக் கருதப்பெறும் சில பிரிவினரைத் தீண்டுதற்கும் காண்பதற்கும் தகுதியற்றவராக மனித நேயமின்றி நடத்தும் முறையானது சமுதாய அவலங்களில் மிகவும் கொடுமையானதாகும். இந்த அவல நிலையையும் கலைஞர் புலப்படுத்துகின்றார். மக்களிடையே காணப்படும் சாதிவேறுபாடுகளை அகற்றுதற்குரிய வழிமுறைகளில் ஒன்றாக ஆலயப்பிரவேசம் அமைகின்றது. ஆனால் சில உயர் சாதியினர் இதற்கு எதிர்ப்பினைத் தெரிவிக்கும் நிலையும் காணப்படுகிறது. வினைதீர்த்த சுவாமி கோயில் அரிசன ஆலயப் பிரவேசம் பற்றிக் கந்தசாமி நாயுடு"நமக்கென்னங்க, தினைவிதைச்சவுங்க . . . . தினை அறுப்பாங்க, உம் . . . உலகம் பொரளப் போகிறது போங்க" என்று வருத்தத்துடன் கூறுகின்றார் (பிரேத விசாரணை). "அண்ணாமலை முதலியார் கட்டிய கோயிலய்யா அது. அவர் ஆட்டினபடி ஆடணுமாக்கும்; ஆமா! ஆலயப் பிரவேசமாவது மண்ணாவது! பள்ளு பறைகளை உள்ளே விடறதுக்கு, அரிஜனங்களை உள்ளே விடறதுக்கு அவர் சம்மதிக்கமாட்டார்தான்" (பிரேத விசாரணை) என்ற கூற்றும் உயர்சாதியினரின் ஆலயப் பிரவேச எதிர்ப்பை உணர்த்துகிறது. பிரசவ வேதனையால் துடித்த கருப்பாயிக்கு மருத்துவம் பார்க்க மறுத்தமையால் கோயில் குளத்தில் வீழ்ந்து இறக்கின்றாள். இதைக்கண்ட மக்கள் "சண்டாளர்களைக் கோயிலில் விடுறதுண்ணா சாமிக்கு அடுக்கவில்லை. சகுனத் தடை ஏற்பட்டுவிட்டது" என்றும், "தலைமுறை தலைமுறையாகக் காணாத பழக்கம், இந்த அக்கிரமத்தை ஆண்டவன் சகிப்பாரா! திருக்குளத்தையே தீட்டாக்கி விட்டாரப்பா" என்றும் உயர்சாதியினர் கூறுதலும் தீண்டாமை உணர்வை வெளிப்படுத்துகின்றது.

மருத்துவத்திலும் வேறுபாடு

உயிர்காக்கும் புனிதமான தொழிலை மேற்கொள்ளும் மருத்துவர்கள் கூடச் சாதி வேறுபாடு பாராட்டும் இழிநிலை காணப்படுகிறது. கிராம அரசு மருத்துவமனையின் மருத்துவர் பிச்சுமணி. ஓர் ஏழைப் பெண் இரவு பிரசவ

வேதனையுடன் நள்ளிரவில் மருத்துவமனைக்கு வருகின்றாள். மருத்துவரின் உதவியாளரான கந்தசாமிநாயுடு அவளிடம் என்ன சாதி என வினவுகின்றார். அவள் பறைச்சி என்கின்றாள். ஏழை, தாழ்ந்தசாதி ஆகிய காரணங்களால் மருத்துவம் பார்க்கப் பிச்சுமணி மறுக்க, அவள் இறந்துவிடுகிறாள். அதே சமயம் அந்த மருத்துவர் செல்வந்தரின் தலைவலியைக் குணப்படுத்த விரைகின்றார் (பிரேத விசாரணை).

பொருந்தாமணம்

வறுமை, வரதட்சணைக்கொடுமை, பெற்றோரின் பொறுப்பின்மை, ஆடவரின் ஆதிக்கநிலை முதலான காரணங்களால் சமுதாயத்தில் வயது முதிர்ந்த ஆடவர்களை இளம்பெண்கள் மணம் புரியும்நிலை ஏற்படுகிறது. இத்தகைய அவலநிலையை, "எங்களைப்போலத் தாரையும் கங்கையும் தள்ளாத கிழவன்களுக்கு வந்து சேர்ந்தால் உன்னைப்போலச் சந்திரர்களுக்கு வேட்டைதான்" எனவும், "கிழவனுக்குப் பெண் கொடுக்காதே! இருதார மணத்துக்கு இணங்காதே! இதைச் சொல்வாயா" எனவும் கங்கை-சந்திரன் உரையாடல்களைக் காட்டிப் பொருந்தா மணத்தின் அவலத்தைப் புலப்படுத்துகின்றார் (கங்கையின் காதல்).

மாணவர் திறமைக்கு மதிப்பின்மை

உயர்ந்த குறிக்கோளுடனும் ஆர்வத்துடனும் படிக்கும் மாணவர்கள் எதிர்காலத்தில் முன்னேறமுடியாமல் வருந்துவதையும் சாதி, பொருளாதாரநிலைகளில் உயர்ந்துள்ளவன் கல்வியறிவில் குறைந்தவனாயினும் முன்னேறுவதையும் காட்டுகின்றார் (பாலைவன ரோஜா).

அரசியல் அவலங்கள்

அதிகாரிகள் வரும்போது மட்டும் தெருக்களைச் சுத்தம் செய்தல், (குப்பைத்தொட்டி, ப.38), வேலை வாங்கித்தருவதாகக் கைக்கூலி வாங்குதல், (குப்பைத்தொட்டி, ப.41), மக்கள் கொடுக்கும் மனுக்களை அதிகாரிகள் குப்பைத்தொட்டியில் போடுதல் (குப்பைத்தொட்டி, ப.42), தேர்தல் நேரத்தில் நலத் திட்டங்களைத் தீட்டுதல் (ஆதரிக்கிறார்), அரசின் தேவையற்ற, ஒருதலையான அடக்குமுறைகள் (தப்பவில்லை), மந்திரிகள் வருவதாகக் கூறிப் பொதுமக்களுக்குத் துன்பங்கள் ஏற்படுத்தல் (அய்யோ ராசா) போன்ற அரசியல் அவலங்களையும் தம் சிறுகதைகள் மூலம் கலைஞர் வெளிப்படுத்துகிறார்.

மதிப்புச் சிதைவுகளினால் ஏற்படும் அவலங்கள்

சமுதாயப் பண்பாட்டின் கூறுகளுள் ஒன்று சமுதாய மதிப்புகள் (social values). சமுதாயத்தின் பெரும்பான்மையான உறுப்பினர்களால் விரும்பத்தக்கவை எவை எனக் கருதப்படும் பண்பாட்டுக் கொள்கைகளின் உள்ளடக்கமே சமுதாய மதிப்புகள் ஆகும் (Jon. M. Shepared, 1981, p.480). இம்மதிப்புகளின் சிதைவுகளாலும் சமுதாயத்தில் பல்வேறு அவலங்கள் தோன்றும். பொதுநலத் தொண்டராக வேடமிட்டுச் சுயநலம் தேடும் இழிநிலை (ஆதரிக்கிறார்), இரயிலில் பயணம் செய்யும் இளைஞர்களின் காம உணர்வுகள் (சபலம்), காதலித்துக் கைவிடும் இளைஞர்கள்

(தொத்துக்கிளி), ஆடவர் சிலர் பிறபெண்களைக் கெடுக்கும் இழிநிலை (நுனிக்கரும்பு), நல்ல திரைப்படங்களைத் தணிக்கை செய்து கெடுத்தல் (புரட்சிப்படம்), எழுத்துத்திருட்டு (அமிர்தமதி), நம்பியவர்க்குத் தீங்கு செய்தல் (முந்நூறு ரூபாய்), தாயை மதிக்காமை (சுமந்தவள்) முதலான பண்பாட்டு, மதிப்புச் சிதைவுகளால் ஏற்படும் அவலங்களையும் கலைஞர் மனம் புண்பட்டுக் காட்டுகின்றார்.

முற்கூறியவாறு, சமயம், பொருளாதாரம், சமுதாயம், அரசியல், பண்பாட்டு மதிப்புச் சிதைவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் காணப்பெறும் அவலங்களைத் தம் சிறுகதைகளில் சுட்டிக்காட்டியும் அவற்றின் தீய விளைவுகளை விளக்கியும், இவற்றால் சமுதாய ஒழுங்கு சிதைவதை உணர்த்தியும் படிப்போர் உள்ளத்தைப் பண்படுத்திச் சிறந்ததொரு சமுதாயம் படைக்கக் கலைஞர் முயன்றுள்ள திறனை அறியமுடிகிறது.

பயன்பட்ட நூல்கள்

அடிப்படை ஆதார நூல்

கருணாநிதி, மு., **1986,** கலைஞர் கருணாநிதியின் சிறுகதைகள், பாரதி நிலையம், சென்னை.

துணை ஆதார நூல்கள்

David C. King, Marvin R. Koller. 1975, Foundation of Sociology, Sanfrancisco.

Deb. P.C. 1981, Rural Sociology - An Introduction, Kalyani Publications, New Delhi.

George Ritzen., Kenneth C.W. Kammeyer, Norman Yetman, 1987, Sociology - Experiencing A Changing Society, Boston.

Jon M. Shepaed, 1981, Sociology, Wast Publishing Co., Newyork.

Melvin De Fleur, William V.D. Antonio, Lois B. De Fleur, 1973, Sociology, Human Society, Scott. Foresman and Company, Gienview.

Raymond Williams, 1950, Literature and Society, Readings and Criticism, Frederic Muller Ltd, London.

Richard Hoggart, 1966, Literature and Society. Weidenfield & Nicolson, London.

Ronald W. Smith Frederick W. Preston, 1977, Sociology - An Introduction, St. Martin's Press, Newyork.

Sulochana Rangeya Raghava, 1987, Sociology of Indian Literature, Rawat Publications, Jaipur.

25 கலைஞரின் கவிதைக் கள்

ஜோசப் குமார்

"மரம், செடி, கொடிகளை மலர்களும்
இலைகளும் அடையாளம் காட்டுவது
போல, மனித இனங்களின்
பண்பாடுகளை இலக்கியங்கள்
அடையாளம் காட்டுகின்றன"
"கலைஞரின் சின்னச்சின்ன மலர்கள்"

தமிழ் கூறும் நல்லுலகத்து மக்களால் "மு.க." என்று குறிப்பிடப்படுபவரும், கோடிக்கணக்கான அவரது கொள்கைவழித் தொண்டர்களால், தமிழ் ஆர்வலரால், இளையோரால் 'கலைஞர்' என்று இலயிப்பு கலந்த பாசத்தோடும், மரியாதையோடும் விளிக்கப்படுபவரும் ஆகிய தமிழக முதல்வர் திருக்குவளை முத்துவேலர் கருணாநிதி அவர்கள் தமிழ் வித்தகர். மொழியில் புலமை, தெளிவு, நயம்படஉரைத்தல் ஆகியஅனைத்துப் பண்புகளையும் ஒருசேரப் பெற்றிருக்கும் பெருமகனார். அரசியல் வழிநின்று சமுதாயத் தொண்டு புரிதல் அவரது அன்றாட வாழ்வில் தலையாய அங்கம் வகிக்கும் ஒரு நிகழ்வாக இருந்தபோதும், இப்பணியில் அவர் களைப்புற்ற போதெல்லாம், அவர் ஒய்வெடுக்கும் தென்னந்தோப்பு இலக்கியச் சோலையேயாகும்.

"........................ நாள் தோறும்
சீட்டெழுதி வருகின்றார் கணக்கற்றோர் மனுக்களுடன்
உழல்கின்றேன் அவரிடையே - ஒய்வே இல்லை.
சுழல்கின்ற பம்பரமும் சுற்றிப்பின் படுத்துக்கொள்ளும்.
உருள்கின்றேன் ஊரூராய் உதைபட்ட பந்தைப்போல்!
உடல் இளைத்துப் போனாலும் உயிர்மட்டும்
இளைக்கவில்லை நெஞ்சில்
சுடர்வழங்கத் தமிழிருக்கச் சோர்வுதான் மேவிடுமோ?"

(10.08.68ல் சென்னையில் "அருமறையில் அறுவர்" என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கத்தில், கலைஞரால் பாடப்பட்ட தலைமைக் கவிதை).

தமிழ்மொழியின் இயல், இசை, கூத்து என்ற முக்கூறுகளிலும் தமது தனி முத்திரையைப் பதித்திருக்கும் இவரது திறமையும், சாதனையும், இவை உருவாகக் காரணியாயிருந்த மாறாத தமிழ்க் காதலும், இவரது சமகாலத்து மேதைகளின் சாதனைகளையெல்லாம் விஞ்சி நிற்பது. ஆழ்ந்த சிந்தனைகளைக் கருக்கொண்டும், அடுக்குமொழியிலும், அழகு நடையிலும், ஆர்ப்பரிக்கும் கடல் அலைகளை ஒத்த தன்மையிலும் இவர் செய்துள்ள உரைநடைத் தமிழ் தமிழர் மாண்புக்கும், மேன்மைக்கும்

அரணாகவும், தூணாகவும், துணையாகவும், இருக்கின்றதென்றால், இவரது கவிதைத் தமிழோ, தமிழன்னைக்கு இவர் எந்நாளும் களைப்புறாமல் செய்யும் "அணிச் சிறப்பே"யாகும்.

கலைஞரின் தொடக்கக்காலக் கவிதை

1942ல் தமிழர் திருநாளான பொங்கல் நாளன்று "முரசொலி" ஏடு முதன் முதலாகத் திருவாரூரில் இருந்து வெளியிடப்படுமுன்னர் -

1941ல் கலைஞர் தமது மாணவப் பருவத்தில் தொடங்கிய கையெழுத்து ஏடான "மாணவர் நேசன்" வெளிவரும் முன்னர் -

1938ல் தமிழகத்தில் சூறாவளிக் காற்றாய் உருவாகிய முதல் இந்தித்திணிப்பு எதிர்ப்புப் போர் நிகழ்ந்த காலை, கலைஞர் கவிஞராகத் தலை தூக்கினார். மாலை நேரங்களிலெல்லாம், தம் உடன்பயில் மாணவருடன், இந்தித் திணிப்பை எதிர்த்து, தமிழ்க்கொடி ஏந்தி மாபெரும் ஊர்வலங்கள் நடத்தினார். எழுச்சிபொங்க அவர் அப்போது எழுதிய குறுங்கவிதையொன்றே அவரின் தொடக்க காலக் கவிதையாகும்.

"வாருங்கள் எல்லோரும் - இந்திப்
போருக்குச் சென்றிடுவோம்!
வந்திருக்கும் இந்திப் பேயை
விரட்டித் திரும்பிடுவோம்!"

என்ற அவரது போர்ப்பரணி, தமிழகத்தின் பேரூர், சிற்றூர், பட்டி தொட்டி அனைத்திலும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பாடல்களை அடுத்து ஒலித்தது.

கவிஞர் கலைஞர்

கலைஞர் மரபுக் கவிஞர் அல்லர். எனினும், மரபுக் கவிதையென்னும் கழனியில் விளைந்த தமிழ் இலக்கியங்களாம் சங்க நூற்களையும், பிற்காலப் பனுவல்களையும் தோய்ந்து பயின்று, அவைகளின் சிறப்பியல்புகளை, தமிழர் அனைவரும் உணரும் பொருட்டு கட்டுரைகளும், விரிவான விளக்க உரைகளும் எழுதியவர்.

இவரது கவிதையை யாப்பிலக்கணக்கோல் கொண்டு அளந்தால், அது மரபை முறித்த கவிதையாகவே இருக்கும். பல மேடைகளில், கவியரங்கங்களில் அவரே இதுபற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

"கவி வளத்தைப் பெற்றேனில்லை,
கவிதை பாடக் கற்றேனில்லை.
தளையறுத்த வீரர் கதை பாடுவதால்
தளையகற்றிப் பாடுகின்றேன் நானும் - அவர்
தொடைதட்டித் துரோகிகளை வீழ்த்தியதால்
தொடைதட்டும் என் பாட்டும்!
என் கவிதை
யாப்பின்றிப் போனாலும் போகட்டும் - நம்நாடு,
மொழி, மானம், உணர்வெல்லாம்

காப்பின்றிப் போதல் கூடாதென்னும் கொள்கை
யொன்றால்
வாய்ப்பின்றிப் போனாலும் செய்யுள் கற்கக்
காய்ப்பின்றி நிற்கின்ற மரமாக ஆகாமல் நெஞ்சில்
ஊறுகின்ற உணர்ச்சிகளை வரிகளாக்கி . . . . . . "

(15.08.67 அன்று திருச்சி வானொலியில் "விடுதலை வீரர்கள்" என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கத்தில், கலைஞரின் தலைமைக் கவிதை முன்னுரை)

" . . . . நான்
கற்றது சிறிதெனினும் கவியெழுத இரவெல்லாம்
தூங்கவில்லை; வேறு ஓய்வுமில்லை"

(10.08.68: சென்னை: "அருமறையில் அறுவர்" கவியரங்கம்)

"தளை தொடையாம் யாப்பெல்லாம் கற்றிலன் நான்
வளை அணியாப் பெண்கரம் போல் வடித்தளிப்பேன்
சிலபாடல்
பொறுத்தருள்வீர் புலவர் ஏறே"

(12.01.70: சென்னை வானொலி : "பொங்கல் திருநாள்" கவியரங்கம்)

என்ற வரிகளெல்லாம், கலைஞர் தான் வேளாண்மை செய்யவந்த நிலத்தை துல்லியமாகத் தெரிந்து வைத்திருக்கும் திறமையை வெளிப்படுத்துகின்றன.

கலைஞரின் தொடைதட்டும் கவிதைகள், தளை தவிர்த்த கவிதைகள் ஒப்பிலா ஓசை நயம் உடையவை. பண்டைக் காலத்தில் மொழி ஆய்ந்த புலவர் பெருமக்கள், பாக்களையும், அவற்றுக்குரிய ஓசைகளையும் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தினர்.

1. வெண்பா : செப்பலோசை
2. ஆசிரியப்பா : அகவலோசை
3. கலிப்பா : துள்ளலோசை
4. வஞ்சிப்பா : தூங்கலோசை.

ஆயினும், இத்தகைய இலக்கணக் கட்டுப்பாடுகளையெல்லாம் முறித்துக்கொண்டு, கலைஞரின் கவிதைகள் ஒரு தெளிவான இசைநயத்தோடு படைக்கப்பட்டிருக்கும். ஆகவேதான், தமிழறிஞர் மா.நன்னன், கலைஞரின் கவிதைகளிலெல்லாம் ஓர் அழகிய ஓசைநயம் இருக்கும் என்று கூறி, அதற்குத் "தெள்ளலோசை என்று பெயர் சூட்டி மகிழ்கிறார்.

" ஈரோடு! காவிரியில்
நீராடும் பெண்மீது காதல் கொண்டு அலைகள்
போராடும் ஒன்றுக்கொன்று - அந்த
ஈரோடு தமிழன்பன்

சீரோடு காதல் சொல்லி
வேரோடு பலாக் கனிகள்
தார்போடாச் செவ்வாழைப்பூக்கள்
மார்போடு அணைத்து மகிழ் மயிற்பேடு"

(04.08.68 சேலம் : தமிழர் வாழ்வில் சிறந்தது காதலா? வீரமா? என்ற தலைப்பில் நடைபெற்ற கவிதைப் பட்டிமன்றத்தில், கலைஞரின் தலைமைக் கவிதை முன்னுரை)

"பூமியிலே நம்மை வாழவைத்து வளர வைத்த
சாமிதனை முதன்முதலில் தொழுதிடுவோம் - ராம
சாமிதனை முதன்முதலில் தொழுதிடுவோம் - பெரியார்
ராமசாமிதனை முதன்முதலில் தொழுதிடுவோம்"

(11.01.74 : சேலம் : "தந்தை பெரியார்" என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கத்தில் கலைஞரின் தலைமைக் கவிதை முன்னுரை)

இந்த வரிகளில்தான் என்ன அழகிய ஓசை நயம்? ஒவ்வொரு வரியும் ஓசைநயத்தால் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து கிடக்கக் காணும் நிலையில் தான் என்ன சுவையான கவிதைத்தேன்? குளிர்ந்த காற்றைத் தருகின்ற வேப்பமரத்தின் சிறுகிளை ஒன்றில் மல்லிகைக் கொடி படர்ந்தாற் போல் என்ன செழுமையான சொற்கோர்வைகள்? மலைகளின் ஊடே ஓடிவரும் அருவி, மரங்களையும் செடிகளையும் தழுவி வரும்போது எழுப்புகின்ற இசையொத்ததாயில்லை, கலைஞரின் கவிதை ஓசைநயம்?

அண்ணாவிற்குக் கலைஞரின் கவிதாஞ்சலி

09.02.69 அன்று சென்னை வானொலியில் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு கலைஞர் ஒரு கவிதாஞ்சலி பாடினார்கள். பெரியாரைத் தந்தையாக நினைத்த கலைஞரின் உள்ளம், அறிஞர் அண்ணாவைத் தலைவனாக ஏற்றுக்கொண்டது. 'காஞ்சிப் பல்கலைக் கழகத்தில் பயின்ற மாணவன்' என்று கலைஞர் தம்மைப்பற்றிப் பெருமையாகச் சொல்லிக் கொண்ட போதுகள் ஏராளம். அண்ணாவின் கொள்கைப் பற்றும், பழகும் பண்பும், மாற்றாரிடத்தும் கனியும் அன்பும் கலைஞரை ஈர்த்ததுமட்டுமின்றி, அவர் தமது உள்ளத்தில், தலைவனிடத்தில் தாம்கண்ட இச் செந்நெறிகளைத் தன்னுள்ளேயும் தோற்றுவித்துக் கொள்ள காரணிகளாகவும் அமைந்தன.

இந்தக் கவிதாஞ்சலி ஒரு கண்ணீர் அஞ்சலி. உள்ளத்தில் ஊற்றெடுத்த உணர்வுகளின் வெள்ளப் பெருக்கு.

"இயற்கையின் சதி எமக்குத் தெரியும் அண்ணா - நீ
இருக்குமிடந்தேடி யான் வரும் வரையில்
இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா
நான் வரும்போது கையோடு கொணர்ந்து அஃதை
உன் கால்மலரில் வைப்பேன் அண்ணா . . . "

என்ற வார்த்தைகள், இந்த இரங்கற்பாவினை எத்தகு உச்சநிலைக்குக் கொண்டு சென்று விடுகிறது? இக்கவிதையின் நடுவே, ஓரிடத்தில், கலஞரின் புதுமையான கற்பனை குறுக்கிடுகிறது.

தமிழ்நாட்டில், தமிழ்மொழியின் இழிநிலைகண்டு மனம் கலங்கிய தமிழன்னை வள்ளுவனைச் சந்திக்கின்றாள். ஒரு கோரிக்கை வைக்கிறாள். 'குன்றனைய மொழிக்கு ஆபத்து. ஆக, நீ போய் தமிழ்மண்ணில் மீண்டும் பிறந்து, தமிழ் மொழிக்கு வாழ்வும் உயிரும் கொடு' என்கின்றாள். முப்பால்முனி 'எங்கு பிறக்க?' எனக் கேட்க, 'காஞ்சியில்' எனப் பதில் பகருகிறாள் அன்னை. வள்ளுவனே அண்ணாவாய் வந்துதித்தான் என்று பாடவந்த கலைஞர்,

"பொதிகை மலைத் தென்றலாய்
போதாகி மலர்கின்ற தமிழ் உணர்வின் புதுமணமாய்
பதிகத்துப் பொருளாய்
பழந்தமிழர் புறப்பாட்டாய்
வந்துதித்தான் அண்ணன் - கீழ்
வானுதித்த கதிர் போல -
அவன் புகழைப் பாடுதற்கு
அவன் வளர்த்த தம்பி நானும்
அவன் தந்த தமிழ் எடுத்து
இவண் வந்தேன் . . . ."

என்ற வரிகளில் விவிலிய இலக்கியத்தின் (புதிய ஏற்பாடு) சாயல் தெரிகிறது. "தந்தை"யின் ஆணைப்படி, ஏசு மண்ணில் பிறந்த வேளை, கீழ்த் திசையிலிருந்து மன்னர் மூவர் வந்து, அவரைக் கண்டு, பரிசளித்துப் போற்றி மகிழ்ந்தனர் என்று விவிலிய இலக்கியம் கூறுகின்றது. கலைஞர் விவிலியக் கதையின் தாக்கம் பெற்று இவ்வரிகளை வடித்தாரா என்பது கேள்விக்குறி தான் என்றாலும், குறிப்பிட்ட வரிகளை எழுதும் போது, கவிஞனின் கற்பனை இப்படி இருந்திருக்குமோ? அல்லது அப்படி இருந்திருக்குமோ? என்று நினைக்கத் தூண்டுவதும் ஆய வைப்பதும் தான் கவிதைச் சுவையின் இனிமைக்கு அடையாளங்கள்.

கலைஞரின் கவிதைக் 'கள்'

கலைஞரின் தமிழ்க் கவிதை கள்ளூற்று. அதைப் பருகியவர் பிற தொழில் மறந்தவராய், பிற நாட்டம் இழந்தவராய் அதன் சுவையிலே மனம் முழுவதையும் இழந்து கவிதை வயப்படுவர். மழலைப் பருவத்தில் குழந்தைகள் தாய்வயப்படலும், பின்னர் ஆடவர், இளம்பெண்டிர் வயப்படலும், பெண்டிர் அறிவில், வீரத்தில் சிறந்து விளங்கும் ஆண்கள் வயப்படலும் இயற்கை. ஆயினும், கலைஞரின் கவிதைக்கள்ளருந்தியோர் வாணாள் அனைத்தும், அன்னையின் பாற்குடி மறந்தாலும், இக்கள்குடி மறவாதிருப்பர்.

உவமைச் சிறப்பு

கலைஞரின் கவிதைகள் அனைத்திலும், தனிச்சிறப்புடன் இலங்கும்கூறு, அவரது ஒப்புயர்வற்ற உவமைகளே.

குருதி வேள்வி நடத்தி, நாட்டு விடுதலை பெற்ற பின்னரும், நம் நாடு, நம் மொழி என்ற உணர்வு சிறுத்துச் சிதைந்து கிடக்கும் அவல நிலையைப் பாடப்போந்த கலைஞர்,

“முட்கள் கீறிடப் பறித்த நல் ரோஜா
கட்கம் ஏந்திய வீரர் முடியில்
வெட்கம் ஏந்திய மாதர் குழலில்
இருந்திடல் நலமா ? அதனைத்
துட்டக் குரங்கின் குறுகிய கையில்
கொடுத்திடல் நலமா ?”

(15.08.67 : திருச்சி வானொலி : “விடுதலை வீரர்கள்”கவியரங்கம்) என்று கேட்கும் கேள்வியில் எத்தனை ஆதங்கம் மிளிர்கிறது ? ஆங்கிலேயர் அகன்ற பின்னரும், ஆங்கில வழிக் கல்விதான் உயர்ந்தது என்று இற்றை நாளும் பேசுகின்ற மனிதர் உண்மையிலேயே விடுதலை பெற்ற மனிதரா அல்லது அடிமைத் தளையில் கட்டுண்டு கிடப்பவரா என்று அவர் எழுப்பும் வினாவிற்குத் தமிழ் மக்களின் பதில் என்ன ?

நாடு விடுதலை பெற்ற பின்னரும், பிறமொழி ஏவலில் மக்கள் திளைக்கும் அவலநிலை கண்ட கலைஞர், பிறிதோரிடத்தில்

“சுவரில்லாச் சித்திரம்போல் தமிழ்நாடு
இருபதாண்டு இருந்ததென்ன விந்தையென்று
எண்ணத் தோன்றும்”

(16.09.68: சென்னை: திருவள்ளுவர் திருநாள் கவியரங்கம்) என்று எவ்வளவு மனவேதனையோடு எழுதுகின்றார் ?

கல்லூரி ஒன்றில் காளையர் கூடிய அரங்கொன்றில் கவிதை மழை பொழியவந்த கலைஞர், இளமை விரும்பும் இனிய பாணியில் பாடுகின்றார் இவ்வாறு,

“வாலிபர்க்குப் பிடித்தமான உவமை சொல்வேன்
வானத்துமீன் பெண்கள் ; கூட்டுப் பேச்சே
இடிக்குமுறல்; அவர்
வாளொத்த கண்வீச்சே மின்னல் கீற்று;
வட்ட மதிக் காதலன் மேல் தெளிக்கின்ற
பன்னீரே மழைத்துளியாம்”

(28.09.68: பரமத்தி வேலூர்: “நீர்க்குடும்பம்” கவியரங்கம்) என்றைக்கும் இளமையால் விளங்கும் தமிழன்னையின் திருக்கரங்களில் தவழ்ந்து புரண்டு விளையாடிக் கொண்டிருப்பதனாலா, கலைஞரின் இக்கவிதை வரிகளில் இளமை தெறிக்கின்றது ?

08.12.68 அன்று பம்பாய் பாரதி கலைமன்றத்தில் “பாரதிதாசன் என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கிற்குக் கலைஞர் விண்ணூர்தி ஏறிப்புறப்பட்டார். அவருடன், அதே கவியரங்கில் ‘உவமை’ பற்றிப் பாடவந்த கவிஞர் கருணானந்தமும் புறப்பட்டார். கவிஞர் இருக்கையில் அமர்ந்ததும், கலைஞர் அவரிடத்தில் இருக்கை வாரை (SEAT BELT) அணிந்து கொள்ளுங்கள் என்று அறிவுறுத்த, புரியாத கவிஞர், தன் இடுப்பு வாரை இறுக்கிக்கொண்டார். இதனைக் கண்ணுற்ற விமானப் பணிப்பெண்டிர் கவிஞரைப் பரிகசிக்க, கலைஞர் எழுதுகின்றார் இவ்வாறு.

"பட்டிக்காட்டான் யானை பார்த்தது போல'
என்பது தானே பழமொழி!
அதனை மாற்றிக் கொள்வீர் இவரைப் பார்த்து!
பட்டிக் காட்டான் பம்பாய் பார்த்தது போல்'

என்ன நகைச்சுவை கலந்த உவமைநயம் கலைஞரின் வரிகளில்!

கலைஞர் -கவிஞர் எடுத்தாண்ட உவமைகளிலெல்லாம் தமிழ் மண்ணின் மணத்தோடு, மாறாச் சிறப்பு பெற்று துலங்குவது. "பொங்கல் திருநாள்" கவி அரங்கமொன்றில், அவர் கொட்டிய சொல்முத்துக்களே.

"உழவரது வியர்வையினால் சூல் கொண்ட
கழனித் தாயின் வயிற்றில் மகளாய் வந்து
அனைவரது சீராட்டும் பெற்றுக்கொண்ட
கதிராம் மங்கை
மணவறையிற் பெண்போலத் தலைகுனிந்து
நிற்கின்றாள் பொங்கல் நாளில்".

நிலத்தை அன்னைக்கும், அந்நிலத்தை உழுகின்ற மக்களது வியர்வை நீரைக் காதலுக்கும், விளைநெல் கதிரைக் காதலில் விளைந்த குழவிக்குமாய் ஒப்பீடு செய்து கலைஞர் வடித்திருக்கும் இவ்வரிகள், தமிழ்மண், தமிழ்க்குடி, அவர்தம் காதல் வாழ்வுநெறி அனைத்துக்குமே சான்று பகர்வனவாய் விளங்குகின்றன.

"தாழப்பறந்து மீன் கொத்தும் பறவை போல்
வலியோர் சிலர் எளியோர் தமை
வதையே செய்தல் வாடிக்கையாம்"

"கடற்கரையில் தலைநீட்டும் நண்டுகளைக்
கைநீட்டிப் பிடிக்க ஓட
உடனவைகள் போன இடம் தெரியாமல்
பதுங்கி விடும்.
புகழும் அதுதான்"

இவை போன்ற உவமை அணிச் சிறப்புகள், கலைஞரின் கவிதை வானில், விண்மீன்கள் தெளிக்கப்பட்டதைப் போல ஒளிவிடுகின்றன. உவமை மலர்கள் பூத்துக் குலுங்கும் வண்ணமிகு தோட்டம் என்றாலும் பிழையாகாது.

கலைஞரின் கவிதைகளில் மனிதநேயம்

வ.வே.சு. அய்யர் விடுதலைப் போராட்ட வீரர். இருந்தபோதிலும், திருநெல்வேலி சேரன் மாதேவியில் அவர் நடத்திவந்த குருகுலமொன்றில் சாதிவேறுபாடு பாராட்டப்படுகிறது என்பதை அறிந்த பெரியார்- அந்நாளில் பெரியார் அவர்களும் காங்கிரசு கட்சியிலே இருந்தார்- சினமுற்றுப் பொங்கியெழுந்தார். பெரியாரின் தொடர்ந்த வேண்டுகோளுக்குப் பிறகும் தன் முடிவிலிருந்து அய்யர் அவர்கள் சற்றும் மாறவில்லை. விளைவாய், பெரியார் காங்கிரசை விட்டு நீங்கினார். சுயமரியாதைக் கழகமும், திராவிடர் கழகமும் கண்டார்.

பெரியாரின் கொள்கைகளுக்கு வ.வே.சு. அய்யர் எதிர்மறையாய்ச் செயல்பட்டாலும், அவர் குற்றால நீர்வீழ்ச்சியில் விபத்துக்குள்ளாகி மரணமடைந்தபோது, பெரியார் துயரின் உச்சிக்குச் சென்றார். கொள்கைப் பிளவுகளெல்லாம் மரணத்தில் மறைய, உண்மை நட்பெனும் குணக்குன்றின் கொடுமுடி தொட்டு, அப்போது, தான் துவங்கியிருந்த "குடி அரசு" இதழில் முதற்கவிதையாக ஓர் இரங்கற்பாவினை வெளியிட்டார்.

தந்தை காட்டிய மனிதநேய வழியிலே, கலைஞர் அவர்களும் பல கவியரங்கங்களில் வ.வே.சு. அய்யர், அவர் தொண்டு ஆகியன குறித்துப் பாடியுள்ளார்.

"நீர்வீழ்ச்சி சேட்டையினால்
பேரதிர்ச்சிப் பெரும்புயலைத் தமிழ்நாடு தாங்கிற்றந்தோ!
வ.வே.சு. அய்யரெனும் வாய்மைகொள் செயல் மறவர்
ஆவேச நீர்வீழ்ச்சிச் சுழலில் சிக்கி
அன்றொரு நாள் மாய்ந்து விட்டார்".

(15.08.67: திருச்சி வானொலி : "விடுதலை வீரர்கள்" என்ற தலைப்பில் கவியரங்கம்)

போலி ஆன்மீகம் சாடுதல்

தமிழகத்தை இன்று வெகுவாய்ப் பிடித்தாட்டும் நோய் போலி ஆன்மீகமாகும். பக்தி என்னும் பெயரால் வஞ்சகர் சிலர் பெண்களின் கற்பைச் சூறையாடுவதும், மக்களை ஏமாற்றிப் பணம் பறிப்பதும் இன்று செய்தித் தாட்களில் தினமும் கூறப்படுகின்றன. போலி ஆன்மீகம் தழைப்பது ஐம்புலன்களை முறையாக ஆளத்தெரியா அறிவின்மையில் தான் என்றுரைக்கும் கலைஞர்,

"கத்தியுளது கரத்தில் என்று குத்திடவும் செய்யாதே.
புத்தியுடன் அதனாலே பழமறுத்துத் தின்றிடவும்
தயங்காதே.
முக்தியடைவேன் என்று
ஐம்புலனை இயக்காமல் இருப்பது போல்
நடிப்பதும் சூது.
ஐம்புலனை அவிழ்த்து விட்டுக் கோவில் மாடாய்த்
திரிவதும் தீது"

(24.03.68 : வாணியம்பாடி : "ஐம்புலன்" கவியரங்கம்) என்று கூறுமிடத்து, போலி ஆன்மீகம் சாடும் அவரது பெருந்துணிவு, உவமைத்தேன் கலக்கப்பட்ட சுவையாறாய் ஓடுகிறது.

அவர் கழகம், அவர் உயிர்

அண்ணா கண்ட திராவிடமுன்னேற்றக் கழகத்தை, அவர் மறைவிற்குப் பின்னர், கலைஞர் அவர்கள் தன் தோள்களில் தாங்கி வழிநடத்த முன் வந்தார். பகல், இரவு எப்போதும், அவர் வாழ்வையும், மூச்சையும் இயக்கிக் கொண்டிருப்பவை கழகமும், கழகம் சார்ந்த விஷயங்களுமே. கவிதை விழாக்களில், அவர் பங்கு பெற்றபோதுகூட,

அவர் சிந்தனையெல்லாம் கழகத்தையும் கழகக் கொடியையும் சார்ந்தே இருக்கும் என்பது கீழ்க்கண்ட சான்றினால் விளங்கும்.

"கவிபாடும் பொன்னிவளவன் - - - - -
- - - - - - - - - - - - - - - - - - - -
கரிமேனி வளவன் இவர் - - - - - -
- - - - - - - - - - - - - - - - - - - -
- - - - - -வந்து விட்டார் வளவன் - -
நான் சொன்ன நிறம் காண்பீர்
கவித் திறம் காண்பீர்.
எம் இருவரையும் இணைத்துப் பார்ப்பின்
இரு வண்ணக் கொடி காண்பீர் - - - -

புலவர் கருத்தவர்; தாம் சிவந்தவர் என்ற இயற்கை நிலையினைக் கழகக் கொடியோடு தொடர்பு படுத்தி, கவிதை பாடி, தமிழ்ஆர்வலரையும், கழகத் தொண்டரையும் குதூகலிக்கச் செய்யும் கலைஞரின் மதி நுட்பம் தான் என்னே!

கண்ணதாசனுக்கு அஞ்சலி

கலைஞரும், கவிஞர் கண்ணதாசனும் தமிழெனும் பாலத்தினால் இணைக்கப்பட்டவர்கள். பெரியாரால் ஈர்க்கப்பட்ட இவ்விருவரும் தமிழை உண்டு, அதனைப் பருகி, அணிந்து, வளர்ந்தவர்கள். அரசியலும், பிற கொள்கைப் பிறழ்வும் இருவரையும் பிற்காலத்தில் பிரித்தாலும் அவர்கள் இதயங்களில் ஆழ்ந்த நட்புணர்வு குடி கொண்டிருக்கிறது. கவியரசு, தனது 'வன வாசம்' நூலில் தானும் கலைஞரும் சேர்ந்து, திராவிட இயக்கத்தின் தொடக்க கால நாட்களில் எப்படித் தோளோடு தோள்நின்று செயல்பட்டனர் என்பது குறித்தும் வாழ்வில் இருவரும் ஒன்றாகச் சந்திக்க நேரிட்ட துயர், தாளாத இன்னல் குறித்தும் விரிவாக எழுதியுள்ளார். இதனால், கவிஞரின் மறைவு கலைஞரை மிகவும் பாதித்தது. அகவை முதிர, மனிதரின் சிந்தனை இளம் பருவத்து நினைவுகளையும், கூடிக் குலாவிய நண்பரையும் ஆக்கிரமிப்பது இயற்கையல்லவா!

"தென்றலாக வீசியவன் நீ - என் நெஞ்சில்
தீயாகச் சுட்டவனும் நீ! அப்போதும்
அன்றிலாக நம் நட்பு திகழ்ந்ததேயன்றி
அணைந்த தீபமாக ஆனதேயில்லை நண்பா!

ஆயிரங்காலத்துப் பயிர் நம் தோழமையென
ஆயிரங்கோடி கனவுகள் கண்டோம்!
அறுவடைக்கு யாரோ வந்தார்!
உன்னைமட்டும் அழைத்துச் சென்றார்!

கலைஞரின் பிற இரங்கற் கவிதைகள்

தமிழகத்தில் திராவிடர் கழகம் உருவாவதற்கு முன்னரே, பார்ப்பனர் அல்லாதார் நலன் காக்கப் போராடிய நீதிக்கட்சியின் தலைவருள் தலையாயவரான திருவாரூர் ஏ.டி. பன்னீர்செல்வம், கலைவாணர்

என்.எஸ். கிருட்டிணன், ப. ஜீவானந்தம், கர்மவீரர் காமராசர், பகுத்தறிவுச் சிங்கம் சவுந்திரப் பாண்டியனார்.... இன்னும் பலர் மறைந்த போது, கலைஞர் தன் இதயத்தின் கண்ணீர்த் துளிகளால் கவிதைத் துளிகளை வடித்துள்ளார்.

துளிகளில் சில

"கிழக்கினில் கிளம்பிய காலைக் கதிரவன்
வெடுக்கென வீழ்ந்தான் கடலில் என்றால்
வையம் கலங்காதோ? வாடி வதங்காதோ?"

(விமான விபத்தில் பலியான பன்னீர்செல்வம் குறித்து)

"பனிப்பார்வை, கனிப்பேச்சு, தனித்திறமை
இனிப்போடு எழில் காட்சி தருகின்ற இசைப் புலவன்!
அழைக்கின்ற போதெல்லாம் மக்கட் பணிபுரிய
வருகின்ற நற்றொண்டன்!
சிரிப்பு தழைக்கின்ற செந்தமிழன்!
மழைக் கரத்தால் மாநாடு காக்கின்ற வள்ளல்!
\- -
ஏழைகளைச் சிரிக்க வைத்தான்!
கோழைகளை நிமிர வைத்தான்!

(கலைவாணர் என்.எஸ். கிருட்டிணன் குறித்து)

"ஆட்டம் போடும் வாலிபத்தின் - பனி
மூட்டம் கலையா வயதினிலே
நாட்டம் கொண்டார் பொது வாழ்வினிலே,
நாட்டை நினைத்தார் முதலிடமாய்!"

(ப. ஜீவானந்தம் குறித்து)

"பெரியாரின் கல்லறையில் உன் கண்ணீர்!
பேரறிஞர் மூதறிஞர் மறைந்த போதும் உன் கண்ணீர்!
பெற்ற தாய்தனை நான் இழந்த போதும்
உற்றார் உறவுபோல் நீ வந்து உகுத்தாய் கண்ணீர்!
பெருமகனே! உனக்காக எம் கண்ணீர்
பேராற்றுப் பெருக்கெனவே பாய்ந்ததன்றோ?"

(15.07.76 காமராசர் பிறந்த நாளில், முரசொலியில்)

"ஆரூரில் ஒருநாள்யாம் இளந்திராவிடர் நடத்திய கூட்டம்;
அதில் கலந்து, நீவிர் ஆற்றிய உரைதான் ஆயிரம்
பொன்னாம்!
சுயமரியாதை இயக்கத்தின் பெயரால் பெரியார்
சொல்வது எதுவாயினும் அதனை ஆணையாய் ஏற்பேன்
என்றீர்!
சாதி ஒழிந்தால்தான் சமுதாயம் முன்னேறுமென
ஆதிமகன் வள்ளுவனின் திருக்குறளை
அணுப்போதும் மறவாது வாழ்ந்திருந்த

கணுக்கரும்பே! கலங்காத சிங்க ஏறே!
நீவிர் வாழ்க என்றும்"
(பகுத்தறிவுச் சிங்கம் சவுந்திர பாண்டியனார் குறித்து)

விதவை மறுமணம் ஆதரிப்பு

கலைஞரின் சிந்தனையோட்டமும், செயல்பாடுகளும் எஞ்ஞான்றும் சீர்திருத்தக் கருத்துக்களையே சுழன்று வருபவை. மதத்தின் பெயராலும், சம்பிரதாயங்களின் பெயராலும், மனிதர் ஒருவருக்கொருவர் வேறுபாடு பாராட்டித் தாழ்த்திக் கொள்வதும், போலிப் புனிதம், கலாச்சாரம் ஆகியவற்றின் பெயரால், பெண்களுக்குரிய இணைநிலையையும் மற்ற சிறப்பையும் ஆண்கள் அளிக்க மறுப்பதும் ஒழிக்கப்பட வேண்டியவை என்ற நிலைப்பாடு கலைஞரது உள்ளத்தில், அவரது இளம்பருவம் தொட்டே வேர்விட்டிருக்கிறது. இத்தகைய புரட்சிக்கரமான கருத்துக்களில் ஒன்றுதான் விதவை மறுமணம். "நியாயத் தராசு" என்ற தலைப்பில், **1945**ல் அவர் எழுதிய கவிதை அவரது ஆழ்ந்த சமூகப் பார்வையைப் புலப்படுத்துகின்றது.

" - - - - - - - - - - - - - -
என் மனைவி இறந்திட்டாள்
வேறு மணம் வேண்டுமென்பாய்!
பின் நீ சாவு முனை அடைந்திட்டால்
உன் மனையாள் காவு கொடுக்க
வேண்டுமோ காதல் தனை ?"

அரை நூற்றாண்டுக்கும் முன்னரே, கலைஞர் எழுதிய இக்கவிதையின் விரிவாக்கமே, இன்று தமிழக அரசு, விதவை மறுமணம் தொடர்பாகப் பல சலுகைகளை அறிவித்து இயற்றியுள்ள சட்டமாகும்.

முடிவுரை, கலைஞரின் கவிதை வழி

இவன் தசையும் எலும்பும்
திசுக்களால் ஆனவை அல்ல.
தமிழ் மண்ணால் திரண்டவை.

இவன் குருதியில்
காவிரியும் வையையும்.

சிந்தை
விரிந்த வான்.

செயலின் விரைவில்
மின்னலும் தோற்கும்.

சாமானியன் இவன்
நாமாறாமல் செய்த
பாமாலைகள்
ஏராளம்

மலர்கள் மணம் பரப்ப
மறக்கலாம்!

மேகம் மழை பொழிய
மறக்கலாம்!

உலக உருண்டையைச்
சுற்றிவரும் ஒளிநிலவும்
வழி தவறி
வருகை மறக்கலாம்!

இவன் இதயம் மட்டும்
'தமிழ், தமிழ்'
எனத் துடித்திட
எந்நாளும்
மறவாதே!

துணை நூற் பட்டியல்

1. கலைஞர் கவிதைகள்
2. கலைஞரின் 'முரசொலி' - பி.எல். ராஜேந்திரன்
3. திராவிட இயக்க வேர்கள் - திருநாவுக்கரசு
4. "குடிஅரசு இதழ்க் கவிதைகள்" - முனைவர் பட்டத்திற்கான ஆய்வேடு - ஜே. கயல்விழிதேவி, எம். ஏ., பிஎச்.டி.

26 'கலைஞரின் இளமைக்காலப் படைப்புக்களில் தமிழ்'

முனைவர். கே. ஏ. ஜோதிராணி

உலகம் தழுவிய அளவில் மனித குலம் என்று பொதுவில் அறியப்பட்டாலும் அந்த மனிதகுலம் மொழி அடிப்படையிலான இனங்களாக அமைந்திருக்கின்றன. இன அடிப்படையில் அமைந்திருப்பதென்பது ஓர் இனம் தனக்கென்று ஒருமொழி அடையாளத்துடன் இயங்குவதைக் குறிப்பிடுவதுதான். மொழி அடையாளம் என்பது அந்த இனத்தினுடைய அறிவுத் தொகுப்பு. மனிதன், சமுதாயத்தில் இயங்க வேண்டுமென்றால் தனது இனத்தின் அடையாளமான மொழியின் வழியாகவே இயங்க முடியும். அத்தகைய தனது மொழியின் மீதான ஆதிக்கங்களை எதிர்த்துப் போராடுவதுதான் மொழிப்பற்றின் அடிப்படை இலக்கணம். மொழிப்பற்றென்பது அறிவியல் கோட்பாடாக மாற்றப்படும்பொழுது மொழிக் கொள்கையாகி நிலைக்கிறது. ஓர் இனத்திற்கு ஒரு மொழி என்பதே அடிப்படை விதி.

பார்ப்பனியம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே தமிழ்ச்சமூகத்தைப் பண்பாட்டு நிலையில் அடிமைகொள்ளத் தொடங்கியது. அது தமிழர்களைச் சூத்திரர்கள் என்றும் பார்ப்பனர்களை, தேவர்கள் என்றும் தமிழ்மொழியை சூத்திரமொழி என்றும், சமற்கிருத மொழியைத் தேவமொழி என்றும், தமிழையும் தமிழரையும் இழிவுபடுத்தி சமற்கிருதத்தையும் பார்ப்பனியத்தையும் உயர்த்தியது. கல்வி, ஆட்சி, இறைவழிபாடு மற்றும் கலை, இலக்கிய பண்பாட்டுத் துறைகளில் சமற்கிருதத்தைப் புகுத்தும் இடைவிடாத முயற்சிகளை மேற்கொண்டது. அவற்றில் தனது ஆதிக்கத்தை நிறுவியது. இந்நிலையில் தமிழ்ப் பெருமக்கள் தங்களது தேசிய மொழிக் கொள்கையை நிலைநாட்ட எண்ணினர். இச்சூழலில் தான் பெரியார் எனும் பெருந்தகை தனித்தமிழ்நாடு எனும் முழக்கத்தை முன்வைத்து இந்தியத் தேசியம் தமிழ் நாட்டிற்கு விரோதமானது என்று கருத்துரைத்தார். இந்தியத் தேசியம் என்பதே பார்ப்பனத் தேசியம் என்று அம்பலப்படுத்தினார். இவ்வகையில் பெரியார் பார்ப்பனிய எதிர்ப்பைத் தொடங்கிவைத்தார். அதேவேளையில் அவர், கடவுள் மறுப்பு-சுயமரியாதை இயக்கத்தை முன்னுன்று நடத்தினார். இந்துமத இதிகாசங்களை, புராணங்களை அவற்றின் பார்ப்பனியத் தன்மையை அம்பலப்படுத்தினார். இந்தி எதிர்ப்பு வடிவம் பகுத்தறிவு சிந்தனை என்றவாறு பொருள் கொள்ளப்பட்டது. தமிழ்த் தேசியம் என்ற ஆலமரமாக பெரியார் நின்றார்.

தமிழ் இனத்தை அழித்துக் கொண்டிருந்த, ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த, அடிமைப்படுத்திக் கொண்டிருந்த பார்ப்பனியத்தையும் வேற்று மொழி ஆதிக்கத்தையும் எதிர்த்தார் பெரியார். அறிவியல் கருத்துக்களைச் சொல்லி சாதியாதிக்கம் செய்யும் கும்பல்களை

விரட்டியடிக்க கொள்கை வகுத்தார். பெரியார் கொள்கையின்பால் பற்றுக்கொண்ட பகுத்தறிவு விரும்பியாய், பெரியார் எனும் ஆலமரத்தின் விழுதுகளில் ஒன்றானார் கலைஞர் கருணாநிதி.

தாய்மொழிப் பற்றே இன உணர்வாக உயருகிறது; தாய்மொழிப் பற்றில்லாதவர்கள் இனமக்களுக்காகப் பாடுபட்ட வரலாற்றை உலகமெலாம் தேடினும் காண இயலாது. இதனைத்,

"தாய்மொழிப் பற்றில்லா தன்னாட்டுப் பற்றே
தன்னினங் கொல்லவே தான்கொண்ட புற்றே"

எனப் பாவாணர் மொழிவார்.

தமிழ் மொழியினைக் காக்க வேண்டிய கடமை உணர்வைத் தமிழர்க்கு ஊட்டவும், தமிழர் மொழி, இனம், பண்பாடு, கலை, இவ்உணர்வுகளைத் தமிழ் மக்களிடம் வளர்த்திடவும் முனைந்தனர். தமிழரிடையே முதலில் இனஉணர்வு ஊட்டப் பெற்றால்தான், நாட்டுணர்வும், மொழியுணர்வும், பண்பாட்டுணர்வும் தழைக்கும் என்பதை உணர்ந்து முற்போக்கு எண்ணமுடையோர் தமது எண்ணங்களைப் படைப்பிலக்கியங்களாக ஆக்கித் தந்தனர். இதழ்களைத் தொடங்கினர். அவ்வேளையில் தந்தை பெரியாரின் பணி, இதழியல் துறையில் ஒரு மைல்கல்லாக விளங்கியது. குடியரசு, விடுதலை, புரட்சி எனும் இதழ்களை நடத்தியதன் வாயிலாகத் தமிழ் மக்களிடம் இனவுணர்வைப் புகட்டினார் பெரியார்.

தமிழ்மொழிப்பற்று இனப்பற்றினைத் தமது கலை, இலக்கியப் படைப்புக்களில் கலைஞர் வெளிப்படுத்தினார். மொழிப் பற்றுடைய அவருடைய படைப்புக்கள் முகிழ்த்தன, தமிழுணர்வூட்டின.

இலக்கியம் காலக்கண்ணாடி என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு தம் அரசியல் வாழ்க்கையால் ஏற்றுக் கொண்ட கருத்துக்களையே கருப்பொருளாகக் கொண்டு கவிதை, திரைக்கதை, பாடல், நாடகம் எனப்பல கலைக் கூறுகளாய் வடித்துத்தந்தார். அவர் அரசியல் வாதியாகவும் இலக்கிய வாதியாகவும் இருந்ததால் அரசியல் - இலக்கியத்துக்கும், இலக்கியம் - அரசியலுக்கும் பயன்பட்டது. கலைஞரின் அரசியலுக்கு, கலை ஓர் அரிய கருவியாக அமைந்தது. பேச்சு, உரைநடை, நாடகம். திரைப்படம் எனப் பல துறைகளில் திறன் பெற்றவராக விளங்கினார்.

மொழிக் கொள்கையின் தொடக்க நிலைகளைக்கூட இலக்கியப்படைப்புக்களில் பதிவு செய்தார். மொழிவுணர்வே அவரது அரசியலுக்கு மூலதனமாக இருந்தது என்று சொல்லுதல் மெத்தப் பொருந்தும். இந்தி ஆதிக்கத்திற்கு எதிராக ஆங்கிலமும் தமிழும் எனும் இருமொழிக் கொள்கையினைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாக அண்ணா உருவாக்கினார். கலைஞர் செயல்படுத்தினார்.

அவரது படைப்பில் - தமிழ் மரபு, பண்பாடு, இவற்றுடன் பகுத்தறிவும் இணைந்தே நிற்கும். மக்களிடம் மூடநம்பிக்கைகள் வேரூன்றியிருந்த காலகட்டத்தில் பகுத்தறிவைப் புகட்டுபவராக விளங்கினார். இலக்கிய

உலகில் சமூகச் சீர்திருத்தங்களைப் படைக்கும் எழுத்தாளராகத் திகழ்ந்தார். கலைஞரின் உரைநடை வீச்சுக்கு ஓர் எடுத்துக்காட்டு:

"ஈட்டியின் பாய்ச்சல்கண்டு இமை கொட்டியவன் கோழை!
அது அன்றைய திராவிடத்தின் பாசறைமுழக்கம்! அந்நாள்
திராவிடம் தீட்டிய வாட்கள்! வால்நீட்டிட வஞ்சகர் அஞ்சும்
நாள்அந்நாள்! இன்றைய திராவிடம் பூட்டிய கூண்டு! ஆரிய மரபு
ஊட்டிய நஞ்சு மறத்தமிழர் நெஞ்சை மாட்டியிழுத்த நேரம்!
வீழ்ச்சிப் படலத்தின் துவக்கத்தோடு அடிமைஅத்தியாயம் ஆரம்ப-
மாயிற்று! ஆரியத்திற்குப் பாதபூசை! ஆரியத்திற்குப் பல்லக்கு!
ஆரியத்திற்கு ஆலயம்! . . . . இன உணர்ச்சியை இரவல்
கொடுத்தனர்.
. . . . சுயராஜ்ய மெருகு தீட்டப்பட்ட ராமராஜ்யம்! தீண்டாமை
வர்ணம் பூசிய வர்ணாசிரமம்! ஏழைகள் ஸ்தாபனம் என்ற போர்டு
தொங்கிய பிர்லா மாளிகை!" (குடியரசு, 1945)

இவ்வாறு பார்ப்பனியத்தை, காந்தி புகலிடம் பெற்றிருந்த பிர்லா மாளிகையைத் தமது எழுத்துக்களில் தோலுரித்துக் காட்டுகிறார். இதை அவர் எழுதிய போது அவருக்கு வயது இருபதே.

ஆரிய எதிர்ப்புக்குரலையும் 'திராவிடநாடு' என்ற விருப்பத்தையும் அவரது பாக்களில் காணமுடியும்.

"கருப்புடையை மாட்டிக்கொண்டு திராவிடத்தின்
இழுக்குநிலை காட்டிக்கொள்ள எழுந்ததுபார்!
நெருப்புமிழ் பட்டாளம் நெஞ்ச எரிச்சலுடன்!
உறுமுகின்றார் சமயப்பித்தர்! உயர்ந்த சகாப்தம்
தீராதுதீய எண்ணத்தார் சூழ்ச்சி வேரோடு பெயர்க்க
வீராதிவீரர் முழக்கம்! வைதீகர்கலக்கம்! என்றொரு வீரன்
பேரிகை கிழித்தான்!
கொந்தளிப்பில் குமுறுகின்றார் எந்நாட்டார்! இதைக்குயில்
கூவிற்று!
சோலையிலே - தென்றலிலே 'சொகுசு' பின்னர்
சொந்த நாட்டைக் காப்பாற்ற சுழற்று வாளை! சொன்னார்
. . . . பெரியார்!
காதலிலே கவிதையிலே களம்போகும் பேச்சு
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!"
(உதயம் - திங்களிதழ், ப.7, 10,4,1946)

என்று திராவிட நாட்டுக் கொள்கையை கவிஞர் சேரனின் கூற்றிலிருந்து மேற்கோள் காட்டுகிறார். 'திராவிடநாட்டை' தமிழருக்குரியதாக்குவதே அனைவரின் மூச்சாகவும் இருக்கவேண்டும் என்றும் தம் கொள்கைப் பிடிப்பைத் தமிழ் உணர்வைப் பறையறைகிறார். மேலும்,

"இந்நாட்டான் இங்குவாழ்ந்தான் ஈடில்லான்
எந்நாட்டையும் புறங்காணும் புகழுடையான்
தமிழ்நாட்டான் தலைகுனிந்தான்! இதோ நிமிர்ந்தான்

எழுச்சியுற்ற மாணவன் ஏறுநடை சிங்கம்தான்! இனிக்
கொளுத்திவிட்ட உமிகள்தான் குள்ளநரிக் கூட்டத்தார்!

(உதயம், ப.7.10.4.1946)

என்று கடிந்துகொண்ட கலைஞர், சொந்த நாட்டில் ஈடிணையற்று வாழ்ந்த தமிழர்கள் அவர்களை மதம், கடவுள், பக்தி என்று சொல்லி வீழ்ச்சியடையச் செய்த பார்ப்பனக் கூட்டத்தை-மாணவர்கள் எழுச்சியுற்று உமிகளென ஊதி விடுவார்கள் என்று நம்பிக்கையூட்டுகிறார். அத்தோடு,

"விதியென்பார்! வினையென்பார்! வாழ்வுபொய் என்பார்
மதிபெற்ற மாணவன் இதை நம்ப மாட்டான்
வாழத்தான் வேண்டுமென்றும் வாழ்க்கையிலே
சாடத்தான் வேண்டுமென்றும் சபதம் ஒலித்துவிட்டான்
பாட்டுக்குள் பதிந்துவிடும் பாயும்இளமைகாள் நும்புகழ்!
நாட்டுக் குழைப்பதிலே! நான்முந்தி! என்றுநிற்பீர்!"

(உதயம், திங்களிதழ், ப.7 1946)

என்று இளைய சமுதாயத்தைத் தட்டி எழுப்பி தமிழ்நாட்டிற்கு உழைக்க அழைக்கிறார் கலைஞர்.

"மூடப்பழக்கத்துக்கு ஊக்கம் காட்டி, அறிவு வளர்ச்சிக்கு முட்டுக் கட்டை போட்டு, ஓரினம் மட்டுமே தன்னை உயர்ந்தோனாக்கி, மற்ற இன மக்களை அடிமைப்படுத்தி ஆதிக்கம் செலுத்தும் நிலையினை வீழ்த்தி மனிதனை மனிதனாக மதித்து உழைப்புக்கு மதிப்பளித்து சமத்துவமாக வாழும் நிலையை அடையாளம் கொண்டது தான் தமிழரின் பொங்கல் திருநாள்" என்று திருச்சி சொற்பொழிவில் தமிழரின் விழாக்களில் உள்ள மனித நேயத்தைச் சுட்டிக் காட்டுகிறார்.

"தமிழின் தொன்மைதனைத் தரணிக்கு உணர்த்திடுவோம்
தன்னைப் பயன்படுத்தி எல்லார்க்கும் தமிழறிவு ஊட்டிடுவோம்
வரைமுறையற்ற வண்மையினால் தமிழ்வளம் வீழாது காத்திடுவோம்
இன்பத்தமிழ் என்று முழங்கிடுவோம்
இறைமைதனைத் தமிழின்பால் காண்பதினும்
ஏழைத் தமிழர் சிரிப்பினிலே காண்பதுவே சிறப்பென்போம்
பயிற்றுமொழி தமிழாகப் பரவிவிட்டால்
பால் நிலவுப் பயணத்தைத் தமிழ் மொழியில் கற்று நாமும்
பலபுதுமைகளைச் செய்திடுவோம் . . . . "

என எளிய நடையில் கொள்கைதனை விளக்கித் தமிழனின் இறைவழிபாடுகள் சமற்கிருதமாக அன்றித் தமிழாலே நிகழ்த்தப் படவேண்டும் என்றும், பள்ளியில் உயர்கல்வியில் பயிற்றுமொழி தமிழாகவே இருந்தால்தான் பால் நிலவிற்கு அறிவியல் பயணம் நிகழ்த்திடலாம் என்றும் கூறுகிறார்.

"பூட்டிய இரும்புக் கூட்டின் கதவு
திறக்கப்பட்டது! சிறுத்தையே வெளியில் வா!
எலிஎன உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலிஎனச் செயல் செய்யப் புறப்படு வெளியில்!"

என்று கூட்டைத் திறந்துவிட்டார் புரட்சிப் பாவலர் பாரதிதாசன். இவ்வழியில் வந்த கலைஞர் தாம் எத்தகைய நிலையிலும் தமிழருக்குழைப்பேன் என்பதைப் பின்வருமாறு முழங்குகிறார்:

"நானும்ஓர் பைத்தியம்தானே தமிழ் என்றால்!
நாயாகப் பிறந்தாலும் தமிழ்த்தொண்டர் முன்தானே
வால்குழைப்பேன்!
. . . ."

என தாம் எவ்வளவு கீழ்நிலைபெற்றாலும் தம் தமிழுணர்வை கைவிடேன் என்று கூறுகிறார் கலைஞர்.

தமிழ்ச் சமுதாய மேம்பாட்டில்தான் தமிழ்மொழியும் தழைத்தோங்கும் எனத்தயங்காமல் சொல்லமுடியும். தமிழ்ச்சமூகத்தில் பிறந்த ஒவ்வொருவரும் உயிராம் மொழிப் பாதுகாப்பில் ஒருமொழிக் கொள்கையில் ஊன்றி நிற்கவேண்டும். அதுவே முன்னேற்றத்தின் முழுமையைத் தரும். தமிழ்த்தேசியம் என்ற தகவமைப்பு என்பது மொழிச் சிறப்பென்பது - சொந்த நிலத்தில் சுதந்திரமாய் நடக்க, வாழ தனி உரிமைப் பெறப்படுவதுதான்.

மக்களிடம் பெற்ற சமூக அறிவை, பலனை அம்மக்களுக்குப் பயனுடையதாகப் படைக்க வேண்டும் என்பது காலத்தின் தேவை. அதுவே நியதி. பழங்கால இலக்கியங்கள், கலை, பண்பாடுகளே தமிழகத்தின் வரலாற்றுக் கருவூலங்கள். அவற்றை அழியாமல் காப்பது, வளரும் சமூகத்திற்கு நாம் ஆற்றும் கடமை.

இனம் என்பது குறிப்பிட்ட மொழியைக் கொண்டியங்குகிறது. ஆனால் தமிழ்நாட்டில் தமிழ்மக்களுக்குச் சொந்தமான மொழி சமுதாயத்தின் எல்லாத் துறைகளிலும் செழுமைமிக்க ஆளுமைமிக்க மொழியாக இல்லை. பிறமொழி ஆதிக்கத்திலிருந்தும் பிறமொழிக் கலப்பிலிருந்தும் தமது மொழியைப் பாதுகாப்பதே இனப்பற்று. தமிழ்நாட்டில் ஒரு தமிழனுடைய பெயரின் முன்னெழுத்து ஆங்கிலமாகவும் பெயர் சமற்கிருத மொழிக் கலப்புடனும் இருக்கிறது. அதனை தமிழ் மொழி ஆட்சியே, தக்க மருந்தாகி சாபக்கேட்டை விலக்க வேண்டும். இவ்வகையில் தன் சொந்த மொழி, இன, அடையாளங்கள் உணரப்படமுடியாமல் இருக்கின்றன. ஒரு மொழிக்கும் இனத்துக்குமான உறவு என்பது உயிருக்கும் உடலுக்குமான உறவு போன்றது. இத்தகைய உண்மை புறக்கணிக்கப்பட்டுள்ளதால் இந்தத் தமிழினம் தனது தொன்மையான பழைய மரபுகளை அடையாளம் காணுவதில் சிக்கலுடன் இருந்துகொண்டிருக்கிறது.

பிறமொழிக் கலப்புள்ள தமிழ் நிலத்தில் இனக் கொள்கையை மொழிக் கொள்கையை ஆழப்பார்வையுடன் ஒவ்வொருவரும் உணர்ந்து செயல்படுவதில்தான் தடுமாறுகின்றனர். இந்நிலைக்கான காரணம் என்ன என்பதை ஆராயின் இந்தியத் துணைக்கண்டம் பல்வேறு மொழிகளைக் கொண்ட தேசிய இனங்களின் வலுக்கட்டாய இணைப்பாக இருப்பதுதான். பெயரளவில் ரூபாய்த்தாளில் மதிப்பு இலக்கக் குறியீடுகளை மட்டும் 13 மொழிகளில் குறிப்பிடப்படுகின்றன. ஆனாலும் இந்தியாவில்

ஆட்சிமொழித்தகுதி இந்தி மொழிக்கே உரியதாக உள்ளது. இந்திய அரசின் 356டிகிரி வெப்பத்தின் காரணமாகத் தேசிய இனங்களின் மொழிக் கொள்கைகள் அவ்வப்போது ஆவியாகிவிடுகின்றன. பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தின் தொடர்ச்சியாக ஆங்கில அடிமைத்தனம் இந்தியத் துணைக்கண்ட தேசிய இனங்கள் மீது கவ்வியுள்ளது. இந்தியும் ஆங்கிலமும் தமது ஆதிக்கத்தை நிறுவியுள்ளன. இதன் அடிப்படையில் நோக்கும் போது தமிழ் இனத்தினுடைய மேம்பாடு என்பது தமிழ்மொழியின் மீது ஆதிக்கம் செலுத்தி வரும் சமற்கிருத மயமாக்கப்பட்ட இந்தி, மற்றும் ஆங்கில மொழி மேலாண்மையிலிருந்து தற்காத்துக் கொள்வதேயாகும். இந்த உணர்வுகளை வெளிப்படுத்துவதாக கலைஞரின் இளமைக்காலப் படைப்புக்கள் அமைந்திருக்கின்றன. ஓர் எழுத்தாளனின் முழுமையை அறிய, எழுத, திறனாய்வு செய்ய அவனது இளமைக் காலப் படைப்புக்களை ஆராய்வது என்பது தவிர்க்க இயலாது. அந்த வகையில் தமிழ் மறுமலர்ச்சி இயக்கம் வீறு கொண்டு எழுந்த காலக்கட்டத்தில் தொடங்கப் பெற்ற தற்காப்புப் போரில் ஒரு வீரனாகத் தம்மை இணைத்துக் கொண்ட கலைஞரின் இளைமைக் காலப்படைப்புக்கள் இங்கு ஆராயப்பெற்றன.

27 கலைஞரின் கவிதைத் திறம்

முனைவர் சோ. ந. கந்தசாமி

படைப்புப்பலபடைத்தல்

இலக்கியம் படைக்கும் எழுத்தாளரில் சிலர் கவிதை வடிப்பர்; சிலர் கதைகள் புனைவர்; சிலர் கட்டுரை வரைவர்; சிலர் நாடகம் புனைவர்; எனின் இவை அனைத்தும் படைக்கும் ஏற்றமிகு எழுத்தாளராக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி ஒளிவீசுகிறார். சிந்தனைச் சிற்பியாக, சிறந்த கவிஞராக, சிறுகதை ஆசிரியராக, புதினப்படைப்பாளராக, நாடக ஆசிரியராக, கட்டுரையாளராக, இதழ் ஆசிரியராக, திரை இலக்கியராக, பாடலாசிரியராக விளங்கும் கலைஞர் கேட்பார்ப் பிணிக்கும் சொல்லின் செல்வராகவும் திகழ்கின்றார். தமிழினத்தின் தலைவராகவும், தமிழகத்தின் காவலராகவும் ஒல்லும் வகையால் ஓவாது தொண்டாற்றிவரும் கலைஞர், அரசியல், ஆட்சிப் பொறுப்புக்களின் அலுப்பினைப் போக்கும் வகையில், இலக்கியம் படைப்பதில் ஆர்வமும் சுவையும் இன்பமும் கொண்டவராகத் தம் எழுத்துப் பணியைத் தொடர்ந்து ஆற்றிவருகிறார். அரை நூற்றாண்டு காலமாகத் தமிழன்னைக்கு இவர் சூட்டிவரும் இலக்கிய அணிகள் பற்பல. பாவேந்தர் பாரதிதாசன், “தமிழாய்ந்த தமிழன்தான் தமிழகத்தின் முதலமைச்சாய் வருதல் வேண்டும்” என்று தமிழியக்கத்தில் அன்று பாடினார்.[1] அவர் கனவிற்குச் செயல் வடிவம் தரும் வகையில் இன்று தமிழ் மக்கள் கலைஞரை அரியணையில் அமர்த்தி இருக்கிறார்கள்.

புலமைக்கவிஞர்

கலைஞர் மாணவராகப் பயின்ற நாள்முதலே கவிதைகள் புனைவதில் ஆர்வமும், அக்கறையும் காட்டிவந்துள்ளார். கவிதை புனைவதில் அவருக்கு ஆர்வத்தை வழங்கியவர் பாவேந்தர் பாரதிதாசனாகவே காட்சி தருகிறார். பாவேந்தரின் கவிதைகளில் கலைஞர் தோய்ந்தவர், திளைத்தவர், ஆழ்ந்தவர். அவர் புனைந்துள்ள கவிதைகளில் பாரதிதாசனின் தாக்கம் கூடுதலாகவே காணப்படுகிறது. சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, முத்தொள்ளாயிரம், கலிங்கத்துப்பரணி முதலிய செந்தமிழ் இலக்கியங்களைச் சிறப்பாகப் பயின்று தமிழ் இலக்கிய மரபினைக் கலைஞர் நன்கு வரையறை செய்துகொண்டுள்ளார். இந்த இலக்கியங்களின் தாக்கமும் இவர் கவிதைகளில் காணப்பெறுதல் சுட்டத்தக்கது. எனவே, தமிழ் இலக்கியப்பரப்பின் பெரும்பகுதியை நன்கு அறிந்த கலைஞர் அம்மரபின் வழி நின்று பாடமுற்பட்டாலும் அவர் வாழும் காலத்தின் மாற்றங்களையும், ஏற்றங்களையும் புதிய புதிய சிந்தனைகளையும், புரட்சி மிக்க எண்ணங்களையும் பாடத்தவறவில்லை.

பெரியாரின் சீர்திருத்தச் சிந்தனையும் அண்ணாவின் அடுக்கு நடையும் பாவேந்தர் பாரதிதாசனின் உணர்ச்சிச் சொல்வீச்சும் கலைஞரின் கற்பனைத் திறனால் அவர் கவிதைகளில் புதுவண்ணமும் பொலிவும் பெற்றுச் சுடர்விடுகின்றன எனலாம்.

பழைய கருத்துக்களைக்கூடப் பகுத்தறிவுப் பாதைக்கு ஏற்ற வகையில் சீர்மைசெய்து, செப்பனிட்டுச் சிந்தைக்கு விருந்தாகப் பாக்களைப் படைப்பதில் கலைஞர் முன்வைத்து எண்ணப்பெறுகிறார். இதனால் பாடுபொருளுக்கு ஏற்ப அதனை ஏற்றுவரும் பாவடிவத்திலும் புதுநெறியை அமைத்துக்கொள்வதற்கு அவர் பின்வாங்கியதில்லை.

பாடுபொருள்

கலைஞரின் கவிதைகள் என்ற தலைப்பில் வெளிவந்துள்ள பனுவலில் இடம்பெறும் பாடல்களில் காணப்பெறும் பல்வேறு இலக்கியச் சிறப்புக்களையும் இக்கட்டுரை ஆய்வதற்கு முற்படுகிறது. இத்தொகுப்பில், **1945**-ஆம் ஆண்டு முதல் கலைஞர் பாடியிருக்கும் **53** தலைப்புக்களில் அமைந்த பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் முதற்பாடல் பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தபொழுது **9.2.1969** அன்று சென்னை வானொலியில் கலைஞர் பாடிய கவிதாஞ்சலியாக அமைந்துள்ளது. **"இதயத்தைத் தந்திடு அண்ணா"** என்ற உருக்கம் மிக்க இந்நெடும்பாட்டு ஒரு வரலாற்றுக் காவியமாக, நேசமும் பாசமும் மிக்க தம்பி செலுத்தும் கண்ணீர் அஞ்சலியாகப் பாடப்பெற்ற கையறுநிலைப் பாடலாக்த் திகழ்கிறது. இறுதிப் பாடல் கவிஞர் கண்ணதாசன் மறைந்தபொழுது, பாடிய இரங்கல் பாடலாக இலங்குகிறது. **"என் இனிய நண்பா! ஏன் பிரிந்தாய்?"** என்பது இக்கவிதைக்குக் கலைஞர் தந்துள்ள மகுடம் ஆகும். எஞ்சிய இடை நடுவே அமைந்துள்ள பாடல்கள் பற்பலவும் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு பொருள்களில் நடைபெற்ற கவியரங்குகளில் பாடப்பெற்ற தலைமைக் கவிதைகளாக வீறுபெற்று விளங்குவன. தென்னவன் காதை, இந்திரஜித் என்பன இரண்டும் தென்னிலங்கைக் கோமான் ஆகிய இராவணனைப் பற்றியும் உலகெலாம் கலக்கிவென்ற அவன் வீர மைந்தன் மேகநாதனைப் பற்றியும் பாடப் பெற்றவையாகும். "வாளி மன்னன்" என்னும் கவிதை இராமனால் மறைந்துநின்று எய்யப்பெற்ற வாலியின் பேராற்றலையும், பெருவீரத்தையும் புலப்படுத்தும் சொல்லோவியமாகும். இரணியன் என்ற நெடும்பாட்டு அங்ஙனமே திராவிட இனஉணர்வுடன் புனையப்பெற்ற பாடலாகும். நியாயத்தராசு, ஏற்பாரோ, இன்றுமா கூச்சல்? வாழ்க ஜீவா, இன்றைக்கு உன்றன் பிறந்த நாள் முதலிய கவிதைகள் பல்வேறு இதழ்களில் வெளிவந்தவை. தமிழின உணர்வும் தாய்மொழிப் பற்றும் சமுதாய அக்கறையும் இவர் கவிதைகளின் சாரமாகும். இயற்கை பற்றிய பாடல்களும் அரசியல் தலைவர்கள் பற்றிய அருங்கவிதைகளும் குறிப்பிடத்தக்கவை.

கலைஞர் அமெரிக்க அரசின் அழைப்பை ஏற்று அந்நாட்டிற்குப் பயணம் சென்ற பொழுது ஆர்லந்தோ ஏரியில் அழகான நீரூற்று ஒன்றினைக் கண்டு ஆசு கவியாகப் பாடிய "கற்பனை ஊற்று" என்னும் கவிதை சிறப்பாகச் சுட்டுதற்குரியது.

முதன்மை யாப்புக்கா ? பொருளுக்கா ?

இக்கவிதைகள் அனைத்தையும் படைப்பாசிரியன் என்ற வகையில் உருவாக்கிய கலைஞர் மரபுவழி வந்துகொண்டிருக்கும் யாப்பியல் தடைகளைத் தகர்த்துச் செல்ல வேண்டிய நெருக்கடி நிலையினை எண்ணி வருந்திய இடங்களும் உள்ளன. யாப்பிலக்கணத்திற்கு முதன்மை தருவதா? சொல்ல வேண்டிய கருத்துக்களை ஆற்றல் மிக்க உணர்ச்சிமிக்க சொற்களில் ஒசைநயத்துடன் வெளிப்படையாக உணர்த்துதற்கு முதன்மை தருவதா? என்ற வினா எழும் வேளையில், கலைஞர் பின்னதற்கே முதன்மை தந்துள்ளார். இத்தகைய நிலை இலக்கிய வரலாற்றில் இன்று நேற்று அல்ல, சங்க காலத்திலேயே நிகழ்ந்துள்ளது. வெண்டளை சிதைந்து வேற்றுத்தளை ஏற்று வரும் வெண்பாக்களும், ஐஞ்சீர் அடுக்கி வரும் வெண்பாக்களும் இன்னோரன்ன பிறவும் கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகையிலும் பாரோர் பாராட்டும் பரிபாடலிலும் நிரம்பக் காணப்படுகின்றன.[2] இணைக்குறளாசிரியம் ஒருவகையில் ஆசிரியப்பாவின் சிதைந்த வடிவமே. ஒருவன் சென்ற நிழல்வழியன்றித் தானே புதிய யாப்பினையும், கற்பனையினையும் சிந்தனையினையும் படைத்துக்கொண்டு உருவாக்கும் இலக்கியத்தைத் தொல்காப்பியர் "விருந்து" என்ற பெயர் தந்து வரவேற்றுள்ளார்.[3]

"விருந்தே தானே
புதுவது புனைந்த யாப்பின் மேற்றே"

சுந்தரர் விருந்தாய சொன்மாலை, கொண்டேத்தி என்று தேவாரத்தில் கூறியிருத்தல் இங்கு எண்ணுதற்குரியது. இத்தகைய புதுமைகள்தாம் மொழியின் இளமைக்கும் ஆக்கத்திற்கும் அடிப்படையாக அமைவன.

எனவே, கலைஞரின் கவிதைகள் "விருந்து" என்னும் வனப்பமைந்த இலக்கிய வகையாக எண்ணுதல் ஏற்புடையது.

கலைஞர்க்கென்று கவிதைக் கோட்பாடு ஒன்று அவர் கவிதைகளில் விளங்கிடக் காணலாம். அதனை முதற்கண் நுணுகி நோக்குதல் யாப்பியல் வரலாற்றில் விளைந்துவரும் புதுமைகளை உள்ளவாறு உணர்ந்து கொள்வதற்கு உதவிடும்.

கலைஞரின் கவிதைக்கொள்கை

தம் கவிதைத் தொகுதியின் முன்னுரையில் கவிதை குறித்துக் கலைஞர் பொறித்துள்ள குறிப்புக்கள் இங்குச் சுட்டத்தகுவன.[5] "கவிதையல்ல என்ற தலைப்பில்தான் தொடக்கத்தில் எழுதிக்கொண்டிருந்தேன். கவிதை இலக்கணத்திற்குள் என்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை. . . . . ."

"கற்பனைகள் உணர்ச்சி பெற்றுக் கவிதைச் சொற்களாகப் பாய்ந்திடும்போது இலக்கணக் கட்டுப்பாடு எனும் கடிவாளத்தை என்னால் பயன்படுத்த முடியவில்லை. அது எனது பலவீனம்தான்"

"எனினும் பலம் வாய்ந்த கவிதைக்குதிரைகளின் பாய்ச்சலுக்கு உங்கள் பாராட்டு கிடைக்குமென்று நம்புகிறேன்".

மேற்சுட்டிய குறிப்புக்களினால் கலைஞரின் சீரிய, நேரிய உள்ளம் புலனாகிறது. அவர் பலவீனமே அவர்க்குப் பலமாக அமைவதை அறிஞர்கள் நன்கு உணர்வர்.

"விடுதலை வீரர்கள்" என்ற கவியரங்கத் தலைமைக் கவிதையில் கவிதை பற்றி அவர் குறிப்பிடும் சொல்லணிமிக்க கருத்து நோக்கத்தக்கது. அடிமைத் தளையை அறுத்த விடுதலை வீரர்களின் வரலாற்றைப் பாடுவதால் யாப்புத் தளையை அகற்றிப் பாடுகிறேன் என்கிறார். தொடை தட்டித் துரோகிகளை வீழ்த்திய அந்த வீரர்களைப் பாடுவதால் இவர் பாட்டும் தொடை தட்டும் என்று சொல் நயம் தோன்றப் பாடுகிறார். மேலும்,

"என் கவிதை
யாப்பின்றிப் போனாலும் போகட்டும்,
நம்நாடு, மொழி, மானம் உணர்வெல்லாம்
காப்பின்றிப் போதல் கூடாதெனும் கொள்கை யொன்றால்
வாய்ப்பின்றிப் போனாலும் செய்யுள் கற்கக்
காய்ப்பின்றி நிற்கின்ற மரமாக ஆகாமல் நெஞ்சில்
ஊறுகின்ற உணர்ச்சிகளை வரிகளாக்கிக் கொள்கை
மாறுகின்ற கோடரிகள் உணர்வதற்கு ஒன்று சொல்வேன்"

என்று கலைஞர் பாடுபொருளுக்கு முதன்மை கொடுத்துப் பாடலைப் படைத்திருத்தல் பார்க்கத்தக்கது.[6] ஊன்றி நோக்கின் மேற்சுட்டிய கவிதைப் பகுதியில் மோனை எதுகை, ஓசை நயம் முதலிய யாப்பியல்புகள் நிரம்பப் பதிந்திருத்தல் பாராட்டற் பாலது.

தமிழ்ப் புத்தாண்டு கவியரங்கம் ஒன்றில் தலைமைக் கவிதை வழங்கிய கலைஞர் தன்னை ஒரு பறவையாக உருவகித்துப் பாடியுள்ள பகுதி காணத்தக்கது. பெரும்பாலும் கவிஞர்களைப் பறவைகளாக உருவகித்துக் கூறுதல் தமிழிலக்கியங்களில் மட்டுமன்று ஆங்கில இலக்கிய மரபிலும் காண்கிறோம். கவிஞனாகிய பறவைக்கு இலக்கணம் என்பதுதான் இறகு. இந்த இறகு முளைத்த நிலையில் தவிக்கும் கவிக்குஞ்சாகத் தன்னைக் காண்கிறார். அதே நிலையில் வால் முளைத்த சில வம்புக் கவிஞர்களைச் சாடும் வகையில்.

"சிறகு முளைக்காமல் இருக்கின்ற கவிதைக் குஞ்சு நான்
சிலரைப் போல் வால் மட்டும் முளைக்காமல் இருக்கட்டும்
என் கவிக்கென்னும் சிறு கவிஞன் நான்"

என்று அங்கதமாகவும் இங்கிதமாகவும் பொறித்துள்ளார்.[7] இவ்வாறு பாடுவது அவையடக்கம் என்று மரபுக் கவிஞர்கள் சொல்லிவிடுவார்கள் என்பதையும் கலைஞர் நன்கு அறிந்தவர். எனவே தான்,

"அடக்கத்தால் சொல்லுவதாய் எண்ணாதீர்
தளை சீர் தொடை அணி யாப்பெல்லாம்
தடுக்கத்தான் செய்யுமய்யா என் பாட்டில்!

அதற்கு விதி விலக்கு
கொடுக்கத்தான் வேண்டும் நீங்கள் இல்லையானால்
உமை விடுத்து
நடக்கத்தான் வேண்டுமென்று எழுந்திடுவேன்"

என்று எடுப்பும் ஏக்கழுத்தமும் தோன்றக் கலைஞர் கவிதை பற்றிய தம் கருத்தை முன்வைக்கிறார்.[8] சீர், தளை, தொடை முதலிய யாப்பின் உறுப்புக்கள் அவர் பாடல்களில் இல்லாமல் இல்லை. தொன்றுதொட்டுப் பின்பற்றி வரும் முறையில் அவை அமையவில்லை என்பதுதான் உண்மை. அம்மரபினின்றும் சற்று வேறுபட்டு அச்செய்யுள் உறுப்புக்கள் பலவும் புதுவடிவம் கொண்டிருத்தல் அவர் பாடல்களில் காணலாம்.

பொங்கல் திருநாளை ஒட்டி அவர் பாடிய தலைமைக்கவிதையிலும் இத்தகைய கருத்துக்கள் காணப்படுகின்றன. தளை, தொடை பொருந்திய யாப்புடைக் கவிதை வளையணிந்த வனிதையைப் போன்றது என்றும், அவை அமையா யாப்பு வளையணியாப் பெண் போன்றது என்றும் கலைஞர் சுட்டுகிறார். ஆபரணம் சூடிய ஆரணங்கு இன்சுவை அடிசிலைச் சமைத்து வழங்கினும், அணி புனையா நங்கை அதே உணவை வடித்தளிப்பினும் பசித்தவர்கள் அவற்றை ஏற்று உண்டு மகிழ்வர். அதுபோலவே யாப்புடைய கவிதையில் வழங்கப்பெறும் கருத்தினையும், யாப்பு அமையாக் கவிதையில் வழங்கப்பெறும் கருத்தினையும் கலைஞர்கள் ஏற்றுப் போற்றுதல் வேண்டும் என்ற கருத்தில் கலைஞர் படைத்துள்ள பாடற்பகுதி காணத்தக்கது.[9]

"தளை தொடைநயம் யாப்பெல்லாம் கற்றிலன் நான்
வளை அணியாப் பெண் கரம்போல் வடித்தளிப்பேன் சில பாடல்
பொறுத்தருள்வீர் புலவர் ஏறே"

கலைஞரின் அடக்கத்தோடு கூடிய பெருமிதம் இத்தகைய கவிதையடிகளில் ஒலிக்கிறது. மற்றுமோர் இடத்தில்,

"அணி சீர் தளை தொடை எதுவுமின்றிக் கவி
அரங்கேற்ற வந்து விட்டேன்"

என்று கலைஞர் சுட்டியுள்ளார்.[10] "அண்ணன் ஒர் கவியரங்கம்" என்ற தலைமைக் கவிதையில்,

"கவி எழுத நேரமில்லை எனினும்
கலைஉள்ளம் எனை விடுவதில்லை
. . . .
. . . .
ஏதோ கிறுக்கி வந்தேன் கவிதையெனும் ஒருகத்தை"

என்று குறித்துள்ளார்.[11] அன்றியும், புதுவை வானொலித் தலைமைக் கவிதையில்,

"எதுகை மோனை எதையும் பற்றி
எழுதாக் கவிஞனை வருக என்றே
புதுவை வானொலி அழைத்தது புதிரே"

என்று தன்னடக்கமாய்க் கலைஞர் பாடியிருப்பினும்[12] அப்பாடலில் ஆசிரியப்பாவின் அழகு அமைந்திருத்தல் அறியத்தக்கது. "உடைமைகள்

பத்து" என்ற தலைப்பில் சென்னையில் நடைபெற்ற கவியரங்கில் கலைஞர் பாடிய தலைமைக் கவிதையில்,

"எதுகை மோனை இப்போது பத்துமாதம் இன்னும் பிறக்கவில்லை
சீர் தளைக்கு சீமந்தம் ஆகவில்லை
வேர் தகைத்த பலாக்கனி போல் கவி வழங்கப்
பேர் பொறித்த பாவாணர் இருக்கின்றார்"

எனப்பாடும் பகுதி எண்ணத்தக்கது.[13]

இலக்கணம் இல்லாக் குறைபாட்டினைக்கூடக் கவிதைக்கு அடிப்படையான கற்பனை வளத்தோடும் உவமைச் சுவையோடும் உளம்கொளும் வகையில் கலைஞர் உணர்வு குன்றாமல் பாடியிருத்தல் படித்து மகிழத்தக்கது.

இலக்கணத்தை அவர் வெறுக்கவில்லை. என்றாலும் இலக்கணம் அவரோடு ஊடல் செய்கிறது. அதனை "அன்புக் கிள்ளை" என்றே செல்லமாகப் பாராட்டுகிறார். மரபுக்கவிஞர்களுக்கு நடுவே தானும் தமிழ் வீரத்தால் அமர்ந்துவிட்டதாகக் கூறிக் கொள்கிறார். அவர் எப்படிப் பாடினாலும் அப்பாட்டு தமிழ் உணர்வை, தமிழ் இன உணர்வைக் காக்குமே தவிரக் கடியாது என்று கருதுகிறார். "அருமறையில் அறுவர்" என்ற கவியரங்கத் தலைமைக் கவிதையில்,

"இலக்கணத்தை எதிர்க்கும் எண்ணம் என்பால் இல்லை
இலக்கணம் தான் ஊடல் செய்யும் அன்புக் கிள்ளை
ஒருபாட்டும் இலக்கணமுடன் ஒருப்பட்டு வராவிடினும் நான்
தரும்பாட்டு தமிழ் உணர்வைக் கொல்லாதெனும் துணிவுடனே
கரும்பாட்டும் ஆலையிலே வேம்பொன்று புகுந்தது போல்
இக்கவிக் கூட்ட மேடையிலே வீரமாய்ப்புகுந்து விட்டேன் தென்றல்"

என்று கலைஞர் குறிப்பிடும் பகுதி கூர்ந்து நோக்கத்தக்கது.[14] மரபுக்கும் மரபு மீறலுக்கும் இடையே ஏற்பட்ட மனப் போராட்டத்தை இப்பாடற்பகுதி தெளிவாகக் காட்டுகிறது. கலைஞர் கவிதை எழுதத் தொடங்கிய காலத்தில் இலக்கணக் கட்டுப்பாடுகளும் விதிமுறைகளும் கடுமையாக விளங்கின என்பதற்கும், கட்டறுத்துக் கரையேற முற்பட்ட விடுதலை வேட்கை படைத்த இளநெஞ்சங்களும் இலங்கின என்பதற்கும் கலைஞரின் கவிதைகளில் போதிய ஆதாரங்கள் காணப்படுகின்றன. மரபினை, 'Tradition' என்றும் அதனைக் கடந்துசென்று புதுமைப்படைத்தற்கு வித்தாக விளங்கும் புத்திக் கூர்மையை, 'Talent' என்றும் டி.எஸ்.எலியட் என்ற திறனாய்வாளர் தெளிந்து கூறியுள்ளார். இவ்விரு தன்மைகளில் இரண்டாவது இயல்பு இவர் கவிதைகளில் விஞ்சி நிற்கக் காண்கிறோம். மேலே சுட்டப்பெற்ற பாடலிலும் ஒலி நயம், தொடை நலம், சந்த நயம் முதலிய கவிதைக் கூறுகள் பொருந்தி விருந்து என்னும் புதுவகைப் பாவாகப் பொலிந்திருத்தல் காணலாம்.

கவிதை எழுதினாலும் கட்டுரை எழுதினாலும் கதை எழுதினாலும் எதை எழுதினாலும் கலைஞர்க்கு எதுகையும் மோனையும் ஏவல்

கேட்கின்றன. அவர் பேச்சுக்களிலும் இயல்பாகவே இத்தகைய நடை நலம் அமைவதால் அப்பேச்சுக்கள் இலக்கியத்தரம் பெறுகின்றன எனலாம்.

ஆங்கிலக் கவிதை வரலாற்றிலும் பற்பல மாற்றங்களைப் பெருங் கவிஞர்கள் தோற்றுவித்துள்ளனர். மில்டன், டென்னிசன், போப், கோல்டு-சுமித் முதலியோர் பாடியுள்ள கவிதை யாப்பும் தனித்தன்மை வாய்ந்தவை. எந்த யாப்பிலக்கணத்திற்கும் கட்டுப்படாத 'free verse' 'neo-poetry' (verse libre) வசன கவிதை (prose poetry) முதலிய புதிய யாப்பு வடிவங்களை 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் ஐரோப்பியக் கவிஞர்கள் தாராளமாகப் பாடியுள்ளனர். ஆட்சி அமைப்பு முறையிலும் சமுதாய நிலையிலும் ஐரோப்பிய அமெரிக்க உருசிய நாடுகளில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவு பழகி வந்துகொண்டிருந்த பழைய இலக்கிய வடிவங்களிலும் யாப்பு வடிவங்களின் அரிதும் பெரிதுமான மாற்றங்களைச் சாதித்திருத்தல் ஒரு சரித்திரத் தேவையாகக் கருதுதற்கு உரியது. வால்ட்விட்மென், டி.எச்.லாரன்ஸ் முதலியோர் இத்தகைய புதிய யாப்பியல் கவிஞர்கள் ஆவர்.

நோபல் பரிசு பெற்ற இரவீந்திரநாத் தாகூரின் கீதாஞ்சலி இவ்வகைப் புதிய யாப்பில் புனையப்பெற்றதே.

ஆங்கிலத் திறனாய்வாளர் ஒருவர் ஒலி நயமே யாப்பிற்கு அடிப்படை என்றும் ஒலி நயத்துடிப்பே கவிதையைக் கேட்போரின் காட்சிப்புலனைக் கூர்மைப் படுத்துவது என்றும் குறித்துள்ளார்.[15]

விடுநிலைப் பாடலில் (free verse) பாடலடிகளின் அளவினைக் கணிக்க முடியாது என்றும், மிகவும் நீண்டு செல்லுதலும் அதன் இயல்பு என்றும் அத்திறனாய்வாளர் அறிந்து கூறுகிறார்.[16] இத்தகைய புதிய கவிதைகளைப் ''பேச்சுக்கவிதை'' (spoken poetry) என்று திறனாய்வாளர்கள் பாராட்டியுள்ளனர்.

சிறந்த கவிஞரும் திறனாய்வாளரும் ஆகிய டி.எஸ்.எலியட் இப்புதிய யாப்பினை உறைந்து போன பழைய கவிதை வடிவத்தைக் தகர்த்தெறிய வந்த புரட்சி வடிவம் என்று போற்றுகிறார்.[17]

எஸ்.டி. கோலரிட்ஜ் என்ற திறனாய்வாளர் "Poetry of the highest kind may exist without metre" என்று சுட்டுதல் இங்கு எண்ணத்தக்கது. யாப்பின்றியும் விழுமிய கவிதை தோன்றக்கூடும் என்பதே அவர் கருத்து.

அட்சன் என்ற திறனாய்வாளர் உரைநடையிலும் கவிதை உண்டு என்றும் கவிதையிலும் உரைநடை உண்டு என்றும் சுட்டியுள்ளார்.[18]

எனவே மேலை நாட்டுக் கவிதை வரலாற்றிலும் பற்பல புதுமைகளும் புரட்சிகளும் தோன்றியுள்ள உண்மை புலனாகும். படைப்புலகில் காணப்படும் பொதுப்பண்புகளில் இத்தகைய புதுமைதான் மொழியை இளமையும் வளமையும் பொலிவும் வலிவும் மிக்கதாகப் பேணுகிறது என்ற உண்மை தெளிவாகும்.

யாப்பிலக்கண அறிவு மட்டும் ஒருவனைக் கவிஞனாக உண்டாக்கிவிட முடியாது. அதற்கு அப்பாலும் கவிஞன் உதயமாகின்றான். நிலத்தைக் கிழித்துக் கிளம்பும் நீரூற்றினைப் போல உள்ளத்தின் அடி ஆழத்திலிருந்து பொங்கி வழியும் உணர்ச்சிப் பிரவாகமே கவிதை ஆகிறது.[19] உணர்ச்சிப்பெருக்கில் கவிஞன் உல்லாசமாகப் பாடும்பொழுது யாப்பிலக்கண வேலியைத் தாண்டியும் முறித்துக் கொண்டும் கவிதை நடைபோடுகிறது. அத்தகைய புதிய நடையே புதிய கவிதை ஆக்கத்திற்கு அடிப்படை.

மகாகவி பாரதியார், சொல் புதிதாய், பொருள்புதிதாய்ச் சுவை புதிதாய்ச் சோதிமிக்க நவகவிதை பாடியதாகப் பெருமிதம் தோன்றச் சுய விமரிசனம் செய்துகொண்டார். அவர் வழி வந்த பாவேந்தர் பாரதிதாசன், பாரதியார் வகுத்த புதிய கவிதைப் பாதையை மேலும் செப்பனிட்டுச் சீர்ப்படுத்தினர். தமிழகத்திலும் சமுதாய மாற்றமும் அரசியல் மாற்றமும் ஏற்படுத்தும் நோக்கில் அறிவு வாளைச் சுழற்ற முனைந்த கவி மறவர்கள் யாப்புத் துறையிலும் இலக்கிய அமைப்பிலும் பல்வேறு புதுமைகளைப் பரிசோதித்துப் பார்த்து வெற்றி கண்டனர். இங்ஙனம் வெற்றி பெற்ற கவிவீரர்களில் கலைஞர் குறிப்பிடத்தக்கவர்.

கவிதைக்கலையின் நோக்கம்

கலைகளுக்கெல்லாம் அரசாக விளங்குவது கவிதைக்கலையாகும். கலை கலைக்காகவா ? வாழ்க்கைக்காகவா ? என்ற சிந்தனைப் போராட்டம் மேலை நாட்டுத் திறனாய்வாளரிடம் அடிக்கடி எழுந்தது உண்டு. இக்கேள்வி கலைஞர் உள்ளத்திலும் உதித்தது. முதலில், கலைக்கோட்பாடு பற்றிய திறனாய்வாளர் கருத்தினை அறிந்துகொண்டு, கலைஞர் தரும் விளக்கத்தைக் காண்போம்.

கலை கலைக்காகவே (Art for Art's sake) என்பார் கூறும் காரணங்களில் சில :

சித்திரம், சிற்பம் முதலியவற்றைப் பார்த்துச் சுவைப்பது வெறும் கலையின்பத்திற்காகவே. கலையின் முடிந்தபயன் இன்புறுத்தலே அன்றிக் கற்பிப்பதும் போதிப்பதும் அன்று, மல்லிகைப் பந்தருக்கு வேலி கட்டி அதன் மணத்தைச் சிறைப்படுத்த முடியுமா ? அதுபோலவே எந்த கலைக்கும் ஒரு குறிக்கோளையும் நோக்கத்தையும் கற்பித்து வரம்பு கட்டுதல் கூடாது. கற்பனையின் திறனால் கலைஞன் வெளியிடும் அனுபவங்களை அப்படியே நாமும் பகிர்ந்துகொள்ளவேண்டும் அன்றிப்பயன் உண்டா ? இல்லையா ? என்ற கேள்விக்கு இடம் இல்லை என்பர்.

சேக்ஸ்பியர் நாடகங்களுக்கு விழுமிய விமரிசனங்கள் எழுதியுள்ள பிராட்லி என்ற அறிஞன் கூறும் கருத்து கூர்ந்து நோக்கத்தக்கது.

"இன்பம் ஒன்றையே தரும் நோக்குடன் ஆக்கப்பெற்ற கலையில் அவ்வின்பத்திற்குப் புறம்பாகக் குறிக்கோள், நீதி, அறம் முதலியவற்றைக் கலைஞன் புகுத்துவதும் தவறு. கலையைத் துய்ப்பதற்குத் தொடங்கிய

நாம் இவற்றில் கவனம் செலுத்தினால் கலையால் பெறும் இன்பத்தை இழப்பதுடன், எதைக் கலை தாங்கி நிற்கவில்லையோ அதைத் தேடித்திரியும் பிழையைச் செய்தவர் ஆவோம். ஆதலின் கலையை அனுபவிப்பதே கடமை. அப்பால், பயனைப் பாராதே" என்று அறிவு கொளுத்தினார். ஆஸ்கார் ஒயில்டு போன்றவர்களும் இத்தகைய கருத்தினரே. வெறும் கொள்கைகளையும் நீதி போதனைகளையும் சுமந்து செல்லும் வாகனங்களாகக் கலை இலக்கியம் பயன்படுத்தப்பட்டதைப் பார்த்தெழுந்த விபரீதக் கொள்கைதான் "கலை கலைக்காகவே" என்ற கோட்பாடாயிற்று. என்றாலும் கோல்டுஸ்மித், எமர்சன், கோலரிட்ஜ், மாத்யூ ஆர்னால்டு போன்றவர்கள், "பயன்படாத எதுவும் கலையன்று. வாழ்க்கைக்கு வேண்டிய நெறிமுறைகளை உணர்த்தாத, புகட்டாத எதுவும் கலை ஆகாது" என்று தெளிந்துரைத்தனர். மாத்யூ ஆர்னால்டு என்னும் திறனாய்வாளர்,

"வாழ்விற்கு வேண்டிய நல்லொழுக்கத்திற்கு மாறாகப் போதிக்கும்
எந்தக் கலையும் வாழ்விற்கு எதிராகவே செய்யப்பட்ட கலகமாகும்"

என்று துணிந்துள்ளார். ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ் என்ற திறனாய்வாளர்,

"பயன்படாத கவிதை வெறும் ஓசைக் கூட்டம்"

என்று இயம்பினார்.

எனவே, இன்பம் பயக்கும் அழகுக் கலைகளாக இருப்பினும் அவை ஒருவகையில் வாழ்க்கைக்கு நெறி காட்டிப் பயன்தருதல் வேண்டும் என்ற கருத்தே மேலோங்கி நிற்கக் காண்கிறோம்.

சென்னை வானொலியில் "வாழ்வெனும் பாதையில்" என்ற பொருள் குறித்து நிகழ்ந்த கவியரங்கின் தலைமைக் கவிதையில்,

"கலை கலைக்காக எனக்கதைத்தோர் ஒய்ந்துவிட்டார்
கவின் ஒளி வீட்டுக்காக; விளக்குக்காக அல்ல என விளக்கம்
பெற்றார்" என்று கலைஞர் தரும் விளக்கம் காணத்தக்கது.[20] தமிழகத்திலும் க.ந.சு. போன்று விமர்சகர்கள் இத்தகைய சர்ச்சைகளில் ஈடுபட்ட காலம் உண்டு. ஆனாலும், "கலை வாழ்க்கை மேம்பாட்டிற்காகத்தான்" என்ற கருத்தை விளக்கு உவமை கொண்டு கலைஞர் விளக்கியதுபோல் வேறொருவர் கூறவில்லை. கலையை ஒளியாக உருவகம் செய்துள்ளார் கலைஞர். கலை ஆகிய ஒளி வாழ்க்கை ஆகிய வீட்டிற்காகவே அமைதல் வேண்டும். விளக்கில் ஏற்றப்படும் தீபம் தனக்குச் சுடர் தருவதற்காக அன்று, வீட்டிற்கு ஒளி தருதற்காக என்ற எடுத்துக்காட்டுவமை கலை வாழ்க்கைக்காகவே என்ற கலைஞரின் விழுமிய கருத்தினைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது.

அன்றியும், 'விடுதலை வீரர்கள்' என்ற கவிதையில்,

"நம்நாடு, மொழி, மானம், உணர்வெல்லாம்
காப்பின்றிப் போதல் கூடாது என்னும் கொள்கை ஒன்றால்"

என்று கலைஞர் கவிதையின் நோக்கத்தைத் தெளிவாகக் குறித்துள்ளார். தமிழ்நாடு, தமிழ்மொழி, சுயமரியாதை, தமிழ் உணர்வு ஆகியவற்றைச் சிதையாமல் காப்பதுதான் அவர் தம் கவிதைக் குறிக்கோள் என்பதை உணர்ந்துகொள்ள முடிகிறது.

கலைஞரின் கவிதைகளில் தோய்ந்து ஆய்ந்து சுவைத்த இனமானப் பேராசிரியர் கல்வியமைச்சர் டாக்டர் க. அன்பழகன் கூறும் கருத்து இங்குச் சுட்டுதற்குரியது.

"கலைஞர் அவர்களுடைய கவிதைகளை எண்ணிப் பார்த்தால் கலைஞர் இடத்திலே கருத்து உண்டு; அதை எடுத்துச் சொல்லும் ஆற்றல் உண்டு; அதற்கு அழகு வடிவு தருகிற கலைத்திறன் உண்டு; அதை உணர்வில் பதிக்கும் கவியின் சிறப்பு உண்டு; இவற்றை நாட்டுக்குப் பயன்படுத்தும் நல்ல குறிக்கோள் உண்டு என்று காணலாம்"[21]

இம்மதிப்பீடு கலைஞரின் படைப்பாற்றலையும் கலைக் குறிக்கோளையும் தெளிவாகப் புலப்படுத்துகிறது.

இனி, கலைஞரின் கற்பனையாற்றலுக்கும் கருத்து வளத்திற்கும் கவினளிக்கும் வகையில் அவர் படைத்துள்ள அணிவகைகள் குறித்து ஆராய்ந்து காண்போம்.

கலைஞர் கவிதைகளில் அணி நலம்

தமிழ்த்தாய்க்கு இன்னல் தோன்றுமெனில் அண்ணாவின் விழிமலர்கள் வேலாகவும், வாளாகவும் மாறித்தம் நோக்காலேயே பகைவர்களைத் தாக்கும் என்று பாடுகிறார். மன்னிக்கும் உள்ளமும் அண்ணாவுக்கு உண்டு. மாற்றார்களை மன்னிக்கும் அவர் இயல்பு கண்டு அப்பகை உள்ளம் படைத்தவர்களே நெற்கதிரைப்போல நாணத்தால் தலைசாய்வர் என்று ஓர் அரிய உவமையைத் தந்துள்ளார்.[23]

விண்ணையும் மண்ணையும் அடக்கி ஆண்ட வீரப்பெருமகனாகிய இந்திரசித்தனைக் கலைஞர் பாராட்டும் பகுதி பார்க்கத்தக்கது. தன் சிற்றப்பன் வீடணன் கூறிய அறிவுரையால் வானரப்படை நிகும்பலைப் பாசறையைத் தகர்த்தெறியப் புறப்பட்டது. அந்நிலையில் அவன் முழங்கிய வஞ்சினச் சொற்களையும் போர்க்களத்தில் அவன் தோன்றிய எடுப்பான காட்சியையும் காவிய உவமைகள் பொருந்தக் (Epic Similies) கலைஞர் பாடியுள்ளார். அப்பகுதியை இங்குக் காண்போம்.[23]

"சங்கையிலா என் சிற்றப்பன் செய்திட்டவேலை இது! துரோகப்
பங்கை முடித்திட்டான் - துணிக்கின்றேன் அவன் தலையை!"
சுழலும் வாளாய்ச் சுற்றினான் தேரில்!
அழல் போல் கண்கள் தோற்றமளித்திட
ஆயிரம் ஆனைப் பலமுடன் எதிர்த்தான்
கோபுரம் ஒன்று நடப்பது போலக்
குன்றம் ஒன்று அசைவது போலப்
புயலெனச் சீறிப் பொங்கு கடலாய் வந்தான்"

இப்பாடற்பகுதியைப் படிக்கும்பொழுது கம்பரின் காவியப் பகுதிகள் நம் கண்முன் காட்சி தருகின்றன. "வில்லாளரை எண்ணில் விரற்குமுன் நிற்கும் வீரன்" என்றும், "உலகெலாம் கலக்கி வென்றான்" என்னும் கம்பர்

இந்திரசித்தின் இணையிலாப் பேராற்றலைப் போற்றிப்போற்றிப் பாடியுள்ளார். அவ்வீரப் பெருமகன் போர்க்களத்தில் நடந்து வருவதற்குக் கோபுரம் ஒன்று நடந்து வருவதையும் குன்றம் ஒன்று அசைந்து வருவதையும் பெரும் புயல் சீறி வீசுவதையும் கடல் பொங்கி வருவதையும் உவமையாகக் கலைஞர் படைத்துள்ளார். இயற்கையின் கொந்தளிப்பைப் போன்றது இந்திரசித்தின் எழுச்சி என்பது கருத்து. இத்தகைய உவமைகளினால் இந்திரசித்தனின் பேராண்மை தெளிவாகிறது. ஆயிரம் யானைகளை அமரில் வென்றவனுக்குப் பரணி பாடுவது இலக்கிய மரபு ஆகும். இந்திரசித்தன் ஆயிரம் யானைகளின் பலத்தைப் பெற்றவன் என்பதால் புலவர்களால் போற்றுதற்குரியவன் என்ற கருத்தையும் குறித்துள்ளார். இந்திரசித்தனை இணையிலாத் தமிழ் வீரனாகக் கலைஞர் புனைந்து போற்றியுள்ளார்.

"வாளி மன்னன்" என்ற நெடும்பாட்டில் வாலியின் பெருமையை வாயாரப் பாடுகிறார். அவனைத் தமிழ் வீரனாகவே காண்கிறார். வாலி என்று மரபுவழி வந்த பெயரை வாளி என்றே மாற்றியமைக்கிறார். வாட்போரில் வல்லவன் என்பதால் இச்சிறப்புப்பெயர் அவனுக்கு அமைந்தது என்கிறார். இராமனால் வஞ்சித்துக் கொல்லப்பட்ட வாலியின் மறைவிற்குப் பின் அவன் மனைவி தாரை தன் கொழுந்தனாகிய சுக்ரீவனை நோக்கி,

"தும்பிக்கு மலரிடத்தில் இருக்கின்ற பற்றுகூடத்
தூய தமிழ் நாட்டின் மீதுனக்கு இல்லையென்பேன்"

என்று இடித்துப் பேசுகிறாள்.[24] தான் நுகர்வதற்குத் தேன் வழங்கும் மலரிடத்தில் வண்டுகளுக்கு இயல்பாகவே ஈடுபாடு இருக்கும். அதுபோலத்தான் வாழ்வதற்கு இடமளிக்கும் தாய் நாட்டின் மேல் ஒருவனுக்கு ஈடுபாடு இருத்தல் வேண்டும் என்ற நாட்டுணர்ச்சியை இந்த அடிகளில் கலைஞர் சுட்டிக் காட்டுகிறார்.

"நீர்க்குடும்பம்" என்ற கவிதையில் இவர் படைத்திருக்கும் உவமைகளும் உருவகங்களும் சிந்தனைக்கு விருந்தாக அமைவன. வானத்தையும் முகிலையும் இடி, மின்னல், மழை ஆகியவற்றையும் பல்வேறு வகைகளில் உருவகம் செய்து பாடுதல் தமிழ்க்கவி மரபாக உள்ளது. பாவைப் பாடல்களில்கூட ஆண்டாளும், மாணிக்க வாசகரும் இத்தகைய கற்பனைகளைப் படைத்துள்ளனர். கலைஞரும் வானைப்பற்றி அணிநலம் தோன்ற மூன்றுவகைக் கற்பனைகளைப் படைத்துள்ளார்:[25]

"வானக் கிழவன் இருமுதலே இடியென்றும்
வாடிப் பிதுங்கும் அவன்
கண்ணொளியே மின்னலென்றும்
அவன்
வடிக்கின்ற கோழை எச்சில்தான் மழையே என்றும்
வர்ணித்தால் நோய் மழையை வரவேற்க ஒப்போம்

வாலிபர்க்கு பிடித்தமான உவமை சொல்வேன்
வானத்து மீன் பெண்கள்; கூட்டுப் பேச்சே இடிக்குமுறல்: அவர்
வாளொத்த கண்வீச்சே மின்னல் கீற்று;

வட்டமதிக் காதலன்மேல் தெளிக்கின்ற
பன்னீரே மழைத் துளியாம்
வீரர்க்குப் பொருத்தமான உவமை யெனில்
இருவீரர் நெஞ்சங்கள் மோதுவதே இடிமுழக்கம்
பெருவீரர் வேல் உராய்தல் விண்ணின் மின்னல்
பலவீரர் பொழியும் செந்நீர் மழையே யாகும்"

முதற் கற்பனையில் வானத்தை வயது முதிர்ந்தவனாகக் காண்கிறார். நலமின்மையால் வானக்கிழவன் இருமுவது இடியாகக் கேட்கிறது. பிதுங்கிய அவன் கண்ணின் ஒளியே மின்னலாக அடிக்கிறது. அவன் வடிக்கும் கோழை எச்சில்தான் மழை என்கிறார். இது ஒரு விசுவரூப உவமை (Cosmicsmilie) ஆகும். பொருத்தமாகப் புனைந்துள்ளார். இரண்டாவது கற்பனையில் வாலிபர்க்கு ஏற்கும் உவமையினைக் காண்கிறோம். வானம் எனும் சோலையில் விண்மீன்கள் நங்கையராகக் காட்சி தருகின்றனர். அவர்கள் கூட்டுப் பேச்சுத்தான் இடியாக இடிக்கிறது என்று உலகியல் உண்மை கலந்து உவமையினை வடித்துள்ளார். அப்போது திங்கள் என்னும் நாயகன் மேல் அப் பெண்கள் தெளிக்கும் பன்னீர்தான் மழை என்கிறார்.. அற்புதமான அருமையான உவமைக் காட்சி. மூன்றாவது கற்பனை வீரர்களை மையமாகக் கொண்டது. வானம் எனும் போர்க்களத்தில் இருபடை வீரர்களும் மோதும்போது தோன்றுவதே இடி முழக்கம்; வீரர்களின் வேல்கள் தம்மின் உராயும்போது மின்னலாக வெளிப்படுகிறது; அவர்தம் உடம்புகளில் வேல் பாய்வதால் வெளிப்படும் செந்நீரே மழை என்று பரணிக்கற்பனை ஒன்றினையும் படைத்துள்ளார். இத்தகைய கவிதைக் காட்சிகள் கலைஞர்க்கு முன்னும் தோன்றவில்லை. பின்னும் படைக்கப்பெறவில்லை. வானத்தைப் பொருளாகக் கொண்டு வயோதிகர், வாலிபர், மறவர் ஆகிய மூன்று நிலைகளிலும் தோன்றி நின்று உருவாக்கப்பெற்ற இந்தக் கற்பனைகள் பயில்வார்க்கு இன்பம் பயப்பன.

எனவே உவமை, உருவகம் ஆகிய அணிகளைத் தமக்கே உரிய கற்பனைத் திறம் தோன்றப் படைத்தளிப்பதில் கலைஞர் தலைசிறந்து காணப்படுகிறார் எனலாம்.

உழவனைத் தாமரையாகவும், மன்னனாகவும், வீரனாகவும், ஓவியனாகவும், தெய்வமாகவும், உருவகம் செய்து அவர் அருமையாகப் பாடியுள்ளார். வள்ளுவர் உழவர்களை உலகத்தோர் ஒடுவதற்கு அச்சாணி போன்றவர் என்றும், உழவுத் தொழிலே உயர் தொழில் என்றும் பத்துப் பாடல்களில் பகர்ந்துள்ளார். எனினும் அவனை ஒரு தாமரையாகக் கற்பனை செய்து பார்க்கும் முதல் கவிஞராகக் கலைஞர் விளங்குகின்றார். தாமரை சேற்றில் மலர்வது. உழவன் வாழ்வும் சேற்றில் (கழனிச் சேற்றில்) மலர்வதுதான்.

"உழவன் ஓர் தாமரை
சேற்றில் மலரும் அவன் வாழ்வு!"

சேற்றில் தோன்றினாலும் செந்தாமரைக்குச் சிறப்பு உண்டு. அவ்வாறே சேற்றில் கால்வைத்தாலும் உழவர் பெருமகனுக்கும் ஓர் சிறப்புண்டு. உழவர்கள் சேற்றில் கால் வைக்கவில்லையென்றால் ஏனைய மாந்தர்கள் சோற்றில் கைவைக்க முடியாது என்று புதுக்கவிதை பாடியவரும் உண்டு. அரசன் தலையில் முடி (மகுடம்) இருப்பது போல உழவன் தலையிலும் நாற்றுமுடி இருப்பதால் அவனை மன்னனாகக் காண்கிறார். களத்தில் இருத்தல் இருவர்க்கும் பொது. மன்னன் போர்க்களத்தில் இருப்பதுபோல் உழவன் நெற்களத்தில் இருக்கிறான். முன்னவன் களத்தில் போர் இருக்கும். பின்னவன் களத்தில் வைக்கோற் போர் இருக்கும் என்று நயம் தோன்றப்பாடுகிறார்:[27]

"உழவனோர் மன்னன்
நாற்று முடியிருக்கும் அவன் தலையில்
உழவனோர் வீரன்: என்றும்
போர் இருக்கும் அவன் களத்தில் (வைக்கோற்போர்)"

உழவனை ஓர் ஓவியக் கலைஞனாகக் காண்கிறார். வயல்கள் என்ற திரைச்சீலையில் அவன் வரைந்த சித்திரங்களாகப் பயிர்கள் காட்சி தருகின்றன:

"உழவனோர் ஓவியன்
வயல்கள் அனைத்தும் அவன் வரைந்த சித்திரம்!"

அனைத்திற்கும் மேலாக உழவனைத் தெய்வமாகவே காண்கிறார். வள்ளுவர் முறைசெய்து காப்பதால் அரசனைத் தெய்வம் என்றார். ஆனால் கலைஞரோ உழுது உரமிட்டு வித்தூன்றி விளைவித்து உயிர்களைக் காப்பதால் உழவனைக் காக்கும் கடவுளாகக் காண்கிறார்:[28]

"உழவனோர் தெய்வம்
உயிர்களைக் காப்பதால்!"

இங்ஙனம் அடுக்கி வரும் உருவகங்கள் எண்ண இனிப்பன. மேற்சுட்டிய பாடற் பகுதிகள் இக்காலத்துப் பெருகி வளர்ந்துள்ள புதுக்கவிதை என்னும் இலக்கிய வடிவத்திற்கு முன்னோடியாகக் கொள்ளத்தக்கவை. கம்பர் பாடியதாகக் கூறப்படும் ஏரெழுபது என்னும் சிற்றிலக்கியத்திலும் உழவினையும் உழவனையும் சிறப்பித்த பாடல்கள் பல உண்டு.

பாட்டு மனத்தைத் திருத்தவேண்டும் என்ற கருத்து கலைஞருக்கு உண்டு. தீய எண்ணங்களாகிய அழுக்குகள் மண்டிக்கிடக்கும் மனம் சிறந்த பாடலடிகள் என்னும் நீரில் குளித்துக் கறை நீங்க வேண்டும் என்று கனவு காண்கிறார். மனிதனை மென்மையான முறையால் திருத்துவது அரிது. வன்மையான முறைகளிலாவது அவனைப் பண்படுத்தவேண்டும் என்பது கலைஞரின் உள்ளம். எனவேதான் கவிஞர்கள்,

"புளிய மிலார் அடிபோலப் பாட்டடியால் என்றும்
குளியலிலா அழுக்குமனம் திருத்திடுவார்"

என்று பாடுகிறார்.[29] மந்த நிலையில் உள்ளவர்களை அடிகொடுத்துத்தான் விழிப்படையச் செய்யவேண்டும். அடியாத மாடு படியாது, அடி உதவுதல்

போல் அண்ணன் தம்பி உதவார் என்ற பழமொழிகள் இங்கு எண்ணத்தகுவன. பாடலடிகள் ஈட்டிபோல் மனத்தில் பாயவேண்டும். அப்போதுதான் மனத்தில் மண்டிக்கிடக்கும் தீமைகளை அகற்ற இயலும். சிற்றூர்களில் பிழை புரிந்தோரைப் புளியவிளாரால் அடிப்பது ஒரு வழக்கம். அந்த அடி சுருக்கென உணர்ச்சிகொள்ளச் செய்யும். அது போலப் பாடலடிகள் இருக்க வேண்டுமென்று கலைஞர் எண்ணுகிறார். கலைஞரின் கவிதைக் குறிக்கோள் இந்த அடிகளாலும் தெளிவாக விளங்குகிறது. மக்களைத் திருத்தி நல்வழிப்படுத்தி மேம்படச்செய்வதே கவிதையின் நோக்கமாதல் வேண்டும் என்பது தெளிவு.

உள்ளதை உள்ளவாறே புனைந்து பாடுவதைத் தன்மை நவிற்சி என்பர். கற்பனையில் மிதந்தாலும் கட்டுப்பாட்டுக்குள் நின்று கருத்துக்களைச் சொற்செட்டோடு பாடுதற்கு ஒரு சான்றினை மட்டும் காண்போம்.

"நிமிர்ந்த நோக்கு
நெரித்த புருவம்
நீர்வீழ்ச்சி ஓசை - நெற்
கதிர்க்கட்டு மீசை"

இங்ஙனம் பாவேந்தரைப் படம்பிடித்துக் காட்டுகிறார். இப்பாடல் பகுதியில் தன்மை நவிற்சியைக் காண்கிறோம்.

கலைஞரின் கவிதைகளில் பொருளணிகளே அன்றிச் சொல்லணிகள் நிரம்பக் காணப்படுகின்றன. ஒரு சொல்லையே வைத்து ஒட்டியும் வெட்டியும் பொருள் வேறுபாடு செய்து நயம்தோன்றச் சொல் விளையாட்டுப் புரிதல் கலைஞர்க்குக் கைவந்த கலை ஆகும். இரண்டொரு எடுத்துக்காட்டுகளை இவண் நோக்குவோம்.

பேரறிஞர் அண்ணா சௌமிய ஆண்டில் பிறந்தவர். சௌமியன் என்ற புனைபெயரில் கூட அவர் பல கதைகள் எழுதியுள்ளார். சௌமிய ஆண்டிற்கு அடுத்து வருவது சாதாரண ஆண்டு. அண்ணா அவர்கள் தம் அறுபதாம் அகவையில் சௌமிய ஆண்டில் மறைந்தார். அவருக்குப் பின்னர்த் தமிழகத்தின் முதல்வராகக் கலைஞர் பொறுப்பேற்றார். தன்னடக்கம் தோன்றத் தன்னைச் சாதாரணன் என்று (சாமானியன், எளியவன் என்ற கருத்தில்) கூறிக் கொள்கிறார்.[31]

"சௌமியா மறைந்து 'சாதாரண' வந்ததுபோல்-அந்தச்
சௌமியன் மறைந்து இந்தச் சாதாரணன் வந்துள்ளேன்"

இத்தகைய சொல் வீச்சுக்கள் பற்பல இவர் கவிதைக்குக் கவின் சேர்ப்பன.

பாவேந்தரின் நூற்றாண்டுவிழா கொண்டாடிய நாம் ['90-91] அவரைப் பற்றியும் அவர் இலக்கியங்களைப் பற்றியும் 8.12.68- இல் கலைஞர் பாடியுள்ள சில பகுதிகளை இங்கு எண்ணிப் பார்த்தல் ஏற்புடையது:

"இருட்டறையில் உள்ளதடா உலகம்: சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே" எனத்தொடங்கி
"சுருட்டுகின்றார் (சிலபேர்கள்) தம் கையில் கிடைத்தவற்றை" என
முடிக்கும்

இவனோர்
சுருட்டுக் கவிஞன்-புகைச்
சுருட்டுக் கவிஞன்-இவன்
புரட்டுக் கவிஞனாவான்:
மூடப் பழக்கமெல்லாம் தலை கீழ்ப்
புரட்டுக் கவிஞனாவான்"[32]

இப்பாடல் பகுதியில் சுருட்டு, புரட்டு என்ற சொற்களை வைத்துக் கலைஞர் அறிவு விளையாட்டு நிகழ்த்தியுள்ளார். மேலும்,

"கனக சுப்புரத்தினம் என்று காததூரம் இருந்தபெயரைக்
கவி பாரதிக்குத்தாசன் என்று கச்சிதமாய்ச் சூட்டிக்கொண்டான்
களம் சென்று தமிழ் காக்கக் கச்சு இதமாய்ச் சூட்டிக்கொண்டான்"

என்று பாடும் பகுதியில், "கச்சிதம்" என்ற சொல்லில் இரு பொருள் அமைத்துச் சிலேடை அணியைப் படைத்துள்ளார்.

அவர் படைத்த பல்வேறு இலக்கியங்களையும் இயைபுபடுத்தி அணிநலம் தோன்ற எடுத்துக்கூறும் கலை நேர்த்தி கற்பார்க்குப் பெரும் சுவையாக அமைதல் காணலாம்.

"ஏடெடுத்தனை அவர் தந்தார்?
இருண்ட வீட்டில்
குடும்ப விளக்கேற்றி வைத்தார்
இசையமுது - பொழிந்து, அதற்குப்
பாண்டியன் பரிசு பெற்றார் நமக்குக்
குறிஞ்சித்திட்டுமுண்டு குயில் இதழ் நடத்தும்போது
அழகின் சிரிப்பாலே தமிழியக்கம் கவர்ந்துவிட்டார்
அமைதிக்கு நல்ல தீர்ப்பளித்தார் அவர்
காதல் நினைவாலே கவிப்பெண்ணை வாடவிட்டுச் சாவின்
எதிர் பாராமுத்தத்தால் பிரிந்து விட்டார்"[33]

இங்ஙனம் இயைபுக் கற்பனை படைப்பது எல்லார்க்கும் எளிதன்று. இவ்வாறே காவிரி, வைகை, கோதாவரி, கொள்ளிடம் முதலிய பல்வேறு ஆற்றுப் பெயர்களையும் அவர் விட்டுவைக்கவில்லை.[34] தமிழகத்தில் ஓடிவரும் குடமுருட்டி வீரசோழன், ஓடம்போக்கி முதல் பெரியாறு வரை பல ஆறுகளையும் சொல்லலங்காரம் தோன்றப் பாடியுள்ள பகுதிகள் பன்முறையும் படித்து மகிழத்தக்கவை.[35]

புராணப் பாத்திரங்களையும் நகைச்சுவை ததும்ப நுணுகி நோக்குதல் கலைஞரின் இயல்பாகும். "ஐம்புலன்" என்ற தலைப்பில் 24.7.68-இல் நடைபெற்ற கவியரங்கத்தில் இவர் பாடிய தலைமைக்கவிதை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு புலனைப் பற்றியும் பாடவந்த கவிஞர்களை

அறிமுகம் செய்யும் வகையில் இவர் புனைந்துள்ள பாடல்கள் தலைமைக்கவிதையாக மட்டுமன்றித் தனித்தனிக் கவிதையாகச் சுடர்விடுதல் காணலாம். ஐம்புலனை அடக்க முடியாமல் தன் வயம் இழந்த விசுவாமித்திரரை,

"அடவியிலே துறவியாக இருந்திட்டார் விசுவாமித்திரர்
அவர் மேனகையின் விசுவாச மித்திரராய் ஆனகதை அறியீரோ?"

என்று நையாண்டி செய்கிறார்.[36]

இங்ஙனம் இவர் படைத்துள்ள சொல்லணிகளும் பொருளணிகளும் இவர் கவிதைக்கு வளத்தையும் வனப்பையும் வழங்குவன என்பதில் ஐயமில்லை.

சந்தக்கவி

கலைஞர் சிறந்த இசைச்செல்வர். சந்தம் அவர் கவிதைக்குச் சொந்தம். சிந்தை மகிழச் சந்தக்கவி பாடிச் செந்தமிழ்க்குச் சிறப்பளித்தவர் வரிசையில் கலைஞர்க்கு இடமுண்டு. அண்ணா மறைவிற்கு அகம் கரைந்து அவர் பாடிய இரங்கற்பாட்டில் ஒரு பகுதி சந்தக்கவியாகவே உள்ளது:

"கவியினில் பொருளெனக் கரும்பினில் சுவையெனக்
கதிரினில் ஒளியெனக் காவினில் மலரென
நிலவினில் குளிரென நிலமிசை வளமெனக்
குலவிடும் அருவி குழறிடும் மொழியென
உலவிடும் காற்றில் ஏறிடும் இசையென
அலையெழுங் கடலில் ஆடிடும் நுரையெனக்
கலைமணம் கமழக் கூடிய கவிஞர்
தலைமகன் அண்ணா திருப்புகழ் பாடிட
நிலமகள் வடிக்கும் கண்ணீர் அந்தோ
வெள்ளம்!
வெள்ளம்!
மாபெரும் வெள்ளம்!

முடுகியல் சந்தம் மிக்க இப்பாடலில் குறிலிணை அசைகள்மிகுந்து வருதல் குறிப்பிடத்தக்கது. இத்தகை யாப்பினை அராகம் என்று யாப்பிலக்கணத்தார் இயம்புவர். தொல்காப்பியம் கூறும் இருபது வண்ணங்களில் ஒன்றாகிய உருட்டு வண்ணம் இப்பாடலில் நடமிடுகிறது. "உருட்டு வண்ணம் அராகம் தொடுக்கும்" என்பது தொல்காப்பியம். இளங்கோவடிகளின் கானல்வரிப் பாடல்களில் இத்தகைய சந்தங்கள் உண்டு. கலைஞர் சிலம்பில் தோய்ந்தவர் என்பதற்கு இப்பாடலும் ஒரு சான்று.

சேலத்தில் **4.8.68**-இல் நடைபெற்ற "காதலா? வீரமா?" என்ற கவியரங்கத்தில் வீரம் பற்றிப் பாடவந்த கவிஞர் முருகு சுந்தரத்தை அவையோர்க்கு அறிமுகம் செய்து கலைஞர் பாடும் பாடல் சந்தக்கவிக்கு மற்றுமோர் சான்று :

"கத்திச் சுடர்
சுற்றிச் சுழல்
வற்றிப் பகை
வெற்றித் திரு
பற்றிக் கவி
கற்றுக் கொள
முத்துத் தமிழ்
முருகுத் தமிழ் கேட்டிடுவோம்"

இங்கே அருணகிரிநாதர் முருகனைப் பாடிய திருப்புகழ்ச் சந்தம் ஒலிப்பது காணலாம். முருகு சுந்தரத்தைப் பாடுவதால் முருகனைப் பாடிய அருணகிரியாரின் சந்த நடையினைக் கலைஞர் பயின்றாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. முருகு என்றாலும் சுந்தரம் என்றாலும் அழகுதான். இந்த அழகழகு காதலைப் பாடாமல் வீரத்தைப் பாடுதல் என்ன விந்தை என்றும் வியக்கிறார். தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்களின் முருகன் அல்லது அழகு என்ற நூலின் பயிற்சியும் இந்தக் கவிதையடிகளில் காணப்படுகிறது.

"புதியபாதை" என்ற பொருளில் **13.8.1968**-இல் குடந்தையில் நடந்த வேளாண்மைக்கவியரங்கின் தலைமைக்கவிதையில்,

"காடு கமழ்
நீடு புகழ்
பீடு மிக
நாடு நிதம்
பாடு பட
வீடு நிறை
ஆடுதுறை இருபத்தேழு"

என்று ஆடுதுறை 27 என்ற நெல்வகையினைச் சந்தம் குலுங்கச் செந்தமிழ் பாடுகிறார். துள்ளல் ஓசை அள்ளி வரும் இப்பாடற்பகுதி கலிப்பாடலின் உறுப்பாக வரும் ''சிற்றெண்'' போல் வடிவம் கொண்டிருத்தல் காணத்தக்கது. இத்தகைய பெருமிதச்சந்தம் வரும் இடங்கள் பல. கற்பனைகள், அணிகள், சந்தங்கள் எல்லாம் கவிதைக்கு ஆடையாகவும் ஆபரணங்களாகவும் அழகு தருவன. மனித மேம்பாட்டுக்குரிய விழுமிய கருத்துக்களே கவிதைக்கு உயிர் மூச்சாக ஒளிர்வன. கலைஞரின் சிறந்த சிந்தனைகள் யாவும் மனித நேயத்தில் சுரப்பன. ஆதலின் அவர் கவிதைகளில் சிறந்து காணப்படும் மனிதநேயப் பண்பிற்கு இரண்டொரு சான்றுகளை இங்குச் சுட்டுதல் ஏற்புடையது.

கலைஞர் கவிதைகளில் மனித நேயம்

முன்னைக் கவிஞர்களைப்போலவே சாதி பேதங்களைச் சாடிச் சமத்துவத்தை நிலைநாட்டக் கலைஞர் தம் கவிதைகளைக் கருவியாகக் கொள்கிறார். சமுதாய அமைப்பில் அடித்தளத்தில் நசுக்கப்படும் எளியவர்களை நோக்கி இளகிய நெஞ்சத்தோடு இவர் பாடியிருக்கும் கவிதைகள் இவர்க்குள்ள சமுதாய அக்கறையைப் பறைசாற்றுவன. "உவமைகள் பத்து" என்ற கவிதையில்,[37]

"எங்கள்
மஞ்சமும் மாளிகையும் இந்த மண் வீடு தானென்று
பிஞ்சுகளாம் பிள்ளை குட்டியுடன் வாழ்கின்றார். . .
கொஞ்சமும் இரக்கமிலாக் கொடியவர்கள்
நஞ்சு நிறை பாம்பனையோர் வெறிகொண்ட பேயனையோர். நமனும்
அஞ்சுகின்ற காரியத்தைச் செய்கின்றார் அவரெல்லாம்
பஞ்சு பஞ்சாய்ப் போவதற்குச் சாபமிடு
சாபமிடு அவர்க்கு . . . . . .
சாபமிடு தமிழ்நாடே! நீ சாபமிடு"

என்று வெந்து நொந்து கொடியோரைச் சபித்தல் சாமானிய மக்களிடத்தில் அவர்க்கு இயல்பாக அமைந்த மனிதநேயத்தைக் காட்டுவதாகும். நன்னோக்கத்தோடு கூடிய இத்தகைய சீற்றத்தை அறவழிச்சினம் (Righteous anger) என்று கூறுவர் அறவியலார்.

ஒரே கத்தி பழம் அறுப்பதற்கும் பிறர் உயிர் பறிப்பதற்கும் பயன்படுவது உண்டு. பதவியும் ஒரு கத்தியைப் போலத்தான். ஆனாலும் அது பிறரைப் பழி வாங்குவதற்குப் பயன்படாது மக்களுக்கு நலம் வழங்குவதற்குப் பயன்படுதல் வேண்டுமென்று கலைஞர் தெளிந்து கூறுகிறார்.[38]

"பழமறுக்கும் கத்திதான் பதவியென்போம்
பழி வாங்கும் வாளாக இருத்தல் கேடு!"

இப்பாடலாலும் கலைஞரின் மென்மையான உள்ளமும் அவ் உள்ளத்தில் குடி கொண்டிருக்கும் மனித வாஞ்சையும் தெளிவாக அறியப்படும். பேரறிஞர் அண்ணா மறைந்தபோது கலைஞர் பாடிய உருக்கமான பாடலில் அத்தலைமகனின் மனிதநேயம் நிரம்பிய உள்ளத்தை முதலில் குறித்துள்ளார்:

"பூவிதழின் மென்மையிலும் மென்மையான
புனித உள்ளம் - அன்பு உள்ளம் -
அரவணைக்கும் அன்னை உள்ளம்!"

அண்ணாவின் இந்த அன்னை உள்ளத்தை, இரக்கம் மிக்க இதயத்தை இரவலாகக் கேட்கும் கலைஞரின் உள்ளம் மனிதநேயம் மலிந்த உள்ளம்.

மொழிப்பற்று

பாவேந்தரைப் போலவே கலைஞருக்கு மொழி என்பது மூச்சாகவும் உயிராகவும் காட்சி தருகிறது. அவ்வாறே தமிழகத்தின்பாலும் அவர்க்கு நிறைந்த பற்றுண்டு. எனவேதான்,

"பகைவர்க்குத் தாழாமல் படைகண்டு வீழாமல்
பல்லூழி வாழ்கின்ற தமிழ்"

"தங்கக்குன்றே தமிழே தாயே; உன்
சிங்கப்புதல்வரின் சிறப்பினைச் சொன்னோம்
எங்கும் தமிழகம் வெற்றி விளைந்திட

இங்கு நீ எமக்கே அருள்வாய் அம்மா"

என்று கலைஞர் பாசத்தோடு தமிழ்த்தாயைப் பரவுகிறார்.[39]

தமிழ்த்தாய்க்கு முதன் முதல் விரிவான வணக்கமும் வாழ்த்தும் பாடி இலக்கியம் படைத்தவர் மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை ஆவார். இருபதாம் நூற்றாண்டில் இளங்கோவாகக் காட்சிதரும் சுந்தரனார் பாடிய "நீராருங் கடலுடுத்த" எனத் தொடங்கும் பாடல் இன்றைக்கும் தமிழகத்தில் விழா நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்தாகப் பாடப்பெற்று வருகிறது. இதற்கு முழுக் காரணம் கழக அரசுதான் என்பது வரலாற்று உண்மை. பாரதியாருக்குப் பல்லாண்டுகட்கு முன்பே தமிழ் மொழிக்கு இத்தகைய மதிப்பும் மரியாதையும் வழங்கிய காரணத்தினால் சுந்தரனாரைப் பேரறிஞர் அண்ணா பெரிதும் பாராட்டி வந்தார். மனோன்மணியத்திலிருந்து பல உணர்ச்சிமிக்க தொடர்களைத் தம் சொற்பொழிவுகளினிடையே அமைத்துப் பேசுதல் அண்ணாவின் இயல்பு. இவ்வுண்மையினை,

"இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?"
"தம்பியுடையான் படைக்கஞ்சான்!"
ஒப்பிலா வரிகள் உரைத்திடும் பனுவல்
மனோன்மணியம் எனினும் - நம்
மனத்தில் பதித்தவர் அண்ணாவன்றோ!"

எனவரும் கலைஞரின் கவிதை உறுதிப்படுத்துகிறது. மனோன்மணிய நாடகக் காப்பியத்தில் அண்ணா அவர்கட்கு இருந்த ஆர்வமும் ஈடுபாடும் சற்றும் குறையாமல் கலைஞரிடத்திலும் இருப்பதால் தான் அண்மையில் [1989-90] நெல்லையில் தோற்றுவிக்கப்பெற்ற பல்கலைக்கழகத்திற்கு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் என்ற பெயர் சூட்டப்பெற்றுள்ளது. எனவே கலைஞர் தமிழ்க்கவிஞர்களிடத்திலும், சான்றோரிடத்திலும் நன்மதிப்பும் ஈடுபாடும் கொண்டவர் என்பது தெளிவாகும்.

பன்மாண் சிறப்புக்களும் ஒருங்கே படைத்த கலைஞர் அவர்களின் கவிதைகளில் காணப்படும் இலக்கியச் சிறப்புக்கள் இங்கு ஒருவாறு கூறப்பெற்றன. அவர் பாடல்கள் அனைத்தும் பன்முறை பயின்று இன்புறுதற்குரியன. சிந்தனைத் தெளிவும் சொல் வளமும், பொருட் சிறப்பும் அமைந்த அவர் கவிதைகள் என்றும் நின்று நிலவுவன ஆகும்.

மேற்கோள் குறிப்புக்கள்

1. தமிழியக்கம், பாரதிதாசன், ப.19.
2. தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் முதற்பாகம், முதற்பகுதி, முனைவர் சோ.ந. கந்தசாமி, தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, 1989, ப.619 - 624, ப. 633 - 639.
3. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.540
4. ஏழாம் திருமுறை 30.4
5. கலைஞரின் கவிதைகள், கலைஞர் மு. கருணாநிதி, பாரதி பதிப்பகம், சென்னை, 1989, ப.III. IV.

6. அதே நூல், ப.58.
7, 8. அதே நூல் ப.99
9. அதே நூல் ப.171
10. அதே நூல் ப.131
11. அதே நூல் ப.248
12. அதே நூல் ப.358
13. அதே நூல் ப.137
14. அதே நூல் ப.122
15. Poetry in English, An Introduction; Charles Barber, London, 1983, p.6
16. Ibid, p.13
17. On Poetry and Poets, T.S. Eliot, London, 1979, p.37
18. "There is much poetry which is purely prosaic; There is much prose which is markedly poetcial"
- An Introduction to the study of English Literature.
19. Poets and Poetry, John Baily, p.15
20. கலைஞரின் கவிதைகள், ப.166
21. அதே நூல், அணிந்துரை, ப.IX
22. கலைஞரின் கவிதைகள் ப.1
23. அதே நூல். ப.33
24. அதே நூல். ப.46
25. அதே நூல். பக்.88, 89
26. அதே நூல். பக்.112
27. அதே நூல். பக்.112, 113
28. அதே நூல். ப.113
29. அதே நூல். பக்.150
30. அதே நூல். பக்.143
31. அதே நூல். பக்.158
32. அதே நூல். பக்.144, 145
33. அதே நூல். பக்.146-147
34. அதே நூல். பக்.90-91
35. அதே நூல். பக்.111-112
36. அதே நூல். ப.62
37. அதே நூல். பக்.133
38. அதே நூல். ப.163
39. அதே நூல். ப.59, 60

28 நெருக்கடி நிலையில் கலைஞரின் சொற்பொழிவுகள்

முனைவர். பே.மனோகரன்

மக்கள் பற்றிய சிந்தனையோடும் செயலோடும் கொள்கைப் பிடிப்போடும் உள்ளவர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள். அத்தகைய பணி சிறக்கத் தன்னை முதல்வர் பொறுப்புவரை வளர்த்துக் கொண்டதற்குத் தமது பேச்சாற்றலையும் எழுத்தாற்றலையும் ஆயுதமாகக் கையாண்டார்.

*"கலைஞர் அவர்கள் வாழ்நாள் ஒவ்வொன்றும்
மக்கள் நலம் பற்றிச் சிந்திப்பதிலும் தொண்டாற்று
வதிலுமே கடந்து கழிவதை நான் மனப்பூர்வமாக
உணர்கிறேன். மனம் பூரித்து திருப்தி அடைகிறேன்.
அவர் செய்துவருகின்ற காரியங்கள் பெரிதும்
மற்றவர்கள் சிந்திக்கக்கூடப் பயப்படும் படியான
காரியங்கள் என்பதோடு அவைகளை வெகு எளிதில்
செய்து முடித்து விடுகின்றார். இதன் பயனாகவே
அரசியல் உலகில் அவருக்கு எதிர்ப்பாளர்கள் அதிகமாகி
வருகிறார்கள்"*

எனத் தந்தை பெரியார் அவர்கள் கலைஞரின் பணியினைப் பற்றிப் பாராட்டுகின்றார். அந்தப் பாராட்டு பொய்க்கப் படாவண்ணம் நாடு நெருக்கடி நிலையில் இருந்தபொழுது தமது கொள்கையினையும் கருத்தினையும் மிகவும் திறமையுடனும் மனஉறுதியுடனும் மத்திய அரசிற்கும் பொதுமக்களுக்கும் விளக்கினார்.

*கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்*

என்ற வள்ளுவரின் கூற்றுக்கொப்பவர் கலைஞர். தமிழகத்தில் அரசியலை ஒரு கலையாக வளர்த்தவர்,

*"கலைஞரின் மேடைப் பேச்சுகள் தனித்தன்மையன
அவரது பேச்சின் அமைப்பும், அதில் விளங்கும்
அழகியலும் தனித்தன்மைக்குக் காரணங்கள்"*

என்று கலைஞரின் சொற்பொழிவில் ஆய்வு செய்த மு.இராசேந்திரன் குறிப்பிடுகின்றார்.

கலைஞரின் மேடைச் சொற்பொழிவு காலச் சூழலைக் கணக்கில் கொண்டிருந்தாலும் கொள்கைப் பிடிப்பை எந்நிலையிலும் சுய நலத்திற்காக மாற்றிக்கொள்ளாது சமூக மற்றும் நாட்டு நலனை எதிரொலிப்பதாகவே அமைந்திருக்கின்றது. பொருளாதார நெருக்கடி, அரசியல் நெருக்கடி, சமூகப்பிரச்சனைகள் மற்றும் போர்க்கால நெருக்கடி என்று பல கோணங்களில் அரசிற்கும் கட்சிக்கும் நெருக்கடிகள் எழுகின்ற காலத்தும்

தேசியக் கொள்கை, தேசியப் பாதுகாப்பு, அதன் ஒற்றுமை, மனித நேயம், பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் எளியவர்களின் முன்னேற்றம் என அடிப்படைக் கொள்கையில் கொண்டிருந்த உறுதியினை அவரது சொற்பொழிவில் காண முடிகிறது.

"தம்பி கருணாநிதியின் பேச்சில் கலைமிளிர்கிறது" என்ற பேரறிஞர் அண்ணாவின் புகழ்வார்த்தைகளில் புதைந்து தன்னை மறந்திடாது அண்ணாவின் வாழ்த்துக்களை அறமென ஏற்று கொள்கையோடு தமது பேச்சாற்றலை வளர்த்துக் கொண்டவர் கலைஞர்.

தமது சொற்பொழிவாற்றலை வளர்த்துக் கொள்ளக் காரணமாக அமைந்தது பட்டுக்கோட்டை அழகிரிசாமியின் மேடைப் பேச்சே என கலைஞரே குறிப்பிடுகின்றார். அத்தகைய கலைஞரின் சொற்பொழிவு கருத்தாழமும் கவர்ச்சியும் கொண்டிருந்ததோடு,

"வீழ்ச்சியுற்ற தமிழகம் எழுச்சிபெற விசையொடிந்த
வேகத்தில் வன்மைபெற கலைஞரின் பேச்சைத் தவிர
வேறு ஆயுதம் நமக்கு இல்லை."

என்று அரசியலில் வீழ்ச்சியும் பின்னடைவும் ஏற்படுங்காலத்தில் ஊக்கமும் உற்சாகமும் உணர்வும் அளித்துத் தம் பேச்சால் எழுச்சியுறச் செய்தவர் கலைஞர் என கோ.கலிவரதன் அவரின் சொற்பொழிவின் சிறப்பினைக் கூறுகின்றார்.

கலைஞரின் சொற்பொழியில் ஆய்வு மேற்கொள்ளும் பொழுது அவரது குடியரசுக் கோட்பாட்டினை விளக்குதல் அவசியம்.

"குடியரசு எனப்படுவது தம் கருத்தினை ஏற்றுக் கொள்
பவரிடத்தில் மட்டுமன்று, தம்மைப் புறக்கணிக்கின்ற
வரிடத்திலும் சகிப்புத்தன்மையுடன் இருத்தலாகும். மேலும்
ஒழுக்கத்தையும் பரஸ்பரத்தையும் உள்ளடக்கியதாகும்."

எனக் குறிப்பிடுவதன் மூலம் கலைஞர் தமது குடியரசுக் கொள்கையில் உள்ள தனித்தன்மையைக் காட்டுகின்றார். இக்கொள்கையை முன்நிறுத்தியே கலைஞரின் சொற்பொழிவு எந்நிலையிலும் யாரையும் பாதிக்காத வகையிலும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் வகையிலும் அமைந்திருப்பதை அறிய முடியும். அதில் தனிமனிதச் சுதந்திரம், தேசியம், தேசியப் பாதுகாப்பு, பத்திரிகைச் சுதந்திரம் எனப் பல கூறுகளும் இடம் பெறுவதைக் காணமுடியும். அத்தகைய கொள்கை பொதிந்த பேச்சாற்றலைக் குறிப்பிடும் பொழுது,

"மேடைப்பேச்சே கலைக்கரசன்; நாட்டின் நாகரீகத்திற்குக்
கண்ணாடி; பாமரமக்களின் பல்கலைக்கழகம்;
உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு உள்ளத்தில் புதைந்து
கிடக்கும் அன்பையும் தூய்மையையும் வெளிப்படுத்தி
மக்களைப் பண்படுத்தும் மகத்தான கலை; அக்கலையில்
சிறந்து விளங்கியவர்களுள் தமிழகத்தில் அண்ணா அரசன்
என்றால் கலைஞர் மணிமுடி ஆகிறார்..."

என்று டாக்டர்.சி.பாலசுப்பிரமணியன் குறிப்பிடுவதில் வியப்பேதுமில்லை.

தொண்டராக, தலைவராக, இலக்கியவாதியாக, எழுத்தாளராக, பத்திரிக்கையாளராக, அமைச்சராக மற்றும் முதல்வராக எனப் பல்வேறு நிலைகளிலும் இருந்து கலைஞர் ஆற்றிய உரைகளில் கருத்தாழத்தைக் கண்டு வியக்காதவர்கள் யாருமில்லை. அறிஞர் முதல் பாமரர் வரை அரசியல் களத்தில் கலைஞரைப் போற்றியவர்கள் மட்டுமல்லாது தூற்றியவர்களும் அவரது பேச்சின் இனிமையையும் கருத்தையும் பாராட்டத் தவறுவதில்லை. அதனாலேயே அவரின் படைப்பிலக்கியங்களை ஆய்வுசெய்ததைப் போன்றே அவர்தம் மேடைப் பேச்சுக்களையும் அறிஞர்கள் ஆய்வு செய்துள்ளனர். இவ் ஆய்வு முயற்சிகளே அவர் தம் மேடைப் பேச்சின் தனித்தன்மையை உணர்த்துவன.

'திராவிட முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோள் அரசியலில் ஜனநாயக உரிமையைப் பாதுகாத்து அதன் வளர்ச்சிக்குப் பணியாற்றுவது', எனும் தி.மு.கழகத்தின் அடிப்படைக் கொள்கையை என்றும் மனதிற்கொண்டு செயலாற்றுபவர் கலைஞர். அத்தகைய நோக்கோடு இந்தியாவில் நெருக்கடிகாலச் சட்டம் நடைமுறையில் இருந்தபொழுது அதனால் ஏற்பட்ட அரசியல் புயலில் ஆட்பட்ட தலைவர்கள் பலர். சூறாவளியில் சிக்கிய கட்சிகளும் பல. இந்தியாவில் உள்ள மாநில அரசுகள் அனைத்தும் இந்திரா காந்தியின் நெருக்கடி நிலைக்கு ஒத்துப்போன நிலையில் இரண்டே இரண்டு மாநிலங்கள் மட்டும் தீவுகளாகத் தனித்து நின்றன. அவற்றில் ஒன்று தமிழகம். அதன் முதலமைச்சர் கலைஞர்.

தலைமையமைச்சர் இந்திரா காந்தி அம்மையாரால் ஜுன் 16,1975 ஆம் ஆண்டு நெருக்கடி காலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதற்குப் பிறகு. திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்பாடு செய்த மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் மாநாடுகளில் தமிழக முதல்வராக இருந்த கலைஞர் ஆற்றிய பேருரைகள் மட்டும் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன: கீழ்க்கண்ட

- *சென்னை கடற்கரை பொதுக்கூட்டப்பேருரை - 6.7.1975*
- *நெல்லை மாநாட்டுப் பேருரை - 10.8.1975*
- *நாகர்கோயில் மாநாட்டுப் பேருரை - 23.11.1975*
- *கோவை சிறப்பு மாநாட்டுப் பேருரை - 28.12.1975*

உலக நாடுகளின் புரட்சிக்காலம் கி.பி.18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். மன்னராட்சியிலிருந்து மக்களாட்சி நோக்கி சட்டங்களின் வழியாக உரிமைகளை உறுதிப்படுத்திக் கொண்ட காலம். கி.பி.1788ல் இங்கிலாந்தில் சட்டப்பூர்வமான உரிமைகளுக்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டது. அதன் அடிப்படைப் பொருளாக,

- சிவில் மற்றும் அரசியல் அதிகாரம் மக்களிடத்திலிருந்து பெறப்பட்டது.
- அத்தகைய அதிகாரம் தவறாகப் பயன்படுத்துவது தடைக்குரியதாகும்.
- மேலும் தனிமனித உரிமை, சுதந்திரம், நீதிமன்றத்தை நாடும் உரிமை, பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் சுதந்திரமாகப்

பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தல். இத்தகைய அதிகாரம்
புனிதமாகவும் வரம்புமீறாமலும் இருத்தல்

என்று உரிமைக்கும் அரசியல் அதிகாரத்திற்கும் உத்திரவாதமும் வரம்பும் நிர்ணயிக்கப்பட்டது. இங்கிலாந்து வழிவந்த இந்தியப் பாராளுமன்ற அரசியல் பரிணாமத்தில் நவீன காலத்தில் "அவசரகாலச் சட்டம்" என்ற பெயரால் மனித உரிமையும் அரசியல் அதிகார வரம்பும் தலைகீழாகச் செயல்பட்டன. அத்தகைய வரலாற்றுக் கொடுமைக்கும் வேதனைக்கும் விடைகாண முயன்றவர் கலைஞர்

கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு

என்ற உண்மையைத் தமது பேச்சாலும் எழுத்தாலும் மக்களிடம் எடுத்துக் கூறி நெருக்கடிக்கு ஒரு நெருக்கடியை ஏற்படுத்தியவர் கலைஞர்.

குடிஅரசுக் கொள்கையை வலியுறுத்தல்

இந்திய அரசியலில் நெருக்கடி காலச் சூழலின் இடர்ப்பாட்டைக் கலைஞர் உணரத்தவறவில்லை. பெரும்பாலான மாநிலங்களில் மிக வேகமாக நெருக்கடிகாலச் சட்டம் அமுலில் இருக்கின்ற பொழுது தமிழகத்தில் மட்டும் குடிஅரசுக் கோட்பாடுகள் சீரான நிலையில் செயல்படுத்தப்பட்டன. என்றாலும், இந்தியக் குடியாட்சி படுகுழிக்குத் தள்ளப்பட்டுவிடக் கூடாது என்பதில் மிகவும் அக்கறையும் கவனமும் செலுத்தினார் கலைஞர்.

சென்னைக் கடற்கரைப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றும்பொழுது

"இங்கே நடைபெறுகின்ற இந்த மாபெரும் கூட்டம்
தலைமையமைச்சர் இந்திராகாந்தி அம்மையார்
அவர்களைத் தாக்குவதற்காக அல்ல
இந்தியாவின் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக...
இந்த நோக்கத்தை மாற்றாரும் - மற்றவர்களும்
மத்தியில் உள்ளவர்களும் புரிந்து கொள்வார்
களேயானால் தி.மு.கழகம் ஜனநாயகத்தின்
பால் எவ்வளவு அன்பு கொண்டு - பற்றுக்
கொண்டு திகழ்கிறது என்ற உண்மையைத்
திட்டவட்டமாக உணர்வார்கள் என
நம்புகின்றேன்....."

என்று கலைஞர் தமது பேருரையின் தொடக்கத்தில் ஜனநாயகத்தின் மீதான தமது நம்பிக்கையையும் பற்றையும் உறுதிப்படுத்துகின்றார்.

"சொற்பொழிவில் சில இன்றியமையாத கருத்துக்களைக்
கூறும் போது அதற்குத் தொடர்புடைய பழைய வரலாறுகளை
ஒப்பிட்டுக் கேட்போருக்கு நினைவு கூர்தல் வேண்டும்"

என்பதற்கிணங்க அரசியல் சொற்பொழிவு என்கின்ற காரணத்தால் வரலாற்று உண்மைகளை இடம்பெறச் செய்து தமது கருத்திற்கு வலிமை சேர்க்கின்றார் கலைஞர். தமிழ் இனத்தவருக்கு இருக்கும் ஜனநாயகக் கொள்கையை

உத்திரமேரூர் (செங்கல்பட்டு) கல்வெட்டு கி.பி.919-921 ஆம்
ஆண்டில் செதுக்கப்பட்டது முதலாம் பராந்தகச் சோழன்
அமைத்தது. ஆட்சி நடத்த தகுதியானவர்களைத்
தேர்ந்தெடுக்கும் 'குடவோலைமுறை' என்கின்ற மக்களாட்சி;
ஜனநாயக ஆட்சி முறை இருந்தது. அத்தகைய
ஜனநாயக மரபிற்கு ஊனம் ஏற்பட்டு விடுமோ
என்று அஞ்சுகின்றேன்"

என்று கலைஞர் குறிப்பிடுவதன் மூலம் ஜனநாயக மரபுகள் பல ஆண்டுகளாக இந்நாட்டில் போற்றிப் பாதுகாக்கப்படுகின்ற தன்மையையும், தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் பல ஆயிரம் ஆண்டுகளாக அம் மரபைத் தமிழகம் உணர்ந்து அதைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது என்பதையும் விளக்குகின்றார். தமிழருக்கும் தமக்கும் உள்ள ஜனநாயகக் கொள்கைப் பிடிப்பை விளக்குவதோடு அத்தகைய பாரம்பரியமிக்க கொள்கை இன்று நிலவும் அரசியல் நெருக்கடியால் பாழ்பட்டுவிடுமோ என்றும் தமது கவலையை வெளிப்படுத்துகின்றார்.

தமிழகத்தின் தலைமையோ அல்லது இந்தியாவின் தலைமையோ தனிநபர் தொடர்புடைய கவலையன்று. மக்கள் நலன், பொருளாதாரநலன், நாட்டின் பாதுகாப்பு, ஒற்றுமை ஆகியவைகளைப் பற்றித்தான் தமது கவலை என்பதை,

"இன்றுள்ள சூழ்நிலையில் இந்திரா அம்மையார்
தலைமை அமைச்சராக நீடிப்பதா - இல்லையா?
என்பதன்று; நமக்கிருக்கும் கவலையெல்லாம்
இந்தியாவின் ஜனநாயகம் நீடிப்பதா - இல்லையா?
என்பதுதான். இதற்கு விடைகாண வேண்டிய கட்டத்தில்
நாம் இருக்கின்றோம்"

எனத்தெளிவுபடுத்துகின்றார். கலைஞர் தாம் அடையும் கவலையை வெளிக்காட்டுவதோடு நின்றுவிடவில்லை. ஜனநாயகம் நீடிப்பதற்கான வழியைத்தேடுவது 'தமது கடமை' என்பதையும் சுட்டிக்காட்டுகின்றார்.

ஜனநாயகத்தின் தன்மையையும் அது கையாளப்படவேண்டிய முறையையும் விளக்கும்போது,

"ஜனநாயகம் வீணையின் இசையைப் போன்றது.
வீணையின் கம்பிகளை அதிகம் தளர்த்தினாலோ
அல்லது முடுக்கினாலோ கேட்பதற்குரிய இனிமையான
இசையைப் பெறமுடியாது. அதுபோல ஜனநாயகத்தை
அதிகம் தளர்த்தினால் பழங்கால மன்னராட்சியாகிவிடும்.
அதிகம் முடுக்கினால் நவீன காலத்திற்கு ஒவ்வாத
சர்வாதிகார அரசாகிவிடும்."

என்று நயத்துடன் சுட்டிக்காட்டுவதோடு நெருக்கடிகாலச் சட்டத்தினால் இந்திய ஜனநாயகம் அதிகம் முடக்கப்பட்டு சர்வாதிகாரச் சூழலுக்குத் தள்ளப்பட்டுக்கொண்டிருப்பதைத் தெளிவுபடுத்துகின்றார். தம் கருத்து

கிண்டலாகவோ அல்லது ஏளனமாகவோ மத்திய அரசின் கருத்தில் இடம்பெற்றிடக் கூடாது என்பதில் மிகவும் கவனத்துடன் ஆலோசனை வழங்குகின்றார் கலைஞர்.

"சர்வாதிகாரத்தின் தொடக்கவிழா"
அது தொடராமல் இருக்கட்டும். . ."

என்று கூறும் கலைஞர் நெருக்கடி காலச் சட்டம் தொடராமல் தொடக்க விழாவாக இருந்து விட்டால்

"ஜனநாயகப் பாதுகாப்பின் அடிப்படையில் தி.மு.கழகம் மகிழ்ச்சியடையும்"

என்று குறிப்பிடுகின்றார். மத்திய அரசின் தவறை இடித்துக் காட்டுவதுடன் அத்தகைய சர்வாதிகாரமான கொள்கை தொடர்ந்து விடக் கூடாதென்றும் தொடர்ந்தால் ஜனநாயகம் சிதைந்துவிடும் என்றும் உணர்த்துகின்றார்.

தமிழக அரசிற்குப் பொருத்தமற்ற அரசியல் சூழல் இந்தியாவில் நிலவிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இந்தியப் பொருளாதாரத்திட்ட ஒருங்கிணைப்பின் அடிப்படையிலும், மத்திய அரசு அறிமுகப்படுத்தும் முற்போக்குத்திட்டங்களை மாநில அரசு நடைமுறைப்படுத்துதல் வேண்டும் என்ற அடிப்படையிலும் தலைமையமைச்சர் அறிமுகப்படுத்திய முற்போக்குத் திட்டமான 20 அம்சத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தமிழகத்திற்கு மாறுபட்ட கருத்து ஏதும் இல்லை.

"15 திட்டங்கள் ஏற்கனவே நிறைவேற்றி முடித்துவிட்டு இன்னும் 5 திட்டங்களை நிறைவேற்றிடப் பணம் கொடு என்று கேட்கிறோம்."

எனக்குறிக்கும் கலைஞர் தம் வேண்டுதலின் மூலம் ஒருங்கிணைந்த இந்திய முன்னேற்றத்தின் மீதும் 'இந்திய யூனியன்' மீதும் உள்ள அக்கறையையும் காட்டுகின்றார். இதன் மூலம் மத்திய-மாநில அரசிற்கான திட்ட அடிப்படையிலான கருத்தொற்றுமையை உணரமுடிகின்றது. அதே வேளையில்,

"மற்ற மாநிலங்களிலும் இத்திட்டம் நிறைவேற்றப் பட வேண்டும் . . ."

என்று உரைப்பதிலிருந்து மற்ற மாநிலங்களிலும் இத்தகைய முற்போக்கான 20 அம்சத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் நாடு ஒரே சீரான வளர்ச்சி அடைய வாய்ப்புண்டு என உரைக்கின்றார். ஆனாலும் இத்திட்டத்தைக்

"கொந்தளிப்பான சூழ்நிலையில் நிறைவேற்றிட வேண்டுமா ?"

என்றும் கேட்கின்றார்.

"இந்த அவசர காலச்சட்டம் எவ்வளவு நாட்கள் நீடிக்கும் என்று புரியவில்லை."

என்று தனது கவலையையும் வெளிப்படுத்துகின்றார். 20 அம்சத்திட்டத்தை எவ்வளவு தீவிரமாக மாநில அரசுகள் நடைமுறைப்படுத்தினாலும் தவறுகின்ற மாநிலஅரசு தண்டிக்கப்படும் என்ற சூழல். ஒருவேளை எதிர்க்கட்சி

ஆட்சிசெய்யும் மாநிலங்களில் செயல்முறைபடுத்துவதில் தயக்கமோ அல்லது தாமதமோ ஏற்பட்டால் அவ்வரசுகள் மத்திய அரசின் அச்சுறுத்தலுக்கு உள்ளாயின. அதேவேளையில் காங்கிரஸ் ஆட்சிசெய்யும் மாநிலங்களில் செயல்முறைப்படுத்துவதில் ஏற்படும் தாமதத்தையோ தவறையோ மத்திய அரசு பொருட்படுத்தவில்லை. ஆகவேதான் காழ்ப்புணர்ச்சியுடன் செயல்படும் மத்திய அரசின் செயல்முறைகளைக் கண்டிக்கும் வகையில் நெருக்கடி நிலையில் முற்போக்குத்திட்டம் அவசியம் தானா ? என்று வினவுகின்றார்.

மக்களின் மனநிலையையும் குமுறலையும் நெல்லை மாநாட்டில் எடுத்துரைக்கின்றார். மத்திய அரசிற்கும் அந்நிலையை உணர்த்துகின்றார்.

"பலபேர் மௌனமாகப் பேசிக்கொள்கின்றார்கள்;
ஒருவரையொருவர் பார்க்கின்ற நேரத்தில் விழிகளால்
பேசுகின்றார்கள்; முகக்குறிப்பால் எண்ணங்களை
வெளிப்படுத்திக் கொள்கின்றார்கள்"

என்கின்றார் கலைஞர். இக்கருத்தின் உட்பொருள் யாதெனின்,
மக்கள் பேச்சுரிமை இழந்திருக்கின்றார்கள். அரசைப்பற்றி
விமர்சிக்க அஞ்சுகின்றார்கள் என்பதாகும்.
தமிழகத்தில் தங்கள் கருத்துக்களைப் பொதுக்கூட்டம் மற்றும் மாநாடு மூலமாக எடுத்துச் சொல்லும் வாய்ப்பினை பெற்றிருக்கின்றோம். அந்நிலை நாட்டின எல்லாப் பகுதிகளிலும் மாநிலங்களிலும் இருந்திடல் வேண்டும் என்று விரும்புவதாக கலைஞர் கூறுகின்றார். அனைத்து மாநிலங்களிலும் நெருக்கடிச் சட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டு ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும். உரிமையும் வாய்ப்பும் இந்தியா முழுவதும் ஒரேசீராக இருக்க தமிழகத்திலும் ஜனநாயகத்திற்கு ஆபத்து ஏற்படுமாயின் அதை எதிர்த்துப் போராட,
"போராட்டத்திற்கும் தியாகத்திற்கும் தயாராக இருக்க
வேண்டும்"
என மக்களை ஆயத்தப்படுத்துகின்றார்.

நெருக்கடிகாலச் சட்டத்தின் அவசியத்தை தலைமையமைச்சர் இந்திரா காந்தி குறிப்பிடும் பொழுது "ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசை குறுக்கு வழியில் கவிழ்க்க முனையக் கூடாது" என்பதற்காகவே அறிமுகப்படுத்தப்பட்டதாகக் கூறுகின்றார். இத்தகைய கருத்தில் கலைஞருக்கும் கழகத்திற்கும் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை. இத்தகைய கருத்திற்கு கலைஞர் வரலாற்று நிகழ்ச்சியுடன் தமதுகருத்தினை நினைவு கூர்கின்றார்:

"1958 ல் கேரளத்தில் மன்னத்துப் பத்மநாபன் கிளர்ச்சி செய்து ஈ.எம்.எஸ் நம்பூதிரிபாத் தலைமையிலான கம்யூனிஸ்டு கட்சியின் ஆட்சியை காங்கிரஸ் அரசாங்கம் முதன் முதலில் கலைத்தது. அப்பொழுது காங்கிரஸின் நடவடிக்கைக்கு தி.மு.கழகம் எதிர்ப்பு தெரிவித்ததையும், அதே போல் 1978 ல் பீகார் காங்கிரஸ் அரசை

கலைக்கும்படி ஜெயப்பிரகாஷ் நாராயணன் கிளர்ச்சி செய்தபொழுது தி.மு.கழகம் எதிர்ப்பு தெரிவித்ததையும் " கலைஞர் நினைவு கூர்கின்றார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு ஐந்தாண்டு காலம் ஆட்சியில் இருக்க அனுமதிக்கப்படவேண்டும். எக்காரணம் கொண்டும் கலைக்கப்படக் கூடாது

என்ற கொள்கையினை நெருக்கடி காலக்கட்டத்திலும் உறுதியுடன் எடுத்துரைக்கின்றார்.

இத்தருணத்தில், 'தமிழக அரசு (தி.மு.கழக ஆட்சி) கலைக்கப்படும்" என்று காங்கிரசுக்காரர்கள் தங்கள் ஆசையை வதந்தியாகப் பரப்பிக் கொண்டிருந்தனர். 1975 ஆம் ஆண்டு நவம்பர் 20 ஆம் தேதி காமன் வெல்த் பாராளுமன்றக் குழுவினர் இந்தியாவிற்கு வருகைபுரிந்தனர். இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்றுவிட்டு தமிழகத்திற்கும் வருகைதந்தனர். அரசுத்தரப்பில் வரவேற்பும் விருந்தும் அளிக்கப்பட்டன. அதுசமயம்,

"எதிர்க்கட்சி ஆளுகின்ற மாநிலத்தில் சிறுபான்மையோருக்குத் தரப்படுகின்ற ஜனநாயக உரிமையை நாங்கள் பாராட்டுகின்றோம். அவசரகாலம் விரைவில் முடிந்து தமிழ்நாடு அனுபவித்துக் கொண்டிருக்கிற உரிமையை - சுதந்திரத்தை இந்தியா முழுவதும் அனுபவிக்கும் நாள் வருமாக. . ."

என்று இங்கிலாந்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் லியோ ஆப்ஸி கூறியதைக் கலைஞர் தம் உரையில் குறிப்பிடுகின்றார். எதிர்க்கட்சி ஆளும் மாநிலமான தமிழகத்தில் ஜனநாயகம் காப்பாற்றப்படுவதை விதிப்படுத்துகின்றார். மேலும் தமிழக மக்கள் அனுபவிக்கும் சுதந்திரம் இந்தியா முழுவதும் நிலவவேண்டும் எனக் குறிப்பிடுவதிலிருந்து தமிழகம் தவிர காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் மக்கள் சுதந்திரமின்றி வாழ்கின்றனர் என்பதையும் தெளிவுபடுத்திவிடுகின்றார்.

தூதுபோகத் தயார்

இந்திய விடுதலைக்காகப் போராடிய பழம்பெரும் காங்கிரஸ் தலைவர்கள் அரசியல் காழ்ப்புணர்ச்சியால் விசாரணையின்றி சிறைப்படுத்தப்பட்டுள்ளனர். ஜெயப்பிரகாஷ் நாராயணன் விடுதலை செய்யப்பட்டதற்குப் பிறகுதான் அவர் சிறைப்படுத்தப்பட்டிருந்த செய்தியே பலருக்குத் தெரியவந்துள்ளது. மற்றும் மொரார்ஜி தேசாய் அசோக் மேத்தா போன்றோரும் சிறைப்படுத்தப்பட்டிருந்தனர்.

"கண்ணிலும் இனிய சுதந்திரம் போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ . . . . . "

என்ற பாரதியின் பாடலைக் கலைஞரே தமது பேருரையில் நினைவு கூர்ந்து தலைவர்களின் கைதுக்கு தமது வருத்தத்தையும் வேதனையையும வெளிப்படுத்துகின்றார்.

இந்திய விடுதலைக்காகப் போராடிய தலைவர்களைச் சிறைப்படுத்திய செயல், பெற்ற சுதந்திரத்தையே அவமதிப்பதாகும். அத்தகைய இழிசெயலை எடுத்துரைத்த கலைஞர் சிறைப்பட்ட தலைவர்களை விடுவிக்க முறையான ஆலோசனை வழங்குகின்றார்.

கடனறிந்து காலங் கருதி யிடனறிந்
தெண்ணி யுரைப்பான் றலை

என்ற வள்ளுவன் வாய்மொழிச் சிறப்பு கலைஞரிடத்து விளங்குவதைக் காணலாம். மேலும் தலைவர்களிடத்தில் சமாதானம் ஏற்படத் தூதுபோகவும் விருப்பம் தெரிவிக்கின்றார். தலைமையமைச்சர் இந்திரா காந்தி அம்மையாரையும் எதிர்க்கட்சித் தலைவர்களையும் மேலும் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள தலைவர்கள் உட்பட அனைவரையும் சந்தித்து இருதரப்பினருக்கும் உடன்பாட்டை செயற்படுத்திச் சுமுகமான சூழ்நிலையை உருவாக்கத் தூதுபோகவும் தயார் என்கிறார். இதற்காகச் சங்க இலக்கியத்திலிருந்தும் எடுத்துக்காட்டைத் தருகின்றார். சோழமன்னர்களான நெடுங்கிள்ளிக்கும் நலங்கிள்ளிக்கும் இடையே எழுந்த போரினைத் தவிர்க்க கோவூர்கிழார் தலையிட்டு,

"நின்ன கண்ணியும் ஆர்மிடைந்தன்றே
நின்னொடு பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந்தன்றே"

என்றுரைத்து அமைதியை நிலைநாட்டியது போல்,

"ஜெயப்பிரகாஷ் உடுத்தியிருப்பதும் கதர் ஆடைதான்
இந்திராகாந்தி அம்மையார் அணிந்திருப்பதும் கதர் ஆடைதான்"

என்று ஒற்றுமைக்கு வழி கூறுகின்றார். மகாத்மா காந்தி வழிவந்த தலைவர்களிடத்து கருத்து வேறுபாட்டின் காரணத்தால் இந்திய அரசியலும் ஒருமைப்பாடும் நெருக்கடிச் சூழலுக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருப்பதைத் தெளிவுபடுத்துகின்றார்.

பத்திரிகைச் சுதந்திரம்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பத்திரிகையின் பாங்கினை
அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்!
நறுமண இதழ்ப் பெண்ணே உன்
நலம் காணார் ஞாலம் காணார்.!

என்றுரைக்கின்றார். அதன் முக்கியத்துவத்தை ஜவஹர்லால் நேரு, "அவசியமான செயல்களைப்புரிகின்றது. பிரத்தியேகமாக குடியரசு நாடுகளில் முக்கிய "அங்கம் வகிக்கின்றது" என்று குடியரசு நாடுகளில் செய்தி இதழ்களின் அவசியத்தைத் தெளிவுபடுத்துகின்றார். இந்தியச் சுதந்திரத்திற்கும் ஜனநாயகத்திற்கும் இதழ்களின் பணி அளவிட முடியாத

ஒன்று. 'குடியரசின் நான்காவது தூண்' எனக்கருதப்படும் பத்திரிகைத் துறைக்கு அளிக்க வேண்டிய உரிமைகளை முழுமையுடன் அளிக்க வேண்டும். அப்பொழுதுதான் குடியரசு முழுமையுடன் செயல்பட இயலும். ஜனநாயகம் முழுமையடையும். இந்திய கவர்னர் ஜெனரலாக (தலைமை ஆளுநர்) இருந்த வில்லியம் பெண்டிங் பிரபு, 1830இல் பத்திரிகை மீதான நெருக்கடிகளை நீக்கித் 'தாராளக் கொள்கையைப்' பின்பற்றினார். மேலும் இதற்கான உரிமையை அளித்து 'இந்தியப் பத்திரிகையின் விடுதலையாளர்' என்ற சிறப்பினையும் பெற்றவர் சார்லஸ் மெட்காப். மெக்காலே பிரபுவும் இந்தியப் பத்திரிகை உரிமைக்காக இங்கிலாந்து பாராளுமன்றத்தில் வாதாடினார். இப்படி வளர்க்கப்பட்ட இத்துறைக்கு, சுதந்திர இந்தியாவில் பிரதமர் இந்திரா காந்தியின் அவசரச் சட்டத்தால் அதன் சுதந்திரம் ஒடுக்கப்பட்டதுடன் பலபத்திரிகைகள் முடக்கப்பட்டதும் மிகவும் சுலபமான நிலையாகும்.

காங்கிரஸ் கட்சி, மத்திய அரசு மற்றும் தலைமையமைச்சர் பற்றி பத்திரிகைகள் விமர்சனம் செய்கின்ற காரணத்தால் அவற்றின் உரிமைகள் பறிக்கப்பட்டன. 'பத்திரிக்கைகளில் தலைமை அமைச்சரைப் பற்றியோ அவரது பேச்சுக்களைப் பற்றியோ தவறான விமர்சனம் எதுவும் வரக்கூடாது' என்று தாக்கீதுகளை மாநில அரசுகளுக்கு அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆணைபிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்தகைய தாக்கீதுகளின் மீதான கருத்தினை கலைஞர் குறிப்பிடும் பொழுது,

"நாம் ஜனநாயகவாதிகள் என்பதால் சட்டப்படி
நடவடிக்கை எடுக்கத் தகுந்த அவதூறான விஷயங்கள்
வருமானால் அவைகளுக்கென்று ஏற்கனவே உள்ள
சட்டங்கள் அவைகளைப் பார்த்துக் கொள்ளும் . . ."

என்கிறார். அதே வேளை அதன் சுதந்திரம் காக்கப்படும் என்பதில் உறுதியாக இருக்கும் கலைஞர், மத்திய அரசின் தாக்கீதுகளைத் தமிழக அரசு நடைமுறைப்படுத்தும் என்றாலும்,

"முதலைமைச்சரைப்பற்றி எழுதாதே - அவரைப்பற்றி
எதுவும் சொல்லாதே என்று சொல்லுகின்ற
அளவுக்கு எழுதுகோலை முறிக்கின்ற - சட்டத்தை
நாக்குகளை அறுக்கின்ற சட்டத்தை - கழகம் விரும்பவில்லை."

என்று தமது பத்திரிகைக் கொள்கையைத் தெளிவுப்படுத்தி அதன் சுதந்திரத்தின் மீதான நம்பிக்கையையும் வெளிப்படுத்துகின்றார். இவ்வாறு அவர் கூறுவது அவரே ஒரு பத்திரிகை ஆசிரியர் என்பதால் மட்டுமல்ல; ஜனநாயகத்தின் உயிர்மூச்சாகப் பத்திரிகையைக் கருதுவதாலும் ஆகும்.

நவம்பர் 23, 1975 இல் நாகர்கோவில் மாநாட்டுப் பேருரையில்,

"முதலமைச்சரோ அல்லது மற்ற அமைச்சர்களோ

அளிக்கும் தன்னிலை விளக்கம் ஏதும் முரசொலியிலோ
அல்லது தினத்தந்தியிலோ பிரசுரிக்கா வண்ணம்
சென்னை தணிக்கை அதிகாரி தடைசெய்துவிடுகின்றார்.
கழகச் சார்புடைய ஏடுகள் கூட முடக்கப்படுகின்றன.”

என்று வருந்துகின்றார். நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி மத்திய அரசு பத்திரிகைத் துறையை முழுமையாகத் தன் கட்டுப் பாட்டின் கீழ் கொண்டுவந்து காங்கிரஸின் ‘ஊதுகுழலாக’ மாற்றிக்கொண்டது.

கலைஞருக்கு ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையையும் கொள்கைப் பிடிப்பையும் வெளிப்படுத்த நல்லதொரு வாய்ப்பாக அமைந்தது கோவை சிறப்பு மாநாட்டுப் பேருரையாகும்.

நெருக்கடி காலச் சட்டத்தினால் மாநில அரசுகளின் செயற்பாடுகள் ஒடுக்கப்படுவதும், எதிர்க்கட்சித்தலைவர்கள் விசாரணையின்றி சிறைப்படுத்தப்படுவதும் நாட்டின் அமைதியைக் குலைக்கின்றது. இத்தகைய சூழலில் ஒரு மாநிலத்தின் முதல்வர் எனும் முறையிலும் ஆளுங் கட்சியின் தலைவர் என்கின்ற முறையிலும் ஜனநாயக் கொள்கையை நிலைநாட்டுவதற்காக கலைஞர்,

- *“வட்டமேஜை மாநாட்டை பிரதமரே கூட்டவேண்டும்”*
- *“நாடாளுமன்றத்திற்கும் தமிழ்நாடு சட்டமன்றத்திற்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடைபெற வேண்டும்”*
- *“குடியரசுத் தலைவர் ஆட்சி தமிழகத்திற்குத் தேவையில்லை”*

என்று மைய அரசுக்கு வேண்டுகோள் விடுக்கின்றார்.

வட்டமேஜை மாநாட்டில் அனைத்துத் தலைவர்களும் கலந்து கொள்ளவேண்டும் என்றால் முதலில் சிறையில் உள்ள தலைவர்கள் விடுவிக்கப்படல் வேண்டும். மக்களின் பிரதிநிதிகள் என்கின்ற அடிப்படையில் அனைத்துத் தலைவர்களையும் வட்டமேஜை மாநாட்டில் பங்கேற்கச் செய்து அவர்தம் கருத்துகளைப் பெற்று நாட்டின் அரசியல் பிரச்சனைக்குத் தீர்வு காணுவது முதல் கடமையாகும் என வற்புறுத்தினார். இக்கருத்து இந்திய வரலாற்று நிகழ்ச்சியை நினைவுகூரச் செய்கின்றது. **1930** ஆம் ஆண்டு உப்புச் சத்தியாகிரகத்தில் பங்கேற்ற மகாத்மா காந்தி உட்பட பலர் கைதுசெய்யப்பட்டிருந்தனர். பின்னர் அவர்கள் காந்தி இர்வின் **(1931)** ஒப்பந்தத்தால் விடுதலை பெற்றதுடன் காந்தியும் இலண்டன் வட்டமேஜை மாநாட்டில் கலந்துகொண்டு இந்திய அரசியல் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண வழி வகுத்தது இங்கே ஒப்புநோக்கத்தக்கது.

ஜனநாயக முறை காக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கும் கலைஞர் தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி தேவையில்லை; ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி அதன் பதவிக்காலம் முடியும் முன்பே கலைக்கப்படுமானால் உடனடியாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்” என்று குறிப்பிடுகின்றார்.

கிரேக்க வரலாற்றில் ஆண்டனியின் பேருரை வரலாற்றுச் சிறப்புமிக்கது. ஜூலியஸ் சீசரைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்ற முனைந்த புரூட்டசின் நயவஞ்சகச் செயலை தனது பேருரையால் மக்கள் மன்றத்தில் வெளிப்படுத்தி மீண்டும் சீசரின் குடியரசை நிலைநாட்டச் செய்தான் ஆண்டனி.

அத்தகைய ஆண்டனியின் பேச்சாற்றலைப் போன்று கலைஞர் அவ்வப்போது நிகழ்த்திய பேருரைகள் தமிழ்மக்களுக்குப் புதிய உணர்வினை ஊட்டி அவர்களை விழிப்புறச் செய்கின்றன.

வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும்!
விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்!
சூழ்ச்சிதனை வஞ்சகத்தை பொறாமை தன்னைத்
தொகையாக எதிர் நிறுத்தி தூள் தூளாக்கும்
காழ்ச்சிந்தை மறச் செயல்கள் மிகவும் வேண்டும்
கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்!

என்ற பாரதிதாசனின் எழுச்சிமிக்க கவிதையைப் போல்,

"எந்த நிலையிலும் - எத்தகைய நெருக்கடி ஏற்பட்டாலும்
இந்தியாவின் மக்களாட்சி முறைக்குக் கேடு
ஏற்படாமல் - பாதுகாப்பதற்குத் தயங்கமாட்டோம்
என்று உறுதி எடுத்துக் கொள்கிறோம்!

தேசத் தலைவர்கள் விடுதலை -
பத்திரிக்கைகளின் நியாயமான உரிமைகள்
இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று
இந்தியப் பிரதமர் அவர்களை
தமிழ்நாடு மக்களின் இந்த மாபெரும் கூட்டம்
கேட்டுக்கொள்கிறது"

என்ற கலைஞரின் கோவை மாநாட்டு உரை,

"நாம் அச்சத்தினால் சமரசத்திற்கு உடன்படவில்லை
நாம் சமரச உடன்பாட்டிற்கு அஞ்சுவதில்லை"

என ஜனநாயகத்திற்காக அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கன், காங்கிரசில் ஆற்றிய பேருரைபோல் ஆற்றலுடன் விளங்குகின்றது.

தலைவர்கள் சிறைப்படுத்தப்பட்டும், பத்திரிகைகள் முடக்கப்பட்டும் உரிமைகள் பறிக்கப்பட்டும் இருந்த நெருக்கடிகாலச் சூழலின் விளைவினைப் பற்றிக் கவலைகொள்ளாது ஜனநாயக உரிமைகள் காப்பாற்றப்படவேண்டும் என்பதற்காக எவ்விதப் "போராட்டத்திற்கும் தியாகத்திற்கும்' முன்வந்து கலைஞர் ஆற்றிய பேருரைகள் அவரது கொள்கைப் பிடிப்பிற்கும் கடமையுணர்ச்சிக்கும் சான்றாகத் திகழ்கின்றன.

ஆற்றல் மிக்க நாவன்மைக்கும், கேட்டாரைப் பிணிக்கும் சொல்லாற்றலுக்கும், அரசியல் மாற்றத்தை பேச்சால் சாதிக்க முடியும் என்பதற்கும் கலைஞரின் நெருக்கடி கால உரைகள் எடுத்துக் காட்டாய் அமைந்திருக்கின்றன.

சரித்திரம் உள்ள வரையில் கலைஞரின் ஜனநாயக் கொள்கை, வருங்காலத்தலைமுறைக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காய் ஒளிகொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

துணை நூற்பட்டியல்

○ இதழ்கள்

○ முரசொலி, சென்னை
8 -3 - 1974
7 -7 - 1975
11 - 8 - 1975
24 -11 - 1975
20 -12 - 1975

□ மலர் ○ கலைஞர் மணிவிழா மலர் 1983, சென்னை.

□ ஆய்வேடு ○ இராசேந்திரன், மு - கலைஞரின் மேடைத்தமிழ் அமைப்பும் -அழகியலும் அலுமேலு பதிப்பகம், சென்னை 1989

□ துணைச் சான்று நூல்கள்

○ எழில்மதி, கலைஞரின் சட்டமன்றப் பணி-ஒரு பார்வை, மதியரசன் பதிப்பகம், சென்னை, 1985.

○ . . . . . . பாரதிதாசன் கவிதைகள், இந்து பப்ளிகேஷன், சென்னை 1991.

○ . . . . பாரதியார் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1990

○. . . . . திருக்குறள்.

○ பார்த்தசாரதி, டி. எம். தி.மு.க. வரலாறு பாரிநிலையம், சென்னை,1973.

□ ஆங்கில நூல்கள்

○ Good win, Albest, The Friends of Liberty The English Democratic Movement in the age of the French Revolution. Hutchinson, London, 1979.

○ Grower B.L. & Sethi, R.R. A New look on Modern Indian History S.chand and company Ltd., New Delhi - 1929.

○. . . . . . . Jawahalal Nehru Selected Speeches, Vol. II. 1949 - 1953. Publication Divisions Goet. of India, New Delhi, 1996.

○ Sokhar, B.S. The World's Great Speeches Jainne Publication. Bombay, 1978.

○ Swaminathan, S.,. Karunanidhi, Man of Destiny affiliated East-West Press Pvt. Ltd, New Delhi, 1974.

திரைப்படங்கள்

29 திரையுலகில் கலைஞரின் தனி முத்திரைகள்

முனைவர். பெ. இராமலிங்கம்

இந்நூற்றாண்டில் மக்களைக் கவர்ந்து புலன் மாற்றி மயக்கும் அளவுக்கு செல்வாக்கும் வலிமையும் பெற்ற மக்கள் தொடர்புச் சாதனம் திரைப்படம். இத்திரைப்படக்கலை நாடகக் கலையின் வளர்ச்சி நிலை வடிவம். அறிவியல் வளர்ச்சியும் கலையின் வளர்ச்சியும் கலந்த கலப்பு.

அறிவியல் வளர்ச்சியின் பயனாய்க் கண்டு பிடிப்புகளும், கருவிகளும், தொழில் நுட்பங்களும் வளர்ந்தன. இவற்றில் படங்காட்டும் கருவிகளும் நிழற்படக் கருவிகளும் அடங்கும். இக்கண்டுபிடிப்புகளும் கருவிகளும் மக்களை மகிழ்விக்கப் பயன்படுத்தப்பட்டபோதே, கலை அறிவியலோடு கைகோக்கத் தொடங்கிவிட்டது, அறிவியலைப் பயன்படுத்திக் கொண்டு கலை வளர்ந்தது. கலை வளர்ச்சியின் பயனாய், கதையும் கதை சொல்லும் உத்திகளும், நடிப்பும் இசையும் உரையாடலும், ஆடலும் பாடலும் அரங்கங்களும், அழகு சாதனங்களும் தோன்றின. அறிவியலைப் பயன்படுத்திக் கொண்டு கலை ஆற்றலோடு மக்களை அடைந்தபோது, அது வேறெந்த மக்கள் தொடர்புச் நூதனங்களையும் விட வலிமை மிக்கதாக விளங்கியது. இத்திரைப்படக்கலை பாமரர் முதல் படித்தவர் வரை, அனைத்து மக்களையும் பெரிதும் கவர்ந்து ஈர்த்து அவர்தம் அகம் மற்றும் புறநீர்மைகளை ஆளும் வலிமைமிக்கக் கலை வடிவமாகத் திகழ்ந்தது; இன்னும் திகழ்கிறது. "இந்த உலகில் வேறு எந்தக் கலையைக் காட்டிலும், சினிமாக்கலையானது மக்களின் மனதை ஆழமாகப் பாதிக்கக் கூடியது - - - மக்களின் மனோநிலை, அதிலும் குறிப்பாக, நகர மக்களின் மனோநிலை பெருமளவுக்கு இக்கலையின் காரணமாக விளைந்த ஒன்றாக உள்ளது"[1] என்னும் அங்கேரிய எழுத்தாளரும், நாடகம் மற்றும் திரைப்பட ஆசிரியருமான பேலபெலாஸ் அவர்களின் கூற்று இன்றும் பொருந்துவதாக உள்ளது.

இத்தகைய ஆற்றல்மிக்கக் கலைவடிவமாகத் திகழும் திரைப்படம், **1896** இல் இந்தியமண்ணுக்கு பேசாத, அசையும் (Movie) ஊமைப்படமாக வந்தது. **1931** இல் முதன்முதலாக 'ஆலம் ஆரா'வில் இந்தியும் உருதும் கலந்த இந்துஸ்தானியில் பேசியது. தமிழகத்திலும் முதன்முதலாக அதே **1931**இல் தான் 'காளிதாஸ்' படத்தில் தமிழும் தெலுங்குமாகப் பேசிற்று. பேசத் தொடங்கியது முதல் **1934** வரையிலான நான்காண்டுகளில் தயாரிக்கப்பட்ட **27** பேசும் படங்களும் பம்பாய் மற்றும் கல்கத்தாவில் தயாரிக்கப்பட்டன. அவை யாவும் தமிழ் மக்களின் விருப்பத்தேவைகளைப் பற்றிய சிந்தனைகளைக் கொண்டிருக்கவில்லை. அவற்றின் உள்ளடக்கம் புராண, இதிகாச, நாட்டுப்புறக் கதைகளாக அமைந்தன. பேசும் நிலை வந்த பின்னும் மக்கட் சமூகத்தின் கருத்துக்களைப் பிரதிபலிக்காது.

மக்களுக்குத் தெரிந்த, அறிமுகமான கதைகளாக இருக்கவேண்டும் என்ற, ஊமைப் படங்களின் உள்ளடக்கத்தையே தொடர்ந்தன. ஆனால் **1935** முதல் தமிழ்த் திரைப்படத்தின் உள்ளடக்கம், குறிக்கோள், மற்றும் தேவைகளில் மாறுதல்கள் நிகழ்ந்தன. புராண இதிகாசங்களை விட்டு, சமூகக் கதைகளைக் கொண்டவையாகவும் மாறின. சுதந்திரப் போராட்டச் சிந்தனைகளையும் காந்தியாரின் கொள்கைகளையும் எதிரொலித்தன. இவ்வாறு தமிழ்த் திரைப்படம் தேசியம் பாடிவந்த சூழலில்தான், திரையிடம் வந்தது திராவிடம். இந்திய விடுதலை கனிந்து வரும் காலத்திலும் அதற்குப் பின்னும் திரையுலகில் திராவிட இயக்கத்தின் பணி தீவிரமடைந்தது.

திராவிட இயக்கம் திரையிடம் வரும் முன்பும், வந்த தொடக்க காலத்திலும், திரைப்படங்கள் பாடல்களுக்கே பெரிதும் இடமளித்து விட்டு உரையாடல்களைக் குறைந்த அளவிலேயே பயன்படுத்தின. பாடல்களுக்கு இடையே சில உரையாடல்களும் இடம்பெற்றன என்று கேலிபேசும் நிலையில் இருந்தது. அக்கால நாடகங்கள் பாடத் தெரிந்தவர்களையே பெரிதும் மதித்து, நடிகர்களாக்கி, உரையாடலை விடப் பாடல்களையே பெரிதும் பயன்படுத்தி வந்ததால், அந்நடிகர்கள் நடித்த படங்களும் நாடகத்தின் தாககத்திலிருந்து விடுபடாதனவாய் இருந்தன. பேசிய உரையாடல்களோ, வடமொழிக் கலப்பும் கொச்சை வழக்கும் பார்ப்பனத் தமிழுமாகத் திசைமாறிக் கிடந்தன. நல்ல தமிழைக் கேட்கமுடியாத நிலை. பாடல்களுங்கூட வடமொழி ஆதிக்கத்திலிருந்து தப்பமுடியவில்லை. வடமொழிக் கலப்பு என்ற நிலைபோய், சிலபாடல்கள் வடமொழிச் சொற்களாலேயே நிரப்பப்பட்டிருந்தன. (சான்று பாகவதர் பாடிய "கிருஷ்ணா முகுந்தா முராரே" என்றபாடல்)

இதனை

என் தமிழர் படமெடுக்க ஆரம்பஞ் செய்தார்
எடுத்தார்கள் ஒன்றிரண்டு பத்துநூறாக
ஒன்றேனும் தமிழர் நடையுடை பாவனைகள்
உள்ளதுவாய் அமைக்கவில்லை உயிர் உள்ளதில்லை
ஒன்றேனும் தமிழருமை உணர்த்துவதாய் இல்லை.
. . . .

என்றும்,

வடநாட்டார் போன்ற உடை வடநாட்டார் மெட்டு
மாத்தமிழர் நடுவினிலே தெலுங்குக் கீர்த்தனங்கள்
வடமொழியில் ஸ்லோகங்கள், ஆங்கிலப் பிரசங்கங்கள்
வாய்க்கு வரா இந்துஸ்தான் ஆபாச நடனம்
அடையும் இவை அத்தனையும் கழித்துப் பார்க்குங்கால்
அத்திம்பேர் அம்மாமி எனுந்தமிழ்தான் மிச்சம்."

என்றும் பாவேந்தர் தரும்பாடல்கள் உறுதி செய்கின்றன.

இவ்வாறு தமிழர்தம் மொழி, பண்பாடு, வாழ்க்கைச் சிக்கல்கள் வாழ்வியல் தேவைகள் ஆகியவற்றைப் பிரதி பலிக்காமல் எங்கோ போய்க் கொண்டிருந்தது திரைப்படம். அப்போதுதான் மக்களிடமிருந்து, மக்களின் தேவைக்காக எழுந்த திராவிட இயக்கம், மக்களின் எண்ணங்களை,

எதிர்பார்ப்புகளைத் திரையில் எதிரொலிக்கத் தொடங்கியது. திரைப்படம் என்னும் இவ்வலிமை மிக்கக் கலை வடிவத்தைச் சரியாகப் பயன்படுத்தி வெற்றி கண்டது திராவிட இயக்கம். நாடு, மொழி, இனப்பற்றொடு, பகுத்தறிவு, சீர்திருத்தம், மூடநம்பிக்கை எதிர்ப்பு, ஆரியர், வடவர், ஆதிக்க எதிர்ப்பு, காங்கிரஸ் ஆட்சியின் கொடுமைகள் பொருளாதாரச் சீர்குலைவு, முதலிய சிந்தனைகளை விதைத்து, தமிழர்களைத் தட்டி எழுப்பி வீறுகொள்ளச் செய்து, சாதனை படைத்தது திராவிட இயக்கம். திரைத்துறையில் தமிழின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டு வெற்றியும் கண்டது. பொதுவாக, திராவிட இயக்கம் இத்துறையில் ஒரு புதிய மறுமலர்ச்சியையே உருவாக்கித் தனக்கென ஒருவரலாற்றைப் படைத்தது. இவ்வுண்மையை தமிழ் சினிமாவின் கதையில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தனித்த அத்தியாயம் வேண்டும்; உண்டு; சினிமாவின் பயனை மிகச்சரியாகப் புரிந்து கொண்டு, பயன்படுத்திய அரசியல் இயக்கத்தினர் தி.மு.கழகத்தினர்தான்[2] என்று பொதுவுடைமை எழுத்தாளர் அறந்தை நாராயணன் விளம்புகிறார். "திராவிட இயக்கத்தினரின் திரைப்பட உலகப் பிரவேசம்" ஒரு கிளர்ச்சித் துடிப்புடைய சர்ச்சையை அனைத்து மட்டத்திலும் உருவாக்கிற்று என்று சொன்னால் அது மிகையானதல்ல; உண்மை![3]" என்பார் க. திருநாவுக்கரசு. அக்கிளர்ச்சித் துடிப்பைத் தோற்றுவித்த ஆசான்கள் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா, கலைஞர் ஆகிய நால்வரே[4]" என்பதும் அவரின் ஆய்வு முடிவு.

"குறிப்பாகத் திரைப்படத்துறையில் திராவிடர் இயக்கத்தவர்கள் நுழைந்து ஒரு மறுமலர்ச்சிச் சிந்தனைக்குத் தூண்டுகோல் வெளிச்சம் கொடுத்தார்கள்!

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் உரை எழுதத் துவங்கிய பின்னர்தான் 'நீலிமுண்டே' என்பது போன்ற பச்சைப் பார்ப்பன உரையாடல்கள் ஓடி மறைந்தன. அறிஞர் அண்ணா அவர்களின் அடுக்கு மொழி உரையாடல்கள் இளைஞர்களின் இதயத்தை இன்பவீணையாக்கி மீட்டின. கனல் கக்கும் கலைஞரின் நீண்டவசனங்கள் பலருக்கும் மனப்பாடம் ஆயின[5]" என்னும் திராவிடர்க்கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி அவர்களின் கருத்தும் இங்கு எண்ணத்தக்கதாகும்.

திரைப்படத்தில் திராவிட இயக்கக் கொள்கைகளை முதன் முதலாக எடுத்துவைத்தவர் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள்தான். **1936** இல் தன் முதல் படமான 'சதி லீலாவதி' படத்திலேயே கோழி முட்டையையும் சாராயத்தையும் 'கந்தர்வபான உணவு' எனக்கூறிச் சாப்பிடும் பாப்பனராக நடித்து ஆதிபிராமணனை அடையாளங் காட்டினார். இவரையடுத்துத் திரையுலகுக்கு வந்த திராவிட இயக்கத்தவர் பாவேந்தர் பாரதிதாசன், அறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோர். மூல முதல்வர்களாகிய இந்நால்வரையும் பின்பற்றி எழுத்தாளர்கள், கவிஞர்கள், நடிகர்கள் எனப் பலநிலைகளிலும் இயக்கக் கருத்துக்களைக் கதை, திரைக்கதை, உரையாடல், பாடல், காட்சிகளின் மூலமாகத் திரையில் வெளிப்படுத்தினர்.

எழுத்தாளர்களில் கவிஞர் கண்ணதாசன், முரசொலிமாறன், சொர்ணம், இராம. அரங்கண்ணல், ஏ.கே. வேலன், ஏ.வி.பி ஆசைத்தம்பி, கே.ஜி. இராதாமணாளன், விருதை ந. இராமசாமி, ஏ.கே. வில்வம், எஸ். எஸ். தென்னரசு, முல்லை சத்தி, இரா.செழியன், சலகை ப. கண்ணன், பாவலர் பாலசுந்தரம், வேலூர் அண்ணல் தங்கோ, உவமைக் கவிஞர் சுரதா, சுரபி முதலான ஒரு பெரும் படையினரும், நடிகர்களில் நடிகவேள் எம். ஆர். இராதா, நடிப்பிசைப்புலவர், கே.ஆர். இராமசாமி, புரட்சிநடிகர் எம்.ஜி. இராமச்சந்திரன், மக்கள் திலகம், சிவாஜிகணேசன், இலட்சிய நடிகர் எஸ்எஸ் இராசேந்திரன், நடிகமணி டி.வி. நாராயணசாமி, வளையாபதி முத்துக் கிருஷ்ணன் எம்.கே. முஸ்தபா, ஓ.ஏ.கே. தேவர், காகா இராதாகிருஷ்ணன் எனப்பெரும் பட்டாளமும் இயக்கத்தில் இருந்து திரைப்பணி ஆற்றி வந்தனர்.

இத்திராவிட இயக்கச் சிந்தனையாளர்களில் மூல முதல்வர்கள் முதல் அனைவரும் இத்துறையைத் தொட்டும், விட்டும், சிலர் காலச் சூழலில் கொள்கை மாறிப் பிறழ்ந்தும், இருந்தும், இறந்தும்போய நிலையில், ஒருவர் மட்டும், இத்துறையைத் தொட்ட காலந்தொட்டு தொடர்ந்து, அரை நூற்றாண்டு காலத்திற்கு மேல் நின்று, நிலைத்துக் கலைப் பணிசெய்து வருவதும், திரைத்துறை தன் வளர்ச்சி நிலைகளில் பல்வேறு படிநிலைகளைக் கண்டு, தன்போக்கை மாற்றி, மாற்றிச் சென்று வளர்ந்துவரும் இந்தச் சூழ்நிலையிலும் தன்னை அதற்கேற்ப மாற்றிக் கொண்டு, அதே வேளையில், தன் கொள்கை பரப்புக் கொள்கைகையை மட்டும் மாற்றிக் கொள்ளாது, தொடர்ந்து பணி செய்வதும், தன் முதன்மைப்பணி அரசியல் பணி என்றாலும், கலைப்பணியை அன்று தொட்டு, விட்டு விடாமல் தொடர்வதும் நமக்குள் ஒரு வியப்பை ஏற்படுத்துகிறது. அந்த 'ஒருவர்'தான், 'கலைஞர்' என்னும் சிறப்புப் பெயரால் மக்கள் நெஞ்சில் நீங்கா இடம் பெற்ற கலைஞர் மு.கருணாநிதி என்னும் மாபெரும் எழுத்தாளர். இவர் திரையுலக எழுத்தாளர் யாவரினும் சாதனை படைத்தச் சாதனையாளர். இவர் திரைத்துறையில் கதை, திரைக்கதை, உரையாடல், பாடல் ஆசிரியராக, திரைப்படத் தயாரிப்பாளராகத் திகழ்ந்து, தம் பல்துறை ஆற்றலை வெளிக்காட்டிப் புகழ் பெற்றவர்; என்றாலும் இவர், தம் உரையாடல் கலையினால் புகழின் உச்சிக்கே சென்றவர்.

இவர்,

> *"திரைஉலகில் புதுமையின் திறவுகோல், புரட்சியின் தலைவாசல்.*
> *கற்பனை வளமிக்க உரையாடல்களுக்குக் கடைதிறப்பு நடத்தியவர்.*
> *கற்கண்டுத் தமிழுக்குத் தனது சொற் கொண்டு*
> *வார்த்தை சிம்மாசனம்*
> *வடித்தெடுத்த திரைவான் உலகத்துத் தேவதச்சன்*
> *கலைஉலக சாம்ராஜ்யத்தில் அவர் அமர்ந்திருந்த*
> *சிம்மாசனத்தில் இன்னும் வேறொருவரும்*
> *அமரவில்லை. அது விக்கிரமாதித்தன்*
> *சிம்மாசனம்போல் அப்படியே இருக்கிறது."*[6]

என்னும் கதை வசன கர்த்தா பால முருகனின் கூற்று இதனை உணர்த்தும். இத்தகைய ஆற்றல்மிக்க கலைஞர் திரையுலகில் தனக்கே உரித்தான பல

முத்திரைகளைப் பதித்த முத்திரை எழுத்தாளர். திரையுலகில் இவர் பதித்த தனி முத்திரைகளைப் பதிவு செய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

பொன்விழா நாயகர்

கலைஞரின் திரையுலகப்பணி அரைநூற்றாண்டு காலத்திற்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்டது. இவரது திரையுலகப் பயணம் 1946இல் தொடங்கியது. கோவைஜுபிடர் நிறுவனத்தின் 'இராஜகுமாரி' படத்திற்கு முதன் முதலாக உரையாடல் எழுதத் தொடங்கியதிலிருந்து 'புதிய பராசக்தி' வரை அரைநூற்றாண்டு காலத் திரைக்கலைப் பணியில் அறுபது படங்களுக்கு உரையாடல் எழுதிச் சாதனை படைத்தார். திராவிட இயக்க எழுத்தாளர்கள் உள்ளிட்ட தமிழ்த் திரையுலக எழுத்தாளர்களில் ஐம்பதாண்டுகளுக்குமேல் இத்துறையில் நின்று நிலைத்துக் கலைப்பணி செய்தோர் யாரும் இல்லை. இது கலைஞர் திரைத்துறையில் பதித்த சாதனை முத்திரை. அரசியல் வாடை தெரிந்தால் படம் ஓடுமோ ஓடாதோ என்று அஞ்சும் எழுத்தாளர் மற்றும் படத்தயாரிப்பாளர்கள் வாழும் சூழலில், திரைப்படமாம் இவ்வூடகத்தைக் கொள்கை பரப்பும் பணிக்குக் கிடைத்த வாய்ப்பாகக் கருதித் தொடர்ந்து எழுதி வருவதும், திராவிட இயக்கத்தின் முத்திரை எழுத்தாளராம் இவரைப் பயன்படுத்திக் கொண்டால் படம் வெற்றி பெறும் என்ற எண்ணத்தைப் படத்தயாரிப்பாளர் மத்தியில் தன் உரையாடல் திறத்தால் உருவாக்கியதும், தலைமுறை இடைவெளிகள் தன் எழுத்தைப் பாதிக்காமல் பார்த்துக் கொண்டு பல தலைமுறைகளுக்குத் தொடர்ந்து பொருந்தும் வண்ணம் எழுதியதும், தொட்டவரும் விட்டவரும் தொடர முடியாது தவிக்கும் தமிழ்க்கலை உலகில் தம் முதன்மைப் பணியான அரசியல் பணிக்கு இடையில் தொட்டும், விட்டும், விட்டபின் வீழாது தொடரும் தனித்திறமையும் இவர்க்கே உரித்தான தனி முத்திரைகளாம்.

கலைஞர் என்ற சிறப்புப் பெயர்

நாடகத்தில் திரைப்படத்தில் எத்தனைக் கலைஞர் தோன்றினாலும் 'கலைஞர்' என்ற சிறப்புப்பெயர் இவர் ஒருவரை மட்டுமே உணர்த்தி நிற்கிறது. 'மலர் என்றால் தாமரைத்தான்' என்றாற் போல, கலைஞர் என்றால் மு.கருணாநிதிதான் என்று மக்கள் எண்ணும் அளவுக்குத் தன் நிலையை உயர்த்திக் கொண்டவர். "திரு ஏ. பி. நாகராசன் அவர்கள் 'டைட்டிலில்' ஒருசில படங்களில் (கலைஞர் ஏ.பி.நாகராசன்) கலைஞர் என்ற பட்டத்தைப் பயன்படுத்தித் திரையில் காட்டினார். ஆனால் மக்களோ அந்தச் சொல்லை மு. கருணாநிதி என்ற பெயரோடு இணைத்துப் பார்த்து இன்பங்கொண்டனர். இன்றையதினம் 'கலைஞர்' என்ற சொல்லே அவரைக் குறிப்பதாய் ஆகிவிட்டது.[7] என்னும் க.திருநாவுக்கரசு அவர்களின் கூற்று இவ்வுண்மையைப் புலப்படுத்தும்.

கொள்கைப் பற்று

கலைஞர் தம் கதைக்கோ அன்றி இயக்கத்தவர் கதைகளுக்கோ திரைக்கதை உரையாடல் வரையும்போது கொள்கைச் சிக்கல் எழவாய்ப்பில்லை. ஆனால் பிறருடைய கதைகளுக்கு உரையாடல் வரையும்போது இச்சிக்கல் எழும். அப்போது கலைஞர் தன் உயிரினும்

மேலான கொள்கைகளுக்கு ஊறு நேராவண்ணம், கதைகளில் சில மாற்றங்களைச் செய்து கொள்வதையும், தேவைப்பட்டால் புதிதாகப் பாத்திரங்களைப் படைத்துக் கொள்வதையும் கொள்கையாகக் கொண்டிருக்கிறார் என்பதை இவர்தம் படங்களின் வாயிலாக அறிய முடிகிறது. இதற்குச் சான்றாக, பூம்புகார் படத்தில், சிலம்பில் ஏற்கனவே உள்ள பகுத்தறிவுக்குப் பொருந்தாத செய்திகளை அறவே விட்டுவிட்டதையும், சில நிகழ்வுகளைப் பகுத்தறிவுக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொண்டதையும், புதிதாகச் சிலவற்றைச் சேர்த்துக் கொண்டதையும் (கிரேக்க வணிகக்கிழவன் பாத்திரம் முதலியவை) கூறலாம். மனோகராவில் பேய்ப்பாத்திரத்தை நீக்கிவிட்டு அரூபம் பாத்திரத்தைப் படைத்துக் கொண்டு அதற்கு விளக்கம் தந்ததையும் கூறலாம்.

மக்களின் மனங்கவர் எழுத்தாளர்

பம்மல் சம்பந்தரின் 'மனோகரா', நாடகமாகவும், திரைப்படமாகவும், தமிழக மக்களுக்கு அறிமுகமாகி இருந்தாலும், கலைஞரின் உரையாடலில் அப்படம் மக்களை அடைந்தபோதுதான் 'மனோகரன்' என்ற பெயர் மக்களைக் கவர்ந்த பெயராகி பல குடும்பங்களின் பிள்ளைகளுக்குப் பெயராயிற்று.

இவரின் 'திரும்பிப்பார்' திரைப்படம் நன்றாக ஓடிக்கொண்டிருந்த போது, 'வளையல் புடவை ஆகியவையெல்லாம் திரும்பிப்பார் என்ற பெயரில் கடைகளில் விற்கப்பட்டன. இவையெல்லாம் கலைஞர் தம் தனித்திறம் வாய்ந்த எழுத்தாற்றலின்மூலம் வேறெந்த எழுத்தாளரையும் விட மக்களின் மனங்களைக் கவர்ந்தமைக்குச் சான்றுகளாம். இவரது உரையாடல் மாற்றுக்கட்சித் தலைவர்களின் மனங்களையும் கவர்ந்தவை.

பராசக்தி பதித்த முத்திரைகள்

கலைஞரின் பராசக்தி மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்திய படம். "தமிழ்த் திரைப்பட வரலாற்றில் இன்றுவரை பிறர் கொடியேற்ற முடியாத கொடுமுடி, பராசக்தி - - - குறிக்கோள் இளைஞன் ஒருவனின் குருதியோட்டம் அந்த உரையாடலின் உயிர்ப்போட்டம்! சூடு மணக்கும் சொல் ஒவ்வொன்றும் ஆயிரம் முறை சுழன்றாலும் அணையா நெருப்பு! கனல் ஒரு கவின் என்பது இங்குக் காணத்தகும்[8]. என்பார் பேராசிரியர் மா.செ.அவர்கள். "உள்ளே ஊற்றிய மை தோட்டாவாய் வெளியேவரும் என்னும் இரகசியத்தை, இந்தப் பராசக்திதான் பாருக்குச் சொன்னது"[9] இப்பராசக்தி படத்தின் மூலம் கலைஞர் பல தனி முத்திரைகளைப் பதித்துள்ளார்.

திராவிடம் ஒலித்த முதல்படம்

இப்படத்தில்தான் திராவிடர் இயக்கத்தின் 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற கொள்கையை எதிரொலிக்க 'வாழ்க வளமார் திராவிடநாடு' என்ற பாவேந்தரின் பாடல் பயன்படுத்தப்பட்டது. பராசக்திக்கு முன்பு திராவிட இயக்கத்தினரின் எப்படத்திலும் 'திராவிடநாடு' என்ற சொல்லே பயன்படுத்தப்படவில்லை. கலைஞரின் கைவண்ணத்தில்தான் அச்சொல் திரையில் கேட்டது.

ஆட்சியாளரின் அடக்கு முறைக்கு இலக்கானபடம்

பராசக்தி, தணிக்கைக் குழுவிலேயே தடைபல கடந்து வெளிவந்தபடம். படம் வெளிவந்து சில காலம் ஓடியபின், இதன் சிறப்புக்களும் செல்வாக்கும் எதிரிகளை எரிச்சலடையச் செய்தன. விளைவு ஆட்சியாளரின் அடக்குமுறைக்கு இலக்காகிப் படம் பல காலம் தடைபட்டு 1967 இல் அண்ணாவின் அரசு ஆட்சிக்கு வந்ததும் மீண்டும் பராசக்தி பவனி வந்தது. ஆட்சியாளரின் அடக்குமுறைக்கு இலக்கான முதல் இயக்கப்படம் என்ற தனி முத்திரை இதற்கே உண்டு.

வசனப்புத்தகங்கள் விற்பனை

'பாட்டுப் புத்தகங்களை மட்டுமே விற்பனை செய்து கொண்டிருந்தவர்கள், வசனப் புத்தகங்கள் விற்றுப் பணத்தை அள்ளியதும் இந்தப் பராசக்தியில்தான்.[10]

உரையாடலை மனப்பாடம் செய்ய வைத்த பெருமை

பாட்டுப் புத்தகங்களை வாங்கி மனப்பாடம் செய்து வந்த காலத்தில் முதன் முதலாக உரையாடல் புத்தகத்தை வாங்கி மனப்பாடம் செய்த புதிய நிலையை உருவாக்கியதும் கலைஞர்தான். "மூர் அங்காடியின் கடை வீதிகளில், மக்கள் கூடும் இடங்களில், எல்லாம், பேசத் தெரிந்தவர்கள் பராசக்தியின் உரையாடல்களைப் பேசியும் நடித்துக் காட்டியும் சன்மானம் பெற்றனர்[11]. இன்றளவும் கலைஞரின் பராசக்தியும் மனோகராவும் உரையாடல் புத்தகங்களாக வெளியாகி விற்பனை செய்யப்படுகின்றன. கலைஞரின் எழுத்து காலத்தை வென்று நிற்பதற்கு இவையே சான்றாம்.

மனோகரா ! உரையாடல் தட்டு விற்பனையின் சாதனை

கலைஞரின் 'மனோகரா' பம்மல் சம்பந்தரின் நாடகம் மற்றும் திரைப்படத்தைவிடப் புகழ்பெற்ற படமாக, மக்கள் உளங்கவர்ந்த கனல் தெறிக்கும் உரையாடல்கள் நிறைந்த படமாக அமைந்தது. இப்படத்தின் உரையாடல்களைப் பதிவு செய்து விற்பனை செய்யப்பட்ட இசைத்தட்டுக்கள், இசைத்தட்டு விற்பனையில் அதிக எண்ணிக்கையில் விற்றுச் சாதனை படைத்தன. அச்சாதனை இன்றளவும் முறியடிக்கப்படாமல் அப்படியே உள்ளது.

சங்க இலக்கியப் பாடல்களுக்குப் புது வடிவ உரையாடல்

சங்க இலக்கியப் பாடல்களுக்குப் புதுவடிவ உரையாடல்களை, 'நானே எழுதியிருக்கின்றேன் புதுநடையில்', என்று கூறி, குறு நாடகங்களாக அவற்றைத் திரையில் இடம் பெறச் செய்து மக்கள் மனதில் நிலைக்கச் செய்தார். தமிழின மீட்டுருவாக்கத்திற்கு அப்புறநானூற்றுத்தாயரின் வீரம் செறிந்த கதைகளைப் பயன்படுத்தினார். தமிழக இளைஞர்கள் அவற்றை மனப்பாடம் செய்து நெஞ்சில் நிறுத்திப் புத்துணர்வு பெற்றனர். இவரின் உரையாடல்களில் புறநானூற்றுப் பாடல்கள் புதுப்புகழ்பெற்றன. இவையன்றி பிற ஓரங்க நாடகங்களைப் படங்களில் இடம் பெறச் செய்து மக்கள் நெஞ்சில் நீங்கா இடம் பெற்றார்.

பிறர்க்கும் உதவிய எழுத்து

தம் படங்களில் மட்டுமின்றி இயக்கத்தவர் சிலரின் படங்களும் வெற்றிபெற, குறுநாடகங்களை, எழுதி, அப்படங்களில் சேர்த்து, அப்படங்கள் வெற்றி பெற உதவினார். கவிஞர் கண்ணதாசன் படமான இல்லற ஜோதியில் 'அனார்க்கலி' நாடகத்தையும், முரசொலி மாறனின் படமான அன்னையின் ஆணையில் 'சாம்ராட் அசோகன்' நாடகத்தையும் எழுதித்தந்து இணைத்தார்.

இவர் தொட்டபின் பிறர் தொடமுடியா வண்ணம் உயர்ந்து நிற்றல்

ஏற்கனவே வெளிவந்த ஒரு கதையினைத் தன் கைத்திறத்தால் மீண்டும் காவியமாக்கி வெளியிட்டு, வேறு எவரும் மீண்டும் அதனைத் தொட முடியாத அளவுக்கு வெற்றிப் படமாக்கி உயர்ந்து நின்றவர் கலைஞர். இதற்குச் சான்றாக, நாடகமாகவும், திரைப்படமாகவும் ஏற்கனவே வெளிவந்து பின் மீண்டும் இவர் கைவண்ணத்தில் காவியமான 'மனோகரா' வையும், மூன்று முறை ஏற்கனவே படமாக வந்து பலரும் சுவைத்த கண்ணகி கதையைப் 'பூம்புகார் என்னும் சாகாவரம் பெற்ற காவியமாக்கி எவரும் தொட முடியாத உயரத்தை எட்டியதையும் கூறலாம்.

திரை முன்னுரைகள்

தாம் உரை எழுதிய திரைப்படங்களின் தொடக்கத்தில் தோன்றி, அப்படங்களை அறிமுகம் செய்யும் திரை முன்னுரைகளைப் படைத்துப் புதுமை விளைத்தவர் கலைஞர்.

பாத்திரங்களின் புகைப்படங்களைக்காட்டி அறிமுகம் செய்தல்

படத்தில் நடித்துள்ள பாத்திரங்களின் புகைப்படங்களைக் கலைஞர் கையிலெடுத்து ஒவ்வொரு பாத்திரத்தின் தன்மையையும் ஒரு வரியில் சொல்லி, படத்தைக்காட்டி அறிமுகம் செய்யும் புதிய உத்தியை 'மறக்க முடியுமா ? படத்தின் திரை முன்னுரையில் கையாண்டார்.

இதோ இரக்கமற்ற சுயநலம் !
பொறுப்புகளைத் தட்டிக் கழிக்கும் பலவீனம்!
பத்தாம் பசலிக் கொள்கை!
வெகுளித்தனமான ரசனை!
விளையாட்டுப் போக்கு !

என்று ஒவ்வொரு பாத்திரத்தின் படத்தையும் காட்டி அறிமுகம் செய்வார் கலைஞர்.

போலிகளைப் போட்டியில் வென்று நிற்றல்

இவர் பெற்ற வெற்றியைக் கண்ட மற்ற நிறுவனத்தாரும், இயக்கத்தவரும் அதே போன்ற படங்களை எடுக்க வேண்டும் என்ற ஆர்வத்தூண்டலை உண்டாக்கிய எழுத்து கலைஞரின் எழுத்து. அப்படிப் போட்டியிட்ட அவர்கள் அண்டமுடியாத அளவுக்கு வென்று நின்றவர் கலைஞர். மனோகராவைப் பார்த்து ஏபி. நாகராசன் எழுதிய பெண்ணரசி படத்தையும், ஸ்ரீதர், இளங்கோவன் உரைவளத்தில் வெளியான 'சித்தூர் ராணி பத்மினி' படத்தையும் ஏ.எஸ்.ஏ. சாமி எழுதி, சிவாஜியும் கே.ஆர் இராமசாமியும் நடித்த 'துளிவிஷம்' படத்தையும் இதற்குச் சான்றாகக்

கூறலாம். இவை கலைஞரின் இலக்கிய வசனங்களைப் பார்த்து அழகு தமிழில் அடுக்கு மொழியில் பேசவந்து தோற்றுப்போன படங்கள்.

சிறந்த நடிகர்கள் நன்கு அறிமுகமாகவும் அவர்தம் திறமை வெளிப்படவும் துணை நிற்றல்

இயக்க நடிகர்கள் சிலர் மக்களிடையே நன்கு அறிமுகமாகவும், அவர்தம் திறமை வெளிப்படவும், திரைத்துறையில் அவர்கள் வலுவாகக் காலூன்றவும் கலைஞரின் எழுத்தாற்றல் பயன்பட்டது. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பராசக்தியில் அறிமுகமாகி மாபெரும் புகழைப் பெற்றதையும், சிவாஜியின் பலவகைப் பட்ட நடிப்பாற்றலைக் காட்டுவதற்கென்றே 'இராஜாராணி' கதையை எழுதி, சிவாஜியை சாக்ரடீசாகவும் சேரன் செங்குட்டுவனாகவும் அறிமுகம் செய்து வைத்ததையும் அதில் இருவருமே வெற்றி கண்டதையும் நாடறியும்.

புரட்சி நடிகர் என இவரால் பட்டம் சூட்டப் பெற்ற எம்.ஜி.ஆர். 1936-ஆம் ஆண்டு சதிலீலாவதி படத்தில் அறிமுகமாகி பல படங்களில் துணை நடிகராகவே நடித்துவிட்டு கலைஞரின் முதல் படமான இராஜகுமாரியில் தான் கதாநாயகனாக அறிமுகமாகிறார். அதற்குப் பிறகும் அவர் பல படங்களில் துணை நடிகராக நடித்துவிட்டு, மீண்டும் கலைஞரின் மருதநாட்டு இளவரசியில் தான் கதாநாயகனாக நடித்துப் புகழ் பெற்றார். இதனை,[12] "கலைஞர்; எம்.ஜி.ஆர்., எஸ்.எஸ்.ஆர்., சிவாஜிகணேசன் ஆகியோரை திரைப்படவுலகின் 'கதாநாயகன்' அந்தஸ்திற்கு உயர்த்தக் காரணமானவர் அல்லது உருவாக்கத் துணை நின்றவர்" என்னும் க.திருநாவுக்கரசு அவர்களின் கூற்றின் மூலம் அறியலாம்.

தயாரிப்பாளருக்கு இணையாக, கதை வசன கர்த்தாவுக்குரிய மதிப்பை உயர்த்தியவர்

"கதை வசன கர்த்தாவுக்காகப் படங்கள் ஓடியிருக்கின்றன என்றால் அந்தப் பெருமைக்கு மாலை சூட்டி கௌரவிக்கப்பட வேண்டியவர் கலைஞர். வெள்ளித்திரை விளம்பர சுவரொட்டிகளில் கதாசிரியர் பெயர் முதன் முதல் அச்சிடப்பட்டது என்றால் அது கலைஞரது பெயர்தான்! ஆம் அதற்குமுன் தயாரிப்பாளர் டைரக்டர் பெயரைத் தவிர மற்றவர் பெயர் போடப்படுவதில்லை"[13] என்னும் பாலமுருகன் கூற்று மேற்குறித்த கருத்தை உறுதி செய்யும். "வசன கர்ததாவின் சிறப்பு-மதிப்பு உயர்ந்திருக்கிறது என்றால் அதற்கு வழிகாட்டி பச்சைக் கொடி காட்டியவர் கலைஞர்தான் என்று நிச்சயமாகச் சொல்லலாம். தன் அனுமதியின்றி வசனத்தை வெட்டவோ, ஒட்டவோ கூடாது என்று சட்டம் செய்தவரும் அவர்தான். கை கட்டி நின்ற வசன கர்த்தா கால்மேல் கால்போட்டுக் கொண்டு கம்பீரமாக அமருங்காலம் வரக்காரணமானவரும் அவர்தான், அவர்தான், அவருக்கு நிகர் அவர்தான்", என்ற ஆரூர்தாசின் கருத்தும் இங்கு எண்ணத்தக்கது.

கவிதையும் உரைநடையும் கலந்த கலப்பு நடை உரையாடல்

நக்கீரரின் இறையனார் களவியல் உரையைப்போல, கலைஞரின் திரைப்பட உரையாடல்கள்யாவும் நாடகப் பாங்கு மிக்க, கவிதையும்

உரைநடையும் கலந்த கலப்பு நடை உரையாடல்கள். இவரின் உரையாடலில் காணப்பெறும் எதுகை மோனைகள் இதனை உறுதிசெய்யும்.

இன்னும் சொல்லலாம் ....

கலைஞர் திரையுலகில் பதித்த தனி முத்திரைகளாக இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். ஒரு கருத்தை வலியுறுத்த, மூன்றடுக்கு உரையாடல்களை, மும்மடி உரையாடல்களாகத் தந்ததைச் சொல்லலாம்.

"சமுதாயம் பிச்சைக்காரர் மடம்
பைத்தியக்கார விடுதி
திருடர் குகை,"

"பாடம்
பகுத்தறிவு
பயனுள்ள அரசியல் தத்துவம்,"

"பகட்டு என் தங்கையை மிரட்டியது பயந்து ஓடினாள்
பணம் என் தங்கையைத் துரத்தியது மீண்டும் ஓடினாள்
பக்தி என் தங்கையைப் பயமுறுத்தியது ஓடினாள்
ஓடினாள், ஓடினாள், வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள்"

என்பன போன்றவை. இவரின் மூன்றடுக்கு உரையாடலுக்குச் சான்றுகளாம். ஒரு சொல்லை மீண்டும் மீண்டும் அடுக்கிச் சொல்வதன் மூலம், அச்சொல்லுக்கு அதிக உணர்ச்சி ஊட்டியதும் இவரது எழுத்துத்தான். இதனை "ஓடினாள், ஓடினாள், வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள்" என்னும் உரையாடலின் மூலம் மக்கள் உணர்ந்தனர். இவை கலைஞர்க்கே உரிய தனித்தன்மை வாய்ந்த உரையாடல்கள்.

இத்தகைய ஆற்றல் மிக்க முத்தமிழ் வித்தகராம் கலைஞர், திராவிட இயக்க எழுத்தாளர் உள்ளிட்ட, திடையுலக எழுத்தாளர் யாவரினும், புதுமைகள் பல படைத்துத் தன் தனி முத்திரைகளைத் திரையுலகில் பதித்தவர் என்பதுவே இக்கட்டுரையின் ஆய்வு வெளிப்பாடாம்.

அடிக்குறிப்புகள்

1. பேல பெலாஸ் - த.ஆ. எம்.சிவக்குமார் சினிமா கோட்பாடு பக்.172
2. அறந்தை நாராயணன் தமிழ் சினிமாவின் கதை ப.498
3. க.திருநாவுக்கரசு திராவிடர் இயக்கமும் திரைப்பட உலகமும் ப.1
4. க.திருநாவுக்கரசு திராவிடர் இயக்கமும் திரைப்பட உலகமும் ப.1
5. க.திருநாவுக்கரசு திராவிடர் இயக்கமும் திரைப்பட உலகமும் அணிந்துரை ப. IV
6. நாகை தருமன் கலைஞர் போற்றும் கலைஞர் ப.52
7. க.திருநாவுக்கரசு முகூ.நூல் ப.107
8. ஆ.கருணாநிதி காலத்தை வென்ற கலைஞரின் - பராசக்தி அணிந்துரை ப.6,7
9. ஆ.கருணாநிதி காலத்தை வென்ற கலைஞரின் - பராசக்தி பதிப்புரை ப.15
10. ஆ.கருணாநிதி காலத்தை வென்ற கலைஞரின்-பராசக்தி பதிப்புரை ப.15
11. க.திருநாவுக்கரசு முகூ.நூல் ப.
12. க.திருநாவுக்கரசு முகூ.நூல் ப.50
13. க.திருநாவுக்கரசு முகூ.நூல் ப.45

30 தமிழின மீட்டுருவாக்கத்தில் கலைஞரின் திடைப்பட உத்திகள்

முனைவர். க.நெடுஞ்செழியன்

இருபதாம் நூற்றாண்டின் தமிழ் கலை இலக்கியப் படைப்புகளில் சுயமரியாதை இயக்கத்தின் பங்களிப்பு மிகுதி. கவிதை, புதினம், நாடகம், சிறுகதை, திரைப்படம் எனப்பல துறைகளிலும் அவ்வியக்கத்தின் வீச்சு புறக்கணிக்கமுடியாதபடி செல்வாக்கு பெற்றது. புரட்சிக்கவிஞர், அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, திருவாரூர் தங்கராசு எனப்பலரும் எழுத்துத்துறையில் செய்த புரட்சி மகத்தானது. இவர்களின் படைப்புகளில் பகுத்தறிவும், சமூக ஒப்புரவும் சாதிஒழிப்பும், தமிழின் மறுமலர்ச்சியும் தலையாய இடத்தை வகித்தன. அப்படைப்பாளருள் திரைப்படத் துறையில் தமிழின மீட்டுருவாக்கத்தில் கலைஞர் கையாண்ட திரைப்பட உத்திகள் இங்கு ஆராயப் பெறுகின்றன.

தமிழர்நிலை

சோழப் பேரரசின் வீழ்ச்சியை அடுத்து எழுச்சி கொண்ட பாண்டியமரபும் உட்பூசலாலும், அன்னியர் படை எடுப்பாலும் சிதைந்தொழிய, தமிழகம் பிற மொழியாளரின் வேட்டைக் காடாயிற்று. சுல்தான்களின் அராபிய மொழி, ஒய்சளர்களின் கன்னடமொழி, நாயக்கர்களின் தெலுங்கு மொழி, மராட்டியர்களின் மராட்டிய மொழி, ஐரோப்பியரின் ஆங்கிலம், பிரஞ்சு ஆகிய மொழிகள் என ஏறத்தாழ 800 ஆண்டுகாலமாகத் தமிழரின் வாழ்வு பிறமொழியாளர்களால் சூறையாடப்பட்டுள்ளது. வைதிகப்பண்பாட்டின் வருண-சாதி முறைகளால் ஒற்றுமை குலைந்த தமிழர் பிறமொழியாளர்களின் தொடர்ந்த தாக்குதல்களால் தம் உரிமையை - அடையாளத்தை இழந்தனர். இந்நிலையை,

> *தமிழ் மொழியின் மாட்சியும், தமிழர் ஆட்சியின் உயர்ச்சியும் தமிழர்களாலேயே ஏற்கப்படாத அளவு, தாழ்வு மனப்பான்மை அவர்களிடையே குடிகொண்டிருந்தது. தமது தாய்மொழி தமிழ் என்னும் பற்றும் அதைப் போற்றி வளர்ப்பது தமது கடமை என்னும் தெளிவும் அற்றிருந்த நிலையில் தம்மை ஆட்கொண்ட தெய்வமொழி சமற்கிருதம், அரசியல் சட்டமொழி ஆங்கிலம், இசை ஞானம் வழங்கும் மொழி தெலுங்கு, தம்மை ஆள்வதற்குத் தகுதி உடையவர்கள் பிறநாட்டார் என்று மயங்கிக் கிடந்தனர்.*[1]

என விளக்குவார் பேராசிரியர் க.அன்பழகன். அரசியல் நிலையில் அடிமைப்பட்டு உரிமையற்றிருந்த தமிழர்கள் கல்வி நிலையிலும்,

> *எழுபது ஆண்டுகட்கு முன்னர்த் தமிழிலே புலமை பெற விரும்பும்*

எவரும், பல்கலைக் கழகத்தில் தகுதிச் சான்று பெறவேண்டின் வடமொழியிலும் தேர்ச்சி பெற்றாக வேண்டிய நிலை இருந்தது. அந்நாட்களில் வடமொழி அறிவு இன்றித் தென்மொழி அறிவு நிறைவடையாது என்னும் வைதிக எண்ணமும், இலக்கிய வளமுள்ள மொழி (Classical Language) வட மொழி, தமிழ் ஒரு வட்டாரப் பேச்சில் வழங்கும் மொழி என்னும் தவறான கருத்தும், வடமொழியின் துணை இன்றித் தமிழ் தனித்தியங்காது என்னும் அறியாமையும் நிலவின.[2]

எனப்படம் பிடிப்பார்.

நெடுங்காலம் நிலவிய அடிமை முறையை மாற்றித் தமிழின் மாண்பை, உயர்வை உணர்த்தி,, ஓர் எழுச்சியை உருவாக்கும் முயற்சி மெல்ல மெல்ல அரும்பத் தொடங்கிற்று. 'நன்றின் விளைவும் தீதொடு வரூஉம்' எனும் நற்றிணைக் கருத்திற்கேற்ப, எந்த புராணங்களும், பக்தி நெறியும் தமிழர் உணர்வுகளை மழுங்கடித்தனவோ, அங்கிருந்தே தமிழுணர்வு எனும் ஒளிக்கீற்று தோன்றலாயிற்று. மதுரையை மய்யமாகக் கொண்டு அமைந்த திருவிளையாடல் புராணம், தமிழ் மறுமலர்ச்சியின் தொடக்கமாக அமைய அதன் தொடர்ச்சியைத் 'தமிழ்விடுதூது' முன்னெடுத்தது.

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
உண்ட பாலனை யழைத்ததும் எலும்பு பெண்ணுருவாக்
கண்டதும் மறைக்கதவினைத் திறந்ததும் கன்னித்
தண்டமிழ்ச் சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்.[3]

எனவும்,

கண்ணுதற் பெருங்கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச்சில, இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ.[4]

எனவும் முழங்கிய திருவிளையாடல்புராணத்தை அடுத்து,

'இருந்தமிழே உன்னால் இருந்தேன் தேவர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்' என மறுத்துவந்த 'தமிழ்விடு தூதோ',

தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியேயென் முத்தமிழே - புத்திக்குள்
உண்ணப் படுந்தேனே யுன்னோ டுவந்துரைக்கும்
விண்ணப்ப முண்டு விளம்பக்கேள். (5)

என்று தமிழ்ப்பகைவர் அனைவருக்குமான விண்ணப்பமாக அமைத்தது.

குமரகுருபரரின் மீனாட்சி அம்மைப் பிள்ளைத் தமிழையும், இந்தப் பின்புலத்தில்தான் காணவேண்டும். தமிழின் மறுமலர்ச்சிக்கான இந்த வித்து வளர, நீரும் எருவுமாய் அமைந்தவை திருச்சபைப் பாதிரியார்களின் தமிழ்ப்

பணிகளாகும். இந்தியமண்ணில் கிறித்துவத்தைப்பரப்பவந்த திருச்சபையினர் இந்திய மொழிகளைக்கற்கவும் இந்தியவியலை (INDOLOGY) ஆராயவுமான பணிகளையும் மேற்கொண்டனர். இவ் ஆய்வில் இருவகையால முடிவுகள் கிடைத்தன. ஒன்று, பார்ப்பன ஆதிக்கத்தின் மூலவேராகிய வேதத்தின் பொய்மைகளை அறிந்தது. இரண்டாவது, உலகச் செம்மொழிகளின் வரிசையில் தமிழை இணைத்தது.

வேதங்கள்

இந்திய மண்ணில் விளைந்த அறிவுச் செம்பயிரின் அடித்தளமே வேதங்கள் தாம் என்ற மாயையை ஐரோப்பிய அறிஞர்களின் ஆய்வுகள் தகர்த்தன. இதனை.

> *1. இந்துமதம் இந்தியாவிற்கு ஒரு சாபக்கேடு. இருபது கோடி இந்துக்கள், மனிதர்கள், குரங்குகள் இவைகளின் கலப்படமான புராணக்கதையை (இராமாயணம்) நம்புகிறார்கள். இப்படிப்பட்ட மூடநம்பிக்கை, தேசத்தின் உயிர் நாடியை முடக்குகிறது. இந்தியாவில் கடவுளிடம் ஆர்வம் காட்டுபவர்கள் சீக்கிரமே பைத்தியம் பிடித்தவர்களாகிறார்கள்.*
>
> *2. இந்தியாவின் நீதி சாத்திரம், குற்றம் குறையுள்ளதாகவும் சமூகத்திற்குக் கேடு விளைவிப்பதாகவும் உள்ளது. ஐரோப்பாவின் நீதி நெறியோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது இது மிகவும் மட்டமானதாக இருக்கிறது.*[6]

எனும் கூற்றால் உணரலாம்.

ஐரோப்பியர்களால் வைதிக நெறியும் வேத-புராணங்களும் கண்டிப்பிற்கும் கண்டனத்திற்கும் உள்ளான நிலையில்தான் தயானந்த சரசுவதி போன்றவர்கள், சமூகச்சீர்திருத்தம் எனும் பேரில் வேதங்கட்குப் புத்துயிரூட்ட முனைந்தனர். அவரின் வழித்தோன்றல்களாகவேதான் திலகர், அன்னிபெசண்ட், முதலானவர்களையும், அரசியல் அமைப்புகளான இந்துமகாசபை, காங்கிரசு - ஆர்.எஸ்.எஸ் இவற்றைக் காணவேண்டும்.

தமிழின் மேன்மை

வேதங்களும் வைதிக நெறிகளும் கண்டனத்திற்குள்ளான அதே வேளையில் தமிழ் மொழியின் இலக்கண வளமும், திருக்குறளின் உயர்வும் திருச்சபையினரால் உணரப்பெற்றன. இந்தியமொழிகளில் தோன்றிய இலக்கியங்களில் முதன்முதலாக ஐரோப்பிய மொழியொன்றில் மொழியாக்கம் செய்யப்பெற்ற முதல் இலக்கியம் திருக்குறளே ஆகும். உலகப் பொதுமையை உள்ளடக்கமாகக் கொண்ட முப்பாலை இயற்றிய வள்ளுவரை, உலகமனிதனைப்பாடிய பாவலராகப் பாராட்டினர். **1848** இல் ஃபிரான்சு நாட்டவரான ஏரியல் (M.ARIEL).

> *திருக்குறள் தமிழ் இலக்கியத்துள் தலைசிறந்த படைப்பு; மனித இனத்தின் சிந்தனையில் முகிழ்த்த உயர்வும் தூய்மையும் வாய்ந்த*

இலக்கியப் பெட்டகம். அதனுடைய ஆசிரியர் சாதி, சமய, இன வேறுபாடுகளை எல்லாம் கருத்தில் கொள்ளாமல், மனித இனம் முழுமைக்கும் பொருந்தக்கூடிய கட்டற்ற சிந்தனையையும், பெருஞ்சிறப்பு வாய்ந்த அறங்களையும் அறிவுறுத்துவது நம்மை வியப்பில் ஆழ்ந்துகிறது.'[7]

என வியந்தார்.

திருக்குறள் மொழியாக்கத்தின் வழியாகத் தமிழின் மாண்புகளும் உணரப்பெற்றன. உலக மொழிகளுள் உயர் தனிச் செம்மொழி என வகைப்படுத்தப்பட்ட ஒரு சில மொழிகளுள் தமிழும் ஒன்றாக மதிக்கப்பெற்றது. இந்த வகையில் ஒப்பிலக்கணம் கண்ட கால்டுவெல் அவர்களின் பணிமகத்தானது. அவர்தம் கருத்தினை ஆராயும் பேராசிரியர்,

செந்தமிழ் என்னும் சிறப்புப் பெற்றிருப்பது அது தனித்தமிழ் ஆவதனாலேயே என்று கண்ட டாக்டர் காலடுவெல் அவர்கள், "ஒரு தமிழ்ச்செய்யுள், இலக்கியச்சுவை மலிந்து இலக்கியம் என்ற தகுதிக்கு உரியதாயுளது என்பது, பிறமொழி இலக்கியங்களில் உள்ளதுபோல், அச்செய்யுள் ஆண்டிருக்கும் சமற்கிருதச் சொற்களின் எண்ணிக்கை அளவைப் பொருத்திராமல், அச்சமற்கிருத ஆட்சியிலிருந்து எந்த அளவு வடசொல் விரவும் ஆட்சியை வெறுத்துள்ளது என்பதையே பொருத்திருக்கிறது என்று மதிக்குமளவு, அச்சமற்கிருத (கலப்பினை விலக்கும்) வெறுப்புணர்ச்சி ஆழப்பதிந்துள்ளது.. நகரத் தொடர்பற்ற நாட்டுப்புறங்களில் வாழும் கல்லாமக்கள் வழங்கும் பேச்சுத் தமிழ், சமற்கிருதச் சொற்களை வழங்காமையினால், செந்தமிழ் நடையோடு பேரளவு ஒத்துள்ளது" என்றும் தெளிவு படுத்துகிறார்.[8]

என விளக்குவார்.

இப்பின்னணியில்தான் மனோன்மணியம் தந்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் தமிழைத் தெய்வமாக்கிய அதே சூழலில்

'ஆரியம்போல் உலக வழக்கழிந் தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து.'[9]

என வாழ்த்தியதுடன் அமையாது,

வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் கொருநீதி[10]

என வைதிக எதிர்ப்பையும் வெளிப்படுத்தினார்.

இவ்வாறு தமிழ் உணர்வாளர்களாலும், தமிழ்கற்க வந்த வெளிநாட்டவராலும் அடையாளம் காணப்பட்ட தமிழுணர்வு, இரண்டு இயக்கங்களாகக் கால்கொண்டது. அவை, வடமொழி ஆதிக்கத்தை எதிர்த்த மறைமலை அடிகளின் தனித்தமிழ் இயக்கம், வைதிக ஆதிக்கத்தை எதிர்த்த தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம் என்பன. இவ்விரண்டு இயக்கங்களும் ஒன்றுகலந்த இடம் ஒரு போர்க்களமாகும். ஆம்! தமிழரை

அரசியல் அடிப்படையில் ஒடுக்கமுனைந்த இந்தி ஆதிக்கத்தை முறியடிக்க எழுந்த போர்க்களமே அதுவாகும்.

இந்தித்திணிப்பு

இந்திய அரசியல் அரங்கில் காங்கிரசு இயக்கத்தின் வளர்ச்சி இந்தித்திணிப்பிற்கு அடிகோலியது. இந்தித் திணிப்பு என்பதே செத்தொழிந்த சமற்கிருதத்திற்குப் புத்துயிரூட்டும் முயற்சியாகவும் அமைந்தது. இதனை,

சமற்கிருத மொழியில் பேசுவதும் சமற்கிருத வார்த்தைகளை உச்சரிப்பதும் ஒருவனைக் கலாச்சாரத்தில் உயரச் செய்யும் என்பது நிச்சயம். எனவே நீங்கள் சமற்கிருதம் கற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் இது மிகச் சிரமமான காரியம். உங்களுக்கு அவகாசம் கிடையாது எனவே, சமற்கிருதத்திலிருந்து பிறந்த இந்துஸ்தானியைக் கற்றுக் கொள்ளுங்கள்."

என்ற காந்தியாரின் பேச்சு உறுதிப்படுத்தும். காங்கிரசார் கொண்டுவந்த இந்தி என்பது சமற்கிருதத்தின் மாற்று வடிவமே என்பதனால் தான் பெரியாரும் இந்தியை 1926 வாக்கிலேயே எதிர்க்கத் தொடங்கினார். 10-5-1931 குடிஅரசு இதழில் தந்தை பெரியார்,

இந்த நாட்டில் ஆரியர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்ட வடமொழிக்கு உயர்வு கொடுக்கப் பல வழிகளிலும் சூழ்ச்சி செய்து உலக வாழ்க்கையில் ஓர் ஒடிந்து போன குண்டூசிக்கும் பயன்படாத மொழியாகிய அவ் வட மொழிக்கும் (இந்திக்கு) எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டு வருகின்றது என்பது வெகு நாளாகத் தமிழ்மக்கள் கவனித்துவரும் செய்தியாகும்[2]

என எழுதியுள்ளதால் அறியலாம்.

தமிழர்களை மொழி அடிப்படையில் ஒன்றுபடுத்திய நிகழ்ச்சியாக இவ் இந்தி எதிர்ப்புப் போராட்டம் அமைந்தது. இப்போராட்டம் பள்ளிச் சிறுவர்கள், இளைஞர்கள், சமயவாதிகள், தமிழறிஞர்கள், அரசியல் தலைவர்கள் என அனைவரையும் ஈர்த்து ஓரணியில் திரளச் செய்தது. இவ் ஒற்றுமை ஏற்பட பெரிதும் முயன்று வெற்றி கண்டவர் தந்தை பெரியார் ஆவார். இப்போராட்டமே 14 வயது சிறுவனாக இருந்த மு. கருணாநிதியை ஒரு போர்வீரனாக மாற்றியது. மாணவர்களை ஒன்று திரட்டித் திருவாரூர் வீதிகளில் வலம் வரச் செய்தது. மாணவனாக இருந்த கருணாநிதியை எழுத்தாளனாக - தலைவனாக உருமாற்றியது. இதன் விவரத்தை அவரே,

"மாணவர்களை எவ்வாறு இந்தி எதிர்ப்பு ஈர்த்தது என்பதற்கு நானே ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தேன். பள்ளிப் பருவத்தில் மாணவர்கள் பலரை இணைத்துச் சங்கங்கள் அமைப்பதில் எனக்குத் தனி ஆர்வம் உண்டு. சிறுவர் சீர்திருத்தச் சங்கம் இப்படிப் பலப்பல.

வாரந்தோறும் கூட்டங்கள். சிறப்புத் தலைப்புகளில் சொற்பொழிவுகள்.

1938 இல் நாள்தோறும் மாலை நேரத்தில் மாணவர்கள் பலரை அணிவகுத்துத் திருவாரூர் வீதிகளில் ஊர்வலம் வருவேன். கையில் தமிழ்க்கொடி! ராசாசி கட்டாய இந்தி என்னும் கட்டாரியால்

தமிழ்த்தாயைக் குத்த முற்படுவது போன்ற படம் அமைந்த ஒருவண்டி! என் தலைமையில் அந்த ஊர்வலம்! நான் எழுதிய ஒரு பாடல் ; மாணவர்கள் அனைவரும் போருக்குச் சென்றிடுவோம்! வந்திருக்கும் இந்திப் பேயை விரட்டித் திருப்பிடுவோம்! இதுவே பாட்டின் பல்லவி[13].

என்பதாகும். இந்திப் போரின் ஈடுபாடும் பெரியாரின் தன் மதிப்புக் கழகத்தின் (சுயமரியாதை இயக்கம்) ஈடுபாடும் கலைஞரை முற்றான சமூக விடுதலையாளனாக - தமிழ் உணர்வாளனாக - பகுத்தறிவுச் சிந்தனையாளனாக உருமாற்றின. இதன் விளைவு கலைஞர் குடிஅரசு இதழின் துணையாசிரியர். எழுத்துலகில் பின்னாளில் அவர் பதித்த முத்திரைகளுக்கெல்லாம் பயிற்சிப் பள்ளியாக ஈரோட்டில் இருந்த தந்தை பெரியாரின் இல்லம் அமைந்தது. குடிஅரசு இதழில் கலைஞரின் பணிபற்றி,

"குடிஅரசு" இதழில் நான் எழுதிய "அண்ணாமலைக்கு அரோகரா"என்ற கட்டுரையைப் பெரிதும் பாராட்டினார். திருவண்ணாமலை தீபத்தைப் பற்றிய கட்டுரையாகும் அது. அதற்குப் பிறகு பெரியாரைக் கவர்ந்த மற்றொரு கட்டுரை "தீட்டாயிடுத்து" என்ற துணைத்தலையங்கமாகும்.

திருவையாற்றில் தியாகப்பிரம்ம உற்சவம் நடக்கும் பொழுது ஒரு தமிழ்ப் பாடகர் தமிழ்ப்பாட்டு ஒன்றைப் பாடிவிட்டார் என்பதற்காக, அடுத்துப் பாட வந்த ஒரு பாடகர் மேடை தீட்டாகி விட்டது என்று சொல்லி பிராயச்சித்தம் செய்து, அதன்பிறகே பாடினார் என்று வந்த செய்தியை ஒட்டி நான் எழுதிய துணைத்தலையங்கமாகும் அது.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் தமிழுக்கிருந்த பரிதாபகரமான நிலையை இந்த நிகழ்ச்சி குறிக்கும்[14].

என அவரே குறிப்பார்.

திருவையாற்றில் தமிழ்ப்பாட்டுக்கு நேர்ந்தகதியின் விளைவால் தோன்றியதே தமிழிசை இயக்கம் என்பதும் இங்கு குறிக்கத்தகும்.

இவ்வாறு தமிழ், மொழி, இன உணர்வின் ஊற்றுக் கண்ணாக விளங்கிய கலைஞர், அவற்றின் மீட்டுருவாக்கத்திற்காகக் கையாண்ட உத்திகளில் மிகப்பெரிய வெற்றியைத் தந்தது திரைப்படங்களை அவர் கையாண்ட விதம் எனலாம். அவற்றுள்ளும் அம்மையப்பன் திரைப்படத்திலும், ராஜாராணி திரைப்படத்திலும் இடம் பெற்ற உரையாடல்கள் தமிழகத்தின் பட்டி தொட்டிகள் எங்கும் எதிரொலித்தன. பள்ளி மாணவர்களின் கவிதை ஒப்புவிக்கும் போட்டியில் முதலிடத்தைப் பெற்றன. அவ் வீர உரையின் ஆளுமை அத்தன்மையதாகும்.

பரப்பிரம்மம்

திரைப்படத்துறையில் மாபெரும் திருப்பத்திற்குக் காரணமாக அமைந்த படம் கலைஞரின் 'பராசக்தி' யாகும். அப்படத்தின் வெற்றி கண்டு பொறாத இதழ் ஒன்று அதனைத் திறனாய்வு செய்யும் சாக்கில் மிக மிகக் கடுமையாகத் தாக்கி இருந்தது. அதுகுறித்து,

என்னையும் 'பராசக்தி' படத்தையும் கண்டித்து, காங்கிரஸ் கட்சி கண்டனக் கூட்டங்கள் பலவற்றை நடத்தியது. கண்டன விமரிசனம் வந்திருந்த 'தினமணி கதிரின்' அட்டையில் பராசக்தியைக் கிண்டல் செய்வது போல் ஒரு கேலிச்சித்திரமும் வரையப்பட்டிருந்தது. ஆடை குலைந்த நிலையில் ஒரு பெண்ணின் ஓவியம் வரைந்த விளம்பரம். அந்த விளம்பரத்தின் தலைப்பு 'பரப்பிரம்மம்' என்பதாகும். அதன் கீழே கதை - வசவு தயாநிதி என்றும் எழுதப் பட்டிருந்தது . . . .

அதைப் பார்த்து நான் ஆத்திரப்படவில்லை. என்னைக் கிண்டல் செய்து அவர்கள் போட்டிருந்த அதே 'பரப்பிரம்மம்' என்ற தலைப்பை வைத்து ஒரு நாடகம் எழுதினேன். முழுக்க முழுக்கக் கட்சிப் பிரசாரம் நிறைந்த இந்த நாடகத்தைப் பல ஊர்களில் நடித்துக் காட்டினேன்[5].

என விளக்குவார் கலைஞர்.

இந்த நாடகம் எழுதிய காலகட்டத்தில் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்னும் முழக்கம் எங்கும் நிறைந்திருந்தது. எனவே இந்நாடகத்தின் பாத்திரங்களின் பெயர்களிலும் அம்முழக்கங்களின் எதிரொலிப்பைக் கேட்க முடிகிறது. அவற்றில் சில

திராவிடம்
மூவேந்தன்
துரை
தமிழரசி

என்பன. அவற்றுள் துரை என்பது அறிஞர் அண்ணாவின் பெயரில் உள்ள பின்னொட்டு என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

இந்நாடகத்தில் இடம் பெற்ற ஒருபகுதி நம் ஆய்வுக்கு உறியது. சிலப்பதிகார வஞ்சிக் காண்டத்தின் ஒரு பகுதி இங்கே புதிய வடிவம் பெறுகிறது. கனக-விசயர் தமிழர்தம் வீரத்தைப் பழித்தனர் என்பதற்காகவே சேரன் செங்குட்டுவன் வடபுலப்படை எடுப்பை மேற்கொள்கிறான். பின்னர் அவர் தம் தலை மீதே சுமக்கச் செய்கின்றான் கண்ணகி சிலைக்கான கல்லை. இப் பின்னணியை அடிப்படையாகக் கொண்டு கலைஞர் உருவாக்கும் உத்தி, புறநானூற்றுக்கே புதுப் பொலிவைத் தருவதாக அமைகிறது. காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் பாடிய புறம் 278ஆம் பாடல் தும்பைத் திணையிலும் உவகைக் கலுழ்ச்சி என்னும் துறையிலும் அமைந்தது.

'அதிரப் பொருதல் தும்பை' அஃதாவது பகைகொண்ட இருபெரும்படையும் களத்தில் நேருக்குநேர் மோதிக் கொள்வதே தும்பைத் திணை என்பது.

தும்பை தானே நெய்தலது புறனே
மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்றுதலை அழிக்குஞ் சிறப்பிற் றென்ப[6]

என்பது தொல்காப்பியம்.

இப்பாடலில் அமைந்த துறை 'உவகைக் கலுழுச்சி'. இதன் இலக்கணம்

வாள்வாய்த்த வடுவாழ் யாக்கைக்
கேள்கண்டு கலுழ்ந்துவந் தன்று[17]

என்பது.

போர்க்களத்தின் கண் விழுப்புண்பட்டு மாய்ந்தவனை வீரக் குடியில் பிறந்த அவன் தாய் அல்லது மனைவி கண்டு உவந்து கண்ணீர் உகுத்தது 'உவகைக் கலுழ்ச்சி' என்னுந்துறையாம். இத் திணைத்துறைகளில் அமைந்த அப்புறப்பாடல்,

நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னாயி னுண்டவென்
முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடைக்கை காணுஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே[18]

என்பது.

தன் மகன் போரில் புறமுதுகிட்டு இறந்தான் எனச் சிலர் கூறக்கேட்ட தாய் ஒருத்தி அஃது உண்மையாயின் அவன் பாலுண்ட முலையை அறுத்தெறிவேன் எனச் சூளுரைத்து வாளைக் கையிலேந்திப் படுகளம் நோக்கிச் சென்றாள். சென்றவள் பிணக்குவியலில் தன்மகனைத் தேடி கண்ட போது அவன் மாரிலே புண்பட்டு மடிந்து கிடந்தான். இக்காட்சியைக் கண்ட தாய் அவனை ஈன்ற பொழுது பெற்ற மகிழ்ச்சியைவிடப் பெரிதும் உவந்தாள் என்பது அப்பாடலின் பொருள்.

9 அடிகளைக் கொண்ட இப்பாட்டிற்கு நாடக வடிவம் தரும் கலைஞர் தம் உயிர்த்துடிப்பான உரையால் அதனை நடிக்காமலேயே நம் கண்முன்னே காட்சியாக்கிவிடுகிறார்.

அவர் அமைத்த அந்த ஓரங்க நாடகத்தின் பாத்திரங்களும் தமிழினத்தின் மாண்புக்குரிய சேரன் செங்குட்டுவனும் அவன் மனைவி வேண்மாளும் ஆவர். தமிழ் இன வரலாற்றில் இரண்டு பெயர்கள் இனத்தின் அடையாளங்களாகக் கருதப்படுபவை.

மானமொன்றே பெரிதெனக் கொண்டு
வாழ்ந்தஎம் மறவேந்தர்
பூனைகள் அல்லர் அவர்வழி வந்தோர்
புலிநிகர்த் தமிழ்மாந்தர்[19]

என்ற புரட்சிக் கவிஞரின் கூற்றுக்கு இலக்கணமாகத் திகழும், அவ்விரு பெயர்களும் இன்றைக்கும் இனமீட்பின் அடையாளச் சின்னங்கள். ஒன்று கரிகாலன் என்னும் பெயர். மற்றது செங்குட்டுவன் என்னும் பெயர். மேலே காட்டிய நாடகத்தில் செங்குட்டுவனைக் காட்டிய கலைஞர், நெருக்கடி

காலத்தில் கரிகாலன் என்ற பெயரைத் தம் புனைபெயராகக் கொண்டிருந்தார் என்பதும் இங்கே எண்ணத்தக்கது.

நாடகம்

சேரன் செங்குட்டுவனும் அவன் மனைவி வேண்மாளும் நந்தவனத்தை ஒட்டி அமைந்த வெள்ளி மாடத்தில் அமர்ந்து உரையாடிக் கொண்டுள்ளனர். உரையாடலின் தொடக்கமே சுவையின் தேக்கமாய் மாறிவிடுகிறது.

வேண்மாள் : கதையொன்று சொல்லுங்கள் அத்தான்.
செங்குட்டுவன் : சொல்லட்டுமா . . . சோழன் மகளைச் சேரன் மணந்தான். சேரனுக்கொரு செல்வன் பிறந்தான். செல்வன் இந்தச் சிலையை மணந்தான்.
வேண்மாள் : தெரிந்த கதைதானே இது.
செங்குட்டுவன் : நடந்த கதைகூட.
வேண்மாள் : நடக்காத கதை - சொல்லுங்களேன்.
செங்குட்டுவன் : சுவைக்காது கண்ணேயது - சோம்பேறிகள் சொல்லுவார்கள்[20].

புதிராகத் தொடங்கிப் புராணத்தை - பௌராணிகளின் கதாகாலட்சேபத்தை எள்ளி நகையாடுவதில் முடிகிறது இப்பகுதி. போகிற போக்கில் நடக்காத கதை - சுவைக்காது - என்பதிலும், சோம்பேறிகள் சொல்லுவார்கள் என்பதிலும் உள்ள நுட்பம் வியக்கத்தக்கது; பகுத்தறிவியக்கத்தின் பாய்ச்சலைத் தருவது.

கதை அமைப்பு

நாடகப்பாங்கில் தொடங்கி, கதை சொல்லும் பாணியாகமாறும் பகுதியும் தமிழரின் புறநானூற்று வாழ்விற்குப் புதுமெருகூட்டுகின்றது.

தலைவி காதல் கதையொன்று கேட்க, தலைவனோ புறநானூற்றில் எனக்கூற, அவள் வீரக்கதை யென்றால் வேண்டாம் என்னும் பொருளில் போதும் . . வீரக் கதைதானே என மறுக்கின்றாள். இளம் மனைவியான வேண்மாள், வீரத்தின் விளைவைப் பார்த்தவள் அல்லவா! ஒரு மன்னனின் வீரம்தானே அரசிக்கு நெடுநல் வாடையாக, முல்லைப்பாட்டாக அமைந்தன. எனவே வீரம் என்றதும் அவளுக்குச் சலிப்பாகி விடுகிறது. ஆயினும் பன்மாயக்கள்வனின் பணிமொழி அப்பெண்மையை உடைத்துவிடுகிறது.

இல்லை. வீரத்தை மணந்த காதல் கதை . . . வேண்மாள் கொஞ்சம் கேளேன் . . . நானே எழுதி இருக்கிறேன் . . . புது நடையில்[21].

இங்கே ஆசிரியரே பாத்திரமாகும் தன்மை. இதில் வெற்றி சேரனுக்குமட்டுமல்ல கலைஞருக்குந்தான்.

குடிசைதான் ஒருபுறத்தில்
கூரிய வேல் வாள் வரிசையாய்
அமைந்திருக்கும் வையத்தைப்
பிடிப்பதற்கும் வெம்பகை

முடிப்பதற்கும் வடித்துவைத்த
படைக்கலம் போல் . . .[22]

புதுக்கவிதையா? அல்லது வஞ்சிநெடும்பாட்டா என்பதை வரையறுக்க முடியாத உணர்ச்சிவெள்ளம் மதகுடைத்துப் பாய்வதைப் போல நிகழ்ச்சி தொடர்கிறது.

இல்லத்து வாயிலிலே,

கிண்ணத்துச் சோற்றோடு
உண்ணமுற்படும் மூதாட்டியிடம்,
ஓடிவந்தான் ஒருவீரன்
ஒருசெய்தி பாட்டியென்றான்
ஆடிவந்த சிறுமிபோல்
பெருமூச்சு வாங்குகின்றாய்
ஆண்மகனா நீதம்பி[23]

என வினவினாள் மூதாட்டி; வந்தவனோ,

மடிந்தான் உன்மகன்
களத்தில் என்றான்
மனம் ஒடிந்து நிமிர்ந்தாள்
தாய்க்கிழவி ஒருமுறை
தாயம் ஆடுகையில்
காய்களை வெட்டுவதுண்டு
காயம் மார்பிலா முதுகிலா
என்றாள் . . .
முதுகிலென்றான்[24].

புறநானூற்றுப் பாடலில் இல்லாத பகுதி. எனினும் இந்நாடகத்தின் உச்சகட்டமே இதுதான். கதைகேட்ட வேண்மான் கூட கணநேரம் அதிர்ந்துவிடுகிறாள். அதன் விளைவு

கிழவி துடித்தனள்
இதயம் வெடித்தனள்
வாளை எடுத்தனள்
முழவு ஒலித்த திக்கை நோக்கி
முடுக்கினள் வேகம் -
கோழைக்குப் பால் கொடுத்தேன்
குப்புற வீழ்ந்து கிடக்கும்
மோழைக்குப் பெயர்
போர் வீரனாம் [25]

புறப்புண்பட்டு மடிதல் என்பது தமிழர் வாழ்வில் புறக்கணிக்கப்பட்ட ஒன்று. போர்க்களத்தில் கரிகாலன் சேரமானை நோக்கி அம்பு எய்கின்றான். விரைந்து சென்ற அம்பு சேர வேந்தனின் நெஞ்சைத் துளைத்து முதுகின் வழி ஊடுருவி விட்டது. இதனால் முதுகிலும் வடு. ஆம், தகாத பழியான புறப்புண் என்று யாரும் எண்ணிவிடுவரோ என அஞ்சினான். அதன் விளைவு உண்ணா நோன்பான வடக்கிருந்து உயிர் துறக்கின்றான் சேரன். இந்நிகழ்ச்சி புலமைச் சான்றோர்களைத் திடுக்கிடச் செய்கிறது. உயிர்துறந்த சேரமான் பெருஞ்சேரலாதனை,

தன்போல் வேந்தன் முன்பு குறித்தெறிந்த
புறப்புண் ணாணி மறத்தகை மன்னன்
வாள்வடக் கிருந்தன னீங்கு
நாள்போற் கழியல ஞாயிற்றுப் பகலே

எனக் கையறு நிலையில் கண்கலங்குவார் கழாத்தலையார்.

வெண்ணிக் குயத்தியாரோ, சேரனின் மறைவிற்குக் காரணமான கரிகால் பெருவளத்தானைப் பார்த்து,

களியியல் யானைக் கரிகால் வளவ
சென்றமர்க் கடந்தநின் னாற்ற றோன்ற
வென்றோய் நின்னினு நல்ல னன்றே
கலிகொள் யானை வெண்ணிப் பறந்தலை
மிகப்புக ழுலக மெய்திப்
புறப்புண் ணாணி வடக்கிருந் தோனே[27]

எனப் போரில் வென்றவனைப் புகழில் தோற்றவனாக்குகின்றார்.

நெஞ்சிலே பட்ட அம்பு முதுகின் வழி ஊடுருவியதற்கே புறப்புண் நாணி வடக்கிருந்த மண்ணிலே, தன்மகன் முதுகிலே புண்பட்டு மறைந்தான் என்றால் அந்தத் தாயின் நெஞ்சம் தணல்பட்ட மெழுகாக உருகாதோ! உருகும். அதே நேரம், கோழையாகவும் மோழையாகவும் கருதப்பட்ட அந்த வீரனைப் பெற்ற தந்தை, அந்த முதியவளின் கணவன் எப்படிப்பட்டவன்? இதோ மூதாட்டியே கூறுகின்றாள்

முன் னொருநாள்
பாய்ந்துவந்த ஈட்டிக்குப் பதில்
சொல்ல மார்பைக் காட்டி
சாய்ந்து கிடந்தார் என்
சாகாத கண்ணாளர்
அவருக்குப் பிறந்தானா![28]

நலத்தின் கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின் கண் ஐயப் படும்.

இவ்வள்ளுவம் இங்கே எதிரொலிக்கின்றது.

அடடா மானமெங்கே
குட்டிச் சுவருக்கும் கீழாக
வீழ்ந்து பட்டான் -
இமயவரம்பினிலே
வீரம் சிரிக்கும் - இங்கு
வீணை நரம்பினிலே, இசை
துடிக்கும் - அதுவும்
மானம் மானமென்றே
முழங்கும்[29].

மானமும், அறிவும் மனிதர்க்கு அழகு என்பார் பெரியார். மானம் அழிந்தால் வாழாமை முன்னினிதே என்பது அவ்வை வாக்கு. அறம்பாடிய வள்ளுவரோ மானத்தின் மாண்பை உணர்த்த தனி அதிகாரமே வகுத்தார். தமிழன்

மாண்புக்கும் உயர்வுக்கும் இம்மான உணர்வே காரணமாய் இருத்தல் வேண்டும். அதனால்தான் மாண்பிழந்த தமிழர்க்குச் சுயமரியாதையை ஊட்டினார் தந்தை பெரியார். நம் மூதாட்டியும் மகனை எண்ணி,

மதுவும் சுராவும் உண்டு வாழும்
மானமற்ற வம்சமா நீ[30]

எனக் கேட்டுத் தன் மரபின் பெருமைக்கு அவனால் ஏற்பட்ட களங்கத்தை நினைந்து,

ஏடா - மறத்தமிழ்க் குடியிலே
மாசு தூவிவிட்டாய் -
தின்று கொழுத்தாய் -
திமிர் பாய்ந்த தோள்களெங்கே
தினவெடுக்க வில்லையோ அந்தோ!
என்று கதறினாள்[31]

கதறிய அவள்,

சென்றங்கு செருமுனையில்
சிதறிக் கிடந்த செந்தமிழ்க்
காளைகளைப் புரட்டிப் பார்த்தாள்
அங்கு நந்தமிழ் நாட்டைக்
காக்க ஓடிற்று ரத்த வெள்ளம் -
பிணக் குவியலிலே
பெருமூச்சு வாங்க நடந்தாள் -
மணப் பந்தலிலும் அந்த
மகிழ்ச்சி இல்லை
மகன் பிறந்த போதும் மகிழ்ச்சிக்கு
எல்லையுண்டு[32]

இடையில் ஒரு நிறுத்தம் - வேண்மாளுக்கும் வியப்பு - காரணம் கேட்கிறாள்.

மகன் இறந்து கிடந்தான்
ஈட்டிக்கு மார்பு காட்டி!
அறுத்தெறிய இருந்தேனே
அவன்குடித்த மார்பை
அடடா கருத்தறிய
பொய்சொன்ன கயவனெங்கே ?
வாளிங்கே! அவன்
நாக்கெங்கே . . . [33]

வெள்ளம் வடிந்த அமைதி. ஆயினும் அந்த ஓரங்கம், காவா நாவிற் கனகனும் விசயனும், அருந்தமிழாற்றல் அறியும் வகையில் செங்குட்டுவனின் வெற்றியுடன் முடிகிறது.

புறப்பாடல் ஒன்று, செங்குட்டுவனின் வடபுலப் படையெடுப்போடு பிணைந்து தமிழரின் மானத்தை - வீரத்தைக் கேட்பவர் நெஞ்சில் விதைக்கும் வண்ணம் அமைந்து விடுகிறது.

தந்தை பெரியாரின் பணி சமுகப்புரட்சி. இருக்கும் நிலைமாற்ற ஒரு புரட்சி மனப்பான்மையை ஊட்டியபாங்கு அதன் தன்மை. ஆயினும் இந்தி எதிர்ப்பு ஊட்டிய போர்க்குணம் வடக்கு எதிர்ப்பாய் மாற்றம் பெற்றதில் மரபு வழி வந்த ஆரிய - தமிழியப் போராட்டம் புதிய வடிவம் கொண்டது. அரசியல் மேடைகளில் அனல் பரந்த சொற்பொழிவுகளைக் கேட்டோர் கிளர்ந்தெழுந்தனர். இந்தி எதிர்ப்புப் போராட்டம், இட ஒதுக்கீட்டுப் போராட்டம், குலக்கல்வித்திட்ட எதிர்ப்புப் போராட்டம், மும்முனைப் போராட்டம், தேவிகுளம், பீர்மேடு மீட்புப் போராட்டம் எனத் தமிழகம் போர்க்களமாக மாறியது. இச்சூழலில் தான் வீரத்தை விதைத்து வீரர்களை விளைவிக்கும் பணியில் இலக்கியப் படைப்பாளர்கள் முயன்று உழைத்தனர். அந்த உன்னதப் பணியில் கலைஞர் கையாண்ட இவ் உத்தி மாபெரும் வெற்றியைத் தந்தது. இந்த வெற்றியைப் போன்றே பராசக்தி திரைப்படத்திலும் கலைஞர் கையாண்ட உத்தி தமிழகத்தின் எழுச்சிக்கு ஊட்டமும் உரமுமாயிற்று. இவ்வுத்தியே பின்னாளில் 'சங்கத்தமிழ்' மலர்வதற்கும் அடிப்படையாயிற்று.

திராவிட நாடு

திராவிட நாடு திராவிடருக்கே என்ற முழக்கம் எங்கும் எதிரொலித்த நாளில் திராவிட நாட்டின் நாட்டுப் பாடலாக மதிக்கப்பட்ட பாடல் ஒன்று உண்டு. அதுவே புரட்சிக் கவிஞர் இயற்றிய வாழ்க திராவிட நாடு எனத் தொடங்கும் பாடல். அழகிய கற்பனையும் இனிய சந்தமும் அமைந்த அந்தப் பாடல் பராசக்தியில் முதலில் இடம் பெற்றதுடன் அதன் நல்லிசையால் கேட்பவர் நாவில் தவழ்ந்து 'நான் மறந்தாலும் என் நாமறக்காதே' எனும் நிலையைப் பெற்றது.

வாழ்க வாழ்கவே
வளமார் எமது திராவிட நாடு
சூழும் தென்கடல் ஆடும் குமரி
தொடரும் வடபால் அடல்சேர் வங்கம்
ஆழும் கடல்கள் கிழக்கு மேற்காம்
அறிவும் திறலும் செறிந்த நாடு[94]

என்பது அப்பாடலின் ஒரு பகுதி.

பெயர்சூட்டல்

பராசக்தி திரைப்படத்தின் தலைவி கல்யாணி அவள் தாய்மைப் பேற்றை அடைந்த நிலையில், பிறக்கப் போகும் பிள்ளைக்கு என்ன பெயர் வைப்பது என்பது குறித்து ஓர் உரையாடல் நடக்கும். பெண்ணாக இருந்தால் 'நாகம்மை' என்றும் ஆணாக இருந்தால் பன்னீர்செல்வம் என்றும் பெயர் வைக்க வேண்டும் என முடிவு செய்துள்ளதாகக் கூறுவாள்.

நாகம்மை

தந்தை பெரியாரின் முதல்மனைவியர். பெரியாரின் தொடக்க காலப் போராட்டங்களுக்குத் துணைநின்றவர். பெரியார் தொடங்கிய வைக்கம் போராட்டத்திலும் தீவிரப்பங்காற்றிவர். 11-5-1933 ஆம் நாள் இயற்கை

எய்தினார். சுயமரியாதை இயக்கத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. அவரின் மறைவு குறித்து பெரியார் எழுதிய இரங்கல் செய்தியில்,

> *"எப்படி இருந்தாலும், நாகம்மாளை மணந்து வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டு ஒரு வருடகாலம் வாழ்ந்து விட்டேன். நாகம்மாளை நான்தான் வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டு இருந்தேனேயல்லாமல் நாகம்மாளுக்கு நான் வாழ்க்கைத் துணையாக இருந்தேனா என்பது எனக்கே ஞாபகத்துக்கு வரவில்லை. நான் சுயநல வாழ்வில் மைனராய், காலியாய், சீமானாய் இருந்தகாலத்திலும், பொது நல வாழ்வில் ஈடுபட்டுத் தொண்டனாய் இருந்த காலத்திலும் எனக்கு வாழ்வின் ஒவ்வொரு துறையின் முற்போக்குக்கும் நாகம்மாள் எவ்வளவோ ஆதாரமாய் இருந்தாள் என்பது மறுக்க முடியாத காரியம். பெண்கள் சுதந்திர விஷயமாகவும், பெண்கள் பெருமை விஷயமாகவும் பிறத்தியாருக்கு நான் எவ்வளவு பேசுகிறேனோ, போதிக்கிறேனோ அதில் நூற்றில் ஒரு பங்கு வீதமாவது என்னருமை நாகம்மாள் விஷயத்தில் நடந்து கொண்டிருந் தேன் என்று சொல்லிக் கொள்ள எனக்கு முழு யோக்கியதை இல்லை"[35].*

எனக் கழிவிரக்கம் கொள்வார்.

நாகம்மையார் மறைந்து பல ஆண்டுகளுக்குப் பின்னர் அதுவும் தந்தை பெரியாரிடமிருந்து பிரிந்து தனிக்கட்சியாகத் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றி சில ஆண்டுகளுக்குப் பின்னர், தந்தை பெரியாரின், அவரது திராவிடர் கழகத்தின் தீவிரத்தாக்குதல்களுக்கும் உள்ளான ஒரு காலகட்டத்தில் கலைஞர் தம் உரையாடலில் நாகம்மையை நினைவு கூர்வது அவர்தம் நன்றி உணர்வின் வெளிப்பாடாய் மட்டும் அமையாமல், சுயமரியாதை இயக்கம் பரப்பலுக்கான ஓர் உத்தியாகவும் அமைந்துள்ளது.

பன்னீர் செல்வம்

தஞ்சை மாவட்டத் தலைவராகவும், வழக்கறிஞராகவும், நீதிக் கட்சித் தலைவர்களில் ஒருவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும், உள்துறை உறுப்பினராகவும், இடைக்கால அமைச்சரவையில் உள்துறை அமைச்சராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் ஆகப்பல்வேறு பொறுப்புக்களை ஏற்று அவற்றில் எல்லாம் தனி முத்திரை பதித்தவர் பன்னீர் செல்வம்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் தொடங்கிய நிலையில் பெரியார் சிறையில் அடைக்கப்பட, அந்த வெற்றிடத்தை நிரப்பியமாபெரும் வீரராகவும் திகழ்ந்தவர் இவர். இவற்றிற்கெல்லாம் மேலாகப் பெரியாரின் நம்பிக்கைக்குரிய தலைவராக இவர் திகழ்ந்தார் என்பதே இவரின் சிறப்புக்கெல்லாம் சிறப்பாக அமைந்தது. தமிழினத்தின் மீது இவர் கொண்டிருந்த அக்கறை குறித்து,

செல்வம் நீதிக்கட்சித் தலைவராகச் சட்ட மன்றத்தில் விளங்கினாலும் அவர் தமிழினத்தின் பிரதிநிதியாகச் சட்டமன்றத்தில் பணியாற்றினார் என்பது முற்றிலும் பொருந்தும். அன்றைய சென்னை மாநிலம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், கொங்கணி ஆகிய பல மொழிகளைப் பேசுவோரைக் கொண்டிருந்தது. இத்தகைய சூழ்நிலையில் தமிழர்களுக்கு ஊறு நேராத வகையிலும், தமிழருக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகளை அவர்கள் இழந்து விடாத வகையிலும் அவர் தொண்டாற்றி வந்தார். செல்வம் தாம் திராவிட இனத்தைச் சார்ந்தவர் என்று பெருமைப்பட்டுக் கொண்டாலும், திராவிடக் குடும்பத்தைச் சார்ந்த பிற இனங்களால் தமிழரின் உரிமைகள் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதில் கவனம் செலுத்தி வந்தார்[36].

என அமுதன் அடிகள் இதனை விளக்குவார்.

1940 இல் பன்னீர் செல்வம் இங்கிலாந்து நாட்டில் இந்தியாவிற்கான அமைச்சரின் ஆலோசகர் பதவிக்கு நியமனம் பெற்றார். அப்பணியை ஏற்பதன் வாயிலாகத் தமிழினத்திற்கான சில உரிமைகளைப் பெறப் பெரியாரும் அவரும் திட்டங்கள் சிலவற்றைத் தீட்டி இருந்தனர் என்றும், ஒரு செய்தி உண்டு. அப்பொறுப்பினை ஏற்க, அவர் பயணம் செய்த 'அனிபால்' என்னும் விமானம் ஒமன் வளைகுடாவில் விபத்திற்குள்ளாகப் பன்னீர்செல்வம் தமிழர்களைக் கண்ணீர்க்கடலில் தவிக்கவிட்டு மறைந்தார்.

தமிழரின் செல்வமாகிய இவரின் மறைவு குறித்துப் புரட்சிக் கவிஞர் பாடிய இரங்கற்பா நெஞ்சை அள்ளுவதாகும். அதன் ஒரு பகுதி

பண்கெட்டுப் போன தான
பாட்டுப்போல் தமிழர் வாழும்
மண்கெட்டுப் போமே என்றும்
மதிகெட்டு மானம் கெட்டும்
எண்கெட்ட தமிழர் பல்லோர்
பார்ப்பனர்க் கேவ லாகிக்
கண்கெட்டு வீழும் போதோ
கடல்பட்ட தெங்கள் செல்வம் ?
சிங்கத்தை நரிய டிக்கும்
திறமில்லை; எனினும் சிங்கம்
பொங்குற்றே இறந்த தென்றால்
நரிமனம் பூரிக் காதோ ?
எங்குற்றான் செல்வன் என்றே
தமிழர்கள் ஏங்கும் காலை
இங்குற்ற பூணூல் காரர்
எண்ணம் பூரிக்கின் றார்கள்[37]

என்பதாகும்.

புரட்சிக் கவிஞரின் இவ்வுணர்வுகளை மிஞ்சும் வகையில் பெரியாரின் இரங்கலுரை அமைந்துள்ளது. உணர்வுகளின் கொந்தளிப்பாய் அமைந்த அச்செய்தியே பெரியார் பன்னீர்செல்வத்திடம் வைத்திருந்த எதிர்பார்ப்பை உறுதி செய்கின்றது. அச் செய்தி வருமாறு,

நமது உண்மைத் தோழரும், உற்ற துணைவரும், உள்ளும் புறமும் ஒன்றாய் உள்ளவரும், தமிழர் இயக்கத்தில் உறுதியான பற்றுக் கொண்டு அல்லும் பகலும் உழைத்து வந்தவரும் நம்மிடத்தில் களங்கமற்ற அன்பும் பற்றுதலும் விசுவாசமும் கொண்டிருந்தவரும், நினைத்தால் திடுக்கிடும்படி எதிரிகள் நெஞ்சில் எப்பொழுதும் திகிலை உண்டாக்கிக் கொண்டிருந்தவருமான அருமை பன்னீர்செல்வம் அவர்களை, இன்று, காலம் சென்ற பன்னிர்செல்வம் என்று எழுத நேரிட்டதற்கு மனம் பதைக்கிறது! நெஞ்சு திக்கு திக் கென்று அடித்துக் கொள்கிறது! மெய் நடுங்குகிறது! எழுதக்கையோடவில்லை; கண்கலங்கி மறைக்கிறது; கண்ணீர் எழுத்துக்களை அழிக்கிறது!.......

இனி என்ன செய்வது ? தமிழர் இயக்கமானது தோன்றிய நாள்முதல் இப்படியே பல 'தத்துக்களுக்கு ஆளாகி வந்திருக்கிறது என்றாலும் நாளுக்கு நாள் முன்னேறியே வந்திருக்கிற அனுபவந்தான் நமக்கும் தமிழ் மக்களுக்கும் சிறிது ஆறுதல் அளிக்கும் என்று கருதுகிறேன். காலம் சென்ற பன்னீர் செல்வமே! காலம் சென்று விட்டாயா ? நிஜமாகவா ? கனவா ? தமிழர் சாந்தி பெறுவாராக![86]

என்பதாகும்.

பெரியாரின் நண்பராகவும் அவர் அமைத்த போர்ப்படையின் தலைவராகவும் விளங்கிய பன்னீர்செல்வத்தை கலைஞர் இனமீட்பின் அடையாளமாகவே கண்டுள்ளார். ஆண் குழந்தை பிறந்தால் பன்னீர்செல்வம் எனப் பெயர்வைப்பதாகச் செய்த முடிவின்படியே அக்குழந்தைக்குப் பன்னீர்செல்வம் என்றே பெயர் வைத்தனர். சீரோடு வாழ்ந்த அந்தக் குடும்பம் இப்போது சீரழிந்துள்ளது. அந்நிலையில் தன் குழந்தைக்குப் பாடும் தாலாட்டைக் கலைஞர் மிகச் சிறந்த உருவகமாகவே இயற்றியுள்ளார். அப்பாடலுக்கு அமைந்த இசையும், பாடலின் கருத்தும் ஒன்றிணையத் தமிழகத்தின் வீதியெங்கும் ஒலித்த அப்பாடல்,

பூமாலை நீயே
புழுதி மண்மேலே வீணே
வந்தேன் தவழ்ந்தாய் ?
பாராயோ என் பன்னீர் செல்வமே
சீரோடு வாழ்ந்தோம்
வேரோடு சாய்ந்தோம்
ராஜாங்கம் போலே வாழ்ந்த
வாழ்வும் வீழ்ந்தே பாழான
எந்தன் வயிற்றில் பிறந்தாய்
ராஜா நீயேன் பிறந்தாய்

பறவை வீட்டில் நீ பிறந்திருந்தாலும்
பசி நீங்கவே உணவும்
பறந்தோடி வந்திடும்
கோடானு கோடி ஏழை மாந்தர் வாடும்
சீமான்கள் வாழும் நாட்டில் பிறந்தாய்
ராஜா நீயேன் பிறந்தாய் ?[39]

என்பதாகும்.

'சீரோடு வாழ்ந்தோம்; வேரோடு சாய்ந்தோம்' என்ற பகுதி கதைமாந்தரின் வாழ்வோடு மட்டும் தொடர்பு கொண்டதாக அமையவில்லை. மாறாகத் தமிழினத்தின் வாழ்வையும் உருவகமாகக் கொண்டுள்ளதும் எண்ணத்தக்கது. தமிழினத்தின் மீட்சிக்கு உதவுவார் என்ற எதிர்பார்ப்பிற்கு உரியவராய்த் திகழ்ந்த அந்த மாவீரர் பன்னீர் செல்வத்திற்கு இப்பாடல் அழகிய நினைவஞ்சலியாக அமைந்துள்ளது எனில் வியப்பில்லை.

"ஈ.வெ.ராமசாமி என்கின்ற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி, உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப் போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதே பணியாய் இருப்பவன். அந்தத் தொண்டு செய்ய எனக்கு யோக்கியதை இருக்கிறதோ இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணி செய்ய யாரும் வராததினால் நான் அதை மேற்போட்டுக் கொண்டு தொண்டாற்றி வருகிறேன்."[40]

என்ற தந்தை பெரியாரின் தொண்டராய், அண்ணாவன அன்பிற்குரிய தம்பியாய், கலையுலகில் புரட்சி செய்த கலைஞராய்ப் பெருமை பெற்ற கலைஞரின் நெஞ்சம் தமிழால் நிறைந்தது. சங்க இலக்கியங்களில் தோய்ந்தது. திருக்குறளில் திளைத்தது. அதனால் அவரது படைப்புகளில் சுயமரியாதை இயக்கத்தின் மனிதநேயக் கோட்பாடுகள் இடம் பெற்றுள்ளதைப் போலவே தமிழினத்தின் அடையாள மீட்புக்கான முனைப்பும் தலையாய இடத்தைப் பெற்றுள்ளது. உரைநடையில் அவர் கடைப்பிடித்த பல்வேறு உத்திகள், அவரின் தமிழின உணர்வை வெளிப்படுத்திய அதே நேரத்தில் அவரது உரைநடைக்கும் ஒரு தனித் தன்மையை வழங்கியுள்ளன. கலைஞரையும் புரட்சிக் கவிஞரையும் ஒப்பிட்டுக்காணும் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள், அத்தனித்தன்மையை,

"கவிதை மரபிலும், கலைத்துறையிலும் ஒரே நோக்குடையவர்களான கவிஞரும். கலைஞரும் அவரவருக்கே உரிய வகையான மனவளம் காட்டி. எழில் நலம் சேர்த்துத் தமிழ் வளம் பெருக்கும் தொண்டினைச் செய்தவர் ஆவர். கவிஞர் மரபில் இன்று பாவேந்தர் பரம்பரையினர் ஒளிர்வதைப் போன்றே, உரைநடையிலும், உரையாடல் தீட்டுவதிலும், திரைப்படக் கலைத் தொண்டிலும் கலைஞர் வழி என்று சொல்லிப் பெருமைப் படுவோர் பலரைக் கண்டு வருகிறோம்."[41]

எனப்பாராட்டுவதும் இங்கே எண்ணத்தகும்.

அடிக்குறிப்புகள்

1. பேராசிரியர்.க.அன்பழகன், தமிழ்க்கடல் அலையோசை பரவும் தமிழ்மாட்சி ப.34
2. பேராசிரியர்.க.அன்பழகன், ப.34
3. பேராசிரியர்.க.அன்பழகன், மேற்கோள் ப.206
4. பேராசிரியர்.க.அன்பழகன், மேற்கோள் ப.206
5. தமிழ்விடுதூது 69,70
6. தென்னிந்திய இந்தி பிரசார சபை. எஸ்.மகாலிங்கம் (த.ஆ) பண்டைய பாரதத்தில் பசுவின் புலால் பக்.39-40
7. க.த.திருநாவுக்கரசு,. சான்றோர் கண்ட திருவள்ளுவர் ப.228
8. பேராசிரியர்.க.அன்பழகன் மே.கு.நூல்.ப.81
9. பி.சுந்தரம்பிள்ளை, மனோன்மணியம், பாயிரம்
10. பி.சுந்தரம்பிள்ளை, மனோன்மணியம், பாயிரம்
11. மா.இளஞ்செழியன், தமிழன் தொடுத்த போர், ப.26
12. சாமி.சிதம்பரனார், தமிழர் தலைவர் ப.174
13. கலைஞர் மு.கருணாநிதி, நெடுஞ்சுக்கு நீதி. தொகுதி I பக்.43-44
14. கலைஞர் மு.கருணாநிதி, நெடுஞ்சுக்கு நீதி. தொகுதி I பக்.94
15. கலைஞர் மு.கருணாநிதி, நெடுஞ்சுக்கு நீதி. தொகுதி I பக்.193
16. தொல்புறத்திணை 12
17. புறப்பொருள் வெண்பாமாலை தும்பை கொளு 25
18. புறம் 278
19. பாரதிதாசன் கவிதைகள் தொகுதி
20. கலைஞர் மு.கருணாநிதி, பரப்பிரம்மம்
21. கலைஞர் மு.கருணாநிதி, பரப்பிரம்மம்
22. கலைஞர் மு.கருணாநிதி, பரப்பிரம்மம்
23. கலைஞர் மு.கருணாநிதி, பரப்பிரம்மம்
24. கலைஞர் மு.கருணாநிதி, பரப்பிரம்மம்
25. கலைஞர் மு.கருணாநிதி, பரப்பிரம்மம்
26. புறம் 65 : 9-12
27. புறம் 66 : 3-8
28. கலைஞர் மு.கருணாநிதி, பரப்பிரம்மம் காட்சி 21.
29. கலைஞர் மு.கருணாநிதி, பரப்பிரம்மம் காட்சி 21.
30. கலைஞர் மு.கருணாநிதி, பரப்பிரம்மம் காட்சி 21.
31. கலைஞர் மு.கருணாநிதி, பரப்பிரம்மம் காட்சி 21.
32. கலைஞர் மு.கருணாநிதி, பரப்பிரம்மம் காட்சி 21.
33. கலைஞர் மு.கருணாநிதி, பரப்பிரம்மம் காட்சி 21.
34. மு.தமிழ்க்குடிமகன், கலைஞரும் பாவேந்தரும் மேற்கோள் ப.50
35. வே.ஆனைமுத்து (ப.ஆ) பெரியார் சிந்தனைகள், தொகுதி 3 ப.1917
36. அமுதன் அடிகள் தமிழர் செல்வம் ப.83
37. பாரதிதாசன் கவிதைகள் தொகுதி 2 பன்னீர்செல்வம் ப.117
38. வே.ஆனைமுத்து, மு.கு.நூல் பக்.1922-1923
39. சிலோன் விஜயேந்திரன் (தொ.ஆ) கலைஞர் திரை இசைப்பாடல்கள் ப.43
40. வே.ஆனைமுத்து மு.கு.நூல் தொகுதி 1.
41. பேராசிரியர்.க.அன்பழகன், தமிழ்க்குடிமகன், கலைஞரும் பாவேந்தரும், முன்னுரை.

கலைஞர் நூல்களின் பட்டியல்

கலைஞர்
நூல்களின் பட்டியல்

கலைஞர் நூல்கள்

தொகுப்பு : இரா. பாவேந்தன்
அ. புவியரசு

1. கிழவன் கனவு (1945),
   சிறுகதை, அஜீஸ் பதிப்பகம், திருவாரூர், பக். 24.
2. பலிபீடம் நோக்கி (1947),
   சரித்திரக்கதை, அரிமலைப் பதிப்பகம், திருச்சி, பக்.32.
3. பிள்ளையோ பிள்ளை (1948),
   சிறுகதை, செந்தமிழ்ப் பதிப்பகம், புதுக்கோட்டை, பக்.30.
4. அறப்போர் (1949),
   சொற்பொழிவு, அறிவுப் பண்ணை, சென்னை, பக்.19.
5. பூந்தோட்டம் (1951),
   சொற்பொழிவு, திராவிடப் பண்ணை, திருச்சி, பக்.24.
6. உணர்ச்சி மாலை (1951),
   கட்டுரைத் தொகுப்பு, கருணாநிதி பதிப்பகம், சென்னை. பக்.48.
7. தூக்கு மேடை (1951)
   நாடகம், திராவிடன் பதிப்பகம், வேலூர் (வ.ஆ) பக்.144.
8. தப்பிவிட்டார்கள் (1952),
   சிறுகதைத் தொகுப்பு, திராவிடன் பதிப்பகம், வேலூர் (வ.ஆ), பக்.32.
9. பெருமூச்சு (1952)
   கட்டுரை, இளங்கோ பதிப்பகம், மாயூரம், பக்.78.
10. களத்தில் கருணாநிதி, (1952)
    கட்டுரைகள், இளங்கோ பதிப்பகம், மாயூரம், பக்.80.
11. இரத்தக் கண்ணீர் (1953),
    நாடகம், திராவிடப் பண்ணை, திருச்சி, பக். 184.
12. ஆறுமாதக் கடுங்காவல் (1953),
    கட்டுரைகள், திராவிடப்பண்ணை, திருச்சி, பக்.220.
13. திரும்பிப்பார் (1953),
    கதை வசனம், திராவிடப் பண்ணை, திருச்சி, பக்.118.
14. சிந்தனை ஆழி (1953)
    சிந்தனைத்துளிகள், இளங்கோ பதிப்பகம், மாயூரம், பக்.79.
15. விடுதலைக் கிளர்ச்சி (1953),
    கட்டுரை, திராவிடப் பண்ணை, திருச்சி, இரண்டாவது பதிப்பு 1953 பக் IV + 67.
16. பெரிய இடத்துப் பெண் (1953),
    சிறுகதை, திராவிடன் பதிப்பகம், வேலூர், பக்.48.

17. நச்சுக்கோப்பை (1954),
நாடகம், திராவிடன் பதிப்பகம், வேலூர் (வ.ஆ.), நான்காம் பதிப்பு .பக்.64.
18. முல்லைக் கொல்லை (1954),
சொற்பொழிவு, கே.ஆர். நாராயணன், சென்னை, பக்.16.
19. கண்ணீர்த் துளிகள் (1954),
சொற்பொழிவு, கே.ஆர். நாராயணன், சென்னை, பக்.16.
20. ஆறு பிணங்கள் (1954),
சொற்பொழிவு, கே.ஆர்.நாராயணன்,சென்னை, பக். 16.
21. தாய்மை (1956),
சிறுகதைத் தொகுப்பு, மோகன் பதிப்பகம், சென்னை, பக்.87.
22. கண்ணடக்கம் (1957),
சிறுகதை, திராவிடப் பண்ணை, திருச்சி. பக். 79.
23. தேனலைகள் (1958),
சிறுகதைத் தொகுப்பு,முத்துவேல் பதிப்பகம்,திருச்சி, பக்.105.
24. சொல்லோவியம் (1958),
சொற்பொழிவு, ரெத்தினா பதிப்பகம், திருச்சி, பக்.170.
25. உதய சூரியன் (1959),
நாடகம், முத்துவேல் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி, இரண்டாவது பதிப்பு 1959, பக்.128.
26. கலைஞர் கருணாநிதியின் சிறுகதைகள் (1959),
சிறுகதை, முத்துவேல் பதிப்பகம், திருச்சி, பக். 127.
27. மணி மகுடம் (1960),
நாடகம், முத்துவேல் பதிப்பகம், திருச்சி. இரண்டாவது பதிப்பு, பக்.149.
28. ஒரே முத்தம் (1964),
நாடகம், பாரி நிலையம், சென்னை, இரண்டாவது பதிப்பு பக்.128.
29. சிலப்பதிகாரம் நாடகக் காப்பியம், (1967),
அஞ்சுகம் பதிப்பகம், சென்னை, பக்.72.
30. திருவாளர் தேசியம் பிள்ளை (1967),
நாடகம், அன்பு நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு பக்.95.
31. கருணாநிதியின் கருத்துரைகள் முதல்தொகுப்பு (1967),
கருத்துக்களின் தொகுப்பு, கலைமன்றம், சென்னை, பக்.95.
32. நாடும் நாடகமும் (1968),
சிறுகதை, திராவிடப் பண்ணை, திருச்சி. இரண்டாவது பதிப்பு பக்.72.
33. வெள்ளிக்கிழமை (1968)
நாவல், திராவிடப் பண்ணை, திருச்சி. இரண்டாவது பதிப்பு பக்.178.
34. சுருளிமலை (1968),
நாவல், திராவிடப் பண்ணை, திருச்சி, இரண்டாவது பதிப்பு பக்.195.

35. As we March on (1970),
(Tr.) speech, Rising Sun Publications, Madras, pp.22.

36. Flame and other stories (1970)
(Tr.). Short stories, Rising Sun Publications, Madras, India, pp.27.

37. Pearls (1970)
(Tr). A collection of Poems, T.G. Narayanaswamy, Rising Sun Publications, Madras, India. pp

38. மதுரைப் பல்கலைக்கழக நான்காவது பட்டமளிப்பு விழாப் பேருரை(1970),
சொற்பொழிவு, மதுரைப் பல்கலைக்கழகம், பக்.8.

39. நமது விளக்கம் (1971),
சொற்பொழிவு, செய்தி விளம்பரத்துறை, தமிழ்நாடு அரசு, பக். 59.

40. கலைஞரின் கருத்துரைகள் (1971),
கருத்துரைகள், பூங்கொடி பதிப்பகம், சென்னை, தொகுப்பு வி.எல். ராஜேந்திரன், பக்.96.

41. பிள்ளை ஒரு செல்வம் (1971),
சொற்பொழிவு, தமிழ்நாடு குடும்பநலத்துறை, வெளியீடு, சென்னை.

42. கலைஞரின் கடிதங்கள் (1971),
கடிதங்கள் தொகுப்பு, சென்னை மாவட்ட தி.மு.க. சென்னை, பக்.31.

43. நமது நிலை (1971),
சொற்பொழிவு, செய்தி விளம்பரத்துறை, தமிழ்நாடு அரசு, பக்.58.

44. கவியரங்கில் கலைஞர் (1971),
கவிதைத் தொகுப்பு, கலைஞர் நூலகம், சென்னை, பக்.187.

45. நமது குரல் (1971),
சொற்பொழிவு, செய்தி விளம்பரத்துறை, தமிழ்நாடு அரசு, பக்.35.

46. தி.மு.க. கேட்பது என்ன (1972),
சொற்பொழிவு, தி.மு.கழகத் தலைமை நிலையம், சென்னை, பக்.25.

47. கலைஞரின் உவமை நயங்கள் (1972),
பட்டிமன்றச் சொற்போர் தொகுப்பு, பி.எல். ராஜேந்திரன் பூங்கொடி பதிப்பகம், சென்னை, பக்.80.

48. கலைஞரின் போர் முழக்கம் (1972)
சொற்பொழிவு, மக்கள் மன்றம், மதுரை. பக்.32.

49. இலட்சியப் பயணம் (1972),
சொற்பொழிவு, தமிழரசு இதழின் இலவச இணைப்பு, பக்.80.

50. நம்பிக்கை வாக்கு (1972),
சொற்பொழிவு, செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, பக்.55.

51. நாம் (1972),
கட்டுரை, தலைமை நிலையம், தி.மு.கழகம், பக்.16.

52. நமது கோரிக்கை (1972),
சொற்பொழிவு, தமிழரசு இதழின் இலவச இணைப்பு, பக்.52.

53. நமது காவலர் (1973),
சொற்பொழிவு, தமிழரசு இதழின் இலவச இணைப்பு, பக்.39.

54. இனியவை இருபது (1973),
பயணநூல், புத்தகச் சோலை, சென்னை, பக்.221.

55. யார் பொறுப்பு ? (1973),
கட்டுரை, பிரச்சாரத்துறை, தி.மு.க. தலைமை நிலையம், பக்.20.

56. கருத்தோவியம் (1973),
சொற்பொழிவு, தமிழரசு இதழின் இலவச இணைப்பு, பக்.40.

57. நிலை விளக்கம் (1973),
சொற்பொழிவு, செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, பக்.14.

58. நிலை விளக்கம் (1973),
சொற்பொழிவு, செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, பக்.51.

59. இருளும் ஒளியும் (1973),
சொற்பொழிவு, தமிழரசு இதழின் இலவச இணைப்பு, பக்.61.

60. மாநில சுயாட்சி (1974),
சொற்பொழிவு, செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, பக்.68.

61. உரிமைக்குரல், (1974),
சொற்பொழிவு, செய்தி–மக்கள்தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, பக்.63.

62. ரோமாபுரிப் பாண்டியன் (1974),
நாவல், தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, பக்.706.

63. மேடையிலே வீசிய மெல்லியப் பூங்காற்று, (1974),
சொற்பொழிவு, தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை. பக்.186.

64. புதையல் (1975),
நாவல், தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, பக்.380.

65. வாளும் கேடயமும் (1975),
சொற்பொழிவு, தி.மு.கழக வெளியீடு, சென்னை, பக்.64.

66. மாவட்ட ஆட்சியாளர் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டு உரை(1975)
சொற்பொழிவு.

67. சூளுரை (1975),
சொற்பொழிவு, கடலோசை பதிப்பகம், சென்னை, பக்.231.

68. நெஞ்சுக்கு நீதி–முதல் பாகம் (1975),
வாழ்க்கை வரலாறு, தினமணி கதிர் வெளியீடு, பக்.755.

69. வேதனைச் சிறையினின்றும் விடுதலை பெற . . . (1975),
கட்டுரை, தமிழ்நாடு குடும்ப நலத்துறை வெளியீடு, பக்.7.

70. அரும்பு (1978),
குறுநாவல்களின் தொகுப்பு, தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை. பக்.89.

71. வான்கோழி (1978),
நாவல், மேகலா மாத இதழ், பக்.94.

72. சிறையில் பூத்த சின்னச் சின்ன மலர்கள் (1978),
சிந்தனைத்துளிகள், மோனா பப்ளிகேஷன்ஸ், சென்னை, பக்.35.

73. வண்டிக்காரன் மகன் (1978),
திரைக்கதை–வசனம், கனி பதிப்பகம், சென்னை, பக்.86.

74. பரதாயணம் (1978),
நாடகம், தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, பக்.52.

75. இந்தியாவில் ஒரு தீவு (1978),
வரலாறு, மோனா பப்ளிகேஷன்ஸ், சென்னை. பக்.81.

76. கலைஞரின் உவமைக் களஞ்சியம், (1978),
உவமைகள் தொகுப்பு, வண்ணக் களஞ்சியம், சென்னை, தொகுப்பு; நாகை தருமன், பக்.88.

77. புனித ராஜ்யம் (1979),
நாடகம், தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, பக்.84.

78. எம்.ஜி.ஆர். மீது ஊழல் குற்றச்சாட்டுகள் (1979),
சொற்பொழிவு, தி.மு.க. தலைமைக்கழக வெளியீடு,

79. ஒரே இரத்தம் (1980),
நாவல், தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, பக்.233.

80. பெரியார் பிறவாமலிருந்தால் . . . ? (1981),
சொற்பொழிவு, திராவிடர் கழக வெளியீடு, சென்னை. பக்.24.

81. இலங்கைத் தமிழா ! இது கேளாய் (1981),
சொற்பொழிவு, கடிதங்களின் தொகுப்பு, பாரதி நிலையம், சென்னை, பக்.128.

82. நீதிகேட்டு நெடிய பயணம் (1981),
சொற்பொழிவு, பாரதி நிலையம், சென்னை,

83. பேசும் கலை வளர்ப்போம் (1981),
கட்டுரைத் தொகுப்பு, பாரதி பதிப்பகம், சென்னை, பக்.90.

84. தமிழின இளைஞர்களுக்கு அழைப்பு (1981),
சொற்பொழிவு, பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை, பக்.36.

85. முடியாத தொடர்கதை (1982),
சிறுகதைகள், தமிழ்ேலாசைப் பதிப்பகம், சென்னை, பக்.90,

86. வைரமணிகள் (1982),
கருத்துத் தொகுப்பு, பாரதி பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு பக்.48.

87. பூந்தோட்டமும் இனமுழக்கமும் (1982),
கட்டுரை, பாரதி பதிப்பகம், சென்னை, பக்.32.

88. கலைஞர் கருணாநிதியின் சிறுகதைகள் (1982),
சிறுகதைத் தொகுப்பு, பாரதி பதிப்பகம், சென்னை, பக்.68.

89. யாரால் ? யாரால் ? யாரால் ? (1982),
கடிதங்கள், உரைகளின் தொகுப்பு, பாரதி நிலையம், சென்னை, பக்.50.

90. ஒளி படைத்த கண்ணினாய் வா ! வா ! வா !,
சொற்பொழிவுகளின் தொகுப்பு, பக்.180.
91. கலைஞர் தொடுத்த கணைகள் (1982),
சட்டமன்றப் பேச்சு, தி.மு.க.வெளியீடு, சென்னை, பக்.170.
92. கலைஞரின் கவிதைகள் (1982),
கவிதை, பாரதி நிலையம், சென்னை, பக்.372.
93. தொடங்கினோம் தொடர்வோம் (1983),
சொற்பொழிவு, தி.மு.க. இளைஞர் அணி, சென்னை, பக்.30.
94. தி.மு.க. ஆட்சியில் மாநில சுயாட்சித் தீர்மானம் (1983),
தீர்மானமும் சொற்பொழிவும், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, பக்.47.
95. தென்பாண்டிச் சிங்கம் (1983),
நாவல், தமிழ்க் கனி பதிப்பகம், சென்னை, பக்.488.
96. இன உணர்வு (1983),
சொற்பொழிவு, தி.மு.க. இளைஞர் அணி, சென்னை, பக்.22.
97. கொள்கையில் கோகினூர் (1983),
சொற்பொழிவு, தி.மு.க. இளைஞர் அணி, சென்னை, பக்.57.
98. அண்ணாஜோதி (1984),
கடிதம், தி.மு.க. இளைஞர் அணி, சென்னை, பக்.18.
99. இந்திய ஜனநாயகம் எங்கே போகிறது (1984),
சொற்பொழிவு, திராவிட முன்னேற்றக் கழகம்,சென்னை, பக்.42.
100. கலைஞரின் சொல்நயம் (1984),
கருத்துரைகளின் தொகுப்பு, பாரதி பதிப்பகம்,சென்னை, பக்.24.
101. முக்கனி (1984),
சொற்பொழிவு, தி.மு.க. இளைஞர் அணி, சென்னை.
102. இன உணர்வு (1984),
சொற்பொழிவ. தி.மு.க. இளைஞர் அணி, சென்னை, பக்.22.
103. கலைஞரின் நவமணிகள் (1984),
கருத்துரைகளின் தொகுப்பு, பாரதி பதிப்பகம், சென்னை, பக்.26.
104. எம்.ஜி.ஆர். ஆட்சியில் உள்ளாட்சி மன்ற ஊழல்களும் உதவாக்கரை ஆணைகளும்
சொற்பொழிவு, தலைமைக்கழக வெளியீடு, திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, பக்.40.
105. தமிழனுக்கு ஒரு நாடு – தமிழ் ஈழ நாடு (1985),
சொற்பொழிவு, திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, பக்.63.
106. மகான் பெற்ற மகன் (1985),
நாடகம், பாரதி பதிப்பகம், சென்னை, பக்.187.
107. போர் முரசு (1985),
சொற்பொழிவு, பாரதி பதிப்பகம், சென்னை, பக்.64.

108. அக்கினிக் குஞ்சு (1985),
சொற்பொழிவு, திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை. பக்.32.

109. எட்டப்பர்கள் ! எச்சரிக்கை ! (1985),
சொற்பொழிவு, தலைமைக் கழக வெளியீடு, திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை இரண்டாவது பதிப்பு பக்.50.

110. ஓர் இனமானப்போர் (1985),
சொற்பொழிவு, தலைமைக்கழக வெளியீடு, திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, பக்.98.

111. தலைதாழாச்சிங்கம் தந்தை பெரியார் (1985),
சொற்பொழிவு, திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, பக்.44.

112. கழகத்துப் பரணி (1985),
கடிதங்கள், தலைமைக்கழக வெளியிடு, திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, பக்.68.

113. வீரமணி வென்றிடுக, வெற்றி மணி ஒலித்திடுக (1985),
சொற்பொழிவு, தி.மு.க.தலைமை நிலையம், சென்னை. பக்.14.

114. தலைவர் கலைஞர் மேதின முழக்கம் (1985),
சொற்பொழிவு, தலைமைக் கழக வெளியீடு, திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, பக்.23.

115. மனோகரா (1985),
நாடக வசனம், பாரதி பதிப்பகம், சென்னை,

116. தலைவர் கலைஞர் மேலவைப் பேருரை (1985),
சொற்பொழிவு, தலைமைக் கழக வெளியீடு, தி.மு.க கழகம், சென்னை, பக்.40.

117. குறளோவியம் (1985),
தமிழ்க் கனி பதிப்பகம், சென்னை, பக்.632.

118. இலக்கிய விருந்து (1985),
சொற்பொழிவு, கஸ்தூரி பதிப்பகம், சென்னை, பக்.51.

119. கலைஞர் கடிதம், தொகுதி-1-10 (1986),
கடித இலக்கியம், அபிராமி நிலையம், சென்னை, பக். VII + 148.

தொகுதி–2,
கடித இலக்கியம், சென்னை, பக். VII + 148.

தொகுதி–3, (1986),
கடித இலக்கியம், அபிராமி நிலையம் சென்னை, பக். VII + 180.

தொகுதி–4, (1986),
கடித இலக்கியம், அபிராமி நிலையம், சென்னை, பக். VII + 180.

தொகுதி–5, (1986)
கடித இலக்கியம், அபிராமி நிலையம், சென்னை, பக். VII + 180.

தொகுதி–6, (1986),
கடித இலக்கியம், அபிராமி நிலையம், சென்னை, பக். VII + 180.

தொகுதி–7, (1986),
கடித இலக்கியம், அபிராமி நிலையம், சென்னை, பக். VII + 172.

தொகுதி–8, (1986),
கடித இலக்கியம், அபிராமி நிலையம், சென்னை, பக். VII + 198.

தொகுதி–9, (1986),
கடித இலக்கியம், அபிராமி நிலையம், சென்னை, பக். VII + 190.

தொகுதி–10, (1986),
கடித இலக்கியம், அபிராமி நிலையம், சென்னை, பக். VII + 180.

120. புள்ளிகள் (1986),
சொற்பொழிவு, தலைமைக்கழக வெளியீடு, திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, பக்.22.

121. எம்.ஜி.ஆர். ஆட்சியில் அண்ணா அறிவாலயத்துக்குத் தடையா ?(1986),
சொற்பொழிவு, தலைமைக்கழக வெளியீடு, திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, பக்.22.

122. திசைதிருப்பும் படலம் (1986),
சொற்பொழிவு, தலைமைக்கழக வெளியீடு, திராவிட முன்னேற்றக்கழகம், சென்னை, பக்.26.

123. கடவுள் மீது பழி (1986),
சொற்பொழிவு, தலைமைக்கழக வெளியீடு, திராவிட முன்னேற்றக்கழகம், சென்னை, பக்.24.

124. கலைஞரின் சிந்தனைச் சிதறல்கள் (1986),
சிந்தனைத்துளிகள், பாரதி பதிப்பகம், சென்னை, பக்.32.

125. ஒதுக்கிய நிதியினை எவரோ (1986),
சொற்பொழிவு, தலைமைக்கழக வெளியீடு, திராவிட முன்னேற்றக்கழகம், சென்னை, பக்.51.

126. கொழும்பு ஒப்பந்தம் (1987),
சொற்பொழிவு, திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, பக்.24.

127. சங்கத் தமிழ் (1987),
சங்கத் தமிழுக்கு, கலைஞரின் கவிதை விளக்கம் ராக்ஃபோர்ட் பப்ளிகேஷன்ஸ் (பி) லிட், சென்னை, பக்.484.

128. அமைதிப்படையா ? அமளிப் படையா ? (1987),
வெளியீடு, திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, பக்.28.

129. சீறாப்புராணம் (1987),
சொற்பொழிவு, திராவிட முன்னேற்றக்கழகம், சென்னை, இரண்டாவது பதிப்பு பக்.23.

130. உண்மையின் உரத்த குரல் (1988),
சொற்பொழிவு, தலைமைக்கழக வெளியீடு, திராவிட முன்னேற்றக்கழகம், சென்னை, பக்.12.

131. இது ஒரு தொடக்கம் (1988),
கடிதம், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, பக்.38.

132. பொன்னர் சங்கர், அண்ணன்மார் வரலாறு, (1988),
வரலாற்று நாவல், கலைக்கனிப் பதிப்பகம், சென்னை. பக்.543.

133. கலைஞர் திரை இசைப்பாடல்கள் (1989),
திரைஇசைப் பாடல்கள், தொகுப்பு சிலோன் விஜயேந்திரன், காந்தளகம், சென்னை., பக்.53.

134. சொன்னதைச் செய்வோம் (1989),
சொற்பொழிவு, செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை, பக்.47.

135. எழுச்சிக் கோலம் காண்போம் (1989),
சொற்பொழிவு, செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை, பக்.39.

136. ஆறுமாத கடுங்காவல் (1990),
வரலாற்று நூல், பாரதி பதிப்பகம், சென்னை, பக்.164.

137. ஆகஸ்ட், நவம்பர் (1990),
கடிதமும் சொற்பொழிவும், தலைமைக்கழக வெளியீடு, திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை பக்.35.

138. மதுப்பழக்கம் ஒரு சமூகப் பிரச்சினை (1990),
சொற்பொழிவு, தலைமைக் கழக வெளியீடு, திராவிட முன்னேற்றக்கழகம், சென்னை, பக்.20.

139. அடித்தட்டு மக்களுக்கான அமைதிப் புரட்சி (1990),
சொற்பொழிவு, செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, பக்.30.

140. கண்ணீரே கவசம் (1990),
கடிதம், பேட்டிகளின் தொகுப்பு, திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, பக்.34.

141. நாட்டு விடுதலையும் நமது சமுதாய விடுதலையும் (1990),
சொற்பொழிவு, திராவிட முன்னேற்றக் கழகம். சென்னை, பக்.15.

142. பாயும்புலி பண்டாரக வன்னியன் (1991),
வரலாற்று நாவல், ராக்போர்ட் பப்ளிகேஷன்ஸ் (பி) லிட், சென்னை, பக்.467.

143. அக்கினி பிரவேசம் (1991),
சொற்பொழிவு, செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.

144. கலைஞர் கருணாநிதியின் சிறுகதைகள் (1991),
சிறுகதைத் தொகுப்பு, பாரதி பதிப்பகம், சென்னை. நான்காம் பதிப்பு பக்.279.

145. கண்ணீர், வியர்வை, இரத்தம் (1992),
சொற்பொழிவு, தலைமைக்கழக வெளியீடு, திராவிட முன்னேற்றக்கழகம், சென்னை, பக்.27.

146. பொங்கி வரும் புது வெள்ளம் (1993),
சொற்பொழிவு, திருமகள் நிலையம், சென்னை, மூன்றாம் பதிப்பு பக்.88.

147. பாபர் மசூதி (1993)
சொற்பொழிவு, தி.மு.க. இளைஞர் அணி, சென்னை, பக்.38.
148. களம்புக வாரீர் ! (1993),
சொற்பொழிவு, தி.மு.க. இளைஞர் அணி, சென்னை, பக்.49.
149. கேரளத்து வள்ளலார் (1994),
சொற்பொழிவு, திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, பக்.24.
150. வேரில் வெந்நீர் (1994),
கடிதம், தி.மு.க. இளைஞர் அணி, சென்னை, பக்.32.
151. இலக்கிய முழக்கம் (1994),
சொற்பொழிவு, தி.மு.க. இளைஞர் அணி, சென்னை, பக்.55.
152. கலைஞரின் சின்னச் சின்ன மலர்கள் (1994),
கருத்துத் தொகுப்பு, பாரதிபதிப்பகம், சென்னை, பக்.248
153. கலைஞரின் முத்தமிழ் (1994),
சிந்தனைத்துளிகள், பாரதிபதிப்பகம், சென்னை, பக்.32.
154. மேடையில் வீசிய மெல்லியப் பூங்காற்று (1995),
பாரதி பதிப்பகம், சென்னை, பக்.228.
155. டாக்டர் அம்பேத்கார் (1995),
சொற்பொழிவு, தலைமைக்கழக வெளியீடு, திராவிட முன்னேற்றக்கழகம், சென்னை,
156. கதையினிலோ (1995),
சிறுகதைத்தொகுப்பு, திருமகள் நிலையம், சென்னை, பக்.177.
157. வரலாறு படைப்போம் வாரீர் (1996),
சொற்பொழிவு, தலைமைக் கழக வெளியீடு, சென்னை, பக்.69.
158. மலரும் நினைவுகள் (1996),
கட்டுரைகள், திருமகள் நிலையம், சென்னை, பக்.123.
159. இளைய சமுதாயம் எழுகவே (1996),
சொற்பொழிவுகளின் தொகுப்பு, திருமகள் நிலையம், சென்னை, பக்.75.
160. திருக்குறள் (1996),
உரை, திருமகள் நிலையம், சென்னை, பக்.360.
161. மணமக்களுக்கு கலைஞர் வாழ்த்து (1996),
தொகுப்பு பி.எல். ராஜேந்திரன், சங்கீதா பதிப்பகம், சென்னை, பக்.200.
162. கலைஞரின் சொல்நயம் (1996),
பாரதி பதிப்பகம், சென்னை, பக்.24.
163. போர் முரசு (1996),
சொற்பொழிவு, பாரதி பதிப்பகம், சென்னை, பக்.64.
164. நமக்கு நாமே (1997),
சொற்பொழிவு, செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை, பக்.62.
165. நெஞ்சுக்கு நீதி தொகுதி III (1997),
வாழ்க்கை வரலாறு, திருமகள் நிலையம், சென்னை, பக்.612.

166. வழிமேல் விழி வைத்து (1997),
சொற்பொழிவுகளின் தொகுப்பு, திருமகள் நிலையம், சென்னை, பக்.201

167. கையில் அள்ளிய கடல் (1998),
பேட்டிகளின் தொகுப்பு, திருமகள் நிலையம், சென்னை. பக்.365.

168. இந்தியா ? இந்தியாவா ?
சொற்பொழிவு, திராவிட முன்னேற்றக்கழகம், சென்னை, பக்.24.

169. நான்மணிமாலை,
சிறு நாடகங்களின் தொகுப்பு, தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, பக்.48.

170. ஊழல் நாயகன்,
சொற்பொழிவு, அஞ்சுகம் பதிப்பகம், மதுரை, பக்.32.

171. வாழ்வெனும் பாதையில்,
கவியரங்கக் கவிதை, பக்.10.

172. புதிய கல்வித் திட்டத்தில் இந்தித் திணிப்பு ஏழைகள் புறக்கணிப்பு
சொற்பொழிவு, தலைமைக் கழக வெளியீடு, தி.மு.கழகம், சென்னை, பக்.17.

173. ஒரு மரம் பூத்தது,
நாவல், மேகலா மாத இதழ், சென்னை, பக்.90.

174. Trumpet in dawn
சொற்பொழிவு - ஆங்கில வடிவம், வலம்புரிஜான், சென்னை, பக்.20.

175. குடும்பத்தின் நல்விளக்கு
சொற்பொழிவு, தமிழ்நாடு குடும்ப நலத்துறை வெளியீடு, சென்னை, பக்.10.

176. மந்திரி குமாரி
திரைக் கதைவசனம், ஸ்ரீமகள் விலாசம்பிரஸ், சென்னை, பக்.32.

177. பராசக்தி
திரைக்கதை வசனம், ஸ்ரீமகள் அச்சகம், சென்னை 1, பக்.56.

178. எச்சரிக்கை தேவை ! எழுச்சி தேவை,
கடிதம், சொற்பொழிவு தீர்மானம், தி.மு.க. தலைமை நிலையம், சென்னை, பக்.23.

நன்றி : திருமிகு இளமுருகு பொற்செல்வி
தமிழ்.கா.சு. நூலகம், குளித்தலை, திருச்சிமாவட்டம், தமிழ்நாடு.

கட்டுரையாளர் முகவரி

1. அருள்தந்தை அமுதன் அடிகள்
   தனிநாயக அடிகள் இதழியல் கல்லூரி, தமிழ் இலக்கியக்கழகம்,
   திருச்சிராப்பள்ளி - 1.
2. முனைவர்.ம.வீ.பச்சையப்பன்
   முதல்வர் (ஓய்வு)
   5, எம்.ஜி.ஆர். தெரு,
   பம்மல் அண்ணாநகர்,
   சென்னை - 75.
3. முனைவர்.பா.மாசிலாமணி
   தேர்வு நிலை தமிழ் விரிவுரையாளர்
   புட்பம் கல்லூரி, பூண்டி
   தஞ்சை மாவட்டம்.
4. முனைவர்.கு.வெ.பாலசுப்பிரமணியன்
   பேராசிரியர்.இலக்கியத்துறை
   தமிழ்ப் பல்கலைக்கழகம்
   தஞ்சாவூர் - 5.
5. முனைவர்.அ.அந்தோனிகுருசு
   தமிழ்த்துறை
   தூயவளனார் கல்லூரி
   திருச்சிராப்பள்ளி.
6. முனைவர்.சா.உதயசூரியன்
   அறிவியல் தமிழ்த்துறை
   தமிழ்ப் பல்கலைக்கழகம்
   தஞ்சாவூர் - 5.
7. முனைவர்.மோ.தமிழ்மாறன்
   தமிழ்த்துறைத் தலைவர்
   திறந்தவெளிப் பல்கலைக்கழகம்
   மானச கங்கோத்திரி
   மைசூர்
   கர்நாடக மாநிலம்
8. முனைவர்.இரா.சக்குபாய்
   தமிழ்த்துறைத் தலைவர்,
   அரசு கலைக் கல்லூரி
   திருச்சி - 22.
9. முனைவர்.வே.இராமசாமி
   ஆங்கிலப் பேருரையாளர்
   பெரியார் ஈ.வே.ரா.கல்லூரி
   திருச்சி - 23.
10. முனைவர்.வ.குருநாதன்
    இலக்கணப் பேராசிரியர்
    இலக்கியத்துறை
    தமிழ்ப் பல்கலைக்கழகம்
    தஞ்சாவூர் - 5.

11. முனைவர்.சண்முக.செல்வகணபதி
தேர்வு நிலை தமிழ் விரிவுரையாளர்
அரசர் கல்லூரி
திருவையாறு.

12. முனைவர்.அர.அப்துல் ஜப்பார்
இசுலாமியத் தமிழ் சிறப்பு ஆய்வாளர்
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 5.

13. முனைவர்.தமிழண்ணல்
ஏரகம்
சதாசிவன் நகர் முதன்மைச் சாலை
மதுரை - 20

14. முனைவர்.க.திலகவதி
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 5.

15. முனைவர்.சரளா இராசகோபாலன்
தேர்வுநிலை தமிழ் விரிவுரையாளர்
இராணிமேரி கல்லூரி
சென்னை.

16. முனைவர்.தி.முருகரத்தனம்
அறவாழிநகர்
பல்கலை நகர் அஞ்சல்
மதுரை - 21.

17. முனைவர்.க.முத்துச்சாமி
தேர்வுநிலை தமிழ் விரிவுரையாளர்
மன்னர் கல்லூரி
புதுக்கோட்டை.

18. மு.அன்புச்செல்லி
ஆய்வு மாணவி
2, சாமிசன்னதித்தெரு
திருவையாறு

19. முனைவர்.திருமதி.மீனாட்சி முருகரத்தினம்
துறைத்தலைவர்
அஞ்சல் வழிக் கல்லூரி
ம.கா.பல்கலைக்கழகம்
மதுரை - 21.

20. முனைவர்.கா.செல்லப்பன்
இயக்குநர்
ஆங்கிலப் பயிற்சி இயக்குநரகம்
சென்னை - 6.

21. முனைவர்.தே.ஞானசேகரன்
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை

பாரதியார் பல்கலைக்கழகம்
கோவை.

22. முனைவர்.ஆ.நாராயணசாமி
தேர்வுநிலை தமிழ் விரிவுரையாளர்
பெரியார் ஈ.வெ.ரா.கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 23.

23. முனைவர்.சு.ஆனந்தன்பிள்ளை
தமிழ் பேருரையாளர்
பெரியார் ஈ.வெ.ரா.கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 23.

24. முனைவர்.தா.ஈசுவரப்பிள்ளை
இணைப் பேராசிரியர்
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 5.

25. திரு.ஜோசப் குமார்
வாழ்வுக் காப்புறுதி நிறுவனம் (L.I.C)
தஞ்சாவூர்.

26. முனைவர்.கே.ஏ.சோதிராணி
இசைத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 5.

27. முனைவர்.சோ.ந.கந்தசாமி
பேராசிரியர் & துறைத்தலைவர் (ஓய்வு)
6/1 ஐந்தாம் தெரு, நடராசபுரம் தெற்கு,
தஞ்சாவூர் - 7.

28. முனைவர்.பே.மனோகரன்
வரலாற்றுத்துறை
அறிஞர் அண்ணா அரசு கல்லூரி
முசிறி.

29. முனைவர்.பெ.இராமலிங்கம்
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 5.

30. முனைவர்.க.நெடுஞ்செழியன்
பேராசிரியர்
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 5.

31. இரா.பாவேந்தன்
அ.புவியரசு
ஆய்வு மாணவர்கள்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 5.

கலைஞரைப் பற்றிப் பேராசிரியர்

பகுத்தறிவுக் கொள்கை பரப்பும் **சிந்தனையாளராக,** பழமரக் கனிப்பயன் கொள்ளும் **பேச்சாளராக,** படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட **எழுத்தாளராக,** கலைத் துறையில் வாகை சூடிய **படைப்பாளராக,** தொட்டது துலங்கத் துறைதொறும் தம் முத்திரை பதிக்கும் **திறமையாளராக,** அரசியல் சதுரங்கத்தில் **வெற்றி வீரராக,** முத்தமிழிலும் வல்ல **வித்தகராக,** செந்தமிழுக்கொரு தீமை எனில் தம்முயிருந் தந்திடத்துணியும் **தியாகத் திருவுருவமாக** விளங்கும் கலைஞரை அவரது பல படைப்புகளையும் எடுத்துக்காட்டி, அவற்றில் ஒளிரும் கலைஞரது உள்ளக் கிடக்கையாம் கொள்கையில் காணப்படும் தெளிவை, குறிக்கோளில் காணப்படும் உறுதியை, அவற்றை எய்துவதில் கொண்டுள்ள ஆர்வத்தைப் புலப்படுத்தும் முறையில் இந்த ஏட்டினை டாக்டர் ப. ஆறுமுகம் வரைந்துள்ளார்.

- **''கலைஞரின் பொங்கல் வாழ்த்துரை இலக்கியம்''** எனும் நூலின் முன்னுரையிலிருந்து.